வெளியீடு : 8-3-2019 Issued : 8-3-2019

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

புதன்கிழமை, ஜூன் 13, 2018—தொகுதி 44—எண் 2

Wednesday, the 13th June 2018—Volume 44—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

13-6-2018

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	**வினாக்கள்–விடைகள் நேரத்தில் மூல வினா கேட்ட உறுப்பினர்களுக்கு மட்டும் துணை வினா கேட்க வாய்ப்பு வழங்குதல்— மறுபரிசீலனை—**	485-486
2.	**வினாக்கள்–விடைகள்—**	
	உடுக்குறியிட்ட வினாக்கள்	486-534
3.	**விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—**	534-541
	(அ) மணப்பாறை மற்றும் திண்டிவனம் வட்டங்களில் தொழிற்பூங்காக்கள் அமைத்தல் குறித்த தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை	534-535
	(ஆ) தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2018-2023 உருவாக்குதல்; NEEDS திட்ட மானியத் தொகையை உயர்த்துதல்; திருப்போரூரில் சிட்கோ-தொழிற்பேட்டை பகுதி 2 நிறுவுதல்; குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு உருவாக்குதல் உள்ளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை	535-537
	(இ) கன்னியாகுமரி, இராமநாதபுரம், கடலூர், தேனி மற்றும் விழுப்புரம் மாவட்ட நீதிமன்ற கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்; சென்னை, புழல் மத்திய சிறையில் கூடுதல் வசதிகள், சிறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்; மத்திய சிறைகளில் செல்லிட தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள் அமைத்தல் உள்ளிட்ட உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை	537-539

பக்கங்கள்

3. **விதி 110**–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஈ) மதுரை அன்னை சத்தியா குழந்தைகள் காப்பகத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல்; தருமபுரி பஞ்சப்பள்ளி சிறுவர் அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு உட்கட்டமைப்பு வசதியுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை 540

(உ) தன்னார்வத் தொண்டு நிறுவன சிறப்பாசிரியர்களுக்கான மதிப்பூதியத்தை உயர்த்துதல் உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகள் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை 541

4. **தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகள் குறித்த விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—** 542-544

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 542

*மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா 542-543

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 543

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின் 543-544

பக்கங்கள்

5. தகவல் கோரல்— 544-552

(அ) திரைப்பட நடிகர் திரு. S.Ve. சேகர் கைது செய்யப்படாதது— 544-550

திரு. மு.க. ஸ்டாலின் 544-549

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 550

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 550

(ஆ) நாகப்பட்டினம், திருக்கண்ணபுரம், அருள்மிகு சவுரிராஜ பெருமாள் கோயில் குடமுழுக்கு— 551-552

திரு. எம். தமிமுன் அன்சாரி 551-552

6. கவன ஈர்ப்பு— 552-565

(அ) எழும்பூர் 104-வது வார்டு, கங்காதீஸ்வரர் கோயில் தெருவிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுதல்— 552-559

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் 553-556, 558,559

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 553-554, 556,557, 559

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 558

(ஆ) 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 4(A)-ஐ நடைமுறைப்படுத்துதல்— 559-565

பக்கங்கள்

6. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

**திரு. மு. திராவிடமணி*	560- 562-563
மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்	560-562, 564-565
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	564

7. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி* 565-763

(அ) கோரிக்கை எண் 46- தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 47- இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அற நிலையங்கள் துறை)

(இ) கோரிக்கை எண் 49- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்*	566, 589, 655, 672,673, 675,678, 679,681, 683, 690-691, 726-756, 760-761

பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன் — 572,589, 596-598, 603-605, 609-611, 624-625, 653-654, 710-726, 761

*மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி — 581,590, 697-709

*திரு. கே.ஆர். பெரியகருப்பன் — 590-596, 598-599, 601-609, 756-759

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 598,599

திரு. மு.க. ஸ்டாலின் — 599-601

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ — 600,682

*திருமதி பொன். சரஸ்வதி — 611-623

திரு. ஏ.பி. சக்திவேல் — 625-641

*திரு. கு. பிச்சாண்டி — 641,760

*திரு. வி.எஸ். காளிமுத்து — 570, 577, 585-586 641-653

திரு. தங்கம் தென்னரசு — 654,677,678, 683,684

திரு. பெரியபுள்ளான் என்கிற செல்வம் — 655-659, 667

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் — 659

திரு. அர. சக்கரபாணி — 660-661

*மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் — 667-668, 679-680, 684

பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**திரு. மு.பெ. கிரி* 668-671, 680-682, 686-696, 759

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு 672-673, 675-676, 696

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் 673-675,685

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் 676

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 763-766

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 30, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூன் 13, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.”

விருப்பு, வெறுப்பு இல்லாத கடவுளின் திருப்பாதங்களை இடைவிடாமல் வணங்குகிறவர்களுக்கு எங்கும் எப்பொழுதும் துன்பம் இல்லை.

1. வினாக்கள்–விடைகள் நேரத்தில் மூல வினா கேட்ட உறுப்பினர்களுக்கு மட்டும் துணை வினா கேட்க வாய்ப்பு வழங்குதல்—மறுபரிசீலனை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, கடந்த இரண்டு நாட்களாக கேள்வி நேரத்திலே என்ன காரணத்தினாலே, நான் துணை வினாக்களை எடுத்துக்கொள்ளவில்லை என்ற விவரத்தை நேற்றைக்குத் தெளிவாக இந்த அவையிலே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நான் சொன்ன விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, அதற்குப்பின் பேரவையிலே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்னிடத்திலே ‘இல்லை, இல்லை நீங்கள் துணைக் கேள்விகளை அனுமதிக்க வேண்டும்’ என்ற ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். நானும் ‘அதைப் பரிசீலிக்கிறேன்; தேவைப்படின், நான் உங்களுடைய ஆலோசனையைக் கேட்டுப்பெறுகிறேன்’ என்ற விவரத்தை நேற்றைக்குச் சொன்னேன். ஆகவே, அந்த விவரங்களின் அடிப்படையிலே, நீங்கள் அத்தனை பேரும் வைத்த வேண்டுகோள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள் உட்பட, மாண்புமிகு துணை முதலமைச்சர்*

அவர்களின் வேண்டுகோளையும் இணைத்து, நான் துணை வினாக்களை அனுமதிப்பது என்று மறு முடிவு எடுத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துணை வினாக்களை அனுமதிப்பேன். ஆனால், அனைத்து உறுப்பினர்களும் ஓர் எல்லைக்குள் நின்று, இந்த அவையை நடத்துவதற்கு எனக்கு உதவி செய்வீர்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். அதனடிப்படையிலே, வினாக்களை எடுத்துக்கொள்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

181—

அடுக்குமாடி குடியிருப்புகள்

***25992—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதியில் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு ஊழியர்களுக்கு அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு திருவிடைமருதூர் தொகுதியில் வாரிய வசம் நிலம் ஏதும் தற்சமயம் கைவசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

2018 ஜூன் 13]

அவர்களே, வாழும் வள்ளுவராய் வாழும் தலைவர் கலைஞர் அவர்களையும், நான்காம் தலைமுறையின் தலைமகன் செயல் தலைவர் தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, நகராட்சிகள் இல்லாமல் ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் மட்டும் இருக்கக்கூடிய கிராமங்கள் நிறைந்த தொகுதியாகும். திருவிடைமருதூர் பேரூராட்சி, திருபுவனம் பேரூராட்சி, ஆடுதுறை பேரூராட்சி என்று மூன்று பேரூராட்சிகள் ஒட்டிப் பிறந்த குழந்தைகளாக இருக்கிற காரணத்தால், ஒரு நகராட்சியைப்போல் இருக்கிறது. திருவிடைமருதூரில், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகம்; ஆடுதுறையில் நெல் ஆராய்ச்சி மையம்; திருபுவனத்தில், சிட்கோ நிறுவனம் போன்ற அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் உள்ளன. இதனால் அங்கு அரசு ஊழியர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால், அங்கு குடியிருப்புகள் இல்லை. திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் ஒன்றுபட்ட வட்டமாக இருந்தபொழுது, திருவிடைமருதூரில் இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள், கும்பகோணத்தில் தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டுள்ள அரசு குடியிருப்பில் இருந்தார்கள். தற்போதும் அங்குதான் இருக்கிறார்கள். திருவிடைமருதூர் தனி வட்டமாக பிரிக்கப்பட்ட பிறகு, அங்குள்ள அரசு ஊழியர்கள் திருவிடைமருதூரில் தனியாக இருப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள்.

எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, திருவிடைமருதூரில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் மாவட்டத் தலைநகரம் அல்லது வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையிடம் ஆகிய இடங்களில்தான் கட்டப்பட்டு வருகின்றன. திருவிடைமருதூர், ஒரு தேர்வுநிலை பேரூராட்சியாகும்.*

முற்பகல் 10—05

[2018 ஜூன் 13

திருவிடைமருதூர் பகுதி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தை (RDO) தலைமையிடமாகக் கொண்டிருக்கவில்லை. மேலும், அங்குள்ள அரசு ஊழியர்களிடத்திலிருந்தும் வாடகைக் குடியிருப்புகள் கோரி போதிய கேட்பு மனுக்கள் வரப்பெற வில்லை. மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் திருவிடைமருதூரில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு வாரியத்தின் வசம் தற்போது நிலம் இல்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,396 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் உள்ளன. அதில் தஞ்சாவூரில் 1,048, கும்பகோணத்தில் 132, பட்டுக்கோட்டையில் 216 குடியிருப்புகள் என அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் காலியாக உள்ள 175 குடியிருப்புகளில், 89 வீடுகள் குடியிருக்கத் தகுதி உள்ளவை என்று அறியப்பட்டுள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் திருவிடைமருதூருக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கும்பகோணத்தில் மொத்தமுள்ள 132 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளில் 125 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதம் காலியாக உள்ள 7 வீடுகளில், 4 வீடுகள் குடியிருக்கத் தகுதி உடையதாக இருக்கின்றன. அந்த வீடுகளை இன்னும் யாரும் கேட்கவில்லை. எனவே, தற்போதைய நிலையில் திருவிடைமருதூரில் புதிய குடியிருப்புகளைக் கட்ட வேண்டிய அவசியம் அதற்கான கருத்துரு எதுவும் இல்லை. வாரியத்திடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர், கோவிந்தகுடி ஊராட்சியில் அரசு அலுவலகங்கள் நிறைந்த வளாகம் இருக்கின்றது. வட்டார சத்துணவு ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், வேளாண்மைத் துறையினுடைய உதவி இயக்குநர் அலுவலகம், பொதுப் பணித் துறையினுடைய உதவி செயற் பொறியாளர் அலுவலகம் மற்றும் நில வள வங்கி ஆகியவை உள்ள அந்த அரசு அலுவலக வளாகத்தில் போதிய காலி இடமும் இருக்கின்றது. அந்த இடத்தில் அரசு ஊழியர்குடியிருப்பிற்கென அடுக்குமாடிக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதோடு 2017—2018 ஆம் ஆண்டில் 4,746 வீடுகள் கட்டித் தரப்படும் என அறிவித்தீர்கள்.

2018 ஜூன் 13]

இப்போது இந்த ஆண்டில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டித் தருவதாகவும் அறிவித்திருக்கின்றீர்கள். 20,000 வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்கின்றபோது, என்னுடைய தொகுதிக்கு 100 வீடுகளையாவது கட்டித் தருவீர்களா என்பதை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவதாக அறிவித்தோம். அதற்கான பூர்வாங்கப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திருவிடைமருதூரில் அரசு ஊழியர்களிடம் கருத்து கேட்கப்பட்டு, அவர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் தேவை என்ற நிலை அங்கு அதிகமாக இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலம் இருப்பதாகச் சொல்கிறார்கள், அரசு சார்பில் நிலம் இல்லையென்றாலும், அங்கே நிலத்தைக் கையகப்படுத்தி, அரசு வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, கண்ணகி நகர், பெரும்பாக்கம் பகுதிகளில் குடியிருப்புகளைக் கட்டி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்ட கட்டடங்களில் சென்னையில் வாழ்கின்ற மக்கள் எல்லாம் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு எந்த அடிப்படை வசதியும் செய்து தராமல், பல்லாயிரக்கணக்கான வீடுகளில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒரு நிலைமை உள்ளது. அங்கு 2—3 நாட்களாக சரியான முறையில், குடிநீர் வராமல் அந்த மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தெருவிளக்குகள் இன்னமும் பொருத்தப்படவில்லை. அங்குள்ள கால்வாய்கள் இன்றைக்கும் திறந்தவெளிக் கால்வாய்களாக இருக்கின்றன. குப்பையை எடுப்பதற்குக்கூட சரியான*

ஆட்கள் இல்லாததால், சுகாதாரம் இல்லாமல், மக்கள் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே வாழ்கின்ற நிலையில், அவர்கள் இறந்தால் அங்கே இந்து, முஸ்லிம், கிறித்துவர்கள் என்ற அளவில் சுடுகாட்டினைப் பயன்படுத்துவதற்குக்கூட, அவர்களுக்கு சுடுகாடுகள் அமைத்துத் தரப்படவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்ற அந்த இடத்தில் அவர்கள் குடியமர்த்தப்பட்டு ஒரு வாரம் கழித்துதான் மின்சாரம் வழங்கப்பட்டது. அந்தப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் உடனடியாக ஆய்வு செய்து, அங்கே தெரு விளக்கு வசதி மற்றும் சுடுகாட்டு வசதியினை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்துவர்கள் போன்றவர்களுக்கு வழிபாட்டுத் தலங்கள்கூட இல்லை. மேலும், அந்தப் பகுதியில் ஒரு வணிக வளாகம்கூட வரவில்லை. அவர்களுக்கென்று உள்ள சமூக நலக் கூடங்களை எல்லாம் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளாக அதிகாரிகளே பயன்படுத்தி வருகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இவற்றை எல்லாம் ஆய்வு செய்து அங்கு வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக ஒரு தீர்வு கண்டிட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துறை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடர்பாக கேட்கப்பட்ட மூலக் கேள்வியைத் தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்குச் சென்றுவிட்டார். சென்னை மாநகரத்தில் இருக்கின்ற குடிசைப் பகுதிகளையெல்லாம் அகற்றிவிட்டு குடிசைப் பகுதிகளற்ற மாநகரமாக, சென்னை மாநகரத்தை உருவாக்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'அனைவருக்கும் வீட்டு*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2018 ஜூன் 13]

வசதி' என்ற திட்டத்தை அறிவித்து, அந்தப் பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கரையோரங்களில், குடிசைகளில், சுகாதாரமற்ற நிலையில் வாழ்கின்ற, அடிப்படை வசதிகள் இல்லாத மக்களுக்கு பெரும்பாக்கம் பகுதியில் கிட்டத்தட்ட 20,000 வீடுகளைக் கட்டி அவர்களை அங்கு குடியமர்த்துகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றில் கிட்டத்தட்ட 8,000 வீடுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக இவர்களையெல்லாம் அங்கு கொண்டு போய்ச் சேர்த்து, அவர்கள் வாழ்வதற்குரிய வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில பராமரிப்புப் பணிகளில் குறைபாடுகள் இருந்தால், மீண்டும் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்த்து, ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அத்துணை அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும். பள்ளிக்கூடம்கூட கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் இந்த நல்ல நேரத்தில் நான் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதம் சம்பந்தப்பட்ட வழிபாடு நடத்துகின்ற இடங்களைப் பொறுத்தவரையில், அவற்றை அரசு கட்டித் தருவதில்லை. அவை, அவரவர் பட்டா நிலங்களில், தனியார்களிடம் இடம் வாங்கி அவர்களாகவே கட்டக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் தஞ்சாவூரில் வீடுகள் கட்டப்படுகிறபோது, பெரிய நிலப் பரப்பு உள்ள இடங்களில் இரண்டு அடுக்கு மாடிகள் என்ற அளவிற்குள்தான் கட்டப்படுகின்றன. ஆனால், பல ஏக்கர் நிலத்தில் அவை கட்டப்பட்டிருக்கின்றன. பல அடுக்கு மாடிகளைக் கொண்ட உயரமான கட்டடங்களைக் கட்டிவிட்டால், ஒரு சில ஆயிரக்கணக்கான சதுர அடிகளுக்குள் அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுவிடும். இதன் காரணமாக, பல இடங்களில் கூடுதல் நிலங்கள் கிடைக்கப்பெற்று அரசாங்கம் அந்த நிலங்களை வேறு காரணங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.*

அப்படியில்லாமல், பல இடங்களில் பல ஏக்கர் நிலங்களிலே ஒரு மாடி, இரண்டு மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு, பிற தேவைகளுக்கு இடங்கள் இல்லாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதே இடத்தில் 10, 12 மாடிகளைக் கொண்ட கட்டடங்களைக் கட்டி வீடுகளை அமைத்துக்கொண்டால், மற்ற இடங்களை மற்ற வேலைகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுகுறித்து, நம்முடைய அரசு சிந்தித்து ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தஞ்சாவூரில் மட்டுமல்ல, பல முக்கிய நகரங்களில் மக்கள் அடர்த்தியாக வசிக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்லி இருக்கிறார்கள். அந்த யோசனை ஏற்கெனவே அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. Horizontal level–ல் வீடுகள் கட்டப்படுகின்றபோது, இடங்கள் தள்ளிக்கொண்டே போய்க்கொண்டிருக்கின்றபோது, இடம் இல்லாத சூழ்நிலை மாநகரப் பகுதிகள் மற்றும் முக்கிய நகரங்களில் ஏற்படுகின்றது. அதற்காக, மக்கள் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் என்ற அளவில் வெகுதூரம் செல்லவேண்டிய சூழல் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இப்போது வீட்டு வசதி வாரியம் vertical line–ல் பல அடுக்குமாடி வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறது. இந்த இடங்களில் மக்களைக் குடியமர்த்துகின்ற நிலையில் அதிகமான மக்கள் ஒரே இடத்தில் குடியிருப்பதற்கு வசதிகள் ஏற்படும். அந்தக் கருத்தினை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்த நடைமுறை, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 13]

182—

தார்ச் சாலை

***26967—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை நடுக்குப்பம் முதல் விளாங்குப்பம் வரை உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையிலுள்ள நடுக்குப்பம் வரையிலான இணைப்புத் தார்ச் சாலையானது, தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், நடுக்குப்பத்திலிருந்து 4.80 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள விளாங்குப்பம் வரையிலான பாதையானது, பின்னர் ஜவ்வாது காப்புக் காட்டில் 2.7 மீட்டர் அகலத்தில் அனுமதிக்கப்பட்டு, அறிவிக்கையும் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் கால்நடைப் பயன்பாட்டில் உள்ள இப்பாதையைத் தார்ச் சாலையாக அனுமதிக்கப்பட்ட அகலத்தைவிடக் கூடுதலாக அமைக்க வேண்டுமாயின் வன நிலமும் கூடுதலாகத் தேவைப்படும். பொதுவாக வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனமல்லாத, non–forest பயன்பாட்டிற்கு வன நிலம் ஒதுக்கப்பட வேண்டுமாயின், மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையால் இதற்கென உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தில் சாலை அமைக்கும் துறை அதற்குரிய கருத்துருவினைப் பதிவேற்றம் செய்யும்பட்சத்தில், அனுமதி பெற தமிழ்நாடு வனத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2018 ஜூன் 13*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையில் வாழும் மலைவாழ் பழங்குடி இன மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். புதூர் நாடு ஊராட்சி, விளாங்குப்பம் கிராமப் பகுதியில் வசிக்கும் மக்கள், தங்களின் வாழ்வாதாரமாக உள்ள விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்தவும், இப்பகுதியிலுள்ள மாணவ மாணவியர்கள் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லவும், புதூர் நாடு மற்றும் திருப்பத்தூர் நகருக்குச் செல்ல வேண்டியுள்ளது. நடுக்குப்பம் முதல் விளாங்குப்பம் வரையிலான இந்த அத்தியாவசியமான சாலையை அமைத்திட மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையால் இதற்காக உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தில் தமிழக வனத் துறையின் மூலமே பதிவேற்றம் செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து முடித்துத் தருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குதான், நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் மேற்படி சாலை அமைப்பது சம்பந்தமாக திருப்பி, வனத் துறையே அதற்கான இணையதளத்தில் பதிவு செய்யவும் என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். வனத் துறைதான் நடவடிக்கை எடுக்கும். ஆனால், எந்தத் துறை அந்தப் பணிகளை மேற்கொள்கிறதோ, DRDA, NABARD, Tribal Welfare Department போன்ற எந்தத் துறையாக இருந்தாலும், உரிய பிரேரணையை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவு செய்தால், வனத் துறை உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும். அந்தந்த மாவட்டங்களிலிருக்கின்ற DFO, Rangers, Forest Officers போன்றவர்களிடம் இந்தத் தகவலைக் கொடுத்தால், அங்கிருக்கின்ற மாவட்ட வன அலுவலர்கள், இணையதளத்தின் மூலமாக மத்திய அரசின் இணையதளத்திற்கு உரிய முறையில்

2018 ஜூன் 13]

பதிவேற்றம் செய்து மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தருவார்கள் என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட, ஜவ்வாது மலை புங்கம்பட்டு நாடு ஊராட்சியில் உள்ள 10 குக்கிராமங்களில் வசிக்கும் மக்கள், அனைத்து அத்தியாவசியத் தேவைகளுக்காக சேர்க்கானூர் முதல் புதூர்நாடு வழியாக திருப்பத்தூர் நகருக்கு சுமார் 48 கிலோ மீட்டர் தூரம் வரை பயணிக்க வேண்டிய நிலை உள்ளது. அதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு கால விரயமும், பண இழப்பும் ஏற்படுவதால் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதைப் போக்கிடும் வகையில், சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரை, சுமார் 4½ கிலோ மீட்டர் தார்ச் சாலை அமைக்கப்பட்டால், திருப்பத்தூர் நகரை 17 கிலோ மீட்டர் தூரம் பயணத்தாலே வந்தடைய முடியும். இச்சாலை அமைக்கவேண்டி கடந்த 23—3—2017 அன்று ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாக, இணையதளத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரையிலான தார்ச் சாலையை அமைத்துத் தருவாரா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரை உள்ள பாதையினை அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வியாகக்கேட்டிருக்கிறார்.சேர்க்கானூர் முதல் கொடுமாம்பள்ளி வரையில் உள்ள சுமார் 4 கிலோ மீட்டர் பாதையானது, ஆண்டியப்பனூர் காப்புக் காட்டுக்குள் அமைந்துள்ளது. இங்கு நடைபாதை வழிக்கான அனுமதி உரிமை* Right of Way *மட்டுமே உள்ளது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு தேதியைக் குறிப்பிட்டு அன்று விண்ணப்பிக்கப்பட்டிருப்தாகவும்*

செய்தியைச் சொல்லியிருக்கிறார். அப்படி எந்தச் செய்தியும் அங்கே இல்லையென்று, மாவட்ட வன அலுவலரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. மறுபடியும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைச் சரிபார்த்து, நான் முதலில் சொல்லியதைப்போல், user agencies-ஆன DRDA, NABARD-Tribal Welfare Department போன்று எந்தத் துறை அங்கு சாலை அமைக்க விரும்புகிறதோ, அந்தத் துறையினர் எங்களுடைய மாவட்ட வன அலுவலரைத் தொடர்பு கொணடால், உரிய ஆணையை மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை தூரத்தைக் குறைக்கின்ற அந்தச் வழி, மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் இருப்பதனால், அதற்கு முன்னுரிமை அளித்து, மத்திய அரசின் ஆணையைப் பெற்றுத் தர முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் தங்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய தேனி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்திருக்கிறது. பல கிராமங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், அங்கே விவசாய நிலங்களில் குறிப்பாக தென்னை, வாழை போன்ற விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10—20

அங்கே அடிக்கடி யானைகள் கிராமப் பகுதிக்குள் வந்து விடுகின்றன. விவசாய நிலங்களுக்கு அங்கே மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அங்கே நேற்றைக்கு முதல் நாள் அதாவது 11 ஆம் தேதியன்று திரு. சேகர் என்பவர் தேவாரம் என்ற ஊரிலே யானை மிதித்து இறந்துவிட்டார். அவருக்கு உடனடியாக அரசாங்கம் ரூ.50,000/— வழங்கியிருக்கிறது. மீதமுள்ள பணத்தை உடனடியாக வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று

2018 ஜூன் 13]

கேட்டுக்கொள்கிறேன். யானைகள் தொல்லை தேவாரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இனிமேல் இல்லாத நிலையை ஏற்படுத்த நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் அவருடைய சட்டமன்றத் தொகுதியிலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய தொகுதி எல்லைக்குட்பட்ட தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் பகுதிகளிலும் உள்ள வனப் பகுதியில் இருக்கின்ற யானைகளால் ஏற்படும் பிரச்சினை பற்றி குறிப்பிட்டார்கள். ஒரு மாதத்திற்கு முன்பாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்களும், இன்னும் அந்தப் பகுதியில் இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் சென்று பார்வையிட்டனர். யானைகள் ஊருக்குள் வராத அளவிற்கு, என்னென்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும், அவற்றைத் தடுப்பதற்குரிய சூழ்நிலையை எப்படி உருவாக்க வேண்டுமென்றெல்லாம் திட்டம் தீட்டப்பட்டு, அதன் அடிப்படையில் அகழிகள் வெட்டும் பணிகளை மேற்கொள்ளுமாறு வனத் துறையின் அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.*

மேலும், அங்கே இதுபோன்ற புகார்கள் எதுவும் இதுவரை பெறப்படவில்லை என்றுதான் அரசு அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். ஆனால், நேற்றைக்கு முன்தினம் நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அங்கே ஒருவர் யானை தாக்கி இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். அவர் சொன்ன குறிப்பின் அடிப்படையில், உடனடியாக வனத் துறை அதிகாரிகளுடன் கலந்துபேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிவாரண நிதி ரூபாய் நான்கு இலட்சத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கட்டமாக உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க ஏதுவாக, அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வனத் துறை அலுவலருக்கு ரூ.50,000/– முன்பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மீதம் இருக்கின்ற ரூ.3.50 இலட்சம் தொகை உரிய சான்றுகளைப் பெற்று உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு விரைவில் வழங்கப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்தப் பகுதியில் இனிமேல் யானைகள் மற்றும் பிற மிருகங்களால் பிரச்சினை ஏற்படாத அளவிற்கு நம்முடைய வனத் துறை அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மிக வேகமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் உங்களுக்கு ஏற்கெனவே ஒரு மூலக் கேள்வி கேட்க அனுமதித்து, அவையில் துணைக் கேள்வியும் கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, அனைத்து விவரங்களையும் நான் வைத்திருக்கிறேன். மேலும், இரண்டு துணைக் கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். ஒரு மூலக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நேரமில்லை, அடுத்த கேள்வியில் வாய்ப்பிருந்தால் துணை வினா கேட்க அனுமதி அளிக்கிறேன்.*

வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

183—

கூட்டுறவுக் கடன் சங்கம்

***8384—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய ஊராட்சிகளை

2018 ஜூன் 13]

உள்ளடக்கி பனையம்பள்ளியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, பனையம்பள்ளி ஊராட்சியானது தொப்பம்பாளையம் மற்றும் ரெங்கநாயகன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் விவகார எல்லையிலும், பெரியகள்ளிப்பட்டி ஊராட்சியானது ரெங்கநாயகன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க விவகார எல்லையிலும் அமைந்துள்ளன. பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய இரு கிராமங்களில் பயிரிடக்கூடிய நிலப் பரப்பு 3,284 ஏக்கர் மட்டுமே உள்ளது. எனவே, அரசு விதிகளின்படி பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய இரு கிராமங்களை உள்ளடக்கி, பனையம்பள்ளியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசு விதிகளில் இடமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென வாழாமல் தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தமிழக வளர்ச்சிக்காகவும் தன்னையே அர்ப்பணித்து தவ வாழ்க்கை வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று காவேரி மேலாண்மை ஆணையம் பெற்றுத் தந்து, தூத்துக்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட உத்தரவு பிறப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) நீர் நிலைகளில் சுற்றுச்சூழல் மாசு அடைவதைத் தடுக்க மக்காத பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்து, விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் திட்டத்தைத் தொடர்ந்து, இந்நிதியாண்டில் ரூ.25 கோடி விலையில்லா நாட்டுக் கோழி வழங்கும் திட்டத்தை செயல்படுத்திய குடிமராமத்து நாயகன், மாண்புமிகு அம்மா*

அவர்களின் வழியில் அரசை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு சீர்மிகு மாற்றங்களைத் தந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று நல்லமுறையில் வழிநடத்திச் செல்லும் சாதனைச் செம்மல் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொண்டேன். அதில் தொப்பம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 12 கி.மீ. தொலைவும், ரெங்கநாயகன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 6 கி.மீ. தொலைவும் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. விவசாயப் பெருங்குடி மக்கள் நீண்ட தூரம் சென்று தங்களுடைய கடனைப் பெற்று வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆக, இந்த இரண்டு ஊராட்சிகளிலும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலம் உள்ளது. 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சென்று, விவசாயக் கடன் பெற வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதால், இந்தப் பகுதியில் உள்ள மக்களின் நலன் கருதி, பனையம்பள்ளியை மையமாகக் கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன்*

2018 ஜூன் 13]

அவர்களது கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். பனையம்பள்ளி ஊராட்சியின் மக்கள் தொகை 7,366. பனையம்பள்ளி ஊராட்சியின் மொத்த நிலப் பரப்பு 2,502 ஹெக்டேர். இதில் பயிரிடக்கூடிய நிலப் பரப்பு 1,294 ஹெக்டேர். அதாவது 3,196.18 ஏக்கர் நிலம் உள்ளது. பனையம்பள்ளியைச் சேர்ந்த 1,194 நபர்கள் இரு சங்கங்களிலும் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, இந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சிறப்பினமாக எடுத்துச் செல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 2 ஊராட்சிகளிலிருந்தும் வெகுதூரம் சென்று விவசாயிகள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். எனவே, 12 கி.மீ., 6 கி.மீ., செல்கின்ற இந்த சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, சிறப்பினமாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அனுமதி பெற்று, அரசுத் துறை சார்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கட்டு, தென்மேற்கு பருவமழை பெய்து நீர் 64 அடி உயரத்தை எட்டியுள்ளதால் விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். இப்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை பனையம்பள்ளியில் அமைக்க பரிசீலிக்கப்படும் என்ற நற்செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கி, விவசாய மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். இதற்காக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், தாளவாடி பகுதியிலுள்ள துட்டகஜனூர் நியாய விலைக் கடையில் 1,400 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அந்தக் குடும்ப அட்டைகளைப் பிரித்து, அதே பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையையும்; அதேபோல் பவானிசாகர் பகுதியில், பவானிசாகர் நகரியத்தில் 1,300 குடும்ப அட்டைகள் உள்ள அந்த நியாய விலைக் கடையைப் பிரித்து கூலிஸ் லைன் பகுதியிலே*

ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையையும் அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைகளை அடுக்கிக்கொண்டே போகிறார். மூலக் கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் உள்ளது. இருந்தபோதிலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு, மக்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற நியாய விலைப் பொருட்கள் தங்குதடையின்றி அவர்களுடைய இருப்பிடத்திலேயே கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இன்றைக்கு 32,827 கடைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடத்தப்படுகின்றன. 42 கடைகள் நகரும் கடைகள். கிராமப்புறங்கள், மலைப்பிரதேசங்கள், மக்கள் எளிதில் அணுக இயலாத இடங்களில் எல்லாம் நகரும் கடைகள் மூலமாக, Vans மூலமாக நியாய விலைப் பொருட்கள் supply செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டார். பகுதி நேரக் கடையாகப் பிரிக்க வேண்டுமென்றால் ஒரு கடையில் 150 Cards இருக்க வேண்டும். தாய் கடைக்கும், அமைக்கப்படவிருக்கின்ற உத்தேச கடைக்கும் 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். எனவே, இதுபோன்ற சூழ்நிலையில் தாய் கடையில் 500 Cards இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக cards இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். சட்டத்தில் இடம் இருக்கும்பட்சத்தில், கூட்டுறவு விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு பதில் சொல்லும்போது, கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகிறார் என்று சொன்னீர்கள். எதையும் தாங்கும் இதயம் தங்களுக்கு

2018 ஜூன் 13]

இருக்கின்ற காரணத்தினால்தான், மாண்புமிகு உறுப்பினர் நிறைய கேள்விகளை அடுக்குகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

184—

துணை மின் நிலையம்

***2532—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், கீழ்மலை பகுதியிலுள்ள பண்ணைக்காடு அல்லது தாண்டிக்குடியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான பழனி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், கீழ்மலை பகுதி, பண்ணைக்காடு பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். ஏற்கெனவே, அம்மா அவர்களின் அரசு அதனைப் பரிசீலித்து அதற்கான இடத்தைத் தேர்வு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதி மக்களின் சார்பில் நான் கேட்ட கேள்விக்கு, துணை மின்*

நிலையம் அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார். மகிழ்ச்சிதான். இருந்தபோதிலும், தேர்வு செய்யப்பட்ட அந்த இடமானது, கிட்டத்தட்ட 1½ ஏக்கர் நிலம் பண்ணைக்காடு பேரூராட்சிக்குட்பட்ட, 14—வது வார்டிற்குட்பட்ட பகுதியில் பழைய கொடைக்கானல் ஜில்லா போர்டின் கட்டுப்பாட்டில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குப் பின்புறம் உள்ளது. அந்த அரசு நிலத்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், மின்சாரத் துறைக்கு அந்த இடத்தை அரசு வழங்குமேயானால், அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிச்சயமாக அது ஏதுவாக இருக்கும். ஏனென்று சொன்னால், கொடைக்கானல் மலைப் பகுதியானது மேல்மலை, கீழ்மலை என இரண்டு வகைகளாக பூகோள அமைப்புகளில் அமைந்துள்ளது. நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்குத் தெரியும். இந்தப் பண்ணைக்காடு என்கிற பகுதியில் ஊத்து என்ற இடமானது, வத்தலகுண்டு—கொடைக்கானல் நெடுஞ்சாலைப் பகுதியில் அமைந்திருக்கிறது. அங்கே துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வரும்பட்சத்தில், மழைக்காலம் மற்றும் மிக நெருக்கடியான சூழ்நிலைகள் உருவாகின்றபோது, அங்கே ஏற்படுகின்ற பழுதுகளை, திண்டுக்கல் மற்றும் வத்தலக்குண்டு ஆகிய இடங்களிலிருந்து, உடனடியாக விரைந்து சென்று அதனைச் சரி செய்து முடிப்பதற்கு அது ஏதுவான இடமாகும்.

குறிப்பாக, பண்ணைக்காடு பேரூராட்சியில் பூலத்தூர், கும்பரையூர், காமனூர், தாண்டிக்குடி, கே.சி. பட்டி, பெரியூர், பாய்ச்சலூர் என கிட்டத்தட்ட 7—க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் இருக்கின்றன. அங்கே கிட்டத்தட்ட 10,000—க்கும் மேற்பட்ட மின் இணைப்புகள் இருக்கின்றன. துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற அந்த மலை வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை இந்த அரசு உடனடியாக நிறைவேற்ற முன் வரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த பண்ணைக்காடு பகுதியில்தான் இரண்டு ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, மாவட்ட

2018 ஜுன் 13]

ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த இடத்திற்கு enter upon permission *வாங்கியவுடன், உடனடியாக* tender *விடப்பட்டு துணை மின் நிலையம் அமைக்கப்படும். ஏனென்று சொன்னால், கொடைக்கானலில் மின்பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் எண்ணம். எனவே, நிலத்தை கையகப்படுத்த முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஏற்கெனவே நான் இந்தச் சட்டமன்றத்தில் என்னுடைய முதல் உரையின்போது வைத்த கோரிக்கையின் தொடர்ச்சியாக இந்தக் கோரிக்கையையும் முன்வைக்க விரும்புகின்றேன்.*

ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சிக்குட்பட்ட பெத்தேல்புரம்–புலிகுத்திக்காடு வரை, மின் கம்பங்கள் வழியாக சாலை வழியே மின் இணைப்பு வசதி உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புலிகுத்திக்காடிலிருந்து சாலை வழியாக,மின் கம்பங்கள்மூலம் பாய்ச்சலூருக்கு மின் இணைப்பை வழங்க வேண்டுமென்று சொன்னால், 10 கிலோ மீட்டர் தூரம் வரை இணைப்பைக் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் வனப் பகுதி வழியாக நாம் அந்த இணைப்பைக் கொண்டு வர முயற்சி செய்வோமேயானால், 5 கிலோ மீட்டர்தான். செலவும் குறைவாகத்தான் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. எனவே, ஒட்டன்சத்திரத்திலிருந்து வருகின்ற அந்த இணைப்பை பாய்ச்சலூருக்கு நாம் கொண்டு வருவோமேயானால், எதிர்காலத்தில் அருகில் இருக்கக்கூடிய பாய்ச்சலூர் ஊராட்சி, பெரியூர் ஊராட்சி, கே.சி. பட்டி ஊராட்சி; ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆடலூர், பன்றிமலை ஆகிய ஊராட்சிகளுக்கும் தடையின்றி மின்சாரம் வழங்க ஒரு நல்ல வாய்ப்பு உருவாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் moulded wire system–*ஐ அந்த* hill stations–*ல் கொண்டு வர வேண்டும் என்று கேட்டேன். அது குறித்து*

ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். அது ஒருபுறம் இருந்தாலும், இந்த புலிகுத்திக்காடு மின் இணைப்பிலிருந்து பாய்ச்சலூருக்கு ஒரு புதிய மின் இணைப்பு வசதியை நீங்கள் அமைத்துதர முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் கேட்டிருக்கின்றார். முதலில் UG cable கேட்டார்கள். இப்போது covered conductor கேட்டிருக்கின்றார்கள். அது ஆய்வில் இருக்கின்றது. UG cable அமைக்க முடியாது என்ற காரணத்தினால்தான் மக்களின் பாதுகாப்பிற்காக covered conductor மூலம் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான ஆய்வுப் பணிகள் நிறைவடைந்திருக்கின்றன.

முற்பகல் 10–35

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தற்போது இங்கே சுட்டிகாட்டியிருக்கிறார். சாலை வழியாக அமைக்கும்போது தூரமும் அதிகமாகிறது, செலவும் அதிகமாகிறது. காட்டுப் பகுதிகள் வழியாக அமைக்கும்போது தூரமும் குறைகிறது, செலவும் குறைகிறது. அதனால்தான் புதைவட மின்பாதைகள் அமைக்க முடியாது என்று தெரிவித்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது தெரிவித்திருக்கின்ற கோரிக்கைகள் அனைத்தும் பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே தடையில்லா மின்சாரம் அங்கே வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், தடையில்லா மின்சாரம் தொடர்ந்து வழங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துகள் அனைத்திற்கும் அதிகாரிகளோடு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

2018 ஜூன் 13]

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி 4—வது pipeline—அதாவது வல்லநாடு பகுதியில் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்திற்கென்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட அந்த மின்மாற்றி கடந்த ஒரு மாத காலமாகப் பழுதடைந்துள்ளது. பாளை துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இருந்தாலும் low voltage காரணமாக சரியாக மின் விநியோகம் இல்லாத காரணத்தால் தூத்துக்குடி மாநகரத்திற்கு குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. காலதாமதமும் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசர முக்கியத்துவம் கருதி உடனடியாக புதிய மின்மாற்றி அமைப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், வாகைகுளம் பகுதியில் கிராமங்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்து வந்த மின்மாற்றியும் ஒரு மாத காலமாகப் பழுதடைந்துள்ளது. வாகைகுளம் பகுதியிலுள்ள மின்மாற்றிக்குப் பதிலாக புதிய மின்மாற்றியை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளில், மின்மாற்றிகளை மாற்றித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மேலும், அந்தப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதால் பழுதடைந்துள்ள மின்மாற்றிகளை உடடினயாக மாற்றித் தருமாறும் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வேண்டுமென்பதற்காக backfeed என்று சொல்லக்கூடிய மின்மாற்றி பழுதடைந்துவிட்டாலும்கூட வேறு ஒன்றிலிருந்து connection கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மின்பளு குறைவாக இருப்பதால் தடை ஏற்படுகிறது என்றும் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 2 மின்மாற்றிகள் குறித்து உடனடியாக ஆய்வு செய்வதற்கு அதிகாரிகளுக்கு ஆணையிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிப் பகுதிகளிலுள்ள மின்மாற்றிகள் பழுதடைகின்றபோது, அந்த மின்மாற்றிகளைப் பழுது நீக்கி அல்லது புதிதாக மாற்றிக் கொடுப்பதற்கு குறைந்தது 2 மாதங்கள் முதல் 3 மாதங்கள் வரை ஆகின்றன. மாவட்ட மின் வாரிய அதிகாரிகளைத் தொடர்புகொள்ளும்போது, மாவட்டத்திற்கு ஒதுக்கீடுகள் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். அதைப்போல, சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் தொடர்புகொள்ளும்போது copper supply shortage இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். மேலும், பழுது நீக்கம் தொடர்பான டெண்டருக்குரிய ஒப்பந்ததாரரை முடிவு செய்வதில் பிரச்சினைகள் இருப்பதாகவும் அல்லது முடிவு செய்யவில்லையென்றும் தெரிவிக்கிறார்கள். காரணம் எதுவாக இருந்தாலும், இதனால் விவசாயிகளும், பொது மக்களும் குடிநீருக்காக மிகவும் சிரமப்படுகிறார்கள். அதைத் தீர்க்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே உடனடியாக மின்மாற்றிகளை மாற்றிக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் மேல்காங்கேயன்குப்பம் SS 3, கொஞ்சிகுப்பம் SS1, அரசடிக்குப்பம் SS4, அழகப்பசமுத்திரம் SS3 போன்ற பகுதிகளிலுள்ள மின்மாற்றிகள் தற்போது பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. முதற்கட்டமாக இவற்றை மாற்றிக் கொடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளிலுள்ள மின்மாற்றிகள் குறித்து இரண்டு ஆண்டுகளாக உயர் நீதிமன்றத்தில் தடையாணை இருந்தது. டெண்டர் கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் ஒருவர் இதுகுறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நாங்களும் பலமுறை இதுகுறித்து முறையிட்டும், இரண்டு ஆண்டுகளாக தடையாணை இருந்த காரணத்தால் புதிய மின்மாற்றிகள் வாங்க முடியவில்லை.

2018 ஜூன் 13]

தடையாணை நீக்கப்பட்டதற்குப் பிறகு, இந்தக் கூட்டத்தொடரில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக காப்பர் கிடைக்காத காரணத்தால் மின்மாற்றிகள் கிடைப்பது அரிதாக இருந்தது என்று இங்கே நான் தெரிவித்தேன். தற்போது, வேறு ஓரிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நிலைமை சீரடையும் என்று நம்புகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்கூட குடிநீர்ப் பிரச்சினை இருப்பதாகத் தெரிவித்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில், எந்தெந்தப் பகுதிகளுக்குத் தேவையோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், உடனடியாக மின்மாற்றிகளை மாற்றித்தர வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார். முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக மின்மாற்றிகளை மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயராத உழைப்பால், ஆளுமைத் திறனால், அர்ப்பணிப்பால், இருள் சூழ்ந்திருந்த தமிழகத்தை, ஒளி மிகுந்த தமிழகமாக உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை மின்மிகை மாநிலமாக உருவாக்கித் தந்த ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னடிகளை வணங்குகிறேன்.*

முற்பகல் 10–40

அவருடைய அடியொற்றி மிகச் சிறப்பாக தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில், பாளையங்கோட்டை ஊராட்சியைச் சுற்றி 25 ஊராட்சிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் விவசாய நிலங்கள் நிறைய இருக்கின்றன. பெருகி வருகிற மின்தேவைக்கு ஏற்பவும், விவசாயிகளுடைய நலன் கருதியும், கேட்காமலேயே அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற மாண்புமிகு

மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் காட்டுமன்னார்கோவில் தொகுதி, பாளையங்கோட்டையிலே ஒரு புதிய துணை மின் நிலையத்தை அமைத்துத் தருவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் துணை மின் நிலையம் கேட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கின்றேன். துணை மின் நிலையங்களைப் பொறுத்தவரை எங்கே மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்றதோ அங்கு துணை மின் நிலையத்தை அமைத்துத் தருவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இடத்திற்கு ஏற்பாடு செய்வார் என்று சொன்னால், அரசு அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, தேவையிருப்பின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

185—

முந்திரி தொழிற்சாலை

***3997—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, செந்துறை வட்டம், செந்துறையில் முந்திரி தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குன்னம் தொகுதி, செந்துறையில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது டிட்கோ மற்றும் சிப்காட் வசம் இல்லை என்பதைத் தெரிவித்து, இருப்பினும் தகுந்த தொழில் முனைவோர்கள் செந்துறையில் முந்திரி தொழிற்சாலை

2018 ஜூன் 13]

அமைக்கும் திட்டத்திற்குண்டான செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களுடன் வந்தால், டிட்கோ அவர்களுடன் இணைந்து, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமே போற்றுகின்ற கருணைத் தாய் அன்னை தெரசா. அந்த கருணைத் தாயே வியந்து, நேரில் வந்து போற்றி மகிழ்ந்த தாய் எங்கள் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்கி, அம்மா அவர்கள் இறுதியாக இந்தச் சபையிலே ஆற்றிய பொன்மொழியான 'இந்தக் கழகம் 100 ஆண்டு காலம் ஆட்சியில் இருக்கும் என்ற இலக்கை நோக்கி, கழக ஆட்சியைக் கொண்டு செல்கின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களது குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் அனைத்து விவசாயிகளும் முந்திரிப் பயிரை விவசாயம் செய்து பிழைத்து வருகிறார்கள். அவர்கள் அதிகப்படியான நிலங்களை ராம்கோ சிமெண்ட், சங்கர் சிமெண்ட் ஆலைகளுக்கு விற்று பிழைப்பின்றி தடுமாறுகிறார்கள். மீதி இருக்கக்கூடிய விவசாயிகளின் நிலை அறிந்து அவர்கள் பயிரிடக்கூடிய அந்த முந்திரிப் பயிரை அரசே கொள்முதல் செய்து, அரசே ஓர் ஆலையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசின்* Agricultural and Processed Food Products Export Development Authority–*யும், மாநில அரசும் இணைந்து 12–4–2005 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை*

ஏற்படுத்திக் கொண்டது. கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் முந்திரி வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்க வேண்டுமென்று அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில், அரியலூர் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 30,283 ஏக்கர் நிலத்தில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

குன்னம் தொகுதிக்குட்பட்ட செந்துறையில் முந்திரி தொழிற்சாலை அமைக்க தொழில் முனைவோர் தேவையான நிதி ஆதாரங்களுடன் முன்வந்தால் மீண்டும் அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, டிட்கோமூலம் மத்திய அரசினுடைய ASIDE மானியத் தொகையை வாங்கித் தந்து, முந்திரி தொழிற்சாலை அமைப்பதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: பரிசீலனை செய்து ஆலை அமைக்க அரசு முன்வரும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி என்றாலும், அரியலூர் சிமெண்ட் ஆலையை இப்போது விரிவுபடுத்தும் பணி நடைபெற்று அதற்கு பணியாளர்களை தேர்வு செய்யும் இந்த வேளையில், அந்த அரசு ஆலைக்கு நிலம் கொடுத்த எங்கள் செந்துறை ஒன்றியத்தைச் சேர்ந்த ஆனந்தவாடி பகுதி மக்களின் மகன், மகள்களுக்கு அந்தப் பணியில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் Cement factory–ல் 750 கோடி ரூபாயில் விரிவாக்கப் பணி நடைமுறைப்படுத்தப்பட்டு, 10 இலட்சம் டன் சிமென்ட் உற்பத்தி செய்வதற்குண்டான ஏற்பாடுகள் நடைபெற்று ஆகஸ்ட் மாதத்தில் அந்த plant–ஐ நடத்த trial செய்யவிருக்கிறோம்.

2018 ஜூன் 13]

முற்பகல் 10—45

அந்த அடிப்படையில், அந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான வாய்ப்பு, வசதிகளெல்லாம் இருக்கின்றன. நிலம் கொடுத்தவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கேள்வியை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முன்வைத்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நிச்சயமாக இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

தரம் உயர்த்துதல்

***14251—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மருத்துவமனையில் மேலும் வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கோரினாலும், அதற்குரிய ஆய்வுகளைச் செய்து, அந்த வசதிகள் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்த காலங்களிலே மனிதப் புனிதராக, மனித தெய்வமாக, தமிழகத்தின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் தன்னுடைய இன்னுயிரை அர்ப்பணித்து, மறைந்தும், மறையாமலும், இன்றைக்கும் அனைவரது உள்ளத்திலும், இல்லத்திலும் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய கருணைத் தாயை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு, அம்மா அவர்களுடைய ஆட்சிக்குத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கு முழு மனதோடு துணை நின்று, அம்மா அவர்களுடைய ஆட்சியை சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உசிலம்பட்டி தொகுதியின் தலைமையிடமாக விளங்கக்கூடிய இடம் செல்லம்பட்டி ஒன்றியம். அது கிராமப் பகுதிகள் அதிகம் சூழ்ந்த இடம். அங்கே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதந்தோறும் 20 முதல் 30 பிரசவங்கள் நடக்கின்றன. அங்குள்ள பெண்கள் பிரசவத்திற்கென தனி அறையுடன்கூடிய படுக்கை வசதி மற்றும் பிரசவத்திற்கென்று தனி அறையுடன்கூடிய ஒரு கட்டடம் தேவை என்று பல முறை அந்தப் பகுதி மக்களும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நீதிபதி, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். உங்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. பா. நீதிபதி: அந்தப் பகுதி மக்களுடைய வேண்டுதலின்படி பிரசவ அறையுடன்கூடிய கட்டடம் கட்டித் தருவதற்கும், அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தருவதற்கும், புதிய தரைத் தளம் அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2018 ஜூன் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்லம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. ஒரு மாதத்திற்கு 20–க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெறுகின்றன என்று சொல்கின்றார். உண்மையிலே, இந்தியாவிலேயே 70 சதவிகிதம் பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் செயல்படக்கூடிய ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் கருவுற்ற பெண்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்மூலம் நிதியுதவி வழங்குகின்ற காரணத்தினாலும், பிறந்த குழந்தைகளுக்கு 16 பொருட்கள் கொண்ட அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகத்தை வழங்குகின்ற காரணத்தினாலும் இந்த நிகழ்வுகளெல்லாம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தனி* Labour Ward *மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவை உடனடியாக இந்த நடப்பாண்டிலேயே கட்டித் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற 52 ஆரம்ப சுகாதார நிலையங்களை மையமாகக் கொண்டு, அங்கே துணை இயக்குநர் அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், மற்ற நிருவாக வசதிக்காகவும், மக்களின் வசதிக்காகவும் திண்டுக்கல், தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலெல்லாம் துணை இயக்குநர் அலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மதுரையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற துணை இயக்குநர் அலுவலகத்தையும் இரண்டாகப் பிரித்து, உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் காலங்களில் இதுகுறித்து ஆய்வு செய்து, தேவை இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் எதிர்க்கட்சித் தலைவர், செயல் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனகாபுத்தூர் நகராட்சியில் 400 சதுரடியில் 6 படுக்கைகள் கொண்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சிறிய அளவில் உள்ளதால் அது போதுமானதாக இல்லை. அது 60,000 மக்கள்தொகை உள்ள பகுதி. அதேபோன்று பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதியும் கிட்டத்தட்ட 50,000 மக்கள் வசிக்கின்ற பகுதி. அங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் சிறிய அளவில் உள்ளதால் இடம் போதுமானதாக இல்லை. ஆகவே, மக்கள்தொகைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனகாபுத்தூர் நகராட்சி, பொழிச்சலூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்கள் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை நேரடியாக இரண்டு முறை ஆய்வு செய்திருக்கின்றேன். பொதுவாக சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய புறநகர்ப் பகுதிகளில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, தாங்கள் குறிப்பிட்டதுபோல, பெருகிவரக்கூடிய

2018 ஜூன் 13]

மக்கள்தொகைக்கேற்ப அரசு முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த இரண்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையின் அடிப்படையில் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபொழுது பரமத்திவேலூர், தாலுகாவாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் பரமத்திவேலூர் மருத்துவமனை இன்றுவரை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படவில்லை. தினமும் 600, 700 புறநோயாளிகள் வருகின்ற மருத்துவமனை. அந்த மருத்துவமனை 1936 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மிகப்பழமையான, சிதிலமடைந்த கட்டடத்தில் இயங்கிவருகிறது. ஆகவே, அந்த மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும், அதற்குரிய மருத்துவர்கள், செவிலியர்களை நியமிக்கவும், பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கவும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்திவேலூர் சட்டமன்ற உறுப்பினர், நாளைவரை காத்திருங்கள். நாளை நல்ல அறிவிப்பு தங்களுக்குக் காத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கைபடி, நாளைக்கு அத்துறைக்கான மானியம் இருக்கிறது. மாண்புமிகு

உறுப்பினர்கள் கேட்பதற்கெல்லாம் சேர்த்து நாளைக்கு அவர் பதில் சொல்லிவிடுவார். ஆகவே, இன்றைக்கு இந்தக் கேள்வியை இதோடு முடித்துக்கொள்ளலாம்.

வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

அடிப்படை வசதிகள்

***9383—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் பெரியகல்வராயன் மலையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள் ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் பெரியகல்வராயன் மலையில் உள்ள நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்றேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலத்திலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவில் நாகலூர் அருவி அமைந்துள்ளது. சேலம்—வாழப்பாடி—தும்பல்—கருப்பந்துறை—பகுடுப்பட்டு—குன்னூர்—நாகலூர் உள்ளடக்கிய

2018 ஜூன் 13]

பகுதியாகும். நாகலூர் அருவிக்குச் செல்ல கருமந்துறையிலிருந்து நாகலூர் வரை போதிய பேருந்து வசதிகள் இல்லை. மேலும், நாகலூர் அருவியாக இல்லாமல் நீரோடையாக மட்டுமே உள்ளது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதி வனத் துறைக்கு உட்பட்ட பகுதியாகும். மேற்குறிப்பிட்ட 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை வசதி இல்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். நாகலூர் ஓடைக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளோ மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளோ வருகைபுரிவதும் இல்லை. இங்குள்ள உள்ளூர் கிராம மக்கள் மட்டுமே இந்நீரோடையைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, இவ்விடத்தில் அடிப்படை வசதிகள் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.*

திரு. ஆர்.எம். சின்னதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் இலட்சிய தேரில், புரட்சித் தலைவரின் கொள்கைகளுக்கு புகழ் சேர்த்து, தமிழகத்து மக்களுக்காகவே தன்னலம் பாராமல் மெழுகுவர்த்தியாக தன்னை வருத்திக்கொண்டு, 'தமிழகமே என் வீடு, தமிழக மக்களே என் பிள்ளைகள்' என தவ வாழ்க்கை வாழ்ந்து, தமிழகத்தை முன்னேற்றிய தங்கத் தாரகையே, எங்களின் இதயத் துடிப்பே, எங்களின் உயிர் மூச்சே, அம்மா தாங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன் தாயே.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில், தொடர்ந்து எதிர்க்கட்சிக்காரர்கள் கொடுத்த சோதனைகளையெல்லாம் சாதனைகளாக மாற்றிக் காட்டி சரித்திரம் படைத்தவரும், குடிமராமத்து என்னும் திட்டத்தை அறிவித்து, சாதனை படைத்திட்ட விவசாயிகளின் நம்பிக்கை நட்சத்திரமும், நல்லாட்சி நடத்தி வரும் மாங்கனி மாவட்டத்தின் மண்ணின் மைந்தருமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கியும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களை வணங்கியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்கியும் எனது கேள்வியைத் தொடங்குகிறேன்.

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, கீழ்நாடு ஊராட்சியில், கல்வராயன் மலையில் உள்ள மிகப் பெரிய நீர்வீழ்ச்சியில் சுமார் 500 மீட்டர் உயரத்திலிருந்து அருவியாக நீர் கொட்டுகிறது. இந்த நீர்வீழ்ச்சிக்கு செல்ல பாதை இல்லாத காரணத்தால், அருகே யாரும் செல்ல முடியவில்லை. ஆனால், மழைக் காலங்களில் அருவியில் சென்று குளிக்க முடியாததால், பொதுமக்கள் அருவியைப் பார்த்துவிட்டு மட்டும் செல்கின்றார்கள். இரண்டு நாள் மழைபெய்தால்கூட தொடர்ந்து மூன்று மாதம் அருவியில் நீர் கொட்டும். ஆகவே, அங்கு சாலை வசதி, உணவு அருந்துவதற்கான இடம், உடைகளை மாற்றுவதற்கான இடம் ஆகியவற்றை அமைத்துத் தருதல், Winch அமைத்துத் தருதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, அந்த இடமானது வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. வனத் துறையிடமிருந்து அனுமதி பெற்று, அந்த இடத்தைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து வனத் துறை அலுவலர்களிடம் தொடர்புகொண்டு, அந்த இடத்தை அளிக்க முடியுமா என்பதற்கான கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுற்றுலாத் துறை மிகவும் சீரோடும் சிறப்போடும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற வேளையில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கீழ்க்காணும் கோரிக்கையைக் கொண்டுவர விரும்புகிறேன்:

2018 ஜூன் 13]

கடந்த 2013–2014 ஆம் ஆண்டு காலத்தில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் அவர்களும் ஒரு நாள் அந்த நீர் வீழ்ச்சியை நேரில் சென்று பார்த்து வந்தார்கள். பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான அந்த நீர்வீழ்ச்சியைக் கண்டு களித்து, நீராடவும், உணவு அருந்துவதற்கான இடம், உடைகளை மாற்றுவதற்கான இடம் மற்றும் winch ஆகியவற்றை அமைத்துத் தரவும் ஆவன செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சி, முட்டல் ஏரி தற்போது சுற்றுலாத் தலமாக விளங்கிவருகிறது. கல்வராயன் மலையில் இருந்து 100 மீட்டர் உயரத்தில் ஆணைவாரி மடுவு நீர்வீழ்ச்சியில் நீர் கொட்டுகிறது. இங்கு வந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தினமும் அருவியில் நீராடி வருகிறார்கள். நீர்வீழ்ச்சி என்றாலே மலைகளிலேதான் வரும். இந்த முட்டல் ஏரிக்கும் ஆணைவாரி மடுவு நீர்வீழ்ச்சிக்கும் இடையேயுள்ள 3 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியும், உணவு அருந்துவதற்கான இடம், உடைகளை மாற்றுவதற்கான இடம் போன்ற அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள், ஆத்தூர் தொகுதி, கல்லாநத்தம் ஊராட்சி, முட்டல் ஏரி தற்சமயம் சுற்றுலாத் தலமாக உள்ளது என்றும், அங்கு படகு சவாரி நடத்தப்பட்டு வருகின்றது என்றும், அந்தப் பகுதியிலே படகு சவாரி நடத்துகின்ற காரணத்தினாலே, சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும், அந்தப் படகு சவாரி போக்குவரத்தின் காரணமாக நல்லதொரு வருவாய் ஈட்டக்கூடிய சூழல் இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[*2018 ஜூன் 13*

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *ஆணைவாரி மடுவிலிருந்து அந்த ஏரிக்கு நீர் வருகிறது. 3 கி.மீ. மண் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்றும், அங்கு குளிப்பதற்கும், உடை மாற்றுவதற்கும், உறைவிட கூடமும், உணவருந்தும் கூடமும் அமைத்துத் தர வேண்டுமென்றும் கோரியிருக்கிறார். ஆனால், அவர் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பகுதிகளும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தால், வனத் துறை அங்கே படகு சவாரி நடத்தாது. அப்படி நடத்துவதாக இருந்து, அதை சுற்றுலாத் துறை வசம் ஒப்படைப்பார்களேயானால், சுற்றுலாத் துறை அதை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அந்த வசதிகளை உருவாக்குவதற்கு நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். எனது கவனத்திற்கு வந்துவிட்டது. நடவடிக்கை எடுக்கிறேன்.*

வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

188—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்

***244—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூன் 13]

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்குத் துணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

வேலூர்—திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தைப் பிரித்து, திருவண்ணாமலை மாவட்டத்திற்கென்று தனியே ஒரு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் அமைப்பது குறித்து அரசால் ஆராயப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, வேலூர் மற்றும் திருவண்ணாமலை எனப்படும் இன்றைய வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டம் இருந்தபோது, மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியம் துவங்கப்பட்டது. இப்போது மாவட்டம் பிரிக்கப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டத்தில் 860 ஊராட்சிகள். பால் கூட்டுறவுச் சங்கங்களை எடுத்துக்கொண்டால், 572 பால் கூட்டுறவுச் சங்கங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கின்றன. வேலூர் மாவட்டத்தில் 276 பால் கூட்டுறவுச் சங்கங்கள்தான் இருக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்றைக்கு சுமார் 2 இலட்சத்து 36 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. வேலூர் மாவட்டத்தில் 1 இலட்சத்து 78 ஆயிரம் லிட்டர் பால்தான் உற்பத்தி ஆகிறது. அதோடுமட்டுமல்லாமல், திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகமாக*

[*2018 ஜூன் 13*

இருக்கிற காரணத்தினால், சென்னைக்கு வந்து செல்லும்போது சில நேரங்களில் போக்குவரத்து நெரிசல் காரணமாக உரிய நேரத்தில் விற்பனை செய்ய முடியாத நிலை இருக்கிறது என்பதை அறிந்த அரசாங்கம், திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் பகுதியில் பால் பவுடர் தொழிற்சாலை ஒன்றினை நிறுவியிருக்கிறது. அங்கு ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 2 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியைக்கொண்டு 20 டன் பால் பவுடர் தினமும் உற்பத்தி செய்யப்படுகிறது. வேலூர் மாவட்டத்தைவிட, திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகமான பால் உற்பத்தியாளர்கள் இருக்கிற காரணத்தாலும், திருவண்ணாமலை மாவட்டம் பெருந்தொழில்கள் ஏதுமின்றி, முழுக்க முழுக்க விவசாயிகள் நிறைந்திருக்கிற மாவட்டம் என்பதாலும், விவசாயிகள் பால் உற்பத்தியை உப தொழிலாக செய்து வருவதாலும், இந்த ஆட்சியிலே திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனியாக ஒரு பால் கூட்டுறவு ஒன்றியமாக அவசியம் பிரித்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சென்னையைத் தவிர 31 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி, திண்டுக்கல், உதகமண்டலம், புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் உள்ளிட்ட 5 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஒவ்வொன்றும் அந்தந்த வருவாய் மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை மட்டுமே உள்ளடக்கியதாகவும், 10 மாவட்ட ஒன்றியங்கள் 2 வருவாய் மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கியதாகவும் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் 3 வருவாய் மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கியும், திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் 4 வருவாய் மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கியும்*

2018 ஜூன் 13]

செயல்பட்டு வருகின்றன. வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தை உள்ளடக்கி செயல்பட்டு வரும் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் 836 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 3.44 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 522 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் நாளொன்றுக்கு சுமார் 2.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் அதிகளவில் கொள்முதல் செய்யப்படுவதாலும், பால் விற்பனையை அதிகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ள நிலையிலும், திருவண்ணாமலையில் இணையத்தின்மூலம் நிருவகிக்கப்படும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை செயல்பட்டு வருவதாலும், அதேநேரத்தில் தற்போது வேலூரில் உள்ள வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பாதிக்கப்படாத வகையிலும், வேலூர்—திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைப் பிரித்து புதியதாக திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் ஏற்படுத்த அரசால் ஆராயப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப்போல திருவண்ணாமலை மாவட்டம், வேலூர் மாவட்டம் என்று இரண்டாகப் பிரிந்து விட்டது. 29 ஆண்டுகாலத்திற்கு முன்னால் தலைவர் கலைஞர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தனியாகப் பிரிக்கப்பட்டு அதற்குக் கட்டடங்கள், விவசாய துணை இயக்குநர் அலுவலகங்கள், மண்டலப் போக்குவரத்து அலுவலகங்கள், கூட்டுறவு இணை பதிவாளர் அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம், மாவட்டத்திற்குத் தேவையான 16 நீதிமன்றங்களை ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், நெசவாளர் உதவி இயக்குநர் அலுவலகம், மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இப்படி*

மாவட்டத்திற்கு உரிய அனைத்து அந்தஸ்துகளும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அங்கே அடையாளமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, இப்போது ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற உங்கள் ஆட்சியின் நினைவாக—இப்போது தனி அலுவலர்கள் இருக்கிற நேரமிது. ஏனென்று சொன்னால், பால் உற்பத்தியாளர்கள் மூலமாக தேர்தல் நடத்தி இயக்குநர், சேர்மன் எல்லாம் தேர்வு செய்யப்பட்டால், அவர்கள் நாங்கள் பிரித்துக் கொடுக்க மாட்டோம் என்று கூட்டுறவுத் துறையில் இருக்கிற அதனுடைய சட்ட வலிமையைப் பயன்படுத்தி தீர்மானத்தை நிறைவேற்றி பிரிக்க முடியாது என்று சொல்கிற வாய்ப்பும் உண்டு. ஆனால், இப்போது தனி அதிகாரி இருக்கிற காரணத்தினால் அமைச்சருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னுடைய துறைச் செயலாளரை வைத்து, உடனே அதைப் பிரித்துக் கொடுப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது. எனவே, உங்களுடைய ஆட்சியின் அடையாளமாக ஒன்றாவது அங்கே வருவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு) நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. உங்கள் அடையாளம் ஒன்று இருக்கட்டுமே என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கூறிய கருத்து அரசால் ஆராயப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். ஏற்கெனவே 17 கூட்டுறவு ஒன்றியங்கள் இருக்கின்றன. 18 பால் பண்ணைகள் இருக்கின்றன. எல்லா மாவட்டங்களையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற நோக்கோடுதான் அரசு இருக்கிறது. ஆனால், சில மாவட்டங்களிலிருந்து அதிகமான பால் வருகிறது; சில மாவட்டங்களிலிருந்து குறைவாக வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து பால் குறைவாக வருகிறது, திருவாரூர் மாவட்டத்தில் பால் குறைவாக வருகிறது, ஆக, 3 மாவட்டங்களையும்

2018 ஜூன் 13]

இணைத்து ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அங்கிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் எங்களுடைய மாவட்டங்களில் உள்ள பால் ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். இங்கே இருக்கின்ற மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள்கூட திருப்பூர் மாவட்டத்தை கோயம்புத்தூர் ஒன்றியத்திலிருந்து பிரிக்க வேண்டுமென்று கோரியிருக்கின்றார். இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடத்திலே நான் பேசியிருக்கின்றேன். அவரும் நிதித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களிடத்திலே பேசியிருக்கிறார். தனி அதிகாரிகள் இப்போது இருக்கின்ற இந்த நேரத்திலே இதைப் பிரித்தால் பிரச்சினை இல்லாமல் போய்விடுமென்ற கருத்தைச் சொன்னீர்கள். இது வரவேற்கத்தக்கதுதான். இதைப் பிரிக்கும்போது அதற்குத் தேவையான வாகனங்கள், உள்கட்டமைப்பு வசதிகள், கட்டடங்கள் ஆகிய தேவைகளைப் பிரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்போது திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களென்று சொன்னால், அதற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் பால் பண்ணை எல்லாம் வேலூரிலே இருக்கின்றன. திருவண்ணாமலையில் பால் பவுடர் தொழிற்சாலை மட்டும் இருக்கிறது. மேலும், அங்கே தனியாக வாகனங்கள், உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை செய்யப்பட வேண்டும். இது குறித்து நிதி தொடர்பான பிரச்சினைகளைப் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றேன். கூடியவிரைவிலே நல்ல முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள். நீங்கள் கோரியிருக்கின்ற இந்தக் கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசித்து நல்லதொரு முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2018 ஜூன் 13*

189—

தொழிற்பயிற்சி நிலையம்

***4917—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது 6 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 2,183 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில் 426 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

முற்பகல் 11–10

மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 சதவிகித இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்டக் கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ், சிவகிரி தாலுகாவில் உள்ள வாசுதேவநல்லூரில் இயங்கிவரும் ஒரு தனியார் தொழிற்பயிற்சி நிலையத்திலும் 20 இடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலியிடங்கள் இப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளன. எனவே, புதியதாக மேலும் ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட சிவகிரியில் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி*

அம்மா அவர்களை வணங்கி, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்கி, தங்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகளை நான் ஏற்றுக்கொண்டாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அங்கிருக்கின்ற தொழிற்பயிற்சி நிலையங்களில் அங்கே ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகவில்லை என்கின்ற பதிலை அளித்திருக்கின்றார்கள். எனது தொகுதியான வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலே தனியார் நடத்துகின்ற கல்லூரிகள் அதிகமாக இருந்தாலுங்கூட, 3 பேரூராட்சிகளையும் ஒரு நகராட்சியையும் 2 ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளடக்கிய ஒரு மிகப் பெரிய தொகுதி என்னுடைய தொகுதி. அந்தப் பகுதியிலே அதிகமான மாணவர்கள் படித்து வருகின்றார்கள். அங்கே பள்ளிக் கல்விக்கும், உயர் கல்விக்குமாக நிறைய பள்ளிகள் அருமையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. தனியார் நடத்துகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் அரசு நடத்துகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் கட்டண வேறுபாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய மாணவர்களெல்லாம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலே படிக்க வேண்டுமென்று சொன்னால், அருகிலே தென்காசி சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய தென்காசியிலும், வி.கே. புரத்திலும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற தொழிற்பயிற்சி நிலையங்களுக்குத்தான் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த மாணவர்களுடைய, குறிப்பாக அந்த ஏழையெளிய மாணவர்களுடைய நலனைக் கருதி எனது தொகுதியிலே ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கையைவிட

திருநெல்வேலி மாவட்டத்தில்தான் அதிகமாக 6 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி 27 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏழையெளிய மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இதற்கு மேலும் அவசியம் ஏற்படின், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கும் முன்னர் அப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகளிடையே உள்ள வரவேற்பு, அப்பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை கள ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

190—

மாணவர் விடுதி

***10620—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2018 ஜூன் 13]

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

முற்பகல் 11—15

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறைந்த அம்மா அவர்களுடைய திருவடிகளை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

எனது உளுந்தூர்பேட்டை தொகுதியில் இருக்கின்ற சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியிலே 930 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011—2012—ல் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்தார்கள். அந்தப் பள்ளிக்கு 8, 10 கிராமங்களிலிருந்து வந்து மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையை அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்கள் நீண்ட நாட்களாக வைத்துக்கொண்டேயிருகின்றார்கள். கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதுகூட நான் இந்தக் கோரிக்கையை வைத்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை மீண்டும் பரிசீலனை செய்து, அந்த சரவணம்பாக்கம்

அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக ஒரு மாணவர் விடுதியை அமைத்துத் தர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அமைத்துக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் 60 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 3,525 ஆகும். 2017–2018 ஆம் ஆண்டில் 3,775 மாணவ, மாணவியர்கள் விடுதியில் தங்கி பயனடைந்துள்ளனர். தற்போது 7 விடுதிகள் மட்டும் வாடகைக் கட்டடங்களிலும், இதர விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதியில், 7 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. உளுந்தூர்பேட்டையில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், யு. கீரனூரில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும், எவனாஞ்சூர்பேட்டையில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் மற்றும் ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், திருநாவலூரில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியும் மற்றும் ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும், பேரங்கியூரில் ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் திருநாவலூர் என்ற இடத்தில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி மற்றும் ஒரு மிக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. எனவே, இந்தச் சூழ்நிலையில் உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

2018 ஜூன் 13]

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அனைத்து இடங்களிலும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக மாணவர் விடுதிகள் இருப்பது உண்மை. ஆனால், அவர் சொல்லியிருக்கின்ற திருநாவலூரில் ஒரு மாணவர் விடுதி இருக்கிறது. ஆக, அங்கு சரவணம்பாக்கத்தில் இருக்கின்ற மாணவர்கள் சென்று தங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கிருந்து கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் தூரத்திலே திருநாவலூர் இருக்கிறது. ஆகவே, அந்த மாணவர்கள் அங்கு தங்கிப் பயில்வது என்பது சிரமமான காரியம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும். என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதி, கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. அங்கே கிட்டத்தட்ட 19 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே, நீங்கள் சொல்கிற 5 பள்ளிகளில் மட்டும்தான் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக விடுதிகள் இருக்கின்றன. மற்ற பள்ளிகளிலும் அங்கே படிக்கின்ற மாணவர்கள் அதிகம் இருக்கின்றார்கள். எனவே, அதை நீங்கள் கவனத்தில் எடுத்து, மீண்டும் பரிசீலனை செய்து, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், உளுந்தூர்பேட்டையில் இருக்கின்ற அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2001 மாணவிகள் படிக்கின்றார்கள். அங்கேயிருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதியில், 50 மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு இட ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். ஆகவே, அங்கு 2001 மாணவிகள் படிக்கின்ற காரணத்தினால் அதிகமாக மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக, கூடுதலாக 50 மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு நீங்கள் வழிவகை செய்து தருவீர்களா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்து விழுப்புரம் மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து உரிய கருத்துருவினை பெற்று, ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையிலும், அரசின்*

நிதிநிலைக்கேற்பவும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) இருங்கள், விதி 110—ன்கீழ் அறிக்கைகள் இருக்கின்றன.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி () இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) மணப்பாறை மற்றும் திண்டிவனம் வட்டங்களில் தொழிற்பூங்காக்கள் அமைத்தல் குறித்த தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பிரதானமாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும்பொருட்டு, சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களைத் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்:*

(1) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் உள்ள கண்ணுடையான்பட்டி, கே.பெரியபட்டி மற்றும் சத்திரப்பட்டி ஆகிய வருவாய்க் கிராமங்களில் சுமார் 1,077 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம்,

சுமார் 5,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவர். இப்பூங்காவில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, சாலையோர மரங்கள் மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற வசதிகள் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) சிப்காட் நிறுவனத்தால், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள பெலாகுப்பம், தெள்ளார் மற்றும் வெண்மணியாத்தூர் ஆகிய வருவாய்க் கிராமங்களில் சுமார் 720 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், சுமார் 5,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவர். இப்பூங்காவில், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான வசதிகள், மழைநீர் வடிகால் வசதி, சாலையோர மரங்கள் மற்றும் தெரு விளக்குகள் போன்ற வசதிகள் 52 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2018–2023 உருவாக்குதல்; NEEDS திட்ட மானியத் தொகையை உயர்த்துதல்; திருப்போரூரில் சிட்கோ தொழிற்பேட்டை பகுதி–2 நிறுவுதல்; குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு உருவாக்குதல் உள்ளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைமூலம் செயல்படுத்தப்படவிருக்கும் பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுகின்றேன்.

(1) தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பப் பொருட்கள் மேம்படுத்துதலுக்கு உதவி செய்யவும், தொடக்க நிலை தொழில் முனைவோருக்கு ஆரோக்கியமான சூழலை உறுதிப்படுத்தவும், “தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2018–2023”–ஐ உருவாக்கி, தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்த உள்ளது. இக்கொள்கையினால், அனைத்துத் துறைகளிலும் உள்ள திறமையுள்ள தனி நபர்கள் மற்றும் தொழில்

முனைவோர்கள் தங்களுடைய புத்தாக்க எண்ணங்களைச் செயல்படுத்தி, சிறந்த தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க முடியும். "தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023"—ல் குறிப்பிடப்பட்டுள்ள, ஆண்டுக்கு 11 சதவிகித மாநில மொத்த உள்நாட்டு வளர்ச்சி வீதத்தினை அடையும் வகையில் இக்கொள்கை அமையும்.

(2) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கிவரும் முதலீட்டு மானியச் சலுகைக்கு இணையாக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கும், அதிகபட்ச மானியத் தொகை 25 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) 2018–2019 ஆம் நிதியாண்டில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், ஆலத்தூர் கிராமத்தில், 70.33 ஏக்கர் நிலப்பரப்பில், 84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிட்கோ தொழிற்பேட்டை பகுதி–2 நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) புத்தாக்க பற்றுச் சீட்டுத் திட்டம் மூலமாக புத்தாக்கம் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு புத்தாக்கம்/தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்கள் மூலமாக புத்தாக்கத்தினை உருவாக்குதல் அல்லது கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு பரிசோதனைக் கூடங்கள் மூலமாக முன்மாதிரி மேம்பாடு மற்றும் பொருட்கள் பரிசோதனை செய்வதற்காக மானியம் வழங்கப்படும். உலக அளவில் பல நாடுகளில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புத்தாக்கத் திறனை அதிகரித்தல் ஆகும். இத்திட்டத்தின்மூலம், ஆண்டொன்றுக்கு 400 தொழில் முனைவோர்களுக்கு புதுமைகளைப் புகுத்துவதற்காகவும் மற்றும் சிறிய அளவிலான தொழில்நுட்ப சிக்கல்களை அறிவுசார் ஆலோசகர்களுடன் இணைந்து சரி செய்வதற்காகவும், அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 20 கோடி ரூபாய் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5–6–2018 அன்று இப்பேரவையில் நான் அறிவித்த "ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் மீதான தடை" அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் விதமாக, எளிதில் மக்கக்கூடிய மாற்றுப் பொருட்களைக் கண்டறியவும் இத்திட்டம் பெரிதும் உதவும்.

(5) தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டு மயமாக்கவும், வெளிநாட்டு ஒத்துழைப்பைப் பெறவும், தமிழ்நாட்டில் முதலீட்டை ஈர்க்கவும், "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு" ஒன்று உருவாக்கப்படும். தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு விரைவாகவும், உரிய காலத்திலும் அனுமதி வழங்கவும், ஒற்றைச்சாளர முறையை செயல்படுத்துவதற்காக, ஒருங்கிணைப்பு முகமையாகவும் இது விளங்கும். மேலும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான முதலீடுகளை மேம்படுத்துதல், வணிக அமைப்புகள், தொழிலக அமைப்புகள் மற்றும் முதலீட்டுக் கொள்கையை முன்மொழிபவர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் படிப்படியாக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளுதல் ஆகியவற்றையும் ஒருங்கிணைக்கும் முகமையாகவும் இந்த அமைப்பு செயல்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

(இ) கன்னியாகுமரி, இராமநாதபுரம், கடலூர், தேனி மற்றும் விழுப்புரம் மாவட்ட நீதிமன்ற கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்; சென்னை, புழல் மத்திய சிறையில் கூடுதல் வசதிகள், சிறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்; மத்திய சிறைகளில் செல்லிட தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள் அமைத்தல் உள்ளிட்ட உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகத் துறையின்மூலம் செயல்படுத்தவுள்ள பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுகின்றேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 13

1. கன்னியாகுமரி மாவட்டம், பூதபாண்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகன நிறுத்தத்துடன்கூடிய கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 4 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள், 6 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தின் மேல்தளங்களில் சார்பு நீதிமன்றம், கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்குக் கூடுதலாக இரண்டு நீதிமன்ற அறைகள் மற்றும் அலுவலகங்கள் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு உணவகம், இருசக்கர வாகன நிறுத்தத்துடன்கூடிய ஒருங்கிணைந்த கட்டடம் மற்றும் வாகன நிறுத்தத்துடன்கூடிய இரண்டு குடியிருப்புகள் 6 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம், சைக்கிள் நிறுத்தம், வாகன நிறுத்தம், உணவகம், பொதுக் கழிப்பிடம் மற்றும் சுற்றுச் சுவருடன்கூடிய குடியிருப்பு 8 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள் 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. தருமபுரி மாவட்டம், அரூரில் சார்பு நீதிமன்ற, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. திருச்சி மாவட்டம், துறையூரில் சார்பு நீதிபதி குடியிருப்பு கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் விரைவு நீதிமன்ற நீதிபதிக்கான குடியிருப்பு கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரத்தில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்:

1. சென்னை, புழல் மத்திய சிறை 2—ல் உள்ள இட நெருக்கடியை கருத்தில்கொண்டு, 500 சிறைவாசிகளை கூடுதலாக அனுமதித்திடும் வகையில், 15 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. புழல் மத்திய சிறை—2, வேலூர், கடலூர், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய சிறைகளில் பணிபுரிந்து வரும் உதவி சிறை அலுவலர்களுக்கு 50 குடியிருப்புகள், 10 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சிறைகளுக்குள் சிறைவாசிகள் செல்லிடத் தொலைபேசியை உபயோகப்படுத்துவதைத் தடுத்திடும் பொருட்டு, ஏற்கெனவே 9 மத்திய சிறைகளில் செல்லிடத் தொலைபேசியை செயலிழக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, சென்னை, புழல் மத்திய சிறை—1 மற்றும் 2, திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை மற்றும் 5 பெண்கள் தனிச் சிறைகளில் நடப்பாண்டில், 10 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செல்லிடத் தொலைபேசியை செயலிழக்கும் கருவிகள் பொருத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) மதுரை அன்னை சத்தியா குழந்தைகள் காப்பகத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல்; தருமபுரி பஞ்சப்பள்ளி சிறுவர் அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு உட்கட்டமைப்பு வசதியுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சார்ந்த பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:*

1. ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்க தமிழ்நாடு அரசால் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மதுரையில் செயல்படும் அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகம், 1986 ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சிக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தற்போது, இக்கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், ஒரு புதிய கட்டடம், துயிற்கூடம், குழந்தைகள் நலக் குழு அறை, வகுப்பறை, தொழிற்பயிற்சிக் கூடம் மற்றும் உணவுக் கூடம் ஆகியவை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் ஒன்று 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், 46,397 அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 860 அங்கன்வாடி மையக் கட்டடங்களில் உள்ள சிறிய மற்றும் பெரிய வகையிலான பழுதுகளை நீக்கி, சீர்படுத்துவதற்காக தலா 2 இலட்சம் ரூபாய் வீதம், 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

(உ) தன்னார்வத் தொண்டு நிறுவன சிறப்பாசிரியர்களுக்கான மதிப்பூதியத்தை உயர்த்துதல் உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகள் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்களின் தன்னம்பிக்கையை வளரச் செய்யவும், சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும், அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக,

1. மனவளர்ச்சி குன்றியோர், பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்காக செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் மதிப்பூதியம் 10,000/– ரூபாயிலிருந்து 14,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 1,129 சிறப்பாசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் பயன் பெறுவர். இதனால், அரசுக்கு ஆண்டொன்றிற்கு 5 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப் பொருள் விற்பனை மையம் அமைக்க, அவர்கள் ஆவின் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய முன்வைப்பு நிதி 25,000/– ரூபாய் மானியமாக வழங்கப்படும். முதற்கட்டமாக, 100 நபர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின்கீழ் செயல்படும் 301 சிறப்புப் பள்ளிகள் மற்றும் இல்லங்கள்மூலம் 11 ஆயிரத்து 948 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறுகின்றனர். அவர்களுக்கு தற்போது மாதமொன்றிற்கு வழங்கப்பட்டுவரும் உணவூட்டு மானியம் 650/– ரூபாயிலிருந்து 900/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைகள் குறித்த விதி 110–ன்கீழ் முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் துறை சிறப்பாகச் செயல்படும் வகையில், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

இயல்பாக ஆட்சி நடத்திடும் ஆட்சியாளர் நாட்டில் பருவ மழை பெய்து, விளைச்சலும் நன்றாக விளைந்து நிறையும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் எங்கள் இயக்கத்தின் இமையே, இமயத்துப் புகழே, இரக்கத்தின் வடிவே, ஈடில்லா வரமே, வேதனைகள் தீர்த்த எங்கள் வெற்றித் திருமகளே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநின்று, *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் துணைகொண்டு, நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் நாடி, அவர்களின் உரிமைகள் பேணிப்,பேரவை விதி 110–ன்கீழ் 3 முத்தான அறிவிப்புகள் மற்றும் மாற்றுத்

திறனாளிகள் வாழ்வில் ஏற்றம் பெற பேரவை விதி 110–ன்கீழ் 3 மணியான அறிவிப்புகள் ஆகியவற்றை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் சார்பிலும், மாற்றுத் திறனாளிகள் துறை சார்பிலும் என் நன்றிகளை உரித்தாக்கி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தரத்திற்கு ஒப்பாக சிப்காட் தொழிற் பூங்காக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், தொழில் வளர்ச்சி பெறவும், தொழிற்சாலைகள் தொடர்ந்து பெருகிடவும், இளைஞர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கிடவும் ஏதுவாக இன்றையதினம் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி மாவட்டம், மணப்பாறையில் தொழிற் பூங்கா அமைக்கப்படும்; 52 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் உள்ள தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என இரண்டு அறிவிப்புகளைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தொழில் துறையின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையை மேலும் மேம்படுத்தும் விதமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் முத்தான 5 அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் உன்னதத் திட்டமான NEEDS திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியத்தின் உச்சவரம்பு 25 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்; அதேபோன்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியத் திட்டமான Vision 2023–ஐ நினைவூட்டும் விதத்தில் தமிழ்நாடு

புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை அறிவிக்கப்படும்; புத்தாக்க கண்டுபிடிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்கில் புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்; காஞ்சிபுரம் மாவட்டம், ஆலத்தூரில் புதியதாகத் தொழிற்பேட்டை அமைக்கப்படும்; இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டுமயமாக்கும் வகையிலும், அந்நிய நாட்டு ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணமும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு உருவாக்கப்படும் என்பது போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை வெளியிட்டமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பிலும், துறையின் சார்பிலும், ஒட்டுமொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

5. தகவல் கோரல்

(அ) திரைப்பட நடிகர் திரு. S.Ve. சேகர் கைது செய்யப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரைப்பட நடிகர், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் பத்திரிகைத் துறையில் இருக்கக்கூடிய ஊழியர்கள், குறிப்பாக, பெண்களை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, சற்றுப் பொறுங்கள். அதுகுறித்து என்னுடைய கவனத்திற்கு வந்தவுடனே, அதைப்பற்றி அரசிடம் விசாரித்தேன். அது என்னவென்று கேட்டேன். அவர்கள் சொல்கிற பதில் என்னவென்றால், நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை,

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, நீதிமன்றம்தான் arrest பண்ணச் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறது.

2018 ஜூன் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு. . .*

திரு. மு.க. ஸ்டாலின்: *இன்னும் கைது செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *20 ஆம் தேதி நீதிமன்றத்தில் அவர் ஆஜராக உத்தரவிட்டிருக்கிறார்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *போலீஸ் துணையோடு, சுதந்திரமாக, வெளியிலே நடமாடிக்கொண்டிருக்கிறார். அவர் தலைமறைவாகக்கூட இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தச் சமயத்தில், நீதிமன்றம், (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை. நீதிமன்றம் ஓர் உத்தரவைப் போட்டிருக்கிறது. அவரை 20 ஆம் தேதி நீதிமன்றத்தில ஆஜராகும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *அது வேறு விஷயம். அவர் இன்னும் கைது ஆகாமல், arrest ஆகாமல் இருப்பதற்குத்தான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆகவே, நீதிமன்றத்தின் நடவடிக்கையில் இருக்கின்ற, (குறுக்கீடு) இல்லை, நீதிமன்ற நடவடிக்கைகளில் இருக்கின்ற ஒரு பொருளை, நாம் இங்கே விவாதிப்பது முறையாக இருக்காது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *நீதிமன்றத்தின் நடவடிக்கை குறித்து நான் பேசவில்லை. காவல் துறை ஏன் இன்னும் அவரைக் கைது செய்யவில்லை என்றுதான் கேட்கிறேன். இதுவரையில், காவல் துறை செய்யவில்லை. அவர் சுதந்திரமாக,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துவிட்டு, அந்தப் பொருள் நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றம் அவரை 20 ஆம் தேதி வரும்படி உத்தரவிட்டிருக்கிறது. நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிற ஒரு பிரச்சினையை இந்த அவையிலே விவாதிப்பது சரியாக இருக்காது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *நீதிமன்றத்தின் நடவடிக்கைக்குள் நான் செல்லவில்லை. நான் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்குள் செல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் போகவில்லை என்று எனக்குத் தெரிகிறது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *நான் நீதிமன்றத்திற்குள் செல்லவில்லை. நீதிமன்ற உத்தரவை காவல் துறை ஏன் நிறைவேற்றவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எழுப்ப வருகிற, (குறுக்கீடு) அதுதான், அவர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீதிமன்ற உத்தரவு இருக்கிற காரணத்தினாலே, இதை நாம் இந்த அவையிலே விவாதிப்பது சரியாக இருக்காது என்ற காரணத்தினால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 20 ஆம் தேதிவரை பொறுத்திருந்து, அதைப்பற்றிப் பேசுவதற்கு ஏதாவது இருந்தால் பின்னர் அதைப்பற்றி பேசலாம். (குறுக்கீடுகள்) நீதிமன்றம், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது இல்லை. நீதிமன்றம் ஒரு தெளிவான உத்தரவைக் கொடுத்திருக்கிறது. 20 ஆம் தேதி அவரை ஆஜராகும்படி நீதிமன்றம் கேட்டுக்கொண்டிருக்கிறது. குற்றப்பத்திரிகையும் போலீஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து நீதிமன்றம் 20 ஆம் தேதி என்ன செய்யப் போகிறது என்பது தெரியாது. ஆகவே, அதைப் பற்றி நாம் விவாதிப்பது சரியாக இருக்காது என்கிற காரணத்தினால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பொருளை விடுத்து, வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால், அதைப்பற்றி தயவு செய்து பேசலாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை ஏன் கைது செய்யவில்லை?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அது வேண்டாம். நீதிமன்றம் அவரை, (குறுக்கீடு) நீதிமன்றம், (குறுக்கீடு) அதுவல்ல, இவற்றையெல்லாம் நாம் இங்கே பேச முடியாது.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

இதையெல்லாம் பேசினால், விவாதம் சரியாக இருக்காது. (குறுக்கீடுகள்) இல்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

2018 ஜூன் 13] [பேரவைத் தலைவர்]

நீதிமன்றம் உத்தரவைப் போடவில்லை என்று சொன்னால், நீதிமன்றம் எந்த உத்தரவையும் கொடுக்கவில்லை என்று சொன்னால், அதைப்பற்றி நீங்கள் பேசுவதற்கு நான் முழுமையாக அனுமதிப்பேன். (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. சற்று பொறுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

சற்று பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நானும் பேசிக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு—ஒரு பொருள் நீதிமன்றத்தின் முன்னிலையில், விசாரணையில் இருக்கிறது. நீதிமன்றம் ஒரு தெளிவான உத்தரவை, ஒரு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதற்குப் பின்னாலே, நீதிமன்றம் ஓர் உத்தரவு போடுகிறது. அவர் ஆஜராக வேண்டுமென்று ஒரு தெளிவான உத்தரவை, 20 ஆம் தேதி ஆஜராக வேண்டுமென்று ஒரு கெடு கொடுத்திருக்கிறது. நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டிருக்கிறபோது, 20 ஆம் தேதிக்கு முன்னதாக மற்றவர்கள் அதைப்பற்றிப் பேசுவதும், விவாதிப்பதும், அடுத்து வருகிற நீதிமன்ற நடவடிக்கைகளில் நாம் தலையிடுவது மாதிரி ஆகிவிடும். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அது குறித்துப் பேச வேண்டாம். அந்தப் பொருள் குறித்துப் பேச வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால், நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள், நான் அரசை என்னவென்று கேட்கிறேன்.

முற்பகல் 11–40

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது வேண்டாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, மன்னிக்க வேண்டும். ஒரு நிமிடம் கேளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நீதிமன்றத்தின் வழக்கிற்குள் செல்ல விரும்பவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வழக்கு குறித்துப் பேச விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) இப்போதுதான் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால், இந்த வழக்கு எத்தனை நாட்களாக நடந்துகொண்டிருக்கிறது. ஏப்ரல் மாதத்திலிருந்து தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. ஏன் இதுவரையில் கைது செய்யவில்லை?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை கைது செய்யாததால்தான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இதையெல்லாம் இதற்கு முன்னால் பேசியிருந்தால், அது சரியாக இருந்திருக்கும். நீதிமன்றம் 20 ஆம் தேதி என்று ஓர் உத்தரவு போட்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து, இந்த மன்றத்தில் விவாதிக்க நான் அனுமதிப்பது, நீதிமன்ற அவமதிப்பிற்கு உள்ளாகும் என்கிற காரணத்தினால் (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிட்டு, வேறு ஏதாவது பிரச்சினை குறித்து கேளுங்கள். நான் அனுமதிக்கிறேன். இது குறித்து பேச வேண்டாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் எதற்காக அந்த உத்தரவு போட்டிருக்கிறதென்றால்—காவல் துறை அவரை ஏன் கைது செய்யவில்லை ஆக நீங்களாக ஆஜராகுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், அரசிடம் இது குறித்து தெளிவாக விவாதித்துவிட்டு பின்னர்தான்,(குறுக்கீடு) நீதிமன்றம், . . .*

2018 ஜுன் 13]

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. ** எனக்குக் கிடையாது. (குறுக்கீடுகள்) ** எனக்குக் கிடையாது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, எதிர்க்கட்சியினுடைய கடமை, நான் சொல்லியாக வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய கடமை, நீதிமன்றத்தில் இருக்கின்ற எந்தப் பொருள் குறித்தும் இந்த அவையில் விவாதிக்க அனுமதிக்கக் கூடாது என்பதுதான். எனக்கு இருக்கின்ற விதி அதுதான். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு எதைக் குறித்துப் பேசினாலும் நான் அனுமதிக்கிறேன். இது குறித்துப் பேச வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். இல்லை, இல்லை நீதிமன்றம் இந்த உத்தரவைக் கொடுப்பதற்கு முன்னரே இந்தப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பியிருந்தால், நீங்கள் முழுவதும் பேசுவதற்கு நான் அனுமதித்திருப்பேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வெளிநடப்புச் செய்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது உங்கள் உரிமை.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் கைது குறித்து இங்கே பேசி ** என்ற அடிப்படையில் எனக்கு பேசுவதற்கு நீங்கள் அனுமதி தரவில்லை. எனவே, நாங்கள் அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது பேரவைத் தலைவரையே **நான் ** முயற்சி செய்யவில்லை. அது அவைக் குறிப்பில் இருப்பது எனக்கு ** ஏற்படுத்தும் என்கிற காரணத்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதை, அந்தக் கடைசி வார்த்தையை பேரவைத் தலைவர் ** என்று வருகிற அந்த*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், என்ன? சொல்லுங்கள். நேற்று காலையில் என் அறையில் வந்து என்னைப் பிரச்சினைக்குள்ளாக்கி அது பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது. இன்றைக்கு அது போன்று எதுவும் செய்யாமல் நீங்கள் உங்கள் தொகுதிக்குண்டான பிரச்சினையைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்களே இரண்டு நோட்டீஸ்களை என்னிடம் கொடுத்துவிட்டு நேற்று தேவையில்லாமல் என்னை ** செய்துவிட்டீர்கள். சொல்லுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை திரு. எஸ்.வி. சேகர் அவர்களைக் கைது செய்வது குறித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் இல்லை, இந்தப் பொருள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொன்ன அதே பதில் தான் உங்களுக்கும் பொருந்தும், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது குறித்துப் பேசப்போவதாக என்னிடம் முன்னரே அனுமதி கேட்டார். நீங்கள் எதுவும் கேட்காமல் raise செய்வதற்கு அனுமதியில்லை. நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், என்ன சொல்லுங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006–2011 வரையிலான தி.மு.க. ஆட்சியில் பல்வேறு வழக்குகள் குறித்து நாங்கள் இந்தச் சபையில் பிரச்சினைகளை எழுப்பியபோது, அப்போதைய முதலமைச்சரும், அப்போது துணை முதலமைச்சராக இருந்த திரு. ஸ்டாலின் அவர்களும், நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு குறித்து எந்தப் பொருளையும் இங்கே பேசுவதற்கு அனுமதி இல்லையென்று அனுமதி மறுத்தார்கள்.

ஆகவே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கடைசி வரை கேட்காமல், வெளிநடப்புச் செய்யும் இந்த நிலை இனிமேல் இருக்கக் கூடாது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 13]

(ஆ) நாகப்பட்டினம், திருக்கண்ணபுரம் அருள்மிகு சவுரிராஜ பெருமாள் கோயில் குடமுழுக்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்சாரி, என்ன? சொல்லுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமாகத் தகவல் கோரல் ஒன்று கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுதான் இன்றைக்கு இந்து சமய அறநிலையங்கள் துறை குறித்த மானியம் வருகிறது. எந்தக் கோயில் என்று சொல்லுங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார் என்று கேட்போம்.*

முற்பகல் 11–45

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமுதாய மக்கள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்களுடைய கிராமங்களிலே கோயில் கும்பாபிஷேகம் நடத்துவார்கள். அப்படி நடத்த முடிவெடுக்கக்கூடிய தருணங்களிலே, அந்த ஊரைச் சார்ந்த செல்வந்தர்களும், இறை நம்பிக்கையாளர்களும் நிறைய செலவு செய்யத் தயாராக இருக்கிறார்கள். இந்து சமய அறநிலையத் துறை என்பது அதற்கு ஒப்புதலை மட்டும் வழங்க வேண்டியதுதான் பாக்கி. ஆனால், ஒப்புதலை வழங்குவதற்கு காலதாமதம் செய்கின்ற காரணத்தினாலே, பல இடங்களிலே கோயில் கும்பாபிஷேகம் நடைபெற முடியாமல் போய்விடுகிறது. உதாரணத்திற்கு, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்கு உட்பட்ட . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி, கொஞ்சம் இருங்கள். நீங்கள்* zero hour*–ல் இந்தமாதிரி பிரச்சினையை* raise *பண்ணுவது என்பது விதிகளுக்கு முரணானது.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *நான் தகவல்கோரல் என்ற முறையில் எழுப்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தகவல் கோரல் என்ற முறையிலும் நாங்கள் உங்களைப் பேச அனுமதிக்க முடியாது.*

நீங்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த மிக முக்கியமான பிரச்சினை என்று கேட்டால் நான் அனுமதிப்பேன்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: என்னுடைய தொகுதிப் பிரச்சினைதான், முக்கியமானதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமாக இந்த மாதிரி பிடிவாதமாகப் பேச வேண்டும் என்பது மிகவும் தவறு. நான் இன்றைக்கு மட்டும் நீங்கள் பேச அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள். சரி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட திருக்கண்ணபுரத்தில் இருக்கக்கூடிய அருள்மிகு சவுரிராஜ பெருமாள் கோவிலுக்கு திருப்பணியைத் தொடங்கி அங்கே குடமுழுக்கு நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் உங்களுடைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை சொல்கிறபோது இதற்கான பதிலை அப்போது வழங்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் (குறுக்கீடு) ஒன்றுமில்லையா? நன்றி, அவ்வளவுதான்.

6. கவன ஈர்ப்பு

(அ) எழும்பூர், 104–வது வார்டு, கங்காதீஸ்வரர் கோயில் தெருவிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

2018 ஜூன் 13]

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்களுடைய கழகத்தின் செயல் தலைவர் மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.*

"எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள 104—வது வார்டிலுள்ள, கங்காதீஸ்வரர் கோயில் தெருவில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் 1975 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டவை. அந்தக் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104—வது வார்டில் உள்ள கங்காதீஸ்வரர் கோயில் தெரு (பங்கஜம் தெரு) திட்டப் பகுதியில் 56 அடுக்குமாடிக் குடியிருப்புகள் (2 தொகுப்புகள்) நான்கடுக்கு மேம்பாட்டில் குடியிருப்பு ஒவ்வொன்றும் 326 சதுர அடி கட்டுமானப் பரப்பில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 1974 ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. இக்குடியிருப்புகளுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் ரூ.4.33 இலட்சம் செலவில் கீழே கூறப்பட்டுள்ள பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. *குடியிருப்புகளைச் சுற்றிலும் கான்கிரீட் நடைபாதை அமைத்தல்*
2. *கழிவுநீர் குழாய்கள் பழுதுபார்த்தல்*
3. *வெளிப்புற சுவர் பூச்சு*
4. *கழிப்பறை பீங்கான்களை மாற்றுதல்*

மேலும், 2016—2017 ஆம் ஆண்டில் ரூ.1.50 இலட்சம் செலவில் சுவருக்கு வர்ணம் பூசுதல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன; மற்றும் பராமரிப்பு, குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல்

பணிகளும் முறையாக அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டமைப்பு உறுதித் தன்மையினை ஆய்வு செய்யவும், அக்குடியிருப்புகளை இடித்துவிட்டு, அவற்றை மீண்டும் கட்டவும் பரிந்துரை செய்ய தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைச் சார்ந்த பொறியாளர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழு அரசாணை (நிலை) எண் 97, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 15—5—2013—ல் கீழே கூறப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது:—

தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	தலைவர்
முனைவர் A.R. சாந்தகுமார், ஓய்வுபெற்ற பேராசிரியர், இந்திய தொழில்நுட்பக் கழகம் (I.I.T.)	உறுப்பினர்
சம்பந்தப்பட்ட பகுதியைச் சார்ந்த மேற்பார்வைப் பொறியாளர்	உறுப்பினர்
சம்பந்தப்பட்ட பகுதியைச் சார்ந்த நிருவாகப் பொறியாளர்	உறுப்பினர்

தற்போது இக்குடியிருப்புகளின் கட்டமைப்பு 13—3—2018 அன்று, எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, தொழில்நுட்ப ஆய்வறிக்கையின் அடிப்படையில் இக்குடியிருப்புகள் உறுதியான தன்மையில் இருப்பதால், இடித்து மீண்டும் புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். எழும்பூர் தொகுதி, 104—வது வட்டம், கங்காதீஸ்வரர் கோயில் தெருவில் 56 வீடுகள் கொண்ட குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கடந்த 1975 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதேபோல், 168 வீடுகள் கொண்ட ஆர்.கே. புரம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு 1974 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதேபோல, 104—வது வட்டத்திலுள்ள

2018 ஜூன் 13] **[திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்]**

ஓசோன்குளம் என்ற பகுதியில் 1970 ஆம் ஆண்டு 288 வீடுகள் கட்டப்பட்டன. அதேபோல, 61–வது வட்டம், டாக்டர் சந்தோஷ் நகரில் 1975 ஆம் ஆண்டு 272 வீடுகள் கட்டப்பட்டன. அதேபோல, 77–வது வட்டம், பி.கே. காலனி பகுதியில் 1974 ஆம் ஆண்டு 594 வீடுகள் கட்டப்பட்டன. அதேபோல், எம்.எஸ். நகர் பகுதியில் 1972 ஆம் ஆண்டு 224 வீடுகள் கட்டப்பட்டன. வேம்புலி அம்மன் கோவில் தெருவில் 1972 ஆம் ஆண்டு 144 வீடுகள் கட்டப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடுகளெல்லாம் எங்களுடைய கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கட்டி முடிக்கப்பட்டன. விவர அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அந்த வீடுகளுக்குப் பல்வேறு பணிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்திருக்கின்றார்.*

அந்த விவர அறிக்கையிலே சொல்லப்பட்டதெல்லாம் மேல்பூச்சுதான். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், make–up போட்டு வைக்கப்பட்டு இருக்கின்றது. ஒரு மழை பெய்தால் அந்த make–up உடனே கலைந்துவிடும். மேலே மழை பெய்தால் அந்த மழை நீர் உட்பகுதிக்கு வந்து அது தரை தளத்திற்கு வருகிறது. 4 மாடிகள் கொண்ட அந்த கங்காதீஸ்வரர் கோவில் தெருவிலுள்ள வீடுகளில், நான்காவது மாடியில் மழை பெய்தால் தரைத் தளத்திற்கு தண்ணீர் வரக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகள் அங்கு சென்று ஆய்வு செய்து, வெளிப்புறத்தைப் பார்த்துவிட்டு சுண்ணாம்பு அடித்துவிட்டு, அந்த வீடுகள் நன்றாக இருக்கின்றன என்று அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, உடனடியாக நான் மேலே குறிப்பிட்ட எங்களுடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இருந்தபோது கட்டப்பட்ட அந்த வீடுகளை உடனடியாக இடித்துவிட்டு, புதிய வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

அதேபோல 61–வது வட்டத்திலுள்ள சந்தோஷ் நகர் பகுதியில் 1975 ஆம் ஆண்டு 272 வீடுகள் கட்டப்பட்டன. அந்த வீடுகளில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு திருமணம் செய்து, ஏறக்குறைய

317 குடும்பங்கள் காலியாக இருக்கின்ற இடங்களில் சந்தோஷ் நகர் குடிசை மாற்று வாரிய பகுதிகளின் அருகிலேயே குடிசைகளில் குடியிருந்து வருகிறார்கள். சந்தோஷ் நகர் குடியிருப்பை இடித்துவிட்டு புதிய குடியிருப்பு கட்டப்படும்பொழுது, குடிசைப் பகுதிகளில் இருக்கக்கூடிய அந்த குடிசைவாசிகளுக்கும் அதே இடத்தில் வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பார்த்தால் என்னுடைய

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி கேட்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லா கேள்விகளையும் கேட்கிறீர்களா? (குறுக்கீடு) சரி கேட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, கேட்டுவிடுங்கள். நீங்கள்தான் அறிக்கையை படித்துவிட்டீர்களே! கேட்டுவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104–வது வார்டில் உள்ள கங்காதீஸ்வரர் கோயில் தெரு திட்டப் பகுதியைப் பொறுத்தமட்டில், விவர அறிக்கையில் குறிப்பிட்டபடி, 56 அடுக்குமாடி குடியிருப்புகள், இரண்டு தொகுப்புகளாக, 4 அடுக்கு மேம்பாட்டில், குடியிருப்பு ஒவ்வொன்றும் 326 சதுர அடி கட்டுமானப் பரப்பில், 1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டன. மேலும், இக்குடியிருப்புகளில் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் ரூ.4.33 இலட்சம் செலவில் அனைத்து பழுது பார்க்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளன. மேலும், 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.1.5 இலட்சம் செலவில் சுவருக்கு வர்ணம் பூசுவது உள்பட பல்வேறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* make–up *போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.* Make–up *எல்லாம் போட முடியாது. குடிசைப் பகுதிமாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளெல்லாம் உறுதித்தன்மை வாய்ந்த வீடுகளாக இன்று இருக்கின்றனவா, இல்லையா என்பதைக் கண்டறிய வாரியத்தின் மூலமாக பொறியாளர்கள் உள்ளடங்கிய தொழில்நுட்பக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது. மேற்படி குடியிருப்புகளின் கட்டமைப்புகள் 13–3–2018 அன்று பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, அவை*

2018 ஜூன் 13] **[திரு. ஓ. பன்னீர்செல்வம்]**

உறுதியான தன்மையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வின்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குழுவினரோடு சென்று பார்த்திருக்கிறார்; அப்போது திருப்தியையும் தெரிவித்திருக்கிறார் என்ற நிலை இப்பொழுது இருக்கின்றது. எனவே, சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104–வது வார்டில் உள்ள கங்காதீஸ்வரர் கோயில் தெருவில் அமைந்துள்ள குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளை தற்போது இடித்துவிட்டு மீண்டும் புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என ஆய்வறிக்கையில் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கு பல்வேறு பகுதிகள் அவருடைய சட்டமன்றத் தொகுதியில் உள்ளடங்கியுள்ளதாகச் சொல்லியிருக்கின்றார். குறிப்பாக எம்.எஸ். நகர் பகுதி. 224 வீடுகளைக் கொண்ட இந்தக் குடியிருப்பு 1971–1973 காலக்கட்டத்தில் கட்டப்பட்டது. 224 வீடுகளையும் தற்போது இடித்துவிட்டு, மறு கட்டுமானம் செய்யப்பட உள்ள பட்டியலில் அந்தக் குடியிருப்பு இருக்கிறது. மறு கட்டுமானம் செய்யப்படுகின்றபொழுது, 500 வீடுகளாக அது Vertical line*–ல் கட்டப்பட உள்ளது. கூடுதலாக 276 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.*

இன்னொன்று, சந்தோஷ் நகர் என்ற குடியிருப்புப் பகுதியைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். 272 வீடுகள் கொண்ட இந்தக் குடியிருப்பு 1972–1975 காலகட்டத்தில் கட்டப்பட்டது. அந்தப் பகுதியில் 607 வீடுகளாகக் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடுதலாக 335 வீடுகள் அமைப்பதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பக்கத்திலேயே குடிசைகளில் இருக்கின்ற அந்த மக்களை, இந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் மறு குடியமர்வு செய்கின்ற பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு மட்டுமல்லாமல், இன்றும் 4, 5 இடங்களைப் பற்றி தன்னுடைய கேள்வியின் மூலமாக சொல்லியிருக்கிறார். அந்த இடங்களையும் தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, உள்ளபடியே குடியிருப்பதற்கு தகுதியற்ற நிலை இருந்தால், அவற்றையும் மறு குடியமைப்பு செய்வதற்கு ஏதுவாக புதிய வீடுகளாகக் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள். விரிவான பதிலை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார். கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு Colour washing செய்வதை makeup போட்டதுபோல் மழையில் கரைந்துவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் சொன்னார்கள். ஆனால், அது கரையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தலையில் அடித்த hair dye மாதிரி எந்தக் குளியலுக்கும் தாங்கும், எந்த மழைக்கும் தாங்கும். (சிரிப்பு)*

முற்பகல் 11—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் முடி இருப்பவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அண்ணன் ஏன் அதைப் பற்றிப் பேசுகிறார் என்பது தெரியவில்லை. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *(சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தோஷ் நகர் பகுதியில் வாழக்கூடிய குடிசைவாசிகளுக்கும், அதே இடத்தில் வீடுகளை ஒதுக்கித் தருவேன் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) போனது, வந்ததை எல்லாம் கேட்காமல், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். நேரம் போதாது.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போனது, வந்தது எல்லாம் இல்லை. அங்குள்ள நிலைமையைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதாவது, ஒரு நிமிடம், . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு விரிவான பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. மீண்டும், அவர் **பேசியது அவைக் குறிப்பில் இருக்கலாமா, வேண்டாமா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், விதி–55, அதாவது கவன ஈர்ப்பு குறித்து விவர அறிக்கையை ஏன் இந்த அவையில் வைக்கிறார்கள் என்றால், அதிலிருந்துதான் நீங்கள் இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். அதில் இல்லாத பொருளைக் குறித்து, உங்கள் சௌகரியத்திற்கு கேட்டு, அதை* record *செய்தால் சரியாக இருக்காது. ஆகவே, அது அவைக் குறிப்பில் இருப்பது சரியாக இருக்காது என்பதால், அது மட்டும் நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முதலில் கேட்ட கேள்வி முழுக்க ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு துணை முதலமைச்சரின் பதிலும் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லப்பட்ட காரணத்தினால், தயவுசெய்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த பகுதிக்கு நான் போகவேண்டும். உட்காருங்கள்.*

(ஆ) 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 4 (A)–ஐ நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. மு. திராவிடமணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

(குறுக்கீடு) இருங்கள். இந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தெரிவித்த பின்னர் தான், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரவிச்சந்திரன், நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்கலாம். (குறுக்கீடு) வேண்டாம் விடுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நான் வாய்ப்பு கொடுத்தேன், நீங்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. அதற்கு நான் என்ன செய்வது? மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

***திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தனியார் வனப் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 3, 4, 1 (3)—ல் உள்ள விதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றி, அதாவது விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள். பிறகு, நீங்கள் பேசலாம்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 4 (A)—ஐ நடைமுறைப்படுத்த வேண்டியது.” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறிப்புகளை அரசு பரிசீலனை செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் விவர அறிக்கையைப் பற்றிச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 13] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

விவர அறிக்கை

தனியார் காடுகளை வரைமுறைப்படுத்துவதற்கு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 என்ற சட்டம் நடைமுறையிலுள்ளது. தனியார் காடுகளில் பெருமளவில் முறையின்றி மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கவும், சூழியல் சமன்பாட்டினைப் (Ecological balance) பாதுகாக்கவும், தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 இயற்றப்பட்டது. பொதுவாக, வனத்தைப்போல் தோற்றமளிக்கும் இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட 2 எக்டேர் பரப்பளவுக்குமேல் தொடர்ச்சியாக உள்ள நிலங்கள், இந்தச் சட்டத்தின்மூலம் தனியார் காடுகளாக அறிவிக்கப்பட்டு, இந்த வகையான நிலங்களைக் கண்டறிந்து அறிவிப்பு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒரு குழுவும் உருவாக்கப்பட்டு, அக்குழுவும் இப்பணியினைச் செவ்வனே செய்து வருகிறது.

2. மேலும், தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949—ன் தொடர்பான கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கு உயர்மட்டக் குழு ஒன்று அரசாணை எண் 322, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம் 3) துறை, நாள் 3—9—2012 மூலமாக அமைக்கப்பட்டது. இந்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின்படி, அரசு கடித (நிலை) எண் 5, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம் 3) துறை, நாள் 19—1—2015—ன்படி தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949—ன்கீழ் அளிக்கும் மனுக்கள்மீது 60 நாட்களுக்குள் மாவட்டக் குழுவால் ஆணை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணை எண் 202/1995, நாள் 12—12—1996 ஆணையில், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ல் குறிப்பிடப்பட்டுள்ள வன நிலங்கள் என்பது, அகராதியில் குறிப்பிட்டுள்ளபடி உள்ள வனமாகவோ அல்லது எந்தவொரு சட்டம் அல்லது அரசு ஆவணத்தில் வன நிலங்கள் என்று குறிப்பிட்டிருந்தாலோ அந்த நிலங்கள் “எவருக்கு சொந்தமாயிருப்பினும்” வனப் பாதுகாப்புச் சட்டம் 1980—க்கு உட்பட்ட நிலங்கள் என ஆணை பிறப்பித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இந்த ஆணைக்கு புறம்பாக, மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது உயர் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் எந்தவொரு ஆணை பிறப்பித்திருந்தாலும் அல்லது இனி பிறப்பித்தாலும், 12—12—1996 ஆம் நாளன்று வழங்கப்பட்ட உச்ச நீதிமன்ற நீதிப் பேராணையினைப் பின்பற்ற வேண்டும் என

உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, தனியார் காடுகளுக்கும் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 பொருந்தும்.

4. மேற்குறிப்பிட்ட தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949, பிரிவு 3 (i) (a)–ன்படி, எந்த ஒரு தனியார் வனத்தின் உரிமையாளரும், மாவட்ட வனக் குழுவின் முன்னனுமதியின்றி, அந்த வனத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையுமோ வாங்கவோ, விற்கவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது வேறு விதத்தில் விற்பனை செய்யவோ இயலாது.

5. எனவே, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949, தனியார் வளர்த்த மரங்களை வெட்டுவதைத் தடை செய்யவில்லை. ஆனால், வரன்முறையற்ற மரவெட்டுகளை தமிழகத்தில் உள்ள அனைத்து தனியார் பகுதிகளிலும் முறைப்படுத்தவும், சூழியல் சமன்பாடு மற்றும் காடுகளைப் பாதுகாப்பதற்காகவும் உரிய முன்னனுமதியுடன் முறைப்படுத்தப்படும் நோக்கில் இந்த சட்டப் பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

6. எனினும், மாவட்ட வனக் குழுவின் முன்னனுமதி பெறாமல், தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949–ன்கீழ் தனியார் காடுகள் என அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களை வாங்கியவர் தனது உரிமையைப் பெற்றிட 4A எனும் புதிய பிரிவு உட்புகுத்தப்பட்டு அரசு அறிவிக்கை எண் 167, நாள் 3–8–2015–ல் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்படி சட்டத் திருத்தத்தை சட்டத்திற்குள் உட்புகுத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, நீங்கள் ஒரு கேள்வியைத்தான் கேட்க வேண்டும். இன்னொரு கேள்வி மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்களுக்கு.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு important question. ஏனென்றால், இது Question of Law. இதில் Question of Law is prevailing. அதனால் கொஞ்சம் நேரம் கூடுதலாக கொடுத்தால் நன்றாக இருக்கும். விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விதிமுறைக்கும், நடைமுறைக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அரசின் வருவாய் இழப்பிற்கும் எந்தவிதமான விளக்கமும் இல்லை.

2018 ஜுன் 13] [திரு. மு. திராவிடமணி]

நண்பகல் 12–00

*இது ** பரப்பைப் பற்றியும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது. அந்த வார்த்தை நீக்கப்படுகிறது. விவர அறிக்கையிலிருந்து கேள்வியை மட்டும் கேளுங்கள். உறுப்பினர் திரு. திராவிடமணி என்ன இது?*

திரு. மு. திராவிடமணி: The Tamil Nadu Preservation of Private Forest Act, 1949 Section (1) Clause (3) is very clear, —Applicability and Nature of the Forest. *அதாவது என்னவென்றால் 5 ஏக்கர் நிலத்திற்கு அதிகமாகவும் அதைப்போல* nature *ஆகவும்* continue *ஆகவும் இருக்கிற இடத்தில்தான் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு மாறாக,* notify *எப்படிச் செய்திருக்கிறார்கள் என்றால் ஒரு ஏக்கர், அரை ஏக்கர், அரை சென்ட், கால் சென்ட்,* building, *அரசு அலுவலகங்கள் போன்றவை வரன்முறை செய்யப்பட்டிருக்கின்றன. வரன்முறை செய்யப்பட்டிருப்பது தவறாக இருப்பதனால்தான் இந்தச் சட்டத்தைச் சரியாக அமல்படுத்த முடியவில்லை. இதில், இன்னொரு விஷயம் என்னவென்றால், நீதிப்பேராணை எண் 202/1995–க்கும் இந்தச் சட்டத்திற்கும் எந்தப் பொருத்தமும் கிடையாது. நீதிப்பேராணை எண் 202/1995,* Section *(17)–ல்* deforestation and further encroachment*–ம் செய்யக் கூடாது என்றுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையும் இதையும்* club *செய்வது சரியாக இருக்காது. அதைப்போல, 1991–ல் ஒரு* notification*–ம், 2009–ல் ஒரு* notification*–ம் வந்திருக்கிறது. இந்த* notifications*–ல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த* notification*–க்கும் நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை மட்டும் சொல்லுங்கள். தேவையில்லாமல் வேறு எதைப்பற்றியெல்லாம் ஏன் பேசுகிறீர்கள்?*

திரு. மு. திராவிடமணி: *அதாவது, இந்தச் சட்டம் 5 ஏக்கருக்கு அதிகமாகவும், இயற்கையாக தொடர்ச்சியாக இருக்கிற இடத்தில் மட்டும்தான் அமல்படுத்த வேண்டுமென்று ஒரு* de–notification *செய்தால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று இந்த அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஒரு கேள்வி கேட்கலாம்; பேசுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளை முழுவதுமாக பாதித்திருக்கிறது. 60 விழுக்காடு விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். சொத்தை விற்கவோ, வாங்கவோ முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.* Section 4 (i) (a) *என்ன சொல்கிறது என்றால், மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியோடு 60 நாட்கள் மட்டுமே அவகாசம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற* notified areas Town Panchayats *ஆகும்.* Town Panchayats*–ல்* Medical Colleges *மற்றும்* Engineering Colleges *இருக்கின்றன. அந்தப் பகுதிகளை தனியார் காடுகள் என்ற வகைப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியுமா என்ற மிகப் பெரிய ஐயம் ஏற்படுகிறது. அப்படியென்றால் கன்னியாகுமரி மாவட்டத்தில்,* Township*–ல் வாழ்கிற மக்கள் எப்படி வாழ்வார்கள்? கேரளாவிலும் இதே பிரச்சினை இருக்கிறது. கேரள அரசு அதை நீக்கிவிட்டது. மத்திய அரசின் சொல்லைக் கேட்கவில்லை. மக்கள் வாழ்வதற்காக கேரள அரசு அந்தச் சட்டத்திலிருந்து விலக்களித்தது. ஏன் தமிழகத்தில் அவ்வாறு செய்யக் கூடாது? கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்கின்ற ஏழையெளிய விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை மனதில்கொண்டு,* Section 4(1) (a)*–ன்படி அல்லது ஒரு ஷரத்தை உருவாக்கி, இல்லையென்றால் இந்த அவையில் ஒரு புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து வனப் பகுதியில் இருக்கக்கூடிய பகுதிகளில் தனியார் காடுகளில் இருக்கக்கூடிய பகுதியை நீக்கம் செய்ய ஏன் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பில்லை. அவ்வளவுதான் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் ஊட்டி பகுதியைப் பற்றிக்*

2018 ஜூன் 13] **[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]**

குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கன்னியாகுமரி பகுதியைப் பற்றி குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்ட பகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி, குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. ராமு, திரு. அர்ஜூனன், எம்.பி. ஆகியோருடன் கலந்துபேசி சென்ற மாதத்திலிருந்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இருந்தாலும், இது Section 4A சம்பந்தப்பட்ட விஷயமாகும். அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிரச்சினை நீண்டகாலமாக இருக்கின்ற பிரச்சினையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்துபேசி சட்டத் திருத்தத்தை சட்டத்திற்குள் உட்புகுத்தினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து, நடைமுறைப்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதை அன்போடு மாண்புமிகு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். ஒரு கேள்விக்கு மட்டும்தான் வாய்ப்பு.

7. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(அ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018–2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.52,56,90,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 46, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 208, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 991, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1949, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2281, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2683, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2780, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3170, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3246, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3314, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3403, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4144, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 475, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை வைத்துக்கொண்டு நாங்கள் இரட்டை வேடம் போடுவதாகச் சொன்னார். ஆனால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன். நாங்கள் அதுபோன்று இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்களே 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஆமாம், சிலையை உடைக்க மாட்டோம், அதேமாதிரி பிள்ளையார் சிலையை உடைக்க மாட்டோம், அதேமாதிரி வணங்கவும் மாட்டோம் என்று அவர் சொன்னார். ஆனால், அதற்கடுத்து வந்த அனைத்துப் பதிவுகளும், அண்ணா அவர்களும் இதை மறுக்கவே இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, அண்ணா அவர்களுடைய கொள்கை இன்றைக்குக் கடைப்பிடிக்கப்படுகிறது என்றால், அதற்குக் காரணம், அண்ணாவினுடைய பெயரில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மனிதப் புனிதர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உருவாக்கியதனால்தான். சாதாரண, சாமானியன்கூட இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக ஆகிறார்களென்றால், அதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதை இந்த மண்ணிற்கு எடுத்துக் காட்டியவர் புரட்சித் தலைவர் M.G.R. அவர்கள். பேரறிஞர் அண்ணா என்ற ஒருவர் காஞ்சியிலே பிறந்தார் என்ற வரலாறு இன்றைக்கும் இளைஞர்களின் மத்தியில் பேசப்படுகிறதென்றால் இதற்குக் காரணம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதன்முதலில் மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்தான் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார். அவர்*

கிளப்பிய காரணத்தால்தான் நாங்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு தள்ளப்பட்டோம். அதற்கு இப்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தலைவர் கலைஞர் அவர்கள் பராசக்தி திரைப்படத்திலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கோயில்கள் கூடாது என்பது அல்ல எங்கள் கொள்கை, (மேசையைத் தட்டும் ஒலி) கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 12–35

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எடுக்கப்பட்ட பணிகளை விரைந்து முடிப்பதற்கான அந்த முயற்சியில் ஈடுபட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 21 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: என்ன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேச ஆரம்பித்து 21 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: அந்த 21 நிமிடங்களில் 5 நிமிடங்கள்—குறிப்பாக ஆண்டுக்கு ஆண்டு விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேச ஆரம்பித்து 21 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: நான் முதல்முறை 2006 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்த நேரத்தில் பார்த்தீர்களென்றால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். 3 அமைச்சர்கள் பதிலுரை வழங்க வேண்டும்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *கிராமங்களில் எல்லோருக்கும் தெரியும். ஒரு கலையரங்கம் அமைப்பதற்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்தான் மதிப்பீடு. ஆனால், இன்றைக்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகு அதைப் பார்த்தால் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆக, விலைவாசி உயர்வு அந்த அளவுக்கு இருக்கிறது. (குறுக்கீடு) என்ன, 3 இலட்சம் ரூபாயா?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இன்னும் 3 நிமிடங்கள்தான் உங்களுக்கு பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *பேச விடுங்கள். நீங்கள் இதிலே பாதி நிமிடங்களை எடுத்துவிடுகிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இல்லை, இல்லை. அதெல்லாம் கொஞ்சம்தான் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு) அவ்வளவுதான் நேரம் இருக்கிறது. இன்றைக்கு இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். 3 அமைச்சர்கள் பதிலுரை வழங்க வேண்டும்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *இருங்கள், இருங்கள். பேசுவதே இதிலேதானே பேசப்போகிறேன். வேறு என்ன இருக்கிறது? (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அதுதான். எனவே, 3 நிமிடங்களில் சுருங்கச் சொல்லி விளங்க வையுங்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *ஆகவே, எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளை அது, திருப்பணியாக இருந்தாலும், கம்பி வட ஊர்தி அமைக்கின்ற பணியாக இருந்தாலும், எந்தப் பணிகளாக இருந்தாலும் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் முடிக்க வேண்டுமென்பது எங்களுடைய வேண்டுகோள். விலைவாசிக்கு ஏற்ப, அதற்கான நடவடிக்கைகளை நீங்கள் விரைந்து எடுக்க வேண்டும். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அரளிக்கோட்டை என்கின்ற கிராமம், சிவகங்கை மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில், இருக்கக்கூடிய ஒரு கிராமம். நான் அமைச்சராக இருந்த நேரத்திலே ராஜ கோபுரம் கட்டுவதற்கு அப்பொழுது*

அதற்கு ஆணை வழங்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டது; டெண்டர் விடப்பட்டது; பணி துவங்கியது. நான் அமைச்சரிடத்திலும், நேரிலும் பார்க்கின்ற நேரத்திலும் நினைவுபடுத்தியிருக்கிறேன். 3 முறை இதே மன்றத்தில் துணைக் கேள்வியின் மூலமாகவும் நான் சொல்லியிருக்கிறேன். அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும், விரைந்து அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார். நான் இன்று காலையில்கூட கேட்டேன். ஆனால், அமைச்சர் அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார். ஒரு கல்லைக்கூட எடுத்து வைக்கவில்லை. எப்படி விரைந்து நடக்கும்? 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுமாதிரி—நீங்கள் சொன்னீர்களென்றால் நான் உங்களை அழைத்துக்கொண்டு சென்று காட்டுகிறேன். அந்தப் பணிகள் எப்போது துவங்கப்பட்டன? இப்பொழுது அவற்றினுடைய நிலை என்ன? அன்றைக்கு 33 இலட்சம் ரூபாய்க்கு போட்டோம். இன்றைக்கு குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், அரளிக்கோட்டை அருள்மிகு சோழீஸ்வரர் திருக்கோயிலுக்கு 5 நிலை ராஜகோபுரம் கட்டும் பணிக்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டு, அந்தப் பணியை மேற்கொள்வதற்கு ஆணையரின் பொது நிதியிலிருந்து 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் வழங்கப்பட்டு, 20 சதவிகித பணிகள் முடிவுற்ற நிலையில் ஒப்பந்ததாரர் பணியைச் செய்வதற்கு சிறிது காலதாமதம் செய்து வந்த நிலையில், 27–5–2017 அன்று அந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. தற்போது மேற்படி பணிக்கு சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தான நிருவாகத்தால் திருத்திய மதிப்பீடு ரூ.42 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில் தொன்மையான திருக்கோயில் ஆதலால் மாண்பமை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, தொல்லியல் வல்லுநர் கருத்துரு, மண்டல பரிசீலனை கருத்துரு மற்றும் உயர் நீதிமன்றக் குழுவின் ஒப்புதல் பெற்று திருப்பணியை மேற்கொள்ள சிவகங்கை சமஸ்தான நிருவாகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது தொல்லியல்

வல்லுநர் கருத்துரு சிவகங்கை சமஸ்தானத்தால் ஏற்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்தத் திருக்கோயிலின் 5 நிலை ராஜ கோபுரம் கட்டும் பணி விரைவாக முடிக்கப்படும் என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அந்தப் பணிகள் அனைத்தும் விரைவாக முடிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசி முடியுங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: என்ன இது? அமைச்சர் முடித்தவுடன் நான் முடிக்க வேண்டுமா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இன்னும் 3 நிமிடங்களில் நீங்கள் பேசி முடித்துவிடுவீர்கள் என்று உங்கள் கொறடாவே சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைந்து முடிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை. எங்களுடைய ஆசைகளை நிறைவேற்றுகின்ற வகையில் உங்களுடைய செயல்பாடுகள் இருக்க வேண்டுமென்பதுதான். பேரவைக் குறிப்புகளை நீங்கள் எடுத்துப் பார்த்தால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: ஐயா, இருங்கள். அவர்களெல்லாம் சும்மா இருக்கிறார்கள். நீங்கள்தான் விடமாட்டேன் என்கிறீர்கள். அதுதான் தாங்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: 3, 4 முறை நேரடியாக நான் அமைச்சரிடம் சொல்லி, இந்த மன்றத்திலும் சொல்லி, அது பதிவாகியிருக்கிறது. அது அதே நிலையில் இருந்தால் அதற்கு என்ன அர்த்தம்? அது ஒன்று. அடுத்து, நான் சொன்னது 32 இலட்சம் ரூபாய் அப்போதைய மதிப்பீடு. இப்போது என்ன

ஆகிறது? அது 42 இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. இன்னும் 50 இலட்சம் ரூபாய் குறைந்தபட்சம் ஆகும். விலைவாசி உயர்வுகளைக் கட்டுப்படுத்துகின்ற வகையில், செலவைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பல இடங்களில் பணிகளை முடிக்கிறார்கள். பணிகளை முடித்த பிறகு, அந்த ஒப்பந்ததாரர்களுக்கு உரிய பில் தொகை ஒழுங்காக விரைந்து கிடைக்கவில்லை. 5, 6 ஆண்டுகளுக்கு முன்னர் பணிகளை முடித்த ஒப்பந்ததாரருக்கு, அருகிலே இருக்கக்கூடிய ஏரியூர் மலை மருந்தீஸ்வரர் திருக்கோயிலிலிருந்து, இன்னும் 25 இலட்சம் ரூபாய்க்கு பில் தீர்வு செய்ய வேண்டியிருக்கிறது. கிராமத்திலிருந்து கொடுத்து, அதை ஈடு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் துறையைக் கவனிப்பீர்கள். நாங்கள் புதிதாகக் கோரிக்கைகள் வைத்தால் நீங்கள் பரிசீலிக்கலாம். ஆனால், எடுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்ற வேண்டும். எல்லாம் சாமி காரியம்தான். தெய்வக் குற்றங்களுக்கு ஆளாகக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். அடுத்து, அரசு. . .

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்லலாம்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் 2011 முதல் 2018 ஆம் ஆண்டு வரை 10,500 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது என்பதையும், 2017–2018 ஆம் ஆண்டில் மட்டும் 765 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னும் 5 நிமிடங்கள் ஒதுக்கியிருக்கிறேன். அதற்குள் உரையை முடியுங்கள். அதற்குள் உரையை முடிக்கப் பாருங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: ஆனால், குறுக்கீடு இல்லாமல் இருக்கச் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதை, பின்னால் சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்குமேல் நான் என்ன செய்ய முடியும்? மேலும் உங்களுக்கு 5 நிமிடங்கள் ஒதுக்கியிருக்கிறேன்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: நான் இதை நேரிலும் சொல்லிவிட்டு வந்தேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமும் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர்களுக்குப் பதில் சொல்கின்ற வாய்ப்பு இருக்கிறது. உறுப்பினர்கள் நேரத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு, உரையை முடியுங்கள், முடியுங்கள் என்று சொன்னால் எப்படி முடிப்பது? (குறுக்கீடுகள்) ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற அந்த புள்ளிவிவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் நான் சோறு, வேகவில்லை என்று சொன்னால், அதை விட்டுவிட்டு எங்கெங்கோ சுற்றிக் கொண்டிருக்கிறார். உங்களுடைய ஆட்சியின் சாதனை என்று சொல்கின்றபோது, 7 ஆண்டுக் கணக்கை எடுத்துக்கொள்கிறீர்கள். எங்களுடைய கணக்கு என்று வரும்போது அது 4 ஆண்டு கணக்குகளாக குறைந்து விடுகிறது. நான் அமைச்சராக இருந்த நேரத்தில் ஐந்தாயிரத்தையும் தாண்டிய திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு முடிக்கப்பட்டது என்பதையும், ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக ஆயிரத்திற்கும் மேல் முடிக்கப்பட்டது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது உங்களுக்கு எந்த அதிகாரிகள், அந்தக் குறிப்புகளை தருகிறார்களோ, அவர்கள் தந்த குறிப்புகள்தான் அவை என்பதையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, திருக்கோயில் பணியாளர்களுடைய நிலையையும் நாம் கவனித்தாக வேண்டும். அவர்களுக்குப் பல சலுகைகளை தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய ஓய்வூதியத்திற்கு வழிவகை செய்த அரசு, கலைஞர் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஊதியத்தை உயர்த்தித் தந்தது கலைஞர் அவர்களுடைய அரசு. அவர்களை பக்தர்கள் அடையாளம் காணக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு சீருடை தந்தது கலைஞர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல கிராமக் கோயில்களுக்கு பூசாரிகள் நல வாரியத்தை அமைத்தது கலைஞருடைய அரசு.

அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, அவர்களுக்கு இலவசமாக மிதிவண்டிகளை வழங்கியதும் கலைஞருடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இப்படி ஒரு அரசு செய்கின்றதைப்போல, தொடர்ந்து வருகின்ற அரசுகள் இன்னும் கூடுதலாகச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். ஆகவே, செய்த காரியங்களை இருட்டடிப்பு செய்து விட்டு, நீங்கள் சொல்வது முறையாக அமையாது.

அதைப்போல, இது அறநிலையத் துறை சம்பந்தப்பட்டது அல்ல. செய்தித் துறையைச் சார்ந்தது. இருந்தாலும், இதை நான், என்னுடைய தொகுதியில் இருக்கின்ற காரணத்தினால் நினைவுபடுத்த விரும்புகிறேன். "யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற வார்த்தைகளை உருவாக்கியவர் கணியன் பூங்குன்றனார். அவர் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மகிபாலன்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தார். 1974–ல் அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், தொழில் துறை அமைச்சராக இருந்த அண்ணன் மாதவன் போன்றோர், அதைப்போல செட்டி நாட்டரசர் ராஜா சர் முத்தையா செட்டியார் இவர்களெல்லாம் கலந்துகொண்டு, அங்கே ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பியிருக்கிறார்கள். அதன் பிறகு, ஐந்தாவது முறை முதலமைச்சராக தலைவர் கலைஞர் அவர்கள் வந்த நேரத்தில், ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்று அப்போது செய்தித் துறை அமைச்சராக இருந்த திரு. பரிதி இளம்வழுதி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டு, அவரும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, ஒரு குழுவை அமைத்தார்கள். குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அதைப்போல என் பெயரைக் கொண்ட தமிழ் அண்ணல், பெரியகருப்பன் இப்படிப் பல அறிஞர்களை, தமிழ் ஆர்வலர்களையெல்லாம் சேர்த்து ஒரு குழுவைப் போட்டு, தலைமைச் செயலகத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதாவது, 10–12–2009 அன்று தலைமைச் செயலகத்தில், முதலமைச்சர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. பிறகு 26–12–2009 அன்று நேரடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு, பிறகு நினைவு மண்டபம் கட்டுவதற்காக அன்றைக்கு குன்றக்குடியிலும் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து அதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து, விரைந்து மிகப் பெரிய கவிஞனாக வாழ்ந்த அவருக்கு ஒரு நினைவு மண்டபம் அமைப்பதற்கு வழிவகை செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2018 ஜூன் 13

பிற்பகல் 12–45

அதைப்போல, சிவகங்கை மாவட்டம், பாகனேரி நாடு. அந்த பாகனேரி நாட்டில் வாளுக்குவேலி அம்பலம் என்பவர் 200 ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளையர்களை எதிர்த்துப் போரிட்ட வீரர். அவர்களுடைய நினைவாக அரசு விழா நடத்த வேண்டுமென்று அந்தப் பகுதி மக்களும், அவர்களுடைய வாரிசுதாரர்களும் விரும்புகிறார்கள். எனவே, அவர்களுடைய வரலாற்றுப் பதிவுகளைப் பெற்று, நீங்கள் அரசு விழா நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்றுதான். சட்டமன்ற உறுப்பினர்கள் 'விருப்ப நிதி'–க்கு இப்போது ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் தருகிறீர்கள். ஆனால், அதிலே tied and untied என்று வகுக்கப்பட்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில், அந்த நிதி முழுமையாக அனைத்து உறுப்பினர்களுக்கும் பயன்படுவதாகத் தெரியவில்லை. ஆனால், கிராமப் பகுதிகள் அடங்கிய, குறிப்பாக, என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், 121 ஊராட்சிகள், ஏறத்தாழ 650 கிராமங்கள் மற்றும் 6 பேரூராட்சிகள் இருக்கின்றன. ஆக, இந்த tied and untied என்று சொல்கிறபோது, அதை வகைப்படுத்திச் செய்வதில் ஒரு பெரிய சிக்கலாக இருக்கின்றது. குறிப்பாக, earth work, மண் வேலைகளுக்குச் செய்ய வேண்டாம். கட்டடங்களுக்கு முழுமையாகச் செய்யக்கூடிய அல்லது சாலை அமைக்கின்ற பணிகளுக்கு செய்யக்கூடிய அந்தக் காரியத்தை நீங்கள் தளர்த்திட வேண்டும். ஏனென்றால், இந்த ஆண்டு ஒரு proposal–ஐக் கொடுக்கிறார்கள். புதிதாக ஒரு G.O. வந்திருக்கிறது, வழிகாட்டி முறை வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏனென்றால், பள்ளிக்கூடத்திற்கு 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட வேண்டும். பின்னர், சத்துணவு modernization செய்ய வேண்டும். அதற்கு ஒரு 10 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகள் செய்ய வேண்டும். ஒவ்வொரு துறைவாரியாக, அதேபோல, அரசு அலுவலகங்களுக்கு, பேரூராட்சி அலுவலகங்களுக்கு, நகராட்சி அலுவலகங்களுக்கு சூரிய வெப்பத்தால் மின்சார ஒளி தருகின்ற சோலார் வசதி செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி ஒவ்வொரு முறையும் பிரிப்பதன் காரணமாக, இந்த tied and untied எல்லாவற்றையும் பிரித்துச் செய்வதைவிட, நீங்கள் ஒட்டுமொத்தமாக, சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்பத்திற்கு விட்டு விடலாம். உங்கள்

ஆட்சியிலே அப்படி இருந்தது என்று நீங்கள் பதிலுக்குச் சொல்லலாம். ஒன்றிரண்டு இருந்தன. ஆனால், இப்போது, அது வர, வர பெருகிக் கொண்டே வருகிறது. இந்த tied and untied எல்லாம் மாற்றி, அதாவது, ஒரு சட்டமன்ற உறுப்பினர் 5 வருடங்கள் ஒரு பகுதியிலே இருந்தார் என்று சொன்னால், அவருடைய பெயர் சொல்லக்கூடிய அளவிற்கு, ஒரு கட்டடத்தைக் கட்டினால்தான் சரியாக இருக்கும். குறிப்பாக, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கி, கட்டடங்களைக் கட்டலாம். அதேபோல, சமூக நலத் துறையிலும், முதியோர்களுக்கும், மற்றவர்களுக்கும் நிதி ஒதுக்கப்படுகிறது. அதேபோல், மாற்றுத் திறனாளிகளுக்கு என நிதி ஒதுக்கப்படுகிறது. இப்படி எல்லா துறைகளுக்கும் தனித்தனியாக நிதிகள் ஒதுக்கப்படுகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர் 'விருப்ப நிதி' என்கின்ற அந்தத் தலைப்பின் அர்த்தம் மாறிப் போகிறது. ஆகவே, இதை அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுசெல்ல நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதை விரைந்து செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இப்போது தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. அந்த நிதியை தண்ணீருக்குக்கூட முழுமையாகப் பயன்படுத்தலாம். இதற்குத்தான் செய்ய வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்டாயப்படுத்துவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்ப நிதியை, அதை விருப்ப நிதியாகவே வழங்குவதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை வரையறுத்துக் கூறுவதை நீங்கள் தளர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய உங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, அவர்களுடைய

ஆட்சிக் காலத்தில் கும்பாபிஷேகம் அதிகமாக நடந்ததாகக் கூறினார்கள். 2006–2011 ஆகிய ஐந்தாண்டுகளில், 4,020 திருக்கோயில்களுக்கு மட்டும்தான் அவர்கள் கும்பாபிஷேகம் நடத்தினார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதுவரை, கடந்த ஏழு ஆண்டுகளில் 10 ஆயிரத்து 566 திருக்கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி முடித்துள்ளது என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புற பூசாரிகளுக்கான ஓய்வூதியம் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 750 ரூபாய்தான் வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ரூ.750/– ஆக இருந்த ஓய்வூதியத்தை 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 10 ஆயிரம் சிறு திருக்கோயில்களுக்கு பூஜைப் பொருட்கள் மற்றும் அனைத்து உபகரணப் பொருட்களை, ரூ.4.94 கோடி ரூபாய் செலவில் வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தினக் கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில், 5 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்த 2,217 பணியாளர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்காலிகப் பணியாளர்களாகப் பணிபுரிந்த, 283 பேர் பணிவரன்முறை செய்யப்பட்டு, பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது இங்கே பேசிய திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்திற்குத் தனியாக ஒரு பால் கூட்டுறவு ஒன்றியத்தை அவசியம் பிரித்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். திருவண்ணாமலை மாவட்டம் 11 வருவாய் வட்டங்களை உள்ளடக்கி இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஜமுனாமரத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டம் உருவாக்கப்பட்டு, இன்று செயல்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே 2 கோட்டங்கள் இருந்தன. இப்போது ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வருவாய்க் கோட்டம் உருவாக்கப்பட்டு, அந்தக் கோட்டமும் தற்போது செயல்பட்டு வருகிறது. மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டத்தில் ஒரே ஒரு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் மட்டும் இருந்தது. அந்த அலுவலகத்தைப் பிரித்து ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய மேற்பார்வை வட்ட அலுவலகத்தை அரசு உருவாக்கியுள்ளது. அதுமட்டுமல்ல, ஏற்கெனவே திருவண்ணாமலை மாவட்டத்தில் 2 கல்வி மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. தற்போது போளூர், ஆரணி, செங்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, 5 கல்வி மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சந்தவாசல் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன, பேசுங்கள்.

***திருமதி பொன். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. ராஜா, நீங்கள் அமைதியாக உட்காருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகமே தன் உயிராய், தமிழினமே தன் உறவாய், (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *தமிழகமே தன் உயிராய் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *தமிழினமே தன் உறவாய், தமிழர்களின் உணர்வாய், (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உட்காருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *அறிவுப் பெருங்கடலாய், (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோபப்படாதீர்கள், உட்காருங்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: *ஆற்றலின் பிறப்பிடமாய், (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *அஞ்ச ஏதுமில்லை, அச்சம் வருவதில்லை என்று (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உட்காருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *நெஞ்சம்தனை உயர்த்தி, தனித்து நின்று பகை முடித்து, அரியணையை வசமாக்கி, அரிய சாதனையைப் பதிவாக்கி, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு அழிக்க முடியாத சரித்திரம் படைத்து, மங்காப் புகழ் பெற்ற மாசறு தெய்வம், ஏற்றமிகு சாதனை சரித்திரத்தின் போற்றலுக்குரிய பொன்மனத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மறைந்தும் மறையாது, தொண்டர்களின்*

இதயத்தில் தெய்வமாய் வீற்றிருந்து, அனுதினமும் வழிநடத்தும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாசம் செய்யும் திசை நோக்கி வணங்குகிறேன்.

“மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்

யாஉள முன்நிற் பவை”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, நுண்ணறிவும், நூலறிவும் அறிந்து, தீர்க்க முடியாத சிக்கல் என்பது இல்லாமல் செயலாற்றும் முதல்வராய், ‘எளிமை, உண்மை, உழைப்பு’ என்ற உன்னதங்களோடு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு, அமைதி மேலோங்கி தமிழகத்தை கம்பீரமாய் வழிநடத்தும் கொங்கு தந்த தங்கம், மாங்கனி மாவட்டமாம் சேலத்து சிங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் பாசமிகு அண்ணன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒளி படைத்த கண்ணோடும், உறுதி கொண்ட நெஞ்சோடும், களி படைத்த மொழியோடும், தெளிவுபெற்ற மதியோடும், கழகத்தையும், ஆட்சியையும் துணை நின்று வழிநடத்தும் பாண்டிய நாட்டுத் தங்கம், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் இன்றைய தினம் 2018–2019 ஆம் ஆண்டிற்கான இந்து சமய மற்றும் அறநிலையத் துறை, தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை பணிந்து பதிவுசெய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களின் சீரிய நடவடிக்கைகளால் இன்று மின்சாரத் தடை என்பது பழங்கதையாய் போய், தமிழகம் மின் மிகை மாநிலமாக, ஒளி வீசிவருகிறது. மேலும், தமிழகம் முழுவதும் மின்னிணைப்பு கேட்டு சுமார் 20 ஆண்டுகளாக ‘காத்திருந்து, காத்திருந்து, காலங்கள் போனதடி’ என்று சோகப் பாட்டு பாடிக் கொண்டிருந்த விவசாயிகளின் நிலைமையை மாற்றி, தட்கல் முறையில் உடனடி மின்னிணைப்பு பெறச் செய்து, விவசாயிகளை ஆனந்த ராகம் பாடச் செய்த, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் செயல்பாட்டால், விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் காக்கும் அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விளங்குகிறது.

தமிழகம் கல்வித் துறையில் பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டுமென்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில், முத்தான திட்டங்கள் பல செயல்படுத்தி ஒரு மாபெரும் கல்விப் புரட்சியை நிகழ்த்திவரும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் பணிவான நன்றியையும், வாழ்த்துகளையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வழியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்ப்புகள் கோடி எதிர் வரினும், எள்ளளவும் தடம் பிறழாமல் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றித் தருவதுதான் நமது மாபெரும் கடமை என்ற தாரக மந்திரத்தை நெஞ்சில் தாங்கி தன்னலம் கருதாத இலட்சியப்படை வீரர்களைக் கொண்ட பேரியக்கமாம் நமது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்கோடி வீரராய் களம் புகுந்து, கழகம் இட்ட கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அயராது கட்சிப் பணி ஆற்றி, உன்னத உழைப்பால் உயர்ந்து, இன்று மாநிலத்தின் மக்கள் நலன் காக்கும் தலைமைத் தொண்டராய் விளங்கி, அமைதியின் வடிவாய்த் திகழும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களையும்; அமைதியையும், எளிமையையும் அடையாளமாய்க் கொண்டு அடிப்படை தொண்டர் முதல் தலைமை சார் முதலமைச்சர் பதவி வரை அர்ப்பணிப்பு ஒன்றே தன் கடன் என தொண்டாற்றிவரும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களையும்; இந்த மாமன்றத்தில் குன்றா விளக்காய் ஒளிர்ந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சிய தீபத்தை கையில் ஏந்தி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கி, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சி பெற்று தன்னிகரில்லா மாநிலமாகத் திகழ்ந்திடும் வகையில், செயல்பட்டுவரும் மாண்புமிகு அம்மாவின் அரசையும் மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை

மாற்றுவார் ஆற்றலின் பின்”

என்ற திருவள்ளுவரின் வரிகளுக்கு ஏற்ப திருக்கோயில்களுக்கு வரும் இறை அன்பர்களின், இறைவனின் அருள் பெற்ற பக்தர்களின்

பசியைப் போக்கும் வகையில் 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திட்டங்களில் மிகவும் உன்னதத் திட்டமான அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இறை அன்பர்களுக்கு இறை அருளோடு அன்னமும் வழங்கும் உன்னத அன்னதானத் திட்டம் படிப்படியாக 360 திருக்கோயில்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. 2006 முதல் 2011 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2 திருக்கோயில்களுக்கு மட்டுமே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. மீண்டும் 2011–2012 ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும், 2012–2013 ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கும், 2013–2014 ஆம் ஆண்டில் 100 திருக்கோயில்களுக்கும், 2014–2015 ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும், 2016–2017 ஆம் ஆண்டில் 30 திருக்கோயில்களுக்கும் பக்தர்களின் வருகையையும், தேவையையும் கருத்தில்கொண்டு கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இந்த அற்புதத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது இத்திட்டத்தின்மூலம் 754 திருக்கோயில்களில் நாளொன்றுக்கு 65,735 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு 16,43,000 ரூபாய் செலவிடப்படுகிறது என்பதைப் பார்க்கையில், இது, அகிலம் போற்றும் அம்மா உணவகம் கண்ட அன்னபூரணியாம் அம்மாவின் கனவுத் திட்டங்களுக்கு செயல்வடிவம் தருவதன் அடையாளமாக இவ்வரசு விளங்குகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. மேலும், அரசு மானியமாக ஆண்டுதோறும் திருக்கோயில்களின் பாதுகாத்தல், மரபு மாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம் போன்ற திருப்பணிகளுக்கென ரூபாய் 3 கோடி வழங்கப்பட்டு வந்தது. 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் 96 திருக்கோயில்களில் புனரமைப்பு மற்றும் புத்தாக்கத்திற்கென ரூபாய் 6 கோடி வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த 3 கோடி ரூபாய் அரசு மானியம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013–2014 ஆம் நிதி ஆண்டு முதல் ரூபாய் 6 கோடியாக உயர்த்தப்பட்டது. 2011–2012, 2013–2014 மற்றும் 2015–2016 ஆகிய ஆண்டுகளில் 196 திருக்கோயில்களின் சீரமைப்புப் பணிக்கு மொத்தம் ரூபாய் 18 கோடி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டது. 2017–2018 ஆம் ஆண்டு 32 திருக்கோயில்களுக்கு மொத்தம் ரூபாய் 6 கோடி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு வழங்கியுள்ளது வரவேற்கத்தக்கது. தாய்வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஓர் வழி நின்று நாடாளும் நம் கழக அரசு தாய்மொழியாம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக

தமிழ்மொழி விரிவாக்க மையம் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் செயல்பட ஆண்டுதோறும் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்தது. மேலும் தமிழ் பண்பாட்டு மையம் அமைத்திடுதல் மற்றும் நலிந்த தமிழ் கலைஞர்களுக்கு மாதாந்திர நிதி உதவியை 1,500 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது போன்ற திட்டங்கள் அன்னைத் தமிழை அழகுபடுத்தும் அணிகலன்கள். மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க நமது மாநிலத்திற்கு 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் நாள் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது. தமிழ்நாடு என்ற பெயரோடு 50 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு பொன் விழா ஆண்டு கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110—ன்கீழ் அறிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 1—00

இதற்கென 2018—2019 ஆம் ஆண்டில் செலவினத் தொகையாக ஒரு கோடியே ஒன்பது இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து, தமிழ்மேல் உள்ள பற்றை பறைசாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் தொல்காப்பிய ஆய்வு இருக்கை, திருமூலர் ஆய்வு இருக்கை, சன்மார்க்க செம்பொருட்டுணிவு ஆய்வு இருக்கை, தமிழ் இயற்கை மருத்துவ ஆய்வு இருக்கை, வைணவ ஆய்வு இருக்கை, அகத்தியர் மருத்துவ ஆய்வு இருக்கை, பாவேந்தர் பாரதிதாசன் ஆய்வு இருக்கை ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விருக்கைகள் வாயிலாக பட்டய வகுப்புகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், பட்டிமன்றம் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைமூலம் நடைப்பாண்டில் தேசிய, சர்வதேச அளவில் விருதுகள் வென்ற வீரர்களுக்கும், அவர்களது பயிற்சியாளர்களுக்கும் ஐந்து கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கி, இளைஞர்களை உற்சாகப்படுத்தி, விளையாட்டுத் துறையை வளர்ச்சிப் பாதையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டு செல்வது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் மனதில் என்றும் குடிக்கொண்ட எங்களது மாண்புமிகு அம்மா அவர்கள் வாழ்ந்த வேதா நிலையத்தை அரசுடைமை ஆக்கி, ஒரு வரலாற்றுச் சிறப்பினை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தமிழக மக்களின் நெஞ்சங்களில் குடிகொண்டுள்ள எங்கள் கருணைத் தாய், முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் இம்மாமன்றத்தில் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தது எங்களுக்கு ஆசி வழங்கும் விதமாக எங்கள் நெஞ்சங்களில் என்றும் வாழ்வதுபோல் உள்ளது. இதைக் கண்டு நாங்கள் பூரிக்கிறோம். வெள்ளமெனத் திரளும் தொண்டர்களின் உள்ளமெலாம் குடியிருக்கும் தெய்வம், தமிழ்த் தாயின் தவத்தால் அவதரித்த புதல்வி, தமிழர்குலம் காக்க வந்த தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு பார்போற்றும் வகையில் சீர்பெற்று அமைந்திடும் நினைவகம் நிறுவிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழக துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிதியொதுக்கி பணி துவங்கி உள்ளது கோடிக்கணக்கான கழக இரத்தத்தின் இரத்தங்களின் உள்ளங்களில் உற்சாகப் பெருக்கை ஊற்றெடுக்கச் செய்துள்ளது. இதற்காக கழக அரசிற்கு இதயப் பூர்வமான நன்றிகளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக உரித்தாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கற்பகத் தரு, காமதேனு, அமுதசுரபி, அட்சய பாத்திரம் இவற்றை நூல்களின் வாயிலாகப் படித்ததுண்டு, பார்த்ததில்லை. ஆனால், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தைக் கூறி, மக்களின் வாழ்வாதாரம் உயர அயராது பாடுபட்ட தங்கத் தாரகை இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரின் தலைமையிலான கழக அரசிடம் தொகுதி மக்களின் தேவைகளாக நான் கேட்ட கோரிக்கைகளை கேட்ட வரம் உடனே கிடைத்ததுபோல், நிறைவேற்றித் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். திருச்செங்கோட்டில் மாவட்ட கல்வி அலுவலகம் அமைந்திட நடவடிக்கை எடுத்தது, சார் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்க உத்தரவிடப்பட்டது, ஒருங்கிணைந்த வட்டார வேளாண்மை மையத்திற்கு புதிய கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்தது, திருச்செங்கோடு புதிய குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.64 கோடி ஒதுக்கீடு செய்தது, என கேட்டதனைத்தையும் நிறைவேற்றித் தந்தமைக்கு திருச்செங்கோடு

தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றி கூறி வணங்குகிறேன்.

மேலும், ஆலாம்பாளையம், படைவீடு, சங்கரி பேரூராட்சி, திருச்செங்கோடு ஒன்றியம், பள்ளிபாளையம் ஒன்றியம் போன்ற பகுதிகளில் குடிநீர்த் தேவையை நிறைவேற்ற ஆலாம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இத்திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேட்ட கோரிக்கைகளை ஏற்று, உடனடியாகச் செயல்பட உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான கழக அரசு, எனது கோரிக்கைகளை நிறைவேற்றி, எங்கள் தொகுதி மக்களின் நெஞ்சங்களில் பால் வார்க்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் தங்கத் தேர் 2004 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று கோயிலின் உள்பிரகாரத்தில் வலம் வந்து கொண்டிருக்கிறது. தற்போது பக்தர்கள் கூட்டம் அதிக அளவில் வருவதால் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் தங்கத் தேர் வலம் வர ஆலயத்தின் வடக்குப் பகுதியில் பாதை அமைத்துத் தர ஆவன செய்து தரவேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுடன், கல்வி நகரம் என்ற வகையிலும், தனிச் சிறப்பு பெற்று வருகிறது. இங்கு தனியார் ஆளுமையின்கீழ் நிறைய கல்லூரிகள் உள்ளன. ஆனால் அரசு கல்லூரி ஒன்றுகூட அமைக்கப்பெறாமல் இருந்து வருகிறது. இங்கு அரசு கலைக் கல்லூரி ஒன்றும், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் உறுப்புக் கல்லூரியும் அமைக்கப்பெற்றால் ஏராளமான மாணவ, மாணவிகளின் வாழ்க்கையில் விளக்கேற்றி வைத்ததாக இருக்கும். எனவே, மேற்கண்ட கல்லூரிகளை அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு நகரிலுள்ள பயணியர் மாளிகை 1960 ஆம் ஆண்டு 2,743 சதுரடியில் நெடுஞ்சாலைத் துறைமூலம் கட்டப்பட்டதாகும். இக்கட்டடம், தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு நகரில் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கோயில் திருமலையைச் சுற்றியுள்ள கிரிவலப்பாதையில் சர்வே எண் 362/1 ஏ–ல் மலைப்புறம்போக்கில் 883 குடும்பங்கள் சுமார் 40 வருடங்களாக வசித்து வருகின்றன. இவர்கள், தங்களது பல்வேறு தேவைகளுக்காக மனைப் பட்டா இன்றி மிகவும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். எனவே, மேற்கண்ட பகுதி மக்களுக்கு மனைப் பட்டா வழங்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள், அருள்மிகு செங்கோட்டு வேலவர், ஆண் ஒரு பாதியாய், பெண் ஒரு பாதியாய் நின்று அருள்பாலிக்கும் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் ஆகிய மூவரும் கருநிலை கொண்ட மும்மூர்த்திகளாய் எழுந்தருளிய தெய்வத்திருத்தலமாம் திருச்செங்கோடு 2000 ஆண்டுகள் புராதன வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். திருச்செங்கோட்டிற்கு திருவிழாக் காலங்களிலும், விசேஷ நாட்களிலும் பல மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்தும் அதிக பக்தர்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் தங்கி இறைவனை வழிபட்டுச் செல்லப் போதிய தங்கும் விடுதிகள் இல்லாமல் உள்ளது. இதைப் போக்கிட அரசு சார்பில் தங்கும் விடுதி அமைத்து பக்தர்களின் இன்னல்களைக் களைய நிதி ஒதுக்கீடு செய்திட, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உற்சவர் பெருந்தேர் சுமார் 300 வருடம் பழமை வாய்ந்த திருத்தேர் ஆகும். இதனை நவீன உற்சவத் தேராக புதுப்பித்துத் தருமாறு எனது பணிவான

வேண்டுதலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்து சமய அறநிலையத் துறை கோயில்களில் 5 வருடங்களுக்கு மேலாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களை 110–விதியின்கீழ் பணி நிரந்தரம் செய்ய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு வட்டம், வட்டூர், கருமாபுரம், டி.புதுப்பாளையம், திருமங்கலம், ஒ. ராஜபாளையம் மற்றும் டி. கைலாசம்பாளையம் முதலிய பஞ்சாயத்துகளில் சுமார் 60,000 மக்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் மருத்துவ வசதிக்கு இங்கிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள சித்தாளந்தூர் செல்லவேண்டியுள்ளது. ஆதலால், 6 பஞ்சாயத்திற்கும் மையப் பகுதியான வட்டூர் கஸ்பா கவுண்டம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார மையம் அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு பகுதியைச் சார்ந்த சுமார் 200 மாணவர்கள் skating பயிற்சிக்கு இங்கிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாமக்கல் நகருக்கு செல்லவேண்டியுள்ளது. ஆதலால், திருச்செங்கோடு பகுதியில் அரசு skating பயிற்சி மைதானம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி உபரி நீர்த் திட்டம், மல்லசமுத்திரம் ஒன்றியம், மங்களம் ஏரி வழியாக திருமணிமுத்தாற்றில் கலக்கும் வகையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். இதனை மங்களம் ஏரியிலிருந்து திருச்செங்கோடு ஒன்றியம், வட்டூர் கஸ்பா ஏரி வரை சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் நீட்டித்து, கால்வாய் வெட்டினால் உபரி நீர் ஏற்கெனவே உள்ள உபரி நீர் வாய்க்கால் வழியாக திருச்செங்கோடு ஒன்றியம், . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இன்னும் எவ்வளவு கோரிக்கைகள் இருந்தாலும் அனைத்தையும் கொடுத்துவிடுங்கள். அனைத்தையும் பதிவு செய்துகொள்ளலாம்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்கள் தான். அவ்வளவுதான்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இல்லை, இன்னும் உறுதியாக ஒரு நிமிடம்தான். அதற்குள்ளே உரையை முடியுங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *ஒட்டக்குட்டை, எலச்சிப்பாளையம் ஒன்றியம், உஞ்சினை ஏரி, மோளியப்பள்ளி ஏரி வழியாக திருமணி முத்தாற்றில் கலக்கும்படி செய்தால்,*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *ஒரு நிமிடம்தான். அதற்குள்ளே உரையை முடியுங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *இப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன் வறட்சியான இப்பகுதியின் நிலத்தடி நீர் மட்டம் உயரும். ஆதலால் மேற்படி உபரி நீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு காவேரி தந்த நாயகர், விவசாயிகளின் காவலர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். திருச்செங்கோடு சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மீதி அனைத்தையும் கொடுங்கள், உறுதியாக பதிவு செய்துகொள்ளலாம். உரையை முடியுங்கள். இறுதி வரிகளுக்கு வாருங்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார், அதை கொஞ்சம் பாருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரி.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கடைசிப் பக்கத்திற்கு வாருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலத் திட்டங்கள் பல தந்து, மக்களின் அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றி, மக்கள் நலன் காத்து, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் பொறுப்பையும், கடமையையும் தாங்கி நிற்கும் அனைத்துத் துறை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், நல்லாட்சி மற்றும் நிருவாகத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தி, இது மக்களுக்கான அரசு என்பதை மாபெரும் இலட்சியமாய்க் கொண்டு செயல்பட்டுவரும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரையும் தமிழக மக்கள் அனைவரும் மனதார வாழ்த்தி பாராட்டுகின்றனர் என்பதை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.*

அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கும் கட்சிகளின் மத்தியில் அடுத்த தலைமுறையின் தேவைகளைப் பற்றி சிந்தித்துச் செயலாற்றும் பேரியக்கம், நமது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட்டு, இந்த நல்ல வாய்ப்பைத் தந்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அமைதி கொள்ளும் திசை நோக்கி வணங்கி என் கண்ணீர்த் துளிகளை அம்மா அவர்களின் பாதங்களில் காணிக்கையாக்கி நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மல்லசமுத்திரம் பேரூராட்சியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், நாமக்கல் மாவட்டத்திலேயே நிலை 2 மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் நிலையமாக இருந்து வருகிறது. இங்கு தினமும் சுமார் 400 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதம் சுமார் 30 அறுவை சிகிச்சையுடன் கூடிய பிரசவங்கள் நடைபெற்று வருகின்றன. மேற்படி மருத்துவமனை 1969 இல் கட்டிய பழைய கட்டடத்திலேயே செயல்படுகிறது. ஆகையால் புறநோயாளிகள்

பிரிவிற்கு புதிய கட்டடமும், கூடுதலாக மகப்பேறு கட்டடமும் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எலச்சிப்பாளையம் ஒன்றியம், திம்மராத்தம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதில் தினமும் புறநோயாளிகள் சுமார் 100 பேர் பயனடைந்து வருகிறார்கள். மாதம் சுமார் 5 பிரசவங்களும் நடைபெற்று வருகின்றன. இங்கு செவிலியர்கள் குடியிருப்பு இல்லாததால் இரவில் மருத்துவம் பார்க்க முடியாத சூழ்நிலை உள்ளது. ஆதலால், திம்மராத்தம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்செங்கோடு, இறையமங்கலம் காவேரியாற்றில் படித்துறை அமைக்க வேண்டுகிறேன். திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகம் மிகப் பழமையான சேதமடைந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதனை அகற்றி இதே இடத்தில் புதிய கட்டடம் அமைக்க வேண்டுகிறேன்.

திருச்செங்கோடு தொகுதிக்குட்பட்ட மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலையில் 550 அடி உயரம் கொண்ட மலைமீது அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயில் அமைந்துள்ளது. மேற்படி கோயிலுக்கு பக்தர்கள் செல்ல 500 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது இதய தெய்வம் அம்மாவின் அரசின் உதவியுடன் ராஜகோபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. வருடந்தோறும் இம்மலையில் நடைபெற்றுவரும் பங்குனி உத்திரத் திருவிழாவில் இலட்சக் கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வார்கள். மேலும், மாதாமாதம் விசேஷ நாட்களிலும், பூஜை காலங்களிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். பக்தர்கள் மலை ஏற சிரமம் பல தாங்கி இறைவனை தரிசிக்க வேண்டியிருக்கிறது. . ஆதலால் வையப்பமலை அருள்மிகு சுப்பிரமணியர் மலைக்கோயிலுக்கு பக்தர்கள் வாகனங்கள்மூலம் எளிதாகச் செல்ல மலைப்பாதை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள். இப்போது மணி 1–10 ஆகிறது. (குறுக்கீடு) உறுப்பினரின் கேள்விக்கு பதில் சொல்கிறார் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய எதிர்க்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள், அறங்காவலர் குழு நியமனம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைப் பற்றி பேசினார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டத்தின்கீழ் இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை மேலாண்மை செய்வதற்காக பரம்பரை நிருவாகத்தில் இல்லாத ஒவ்வொரு திருக்கோயிலுக்கும், பரம்பரையல்லாத அறங்காவலர் நியமனம் செய்யப்படுவர். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் 3 அறங்காவலர்களுக்குக் குறையாமலும், 5 அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம்பெறுவர். இக்குழுவில் பெண் உறுப்பினர் ஒருவரும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த ஒருவரும் இடம்பெறுவர். இக்குழுவின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். தற்போது தமிழகத்தில் 9 திருக்கோயில்களில் அரசால் நியமிக்கப்பட்ட அலுவல்சாரா தக்கார் அறங்காவலர் குழு உள்ளது.

மேலும், அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் 10,872 திருக்கோயில்களில் நடைமுறை அறங்காவலர் நிருவாகிகளாக உள்ளனர். 4,381 திருக்கோயில்களில் பரம்பரை அறங்காவலர்கள் உள்ளனர். 1,013 திருக்கோயில்களில் நிருவாகத் திட்ட அறங்காவலர்கள் உள்ளனர். அறங்காவலர் நியமனம் தேவையற்ற கட்டளை மடங்கள் 2,192 உள்ளன. அறங்காவலர்கள் நியமனம் தொடர்பாக 2,303 திருக்கோயில்களில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, திருக்கோயில்களில் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் குறித்து பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, முடிவு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலை ஆலோசனைக் குழு அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்தைக் கூறினார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டத்தின்கீழ் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க உயர்நிலை ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைவராகவும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுச் செயலர் அவர்கள் அலுவல்சாரா உறுப்பினராகவும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் அலுவல்சாரா உறுப்பினராகவும், செயலாளராகவும் இருப்பார்கள். இதனால், அலுவல்சாரா உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர். இக்குழு அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து உரிய கொள்கை முடிவை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள். 1–25 மணி வரை எவ்வளவு பேசமுடியுமோ, பேசுங்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'எல்லோரும் இன்புற்று இருப்பதேயல்லாமல் வேறொன்றுமறியேன் பராபரமே' என்ற தாயுமானவர் சுவாமிகள் வாக்கின்படி, அன்னைத் தமிழகத்தின் அருந்தவப் பயனாய், ஆறாவது முறையாக அரசாண்ட அற்புதமாய், இல்லையென்ற சொல்லை இல்லாமற் செய்த இறையாய், ஈகை குணங்கொண்டு வாகை சூடி வந்த வரமாய், உழைப்பவர் உண்ண விலையற்ற அரிசி தந்த அன்னபூரணியாய், ஊக்கத்திற்கு ஆக்கமாய், உலகிற்கே நல்லதோர் உவமையாய், எளியவர்க்கு ஏற்றம் தரும் திட்டங்கள் பல தந்து, ஏங்கி நின்ற தமிழகத்தைத் தாங்கி நின்ற தங்கத் தாரகை, ஐந்திணை நிலங்களையும் தன்னறிவால் ஆட்சி கொண்ட அரிமா, ஒப்பாருமிக்காருமின்றி, ஒப்புமைக்கு ஓர் சான்றுமின்றி, ஓங்கார சொரூபமாய், ஓய்வறியா தன் உழைப்பால், தீபகற்ப இந்தியாவின்

திருவிளக்காய், தீஞ்சுவை தமிழ்மொழி வளர்த்து தியாகச் சுடராய், தன்னையே கொடுத்து, தமிழகத்தைக் காத்து நிற்கும் தமிழர் குலச் சாமி, தனக்குப் பின்னாலும், தான் தலைமை கொண்ட கழகமே நூறாண்டுகள் தமிழகத்தை ஆண்டுவரும், தான் தந்த திட்டங்களை தரணியே போற்றிவரும் எனச் சூளுரைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) வையத்துப் பெருமையுடன் வானுறையும், எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் தாள் மலர்கள் தஞ்சமென பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தைத் தந்து சென்ற இதய தெய்வம் அம்மா அவர்களின் அடிச்சுவட்டை அணு அளவும் பிறழாமல் 'மக்களால் அம்மாவின் ஆட்சி' 'மக்களுக்காகவே அம்மாவின் ஆட்சி' என அனுதினமும் அம்மா அவர்களின் நலத் திட்டங்களையும், அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளையும் அனைவருக்கும் அளித்து, அன்பின் இருப்பிடமாய், ஆற்றலின் பிறப்பிடமாய், எளிமைக்கோர் பெருமையாய், இனிமைக்கு ஓர் இலக்கணமாய், ஏற்றத்தின் தோற்றமாய், எங்கள் தாய்க்குப் பின் தனயனாய், விசுவாசத்தை தன் சுவாசமாய், வீணர்களுக்கு வேங்கையாய், நேர்மைக்கு உவமையாய், வாய்மைக்கு வலிமையாய், விவசாயிகளின் வேந்தனாய், நெசவாளர்களின் நேசனாய், வாடி நிற்போருக்கு வசந்தமாய், நாடி வந்தோர்க்கு நற்பயனாய், நாளும் நல்லாட்சி தந்து, தமிழகத்தைக் காத்து, தமிழர் உரிமைகளை மீட்டு, தகமைசால் தன் தகுதியால் தலைமையேற்று எங்களை வழிநடத்திச் செல்லும், குன்றம் சூழ் சேலத்தின் குலக் கொழுந்தாம், மாங்கனி மாவட்டத்தின் மைந்தராம், கொங்கு நாட்டுத் தங்கம், எங்களின் அங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாட்சிமை பொருந்திய அண்ணன் எடப்பாடியார் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

இதிகாச இராமாயணத்தின் இலக்குவனாய்; ஈரிலையின் ஓரிலையாய்; இரத்தத்தின் இரத்தங்களின் இரத்த அணுக்களின் ஓர் அணுவாய்; கழகத்தின் இரு விழிகளில் ஓர் விழியாய்; அம்மாவின் வழித் தோன்றல்களுக்கு வழிகாட்டியாய்; வாளுக்கோர் கேடயமாய்; வில்லுக்கோர் வீர அம்பாய்; வினை தீர்க்க துணை நிற்கும் பாண்டி மண்டலத்து பாரிஜாதம், பணிவிற்கோர் உதாரணம்;

தேனி மாவட்டத்தின் தேன் சுவை; மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக ஒருங்கிணைப்பாளர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடுநிலையே தன்நிலை எனக்கொண்டு, சட்டமன்ற மாண்புகளை, மரபுகளை பட்டென எடுத்துச் சொல்லும் பண்பாளராய், உத்தமத் தாயின் உன்னத வழிகாட்டுதலால், பகையென்று எனக்கில்லை, உள்நோக்கம் ஒன்றுமில்லை, இழிசொல்லும், ஏளனமும் என்றும் எனக்கில்லை என பார் போற்ற, தர்பார் மண்டபத்தில் கொலுவீற்று சபையை நடத்தும் சபாநாயகர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் தலைவரா ?

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சட்டமன்றப் பேரவையில் இன்று தமிழ் வளர்ச்சித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கேற்று, பேச அனுமதித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உள்ளிட்ட அவையோர் அனைவரையும் வணங்கி எனது உரையைத் துவங்குகின்றேன்.

விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் குடிமராமத்துப் பணி திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள அணைகள், ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் ஆகிய நீர்நிலைகளைத் தூர்வாரி, நீர் மட்டம் உயர திட்டம் தந்து, தூர் வாரப்பட்ட வண்டல் மண்ணை உழவர் பெருமக்கள் உரமாக, எருவாக தனது நிலத்தில் பயன்படுத்திக்கொள்ள ஆணையிட்டமைக்கும், இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில், தமிழகத்தின் ஜீவாதார பிரச்சினையான தமிழகத்திற்கு உரிய காவேரி நீரைப் பெறுவதற்காக இடைவிடாத சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைத்துத் தந்ததற்கும், முல்லைப் பெரியாறு அணையின் முழுக்கொள்ளளவிற்கு நீரை

உயர்த்தவும், பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் முயற்சியைத் தடுத்து நிறுத்தவும், மேகதாது அணைத் திட்டத்தை முறியடிக்க இடைவிடாத சட்டப் போராட்டங்கள் நடத்தி வருவதற்கும், அத்திக்கடவு–அவினாசி திட்டம், ஆழியாறு–பரம்பிக்குளம் திட்டம் உள்ளிட்ட திட்டங்களுடன் காவேரியாற்றுடன் கோதாவரி நதியை இணைக்கும் திட்டத்தை செயல் வடிவமாக்க மத்திய அரசின் ஒப்புதல் பெற்றுத்தந்தமைக்கும், கோல் உயர, குடி உயர்த்தி, குடி உயர, நெல் உயர்த்தி, நெல் உயர, நீர் உயர்த்திய கோனாக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

"செய்யும் தொழிலை சீர்தூக்கி பார்க்குங்கால்,
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை"

என்றார்கள் சான்றோர் பெருமக்கள். அந்த வகையில் நெய்யும் தொழிலை செய்யும் தொழிலாகக் கொண்ட நெசவாளர்கள் வாழ்வு சிறக்கும் வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்கி, பட்டுத் துணிகளின் விற்பனைக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி மானியம் வழங்கி, டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளைமூலம் வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித் தொகையை விரிவுபடுத்தித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

மத்திய அரசின் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உணவுப் பொருட்களுக்கு அளித்து வந்த மானியத் தொகை வழங்கப் பெறாத நிலையிலும், தொடர்ந்து விலையில்லா 20 கிலோ அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், நியாய விலைக் கடைகளில் தமிழக மக்கள் தங்குதடையின்றி பெறும் வகையில் ஸ்மார்ட் கார்டு வழங்கியதற்கும், இதய தெய்வம் அம்மா அவர்களின் கனவுத் திட்டமான "உழைக்கும் மகளிருக்கான மானியத்துடன்கூடிய இரு சக்கர வாகனங்கள் வழங்கும் திட்டம்" தந்து அத்திட்டத்திற்கு 25,000/– ரூபாய் மானியம் வழங்கியதற்கும்,

"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி,
மக்களின் மனதில் நிற்பவர் யார்
மாபெரும் வீரர் மானம் காப்போர்,
சரித்திரம்தனிலே நிற்கின்றார்"

என வாழ்ந்து, "தொலைநோக்குத் திட்டம் 2023" என்ற திட்டம்

தந்து, தனது தொலைநோக்கு சிந்தனையால், தமிழகத்தை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்று, நாள்தோறும் மக்கள் நலத் திட்டங்களை செயலாக்கியமைக்கும் இச்சட்டமன்றப் பேரவையில் இதய தெய்வம் அம்மா அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்ததற்கும், இதய தெய்வம் அம்மா அவர்கள் துயில் கொள்ளும் மெரினா கடற்கரையில் அம்மா அவர்களின் பெருமைக்கு, பெருமை சேர்க்கும் விதத்தில் 'பீனிக்ஸ் பறவை' வடிவில் அம்மா நினைவு மணிமண்டபத்தை ரூ.50 கோடியில் அமைக்க ஆணையிட்டமைக்கும், 'தமிழக மக்களின் நலனே தன்னலன்' என தவ வாழ்வு வாழ்ந்த இதய தெய்வம் அம்மா அவர்களின் வேதா நிலையத்தை அரசுடைமையாக்கி, பொதுமக்கள் பார்வைக்கு வழங்க ஆணையிட்டமைக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை எட்டு கோடி தமிழ் மக்கள் சார்பிலும், 2 கோடி கழகத் தொண்டர்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நாடென்ன செய்தது உனக்கு எனக் கேள்விகள் கேட்பது எதற்கு?

நீ என்ன செய்தாய் அதற்கு என நினைத்தால் நன்மை உனக்கு"

என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கேற்ப முன்னெப்போதும் இல்லாத வகையில் நெடுஞ்சாலைத் துறையில் சீர்மிகு திட்டங்கள் பல தந்து, சேலம் மாவட்ட மற்றும் மாநகர மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 1,000 கோடி ரூபாய் அளவில் மேம்பாலங்கள் அமைக்க ஆணையிட்டு, அதில் திருவாகவுண்டனூர் மேம்பாலம் மற்றும் ஏ.வி.ஆர். ரவுண்டானா மேம்பாலப் பணிகள் நிறைவுற்று அவை மக்கள் பயன்பாட்டில் உள்ளன என்ற நல்ல செய்தியுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பில் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சேலம் மாநகராட்சியில் சாலை சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.142 கோடியை ஒரே தவணையில் ஒட்டுமொத்தமாக வழங்கியதற்கும், 10,000 கோடி ரூபாய் செலவில் சேலம்–சென்னை பசுமைவழிச் சாலை அமைப்பதற்கும், அனைத்து நவீன வசதிகளையும் உள்ளடக்கிய Bus port அமைப்பதற்கும், சேலம்

உருக்காலை வளாகத்தில் இந்திய இராணுவத்திற்குத் தேவையான தளவாட உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கும் மத்திய அரசின் நிதியுதவி பெற்று, பணி துவக்க ஆவன செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு சேலம் மாவட்ட பொது மக்கள், தொழிலதிபர்கள், வேலைவாய்ப்புக் கிடைக்கப்பெறும் இளைஞர்கள் அனைவரின் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து மந்திரத்தால் இறைவனை துதித்து மகிழ்கின்றோம். ஆனால், மூன்றெழுத்து மந்திரத்தால் அதிசயத்தக்க அற்புதங்கள் பல நிகழ்த்தி, அகிலத்தையே தன் வசமாக்கி, 32 ஆண்டுகளுக்கு பின் ஆண்ட கட்சியே மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமரச் செய்த இறையுருவில் வந்துதித்த அம்மா என்னும் தெய்வத்தைப் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களின் மறைவிற்குப் பின்னால், அம்மா அவர்களின் ஆட்சியை அறவழியில் நின்று காத்து, ஆக்கப் பணிகளை தன் ஆளுமைத் திறனால் நிறைவேற்றி, தாயின் கருணையும், வீரமும், விவேகமும் தனக்கும் உண்டென்று அரசு இயந்திரத்தை அழகாக இயக்கி, கண் துஞ்சாது கடமையாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை பணிந்து வணங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு எனது கோரிக்கைகள் சிலவற்றை முன் வைக்க விழைகிறேன்.

1989 ஆம் ஆண்டு முதல் தமிழகம் முழுவதும் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் சுமார் 219 பேர் சமுதாய அமைப்பாளர்களாக பணிபுரிந்து தற்போது அயற்பணியில், NULM திட்டத்தில் மகளிர் மேம்பாட்டு நல நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். 25 ஆண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு, ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதியம் ஏதுமின்றி 5,200–20,200–G.P. 2,400 என்ற ஊதியத்தில் அரசின் அனைத்து திட்டங்களும் மக்களுக்குச் சென்றடையும் வகையில் சிறப்புடன் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுடைய கல்வித் தகுதி, பணிக்காலம் ஆகியவற்றை கனிவுடன் கருத்தில்கொண்டு pre–revised scale of pay அடிப்படையில் இவர்களுக்கு ஊதிய உயர்வு மற்றும் பதவி

உயர்வு வழங்க வேண்டும். இவர்களின் பணிச் சுமையைக் கருத்தில்கொண்டு, மீண்டும் மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலகங்களில் இவர்களுக்கென அலுவலக அறை வசதி செய்து கொடுத்து, இங்கிருந்தே அவர்கள் அயற்பணியாற்ற ஊக்கமளித்து உதவிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இருக்கும் திருக்கோயில்கள் வெகு காலமாக தரம் உயர்த்தப்படாமல் உள்ளன. நிலை III ஆக இருக்கும் 250 திருக்கோயில்கள் மற்றும் நிலை IV ஆக இருக்கும் 150 திருக்கோயில்களின் எண்ணிக்கையை குறைத்து, வருவாய் அடிப்படையில் 66 என்ற எண்ணிக்கையில் இருக்கும் நிலை I திருக்கோயில்களை 100 ஆகவும், 112 என்ற எண்ணிக்கையில் இருக்கும் நிலை II திருக்கோயில்களை 150 ஆகவும் தரம் உயர்த்தி, அங்கு கல்வித் தகுதி, பணிமூப்பு அடிப்படையில் செயல் அலுவலர்களுக்கே பதவி உயர்வு பணி வழங்கி, இவர்களை நிலை I மற்றும் II ஆகியவற்றிற்கு நிருவாக அதிகாரி எனவும், நிலை III மற்றும் நிலை IV ஆகியவற்றில் பணியாற்றுபவர்களை செயல் அலுவலர் எனவும் அழைக்க வேண்டும்.

திருக்கோயில்கள் மற்றும் அலுவலகங்களில் காலியாக இருக்கும் பூசாரிகள், ஓதுவார்கள், அலுவலர்கள் உள்ளிட்ட பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் எனவும், அலுவலகப் பணியாளர்களுக்கு கல்வித் தகுதி, பணி மூப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பதவி உயர்வு பணி வழங்கப்பட வேண்டுமெனவும்; உபயதாரர்களின் விருப்ப மனுவின் பேரில் குடமுழுக்கு நடைபெற்று, 12 ஆண்டுகள் பூர்த்தியடைந்த திருக்கோயில்களைப் புனரமைத்து, திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்திட விரைவாக அனுமதி ஆணை வழங்கப்பட வேண்டும் எனவும்; மேற்படி விண்ணப்பங்களை அனுப்பவும், அனுமதி ஆணை மற்றும் தடையின்மைச் சான்று பெறவும், இ–மெயில், மின்னஞ்சல் முறையை நடைமுறைப்படுத்திட ஆணையும், உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும் எனவும்; திருக்கோயில்களில் நிருவாகத் தீர்மானங்களை நிறைவேற்றவும், திருப்பணிகளைத் துவக்கவும், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை அமைத்துத் தரவும், தகுதியுள்ள அனைத்து திருக்கோயில்களுக்கும் அறங்காவலர்கள் குழு மற்றும் மாவட்ட அறங்காவலர் குழு அமைத்துத் தர வேண்டும் எனவும் தமிழகம் எங்கும் திருக்கோயில்களின் திருப்பணிகளைத் தொய்வின்றி விரைவாகச் செய்திட தலைமை ஸ்தபதி பணியிடம் நிரப்பப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் நலனுக்காக சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தினுள் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவமனை, உடற்பயிற்சிக் கூடம், இறகுப் பந்து விளையாட்டு மைதானம், நடைபாதை பயிற்சி மேடை மற்றும் உணவு விடுதி அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் பேரவை விதி எண் 110—ன்கீழ் அறிவிக்கப்பட்ட சேலம் மாநகர், 50—வது கோட்டம், மணியனூரில் ஜப்பான் பன்னாட்டு நிறுவனம்மூலம் இரண்டாம் நிலை சுகாதார மருத்துவமனை கட்ட, நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களிடம் அனுமதி கோரி கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி வழங்கி, விரைவாகப் பணிகள் துவங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகரில் உள்ள மகாத்மா காந்தி விளையாட்டு மைதானம், தேசிய, மாநில, மண்டல, மாவட்ட, பள்ளி அளவிலான அனைத்து வகை விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதுடன், நடை பயிற்சிக்காக தினமும் ஆயிரக்கணக்கானோர் வந்து பயன்பெறும் மைதானமாகும். இங்கு மழைக்காலங்களில் மழை நீர் மற்றும் கழிவு நீர் உட்புகுந்து விடுவதால் பயிற்சிக்கு வருவோரும், பொது மக்களும் மிகுந்த சிரமப்படுகின்றனர். எனவே, இந்த மைதானத்தை Synthetic விளையாட்டு மைதானமாக தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் உடையாப்பட்டி, சீலநாயக்கன்பட்டி தேசிய புறவழிச் சாலையில் சீலநாயக்கன்பட்டி பை—பாஸ் ரவுண்டானாவில் அமைந்துள்ள உயர் மட்டப் பாலம் ஒரு வழிப் பாதையாக உள்ளது. சென்னை மார்க்கத்திலிருந்து கோவை, பெங்களூரு செல்லும் கனரக வாகனங்கள் மற்றும் கார்கள் உள்ளிட்ட வாகனங்களாலும், சேலம் நகருக்கு வரும் பேருந்துகள், பள்ளி வாகனங்கள் மற்றும் நகர மக்களின் வாகனங்களாலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இச்சாலை மத்திய அரசின் நிருவாகத்திற்குட்பட்டிருப்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி விரைவில் அங்கே ஓர் இணை உயர் மட்ட மேம்பாலம் அமைத்துத் தர ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பிரசித்திப் பெற்ற மலைக் கோயிலாகும். இங்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள திருமண மண்டபங்களை அகற்றி, அவ்விடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய அம்மா திருமண மண்டபம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் தனியார் மற்றும் பிற துறை கட்டடங்களில் செயல்பட்டு வரும் 60 அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் எனவும், பழுதடைந்த கட்டடங்களில் சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், சொந்தக் கட்டடங்களுக்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க R.O. water machine வழங்கப்பட வேண்டும் எனவும், அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு சான்றிதழ்கள் வழங்குவதுபோல் அவர்களுக்கு வண்ணச் சீருடைகள் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்ட நாடக நடிகர் சங்கம் பழம்பெரும் சங்கமாகும். இச்சங்க உறுப்பினர்களில் தகுதியுள்ள கலைஞர்களுக்கு தமிழக அரசின் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் வழங்கப்பட வேண்டும் எனவும், நாடக, நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு போதிய வருவாய் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்கிடவும்; அரசின் நலத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் அனைத்தும் மக்களுக்கு சென்றடையும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும் ஆணை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிந்து, அரசின் பணப் பயன்களைப் பெறாத தொழிலாளர்களுக்கு உரிய தொகை வழங்கிடவும்; நூற்பாலை இடமான, சேலத்திலிருந்து சென்னை, சிதம்பரம், கடலூர் உள்ளிட்ட ஊர்களுக்கு பேருந்துகளை இயக்க, அவ்விடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ.பி. சக்திவேல்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“கல் தோன்றி மண் தோன்றா காலத்தே—வாளோடு
முன் தோன்றிய மூத்தக் குடி தமிழ்க்குடி”
“எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே
மங்காத தமிழென்று சங்கே முழங்கு”

என சங்கநாதம் செய்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். அந்த வகையில் இயல், இசை, நாடகம் என இருந்த முத்தமிழில் நான்காம் தமிழாய் அறிவியல் தமிழ் கண்டு, உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தமிழ்மொழி இருந்திட வேண்டுமெனவும்; சென்னை உயர் நீதிமன்றம், தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என அழைக்கப்படட வேண்டுமெனவும் வலியுறுத்திய தமிழ்த்தாய் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அருளாசியுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசை தலைமையேற்று நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தேன் மதுரத் தமிழோசை திக்கெட்டும் பரவிட அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைத்திட தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக பத்து கோடி ரூபாயை தன் திருக்கரங்களால் வழங்கியதற்கு உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்த நன்றிகளை இப்பேரவையில் பதிவு செய்கிறேன். தமிழ்மொழி வளர்த்திட “தமிழ் வளர் மையம்” தமிழர்களின் பண்பாட்டினை பரப்பிட “தமிழ் பண்பாட்டு மையம்” உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையின்மூலம் ஆட்சி மொழித் திட்டத்தை செயலாக்கிட ஆய்வுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்படுவதுடன், சிறந்த குறிப்புகளுக்கு பரிசுகள், அரசு அலுவலகங்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளது ஆட்சி சொல்லகராதி மற்றும் “அம்மா மென் தமிழ்ச் சொல்லாளர்” என்ற தமிழ் மென்பொருள் 16—5—2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் திருநாள் விழா கொண்டாடப்படுவதோடு தமிழறிஞர்களை சிறப்பிக்கும்வண்ணம் திருவள்ளுவர் விருது,

மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, சித்திரை–தமிழ்ப் புத்தாண்டு விருது, தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, உமறுப்புலவர் விருது, ஜி.யு. போப் விருது, இளங்கோவடிகள் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, அம்மா இலக்கிய விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது, சிங்காரவேலர் விருது, தமிழ்ச்செம்மல் விருது இவற்றை வழங்கி வருவதுடன் உலகத் தாய் மொழி நாளும், தமிழ் கவிஞர் நாளும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க நமது மாநிலம் தமிழ்நாடு என்ற பெயரோடு 50–வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு "தமிழ்நாடு பொன்விழா ஆண்டு" கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்கள் அறிவித்து, செலவினத் தொகையாக ரூபாய் 109.05 இலட்சம் நிதி வழங்கியுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திருவள்ளுவர், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், ஔவையார், கவிச்சக்ரவர்த்தி கம்பர், இளங்கோவடிகள், தமிழறிஞர் கால்டுவெல் மற்றும் சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு சிறப்பு செய்யும் வகையில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு வருகிறது. சிறந்த தமிழ் நூல்களின் ஆசிரியருக்கும், பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் நூல்கள் வெளியிட நிதியுதவி அளித்து, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசளிக்கப்படுகின்றன. சிறந்த நூல்களை நாட்டுடைமையாக்கி அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கும், எல்லைக் காவலர்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும், ஒடிசா உத்கல் பண்பாட்டுப் பல்கலைக்கழகத்திலும், வாரணாசி இந்து பல்கலைக்கழகத்திலும், மொரிசியசு மகாத்மா காந்தி நிறுவனத்திலும், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும், ஆந்திரா மாநிலம், குப்பத்திலுள்ள திராவிடப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிற மாநிலங்களிலுள்ள தமிழ் அமைப்புகளுக்கும், சங்கங்களுக்கும்,

குவஹாத்தி பல்கலைக்கழகத்திற்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மதுரை உலகத் தமிழ்ச் சங்கம்மூலம் நூல்கள் அரங்கேற்றப்பட்டு, தமிழ்க் கலைக் கழகம் சார்பில் "தமிழ்க் கலைச் சொல் அகர முதலி" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பிற மொழியாளர்களுக்கு பயிற்சியளித்து, உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டு, ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் 7 ஆய்விருக்கைகள் ஏற்படுத்தப்பட்டு, அறக்கட்டளைகள்மூலம் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அருளாசியுடன், அரசாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களின் சீரிய தலைமையில்,

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு—இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள் தட்டி ஆடு! நல்ல
தமிழ் வெல்க! வெல்க! என்றே தினம் பாடு

என்ற பாவேந்தரின் சொல்லை பார் போற்ற செயலாற்றுவோம், சிறப்புறுவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதோடு நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

பிற்பகல் 1–30

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை குறித்து பேசவே ஆரம்பிக்கவில்லை. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார் ஔவையார். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது வட்டார வழக்கு. தமிழகத்தில் அட்ட வீரட்டானத் தலங்கள், பஞ்சபூத தலங்கள், ஐம்பெரும் சபைகள், பாடல் பெற்ற சிவத் தலங்கள், திவ்ய தேசங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. இன்னும் 2 நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: அறுபடை வீடுகள், திருமடங்கள், அறக்கட்டளைகள், சமணத் திருக்கோயில்கள் உள்ளிட்ட 38,646 திருக்கோயில்கள் அமைந்துள்ளன. இக்கோயில்கள் தமிழகத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றையும், தமிழர்களின் கலை உணர்வையும், கூர்மையான அறிவையும் உணர்த்துகின்றன. இந்து சமய அறநிலையத் துறை தனது நிருவாக வசதிக்காக மாநில அளவில் 11 மண்டலங்களாகவும், 28 கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் இந்து சமய அற நிலையத் துறைக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த சுமார் 3,081 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களும், மனைகளும், கட்டடங்களும் மீட்கப்பட்டுள்ளன. 6,159 ஆக்கிரமிப்பாளர்கள், வாடகைதாரர்களாக வரன்முறை செய்யப்பட்டுள்ளனர்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற முதுமொழிக்கேற்ப, இதய தெய்வம் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட 'திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம்' மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணைப்படி தற்போது 754 திருக்கோயில்களில் நாளொன்றுக்கு ரூ.16.43 இலட்சம் செலவில் 65,735 பக்தர்கள் பயன்பெறும் வகையில் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தின்கீழ் சுமார் ரூ.2.05 இலட்சம் செலவில் நாளொன்றுக்கு 8,200 பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

2017—2018 ஆம் ஆண்டில் 517 திருக்கோயில்களில் சனிக்கிழமைதோறும் 28,447 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட ஆன்மிக ஒழுக்கநெறி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

> "புல்லினால் ஐந்து கோடி; புதுமண்ணால் பத்து கோடி
> செல்லுமாஞாலந் தன்னில் செங்கல்லால் நூறு கோடி
> அல்லியங்கோதை கேளாய், அரனுறை ஆலயத்தை
> கல்லினால் செய்வித்தோர்கள் கயிலை விட்டு
> அகலாரன்றே."

என்ற திருமந்திரத்தின் திருவாக்கின்படி இதய தெய்வம் அம்மா அவர்களின் வழி தொடர்ந்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர்

அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு 2017—2018 ஆம் நிதி ஆண்டில் 765 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடைபெற்று, குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன. கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் 981 திருக்கோயில்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் 9.81 கோடி ரூபாயும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் உள்ள 1,019 திருக்கோயில்களுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் 10.19 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டு, நலிவுற்ற திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கரங்களால் சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம் துவக்கப்பட்டு, தற்போது 2017—2018 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.2.50 கோடி செலவில் மேலும் 10,000 திருக்கோயில்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள 809 திருக்கோயில்களுக்கு சொந்தமாக 989 மரத் தேர்கள் ரூ.12.33 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு, அதில் 23 திருக்கோயில்களில் திருப்பணிக்கு செலவிடப்பட்டுள்ளது. 63 திருக்கோயில்களில் தங்க ரதமும், 49 திருக்கோயில்களில் வெள்ளி ரதமும் பயன்பாட்டில் உள்ளன. மானசரோவர் புனித யாத்திரை செல்வோருக்கு ஒரு முறை ரூ.40,000/— வீதமும், முக்திநாத் புனித யாத்திரை செல்வோருக்கு ஒரு முறை ரூ.10,000/— வீதமும் தலா 500 இந்துக்களுக்கு வழங்க தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருக்கோயில்களுக்கு சொந்தமான சிலைகள் உள்ளிட்ட விலை மதிப்பற்ற பொருட்களை பாதுகாக்க 19 உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்களும், 11,512 பாதுகாப்பு அறைகளும் உள்ளன. 12—2—2018 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருக்கோயில்களில் தீ விபத்து தடுப்பு மற்றும் இதர பேரிடர்களை தவிர்க்க வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி முதற்கட்டமாக 47 முதுநிலை திருக்கோயில்களில் தீ தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் பல்வேறு கல்வி மையங்கள் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இதுமட்டுமல்ல, 44 சமுதாய தொண்டு

நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. திருக்கோயில்களில் திருப்பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், சிறப்பு சேம நல நிதித் திட்டம் மற்றும் தற்காலிக பணியாளர் வரன்முறை ஓய்வூதியத் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உதவித் திட்டம் ஆகியவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம் அமைக்கப்பட்டுவுள்ளது. ஸ்ரீராமானுஜர் ஆயிரமாவது அவதாரத் திருவிழா 84 திவ்ய தேசங்களிலும், ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயிலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலுக்குத் தரமான சேவை மேம்பாட்டுக்கான 'சிறந்த நடைமுறைகள் விருது' இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கரங்களாலும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு 'தூய்மை இந்தியா விருது' இந்திய அரசாலும், பழைமை மாறாமல் திருப்பணிகள் செய்ததற்காக ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2017 UNESCO–Asia Pacific Heritage Award of merit for conservation விருதும் வழங்கப்பட்டது.

'வான்முகில் வழாது பெய்க;
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க;
குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க;
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்'

என்ற கச்சியப்ப சுவாமிகளின் வாழ்த்துப் பாவிற்கு வடிவம் கொடுத்து இதய தெய்வம் அம்மா அவர்களின் அறவழியில் நாடாண்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை போற்றி வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சிறப்பாக பேசுகிறீர்கள். நன்றி சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எ.பி. சக்திவேல்: கடைசி பேப்பர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சரி பேசுங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்:

"ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"

என்று கூறிய மகாகவி பாரதியின் கூற்றை மெய்யாக்க, விளையாட்டு பல்கலைக்கழகம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கை உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மைதானமாக உருவாக்கிக் கொடுத்தார்கள். இதய தெய்வம் அம்மா அவர்கள் காட்டிச் சென்ற வழியிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் தமிழகத்தில் விளையாட்டை ஊக்குவித்து மேம்படுத்தவும்; அதற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தவும்; போட்டி விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்தவும், திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து ஒலிம்பிக், காமன்வெல்த் ஆசிய, தேசிய, பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும்; பல்வேறு ஊக்க உதவித் தொகை மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கவும்; விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், விளையாட்டு தொடர்பான அறிவியல் துறைகளை மேம்படுத்தவும், மாற்றுத் திறனாளிகளும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வசதி செய்து கொடுக்கவும்; விளையாட்டு நிறுவனங்களை நிறுவி நிருவாகம் செய்யவும் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். விளையாட்டுகள் குறித்த விழிப்புணர்வு பெற கிராமப்புற. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லுங்கள். தயவு செய்து நன்றி செல்லுங்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *இதோ இப்பொழுது சொல்லிவிடுகிறேன். தஞ்சமென்று வந்தவரை தாயாய் ஆதரித்து, வஞ்சகரின் செயல்களுக்கு விரல் நுனியால் தீர்ப்பளித்து, அஞ்சாத நெஞ்சில் அன்புக்கு இடங்கொடுத்து, அறம் காத்த எங்கள் அம்மாவின் தடம் பார்த்து வழி தொடர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் ஆணை கேட்பதற்கு தலை வணங்கிய தங்கமாய், தலை கொடுத்து*

தாயின் கழகம் காப்பதிலே சிங்கமாய், ஓங்கிய வாள் போன்ற வடிவமாய், ஒளி விழியில் உலகத்தின் படிவமாய், ஒன்றரைக் கோடி தொண்டர்களின் ஒருங்கிணைப்பாளர்களாய் வீரமகன் போராட, வெற்றி மகன் பூச்சூட, மானம் ஒரு வாழ்வாக, வாழ்வு நதி தேனாக முன்னேறுவோம்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டையே முன்னேற்றுவோம் எனச் சொல்லி எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, எனது தொகுதிக் கோரிக்கைகளை நான் இந்தச் சட்டமன்றப் பேரவையிலே படித்ததாகக் கருதி பதிவுசெய்யக் கோரி, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி, வணக்கம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள். (குறுக்கீடு) அவர் சிறப்பாகப் பேசி முடித்திருக்கிறார். அவரை ஏன் disturb செய்கிறீர்கள்? அதில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) இல்லை, நல்ல கருத்துகள் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். பேசுங்கள்.

பிற்பகல் 1–35

***திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சக்திவேல் அவர்கள் சிறப்பாகப் பேசினார்கள். ஆனால், அவர் பேசியதை சுருக்கெழுத்தாளர்கள்கூட பதிவு செய்ய முடியாத அளவிற்கு வேகமாகப் பேசியதால் அதை அவைக் குறிப்பில் ஏற்ற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, சுருக்கெழுத்தாளர்கள் பதிவு செய்கின்ற அளவிற்கு உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று உத்தரவிட கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவற்றையெல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்துவிடுவார்கள். நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள். (குறுக்கீடு) அவர் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே இதைவிட வேகமாக, சிறப்பாகப் படித்திருப்பார். அதனால்தான் இந்த அவைக்கு வந்திருக்கிறார்.

***திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நாள்தோறும் வணங்கும் தாய்

காளியம்மனை வணங்கி, பிரதோஷ நாயகன் அகஸ்தீஸ்வரரையும் வணங்கி, அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அவர்களையும் வணங்கி, இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு தந்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், எனது அரசியல் ஆசான் திரு. ஈ.வி.கே.எஸ். அவர்களுக்கும், மாநிலத் தலைவர் அவர்களுக்கும், C.L.P. தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எனது மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காளிமுத்து, இப்பொழுது மணி 1–35. சரியாக 15 நிமிடங்கள் குறுக்கீடு இல்லாமல் நன்றாகப் பேசுங்கள். நீங்கள் யாரை வேண்டுமானாலும் வணங்குங்கள். சீக்கிரம் சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: சரி. அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளைப் பதிவு செய்துவிட்டு, பிறகு மானியக் கோரிக்கைகளில் பேசுகிறேன். மாண்புமிகு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் 15 நிமிடங்களில் நன்றாகப் பேசுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குத் தேவையானவற்றை இங்கே பதிவு செய்கிறேன். இந்த ஆண்டு குடிமராமத்து முறையில் அமராவதி பாசன வாய்க்காலைத் தூர் வார வேண்டும் என்றும், மதகுகளை சரி செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு பருவ மழை நன்கு பெய்துவருவதால், விவசாயிகளுக்குத் தங்கு தடையின்றி பாசனம் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்–ஆழியாறு உபரி நீரை வீணாகக் கடலுக்குச் செல்ல விடாமல், உப்பார் அணையில் நீர் நிரப்பித் தர ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் வடதாரையூரில் உள்ள குடியிருப்புகளில் 100 ஆண்டுகளுக்கும் மேல் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் பாதி பேருக்கு இன்னும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரத்தில் இயங்கிவரும் சி.எஸ்.ஐ. பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 750 மாணவிகளுக்குமேல் பயின்று வருகிறார்கள். இவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். இப்பள்ளி அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவருகிறது. ஆகவே, இந்தப் பள்ளிக்குத் தேவையான வகுப்பறைக் கட்டடங்களை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு பருவ மழை நன்கு பொழிந்துகொண்டிருப்பதால், பழனி வட்டம், வரதா அணைக்கட்டிலிருந்து பொன்னிவாடி கிராமத்தில் உள்ள நல்லதங்காள் அணைக்கு நீர் வரும் கால்வாயின் பாதையைச் சரி செய்து, தண்ணீர் வீணாகாமல் அணைக்கு வந்து சேருவதற்கு வழிவகை செய்ய இந்த அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் திட்ட அறிக்கையையும், மனுவையும் கொடுத்திருக்கிறேன். இது தி.மு.க. சட்டமன்றக் கொறடா அவர்கள் சார்ந்த ஒட்டன்சத்திரம் தொகுதிக்கும் சம்பந்தப்பட்டதாகும். அவர்களும் இதுகுறித்து மனு கொடுத்திருக்கிறார்கள். இதை அரசு முன்னுரிமை கொடுத்து செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி அணையின் குறுக்கே நஞ்சத்தலையூரில் தடுப்பணை ஒன்றும், வேலம்பூண்டியில் குடிநீர்த் தேவைக்காக தடுப்பணை ஒன்றும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் smart class அமைத்து, பள்ளி மாணவர்கள் கல்வியில் மேன்மையடைய வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் ஒன்றியம், மனக்கடவு பஞ்சாயத்திற்கு அமராவதி ஆற்றிலிருந்து உறிஞ்சு கிணறு ஒன்று அமைத்து, குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூலனூர் ஒன்றியத்திற்குட்பட்ட கன்னிவாடி பஞ் சாயத்தில், கன்னிவாடி முதல் மயில்ரங்கம் வரையுள்ள சாலை மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், இந்த ஆண்டு நெடுஞ்சாலைத் துறை அதை எடுத்துக்கொண்டு சரிசெய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் ஒன்றியம், சின்னக்காபாளையம் பேரூராட்சியில் உள்ள கள்ளிவலசு என்ற கிராமத்தில் 30 குழந்தைகளுக்குமேல் பால்வாடி சென்டரில் படித்து வருகிறார்கள். இது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடமும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்த ஊர், முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கே.வி.ஆர். அவர்களின் சொந்த ஊர் ஆகும். எனவே, மேற்கண்ட இடத்தில் இந்த ஆண்டு பால்வாடி சென்டர் ஒன்று கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னிவாடி பேரூராட்சி, வேலந்துரையில் உள்ள குளத்தின் தடுப்புச் சுவர் பழுதடைந்துள்ளதால், மழை நீர் தேங்குவதில்லை. ஆகவே, இந்தக் குளத்தைச் சீரமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீரா பானத்தைக் கொண்டு வந்து, விவசாயிகளின் குறைகளை நிறைவு செய்த தாங்கள், அங்குள்ள குறு, சிறு விவசாயிகளுக்கு அதிகமான எண்ணிக்கையில் மரங்களைத் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தோப்பு உள்ளவர்களுக்கு ஏக்கர் கணக்கில் மரம் தருகின்றீர்கள். அதே சமயம், குறு, சிறு விவசாயிகளுக்கு 5 முதல் 10 மரங்கள்தான் தரப்படுகின்றன. குறு, சிறு விவசாயிகள் அதிகமான மரங்களைக் கேட்கிறார்கள். தாங்கள், அந்த விவசாயிகளின் கோரிக்கையின்மீது கவனம் செலுத்தி, அவர்களின் குறை தீர்க்க, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயிகள்மீது போடப்பட்டுள்ள கள் இறக்கியதற்கான பழைய வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கும் தாங்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதற்கும், நாட்டு மாடுகளை வாங்குவதற்கும் அரசு மானியம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–40

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்திற்குத் தேவையான அளவு தண்ணீர் கிடைப்பதற்கு, ஆழியாறு–நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நீங்கள் உறுதுணையாக இருந்து செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மூவனூரில் முருங்கைக்காய் பதப்படுத்துதல், பவுடர் தயாரிக்கும் ஆலை அமைக்க வேண்டும் என்றும், தக்காளி ஜாம் செய்யும் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் மிக அதிகமாக விளையும் மருத்துவக் குணம் படைத்த கண்ணவாண் காய் விதையை அரசு கொள்முதல் செய்து விவசாயிகள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை என்பது மிகவும் முக்கியமான துறையாகும். 75 சதவிகித தமிழக மக்கள் திருக்கோயில் பக்தர்களாக இருக்கிறார்கள். கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், மிகப் பெரிய திருக்கோயில்கள் தவிர மற்ற நடுத்தர வருமானம் உள்ள திருக்கோயில்களில் அடிப்படை வசதிகள்கூட இருப்பதில்லை. அனைத்துத் திருக்கோயில்களுக்கும் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, உறைவிடக் கூடங்கள், பார்க் வசதி, திருமண மண்டபங்கள், ஓய்வு அறைகள் போன்ற வசதிகள் செய்து கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எனது தொகுதியில் 50–க்கும் மேற்பட்ட கோயில்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. பட்டுத்துறை அருள்மிகு மலை தன்னாசி கருப்பணசாமி திருக்கோயிலுக்கு அக்னி திருவிழாவை முன்னிட்டு 2 இலட்சம் பக்தர்களுக்குமேல் வருகின்றார்கள். இந்தக் கோயிலுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. சாலை வசதியும் இல்லாமல் இருக்கிறது. இந்த அரசு முன்வந்து அவற்றை செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பொன்னிவாடி கிராமம், கொசவவலசு அருள்மிகு பகவான் திருக்கோயில் மிக மிக பிரசித்தி பெற்றது. அங்கு அக்னி திருவிழா, யுக்தி பண்டிகை மிகவும் சிறப்பாக ஒரு வாரத்திற்கு நடைபெற்று வருகிறது. இந்தக் கோயிலுக்கு

நல்ல வருமானம் வருகிறது. இந்தக் கோயிலுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இங்கே நிறைய இடங்கள் இருக்கின்றன. பொதுமக்கள் நிதியுடன்கூட இத்திட்டத்தை நிறைவு செய்யலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். தாராபுரம் அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் ஆண்டுக்கு ஐந்து விஷேசங்கள் நடைபெறுகின்றன. திருக்கோயிலுக்கு மகாசிவராத்திரி அன்று 20,000–க்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகிறார்கள். அமராவதி நதிக்கரையில் அமைந்திருப்பதால் சுற்றுலாத் தலமாக இருக்கிறது. இத்திருக்கோயிலில் அகஸ்தியர் அவர்களால் உருவாக்கப்பட்ட மணல் லிங்கம் உள்ளது. இத்திருக்கோயிலில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. மக்கள் பொது நிதியிலிருந்து 40 இலட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்து முடித்தோம். இக்கோயிலுக்காக படித்துறையும், தடுப்புச் சுவரும் முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. கே.வி.ஆர். அவர்கள் 15 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்து இந்த திருக்கோயில் திருப்பணிக்கு உதவி செய்ததற்கு அவருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோயிலுக்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்காக M.P. நிதியிலிருந்து 18 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்தார்கள். இதற்கு சரியான ஒத்துழைப்பு கொடுக்காததால் அந்தப் பணம் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது. ஆகவே, இதுபோன்ற காரியங்களில் கவனம் செலுத்தி, திருப்பணி செய்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நிறைய திருக்கோயில்களுக்கு அடிப்படை வசதிகள் வேண்டுமென்று மாவட்ட அமைச்சரிடம் விண்ணப்பம் கொடுத்திருந்தேன். அவர்களும் செய்து கொடுப்பதாகக் கூறியுள்ளார்கள். அவர்கள் அதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நிறைய கோயில்கள் பழுதடைந்து, இடிந்து விழும் நிலையில் உள்ளன. இத்திருக்கோயில்களில் திருப்பணி செய்வதற்கு பொது மக்களுக்கு அனுமதி கொடுத்தால், திருப்பணி செய்வதற்குத் தயாராக உள்ளார்கள். ஏனென்றால், திருப்பணி செய்வதற்கு 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கோயில்கள் நிறைய உள்ளன, அனுமதி வேண்டி சென்னை ADC அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இம்மனுக்களை பரிசீலனை செய்து அனுமதி வழங்குவதற்கு பல ஆண்டுகள் ஆகின்றன. குறைபாடுகளை நீக்குவதற்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள JC அனுமதியளித்தாலே சீக்கிரத்தில் கோயில்

திருப்பணியை செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இத்திருக்கோயில் திருப்பணிக்கு அரசு எந்தவித பொருளுதவியும் வழங்குவதில்லை. ஆனால், பொது மக்கள் திருப்பணியை செய்வதற்கு ஏகப்பட்ட நிபந்தனைகள் போடுகிறார்கள். ஆகவே, நிறைய கோயில்களில் திருப்பணி நடைபெறாமலேயே இருக்கின்றது. தமிழகத்திலுள்ள பழமை வாய்ந்த, நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கோயில்களை கணக்கெடுத்து, திருப்பணி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இல்லையெனில் பொது மக்கள் செய்வதற்கு வழிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழநி பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு வழித்தடங்கள், பாதைகள் அமைத்துத் தர வேண்டும். இதில் மிக மிக பிரசித்தி பெற்ற எடப்பாடி காவடி எங்கள் ஊர் வழியாகத்தான் செல்கிறது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் நடை பயணமாக வருகிறார்கள். இவர்கள் வரும்போது சாலை போக்குவரத்திற்கு பாதை மாற்றி அமைத்துத் தர வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு நடைபாதை அமைத்துத் தர வேண்டும். ஏனென்றால் ஆண்டுதோறும் கோயிலுக்குச் செல்பவர்களுக்கு ஈரோடு போகும் வழியில் ஏதாவது அசம்பாவிதம் நடந்துகொண்டே இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஊரிலிருந்துதான் பக்தர்கள் அதிகமாக வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி நடைபாதை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மதுரையிலிருந்து பழனிக்கு பாதை அமைத்திருப்பதைப் போன்று, ஈரோடு, கோயம்புத்தூரிலிருந்து பழனிக்கு பக்தர்கள் செல்வதற்கு நடைபாதை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்டிற்கு 1,000 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு விழா நடைபெற வேண்டுமென்று சொன்னார்கள். அம்மா அவர்கள் செய்து காட்டினார்கள். ஆனால், அம்மா வழிவந்த நீங்கள் ஏன் இதைச் செய்வதில்லை என்று கேட்கிறேன்.

எனது தொகுதி, தாராபுரம் அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் நன்கொடையாளர் உதவியுடன் Safety Locker நான்கு இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது. அதில் 10 பேர்களுடைய

Cell Phone எண்கள் பதிவு செய்யப்பட்டன. அதைத் தொட்டாலே 10 பேர்களுக்கும் phone call செல்லும் வகையில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. அப்படி இருந்தும், உற்சவமூர்த்தி சிலைகளை கோவைக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். பின்பு பலமுறை கேட்டும், பதில் ஒன்றும் சரியாகக் கிடைக்கவில்லை. பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், எங்கள் மாவட்ட அமைச்சர் மூலமாகவும் மனுக்கள் கொடுத்து, பரிந்துரை செய்த பின்புதான் சிலைகள் கொண்டு வரப்பட்டன. இதுபோன்ற பாதுகாப்புப் பெட்டகம் இருக்கின்றபோது, எங்களுக்கு அனைத்து வசதிகளும் இருக்கின்றபோது, சிலைகள் எப்படி எடுத்துச் செல்லப்பட்டன என்று தெரியவில்லை. இதுபோன்று காரியங்கள் நடப்பதால் மற்றவற்றிற்கு நண்பர்களிடமும், நன்கொடையாளர்களிடமும் நன்கொடை கேட்கும்போது, நன்கொடை அளிக்க அவர்கள் கொஞ்சம் தயங்குகிறார்கள். ஆகவே, இதுபோன்ற வசதிகள் உள்ள கோயில்களில் நல்லவை நடக்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இத்திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம். அதற்கு கூடிய விரைவில் எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் கிராமப்புற திருக்கோயில் திருப்பணிக்கான நிதியை அம்மா அவர்கள் 50,000 ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தார்கள். இத்திட்டத்தினை நல்லமுறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில், நிறைய திருக்கோயில்களுக்கு நிதிகேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். ஆனால், ஆண்டிற்கு ஐந்து அல்லது ஏழு கோயில்களுக்கு மட்டுமே நிதி தருகின்றீர்கள். இது போதாது. எங்கள் தொகுதியில் கருணை அடிப்படையில் ஆண்டிற்கு 50 கோயில்களுக்காவது நிதி தர வேண்டும். இதற்கு எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், அம்மா அவர்கள் நலிவடைந்த திருக்கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கி வந்தார்கள். ஆனால், நீங்கள் இதைச் செயல்படுத்துவதில்லை. ஆகவே, நலிவடைந்த திருக்கோயில்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் அன்னதானத் திட்டம் அனைத்து கோயில்களிலும் நல்லமுறையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினை கிராமப்புற திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தினால் நன்றாக இருக்கும். கிராமப்புற திருக்கோயில்களுக்கும் இத்திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இதன்மூலம் கிராமத்தில் உள்ள ஆதரவற்ற முதியவர்கள் மற்றும் மிக மிக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பயனடைவார்கள். அம்மா அவர்கள் இருக்கும்போது முதியவர்களுக்கென்று அங்கன்வாடி மையங்களில் மதிய உணவு அளித்து வந்தார்கள். ஆனால், அது இப்போது நடைமுறையில் இல்லை என்று நினைக்கிறேன்.

அதேபோல, தாராபுரம் காடு அனுமந்தராய சுவாமி திருக்கோயிலில் நாள்தோறும் 50 பேர்களுக்கும், சனிக்கிழமை அன்று 200 பேர்களுக்கும் அன்னதானம் அளிக்கப்படுகிறது. சனிக்கிழமை மட்டும் இத்திருக்கோயிலுக்கு 1,000 முதல் 2,000 பேர் வருகின்றனர். ஆகவே, இத்திருக்கோயிலில் சனிக்கிழமை மற்றும் விசேஷ நாட்களில் 500 பேர்களுக்கு அன்னதானம் அளிக்கும் வகையில், இத்திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஏலம் விடப்படுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறை என்று இருக்கும் இந்த ஏல முறையை 3 ஆண்டுக்கு ஒரு முறை என்று வைத்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால் பருவ மாற்றங்களாலும், தண்ணீர் பிரச்சினைகளாலும் ஏலம் விடுவதில் சரியான வசூல் வருவதில்லை. ஆகவே, மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை நிர்ணயம் செய்தால் மக்களுக்கும் வசதியாக இருக்கும், திருக்கோயிலுக்கும் வருமானம் அதிகரிக்கும். கோயில் நிலங்களில் வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு வாடகை ரசீது அளித்து வசூலித்தால் வருமானம் அதிகரிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களில் 5 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றும் பணியாளர்களை தகுதி அடிப்படையில் பணி நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். அலுவலகத்தில் காலியாகவுள்ள கணினி இயக்குவோர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்றும், மேலும் பணியில் இருப்பவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில் ஊழியர்களுக்கு ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில் பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு துறை ரீதியாக வழங்க வேண்டிய தொகையை வழங்க வேண்டும் என்றும், அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில் காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்றும், இத்துறை சார்ந்தவர்கள் பணி நிறைவு அடைந்துவிட்டால் அவர்களுக்கு பென்சன் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பிரசித்தி பெற்ற கண்ணகி கோயிலுக்கு வழிப்பாதை அமைத்திட கேரள அரசு நிதியொதுக்கீடு செய்திருப்பதைப் போன்று, நமது அரசும் வழித்தடங்கள் அமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுத்த தமிழ், தனித் தமிழ் பேச வேண்டும் என்பதன் அடிப்படையில் சங்கத் தமிழ் வளர்த்த மதுரையிலே அகர முதலி திட்டம் தொடங்கப்பட்டது. இதன்மூலம் இதற்கான நூல்களும் வெளியிடப்பட்டன. சமீபகாலமாக எந்த நூல்களும் வெளியிடப்படவில்லை. அகர முதலி திட்டம் செயல்பாட்டில் தற்போது இருக்கின்றதா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) பேசி முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 1–50

மதுரையில் 1981 ஆம் ஆண்டு 5–வது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது, எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படும் என்றும், தமிழ்த் தாய் சிலை நிறுவப்படும் என்றும் அறிவித்தார்கள். அதேபோல், மறைந்த முதல்வர் அம்மா அவர்கள், 100 கோடி ரூபாய் மதிப்புள்ள தமிழ்த் தாய் சிலை நிறுவும் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். தமிழறிஞர்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டும். மூத்த தமிழறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி அளிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். நன்றாகப் பேசி உரையை முடியுங்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *தமிழ்வழிக் கல்வி பயின்றவர்களுக்கு அரசு பணிகளில் முன்னுரிமை வழங்குவதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டும். தமிழக சட்டப் பேரவையில் புதிய சட்டமன்ற உறுப்பினர்களாக வருபவர்களுக்கு பேச்சுப் பயிற்சி மற்றும் சபை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளும்வகையில் பயிற்சி வழங்க வேண்டும். சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்தபோது தமிழ் மொழியை செம்மொழியாக அறிவித்தது. அப்போது லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் செம்மொழிக்காக ஓர் இருக்கை நிறுவிட வேண்டும் என்று பலபேர் நிதியுதவி வழங்கினார்கள். அதுசம்பந்தப்பட்ட செயல்பாடு தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரை முடிந்ததா?*

திரு. வி.எஸ். காளிமுத்து: *இளைஞர் நலத் துறை பற்றிப் பேச வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *கடைசி பக்கமா? நன்றியோடு உரையை முடியுங்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் தமிழ்நாட்டில் தலைசிறந்த, ஆற்றல்மிக்க, திறமைவாய்ந்த அமைப்புகளை உருவாக்கி, விளையாட்டில் பங்கேற்பை ஏற்படுத்தி, முதன்மை நிலையை அடைவதற்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல்பட வேண்டும். இளம் வயதில் விளையாட்டில் சிறந்து விளங்கும் இளைஞர்களின் திறமைகளைக் கண்டறியும்போது கிராமப்புற மாணவர்களைக் கண்டறிந்து பயிற்சி மற்றும் இதர உதவிகளை வழங்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு பயிற்சி அளித்து, அதில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஏனெனில், நகரத்திலுள்ள பள்ளிகளில் மாணவ, மாணவியர் பயிற்சி எடுப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன. கிராமப்புறங்களில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அம்மா அவர்கள் அறிவித்த உடற்பயிற்சி மையங்களை அமைக்க வேண்டும்.*

எங்களது திருப்பூர் மாவட்டத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய மாவட்ட அளவிலான நீச்சல் குளம், பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள், ஆடுகளம் மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய பயிற்சி மையம் ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டும். கொள்கை விளக்கக் குறிப்பில் திருப்பூர் மாவட்டம், வேலூர் மாவட்டம் இரண்டையும் நீக்கியுள்ளீர்கள். ஆகவே வரும் ஆண்டில் எங்கள் திருப்பூர் மாவட்டத்தில் விளையாட்டரங்கம் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மற்றவற்றைக் கொடுங்கள். பதிவு செய்துகொள்ளலாம். 17 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இல்லை, தயவுகூர்ந்து நன்றி சொல்லுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: திருப்பூர் மாவட்டத்தில் கபடி விளையாட்டு அதிகளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாநில அளவில் பெண்கள், ஆண்கள் என இருபாலருக்கும் அடிக்கடி சில தனியார் அமைப்புகள் மூலமாக அதிக அளவில் போட்டிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசுத் தொகை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோன்று மற்ற துறைகளிலும் விளையாட்டு வீரர்கள் நிறையபேர் இருக்கிறார்கள், அவர்களை. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நல்லவர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு நிமிடங்கள் அதிகமாக எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனி நன்றி. (குறுக்கீடு) பேசுங்கள். பேசுங்கள்.

திரு. வி.எஸ். காளிமுத்து: மேலும் எனது தொகுதியைச் சேர்ந்த வீரர் பளு தூக்கும் போட்டியில் மாநில அளவில் முதல் இடம்

பிடித்துள்ளார். அதேபோன்று பெண் வீராங்கனை ஒருவர் பளு தூக்கும் போட்டியில் கலந்துகொள்வதற்காக ஜப்பான் செல்வதற்குத் தேர்வு செய்யப்பட்டிருந்தார். ஆனால், அவருக்கு அரசு உதவி இல்லாததால், நண்பர்களின் உதவியுடன் அவரை ஜப்பான் அனுப்பி வைத்து வெற்றிபெறச் செய்தோம். கிராமங்களிலுள்ள இதுபோன்ற திறமைசாலிகளுக்கு நமது விளையாட்டுத் துறையின் சார்பாகப் பல்வேறு உதவிகளைச் செய்து, ஊக்கப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, எனக்குப்பேச வாய்ப்பளித்த துணை சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், பதிலுரையில் ஒன்றாகச் சேர்த்து விளக்கம் சொல்லிக்கொள்ளுங்களேன். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர், திருக்கோயில்களில் அடிப்படை வசதிகள் இல்லை, கடந்த காலங்களில் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருந்ததாகக் கூறினார். ஆதி திராவிடர் மற்றும் கிராம திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்ய ஆரம்ப நிலையில் 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, அதை 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தி, தமிழகத்தில் அடிப்படை வசதிகளில்லாத 9,912 திருக்கோயில்களைப் புனரமைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல நிலையில் திருப்பணி செய்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நூறாண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில்களைப் புனரமைக்க சிறிது காலதாமதம் ஏற்படுகிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார். புராதனமான மற்றும் தொன்மையான திருக்கோயில்களில் புனரமைப்புத் திருப்பணிகள் மேற்கொள்ளும்போது, பழமை மாறாமல் அவற்றைப் புதுப்பித்தலின்பொருட்டு, தொல்லியல் துறையின் கருத்தைப் பெற வேண்டிய நிலை உள்ளதாலும், மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டிய

நிலை உள்ளதாலும், மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள், கட்டுமான வேலைகள், ஸ்தபதி வேலைப்பாடுகள் போன்றவை மேற்கொள்ளும்போதும் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. மேலும், இந்தக் காலதாமதத்தைப் போக்குவதற்காகக் கூடுதலாக ஸ்தபதிகள் நியமிக்கப்பட்டு மிக விரைவாக திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடம் இருங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எழுத்துப் பிழையா, சொல்லுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்களிடத்திலே, (குறுக்கீடு) எழுத்துப் பிழையில்லை. பிழை இருக்கிறது. அது ஒரு பிழைகூட இல்லை. விளக்கத்திற்காக கேட்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, திருக்குறள் புத்தகம் வைத்திருக்கிறார்கள். இதில் திருவள்ளுவரின் வேறு பெயர்கள் அப்படியென்று செந்தாப்போதார் என்று ஒரு பெயரை எழுதியிருக்கிறீர்கள். அப்புறம் கடைசி பக்கத்தில் செந்தாப்போதகர் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அறிந்த வரையில் செந்தாப்போதார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இதென்ன செந்தாப்போதகர்! போதகர் என்றால் யார் அவர்* Priest–*ஆ? வேறு ஏதாவது இருக்கிறதா?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அச்சுப் பிழைதான். அதில் ஒன்றும் தவறில்லை. 'செந்தாப்போதார்' தான். செந்நாப்போதகர் என்று வைத்துக்கொள்ளலாம். அதில் ஒன்றும் தப்பு கிடையாது. . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், இதனால்தான் நான் முதலிலே எழுத்துப் பிழையா என்று கேட்டேன்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *உலகத்திற்கே போதனை சொன்ன திருவள்ளுவரை செந்நாப்போதகர் என்று சொல்வதில் ஒன்றும் தவறும் கிடையாது என்று நினைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

> *"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி*
> *மக்களின் மனதில் நிற்பவர் யார்?"*

என்ற அற்புதமான பாடலைப் பாடி, அந்தப் பாடலுக்கு இலக்கணமாக வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல், வான் மழை வற்றினாலும், வாரி வழங்குவதில் என்றும் வற்றிப்போகாத தலைவனாக, (மேசையைத் தட்டும் ஒலி) பிறருடைய துன்பங்களையெல்லாம் தன் துன்பமாகக் கருதி, தன்னுடைய பொருட்களையெல்லாம் பிறருக்குக் கொடுத்து உதவி, அதன்மூலம் தனி இன்பம் கண்டிட்ட தலைவனாக, தன் இறுதி மூச்சு உள்ளவரை புகழோடு வாழ்ந்து மறைந்த மன்னனாக, புன்னகை மன்னனாக, பூவிழிக் கண்ணனாக, பொன்மனச் செம்மலாக வாழ்ந்து, மறைந்தும் மறையாமல் இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை மக்களின் இதயக் கனி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆன்மாவை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக

மந்திரத்தை நாட்டு மக்களுக்குச் சொன்னதோடு மட்டுமல்லாமல், அதன்படி மக்களுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்ததோடு மட்டுமல்லாமல், என் பெற்றோர் வைத்த பெயர்கூட எனக்கு மறந்து போகின்ற அளவுக்கு, நீங்கள் அம்மா என்று அழைக்கின்றபோது உருகித் தவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக நான் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். நான் அப்படி வாழ்கின்ற பொழுதை உங்களுக்காகவும், கழகத்திற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் உழைப்பேன்' என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், செயலிலும் செய்து காட்டி, 'எங்கள் குடும்பத்தில் யாரும் 60 வயது வரை வாழ்ந்தது இல்லை. இனி நான் வாழப்போகும் ஒவ்வொரு நொடியும் தமிழுக்காக, தமிழக மக்களுக்காக, அவர்களின் உரிமைக்காக தொடர்ந்து பணியாற்றுவேன்' என்று அறிவித்ததோடு, அதன்படி வாழ்ந்து, உடலால் நம்மை விட்டுப் பிரிந்திருந்தாலும் உணர்வால் இன்னும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 2–10 மணிக்கு நீங்கள் உங்கள் உரையை முடித்து விட வேண்டும்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குள் என்னுடைய உரையை முடித்து விடுகிறேன். 'ஊர் கூடி தேர் இழுத்தும் தேர் நகர மறுக்கின்றது; எங்கள் கைகள் சோர்ந்துபோய் வலுவிழந்து போவதற்குள் எழுந்து வா நீ!' என கவிதைமூலம் புலம்பல் சத்தம் கேட்கும் தமிழகத்தில், எங்கள் அம்மாவின் ஆட்சித் தேரோ ஊர்களை மட்டுமல்ல, தமிழ்நாட்டை மட்டுமல்ல, குஜராத் மாநிலம் வரை ஓடுகிறது, ஓடி வருகிறது. 60 ஆண்டுகளுக்கு முன்னால் திருடு போன விலை மதிப்பற்ற பல நூறு கோடி பெறுமானமுள்ள தஞ்சை மண்ணை ஆண்ட மாமன்னன் ராஜராஜன் சிலையையும், அவர் மனைவி லோகமாதேவி சிலையையும், மீட்டு வந்து, தஞ்சை பெரிய கோயில் வரை எங்கள் அம்மாவின் ஆட்சித் தேர் எடுத்து வருகின்றது.

'எனக்குப் பின்னாலும் நூறு ஆண்டுகள் எங்கள் இயக்கம் தமிழகத்தை ஆளும்' என்று எடுத்துச் சொன்ன எங்கள் அம்மாவின் ஆட்சித் தேரை ஓட்டிச் செல்கின்ற அரிய பணியைச் செய்து வருவதோடு, காவேரி, தூத்துக்குடி, பிளாஸ்டிக் இல்லாத புதிய தமிழகம் என சத்தமில்லாமல் பல அரிய சாதனைகளைப் படைத்து

வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சேலம் தந்த சொக்கத் தங்கம் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். ஜல்லிக்கட்டு நாயகனே என்று பட்டம் சூட்டி நாங்கள் அழைத்து மகிழ்ந்தாலும், வேண்டாம், இந்தப் புகழ் மாலை என்று தட்டி விடுகின்ற எளிமையின் பிறப்பிடம்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: கழகத்தை வீழ்த்த புறப்படுகின்ற துரோகத்தை வெட்டி வீழ்த்துவேன் என்று சபதம் எடுத்ததோடு மட்டுமல்லாமல், அம்மாவின் ஆட்சித் தேரை திறம்பட ஓட்டிச்செல்ல மாண்புமிகு முதலமைச்சரின் தோளோடு தோள் சேர்த்து, உற்ற துணையாக பணியாற்றி வருவதோடு, கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக, நம் சபையின் அவை முன்னவராக சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர், பாண்டிய நாடு கண்டெடுத்த பத்தரை மாற்றுத் தங்கம், எங்கள் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் இயக்கத்திற்கு சோதனை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அந்த துரோகக் கூட்டம், இயக்கம் துவங்க தென் மண்டலம் வந்து தொடர்ந்து கூட்டம் நடத்தியபோது, தென் மண்டல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடலேறுகளை, பொறுப்பாளர்களைத் தொடர்ந்து கட்டிக்காத்து அரவணைத்ததோடு மட்டுமல்லாமல், கழக அம்மா பேரவை சார்பில் மதுரையில் இளைஞர்கள் பெருவிழா நடத்தியும்; இலட்சக்கணக்கான மக்களைத் திரட்டி, மாண்புமிகு அம்மாவின் 70 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழக அம்மா பேரவையின் சார்பில் மதுரையில் 120 ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தியும், கழகத் தோழர்களுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி, தென் மண்டலத்தில் கழகத்தைக் கட்டிக்காத்த மாண்புமிகு வருவாய்த் துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், எங்கள் அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மதுரை மண்டலத்தில் எதிரிகளாலோ, துரோகிகளாலோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் குன்றுமணி அளவுகூட சேதாரமில்லாமல் பார்த்துக் கொண்டதோடு, கழகத் தொண்டர்களை, நிருவாகிகளைத் தொடர்ந்து சந்தித்து, அரவணைத்து கழகத்தை மதுரை மண்டலத்தில் கட்டிக்காத்து வருகின்ற எங்கள் மதுரை புறநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான எங்கள் அருமை அண்ணன் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்களையும் வணங்கி, இந்து சமய அறநிலையத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெண்களின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணற்ற பல திட்டங்களைக் கொண்டுவந்தார்கள். கிராமங்கள் அதிகம் சூழ்ந்துள்ள எனது மேலூர் தொகுதியில் பெண் குழந்தைகள் 5—வது வகுப்புவரை படித்து முடித்த காலம் போய், இன்று அம்மாவின் திருமண உதவித் திட்டம், தாலிக்குத் தங்கம் போன்ற திட்டங்களால் 10—ஆவது வகுப்பு, 12—ஆவது வகுப்புவரை குழந்தைகளைப் பெற்றோர்கள் படிக்க வைக்கிறார்கள். மேலும், அம்மாவின் திட்டங்களின் பயன்களைப் பெற்றிடவும், அப்பெண் குழந்தைகளின் வாழ்க்கைத்தரம் உயரவும், கல்லூரிப் படிப்பு வரை படிக்க வைக்க விரும்புகின்றனர். மதுரை, திண்டுக்கல், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களை இணைக்கும் பகுதியாக எனது மேலூர் தொகுதியில், கொட்டாம்பட்டி விளங்குகிறது. எனவே, கொட்டாம்பட்டியில் ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த 6 வருடங்களாக எனது மேலூர் தொகுதிக்கு முல்லைப் பெரியாறு பாசன நீர் ஒருபோக சாகுபடிக்கு வரவில்லை. எனவே, மேலூர் பகுதி விவசாயக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், எங்கள் பகுதி விவசாயிகளின் நலன் கருதி, முல்லைப் பெரியாறு அணையிலிருந்து கள்ளந்திரி வரை முதல்போக சாகுபடிக்குத் தண்ணீர் திறக்கும் அதே நாளில் மேலூர் கடைமடை பகுதியான வெள்ளலூர் நாடு, குறிச்சிப்பட்டி வரை ஒருபோக சாகுபடிக்கும்

தண்ணீர் திறந்து விடும்படி மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசின் 6 ஆம் வகுப்பு பாடப் புத்தகத்திலிருந்து சுதந்திரப் பேராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் பாடம் விடுபட்டுள்ளதாக அறிகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் இதனைக் கனிவுடன் பரிசீலனை செய்து சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாறு, பாடப் புத்தகத்தில் மீண்டும் இடம்பெற பரிசீலிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் தியாகத்தை இளைய தலைமுறையினருக்குக் கொண்டு செல்ல வேண்டுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பற்றிய பாடங்கள் இந்தக் கல்வியாண்டிலே 7 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இதுவரை வந்த செய்திகளில் விடுபட்ட அவருடைய அரசியல் வாழ்க்கை, தனிப்பட்ட வாழ்க்கை, அவருடைய தியாகங்கள் அனைத்தையும் உள்ளடக்கியவாறு விரிவாக, முழுமையாக 7 ஆம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது என்ற செய்தியை மகிழ்வோடு மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *7 ஆம் வகுப்பு பாடத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் வாழ்க்கை வரலாறு சேர்க்கப்பட்டுள்ளது என்று அறிவித்த மாண்புமிகு பள்ளி கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதனை எடுத்துச்சொன்ன மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், தென் மண்டல மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சீர் மரபினர் உட்பிரிவில் 68 ஜாதியினர் உள்ளனர். இவர்கள் 1989 வரை DNT *என்ற பிரிவில் சலுகைகள் பெற்று வந்தனர். மத்திய அரசின், அரசாணை எண் 3110/1979–ன்மூலம்* DNC *ஆக மாற்றிவிட்டனர். அப்பொழுது முதல் இதுவரை இழந்த சலுகைகளை மீட்பதற்காக, இந்தச் சமுதாய மக்கள் பல்வேறு வகைகளிலே போராடி வருகிறார்கள். இந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் கனிவுடன் பரிசீலித்து, அவர்களுக்கு* DNT*–ல் கிடைக்கப்பெற்ற சலுகைகளை மீண்டும் பெற்றுத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

அனைத்து வசதிகளையும் கொண்ட தமிழகத்தின் மையப் பகுதியான மதுரை மாவட்டத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைத்துத் தர உதவி செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காலையிலிருந்து* A.C. *கொஞ்சம் வேலை செய்யாததனால், பின்னால் உட்கார்ந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் ** மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இங்கு*

*** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

முன் வரிசையிலும் அப்படித்தான் இருக்கிறது. எனவே, அதைச் சரி செய்யுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): அதெல்லாம் சரி செய்யப்பட்டு வருகிறது. **இருக்கிறது என்று சொன்னதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) A.C. சரி செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இட நெருக்கடியோடு இயங்கி வருகின்ற மேலூர் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி, புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலூர் நகராட்சியில் உள்ள தினசரி காய்கறி மார்க்கெட் இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது. காலியிடம் அதிகம் உள்ள அந்த இடத்தில், புதிய கடைகள் கட்ட உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள குளங்களைத் தூர் வாரியும், அக்குளங்களைச் சுற்றி பேவர் பிளாக் கற்களைப் பதித்து, நடைபாதை அமைத்துத் தருமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் நகராட்சி விரிவாக்கப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி, சாலை வசதி செய்து தருமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு வேண்டுகிறேன்.

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி, வணிக வளாகங்கள் கட்டியும், கொட்டாம்பட்டி தினசரி காய்கறி மார்க்கெட்டில் புதிய கடைகளைக் கட்டி வணிக வளாகங்களை ஏற்படுத்தித் தருமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மேலூர் தொகுதியில் உள்ள கம்பூர், சேக்கிப்பட்டி, குன்னாரம்பட்டி, கேசம்பட்டி, பட்டூர், அய்யாபட்டி ஆகிய ஊராட்சிகளில் அடிக்கடி மின் பழுது ஏற்படுகிறது. எனவே, இந்தப் பகுதிகளுக்கு சீரான மின் விநியோகம் செய்திட ஒரு துணை மின் நிலையத்தை கம்பூர் ஊராட்சியில் அமைத்திட உதவிபுரியுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் வழியில் அயராது பணியாற்றும் கழக அரசு, தமிழ் வளர்ச்சித் துறைக்காக எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

மொழி என்பது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கான கருவி. உலகம் முழுவதும் சுமார் 7,000 மொழிகள் என்ற அளவில், அதில் பாதி அளவே எழுத்திலும், பேச்சிலும், நூல் வடிவிலும் உயிர்ப்புடன் உலவி வருகிறது. அதில் தமிழ் மொழி தலையாய மொழி என்றுகூட சொல்லலாம்.

> "யாமறிந்த மொழிகளிலே, தமிழ் மொழிபோல்
> இனிதாவது எங்கும் காணோம்"

என்று முழங்கினார் மகாகவி பாரதியார். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்றார் கணியன் பூங்குன்றனார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் உலகுக்கு எடுத்துச் சொன்னது தமிழ் மொழி. மேலும், எண்ணற்ற சான்றோர்களும், ஆன்றோர்களும், ஆராய்ச்சியாளர்களும் தமிழ் மொழியின் இனிமையையும், வளமையையும் பல்வேறு நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

> "தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்
> தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்."

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பிற்பகல் 2–10

மேலும், உலகளவில் பேசப்படும் 30 மொழிகளில் தற்போது, தமிழ் மொழி 14 ஆம் இடத்தில் இருப்பதாக மொழி ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். வருங்காலத்தில் தமிழ் மொழி பேசுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பல்வேறு

திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள். உலகத் தமிழ் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், தஞ்சை பல்கலைக்கழகம், தமிழர் வளர் மையம், தமிழ் பண்பாட்டு மையம் ஆகியவற்றின்மூலம், உலக மொழிகளில் 10 ஆம் இடத்திற்குள் தமிழ் மொழியைக் கொண்டுவரும் நோக்கத்தோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான கழக அரசு, தொடர்ச்சியாக பல திட்டங்களைத் தீட்டி, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆலயங்கள் என்பது சமுதாயத்தின் பொது சொத்துகளாகும்; சமூக, பொருளாதார வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனிதத் தலங்களாகும் என்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் வாய்மொழிக்கேற்ப, அவர்களின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான கழக அரசு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில் எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழகத்தின் திருக்கோயில்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணற்ற திட்டங்களுடன் வழங்கிய அருளாசியின் நீட்சியாக, பக்தர்களின் உள்ளக் கிடக்கையை பகிர்ந்து, உணர்வுகளுக்கு உரமேற்றும் வகையில், திருக்கோயில்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை தமிழக அரசு தொடர்ந்து செவ்வனே செய்து வருகிறது.

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின்கீழ், இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை மேலாண்மை செய்வதற்காக, பரம்பரை நிருவாகத்தில் இல்லாத ஒவ்வொரு திருக்கோயில்களுக்கும் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் காலை 8–00 மணி முதல் இரவு 10–00 மணி வரை எப்போது வேண்டுமானாலும் உணவு அருந்தும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் செயல்படுத்திய உன்னதத் திட்டமான, 'நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும்

திட்டம்' என்ற அற்புதமான திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான கழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, எனது சொந்த ஊரான அழகர்கோவிலில் உள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர் வசதியை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது, அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, கள்ளந்திரி கிராமத்தில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் வைப்புப் பணியாக மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு கிராமப்புற கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவியை வழங்கிட 'கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டம்' என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர், இறுதியாக நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பாக, பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், அரசு உதவிபெறும் அறநிலையத் துறை பள்ளிகளைத் தரம் உயர்த்தும்பட்சத்தில், அரசு உதவிபெறும் பள்ளிகளாகவே செயல்படுத்த, ஆணையிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அழகர்கோவில், மேற்கு கோட்டைக்கு வெளிப்புறம் உள்ள இடங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் சுற்றுச் சுவர் கட்டப்பட்டது. அங்கே 6—வது கண்மாயும், கண்மாய்க் கரையில் அழகர்கோவில், கோட்டைவாசல் கிராம மக்களுக்கான சுடுகாடும் அமைந்துள்ளது. மேலும், எனது கிராம மக்கள் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பி, அவற்றுக்கு தண்ணீர்

காட்டுவதற்காக இந்த 6—வது கண்மாயைப் பயன்படுத்தி வருகின்றார்கள். வனச் சாலையில் போடப்பட்டிருக்கும் இரும்பு கேட்டை பொதுமக்கள் நலன் கருதி, அகற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாணபுமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோயில்களின் புராதனம் பாதிக்கப்படக் கூடாது என்ற நிலையில், திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக தொல்லியல் துறையிடம் அனுமதியைப் பெறுவதால் பணிகள் தாமதமாகின்றன. திருக்கோயில்களின் திருப்பணிகளைச் செய்ய ஆணை வழங்கி, ஸ்தபதி பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் நகரின் மத்தியில் பழமையான, சிறப்பு வாய்ந்த சிவன் கோயில் ஒன்று உள்ளது. அந்த சிவன் கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற உதவிபுரியுமாறு மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—15

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முருகனின் ஆறாவது படைவீடான பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலில் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் நிறுத்துமிடத்தை வனத் துறை அனுமதியுடன் அமைத்துத் தர மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் உள்ள தென்திருப்பதி என்றழைக்கப்படுகின்ற அழகர்கோயிலுக்கும், புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி கோயிலுக்கும் அதிக அளவில் கிராம மக்கள் சாமி தரிசனம் செய்ய சென்று வருகிறார்கள். எனவே, பொதுமக்களின் நலன் கருதி, அழகர்கோயிலிலிருந்து புலிப்பட்டி, கேசம்பட்டி, அலங்கம்பட்டி, கொட்டாம்பட்டி, புழுதிபட்டி வழியாகப் பொன்னமராவதிக்குப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அழகர்கோயில், பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலில் உள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று

[திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்] [*2018 ஜூன் 13*

கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில் செக்யூரிட்டி பணி தற்போது தனியார் நிறுவனங்களிடம் விடப்பட்டுள்ளது. அதே சம்பளத்தை தொகுப்பு ஊதியமாக வழங்கி, தினக்கூலி அடிப்படையில் தற்காலிகப் பணியாளர்களாக உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து. . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளை கொடுத்துவிடுங்கள். அவற்றை பதிவு செய்துகொள்ளலாம். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *இளநிலை பாரா காவலர் போன்ற பணிகளிலும் பணிநியமனம் செய்ய ஆவன செய்யுமாறு அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கும், இளைஞர் நலனுக்கும் எண்ணற்ற சாதனைகளை தொடர்ந்து செய்து வருகின்றது. விளையாட்டு என்பது ஒரு மனிதனை ஒழுக்கத்துடனும், ஆரோக்கியத்துடனும், ஆக்கத் திறனுடனும் உருவாக்கி, வாழ்க்கையில் எந்தக் கடினமான சூழ்நிலைகளையும் எளிதில் எதிர்கொள்ளும் ஆற்றலை வழங்குகிறது.

தமிழ்நாடு உடற் கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், உடற் கல்வியியலின் தரத்தினையும், கல்வியினையும் மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு, விளையாட்டுத் துறைக்கு 2018–2019 ஆம் நிதியாண்டில் 191 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இத்துறை மேன்மேலும் வளர வழிவகை செய்திருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன்.

மேலும், விளையாட்டு வீரர்களின் திறமையை மேம்படுத்திக்கொள்ளவும். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர், மூன்றாவது கட்டத்திற்கு வந்துவிட்டீர்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு பக்கம்தான் இருக்கிறது,*

உரையை முடித்துவிடுகிறேன். விளையாட்டு உட்கட்டமைப்புகள் மிகவும் இன்றியமையாததாகும். வளர்ந்துவரும் விளையாட்டு வீரர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சாதனைகள் புரிவதற்காக தமது பயிற்சிக்கு சர்வதேச தரத்திலான விளையாட்டு உட்கட்டமைப்புகளை அணுக வேண்டியது அவசியமாகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கொண்டு வந்த அற்புதமான திட்டம், 'மழைநீர் சேகரிப்புத் திட்டம்'. இத்திட்டத்தின்மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததை தமிழ்நாடு கண்கூடாகப் பார்த்தது. எனவேதான், பாரதப் பிரதமர் அவர்கள், இத்திட்டம் இந்தியாவிற்கே முன்னோடித் திட்டம் என்று தெரிவித்து, ஏனைய முதலமைச்சர்களும் உடனே இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லி, அம்மா அவர்களைப் பாராட்டினார்கள். இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலம் என்ற பெருமையை (மேசையைத் தட்டும் ஒலி) நிலைநாட்டும் வகையில், 2019 ஜனவரி 1 ஆம் தேதி முதல் நெகிழி, அதாவது, பிளாஸ்டிக் இல்லாத புதிய தமிழகத்தை உருவாக்கும். வண்ணம், 'பிளாஸ்டிக் இல்லாத தமிழகம்' என்ற திட்டத்தைக் கொண்டு வந்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அன்புத் தம்பி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு இன்று உலகமே பாராட்டு தெரிவிக்கின்றது.

இப்படி, பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் எங்கள் கழக அரசுக்கு தமிழக மக்கள் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளார்கள். எனவே, தமிழகத்தில் வரவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியை தமிழக மக்கள் எங்களுக்குத் தர தயாராக இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்பளித்த அரசு கொறடா அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியபுள்ளான் அவர்கள் சட்டமன்றத்திலே தன்னுடைய

கருத்துகளை வழங்குகின்றபொழுது, தேசியத் தலைவராக இருக்கிற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய வரலாறு 6 ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் இடம் பெறவில்லை என்று இங்கே குறிப்பிட்டார். நேற்றையதினம் தென் மாவட்டத்தினுடைய அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அருகில் இருக்கின்றபொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அவர்கள் தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்துகின்றபொழுது, இந்த அரசு வருகின்ற ஆண்டு, 7 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு 'தேசியம் காத்த செம்மல்' என்ற தலைப்பில் அவருடைய வரலாற்றைப் படைக்கின்ற அளவிற்கான பணிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குமுன் இருந்ததைக் காட்டிலும், அவர் நேதாஜியோடு இருந்து பணியாற்றியதையும், இந்திய இராணுவத்திற்கு எவ்வளவு உதவிகளைச் செய்தார் என்பதையும், பாடத் திட்டத்தில் அந்தக் கருத்துகள் இடம் பெறுகின்ற அளவிற்கு, ஒரு புதிய வரலாற்றை படைக்கின்ற அளவிற்கு, அதைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. வருகின்ற ஆண்டில் அதைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நேற்றையதினம் அந்த அமைப்பின் 6 தலைவர்கள் என்னைச் சந்தித்தார்கள். அந்தக் கருத்துகளை வெளியிட்டதற்குப் பின், அவர்கள் மகிழ்ச்சியோடு சென்றிருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், அங்கே அவரைப் போற்றி புகழ்ந்துகொண்டிருக்கின்ற அனைத்து மக்களுக்கும் இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், இன்னும் அவருடைய சிறப்பை மேலும் மேலும் உயர்த்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2—20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

***திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக நிதிநிலை அறிக்கை மற்றும் மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வழியில் அல்லும் பகலும்

அயராது உழைத்துக்கொண்டிருக்கின்ற, தமிழகத்தின் நாடித் துடிப்பை அறிந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பார் போற்றும் பண்பாளர், எனது அரசியல் வழிகாட்டி, கழகத்தின் செயல் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும்; (மேசையைத் தட்டும் ஒலி) என்னை இந்த இடத்தில் அமர்த்துவதற்குக் காரணமாக இருந்த, என்னை ஆளாக்கிக்கொண்டிருக்கிற திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர், எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர் ஐயா திரு. எ.வ. வேலு அவர்களுக்கும்; நான் வெற்றி பெறுவதற்கு எனக்கு வாக்களித்து தொடர்ந்து எனக்கு ஆதரவு அளித்துக்கொண்டிருக்கின்ற செங்கம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும், என் நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், உறவினர்களுக்கும், குடும்பத்தினருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை, தமிழ் வளர்ச்சி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்தை நான் பதிவு செய்வதற்கு அனுமதித்த எங்கள் கழகத்தின் செயல் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழக ஆட்சியில் தமிழ் வளர்ச்சிக்கு என்னென்ன செய்தார்கள் என்பதை நான் மொத்தமாகப் பேச வேண்டும் என்று சொன்னால் நீங்கள் நேரம் கொடுக்கமாட்டீர்கள் என்பதற்காக தலைப்பை மட்டும் சொல்லிவிடலாம் என்று நான் கருதுகின்றேன்.

1967 ஆம் ஆண்டு சென்னை மாநிலத்திற்கு முதன்முதலாக தமிழ்நாடு என பெயரிடப்பட்டது. 1967–ல் அரசுப் பேருந்துகளில் அய்யன் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் பொறிக்கப்பட்டது. 1967–ல் முதலில் திருக்குறள் கூறி சட்டமன்றப் பேரவை நிகழ்வே நடக்கின்ற நடைமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் கொண்டுவரப்பட்டது. 1968 ஜனவரி 2 ஆம் நாள் உலகத் தமிழ் மாநாட்டில் அய்யன் திருவள்ளுவர் சிலை உட்பட தமிழ் சான்றோர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிலை அமைக்கப்பட்டது. 1972–ல் தூத்துக்குடியில் வ.உ.சி. சிலை திறக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் பாரதியார்

அவர்களுக்கு நினைவு இல்லம் திறக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு கோட்டை திறக்கப்பட்டது. மெட்ராஸ் என்னும் பெயர் சென்னை என 30–9–1996 ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழறிஞர்கள், தமிழ் சான்றோர்களை ஊக்குவிக்கின்ற வகையில் 1997–ல் பாரதியார் விருதும், அம்பேத்கர் விருதும் வழங்கப்பட்டன. அதைத்தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள் பெயரில் விருதும், 2006–ல் பேரறிஞர் அண்ணா பெயரில் விருதும், காமராஜர் பெயரில் விருதும் நிறுவி, ஆண்டுதோறும் தமிழ் அறிஞர் பெருமக்களுக்கு விருதுகளை வழங்கிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. சூரியநாராயண சாஸ்திரி என்கின்ற தன்னுடைய பெயரை தமிழ் மீதுகொண்ட பற்றால் பரிதிமாற்கலைஞர் என்று மாற்றிக்கொண்ட தமிழறிஞர். அவர் மட்டுமல்ல, 150 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் பேசப்படுகின்ற மொழிகளிலே மூத்த மொழியான, தொன்மைமிக்க மொழியான தமிழ் மொழிக்கு செம்மொழி என்ற பெருமை வர வேண்டும் என்று பல முயற்சிகள் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைத் தொடர்ந்து பேராசிரிய பெருமக்கள், தமிழ் ஆய்வாளர்கள், தமிழ்த் துறை தலைவர்கள் என பல்வேறு தரப்பினர் இதற்காகப் பல போராட்டங்கள் நடத்தினார்கள். ஆனால், அப்போது அது கிடைக்கப்பெறவில்லை. தமிழினத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் மத்தியில் கூட்டணி ஆட்சியில் அமர்ந்திருந்த காரணத்தினால்தான் இன்றைக்கு "Classical language" ஆக தமிழ், செம்மொழி அந்தஸ்தை பெற்றிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன்.

பிற்பகல் 2–25

தமிழ் மொழி என முதற்குரல் கொடுத்த 'தமிழ்த் தாத்தா' என்று அன்புடன் அழைக்கப்படும், டாக்டர் உ.வே.சா. அவர்களுடைய பிறந்த நாளில், அவர் வாழ்ந்து, வளர்ந்த மயிலாடுதுறை, உத்தமதானபுரம் என்ற கிராமத்தில் உள்ள அவரது இல்லம் புதிதாகக் கட்டப்பட்டு, 2008 ஆம் ஆண்டு, திறக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் உடுமலை நாராயண கவி அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டது. சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் இனமானம் போற்றிய தமிழறிஞர் குன்றக்குடி அடிகளார் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டது. எட்டயபுரத்தில் அமுத கவி உமறுப்புலவர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டது. சேலம் மாவட்டம், கொல்லிமலையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, தமிழ்ப் பெயர்களையெல்லாம் சற்று நன்றாகப் பார்த்துவிட்டு வாருங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரி சிலை அமைக்கப்பட்டது. தருமபுரியில் அதியமான் கோட்டையில் ஒளவையாருக்கு நெல்லிக் கனி ஈந்த அதியமானுக்கு சிலை அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு எனப் பெயர் சூட்டக் கோரி உண்ணாவிரதம் இருந்து, உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை, தியாகிகள் மணிமண்டப முகப்பில் அமைக்கப்பட்டது. உலகத் தமிழ் மொழி செம்மொழி மாநாடு, கோவையில் 2010–ல் நடத்தப்பட்டது. செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் மைசூரிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதுமட்டுமல்ல, தலைவர் கலைஞர் அவர்கள் வழியிலே, எதிர்க்கட்சியையும், இந்த ஆட்சி இயங்குவதற்கு உறுதுணையாகவும், இருக்கின்ற எங்களையெல்லாம் ஆளாக்கிக் கொண்டிருக்கின்ற வருங்காலத் தமிழகத்தின் வசந்தத்தின் வழிகாட்டி, தளபதி அவர்கள், அமெரிக்காவில் இருக்கின்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் இந்த நாடு முழுக்க நிதி கேட்டபோது, கேட்காமலேயே தமிழ் வளர்ச்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூ.1 கோடியைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இருக்கை அமைவதற்கு உறுதுணையாக இருந்தவர், எங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன், தளபதி அவர்கள். அதனால்தான்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு முது மருத்துவர்கள் அமெரிக்காவில் இருந்தவர்கள், 2015–2016 ஆம் ஆண்டுகளில் தமிழகத்திற்கு வந்து, அநேகமாக அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்து, ஹார்வர்டு தமிழ் இருக்கைக்காக உதவி வேண்டுமென்று கேட்டபொழுது, 'உதவி அளிப்பேன்' என்று தேர்தல் வாக்குறுதியில் சொன்ன ஒரே தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, மீண்டும், அதே* Harvard Tamil Chair Inc.*–ஐச் சார்ந்தவர்கள் திரும்பி வந்து நிதி கேட்டபோது,* note *வைக்கப்பட்ட 48 மணி நேரத்தில் ரூ.10 கோடியை அளித்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிகழ்வுக்குப் பிறகு, உலகத் தமிழர்கள் அனைவரும், இந்த இருக்கை அமைந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் 9,280 பேர் தமிழுக்காக, தமிழ் ஆய்விருக்கைக்காக நிதி வழங்க பங்குபெற்றபொழுது, ஆறு மில்லியன் டாலர் நிறைவுபெற்றுவிடும் என்ற நிலையில் அவசரமாக, அப்பொழுதும்கூட, அரசியல் கட்சிகள் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்கு நிதியைத் தர முடியுமா என்று* e–mail *அனுப்பி, அதற்குப் பதில் வந்ததற்குப் பிறகு, இறுதியாகத் தந்த ரூ.1 கோடி, திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து வந்த ரூ.1 கோடி. அதைமட்டும் நான்* correct *செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இதில் உள்நோக்கம் எதுவும் இல்லை. நிதி கொடுத்ததை, மாண்புமிகு உறுப்பினரும் சொல்கிறார்; மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொள்கிறார். அதோடு அதை விட்டுவிடுங்கள். அதில் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டுமென்று உண்ணாவிரம் இருந்து, தன் இன்னுயிரை நீத்த தியாகி சங்கரலிங்கனாருக்கு விருதுநகரிலே மணிமண்டபம் கட்டி சிறப்புச் சேர்த்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதேபோல, எட்டயபுரத்திலே புரட்சிக் கவிஞர் பாரதியார் அவர்களுக்கு, 1980–ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் மணிமண்டபம் கட்டப்பட்டது. அவருடைய நூற்றாண்டு விழா*

நினைவாக பாரதியார் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியையும், பாரதியார் கூட்டுறவு நூற்பாலையையும் நிறுவி, பாரதியாருக்கு புகழ் சேர்த்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–30

அதேபோல், சீறாப்புராணம் இயற்றிய உமறுப் புலவர் அவர்களுக்கு கடந்த ஆண்டு அரசு விழா எடுத்து சிறப்பு சேர்த்தது, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 தமிழ் அறிஞர்களின் பெயரில் இன்றைக்கு இருக்கின்ற விருதுகள், மொத்தம் 60. அவற்றில், 6 விருதுகளை மட்டும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கியது. 54 விருதுகள் புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் உருவாக்கிய விருதுகள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உருவாக்கிய விருது அண்ணன் சிங்காரவேலர் விருது. இன்னும் அதிகமான விருதுகள் வரப்போகின்றன. தமிழகத்தைத் தவிர இந்தியாவில் இருக்கின்ற பிற எந்த மாநிலத்திலும் எந்த மொழிக்கும் மொழிக் காவலர்களுக்கு, மொழி அறிஞர்களுக்கு 60 விருதுகள் இருப்பது கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரு அரசுகளும் தமிழுக்கு தொடர்ந்து சிறப்பு செய்திருக்கின்றன, என்பது யதார்த்தமான உண்மை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர், திரு. கிரி அவர்கள் இங்கே பேசுகிறபோது, ஏதோ அவர்களது இயக்கத்தில்தான், அவர்களது ஆட்சியில்தான் தமிழுக்குப் பெருமை சேர்த்ததைப்போல், ஒரு செய்தியை இங்கே எடுத்துவைக்கிறார். (குறுக்கீடுகள்) புரட்சித்

தலைவர், எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்தபோது, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை உலகம் சிறக்க நடத்திக் காட்டிய பெருமை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை உலகம் சிறக்க நடத்திக் காட்டிய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, தஞ்சையில் தமிழுக்குப் பெரும் சிறப்பு சேர்க்கின்ற வகையில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அமைத்துக் காட்டியவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில், முத்தமிழ், முத்தமிழ் என்று சொல்லிக்கொண்டிருந்த வேளையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சராக இருந்தபோது, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டுகிற அந்த வேளையில், நான்காம் தமிழ் என்ற அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அறிவியல் தமிழில், ஒரு மாபெரும் சிறப்பைச் சேர்த்தார்கள். எப்படி என்றால், சிறுபான்மை பள்ளி என்ற பெயரில் தமிழே படிக்காமல் மாணவர்கள் பிற மொழிகளைப் படித்து வெளியேறினார்கள். அந்த வேளையில், கட்டாயப்படுத்தக்கூடாதென்று நீதிமன்றத்தின் தடை இருந்தது. எனவே மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அறிவியல் தமிழ் என்கிற நான்காம் தமிழைப் பாடமாக்கி, அனைத்துப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கி, அந்த மாணவர்கள் அறிவியல் தமிழைப் படித்துதான் வெளியேற வேண்டும் என்கிற அற்புதமான நிலையை உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, புது தில்லியில் நேரு பல்கலைக்கழகத்தில், தமிழ் இருக்கையை உருவாக்க வேண்டும் என்று தமிழகத்திற்குக் கடிதம் வந்தது. அன்றைக்கு உங்கள் தலைவர் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார் என்றால், 10 இலட்சம் ரூபாயை இங்கிருந்து காசோலையாக அனுப்பிவைத்தார். நேரு பல்கலைக்கழகம் திருப்பி அனுப்பிவைத்துவிட்டது. ஒரே தவணையில் ஒரே காசோலையில் மொத்த தொகையான 50 இலட்சம் ரூபாயையும் கொடுப்பதாக இருந்தால் கொடுங்கள், இல்லையென்றால் வேண்டாம் என்று, திருப்பியனுப்பி வைத்துவிட்டார்கள். 50 இலட்சம் வேண்டும் என்று கேட்டார்கள், அதை திருப்பியனுப்பிவைத்துவிட்டார்கள்.

எங்களுடைய முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிக்கு வந்தவுடனேயே முதலாவது காரியமாக 50 இலட்சம் ரூபாயையும் காசோலையாக ஒரே தவணையில் அனுப்பிவைத்து (மேசையைத் தட்டும் ஒலி) புது தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், தமிழ் இருக்கையை ஏற்படுத்தி, அங்கிருக்கின்ற மாணவர்களை தமிழைப் படிக்க வைத்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மொத்தத்தில் தமிழுக்காகத் தொடர்ந்து மாபெரும் சிறப்பைச் செய்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: இந்திய அரசு செம்மொழி என்கிற அங்கீகாரத்தைத் தந்தது நிஜம்தான். ஆனால் constitution schedule–ல் இருக்கக்கூடிய 22 மொழிகளில் 10 மொழிகளை செம்மொழி என்று அறிவித்து அந்த 10–ல் 1 தமிழ்மொழி என்று அங்கீகாரம் பெற்றுத் தந்தது, உங்கள் அரசு. ஆனால், உலகத்தில் உள்ள 6,500 மொழிகளில் 7 மொழிகளே செம்மொழி, அந்த 7 மொழிகளில் இன்றும் வாழும் மொழியாக தமிழ் மொழி என்று ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்த அரசு மாண்புமிகு எடப்பாடியார் அவர்களது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, இந்தச் சட்டமன்றத்திலே கோரிக்கை வைத்தவுடனே, அன்றைய தினமே அறிவித்து, கன்னியாகுமரி மாவட்டத்தில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலை அமைத்து மரியாதை

செலுத்தியவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இத்தாலியில் பிறந்த Constantine என்ற இயற்பெயரைக் கொண்ட வீரமாமுனிவர் அவர்கள் செய்யுளுக்கு உரைநடை இயற்றியதை அங்கீகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழுக்குப் பெருமை சேர்த்தவர் என்ற அடிப்படையில், அவருக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தில், அதுவும் குறிப்பாக என்னுடைய தொகுதியிலே உள்ள காமநாயக்கன்பட்டியிலே அவருக்குச் சிலை அமைத்துப் பெருமை சேர்த்தவரும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி அவர்கள் தமிழுக்காகத் தொண்டாற்றிய தலைவர்களைப் பற்றி இங்கே பட்டியலிட்டுச் சொன்னார்கள். உலகத் தமிழ் அமைப்புகளை ஒன்றிணைத்து ஒரு குடையின்கீழ்க் கொண்டு வரும் சீரிய நோக்கத்திற்காக சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரிலே, 1981 ஆம் ஆண்டு ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படும் என மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது அதை கிடப்பில் போட்டார்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் 2016–லே, ஏறத்தாழ 25 கோடி ரூபாய் அளவிலே, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையிலே உலகத் தமிழ்ச் சங்க கட்டடத்தின் வானளாவிய கட்டடத்தைக் கட்டி உலகம் முழுவதும் தமிழின் புகழைக் கொண்டுபோய்ச் சேர்த்த பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசை சாரும் என்பதை இந்தத் தருணத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நாங்கள்தான் இந்த விருதுகளை தமிழ்ப் புலவர்கள் பெயரில் கொடுக்கிறோம் என்றார். நான் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். நீங்கள் கடந்த இரண்டு வருடங்களாக ஆட்சியில் இருக்கிறீர்கள். ஒரே ஒரு தமிழ் அறிஞருடைய தமிழ் நூலையாவது, நீங்கள் நாட்டுடைமை ஆக்கியிருக்கிறீர்களா? ஒரே ஒரு தமிழ் அறிஞருக்காவது பரிவுத் தொகையைக் கொடுத்திருக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கழக ஆட்சியில் கொடுக்கப்பட்ட தமிழ் அறிஞர்களுடைய அத்துணை நூல்களையும் நாட்டுடைமையாக்கி கொடுக்கக்கூடிய பெருமை கழக ஆட்சிக்கு உண்டு. இந்த ஆட்சியில் ஒரு தமிழ் அறிஞரின் நூலைக்கூட நாட்டுடைமையாக்கவில்லை. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் சார், நான் பேசிவிடுகிறேன்.*

இன்னொன்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய ஆட்சியில் அறிவியல் தமிழ் கொண்டு வரப்பட்டது என்றார். தமிழ் மொழியைக் கட்டாய பாட மொழியாக்கி சட்டமன்றத்தில் ஒரு சட்டமாகவே இயற்றிக் காட்டியது யார் ஆட்சியில் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் செய்தது யார்?

தற்போது ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றது குறித்து இன்னொன்றையும் சொல்கிறீர்கள். 'விண்ணோடும் உடுக்களோடும் மங்கு, கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம்' என்று சொன்னானே பாரதிதாசன், (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொன்ன அந்தத் தமிழுக்கு அங்கீகாரம் வாங்கிக் கொடுப்பதற்கு தமிழ்நாட்டிலே நீங்கள் முயற்சி செய்யவேண்டியதை விட்டுவிட்டு, எங்கேயோ அமெரிக்காவில் இருக்கக்கூடிய ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் நீங்கள் அங்கீகாரம் வாங்கிக் கொடுக்கிறீர்கள் என்று சொல்வது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அறிஞர்களின் நூலை அரசுடைமையாக்குவது குறித்து—இதுவரை 148 தமிழ் அறிஞர்களுக்கு ரூ.10.92 கோடியில் நாட்டுடைமையாக்கி இருக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், நீங்களும் அந்தப் பணியைச் செய்திருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் ஒரு மணி நேரம் காத்திருந்தால் பல தமிழ் அறிஞர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கப் போகிறோம் என்ற அறிவிப்பு வரவிருக்கிறது. அது விரைவில் நடக்கும்.

அதேபோல, நீங்கள் எத்தனையோ வருடங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் தமிழ்நாட்டிலே உள்ள அரசுப் பணியாளர்களெல்லாம் தமிழிலேதான் கையெழுத்து போடவேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அது மறுக்கமுடியாத உண்மை. 21–6–1978–ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் போட்ட ஆணைதான். ஆனால், அதுவரையில் அந்த எண்ணம் உங்களுக்குத் தோன்றவில்லையே. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் அந்த ஆணையை போட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு நிறைய பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) சரி, பேசுங்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வழியில் நடக்கக்கூடிய எல்லா அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில மீடியத்தை இன்றைக்கு புகுத்தியிருக்கிறீர்களே, இதற்கு முன்னர் யாரும் செய்யவில்லையே. அரசு ஊழியர்கள் இன்றைக்குத் தமிழில் கையெழுத்து போடுவதைப் பற்றி சொல்கிறீர்களே! இன்றைக்கு ஆங்கில மொழியில் உள்ள பாடப் பிரிவுகளை எல்லா அரசுப் பள்ளிகளிலும் கொண்டுவந்து தமிழ் வழியிலே சேர்ந்து பயிலக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை இன்றைக்கு நீங்கள் திட்டமிட்டு தடுக்கிறீர்களே! இது நீங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு செய்யக்கூடிய காரியமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது—நம்முடைய தமிழ்மொழியைக் காப்பதற்கு இந்த அரசு என்றைக்கும் பின்வாங்கியதில்லை. நீங்கள் சொல்வதைப்போல் அல்ல. இன்றைக்கு மக்களின் மனநிலை எப்படியிருக்கிறது என்பது சட்டமன்ற உறுப்பினருக்கும் தெரியும். அதன் அடிப்படையிலேதான் நீங்கள் சொல்வதைப்போல, சில பள்ளிகளிலேதான் ஆங்கில வழிக் கல்வி இருக்கிறதே தவிர, தமிழை நாங்கள் என்றைக்குமே புறக்கணிக்கவில்லை. தமிழுக்காகவே தலை சாய்த்து வாழ்ந்து கொண்டிருக்கிற ஓர் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள். விவாதம் lengthy ஆக இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் தமிழ் மொழிக் கல்வி என்பது குறித்து பேச்சு வருகிறபோது, இத்தனை வருடங்கள் நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது CBSE–யிலோ ICSE–யிலோ மற்ற பாடத் திட்டங்களிலோ தமிழ் ஒரு பாடமாகக்கூட இல்லை.

பிற்பகல் 2–40

2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அம்மா போட்ட சட்டம்தான் இன்றைக்கு சி.பி.எஸ்.இ. பள்ளி பாடத் திட்டங்களிலும், (ICSE, IB) போன்ற மற்ற பாடத் திட்டங்களிலும் தமிழைப் பாடமாகக் கொண்டு வரவேண்டும்; 2 வருடங்களிலிருந்து 5 வருடங்களுக்குள் கொண்டுவர வேண்டுமென்று அரசாணை பிறப்பித்தது அம்மாவின் அரசாங்கம். அது இப்பொழுது சிறுக, சிறுகச் செயல்பாட்டிற்கு வந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் போதும். நீங்கள் செய்ததை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர்கள் அவர்கள் செய்ததை அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழோடு விளையாடியது போதும். (சிரிப்பு) நாம் அடுத்த பொருளுக்கு போகலாம். உட்காருங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணாவால் உருவாக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட இயக்கம். பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறபோது, அவருடைய ஆங்கிலப் பேச்சுகளை கேட்டதற்குப் பிறகு, அங்கிருந்த திரு. நேரு அவர்கள் அதைப் பாராட்டி, இன்னும் தொடர்ந்து பேசுங்கள் என்று கூறும் அளவிற்கு ஆங்கில மொழிப் புலமையையும் கொண்டிருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணாவினுடைய இரு மொழி கொள்கையைத்தான் இந்த அரசு கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கிரி, நீங்கள் பேசுங்கள். இரண்டு பக்கமும் நிறைய பேசியாகிவிட்டது.*

திரு. மு.பெ கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருமே தமிழர்கள்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை போதும். அடுத்த பொருளுக்கு போகலாம்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ செம்மொழிக்குச் சிறப்பாகப் பணியாற்றுவதாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் சொன்னார்கள். மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, சொல்வதைக் கேளுங்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு தகவல்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், நிறைய பேசியாகிவிட்டது. இன்னும் 2 மானியக் கோரிக்கைள் இருக்கின்றன. நேரமும் ஆகிவிட்டது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் நிதியாண்டில் செம்மொழி ஆய்வு நிறுவனத்திற்காக மத்திய அரசு 32 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தது. அந்தப் பணத்தை தமிழுக்காக பணியாற்றிக்கொண்டிருக்கின்ற உங்கள் அரசு, வெறும் 8 கோடியே 60 இலட்சம் ரூபாயை மட்டும் செலவு செய்துவிட்டு, மீதம் 17 கோடியே 40 இலட்சம் ரூபாயை மத்திய*

அரசிடம் ஒப்படைத்து, தமிழுக்கு பெரும் பங்காற்றினீர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவையிலே பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். 32 கோடி ரூபாய் என்பது கட்டடம் கட்டுவதற்காகவும், ஆய்வுகளுக்காகவும் வந்த நிதி. கட்டடப் பணி துவங்குவதில் delay. ஆனால், அந்த நிதி மத்திய அரசாங்கத்திடம் போய்விடவில்லை, செம்மொழி நிறுவனத்தில்தான் இருக்கிறது. அதற்கு Director தேர்ந்தெடுக்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் இயங்கும் நிறுவனம் அது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்து நடத்துகின்ற நிறுவனம் அது. மத்திய அரசாங்கத்தின் பங்களிப்பு இருந்தாலும் சரி, தமிழக அரசாங்கத்தின் முழு control உடன் இயங்கிக்கொண்டிருக்கும் நிறுவனம் அது. உன்னதமான ஆய்வுகள் படைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் ஆட்சியில் இருந்த அந்த மூன்று வருடங்களில், அந்த நிறுவனம் எந்த செயல்பாடும் இல்லாமல், meeting–ஐ மட்டுமே போட்டுக்கொண்டிருந்த நிறுவனம் அது. இன்று உண்மையான ஆய்வுகள் அங்கே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மொழியைப் பெற்றுத் தந்த தலைவர் கலைஞர் அவர்கள், தமிழகத்தின் தலைமையிடமாக இருக்கின்ற சென்னையிலே, சென்னையின் மையப் பகுதியிலே, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையும், பேரறிஞர் அண்ணா மேம்பாலமும் இணைகின்ற இடத்திலே ஓர் அழகிய செம்மொழிப் பூங்காவை உருவாக்கினார்கள். நான் சிறுவனாக வந்தபோது, அந்தப் பூங்காவிலே, ஒரு தனியார் உணவு விடுதியிலே நான் சாப்பிட்டதாக அறிகின்றேன். அதையெல்லாம்...(குறுக்கீடு) பெயரைச் சொல்ல வேண்டாம் என்றுதான் சொல்லவில்லை. அதையெல்லாம் எடுத்துவிட்டு, தமிழைக் காப்பதற்காக, தமிழின்

அடையாளம், செம்மொழி அடையாளம் தமிழிற்கு இருக்கிறது என்ற அடையாளத்தைக் காட்டுவதற்காக, பல நாடுகளிலிருந்து வருபவர்கள், பல மாநிலங்களிலிருந்து வருபவர்களுக்கெல்லாம் அடையாளம் தெரிய வேண்டும் என்பதற்காக, செம்மொழிப் பூங்காவை தலைவர் கலைஞர் அமைத்துத் தந்தார். உங்கள் ஆட்சியில் அந்த செம்மொழிப் பூங்கா, பயனற்று, கேட்பாரற்று, அதை பயன்படுத்துகின்ற நிலையிலேயே இல்லை என்ற வருத்தத்தை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பதிவு செய்ய விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்) நான் அந்தப் பொருளுக்குள் செல்லவில்லை. நான் அடுத்த பொருளுக்கு செல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பூங்கா . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் ஏற்கெனவே இதுபற்றி விளக்கமாகப் பேசிவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பூங்கா செயல்படவில்லையென்று சொன்னார்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, இருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பூங்கா செயல்படவில்லையென்று சொன்னது பதிவாகி இருக்கிறதே. (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொல்கிறார். அந்தப் பூங்கா, சரியாக அருமையாகப் பராமரிக்கப்பட்டு shooting எல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி கொஞ்சம் அந்தப் பக்கம் போய்ப் பாருங்கள். (சிரிப்பு)

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரப் பேருந்துகளில் திருவள்ளுவர் வாக்குகளை எடுத்துவிட்டு, கலைஞர் பொன்மொழிகளைப் போட்ட அரசாங்கம் உங்களுடையது. உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது செம்மொழியைப் பற்றிப் பேசுவதற்கு என்பதை யோசித்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) பேருந்திலிருந்து குறளை எடுத்துவிட்டீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்றுமில்லை, அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தங்கம் தென்னரசுவை நான் அனுமதிக்கிறேன், அவர் என்னவென்று சொல்லட்டும். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். அவைக் குறிப்பிலிருந்து அப்படியெல்லாம் நீக்க முடியாது. (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள், (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. சக்கரபாணி. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், திரு. தங்கம் தென்னரசு. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, திரு. தங்கம் தென்னரசு பதில் சொல்வதற்கு அனுமதி கேட்டார், அவருக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். அவர் அதனை* record *செய்யட்டும். இரண்டு பிரச்சினைகளும் தீர்ந்து விடும். அவ்வளவுதான். சொல்லுங்கள் திரு. தங்கம் தென்னரசு.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழாய்ந்து தமிழ்ப் பெருமகனாய் இருந்து, (குறுக்கீடு) நான் வேறொன்றும் சொல்லவில்லை. செம்மொழியைப் பற்றிப் பேசுவதற்கு எங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது என்று கேட்கிறாரே? (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் அருகதை என்று சொல்லவில்லை.*

திரு. தங்கம் தென்னரசு: *சரி உரிமை. உங்களுடைய வாதத்தை வைத்துக்கொள்கிறேன். அவர்,* I stand corrected, Sir, *நான்தான் சொல்கிறேன்,* I stand corrected. *அவர் சொல்கிறார் என்ன உரிமை இருக்கிறது என்று, இந்தச் 'செம்மொழி' என்கிற வார்த்தையையே வந்து, ஓர் அதிகாரப்பூர்வமாக, இந்திய அரசாங்கத்தின் ஆணையைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களின் பெரு முயற்சியினால், 'உங்கள் முயற்சியினால்தான் இது உருவாகிறது' என்று ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராக இருந்த அன்னை திருமதி சோனியா காந்தி அவர்கள் கைப்பட எழுதியிருக்கக்கூடிய அந்தக் கடிதம் எங்களிடத்தில் இருக்கின்றது. இதை உருவாக்கியதற்கு, கோவையில் ஒரு செம்மொழி மாநாட்டைக் கொண்டு வந்து நடத்தி, தமிழுக்கு மிகப் பெரிய பெருமையை உருவாக்கியவர்கள் நாங்கள். ஆனால், அதில் சின்ன கிள்ளுக் கீரையைக்கூட எடுத்துப் போடாமல், அந்தச் செம்மொழியை நாங்கள் கொண்டு வருகிறபோது, அதற்கு ஒரு பாராட்டையும், வாழ்த்தையும்கூடத் தெரிவிக்காமல், இன்றைக்கு வந்து இந்தச் செம்மொழிக்கு நாங்கள் தான்* guarantee, authority *என்கின்ற வகையில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் எந்த அடிப்படையில் பேசுகிறார் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டைப் பற்றி பேசினார்கள். செம்மொழி மாநாட்டிற்காக ஆதி திராவிட நலத் துறையிலிருந்து நிதிகளை ஏன் அதற்கு பயன்படுத்தினீர்கள் என்றுதான் நான் இங்கே கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதற்குமேல் வேண்டாம். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் எல்லோரும் தமிழைப் பற்றி நன்றாகச் சொன்னதன் காரணமாக, ஏறக்குறைய 15, 20 நிமிடங்கள் இதற்காக நான் அனுமதியளித்தேன். எல்லோரும் அவரவர் கருத்துகளைச் சொல்லிவிட்டீர்கள். *(குறுக்கீடுகள்)* இருங்கள், இந்த விவாதம் வேறு எங்கேயோ திசை திரும்புகிற மாதிரி என் மனதில் படுகிறது. இது போதுமானது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், என்ன சொல்ல வருகிறீர்கள்?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, 'செம்மொழிக்காக ஒரு துளியும் கிள்ளிப் போடாதவர்கள் நீங்கள்' என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே முன்வைத்தார். திரு. வாஜ்பாய் அரசு அமைவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6 அம்ச கோரிக்கைகளை முன் வைத்தார்கள். அதில் தலையாய ஒரு கோரிக்கைதான் தமிழ் உள்ளிட்ட 19 மொழிகளை செம்மொழியாக்க வேண்டும் என்கிற கோரிக்கை. அதனைத் தொடர்ந்துதான் நீங்கள் வந்தீர்களேயொழிய, நடத்தினீர்களேயொழிய, முன்னாலே கொண்டு வந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, தேசிய மொழியாக ஆக்க வேண்டுமென்ற அறிவிப்பைக் கொண்டு வந்தவர் அம்மாதான். அதுமட்டுமல்ல, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் புத்தகங்களையெல்லாம் அரசுடைமையாக்கி, நாட்டுடைமையாக்கி ராணி அண்ணா அவர்களை அழைத்து 75 இலட்சம் ரூபாயை அள்ளிக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, தந்தை பெரியார் தமிழில் சீர்திருத்த எழுத்துகளை கொண்டு வந்தார். அந்தச் சீர்திருத்த எழுத்துகளை உங்களுடைய ஆட்சியில் நீங்கள் கண்டுகொள்ளவேயில்லை. பின்னாளில் ஆட்சிக்கு வந்த புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள், தந்தை பெரியாருடைய சீர்திருத்த எழுத்துகளை சட்டமாக்கி, அமல்படுத்தி தமிழில் அறிமுகப்படுத்தியவர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதோடு போதும். தமிழின் வளர்ச்சிக்கு, யார் யார் என்ன பணியாற்றினீர்கள் என்ற விவரத்தை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் இரண்டு பக்கத்திலிருந்தும் அதிகளவில் தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இந்த விவாதம் வேறு வழியில் போக வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, நீங்கள் இரண்டு நிமிடங்களில் (குறுக்கீடு) இதற்கெல்லாம் நேரமில்லை. இன்னும் இரண்டு நிமிடங்களில், உங்களுடைய விவாதத்தை முடிக்க வேண்டும். அதிகமாகப் பேசிவிட்டீர்கள், இது போதுமானது. ஆகவே, இரண்டு நிமிடங்களில் உங்கள் உரையை முடிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விட்டுவிடுங்கள்.

பிற்பகல் 2–50

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் கூடுதலாக நேரம் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, இந்த விவாதத்தை நீங்கள் தொடங்கி, இரண்டு பக்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கும் இந்த விவாதத்தின்மீது பேசுவதற்கு அரை மணி நேரத்திற்குமேல் நான் அனுமதி கொடுத்துவிட்டேன். இந்த விவாதத்தை தொடங்கி வைத்தவர் நீங்கள்தான். அந்த அளவோடு உங்களது உரையை நிறைவுசெய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின்மீது பேச ஆரம்பித்து விடுகிறேன். அவர்கள் கொடுத்த தமிழ் வளர்ச்சித் துறை சம்பந்தப்பட்ட புத்தகத்தில் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அரசு ஆட்சியில் இருக்கும்போது முதலமைச்சர் அவர்களின் படங்களைப் போடுவது நடைமுறையில் இருப்பதுதான். உங்கள் கட்சி ஆட்சியில் இருக்கும்போது இப்படித்தான் நடந்திருக்கும். இதெல்லாம் வேண்டாம். இதெல்லாம் வேண்டாம். அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) எல்லோருடைய ஆட்சியிலும் யார் முதலமைச்சராக இருக்கிறார்களோ அவர்களுடைய படம் இடம்பெறுவது வழக்கம்தான். அதையெல்லாம் நீங்கள் ஒரு குறையாக சொல்லக் கூடாது. திருவள்ளுவருடைய படமும் இருக்கிறது. எல்லோருடைய படங்களும் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய படத்தினை புத்தகத்தில் போட்டது குறித்தும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய படத்தினை போட்டது குறித்தும், நீங்கள் அவையில் இப்படி எடுத்துக்காட்டுவது முறையல்ல. நீங்கள் வேறு சப்ஜெக்டில் பேசுங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சாலையோரத்தில் வேலையற்றவர்களின் உள்ளங்களில் உள்ள விபரீத எண்ணங்களால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஏற்படும் தீய செயல்கள் குறித்து அன்றைக்கு ஓர் அரசைப் பார்த்து சொன்னதை, ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டதை, படித்துவிட்டு இங்கே நான் வந்தேன். அதை உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற இளைஞர்கள் அனைவரும் உடல் ஆரோக்கியத்தோடு, விளையாட்டில் ஆர்வம் காட்டினால் பல தீய பழக்க, வழக்கங்களுக்குச் செல்லாமல் இருப்பார்கள் என்று சொல்லி அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு உபகரணங்களுடன்கூடிய விளையாட்டு மைதானத்தைத் தந்தார்கள். அங்கே நூலகங்களையும் தந்தார்கள். அந்த நூலகங்கள் என்ன ஆயின என்றே தெரியவில்லை. விளையாட்டு மைதானங்களும் என்ன ஆயின என்றே தெரியவில்லை என்பதை வருத்தத்தோடு இந்த அவையில் பதிவு செய்கிறேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சம்பந்தமாக இன்னும் இரண்டு, மூன்று விஷயங்களை மட்டும் தெரிவித்துவிட்டு, இந்து அறநிலையங்கள் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைமீது பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே ஒரு செய்தியை மட்டும் தெரிவித்துவிட்டு, உங்களது உரையை முடியுங்கள்.

திரு. மு.பெ. கிரி: இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சம்பந்தமாக நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தப் பிரச்சினைக்குள்ளும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, நான் சொல்வதையும் கொஞ்சம் கேளுங்கள். இந்து அறநிலையத் துறை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன் அவர்கள் ஏற்கெனவே உங்கள் சார்பாக விரிவாகப் பேசிவிட்டார். நீங்கள் ஒரே ஒரு செய்தியை மட்டும் தெரிவித்துவிட்டு உங்களது உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் வீர விளையாட்டுகளிலே ஒன்று கபடி போட்டி. எங்கு சென்றாலும் ஒவ்வொரு ஆண்டும் தங்கப் பதக்கம் வெல்லும் அளவிலும், முதல் இடத்தைப் பிடிக்கும் அளவிலும் இந்த கபடி போட்டி இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் ஒன்றிய அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால், இன்றைக்கு இந்த அரசு தமிழர்களின் கலையை மறக்கின்ற அளவில் ஆண்டுதோறும்

நடைபெற்ற கபடி போட்டியை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தினால் போதும் என்று ஆணையிட்டிருக்கிறது. தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரங்கள் தொடர்வதற்கு ஒன்றிய அளவில், வட்ட அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் எப்போதும்போல் ஆண்டுதோறும் நடத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது pro kabaddi என்ற புதிய விளையாட்டை விளையாடுகிறார்கள். அவர்களுக்கு synthetic mat வழங்கப்படுகிறது. அந்த synthetic mat–ஐ வாய்ப்புள்ள இடங்களுக்கு அரசு இலவசமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளோடு விளையாட்டு மைதானங்களை உருவாக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்து விடுக்கும் கோரிக்கை 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தலைமையிடத்தில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக ஒரு விளையாட்டு மைதானத்தை உருவாக்கித் தர வேண்டும் என்பதுதான். அதை நிறைவேற்றித் தருமாறு நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவெல்லாம் ready ஆகிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்போது இதுகுறித்துத் தெரிவிப்பார்கள். நீங்கள் அடுத்த சப்பெஜக்ட்டில் பேசுங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகிழ்ச்சி. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர், உட்காருங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை பண்பாட்டுத் துறைப் பற்றி நான் ஒரு தகவலை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே நிறைய பேர் படித்தவர்களாக இருக்கிறீர்கள். மருத்துவம் குறித்துப் படித்தால் மருத்துவராகப் பணியாற்றலாம். சட்டம் படித்தவர்கள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றலாம். ஆசிரியர் துறையில் எந்தப் பாடப் பிரிவினை நாம் தேர்ந்தெடுத்து படிக்கிறோமோ அந்தப் பாடப் பிரிவில் ஆசிரியராகப் பணியாற்றலாம். ஆனால், தமிழகத்திலே இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பிலே அருள்மிகு பழனி

தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் கல்லூரியில் இந்து பண்பாடு என்ற ஓர் இளநிலை பட்டப் படிப்பும், முதுகலைப் பட்டப் படிப்பும், முனைவர் பட்டப் படிப்பும் அங்கே இருக்கிறது. அது எப்போது தொடங்கப்பட்டது என்று சொன்னால் 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டு இந்து பண்பாடு. . .

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள். உங்கள் உரையை வேறு எங்கோ கொண்டு செல்கிறீர்கள்.

திரு. மு.பெ. கிரி: இது நல்ல தகவல். இல்லை. தவறாக எதுவும் சொல்லவில்லை. உங்கள் அரசுமீது எந்தத் தவறையும் சொல்லவில்லை. இதில் என்ன சொல்ல வருகிறேன் என்றால், இந்து அறநிலையத் துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதத்தை முடியுங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையில் பணியாற்றுபவர்களுக்கும், கலை, பண்பாட்டுத் துறையில் பணியாற்றுபவர்களுக்கும், இதில் பணி வழங்க வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், 36 பாடப் பிரிவுகளில் அவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். அதை நான் இங்கே சொன்னால், உங்களுக்கு நேரமாகிவிடும். இருந்தாலும், தொல்லியல், வரலாறு, ஞானவியல், கல்வெட்டு இயல், திருக்கோயில் மேலாண்மை, பழம்பொருள் பாதுகாத்தல், அருங்காட்சியகம், உலக சமயம், கோயில்கள் கட்டடக் கலை, இந்தியத் தத்துவம், இந்திய சமணங்கள், அறயியல், தொழில் சார்ந்த கோட்பாடுகள் போன்ற 36 பாடப் பிரிவுகளை அவர்கள் படிக்கிறார்கள். குறிப்பாக, ஆண்டொன்றுக்கு இளங்கலையில் 40 பேரும், முதுகலையில் 26 பேரும் படிக்கிறார்கள். ஆனால், இந்த வாய்ப்புகளை இந்தத் துறைச் சார்ந்து படிக்கின்றவர்களுக்கு வழங்காமல், அரசு பொதுவாக any degree என்ற முறையில் அனைத்து பாடப் பிரிவுகளில் படிப்பவர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்குவதால், இவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இதை இன்றைக்கு நான் சொல்வதற்குக் காரணம், முதுகலையில் 26 இடங்கள் இருக்கின்றன. அதில் 10 இடங்கள்தான் நிரம்பியிருக்கின்றன. 16 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஏனென்று சொன்னால், அதைப் படித்தால் வேலைக்குப் போக முடியாது என்ற எண்ணம் வந்துவிட்டது.

இதை இந்த அரசுக்கு நான் தெரியப்படுத்த விரும்புவதற்குக் காரணம் கலை, பண்பாடு அழிந்துவிட்டால் ஓர் இனம் அழிந்துவிடும். தமிழினம் வாழ வேண்டும் என்று சொன்னால், கலையும், பண்பாடும் நிரம்ப இருக்க வேண்டும். எனவே, இந்த கலை, பண்பாட்டைப் படித்தவர்களை நீங்கள் அதில் பணியமர்த்துவதோடு, 1962–லே தொடங்கப்பட்ட பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக எண்ணற்ற கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டு, கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. பல கல்லூரிகள் இருக்கின்றன. தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. நிதியும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் இருக்கிறது. இதை ஒருங்கிணைத்து அங்கே இந்திய பண்பாடு மற்றும் கலாச்சார பல்கலைக்கழகத்தை இந்த அரசு உருவாக்கித் தர வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் தமிழ் வளர்ச்சிக்காக கேட்கிறேன். பொதுவாக யாரையும் குற்றம்சாட்டிச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே ஒரு மாநிலத்தில் முதன்முறையாக இசை மற்றும் Fine Arts –கவின் கலைக்காகப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது தமிழகத்தில். அதை உருவாக்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கல்வெட்டியியல் மற்றும் தொல்லியல் சார்ந்த படிப்புகளை ஒரு U.G., P.G. level–ல் கொண்டு வந்ததும் நாம்தான். அதைவிட முக்கியமான விஷயம். புரட்சித் தலைவர் அவர்கள் எவ்வளவு தொலைநோக்குப் பார்வையோடு இருந்திருந்தார் என்பதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டு. சென்னை பல்கலைக்கழகத்தில் வைஷ்ணவா studies ஒரு பக்கம், சைவ சித்தாந்த studies ஒரு பக்கம், இஸ்லாமிக் studies ஒரு பக்கம், கிறிஸ்துவ studies ஒரு பக்கம் என நான்கு கட்டமைப்புகளையும் உருவாக்கியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வைஷ்ணவா studies, சைவ studies, திருமந்திரத்தைப் பற்றி எல்லாம் உருவாக்கினார். குறிப்பாக, இறை நம்பிக்கையுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில்தான் இந்த பாடப் படிப்புகள்

அனைத்துமே உருவாக்கப்பட்டன. அதேபோல நீங்கள் சொல்லும் கல்வெட்டியல், தொல்லியலில் அதிகமான வேலைவாய்ப்பு, நம் தமிழகத்தில் இருந்து போனவர்களுக்குத்தான் கிடைத்துள்ளன. ASI தொல்லியல் நிறுவனத்தில் 40% நமது தமிழ்நாட்டில் படித்துவிட்டுச் சென்றவர்கள்தான் இருக்கிறார்கள். முதலில் அந்தப் பாடத்தை உருவாக்கியது தமிழகத்தில்தான்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என் ஊருக்குப் போய்விடுகிறேன். எங்கள் கோயிலுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் கோயிலுக்குப் போனாலும் சரி, இங்கே இருந்தாலும் சரி, எனக்கு 3 மணிக்குள் நீங்கள் முடிக்கவில்லையென்றால், நான் மாண்புமிகு அமைச்சரை பதில் சொல்ல அழைத்துவிடுவேன். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். 3 மாண்புமிகு அமைச்சர்கள் பேச வேண்டும்.

திரு. மு.பெ. கிரி: திருவண்ணாமலையில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் இருக்கிறது. உலகப் பிரசித்திப் பெற்ற திருக்கோயிலுக்கு தமிழ்நாடு முழுவதும், பெரும்பாலும் அண்டை மாநிலங்களில் இருந்தும் வருகிறார்கள். மாதத்திற்கொரு முறை 5 இலட்சத்திலிருந்து 25 லட்சம் வரை மக்கள் கூடுகின்ற இடம் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லை. அது திருவண்ணாமலைக்கு தான் இருக்கிறது. ஆனால், பக்கத்தில் ஆந்திர பிரதேசத்தில் இருக்கிற திருப்பதி வெங்கடாசலப் பெருமானுக்கு ஆண்டுதோறும் 10 நாட்கள் கருட சேவை நடக்கிறது. அப்போது ஆடல், பாடல்களோடு தமிழ் பண்பாடு கலாச்சாரத்தை வெளிப்படுத்தி அங்கு திருவிழாவை நடத்துகிறார்கள். அதேபோன்று திருவிழாவை திருவண்ணாமலையில் 10 நாட்கள் நடத்துவதோடு அந்த மாடவீதிகளில் கால்வாயோடுகூடிய அழகிய சிமென்ட் சாலைகளை அமைத்து இதை நேரடியாக இந்து அறநிலையத் துறையே நிருவகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னை உருவாக்கிய செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செய்யாற்றங்கரையிலே இருக்கின்ற அனுபாம்பிகை ரிஷிபேஸ்வர் ஆலயம், 13, 14 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்ட அந்த ஆலயம் ராஜகோபுரம் இல்லாமல் கேட்பாரற்று இடிந்து விழுகின்ற நிலையிலே இருக்கிறது. அந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உரை நன்றாக, சிறப்பாக இருந்தது. இந்த அளவோடு உரையை முடியுங்கள்.

திரு. மு.பெ. கிரி: ஒரே ஒரு தகவலை மட்டும் சொல்லிவிட்டு நான் உரையை முடிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு தகவலெல்லாம் வேண்டாம். வேறு விவாதங்கள் வேண்டாம்.

திரு. மு.பெ. கிரி: இல்லை, இல்லை. ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என நம் அனைவரின் சொந்தங்கள் கிராமக் கோயில் பூசாரிகளாக இருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னைப் பேச அனுமதித்தே ஆகவேண்டும். நம் சொந்தங்களாக இருப்பவர்களில், கிராமக் கோயில் பூசாரிகளாக 68,000 பேரைக் கண்டறிந்து, அவர்களில் 10,000 பேருக்கு மிதிவண்டியைத் தந்து, 3,000–க்கும் மேற்பட்டோருக்கு உதவித் தொகையையும் தலைவர் கலைஞர் அவர்கள் தந்தார்கள். ஆனால், இந்த அரசு அந்த உதவித் தொகையைத் தருவதில், யார் ஒருவர் இறப்பார்; இன்னொருவருக்குத் தரலாம் என்ற நிலை இருக்கிறது. நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. அந்த நிலையை மாற்றி, நம் சொந்தங்கள் பூசாரிகளாக இருக்கிறார்கள். நம் சொந்தங்கள் காளியாத்தா, மாரியாத்தாவிற்கு பூஜை செய்கிறார்கள். அவர்கள் பயன்பெறுகின்ற அளவிற்கு, தகுதியுள்ள அத்தனை பேருக்கும் அந்த உதவித் தொகையை, ஓய்வூதியத்தை இந்த அரசு வழங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்களுக்கு, அவர்களது பிள்ளைகளுக்கு நிறுத்தப்பட்டுள்ள திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை போன்ற அனைத்து உதவிகளையும் மீண்டும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரே ஒரு கோரிக்கை. கோயில்களுக்கு 2 வகையான tariff–ல் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வருவாய் குறைவாக இருக்கின்ற கோயில்களுக்கு II–C tariff அடிப்படையில் குறைந்த மின் கட்டணம் மின்சாரத் துறையால் வசூலிக்கப்படுகிறது. நான் மாண்புமிகு

அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புவது, கோரிக்கையாக வைப்பது, இதுபோன்ற வருவாய் குறைவாக இருக்கின்ற அரசுக் கோயில்களுக்கு வசூலிப்பதைப் போன்று, பிற கோயில்களையும் கண்டறிந்து, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இருக்கக்கூடிய கோயில்களுக்கு விளக்கு எரிவதற்கு அதே II–C tariff–லோ அல்லது தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்ததைப் போல இலவச மின்சாரமாகவோ தர வேண்டும் என்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

செய்யாறு–தென்பெண்ணை ஆற்றை இணைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கம் பகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி அமைத்திடவும், தாணிப்பாடி பகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திடவும் கேட்டுக்கொள்கிறேன். மேல்செங்கம் பண்ணையில் உள்ள விவசாயப் பண்ணை நிலம் 12,000 ஏக்கர் உள்ளது. இதில் விவசாயப் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம், கட்டமடுவு–பெரிய கோளகப்பாடியில் விரைவாக சிட்கோ அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன். செங்கம் தொகுதி, மேல்செங்கம் பண்ணையில் விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத பகுதியில் 8 வழிச் சாலை செல்லும் பகுதியில் புதிய சிப்காட் வளாகம் 1,000 ஏக்கரில் அமைத்திடுமாறும், மேல்செங்கம் பண்ணையில் இயற்கை வேளாண் விஞ்ஞானி மறைந்த நம்மாழ்வார் பெயரில் மறைந்த முதல்வர் அம்மையார் அவர்கள் அறிவித்த இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம் அமைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாதுமலை–செய்யாறு தொடங்கும் இடத்தில் ஜமுனாமரத்தூருக்குச் செல்லும் சாலையில் செய்யாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்குமாறும், ஜவ்வாதுமலை–கீழ்விளாமுச்சி சாலையில் பாலம் அமைக்குமாறும், செங்கம் முதல் ஜமுனாமரத்தூர் வரை உள்ள சாலையின் இடையில் பாலங்கள் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாதுமலை—செங்கம்—ஜமுனாமரத்தூர் செல்லும் சாலையிலிருந்து மேல்சிலம்பாடிக்கு சாலை அமைக்கவும், செங்கம் தொகுதி, நெல்மலை அத்திப்பட்டு ஊராட்சி, செங்கம் முதல் ஜமுனாமரத்தூர் செல்லும் சாலையிலிருந்து சின்னகீழ்பட்டு கிராமத்திற்கு சாலை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

குப்பணத்தம் அணையிலிருந்து குப்பணத்தம், கொட்டாவூர், பரமணந்தல், புதுப்பட்டு, ஆலபுத்தூர், குயிலம், அன்வராபாத் ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஏரிகளுக்கு புதிய கால்வாய் அமைத்து பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்லாத்தூர் ஊராட்சி, இணையூரிலிருந்து பாம்பாத்தூர் செல்லும் வழியில் செய்யாற்றில் ஸ்ரீ காளியம்மன் கோயில் எதிரில் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தருமாறும், பின்தேவ் முதல் கோவில்கொள்ளை வழியாக ஜமுனாமரத்தூருக்கு புதிய சாலை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

குப்பணத்தம் அணையில் உள்ள பூங்காவை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்பதோடு, கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பாக அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குப்பணத்தம் அணையை ஒட்டியுள்ள துருஞ்சிகுப்பம் கிராமத்திற்கு இன்னும் பட்டா வழங்கவில்லை. உடனடியாக பட்டா வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

100 பரமனந்தல் கிராமத்தில் உள்ள மயானத்திற்கு புதிய சாலை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். ஜவ்வாதுமலைக்கு செல்லும் வழியில் சாலை பரமனந்தல் முதல் மேல்பட்டு வரை உள்ள சாலை ஆபத்தானதாக உள்ளது. அந்தச் சாலை முழுவதும் தடுப்புச் சுவர் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

மேல்பட்டு அருகில் செல்லம் முதல் மேல்பட்டு வரும் சாலையில் சிறு மேம்பாலம் கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன். ஜவ்வாதுமலை ஒன்றியம், மேல்பட்டு முதல் அத்திப்பட்டு வரை உள்வழி சாலை அமைத்தால் வாழக்காடு, ஆட்டியலூர்—மேல்தட்டியாப்பட்டு, இழிதட்டியாப்பட்டு, பெரியகீழ்பட்டு, நெல்வயல் போன்ற 42 கிராமங்கள் பயன்பெறும். இந்தச் சாலையை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.

கல்லாத்தூர் ஊராட்சி, தொட்டிமடுவுக்கு சாலை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். தீத்தண்டபட்டு—பரமனந்தல், காந்தி நகர் செல்லும் சாலையில் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் தோக்கவாடியில் செப்பாந்தன் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். செங்கம் பேரூராட்சி, தோக்கவாடி செல்லும் அனைத்து சாலைகளிலும் பக்க கால்வாயுடன் புதிய சிமெண்ட் சாலை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் பேரூராட்சி, திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள அனைத்து சாலைகளிலும் பக்க கால்வாய் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். செங்கம் பேரூராட்சி, செந்தமிழ் நகர் பகுதிக்கு பக்க கால்வாய் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட கேட்டுக்கொள்கிறேன். செங்கம் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி அதிகம் உள்ளதால் செங்கம் புறவழி சுற்று சாலை அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் பேரூராட்சியில் உள்ள மாணவியர் மேல்நிலைப் பள்ளியில் இடவசதி இல்லாமல் இருக்கிறது. பழைய கட்டடங்களை இடித்து, இட வசதியுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன்.

செங்கத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பழுதடைந்துள்ளது. அதற்கு புதிய கட்டடம் கட்டித் தர கேட்டுக்கொள்கிறேன். செங்கம் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன். செங்கம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால் விபத்து சிகிச்சைப் பிரிவு தொடங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு வட்டம், அல்லப்பலூர் அல்லது தாயண்டபுரம், ஏதாவது ஒரு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். திருவடத்தலூருக்கும் புத்தூர்செக்கடிக்கும் இடையில் மேம்பாலம் கட்ட கேட்டுக்கொள்கிறேன். அ க ர ம் ப ள் ளி ப ட் டு க் கு ம் தொண்டமானூருக்கும் இடையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். தென்முடியலூருக்கும் தென் கரும்பலூருக்கும் இடையே பாலம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் ஊராட்சிக்கு விளையாட்டு மைதானம் அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி தாளிப்பாடி மேற்பகுதி பாசன வசதி பெற கால்வாய் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். சாத்தனூர் அணை பாசனப் பகுதியில் உள்ள கால்வாய்கள் சிதலமடைந்துள்ளன. அவை அனைத்தையும் புதுப்பித்து கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் தொகுதி, கரியமங்கலம் ஏரிக்கு வரத்துக் கால்வாய் சீரமைத்து கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன். அகாம்பள்ளபட்டு—அரசக்கல்—கல்தாம்பாடி பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். புத்தூர் செக்கடி சைதாப்பட்டி பகுதிக்கு புதிய பகுதிநேரக் கடை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். சதாகுப்பம்—அந்தோணியாபுரம் பகுதிக்கு புதிய பகுதிநேரக் கடை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டு விடுதலைக்கு வித்திட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை கட்டி பெருமை சேர்த்தோம் என்ற தகவலைச் சொன்னார்கள். ஆனால், அதே வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், அன்றையதினம் நான் சட்டமன்ற உறுப்பினராக இந்தப் பேரவையில் வினா எழுப்பிய நேரத்தில், ஒரு நொடிகூட தாமதிக்காமல் வீரம் விதைக்கப்பட்ட இடமான கயத்தாறில் அமைத்தால்தான் பெருமை என்ற வகையிலே கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) பெருமை சேர்த்தது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என்கிற தாரக மந்திரத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த மாபெரும் மக்கள் தலைவி எங்கள் அம்மா; திட்டங்களுக்காக அல்ல மக்கள், மக்களுக்காகத்தான் திட்டங்கள் என்ற புரட்சியை நடத்திக் காட்டிய புதிய விடியல் எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) 'அமைதி, வளம், வளர்ச்சி' என புதிய இலக்கணங்களைத் தமிழக மக்களின் நலன் காக்க வகுத்திட்ட புரட்சித் தாய் எங்கள் அம்மா; அறிஞர் அண்ணாவின் பாதையைப் பின்பற்றி, மக்களின் மகத்தான ஆதரவோடு ஆட்சிக்கு வந்த மன்னாதி மன்னன், மக்கள் திலகம், ஏழைக் குழந்தைகளின் பசி போக்க சத்துணவு தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) அரசை அமைத்த நமது வேதா நிலையத்தின் வேதப் புத்தகம், போயஸ் தோட்டத்தின் பொன்மனத் தாய் எங்கள் அம்மா; பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய சட்டம் இயற்றி சமூக நீதி காத்த வீராங்கனை எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்திய மாசற்ற தலைவி எங்கள் அம்மா; முல்லைப் பெரியாறு மற்றும் காவேரி நதி நீர் உரிமையை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி எங்கள் அம்மா; சட்ட— ஒழுங்கில் சரித்திரம் படைத்த தாய் எங்கள் அம்மா; இந்நாட்டு அரசியலை தென்னாட்டுப் பக்கம் திருப்பிக் காட்டிய திராவிட இயக்க தேவதை எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி மரத்தடி வகுப்புகளையெல்லாம் மடிக்கணினி வகுப்புகளாக மாற்றிய, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023—ஐத் தந்திட்ட (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதார ஞானி எங்கள் அம்மா; பெண்களின் பணிச் சுமையைக் குறைக்க விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கிய இதய தெய்வம் எங்கள் அம்மா; தாலிக்குத் தங்கம் தந்த தங்கத் தாரகை எங்கள் அம்மா; திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தந்த அன்னபூரணி எங்கள் அம்மா. மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் திட்டங்களைத் தந்து, தனக்கென வாழாது தமிழர்களின் நலனுக்காக வாழ்ந்து, தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுத்து, வங்கக் கடலோரம் வரலாறாக வாழும், எங்களையெல்லாம் வழிநடத்தும், மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் நிலைத்திருக்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

[திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி] [2018 ஜூன் 13

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா வழியில் ஆட்சி! அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி! ஓராண்டு சாதனையே இதற்கு சாட்சி. 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற அம்மாவின் தாரக மந்திரத்திற்கு மாண்புமிகு எடப்பாடியார் ஆட்சியே சாட்சி. இதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவே காட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றுவரும் அம்மா அவர்களின் அரசு, கடந்த ஓராண்டு ஆட்சியில் 5,127.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 2,329 திட்டப் பணிகளைத் திறந்தும், 5,712.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,200 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், மக்கள் பயன்பெறும் வகையில் 521 புதிய அறிவிப்புகளை வெளியிட்டும், 5,397.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8,11,451 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இதர அரசு விழாக்களில் 11,827.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 35,819 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தும், 8,837.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,411 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 5,208 கோப்புகளுக்கு ஒப்புதல் அளித்தும் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறது. கள்ளமில்லா சிரிப்புக்கு உரியவரும் எங்களையெல்லாம் வழிநடத்துபவருமான எங்களது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை மீண்டும் நடத்த ஆணை பெற்று இலட்சக்கணக்கான இளைஞர்களின் இதயங்களில் நீங்கா இடம்பிடித்தவரும்; சென்னை வர்தா புயலால் பாதிக்கப்பட்டபொழுது, தானே களத்தில் முன்னின்று மக்களோடு மக்களாகப் பணியாற்றி மக்களின் துயர் துடைத்தவரும்; சென்னை நகர மக்களின் தாகம் தீர்க்க ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கிருஷ்ணா நதிநீரைப் பெற்று மக்களின் தாகம் தீர்த்தவரும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நடக்கும் ஆட்சிக்கு உறுதுணையாக இருந்துவருபவருமான மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

அறவழியில் சபையை நடத்தும் அன்பும், பண்பும் கொண்ட பாசமிகு அண்ணன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பெற்றெடுத்த தாய்–தந்தைக்கும், எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் என்னையும் முதன்முதலில் வெற்றிபெறச் செய்தது மட்டுமல்லாமல், அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த எனது ஓசூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு அயராது பாடுபட்ட கழக தொண்டர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு என்பது, வாழ்வில் மகத்தான குணநலன்களை கற்பித்து, அனைத்து நிலைகளிலும் வெற்றிபெற உதவுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இளைஞர்களிடையே விளையாட்டை மேம்படுத்துவதற்காக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விளையாட்டு என்பது மனிதனின் உடன் பிறந்த ஒரு பண்பு மட்டுமல்லாமல் சாதி, மதம், இனம், மொழி என்ற எந்த பேதமும் இல்லாமல் மக்களை ஒன்றாக இணைக்கும் சக்தியாக உள்ளது. விளையாட்டு நாட்டின் வளர்ச்சியிலும், தனிமனிதனின் வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றுகிறது. மேலும், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, ஒழுக்கம் போன்ற பண்புகளுடன் அறிவு வளர்ச்சியடைய விளையாட்டு உதவுகிறது. மாணவர்கள் நன்றாகப் படிக்கவும், அவர்களின் நினைவாற்றலை அதிகப்படுத்தவும், தலைமைப் பண்பையும், குழு உணர்வையும், நேர மேலாண்மையையும் கற்றுக்கொள்ளவும், மனதையும், உடலையும் ஒருநிலைப்படுத்தவும், உடல் உறுப்புகள் வலிமையடைந்து, ஆரோக்கியத்துடன் வாழவும் விளையாட்டு உதவுகிறது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழிக்கேற்ப வாழ்வதற்கு விளையாட்டு முக்கியமானதாக உள்ளது.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் இளைஞர்களின் எண்ணிக்கை சுமார் 40 விழுக்காடாகும். அவர்களை ஆக்கப்பூர்வமான வழியில் வழிநடத்திச் சென்றால், இளைஞர்களின் வாழ்க்கைத்தரம் உயரும். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தால், குடும்பத்

தரம், கிராமத்தின் தரம், மாநிலத்தின் தரம் உயரும் என்பதை கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், இளைஞர் நலன் இயக்குநரகம் Youth Welfare Directorate அமைத்து, பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வந்துள்ளார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர்களின் நலன்கள், பயிற்சிகள் மற்றும் வழிநடத்துதல், திறமைகளை அங்கீகரித்தல் ஆகிய பணிகளை இளைஞர் நலன் இயக்குநரகம் செய்து வருகிறது. அதுமட்டுமல்லாமல். இளைஞர் நல விருதுகள் வழங்குதல் மற்றும் இளைஞர் எழுச்சி நாள் கொண்டாட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமது மாணவர்களும், இளைஞர்களும் விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் படைக்கும்பொருட்டு, உலகத்தரம் வாய்ந்த மைதானங்கள், விளையாட்டு உபகரணங்கள், தரம் மற்றும் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களைக்கொண்டு பயிற்சிகள் ஆகியவற்றை அளித்துவருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறை மேம்பாட்டின்மீது தனிக் கவனம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கு 2011–2017 வரையிலான 6 ஆண்டுகளில் ரூபாய் 713 கோடியே 53 இலட்சம் ஒதுக்கீடு செய்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி செய்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், இந்த ஆண்டு 191 கோடியே 18 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், முந்தைய தி.மு.க. ஆட்சியில் 2006–2011 முடிய விளையாட்டுத் துறைக்கு ஒதுக்கீடு செய்த தொகை, வெறும் 171 கோடியே 88 இலட்சம் ரூபாய் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இளம் விளையாட்டு வீரர்களுக்கு, அறிவியல் ரீதியான சிறப்புப்

பயிற்சி அளிக்க, 5 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள், 9 சிறப்பு விளையாட்டு அகாடமி, Elite Sportspersons Scholarship Scheme, Champions Development Scheme ஆகிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு வரை 12 எண்ணிக்கையில் இருந்த விளையாட்டு விடுதிகளை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 29 விடுதிகளாக அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 860 எண்ணிக்கையிலான மாணவர்கள் சேர்க்கை, இப்போது 1,975 ஆக உயர்ந்துள்ளது. ஒரு விளையாட்டு வீரருக்கு வழங்கப்படும் தினசரி உணவுப்படி, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், ரூபாய் 75-லிருந்து ரூபாய் 250 ஆக உயர்த்தப்பட்டது. இதனை வழங்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீச்சல் விளையாட்டில் ஆர்வம் கொண்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்க, 2011 ஆம் ஆண்டு வரை 16 எண்ணிக்கையில் இருந்த நீச்சல் குளங்களை தொலைநோக்குப் பார்வையுடன் 29 ஆக உயர்த்தியது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போட்டிகளில் சாதனை படைக்க உள் கட்டமைப்பு வசதிகள் மிகவும் அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, உலகத்தரம் வாய்ந்த உள் கட்டமைப்பு வசதிகளை பல கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை நேரு விளையாட்டு அரங்கம், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கம், 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம், 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம், 11 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளச்சேரி நீச்சல் குளம் ஆகிய உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகளை உருவாக்கி இந்தியாவின்

வரைபடத்தில் தமிழகத்திற்கு தனிப்பெரும் இடத்தைத் தேடித்தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29 மாவட்ட தலைநகரங்களில் அனைத்து வசதிகளுடன் விளையாட்டு மைதானங்கள் செயல்பட்டு வருகின்றன. 17 மாவட்டங்களில் 22 உள் விளையாட்டு அரங்கங்களும், 6 இடங்களில் புதிய கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. நகரங்கள் மற்றும் வட்டார தலைநகரங்களில் 27 இடங்களில் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்கப்பட்டு, கிராமப்புற இளைஞர்களையும், மாணவர்களையும் விளையாட்டில் ஈடுபடுத்த இந்த அரசு உறுதுணையாக இருக்கிறது. பன்னாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று பரிசுகள் பெறும்வகையில், தமிழகத்தில் 7 இடங்களில் செயற்கை இழை ஓடுதளங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுபோலவே 7 இடங்களில் செயற்கை இழை வளைகோல் பந்து மைதானங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 15 மாவட்டங்களில் 16 செயற்கை தரை டென்னிஸ் ஆடுதளங்களும் (Synthetic Tennis Courts) சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் நலனில் தாயுள்ளத்தோடு அக்கறை கொண்டு, சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் தமிழக வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கம் தருவதற்காக உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த உயரிய ஊக்கத் தொகையை 2 மடங்காக உயர்த்தி வழங்க ஆணையிட்டு செயல்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அரசினை சிறப்பாக நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் விளையாட்டுத் துறையை மிகவும் ஊக்கப்படுத்தி வருகிறார்கள். கடந்த ஓராண்டில் மட்டும் பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கம் வென்ற 145 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கும் மற்றும் பயிற்சியாளர்களுக்கும் 13 கோடியே 41 இலட்சம் ரூபாய் தமிழ்நாடுஅரசின் சார்பில் ஊக்கத்

தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி வேலூரில் ரூ.2 கோடியே 45 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பளு தூக்கும் சிறப்பு பயிற்சி மையத்தையும், நேரு உள் விளையாட்டரங்கில் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட செயற்கை தளத்துடன்கூடிய ஸ்கேட்டிங் ரிங்கையும் (Skating Ring) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நமது தமிழக சைக்கிளிங் வீரர்கள் உலக அளவிலான போட்டிகளில் பங்கேற்க பயிற்சி பெறும்வகையில், தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகத்தில், 7 கோடி ரூபாய் செலவில், உலகத்தரம் வாய்ந்த, Cycling velodrome அமைக்கும் பணிகள் முடியும் நிலையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதியதாக 3 இடங்களில் ஒவ்வொன்றும் 7 கோடி ரூபாய் மதிப்பில் Synthetic Athletic Track அமைக்கும் பணிகளும், ரூ.13.5 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரத்தில் ஒரு புதிய விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிகளும், ரூ.8.8 கோடி மதிப்பில் சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் (JN Stadium), நேரு உள் விளையாட்டு அரங்கம் (JN Indoor) மற்றும் மேயர் ராதாகிருஷ்ணன் Hockey Stadium ஆகியவற்றில் சிறப்பு சீரமைப்பு பணிகளும், ரூ.3.7 கோடி மதிப்பில் ஓசூரில் உள்ள விளையாட்டு அரங்கத்தில் கூடுதல் வசதிகளை மேம்படுத்தும் பணிகளும், ரூ.2 கோடி மதிப்பில் திருச்சி மற்றும் மதுரை விளையாட்டு விடுதிகளில் கூடுதல் கட்டடம் கட்டும் பணிகளும் நடைபெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைகள் வழங்கி, பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் கோப்பைக்கான (CM Trophy) மாநிலப் போட்டிகளை நடத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து, 2016–2017 ஆம் ஆண்டு முதல் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்திட ரூ.8.19 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், மாநில அளவில் முதல் மூன்று இடங்களில் வெற்றிபெறும் ஒவ்வொருவருக்கும், தலா1 இலட்சம், 75 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ள இளைஞர்களை, விளையாட்டில் ஈடுபடுத்தி, அவர்களின் திறமையை வெளிப்படுத்த, முதன் முறையாக, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில், தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகளிலும், கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ரூ.25 கோடியே 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–20

இந்தத் துறையின்மூலம் இளைஞர்களுக்கு விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தித் தருவதோடு, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க மாண்புமிகு முதலமைச்சரின் அனைவருக்கும் ஆரோக்கியத் திட்டம், 'Fitness for All Programme' செயல்படுத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்படி அனைத்து மக்களும் தங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே உடற்பயிற்சியில் ஈடுபட நவீன உடற்பயிற்சி மையங்கள் 17 மாவட்டங்களில் அமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ரூபாய் 4 கோடியே 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையின்கீழ் தேசிய மாணவர் படை NCC சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இது, இளைஞர்களின் மத்தியில் நற்பண்பு, நட்புடைமை, ஒழுக்கம், சமய சார்பற்ற நோக்கம், துணிவு, தன்னலமற்ற சேவை ஆகியவற்றை உருவாக்குகிறது. தேசபக்தியை வளர்ப்பதும், அவர்கள் இராணுவத்தில் சேருவதை ஊக்கப்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகம் 360 கல்லூரிகள் மற்றும் 820 பள்ளிகளில் 95 ஆயிரத்து 408 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். NCC Directorate, இந்திய அளவில் தரைப்படை முகாம் மற்றும் விமானப் படை முகாமில் முதலாவது இடத்தையும், கடற்படை முகாம் மற்றும் குடியரசு தின முகாமில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிலேயே தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகம்தான் முதன் முதலில் தரம் வாய்ந்த வானூர்தி பாவனைப் பயிற்சியை (Flying simulator), விமானப் படை மாணவர்களுக்காக ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக மதுரை, இடையபட்டியில் 16 கோடியே 22 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமி NCC Training Academy மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணை வழங்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் திறக்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாநில அரசு மற்றும் இயக்குநரகத்தின் இணைந்த முயற்சியால் இந்த இயக்குநரகம் நாட்டிலேயே மிகவும் புதுமையான Most Innovative Directorate எனப் பெயர் பெற்றுள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் மற்றும் மாணவர்களிடையே ஆரோக்கியமான தொடர்பை ஏற்படுத்தவும், கல்வி நிறுவனம் மற்றும் சமுதாயத்தினிடையே ஆக்கப்பூர்வமான தொடர்பை ஏற்படுத்தவும், தன்னார்வ அடிப்படையில் கல்வி நிறுவனங்களில் நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தன்னலமற்ற சேவையின் தேவை, பிற மனிதர்களின் கருத்தினைப் பாராட்டுதல், சக மனிதர்களுக்கு பரிவு காட்டுதல் ஆகியவையே இதன் நோக்கமாகும். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான சுமார் 4 இலட்சத்து 25,000 NSS தொண்டர்கள் பணியாற்றி வருகின்றார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்மூலம் தொடர் பணி, செயல்பாடுகள் மற்றும் சிறப்பு முகாம் பணிகள்மூலம் மாணவத் தொண்டர்கள் கிராமங்களில் உள்ளூர் இளைஞர்களுடன் இணைந்து பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வருகிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடற்கல்வி மற்றும் விளையாட்டில் தமிழகம் செம்மை நிலையை அடையும் வகையில், கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் செயல்முறைகளை மேற்கொள்வதற்கான தொலைநோக்கோடு விளையாட்டுத் துறையில் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் நாட்டின் முதல் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை

[திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி] [2018 ஜூன் 13

காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் உருவாக்கினார்கள். இப்பல்கலைக்கழகத்தில் 3 புலங்கள், 5 துறைகள், 3 supporting departments ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும் 20 உறுப்புக் கல்லூரிகள், 1548 மாணவர்களோடு சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பல்கலைக்கழகம் வாயிலாக நடத்தப்படும் 157 தொலைதூரக் கல்வி மையங்கள்மூலம் 3,500 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

பிற்பகல் 3—25

இப்பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே உள்ள உட்கட்டமைப்பு வசதிகளோடு பல்வேறு விளையாட்டு மைதானங்களும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பல்வேறு வசதிகளை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்த மண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டு, ரூ.148.205 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள், திருச்செங்கோட்டில் ஒரு skating ring அமைக்க கோரிக்கை வைத்துள்ளார். நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் skating ring அமைக்கத் தேவையான 3 ஏக்கர் நிலத்தை மாவட்ட நிருவாகத்தின்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்வு செய்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குத் தந்தால், அவரது கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் ஆணையின்படியும் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகிறேன். அவையின் நேரம் கருதி, அறிவிப்புகளின் தலைப்புகளைப் படிக்கிறேன். நான் அந்த அறிவிப்புகளை முழுமையாகப் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்புகளில் முழுமையாகப் பதிவு செய்துகொள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.1,500.00 இலட்சம் செலவில் விடுதி வசதிகள் அமைத்தல்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்து வருகிறது. ஆராய்ச்சிப் படிப்பில் பயிலும் மாணவர்கள், விடுதியில் தங்கிப் படிப்பது அத்தியாவசியமாக உள்ளது. தற்போதுள்ள விடுதி வசதிகள் போதுமானதாக இல்லை. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விடுதி வசதிகள், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1,500.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.160.00 இலட்சம் செலவில் பாரம்பரிய விளையாட்டுகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டத்திற்கான பயிற்சி மையம் அமைத்தல்

நமது பாரம்பரிய தற்காப்பு கலைகள், உடல்நலம் மற்றும் உடற்தகுதியினை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எனவே, நமது பாரம்பரிய தற்காப்பு கலைகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டக் கலையை அழிவிலிருந்து பாதுகாக்கவும் மற்றும் வருங்காலத்திற்கான ஆரோக்கியமான குடிமக்களை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய விளையாட்டுகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டத்திற்கான பயிற்சி மையம், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.160.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

3. விளையாட்டுப் போட்டிகள் குறித்த தகவல்கள் மற்றும் செயல்பாடுகளை இணையம் மற்றும் கைப்பேசிமூலம் பெறுவதற்கும், பதிவு செய்வதற்கும் ஏதுவாக மென்பொருளை ரூ.33.00 இலட்சம் செலவில் உருவாக்குதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்மூலம் ஆண்டுதோறும் நடத்தப்படும் மாவட்ட, மண்டல மற்றும் மாநில

அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்கள் பங்குகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்தப் போட்டிகள் பற்றிய தகவல்கள் மற்றும் செயல்பாடுகளை அனைத்து பிரிவினரும் அறிந்துகொண்டு பயன்பெறும் வகையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.33.00 இலட்சம் செலவில் மென்பொருள் உருவாக்கப்படும்.

4. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.1,000.00 இலட்சம் செலவில் மேசைப்பந்து விளையாட்டிற்கான முதன்மை நிலை மையம் அமைத்தல்

சர்வதேச அளவில் மேசைப்பந்து விளையாட்டுப் போட்டியில் தமிழக வீரர்கள் அதிக அளவில் பங்குபெற்று பதக்கங்கள் பெறுகின்றனர். அவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு மேசைப்பந்து அகாடமி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1,000.00 இலட்சம் செலவில் துவக்கப்படும்.

5. தேசிய மாணவர் படை மாணவர்களின் உபயோகத்திற்கு ரூ.20.00 இலட்சம் செலவில் நகரக்கூடிய பசுமைக் கழிவறைகள் அமைத்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மாணவர் படை முகாம்களின்போது, குறிப்பாக கிராமப்புறங்களில் நடைபெறும் முகாம்களில் கழிவறை வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு பசுமைக் கழிவறைக்கு (Bio–Toilet) *ரூ.1.00 இலட்சம் வீதம் 20 நகரக்கூடிய பசுமைக் கழிவறைகள், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.20.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.*

6. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியலை சிறந்த முறையில் போதிக்க, பரிசோதிக்க மற்றும் பயிற்சி அளிப்பதற்கு ரூ.22.05 இலட்சம் செலவில் கற்பிக்கும் கலை சோதனைக்கூடம் அமைத்தல்

பாரம்பரிய வழிமுறைகளைத் தவிர்த்து நவீன கல்விக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய, அதிக அளவில் அறிவியல் தொழில்நுட்ப ஆதரவு தேவை. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியலை சிறந்த முறையில் போதிக்க, பரிசோதிக்க மற்றும் பயிற்சி அளிப்பதற்கு கற்பிக்கும் கலை சோதனைக்கூடம், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.22.05 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

7. அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியின் தேசிய மாணவர் படை பயிற்சி உள்கட்டமைப்பை நவீனப்படுத்துவதற்காக ரூ.3.00 இலட்சம் செலவில் .22 துப்பாக்கி சுடுதல் பாவிப்பு கொள்முதல் செய்தல்

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் செயல்பட்டுவரும் சைனிக் பள்ளியின் முதன்மை நோக்கமானது, மாணவர்களை முப்படைகளில் சேர்வதற்கு உத்வேகப்படுத்துவதேயாகும். இப்பள்ளியில் பயிலும் 676 மாணவர்களும் தேசிய மாணவர் படையில் சேர்வது கட்டாயமானது. எனவே, அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியின் தேசிய மாணவர் படையினரின் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சிக்காக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3.00 இலட்சம் செலவில் .22 துப்பாக்கி சுடுதல் பாவிப்பு கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரின் வழிகாட்டுதலோடும் நான் எடுத்துரைத்த கருத்துகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மன நிறைவை அளித்திருக்கும் என நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு இந்து சமய அறநிலையங்கள் துறை அமைச்சரும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் பதிலுரை வழங்கவிருக்கிறார்கள். இப்போது மணியைப் பார்த்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் அதற்குத் தக்கபடி விரைவாக பதிலுரையை முடித்துத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

பிற்பகல் 3–30

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தமெல்லாம் ஏழைகளை சிந்தையில் சுமந்து, அவருக்கு நித்தமும் நிலாச்சோறு ஊட்டுகிற பரிவுடைய பாசத் தாயாகவும்; கடலாக விரிந்த புகழோடு, கருணை கொண்டு பொழியும் சிரபுஞ்சி மழையாகி; ஆலயத்தில் அன்னமிட்டு, அறிவூட்டும் பள்ளியில் பந்தியிட்டு; தாயின் முகம் பார்த்து தன் குறை சொல்கிற தமிழகத்து மக்களின் வளர்கின்ற நாட்களையெல்லாம் வசந்தமாக்கித் தந்த வள்ளலாம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இம்மன்றத்தில் படமாய் அல்ல, இன்றும் எங்கள் பாடமாய், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களின் காவல் தெய்வமாய் விளங்கி, உறங்கியும் உறங்காமலும் தவமிருக்கும் பொன்மனத் தலைவியின் புனித மலர்த் திருவடிகளை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யும் தொழிலில் நெய்யும் தொழிலே சிறந்தது எனப்படும் எளிய நெசவாளர் குடும்பத்தில் பிறந்த என் போன்ற எளியவனையெல்லாம் வலியோர் வந்து அமர்கிற சட்டப் பேரவையில் பிரவேசிக்க வைத்து, கடவுளை கையெடுத்துக் கும்பிடுவதே பாக்கியம் என்று கருதுகிற இந்த எளியவனின் கரங்களில் கடவுள் வீற்றிருக்கும் ஆலயங்களுக்கே அமைச்சராக என்னை அமர்த்தி, தெய்வீகத் திருப்பணிகளையும் திறம்பட மேற்கொள்ள இம்மாமன்றத்தில் மூன்றாம் முறையாக இந்து சமய அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையை தாக்கல் செய்ய வாய்ப்பளித்து, எனக்கு முகவரி தந்த எங்கள் குடும்ப குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடித் தொண்டர்களின் உயிராகவும், உதிரத்து உணர்வாகவும் வலம் வந்த நம் தாயை, தன்வசம் அழைத்துக்

கொண்ட நிலையில், தன்னிகரில்லா தமிழகத்தை, அம்மாவின் வழியில் அழைத்துச் செல்ல அண்ணன் தம்பிகளாய் நாங்கள் இருக்கிறோம் என தீர்க்கத்தோடு நின்று, திடத்தோடு வென்று, பொன்மனத்து இயக்கத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் புகழ் குன்றா மிடுக்கோடு வழிநடத்திச் செல்கின்ற, காழ்ப்புணர்ச்சி கொண்டோரின் பகைமையையும் (மேசையைத் தட்டும் ஒலி) கனிவோடு எதிர்கொள்கின்ற புன்னகை மன்னன் சங்கத் தமிழ் பூமிக்கு காலச்சரித்திரம் வழங்கிய சாமானியர்களின் முதல்வர் பாசத்திற்குரிய அண்ணன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும்; இறை ஆசி பெருக்கோடு, இலையாட்சி மிடுக்கோடு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்லாட்சி தொடர்ந்திட எடப்பாடியாருக்கு நான் இருக்கிறேன் வலது கரமாக என்று கழகத்தின் வெற்றித் தேரோட்டத்திற்கு அச்சாணியாகத் திகழும் எளிமைக்கே இலக்கணம் வகுத்த எங்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும்; (மேசையைத் தட்டும் ஒலி) கனல் தெறிக்கும் மோதல்களை கருத்துப் பரிமாற்றங்களாக மாற்றி, ஆனந்தத் தென்றல் வீசும் மன்றமாக மாற்றுகிற சமாதானத் திலகம் சட்டமன்றத்தின் நாயகர், சங்ககிரி மண் தந்த சாதனையாளர் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் அன்பார்ந்த வணக்கங்களை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஐம்பூதங்களில் நெருப்புக்குரிய தளமாகவும், திருவண்ணாமலையார் உண்ணாமுலை தாயாரோடு எழுந்தருளியிருக்கும் திருவண்ணாமலை மாவட்டத்தில், சேவூர் என்கிற எளிய கிராமத்தில் பிறந்த என்னை சட்டமன்றத்திற்கு பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து, ஆன்றோர் பெருமக்களெல்லாம் அமர்ந்து, இந்த அன்னைத் தமிழ் மண்ணுக்காக சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கிய சரித்திரப் புகழ்மிக்க பேரவைக்கு என் போன்ற ஏழைச் சாமானியனையும் பங்குபெற வைத்த என் அன்புக்குரிய ஆரணி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இவ்வேளையில் என் நன்றியை சமர்ப்பித்து இம்மாமன்றத்தில் இந்து சமய அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைகளைச் சொல்லி, கவலைகள் தீர்க்க திருக்கோயில்களை நாடிவரும் பக்தர்களுக்கு நலம் புரியும் அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

இறைவனை வணங்கும்போது அருளால் மனமும் நிறைகின்றது. உணவால் வயிறும் நிறைகின்றது. இதனால்தான் என்னவோ இறைவன் எங்கே உள்ளான் என்பதற்கு தென்னாட்டில்தான் தர்மம் நிறைந்திருக்கிறது என்ற பொருளில் அன்றைக்கே "தென்னாடுடைய சிவனே போற்றி" என்றார்கள் நாயன்மார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2002 ஆம் ஆண்டு தொடங்கிய அன்னதானத் திட்டம் பொதுமக்களிடையே பெற்ற வரவேற்பினையொட்டி படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் 2017 ஆம் ஆண்டு பக்தர்களின் தேவையறிந்து இத்திட்டத்தினை மேலும் 30 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தினார்கள். இதுவரை 754 திருக்கோயில்களில், சுமார் 65 ஆயிரம் பக்தர்கள் தினமும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 13—9—2012 அன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு மொத்தம் 8,200 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு இவ்விரண்டு திருக்கோயில்கள் வாயிலாக சுமார் 2 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகின்றது. பக்தர்கள் காலை எட்டு மணி முதல் இரவு பத்து மணி வரை எப்பொழுது வேண்டுமானாலும் உணவு அருந்தலாம். இத்திட்டம் பக்தர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 12 திருக்கோயில்களில் அன்னதானக் கூடங்கள் 6 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 3—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி என்ற நிதியம், 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5 ஆம் நாள் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்கள், இந்நிதி அமைப்புக்கு தமது சொந்த பணத்திலிருந்து 1 இலட்சத்து 8 ரூபாயை நன்கொடையாக அளித்தார்கள். இந்நிதிக்கு தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதியமைப்பு 'திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி' என்று தற்போது அழைக்கப்படுகிறது.

2016–2017 ஆம் ஆண்டில் மட்டும், 'ஒரு கால பூஜை வைப்பு நிதி திட்டத்திற்கு' இந்நிதியிலிருந்து பங்குத் தொகையாக, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.5,200/- வீதம், 241 திருக்கோயில்களுக்கு 12 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற முதுமொழிக்கேற்ப, ஒவ்வோர் ஊரிலும் அடையாளமாய் விளங்கும் கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணி செய்வதில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இத்திருக்கோயில்களில் புனரமைப்பு என்பது, பெரிய கோயில்களில் மட்டுமே என்ற நிலை இல்லாமல், சமூகத்தில் தெய்வ வழிபாடு அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதிகளிலுள்ள திருக்கோயில்கள் திருப்பணிக்காக ஏராளமான நிதியை ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த வகையில், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் ஆளுகைக்குட்பட்ட கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையில் இல்லாத ஆதி திராவிடர் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட, நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு, தொடங்கப்பட்டது. தற்போது, 2016–2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி, திருக்கோயில் ஒன்றுக்கு 1 இலட்சம் ரூபாய் என உயர்த்தப்பட்டது. ஆக மொத்தம் 2011 முதல் 2018 வரை சுமார், 4,753 கிராமப்புற திருக்கோயில்களுக்கும், 5,159 ஆதி திராவிடர் பகுதி திருக்கோயில்களுக்கும் 64 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

2017—2018 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதி திராவிடர் பகுதி திருக்கோயில்களின் எண்ணிக்கையை 1000—லிருந்து 2000 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. அதன்படி, சென்ற ஆண்டு, 981 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் மற்றும் 1,019 ஆதி திராவிடர் பகுதி திருக்கோயில்களுக்கும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள 20 கோடி ரூபாய் அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருவிளையாடல்களாக மானுடத்தின் அக மரபுகளையும், புற மரபுகளையும் விளக்கும் வகையில் அமைந்த வாழ்வியலைச் சிற்பங்களாகவும், சுதைகளாகவும், சமூகக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில், ஒவ்வொரு கோபுரமும் காலப் பெட்டகமாக விளங்குகின்றது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் இதன் பக்தி சிறப்பினை அறிந்து பதிகங்களாலும், பாசுரங்களாலும் பாடிச் சிறப்பித்துள்ளனர். திருக்கோயில்களில் அந்தந்த திருக்கோயில்களினுடைய திருவிழாக்கள் மற்றும் காலமுறை குடமுழுக்கு விழாக்கள் எனத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில், 1,723 திருக்கோயில்களில் 102 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் முடிக்கப்பெற்று, குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருக்கோயில் குளங்கள் திகழும் ஊரில் மழை நீரும் சேகரிக்கப்படுகிறது என்பதால், மக்கள் மனமும், இறைவன் அருளும் நிறையும் வண்ணம் மாடங்களோடு கோயில் அமைத்து, அங்கு குளங்களையும் ஏற்படுத்தி, மனதை பக்குவப்படுத்தும் களமாக மாற்றி, வாழ்க்கையை ஆற்றுப்படுத்தவும் திட்டமிட்டு, திருக்குளங்களைப் பேணிக்காத்தனர் முன்னோர்கள். அவர்கள் வழியில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில், 1,586 திருக்கோயில்களில் உள்ள 2,359 திருக்குளங்களில் 1,068 திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. இதில், 2017—2018 ஆம் ஆண்டில் மட்டும் திருக்குளங்களின் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் வாரியும், ஆழப்படுத்தியும் திருக்குளங்களுக்கு

மழை நீர் வருவதற்கும், உபரி நீர் வெளியேறுவதற்கும் வழி ஏற்படுத்தி, 117 திருக்குளங்கள் 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டன.

மழைநீர் சேகரிப்பு செயலாக்கத் திட்டத்தின்கீழ், 2014 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் 5,400 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. 1,004 திருக்குளங்களில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் 124 திருக்குளங்கள் 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டன. இதனால், மழைநீர் சேகரிப்பு முறைப்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்நீர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கான வழிபாட்டுத் தேவைகளுக்கும், திருக்குள நீர் திருக்கோயில் அபிஷேக ஆராதனைக்கும் பயன்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–40

மேலும், தெப்ப உற்சவம் மற்றும் தீர்த்தவாரி நடத்துவதற்கு ஏதுவாக, சுற்றுச் சுவர் அமைத்து படிகளைச் சீரமைத்து, திருவிழாக்களின் தேவைக்கேற்றவாறு திருக்குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வயலில் ஏரோட்டமும், வீதியில் தேரோட்டமும் முறையாக நடப்பதற்கு முனைப்புக் காட்டும் அரசு, நம் அம்மா அவர்களின் அரசு என்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 49 திருத்தேர்கள் 18 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் சீர்மிகு திட்டங்களால் சீரமைக்கப்பட்டன. இறைவன் உற்சவர் உருவத்தில் அனைத்து மக்களுக்கும் அருட்பார்வை தந்ததில், அகிலம் அகமகிழ்ந்தது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இறையருள் தேடி நெடுந்தூரத்திலிருந்து வரும் பக்தர்கள் இளைப்பாற வசதியாக, அடிப்படை கட்டமைப்புகளுடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் 7 திருக்கோயில்களில் நவீன தங்கும் கூடங்கள் மற்றும் துயில் கூடங்கள் 2 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்களில் திருக்கோயில் நிதி பங்களிப்புடன் 47 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரே நேரத்தில் சுமார் 1,000 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக குடில்கள், அறைகள், துயில் கூடங்கள், உணவகம் போன்ற வசதிகளுடன்கூடிய "யாத்ரி நிவாஸ்" கட்டப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 30–6–2014 அன்று திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 2017–2018 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களில் 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துயில் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இவைதவிர, இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 29 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் பக்தர்கள் தங்குவதற்கு "யாத்ரி நிவாஸ்" பொதுப் பணித் துறைமூலம் கட்டப்பட்டு வருகிறது.

"ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில்" ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் புதிதாக ஓய்வுக் கூடங்கள், குடில்கள், அலுவலகம், தகவல் மையம், உணவருந்தும் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய "யாத்ரி நிவாஸ்" மற்றும் ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீராமானுஜர் மணிமண்டபம் போன்ற பணிகளுக்கு 50 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருக்கோயில்கள் சொந்த நாட்டின் பண்பாட்டுக் களஞ்சியங்கள். இக்களஞ்சியங்களில் உள்ள விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும்பொருட்டு, "உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள்" கட்டப்பட்டு, உலோகத் திருமேனிகள் கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று, விழா முடிந்ததும் மீண்டும் இம்மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் அன்றாட வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை 34 சிலைகளுக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. இம்மையங்களில் 8,803 சிலைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதுகாப்பு மையங்களில் கண்காணிப்பு காமிரா, படக் கருவிகள், கள்வர் எச்சரிக்கை மணி மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பார்க்கும் இடமெல்லாம் விண்ணைத் தொட்டு, நிமிர்ந்து நிற்கும் கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில்களும், அவற்றுள் எழுகின்ற நல்லிசை அரவமும், நான்மறை ஒலியும் தமிழ்நாட்டின் தனிச் சிறப்பாகும். இவை கண்ணையும், கருத்தையும் கவர்வன என்பதால், அனைத்துத் திருக்கோயில்களிலும் சக்தியை மீட்டு, பக்தி பரவசங்கள் பெருக்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருகால பூஜையை உறுதிசெய்ய வேண்டுமென்ற உயரிய எண்ணத்தில், 1986 ஆம் ஆண்டு தொடங்கிய “ஒருகால பூஜைத் திட்டத்தை”, 1993–ல் மக்கள் பங்களிப்புத் திட்டமாக தொடங்கி வைத்தார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் நிதி வசதியற்ற திருக்கோயில்களில் ஒருகால பூஜைத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 241 திருக்கோயில்களில் புதிதாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

பிற்பகல் 3–45

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அடங்காதவர்களுக்கு இரும்புக் கரமாகவும், ஆன்மிக அன்பர்களுக்கு அருட்கரமாகவும், அமைதியைத் தேடுவோர்க்கு தென்றல் வீசும் பூங்காவாகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் உள்ளம் விளங்கியது. அவர்களின் அருட்பார்வையில் இரக்கத்தின் மறுவுருவாய், அனைத்து உயிர்களையும், ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்‘ என்பதற்கிணங்க விநாயகனின் மறுவுருவாய் வரவேற்கும் யானைகளுக்கும் புத்துணர்வு வேண்டும் என்ற புரிந்துணர்வோடு யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாமை 2003–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கினார்கள். இத்திட்டம் அம்மாவின் வழியில் கருணையே வடிவான நம் மாண்புமிகு

முதல்வர் அவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. 2017–2018 ஆம் ஆண்டில் 1 கோடியே 50 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் செலவில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 31 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் ஆக மொத்தம் 33 யானைகள் பங்கேற்று 48 நாட்கள் யானைகள் சிறப்பு நல்வாழ்வு முகாம் நடைபெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதியும், அந்தமும் இல்லா இறைவனை நாளும் பொழுதும் தொழுதிட ஏதுவாக திருக்கோயில்களில் வழிபாடுகள் முறையாக நடத்த வழிவகை செய்யும்வகையில் பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. அந்த வகையில் 18–9–2015 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட திட்டத்தின் தொடர்ச்சியாக பெரிய திருக்கோயில் நிதியிலிருந்து 10 ஆயிரம் சிறு திருக்கோயில்களில் சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட, பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பில் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8–5–2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடும், ஏழை எளியோர்களின் ஏந்தல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடும் கோயில் தரிசனத்தின் முக்கியத்துவம் அறிந்து, முதியவர்களின் முக்கியத்துவம் கருதி மின்கல மகிழுந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நல்வாழ்வு வாழ்ந்திட, நல்லறம் புரிந்திட, காலம் அறிந்து வேண்டுதலுக்கு மலையேற முடியாமல் மலைத்துப்போய் நின்றவர்களுக்கு ரோப் கார் எனும் இழுவை வண்டி திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பழனியில் பக்தர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட இரண்டாவது ரோப் கார் திட்டத்திற்கான பணிகள் 71 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர் திருக்கோயிலிலும் ரோப் கார் வசதி அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தவர்”

எனும் மறைமொழியின் கூற்றின்படி தம் பிறவியின் பயனாக ஆன்மிக அன்பர்கள் மேற்கொள்ளும் புனித யாத்திரைக்கு நிதியுதவி செய்யும் பொருட்டு மாண்புமிகு அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டில் மானசரோவர் புனித பயணத்திற்கு 40 ஆயிரம் ரூபாயும் மற்றும் முக்திநாத் புனித யாத்திரைக்கு 10 ஆயிரம் ரூபாயும் என தலா 250 யாத்ரிகர்களுக்கு வழங்க ஆணையிட்டிருந்தார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் புனித யாத்திரையின் முக்கியத்துவம் கருதி இதன் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தி தலா 500 நபர்களுக்கு நிதியுதவி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதுவரை வரலாறு கண்டிராத வகையில் கோடிக்கணக்கில் பக்தர்கள் பங்கேற்ற கும்பகோணம் மகாமக நிகழ்வின்போது பாதுகாப்பு ஏற்பாடுகள், அத்தியாவசிய தேவைக்கான ஏற்பாடுகள் என அனைத்தையும் மிக மிக சிரத்தையோடு செய்து எந்தவிதமான இன்னலும் இன்றி பக்தர்கள் நீராட வழிவகுத்த சந்தியாத் தாய் பெற்றெடுத்த சமூகநீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை இந்தியாவே பாராட்டியதை இம்மாமன்றம் நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 12–2–2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் திருக்கோயில்களில் தீ விபத்து தடுப்பு மற்றும் இதர பேரிடர்கள் தவிர்க்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன. அத்தகைய அறிவுரைகளின்படி 47 முதுநிலைத் திருக்கோயில்களில் தீ தடுப்பு தணிக்கை, தீ தடுப்பு சாதனங்களைக் கையாளுதல், தீ விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு அளிக்க வேண்டிய முதலுதவி சிகிச்சை குறித்து மாதிரி செயல்முறைகள்மூலம் அந்தந்த மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்களால் திருக்கோயில் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் தேவையான எண்ணிக்கைகளில் தீயணைப்புக் கருவிகள், மணல், தண்ணீர் வாளிகள், மின்தடை கருவிகள் போன்ற தீ தடுப்பு சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. தல விருட்சங்கள் மற்றும் திருக்கோயில் திருத்தேர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அறம் வளர்த்து அருந்தமிழ்நாட்டைக் காத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கலையில் கலைவாணியாய், கருணையில் செல்வத் திருமகளாய், ஆற்றலில் மலைமகளாய், ஆலயத்தில் இல்லாமல் இருந்தாலும் எங்கள் இதயக் கோயிலிலே வாழ்கின்ற முப்பெரும் சக்தியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை ஏற்படுத்தியும், நாடெங்கும் அம்மா உணவகம் திறந்தும் கோடானுகோடி மக்களின் பசிப்பிணி தீர்த்த எங்கள் சொக்கத் தங்கம் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த சொர்க்கத்திற்கே இப்போது அரசியாக ஆகியிருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3—50

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஆகம விதிகளின்படி, பண்டைய கலாசாரத்தையும், சுகாதார மற்றும் தூய்மையையும் அனைத்து திருக்கோயில்களிலும், 100 விழுக்காடு பராமரித்து வருகிறது. இதனை அங்கீகரிக்கும் விதமாக, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய அரசு, மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைத் தூய்மையான புனிதத் தலமாக தேர்வு செய்து கடந்த 2—10—2017 அன்று 'தூய்மை இந்தியா' விருது வழங்கியுள்ளது.

மேலும், பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்கான 2017 ஆம் ஆண்டுக்கான விருது ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு கடந்த 1—11—2017 அன்று யுனெஸ்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்டது. இது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குக் கிடைத்த நற்சான்றாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

'பெற்ற தாயினை மகன் மறந்தாலும்,
பிள்ளையைப் பெற்ற தாய் மறந்தாலும்,
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறைந்தாலும்
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்
நற்றவத்தால் உள்ளிருந்து ஒளிரும்'

மாண்புமிகு அம்மா அவர்களை தமிழக மக்கள் மறக்க மாட்டார்கள், மறக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்வாதாரமாகத் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்கி அவர்களின் அருளாசியின் நீட்சியாக வாழ்வாங்கு வாழ எம்மை வாழ்த்துவார்கள் என்று கருதி, அவர்களின் ஆசியோடு துறையை வழிநடத்த வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எனக்கு உறுதுணையாக விளங்கும் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிமுன் அன்சாரி அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கண்ணபுரம் அருள்மிகு சவுரிராஜ பெருமாள் திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இந்தத் திருக்கோயிலில் 14–9–2005 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. 12 ஆண்டுகள் கடந்த நிலையில் இத்திருக்கோயிலின் பழமை மாறாமல் திருக்கோயிலில் திருப்பணிகளைச் செய்ய தொல்லியல் நிபுணர்களின் கருத்துகளைப் பெற்று அதனடிப்படையில் மாண்பமை உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையைப் பெற்று, மேற்படி பரிந்துரையில் தெரிவித்துள்ளவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டவுடன் கும்பாபிஷேகம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019 ஆம் ஆண்டிற்கான இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகளை மட்டும் வாசிக்கின்றேன். மற்ற விவரங்களை நான் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் மூன்று நிலை இராஜகோபுரம் ரூபாய் 52 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் அமைக்கப்படும்.

2. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், நெடுங்குளம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 33 இலட்சம் மதிப்பீட்டில் முன் மண்டபம், மதிற்சுவர் மற்றும் புனரமைப்புப் பணிகள் திருக்கோயில் நிதியில் மேற்கொள்ளப்படும்.

3. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மேலையூர், பூம்புகார் கல்லூரியில் ரூபாய் 3 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி மேம்பாட்டு நிதியில் 24 வகுப்பறைகள் கட்டப்படும்.

4. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கரூர் மாவட்டம், வெண்ணெய்மலை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், அம்மாபேட்டை, சன்னியாசிகுண்டு, அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மலை அடிவாரத்தில் ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயிலில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும் திருமண மண்டபங்கள் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம், மருத்துவம்பாடி, அருள்மிகு சீதாபட்டாபிராமர் திருக்கோயிலில் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கல்யாண திருமண மண்டபம் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

5. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலால் நடத்தப்படும் ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் கலையரங்கம் கட்டப்படும்.

6. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், திமிரி, குமரகிரி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு மலைப்பாதை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி/பொதுநல நிதியில் மேற்கொள்ளப்படும்.

7. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், வெண்குன்றம், அருள்மிகு தவளகிரீஸ்வரர் திருக்கோயில் செல்வதற்கான மலையில் ரூபாய் 64 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநல நிதியில் படிக்கட்டுகள் அமைக்கப்படும்.

8. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், கூழமந்தல், அருள்மிகு பேசும் பெருமாள் திருக்கோயிலில் இளைப்பாறும் மண்டபம் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி/பொதுநல நிதியில் கட்டப்படும்.

9. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், தண்டரை, சேர்ப்பாக்கம், அருள்மிகு மன்னார்சாமி மற்றும் பச்சையம்மன் திருக்கோயிலில் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் 5 பக்தர்கள் தங்கும் அறைகள் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

10. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், புதுப்பாளையம் அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய மரத்தேர் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மற்றும் நகர் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் சுவாமி திருத்தேர் ரூபாய் 98 இலட்சம் மதிப்பீட்டிலும், விநாயகர் திருத்தேர் ரூபாய் 16.50 இலட்சம் மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், வடச்சேரி, அருள்மிகு சென்னகேசவப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், சிறுபுலியூர், அருள்மிகு கிருபாசமுத்திரப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், குள்ளம்பாளையம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய திருத்தேர்கள் திருக்கோயில் நிதி/தேர் திருப்பணி நிதியில் செய்யப்படும்.

11. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பெருநகர், அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலில் திருத்தேர் கொட்டகை ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி/பொதுநல நிதியில் அமைக்கப்படும்.

12. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவள்ளூர் மாவட்டம், ஆவடி, கோயில்பதாகை அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயிலின் திருக்குளம் ரூபாய் 32 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி/பொதுநல நிதியில் செப்பனிடப்படும்.

13. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் கழிவறை, குளியலறைகள் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலில் கழிவறை மற்றும் குளியலறை ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை

மாவட்டம் மற்றும் வட்டம், தமராக்கி அருள்மிகு கலியுக வரத அய்யனார் திருக்கோயிலில் ரூபாய் 7 இலட்சம் மதிப்பீட்டிலும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் திருக்கோயில் நிதியில் செய்யப்படும்.

14. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், தேவனாம்பாளையம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் முன் மண்டபம் மற்றும் சுற்றுச்சுவர் ரூபாய் 27 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இடைக்கோடு அருள்மிகு பேரூர் மகாதேவர் திருக்கோயிலில் சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை ரூபாய் 44 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் நிதி/பொதுநல நிதியில் அமைக்கப்படும்.

15. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகமும், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு அருள்மிகு பச்சையம்மன் திருக்கோயிலில் ரூபாய் 64 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் மற்றும் பக்தர்கள் தங்கும் அறைகள் ஆகியவை திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

16. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், தமராக்கி, அருள்மிகு ஏழைக்காத்தம்மன் திருக்கோயில் சுற்றுச்சுவர், பாதுகாப்பு கருதி ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநல நிதியில் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–55

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் வழிகாட்டுதலோடும், நான் இந்த மாமன்றத்தில் வைத்த கருத்துகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மன நிறைவு அளித்திருக்கும் என நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் அளித்த

வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன், நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தமில்லா உயிர்மொழியே, அகிலத்தின் முதல்மொழியே, முத்தமிழே, அம்மா கண்டெடுத்த அறிவியல் தமிழே, என்னை வாழ வைக்கும் தமிழுக்கு முதல் வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

'பிறந்த நாடே சிறந்த கோயில், பேசும் மொழியே தெய்வம், இதை அறிந்து நாளும் வாழ்ந்து வந்தால், கோபுரம் ஆகும் இல்லம்' என்றும், 'விழி போல எண்ணி நம் மொழி காக்க வேண்டும்' என்றும், நடித்த படங்களை எல்லாம் பாடமாக நமக்கு வடித்துத் தந்த புன்னகையின் தாயகம், பூக்களின் பிறப்பிடம், சத்தியத் தாய் ஈன்றெடுத்த சத்தியத்தின் மறுவுருவாய்,*(மேசையைத் தட்டும் ஒலி)* கலை உலகின் ரக்ஷகனாய், கருணையில் கர்ணனாய், பாரதத்தில் முதன்முதல் மொழிக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்று 50 ஏக்கர் இடம் வேண்டி, அருந்தமிழ் அறிஞர்கள் அனைவரும் வந்து கேட்டபோது, என் அன்னைத் தமிழுக்கு 50 ஏக்கரா? எடுத்துச் செல்லுங்கள் 1,000 ஏக்கர் என்று சொல்லி தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி, *(மேசையைத் தட்டும் ஒலி)* 100 ஆண்டு கண்ட தமிழ்ப்பாராண்ட புரட்சித் தலைவருக்கு இதய அஞ்சலி.

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின்மீது தனி அரசாணை, பொழுதெல்லாம் இறைப் பேரருள், நெறியில் நாட்டம் என்று பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்து சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில், உலகத் தமிழ்ச் சங்கம் உருவாக்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடியினை என் கண்ணிமையில் வருடி, நெஞ்சார்ந்த நன்றியுடன் நவில்கின்றேன், என் வணக்கத்தை, அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)*

உள்ளத்தில் உண்மை ஒளி ஊற்றெடுத்து நிற்பதனால், வாக்கில் ஒளியுடன், பொற்கால ஆட்சி தரும் முதல்வர் அண்ணன் எடப்பாடியாருக்கு என் வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விசுவாசம் என்னும் சொல்லுக்கு இலக்கணமாய், கோடானுகோடி தொண்டர்களின் அரவணைப்பாக, இரண்டாம் முறையாக இரட்டை இலையை உயிர்த்தெழச் செய்த மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அண்ணன் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

கந்தக பூமியின் கடைக்கோடி கிராமத்தில் பட்டாசு ஆலைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து, மனித வள மேம்பாட்டு நிபுணராக தொழில் அடையாளம் மட்டுமே இருந்த எனக்கு, அரசியல் முகம் தந்து, பெருந்தலைவரின் புண்ணிய பூமியாம் விருதுநகரில் வெற்றி பெற வைத்து, இரண்டாம் முறையாக இரும்புக் குதிரைகளின் பிறப்பிடமான, Mini India ஆவடியில் இரட்டை இலையில் வெற்றி பெற வைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், விருதுநகர் மற்றும் ஆவடி தொகுதி மக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

5 ஆண்டுகளுக்கு முன்னால் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, சந்தித்து கழகத்தில் என்னை உணர்வுபூர்வமாக இணைத்துக் கொண்ட அதே நாளில் இன்று தமிழ்த் துறையில் பேச வாய்ப்பளித்த, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. டாக்டர் தமிழ்க் குடிமகன், தேவநேய பாவாணர், பேராசிரியர் நன்னன், முனைவர் அவ்வை நடராஜன், முனைவர் வ.வே. சுப்பிரமணியன், சிலம்பொலி செல்லப்பன், போன்ற உன்னதமான தமிழ் அறிஞர்கள் அனைவரும் பணிபுரிந்த இந்தத் தமிழ்த் துறையில், இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் செயல் திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு தமிழ்த் துறையில் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். முதலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரைக்கும் எங்கள் பார்வை வேறு, சித்தாந்தம் வேறு, கொள்கைகள் வேறு. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இத்தனை வருட பங்களிப்பு ஒரு பக்கம் என்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வையில் தமிழுக்கு நாங்கள் அளித்த பங்களிப்பு, நிலைத்து நீடித்த பங்களிப்பு என்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) சிலை வைப்பது, மணிமண்டபம் கட்டுவது, வெளிச்சம் போட்டுக்

காட்டுவது போன்ற அனைத்தையும் நாங்கள் செய்தோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் செய்யாதது, அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது என்ன என்பதை மட்டும் நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். இதற்கு 2016 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, இரண்டு முக்கிய ஆய்வுகள் உலக அளவில் வந்தன. இரண்டுமே UNESCO படைத்த ஆய்வுக் கட்டுரைகள். முதலாவதாக, George Weber என்றவர் எடுத்துச் சொன்ன உலக மொழிகள் ஆய்வு. Ethnologue என்று சொல்லக்கூடிய Geolinguistic ஆய்வு. அதாவது, உலக மொழிகளில் எது அழியும், எது அழியாது என்று அனைத்து மொழிகள் பற்றியும் நடைபெற்ற ஆய்வு. அதேபோல், இரண்டாவது, UNESCO படைத்த Language Vitality and Endangerment. மொழிகளின் உயிர்ப்பு சார்ந்த ஓர் ஆய்வு. இந்த இரண்டு ஆய்வுகளும் சேர்ந்து சொல்கிற ஒரு விஷயம் என்னவென்றால், உலகத்தில் 6,500 மொழிகள் இருக்கின்றன. 755 கோடி மக்கள் இருக்கிறார்கள். இதிலே 2,000 மொழிகள் 1,000 பேருக்குக் கீழே பேசுகின்ற மொழிகள். இன்னும் ஐந்து முதல் பத்து வருடங்களில் இந்த மொழிகள் அழிந்துவிடும். மொழிகள் அழிந்து கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 4—00

அதேபோல, ஒரு கோடி பேருக்கு மேலே பேசக்கூடிய மொழிகள் 83. உலகத்திலே இருக்கின்ற மனிதர்களில் நூற்றுக்கு ஒருவராவது பேசக்கூடிய மொழிகள், அதாவது 7½ கோடி மக்கள் பேசக்கூடிய மொழிகள் இருபதே மொழிகள்தான். அந்த 20 மொழிகளுக்கும் அவர்கள் ஒரு criteria போட்டு, எந்த மொழி உலகத்தில் செல்வாக்குமிக்க மொழியாக இருக்கிறது என்று ஒரு survey எடுத்து, இதைக் கண்டுபிடித்தார்கள். அதிலே என்ன criteria, என்ன கட்டுப்பாடுகள், கடப்பாடுகளை எடுத்து வைத்தார்களோ, அந்த விஷயங்களையெல்லாம் எடுத்து, பத்து அம்ச செயல்பாடுகளை இன்றைக்கு தமிழ் வளர்ச்சித் துறையிலே நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த 20—லே ஆங்கிலத்திலிருந்து French, Spanish, Arabic, Mandarin, Russian, Portuguese, German, Japanese, இந்தியையும், உருதையும் சேர்த்து Hindustani, Bahasa, Persian, Swahili ஆகிய 13 மொழிகளுக்கு அடுத்து, இந்திய மொழிகளில் இரண்டாம் மொழியாக இங்கே வருவது தமிழ். இதிலே 14—வது இடத்தில் தமிழ் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் நாம் எடுத்து

வைக்கக்கூடிய விஷயம் என்னவென்றால், தமிழ் மொழியை 14–வது இடத்திலிருந்து 10–வது இடத்திற்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் கொண்டுவர முடியும் என்று நான் நம்புகிறேன்.

அதற்காக வகுத்த செயல் திட்டங்களை நான் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். அந்த ஏழு அம்சங்கள் என்னவென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஒன்று, முதல் மொழியாக, ஒரு மொழிக்கு செல்வாக்குத் தருவது என்பது, அந்த மொழியை முதல் மொழியாகப் பேசுவோர்கள் உலகத்தில் எத்தனை பேர்? தமிழுக்கு இன்றைய தேதியில் 10½ கோடி மக்கள் உலகத்திலே தமிழை முதல் மொழியாக—தாய்மொழி என்று நாம் சொல்வோம், ஜெர்மனி மொழியில் தந்தை மொழி என்று சொல்வார்கள்—பேசுகிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 7.8 கோடி மக்கள், தமிழகத்திற்கு வெளியே, இந்தியாவில் இருக்கக்கூடிய 1 கோடியே 32 இலட்சம் மக்கள், இந்தியாவிற்கு வெளியே 142 நாடுகளில் இருக்கக்கூடிய 1 கோடியே 38 இலட்சம் மக்கள் என மொத்தம் 10½ கோடி மக்கள் இன்றைக்கு தமிழை முதல் மொழியாகப் பேசுகிறார்கள்.

அதையடுத்து, அடுத்த criteria வந்து, இந்த தமிழ் மொழியினை இரண்டாவது மொழியாக, மூன்றாம் மொழியாக, அறிந்தவர்கள் எத்தனை பேர்? இதையும் பார்க்கிறார்கள். அதைப் பொறுத்து செல்வாக்கு கூடும் அல்லது குறையும். இன்றைக்கு English–ஐ எடுத்துக்கொண்டால் 50 கோடி பேர் முதல் மொழியாகப் பேசுகிறார்கள் என்றால், 200 கோடி பேர் இரண்டாம் மொழியாக, மூன்றாம் மொழியாக, நான்காம் மொழியாக அறிந்தவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் இன்றைக்கு செல்வாக்குமிக்க மொழிகளில் முதல் மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. இதை மாற்றுவது எப்படி?

மூன்றாவதாக, எத்தனை நாடுகள், மாநிலங்கள் உலகத்தில் அந்த மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்? இன்றைக்கு தமிழகம், புதுச்சேரி இரண்டு மாநிலங்கள், அதேபோல கனடாவில் இருக்கின்ற Ontario மாநிலம், சிங்கப்பூர் நாடு, மலேசியா நாடு ஆகிய இந்த ஐந்து இடங்களில்தான் ஆட்சி மொழியாகத் தமிழ் இருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு மோடி அவர்களைச் சந்தித்தபோது எடுத்து வைத்த முதல் கோரிக்கையே, தேசிய ஆட்சி மொழியாக தமிழைக் கொண்டுவர

வேண்டும் என்பது. அதற்கு அடித்தளம் இதுதான். இன்றைக்கு ஆட்சி மொழியாகத் தமிழ் வரவேண்டும் என்று கனடாவில் 2 மாநிலங்களில் கேட்கிறார்கள், U.S.A.–ல் 4 மாநிலங்களில் கேட்கிறார்கள். அதற்கெல்லாம் ஊக்கமும், ஆக்கமும் தருவது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு.

நான்காவது, எத்தனை துறைகளில், எத்தனை புலங்களில், எத்தனை தலங்களில் அந்த மொழி கோலோச்சுகிறது? எத்தனை fields, disciplines இருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்தீர்கள் என்றால், வணிகம் என்றால் ஆங்கிலம், கலை என்றால் French, விஞ்ஞானம் என்றால் German, Fashion என்றால் Italian, இந்த மாதிரி ஒவ்வொரு மொழிக்கும் மேலே போவதற்கு ஒரு துறையோ, ஒரு புலமோ, ஒரு தலமோ அடையாளமாக இருந்திருக்கிறது.

ஒரு காலத்தில் Print media, visual media ஆக ஆகி, visual media, social media ஆக துவங்கிய காலத்தில் இணையத்தில் உலகளாவிய World Wide Web உருவாகி வந்த காலகட்டத்திலே தமிழ்மொழி உலகத்தில் பயன்படுத்தப்பட்ட இணைய மொழிகளில் மூன்றாவது மொழியாக இருந்தது. அதன்பிறகு 10–வது மொழியாக நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இதை மேலே கொண்டு செல்வோம் என்றால், செல்வாக்கு மிக்க மொழிகளைத் தாண்டி நாம் மேலே வர வேண்டும்.

ஐந்தாவதாக, அந்த மொழியைப் பயன்படுத்தும் நாடுகளில், மாநிலங்களின் பொருளாதார வலிமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் வணிகத்திற்கு ஆங்கிலம் என்று வந்ததனாலே ஆங்கிலம் எல்லா இடங்களிலும் பரவியது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 4–05

ஆறாவதாக, கலை, இலக்கிய கீர்த்தி, தொன்மை, வளமை. இதில்தான் நாம் நன்றாக பெரிய அளவில் score பண்ணுகிறோம். இதில் பெரும்பாலும் என்ன நடக்கிறது என்றால், நாம் சரியாக ஆவணப்படுத்துவதில்லை. அதனால் ஆவணப்படுத்துதலை முதன்மை செயல் திட்டமாக இந்த அரசு வகுத்திருக்கிறது.

ஏழாவது social prestige. இந்த மொழியை பேசுகிறவர்களும், பேசாதவர்களும் அந்த மொழியில் பேசுவது மதிக்கத்தகுந்தது என்று எண்ணுகிறார்களா? இது social prestige.

இந்த ஏழு அம்சங்களையும் உள்ளடக்கி, 10 அம்ச செயல் திட்டங்களை இந்த அரசு வடிவமைத்திருக்கிறது. முதலாவது, தமிழ் வள மையம் மூலமாக, தமிழ் பண்பாட்டு மையம் மூலமாக தமிழ்ப் பல்கலைகழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுத்தல்; இரண்டாவது, உலகத் தமிழர்களை ஒரு தாய் மக்களாக ஒருங்கிணைத்திடல்; மூன்றாவது, ஆன்மிக தமிழ், அறிவியல் தமிழை வளர்த்தெடுத்தல்; இதை தி.மு.க. செய்யவில்லை. ஏனென்றால் ஆன்மிகத்தின்மீது நம்பிக்கையில்லாத ஓர் அரசாங்கம் அதாவது non–believers என்று ஓர் எண்ணத்தை முன்வைத்ததால், எந்தவிதமான ஆன்மிக தமிழ் வளர்ச்சிக்கும் எதையும் செய்யவில்லை. ஏனென்றால், தமிழை வளர்த்தவர்கள் ஆன்மிக நண்பர்கள் தான். தேவாரம், திருவாசகம் காலமாக இருக்கலாம், நாலாயிரதிவ்யபிரபந்த காலமாக இருக்கலாம், அண்மையில் வாரியார், கீரன், கி.வா.ஜ. காலமாக இருக்கலாம். ஆன்மிகத் தமிழை வளர்தெடுத்தது ஆன்மிகம் சார்ந்தவர்கள்தான். புரட்சித் தலைவி அம்மாவை பொறுத்தவரைக்கும், அறிவியல் தமிழிற்கு எந்த அளவிற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தார்களோ, அதேபோல ஆன்மிக தமிழையும் மதித்தார்கள், ஊக்கம் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான்காவது, நண்பர் தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள், அகரமுதலி கொண்டுவந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று சொற்குவையாக இந்தத் திட்டம் உருமாற்றப்பட்டு, மிகப் பெரிய அளவில் கொண்டு செல்லப்படுகிறது. ஒரு மொழிக்கு அடித்தளம் சொற்கள், சொற்றொடர்கள். புதிதாக இருக்கக்கூடிய ஒவ்வொரு சித்தாந்தமும், சொற்களை, சொல்பிரவாகத்தைக் கொண்டு வருகின்றன. அந்த சொல்பிரவாகத்திற்கு தமிழ் சொற்கள் வர வேண்டும். அந்த தமிழ் சொற்கள் அடையாளப்படுத்தப்பட வேண்டும். அதேபோல வேர்ச்சொல்லை தேடி அலைகிறார்கள். இங்கிருக்கின்ற 18 நண்பர்கள், இந்த அகரமுதலியில் ஒவ்வொரு சொல்லுக்கும் வேர்ச்சொல் எது, அதற்கு இலக்கியத்தில் என்ன அடையாளம் இருக்கிறது என்று தேடிப்பிடித்து, அதை எளிமைப்படுத்தி மக்களிடம் கொண்டு சேர்க்கிறார்கள். இந்த இடத்தில்தான் நாங்கள் ஒரு Toll–free number வைத்து, யார் வேண்டுமானாலும் என்ன வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று phone செய்து கேட்டுக்கொள்ளலாம் என்ற திட்டத்தினைச் செயல்படுத்த உள்ளோம். ஐந்தாவது, தமிழ் படைப்பாளிகளை மகிமைப்படுத்துதல், தமிழ் வளர்த்தவர்களை மகிமைப்படுத்துதல். ஆறாவது, தமிழ் ஆய்வுகளை நெறிப்படுத்துதல், தரம்

உயர்த்துதல், ஒருங்கிணைத்தல். இதற்காக வரப்போகிற திட்டம் Tamil Research Portal. அதாவது ஆய்வு வலைதளம் ஒன்றை உருவாக்கப்போகிறோம். அந்த செயல்திட்ட வடிவிற்கு அடிப்படை Weber உடைய ஆய்வு. ஏழாவது, ஆட்சிமொழி அமலாக்கம், ஆட்சிமொழி விரிவாக்கம். அமலாக்கம் என்பது எப்பொழுதுமே நடந்துகொண்டிருக்கின்ற ஒரு விஷயம். ஒவ்வொரு department—லும் போய் அவர்கள் சரியாக தமிழைப் பயன்படுத்துகிறார்களா? தமிழில் கையெழுத்து போடுகிறார்களா? என்று பார்க்கிற வேலை ஆட்சி மொழி அமலாக்கம். ஆட்சி மொழி விரிவாக்கம் என்பது, இன்றைக்கு உலகளவில் எத்தனை மாநிலங்களில் தமிழை ஆட்சி மொழியாக்க முடியும் என்று ஆய்ந்து அந்த முயற்சிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தருவது புரட்சித் தலைவி அம்மாவின் அரசாங்கம். அதனால்தான் கனடாவில் உள்ள Ontario—விலிருந்து பேசினார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* U.S.A—ல் இருக்கிற சில மாநிலங்களில் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. மலேசியாவில் பல வருடங்களாக இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டுவருகிறது. இது எல்லாவற்றிற்கும் வலு சேர்ப்பது அம்மாவின் அரசாங்கம். எட்டாவது, நல்ல தமிழுக்காக, களங்களை விரிவுபடுத்துதல். களங்களை, தலங்களை, புலங்களை விரிவுபடுத்துதல். இதில் நீதிமன்றத்தில் தமிழ், பள்ளிக் கல்வியில் தமிழ் மற்றும் பல இடங்களில் தமிழைக் கொண்டுவருவதற்கு தலங்களை விரிவுபடுத்துதல். ஒன்பதாவது, தமிழின் தொன்மையை, வளமையை ஆவணப்படுத்துதல். திராவிட முன்னேற்றக் கழகம் பெரிதாக செய்யாத விஷயம் இது. நாங்கள் ரொம்ப painstaking ஆக எடுத்து, ரொம்ப ஆழமாக வேர்ப்பிடித்து இதை செய்துகொண்டிருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆவணப்படுத்துதல், வெளிச்சம் தருதல், உலக அங்கீகாரம் பெறுதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எத்தனையோ வருடங்கள் தி.மு.க. ஆட்சியில் இருந்தது. திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்தீர்கள். நாங்கள் என்ன முயற்சி எடுத்திருக்கிறோம் என்றால், UNESCO மூலமாக Intangible Heritage என்று சொல்லக்கூடிய உலக புத்தகமாக திருக்குறளை அங்கீகரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* பத்தாவதாக, எல்லாவற்றிற்கும் மேலாக, இளைஞர்களை, அடுத்த தலைமுறையினை தமிழ்பால் ஈர்த்தல், தமிழின்பால் தக்க வைத்தல். தமிழில் அவர்களை retain செய்ய வேண்டும். வெளியில் விட்டுவிடக் கூடாது. இதற்காகத்தான் இந்த பத்து அம்சங்கள். ஒவ்வொரு அம்சத்திற்கும் ஒரு நிமிடம் மட்டும் நான் பேசிவிட்டு அமர்ந்துவிடுகிறேன்.

பிற்பகல் 4—10

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுத்தலை பொறுத்தவரைக்கும், இந்த வருடம்—National Assessment and Accreditation Council–NAAC—ல் A++ வாங்கப்போகிற ஒரு பல்கலைக்கழகமாக உருமாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் வளர் மையம் இங்கே இயங்கத் துவங்கும். இந்த வருடத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்ற 2 கோடி ரூபாய் உதவியில் தமிழர்கள் 1 இலட்சம் பேர்களுக்கு மேல் இருக்கக்கூடிய 16 நாடுகளில் அந்த நாட்டின் உதவியுடன், அந்த நாட்டில் இருக்கக்கூடிய தமிழ்ச்சங்கங்களின் ஆதரவுடன், பள்ளிக் கல்வித் துறை ஆதரவுடன் அந்த இடங்களில் நல்ல ஆசிரியர்கள் வைத்து Net மூலமாக தமிழ் கற்றுக்கொடுப்பதற்கு ஒரு Central Technology Structure-ஐ உருவாக்கப் போகிறோம், இன்றைக்கு இந்தி பிரச்சார சபா, வருடத்திற்கு 500 கோடி ரூபாயை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டு எந்த அளவுக்கு இந்தியை உலகம் முழுவதும் கொண்டு செல்கிறார்களோ, அதைவிட ஒரு மாற்று அதிகமாக நம்முடைய தமிழ் வளர் மையம் மூலமாக இந்த 16 நாடுகளிலும் கட்டமைப்பை உருவாக்கி அவர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுக்கப் போகிறோம். மொரிசியஸ், U.S.A., Reunion Islands, சவுத் ஆப்பிரிக்கா, பிரான்ஸ், கனடா, ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், Trinidad and Tobago, மியான்மர், U.K., Fiji Islands, ஆஸ்திரேலியா, U.A.E. இந்தோனேசியா, இந்த 16 நாடுகளிலும் இட்டமைப்பை உருவாக்கித் தமிழைக் கற்றுக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மொரிசியஸ்—ல் வெகு விரைவில் தொடங்க இருக்கிறது. அதைப்போல இந்தியாவில் தமிழர்கள் அதிகமாக வாழும் பத்து இடங்களில் டெல்லி துவங்கி, பெங்களூரு, மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத், திருவனந்தபுரம், அகமதாபாத் அலகாபாத், போபால், அந்தமான் என பத்து இடங்களை அடையாளப்படுத்தியிருக்கிறோம். அங்கிருக்கும் அமைப்புகளில் உள்ளவர்களுடன், ஏற்கெனவே பணிபுரிந்து கொண்டிருப்பவர்களுடன் நாம் சேர்ந்து பணியாற்ற இருக்கிறோம். அவர்களுக்கு contents, syllabus புத்தகங்கள் கொடுக்க இருக்கிறோம். சில இடங்களில் தமிழ் ஆசிரியர்களை அங்கு அனுப்ப வேண்டிய கடப்பாடு இருக்கிறது. டெல்லியில் மிக விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது. அந்த இடத்தில் ஏற்கெனவே ஆட்களை எடுத்துவிட்டார்கள். அதேபோன்று கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், வளமையான

கட்டடங்களை மேம்படுத்துதல், கலையரங்கத்தை கொண்டு வருதல், சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகியவற்றையும் மேற்கொள்ள இருக்கிறோம். 1,000 ஏக்கர் நிலத்தில் இப்போது 825 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறோம். ஹார்வர்டு பல்கலைக்கழகமே மொத்தம் 365 ஏக்கர் நிலம்தான் வைத்திருக்கிறது. ஆனால், தமிழுக்காக நாம் உருவாக்கியிருக்கிற பல்கலைக்கழகம் 825 ஏக்கரில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பல்கலைக்கழகத்தில் நல்ல கட்டமைப்பை உருவாக்குதல், சிற்பக் கலைக் கூடம் உருவாக்குதல், மின்னணு நூலகத்தை உருவாக்குதல், நூலக அரங்கம் உருவாக்குதல் என பல பணிகளை மேற்கொண்டு, இந்தியாவில் இருக்கும் மொழிக்கான பல்கலைக்கழகங்களில், தொன்மையான பல்கலைக்கழகம் என்ற பெயர் மட்டுமல்லாமல், முதன்மையான பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற நிலையை உருவாக்குவதற்கு அம்மாவின் அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

உலகத் தமிழர்களின் ஒருங்கிணைப்பைப் பொறுத்தவரையில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தினை, 50 தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பாக உருவாக்கப்போகிறோம். அதாவது, 20 நாடுகளிலிருந்து ஒவ்வொரு நாட்டுக்கு ஒரு தமிழ்ச் சங்கம், பத்து மாநிலங்களிலிருந்து, ஒரு மாநிலத்திற்கு ஒரு தமிழ்ச் சங்கம், தமிழ்நாட்டில் இருக்கின்ற 20 தமிழ்ச் சங்கங்களை உறுப்பினர்களாக, இந்த சொசைட்டியில் உருமாற்றி அவர்கள் இந்த உலகத் தமிழ்ச் சங்கத்தை முன்னெடுத்து செல்வார்கள்.

இரண்டாவது, தமிழ் வளர் மையம், தமிழ் பண்பாட்டு மையத்தின், தமிழ்ச் சங்கங்களின் பங்களிப்பு, நல்கைகள் இதையெல்லாம் முறைப்படுத்தி, அந்தந்த இடத்தில் இருக்கின்ற தமிழ்ச் சங்கங்களுக்கு வாய்ப்புகள் தரப்போகிறோம். இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு கண்டவர் பேரறிஞர் அண்ணா, 5 ஆம் உலகத் தமிழ் மாநாடு கண்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 8 ஆம் உலகத் தமிழ் மாநாடு கண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு (மேசையைத் தட்டும் ஒலி) நடக்கும் என்ற ஓர் உன்னத உறுதியைத் தந்திருக்கிறார். அடுத்த வருடம் நடக்கக்கூடிய சிக்காகோ உலகத்

தமிழ் மாநாடு, சிகாகோவில் நடக்கவிருக்கிறது. எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தீர்கள் செம்மொழி தமிழ் மாநாடு என்று—உலகத் தமிழ் மாநாட்டை நடத்தக்கூடிய அதிகாரம் படைத்த அமைப்பு I.A.T.R. – International Association for Tamil Research அனைத்துலக தமிழ் ஆய்வு அமைப்புகளின் கூட்டமைப்பாக அது விளங்குகிறது. அந்த அமைப்போடு இணைந்து இந்த உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாட்டை இரண்டு வருடங்களுக்கொருமுறை நடத்துவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த அரசாங்கம் எடுக்கும். 16 தமிழ் கூறும் நல்லுலகில் பல நாடுகளில், இந்த உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவதற்கு உறுதுணையாக இருப்போம். சென்ற முறை அம்மா அவர்கள் மலேசியாவில் தமிழ் மாநாடு நடத்துவதற்கு ஒரு கோடி ரூபாய் பங்களிப்பு அளித்து, எல்லாவிதமான உதவிகளையும் அளித்ததினால்தான் மலேசியாவில் நடந்தது. இதுவரை 4 இடங்களில்தான் நடந்துள்ளது. இந்தியா தவிர, மலேசியா, இலங்கை, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடந்திருக்கிறது. மற்ற 12 நாடுகளிலும் நடத்துவதற்கு இந்த அமைப்புக்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கும். அதைப்போல Exchange Programmes. Mohammed Idris University, Malaysia உடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டு, அங்குள்ள மாணவர்கள் இங்கு வருகிறார்கள்; இங்கு இருக்கும் மாணவர்கள் அங்கு போகிறார்கள். இந்த Exchange Programmes–ஐ உலகத்தில் இருக்கக்கூடிய தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் அனைத்துடனும் மேற்கொள்ள தமிழ் பல்கலைக்கழகத்திற்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்படும். ஆசியாவியல் நிறுவனத்தை இன்று முழுமையாக தமிழக அரசாங்கம் செயல்பட வைத்திருக்கிறது. ஜப்பான் தமிழ், கொரியா தமிழ், சைனா தமிழ் இந்த உறவுகளை மேம்படுத்த எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். உலகப் புகழ் பெற்ற கவிஞர், இந்த முறை நோபல் பரிசுக்கு nomination செய்யப்பட்டு இருக்கிற Kim Yang Shik அவர்களுடைய நூல்களை இங்கு தமிழில் வெளியிட்டிருக்கிறோம். மொழிபெயர்ப்புத் துறை மிகுந்த அக்கறையுடன் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. அதைப்போல ஆன்மிகத் தமிழ், அறிவியல் தமிழ் பொறுத்தவரைக்கும் இணையத் தமிழில் 3–வது இடத்திலிருந்து 10–வது இடத்திற்கு வந்திருக்கிற தமிழை மீண்டும் மீட்டுக் கொண்டுவருவதற்கு பெரு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 4–15

உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் அந்த அம்மா மென் தமிழ் சொல்லாளரை கொஞ்சம் பாருங்கள். வில் ஆள்பவன் விஜயன் என்றால் இணையத்தில் சொல் ஆள்பவன் தமிழன் என்ற நிலையை உருவாக்குவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் கைகளில் அதைக் கொடுத்திருக்கிறோம். எத்தனை பேருக்கு இது தெரியும் என்று தெரியாது. Artificial Intelligence என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில்நுட்பத்தில் மிகப் பெரிய தொழில்நுட்பமாகும். Smart Phone–ல் ஒரு alphabet தட்டினீர்கள் என்றால் அந்த வார்த்தைகள் எழுந்து நிற்கும் விந்தையினை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். அந்த விந்தையைத் தமிழில் செயல்படுத்த முடியும் என்று இந்திய மொழிகளிலே முதன்முறையாக ஒரு word processor–ஐ தமிழில் போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் கைகளில் இலவசமாகக் கொடுத்திருக்கிறோம். எல்லோரும் Net–ல் போய் பார்த்தீர்களென்றால் தமிழ், இணையத் தமிழ் இன்னும் மேலோங்கி வரும். நாம் இருந்த அந்த மூன்றாவது இடத்தை மீண்டும் அடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதைப்போல, IT துறையில் இருக்கக்கூடிய Tamil Virtual Academy மூலமாக இன்றைக்கு 18,012 நபர்களுக்கு தமிழ்ப் பல்கலைக்கழகம் மூலமாக எல்லா இடங்களிலும் பட்டயப் படிப்பு மற்றும் Diploma, Certificate இதுபோக இன்றைக்கு Graduation–ம் தந்து கொண்டிருக்கிறோம். இவையெல்லாமே இணையத் தமிழ் மேலே போவதற்கான எண்ணம்.

அகர முதலி சொற்கோவையை பொறுத்தவரைக்கும், சொற்கோவைத் திட்டம் மிக விரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட இருக்கிறது. தமிழின் அடித்தளத்தை வலுப்படுத்தக்கூடிய முயற்சி இது. சொற்கள், சொற்றொடர்கள், கலைச் சொற்கள், புது தத்துவங்கள், கண்டுபிடிப்புகளால் உருவாக்கப்படும் சொற்களை படைத்து அளிக்கக்கூடிய ஓர் உன்னதமான விஷயமாகும். 5,70,000 சொற்கள் தமிழிலே இருக்கின்றன. இது ஆங்கிலத்தைவிட 2 மடங்கு அதிகமானது என்பதை முதல் படைப்பாக இந்த இடத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதாரணமான விஷயம் அல்ல. சொற்கள் என்பது எல்லையை காவல் காக்கிற soldiers மாதிரி ஒரு மொழியை காவல் காப்பது அந்த சொற்கள். அந்த சொற்களை மீண்டும் பயன்பாட்டிற்குச் கொண்டுவருவது இவை அனைத்தையும் இந்த சொற்கோவையில் செய்யப் போகிறோம்.

தமிழ் படைப்பாளிகள் மற்றும் தமிழ் வளர்த்தோரை மகிமைப்படுத்துவது குறித்து ஏற்னெவே பேசிவிட்டோம். தமிழக்காக 60 விருதுகள் இருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இதிலே பெருவாரியான விருதுகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டன. நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களை நாட்டுடைமையாக்கியதே எங்களுடைய அரசுதான். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களுடைய நூல்களை நாட்டுடைமையாக்கியதும் எங்களுடைய அரசுதான். இதுமாதிரி பல நூல்களை நாட்டுடைமையாக்கி இருக்கிறோம். இதுபோக இன்னும் செய்ய வேண்டியதை கூடிய விரைவில் செய்ய ஆரம்பித்து விடுவோம். 33 துறைகளில் புத்தக ஆசிரியர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் வழங்குவது, பதிப்பாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்குவது, தமிழ் நூல்கள் வெளியிட 50 ஆயிரம் ரூபாய் உதவி வழங்குவது என பல்வேறு உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது இந்த அரசு. இன்றைய தேதிக்கு 2,000 titles வைத்திருக்கிற ஒரே அரசு தமிழக அரசு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாவற்றையும் நன்றாக market செய்து, இணையத்தில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

தமிழ் ஆய்வுகளை நெறிப்படுத்துதல், தரம் உயர்த்துதல், ஒருங்கிணைத்தல். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வு இருக்கை அமைக்கப்பட்டது இந்த அரசாங்கத்தினுடைய மிக மிக சிகரமான சாதனை என்று நான் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்கு உலக அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. அதைவிட பெரிய விஷயம் என்னவென்றால் ஊர் கூடி தேர் இழுப்பதுபோன்று 9,000 தமிழர்களுக்குமேல், 48 நாடுகளிலிருந்து தமிழர்கள் எல்லோரும் ஒருமுகப்பட்டு செய்த ஒரே வேலை இதுதான் என்று நினைக்கிறேன். ஒரு மொழிக்கு இந்த மாதிரி முயற்சி எடுக்கிறார்கள் என்பதைப் பார்த்து ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் அதிசயமாகப் பார்க்கிறார்கள். இந்தத் தமிழ் உணர்வை நம்முடைய தமிழ்நாட்டிற்கு நல்லதாக பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த அறிவிப்புகளில் சில அறிவிப்புகளை நாம் செய்ய இருக்கிறோம். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கப்பட வேண்டுமென்ற தாராபுரம் சட்டமன்ற உறுப்பினருடைய எண்ணம் போல் மற்றும் சில பல்கலைக்கழகங்களிலும் செய்ய வேண்டும். அதை கண்டிப்பாக

நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எல்லோரும் அதை சேர்ந்து செய்வோம் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. 48 அறக்கட்டளைகள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 7 ஆய்விருக்கைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 78 அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வுநுழைவாயில், research portal என்பது உலகத்தில் எங்கே தமிழாய்வு செய்தாலும்—இன்றைக்கு குறைந்தது 5,000 பேர் பல பல்கலைக்கழகங்களில் பல நாடுகளில் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்—இவர்கள் அனைவரையும் ஒருமுகப்படுத்தி Net–ல் போய் ஒரு தட்டு தட்டி, நான் சேக்கிழாரைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்போகிறேன் என்றால் உலகில் வேறு யாரெல்லாம் சேக்கிழாரைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள் போன்ற அந்த விஷயங்களைச் சேர்க்கக்கூடிய உன்னதமான ஒரு கருவி. அதை வெகு விரைவில் செயல்வடிவத்திற்குக் கொண்டுவந்துவிடுவோம். தமிழ் பண்பாட்டு மையம், தமிழ் வளர் மையத்தையும் ஒருங்கிணைத்து குறைந்தது இந்த வருடம் 1 இலட்சம் பேராவது தொலைநிலைக் கல்விமூலம் தமிழ் பயிலும் முயற்சியை மேற்கொள்வோம். தமிழ் பண்பாட்டு மையத்தைப் பற்றி பெரிதாகச் சொல்லவில்லை. தமிழ் பண்பாட்டு மையம் என்பது உலகத்தில் இருக்கிற எல்லா இசைப் பள்ளிகள், நடனப் பள்ளிகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கிறது. இன்றைக்கு Trinity School of Music, Western Music–க்கு 50 இலட்சம் பேரை உலகத்தில் ஒருங்கிணைக்கிறது. அந்த மாதிரி தமிழ் இசைக்கும் கர்நாடக இசைக்கும் மற்றும் நடனத்திற்கும் ஓர் ஒருங்கிணைப்புக் கருவியாக இந்தத் தமிழ் பண்பாட்டு மையம் இயங்கும்.

பிற்பகல் 4–20

48 நாடுகளில் இதனுடைய முகவர்கள் மூலமாக இதைக் கொண்டுபோவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். தமிழ்ச் சங்கங்கள், குறிப்பாக, அமெரிக்காவிலுள்ள FeTNA போன்ற சங்கங்கள், ஒவ்வொரு இடத்திலும் strong ஆக இருக்கிற தமிழ் அமைப்புகளுடன் இணைந்து இதைச் செயல்படுத்தப் போகிறோம். தமிழ்த் தாய் 70 தமிழ் ஆய்வுப் பெருவிழா நிகழ்ந்தது உன்னதமான ஒரு நிகழ்ச்சியாக இருந்தது. டொரொன்டோ பல்கலைக்கழகத்திலும், பென் ஸ்டேட் பல்கலைக்கழகத்திலும் தூங்கிக்கொண்டிருந்த தமிழ் இருக்கைக்கு உயிர் கொடுத்து, மீண்டும் ஆசிரியர் நியமிக்கப்பட்டு, ஆய்விருக்கைக்கு உயிரூட்டப்பட்டிருக்கிறது. அதேபோல,

ஆட்சிமொழி அமலாக்கம் விரிவாக்கத்தைப் பொறுத்தவரைக்கும், புதிதாக வரக்கூடிய மலேசியா, U.S.–ல் இருக்கக்கூடிய நான்கு States, தென் ஆப்பிரிக்காவில் இருக்கக்கூடிய Natal Province— காந்திஜிக்கு போதி மரமாக இருந்த Natal Province–ல் Durban–ல் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவர வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுபோல், உலகத்தில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய முயற்சிகளுக்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் தருவது அம்மாவின் அரசாங்கம்.

நல்ல தமிழுக்கான களங்களை விரிவுபடுத்துதல். நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், உங்களுக்குத் தெரியும், தமிழை வழக்காடு மொழியாக்க நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதை தேர்தல் வாக்குறுதியாகத் தந்திருக்கிறார்கள். மூன்று மாநிலங்களில் தாய்மொழிகளை வழக்காடு மொழியாக, தீர்ப்பு வழங்கும் மொழியாக 'By the discretion of the judge' என்று இப்போது ஆணை வந்திருக்கிறது. அதே நிலை நமக்குக் கிடைப்பதற்காக இதையெல்லாம் quote செய்து உச்ச நீதிமன்றத்தை மீண்டும் நாம் அணுகியிருக்கிறோம். 12 தடைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த ஒவ்வொரு தடையையும் உடைத்தெறிந்து, கண்டிப்பாக உச்ச நீதிமன்றத்தில் இதை வென்றெடுப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறோம்.

அதேபோல, கல்வி நிலையங்களில் கர்நாடகா CBSE–ல் தமிழைக் கொண்டு வர வேண்டும் என்று செப்டம்பர் 2015–ல் சட்டம் இயற்றியது. நாம் அதற்கான சட்டத்தை உருவாக்கி அரசாணை வெளியிட்டது ஆகஸ்டு, 2014–ல். அவர்கள் இரண்டிலிருந்து ஐந்து வருடம் வரை transition time என்று சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக இதைச் செயல்படுத்துவதற்குண்டான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, அதை செய்வோம் என்று நம்புகிறேன். பல்கலைக்கழகங்களில் தமிழ் மன்றங்களுக்கு ஆதரவு அளிப்பதற்கான ஒரு முயற்சியை எடுத்திருக்கிறோம். தமிழின் தொன்மை, வளமையை ஆவணப்படுத்துதல், வெளிச்சம் தருதல் ஆகியவற்றிற்காக 50 கோடி ரூபாயில் மதுரையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது தான் பழந்தமிழர் பண்பாட்டு காட்சியகம். இது வெகு விரைவில் பூம்புகார் அமைப்போடு இணைந்து செயல்பாட்டிற்கு வரவிருக்கிறது. ஐந்திணைப் பூங்காக்கள், தமிழ்த் தாய்ச் சிலை நீரூற்று அமைக்கப்படும். இன்றைக்கு ஐரோப்பா போனார்களென்றால்,

அனைவரும் பார்க்க வேண்டும் என நினைப்பது Trevi fountain. அந்த Trevi fountain model–ல் இங்கு தமிழ்த் தாய்க்கு ஒரு fountain அமைக்கப்படும். வெளிநாட்டில் இருக்கக்கூடியவர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வரலாறு இருக்கிறது. சிங்கப்பூரில் மட்டுமே அதை வைத்து ஒரு காட்சியகம் உருவாக்கிவிட்டார்கள். இந்த எல்லா வரலாற்றையும் இணைத்து தமிழ்த் தாய் சிலை நீரூற்று காட்சிப்படுத்தப்படும். அதேபோல, 37½ கோடி ரூபாயில் அங்கே கட்டடம் கட்டி இருக்கிறோம். 6 கோடி ரூபாயில் உன்னதமான உலகத் தரம் வாய்ந்த ஒரு நூலகம் அங்கே உருவாக்கப்படும். அதேபோல பழந்தமிழர் அறிவியல் காட்சிக்கூடம் தரமணியில் உருவாக்கியிருக்கிறோம். சங்கத் தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் 5 கோடி ரூபாயில் மதுரையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து முறையாக காட்சிப்படுத்துகிற வேலையை இந்த வருடம் செய்யப் போகிறோம்.

இறுதியாக, இளைஞர்களை ஈர்க்கும் தமிழ், இளம் தமிழர் இலக்கிய பயிற்சிப் பட்டறை என்ற ஒன்று, அம்மா அவர்களுடைய சிந்தனையில் உருவான விஷயம். இன்றைக்கு 1,000 பேருக்குமேல் அந்தப் பயிற்சியை எடுத்தவர்கள் அவர்கள் ஓர் அமைப்பை உருவாக்கி, மிகவும் அருமையாக அந்த இளைஞர்கள் இலக்கியத்தை எடுத்துக் கொண்டுபோவது மிக மிக அழகாக இருக்கிறது. இதை இன்னும் பன்மடங்கு பெருக வைப்பதற்காக முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது சென்னையில் மட்டும் நடக்கிறது. மதுரையிலும் இதைக் கொண்டு வருவதற்கு அடுத்த வருடத்திலிருந்து முயற்சி எடுக்கப்போகிறோம்.

திருக்குறள் முற்றோதல். சிறிய பிள்ளைகள் இன்றைக்கு முழுமையாக திருக்குறளை ஓதி, 10,000 ரூபாய் பரிசு பெற்றுச் செல்கிறார்கள். ஆயிரக்கணக்கில் இப்பொழுது மாணவர்கள் பலன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதிலும் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போதைக்கு ஆண்டுக்கு 50 பேருக்கு தந்து கொண்டிருக்கிறோம். அதைப்போல கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி இவையெல்லாவற்றையும் ஆழமாகக் கொண்டு செல்லப்போகிறோம். மாண்புமிகு முதல்வர் அறிவித்த தமிழகத்தின் பொன்விழா போட்டிகள், ஏற்கெனவே நிகழத் துவங்கியிருக்கின்றன. தமிழ் கற்றுத் தரும் விதத்தை எளிமைப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். நல்ல ஆய்வு ரீதியாக தமிழ்

பல்கலைக்கழகத்தில் U.S.—ல் கற்றுத் தருவதற்கு எந்த மொழி எவ்வளவு கடினம் என்று பார்க்கும்போது நம்முடைய மொழி 4—வது இடத்தில் இருக்கிறது. அதுவல்லாமல், மிக எளிமையாக தமிழ் தெரியாதவர்களுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க ஒரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த 10 செயல் திட்டங்களையும் செம்மையுற செயல்படுத்தி, தமிழினை தரணியில் முதல் மொழியாக உயர்த்தும் உன்னத வேள்வியினை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியாரின் பொற்கால அரசு முன்னெடுத்துச் செல்லும். (மேசையைத் தட்டும் ஒலி) மெல்லத் தமிழ் இனி வெல்லும் எனக் கூறி என் உரையை முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்க தமிழ்.

அறிவிப்புகளைப் பொறுத்தவரையில் தலைப்புகளை மட்டும் வேகமாகப் படித்துவிடுகிறேன். மற்ற விவரங்களை நான் படித்ததாகக் கருதி, சட்டமன்ற பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

1. தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப் பெயர்கள் தமிழ் உச்சரிப்பைப் போன்றே ஆங்கிலத்திலும் அமைத்துச் செயற்படுத்த ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப் பெயர்கள் தமிழ் உச்சரிப்பைப் போன்றே ஆங்கிலத்திலும் அமைத்து செயல்படுத்திட ரூ.5 இலட்சம் வழங்கப்படும். உதாரணமாக திருவல்லிக்கேணி என்பதை ட்ரிப்ளிகேன் என இன்னும் ஆங்கிலத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அது திருவல்லிக்கேணி என்றே அமையவும், இதுபோன்ற எண்ணற்ற ஊர்களின் பெயர்கள் ஆங்கிலத்திலும் அமையும் வகையிலும் உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 4—25

ஆயிரக்கணக்கான பெயர்கள் இதுபோல் இருக்கின்றன. இவை அனைத்தையும் ஆய்வு செய்து மூன்று மாதங்களுக்குள்

வருவாய்த் துறையின் ஒத்துழைப்புடன் இதை செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

2. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள கரிகாற்சோழன் கலையரங்கம் ரூபாய் 4 கோடி செலவில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள கரிகாற்சோழன் கலையரங்கம் மின் கட்டமைப்பு வசதியுடன் மேம்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 4 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பழமையான கட்டடங்கள் ரூபாய் 3 கோடியே 50 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் சிறப்பு சீர்காப்பு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 1981 முதல் 1993 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட கட்டடங்கள் சிறப்பு சீர்காப்பு செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3 கோடியே 50 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

4. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகச் சுற்றுச் சுவர்–அது பெரிய சுற்றுச் சுவர், ரூபாய் 1 கோடியே 65 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகச் சுற்றுச் சுவர் மூலிகைப் பண்ணையிலிருந்து சேரன் பெருவாயில் வரையிலும் காவல் நிலையத்திலிருந்து மேற்கு எல்லை வரையிலும் 1,730 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளார் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்; இது 61–வது விருது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தனித் தமிழில் படைப்புகள் அருகிவரும் நிலையில், தனித் தமிழில் படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழறிஞர் ஒருவருக்கு மறைமலையடிகளார் பெயரில் விருது வழங்கப்படும். விருதுக்கான தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதிச் சான்றும், பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும். குறிப்பாக, சமத்துவம், பொதுவுடைமை, தமிழியல் ஆகிய மூன்றிலும் முத்திரை பதித்த அயோத்திதாசர் பெயரில் விருது வழங்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சமத்துவம், பொதுவுடைமை, தமிழியல் ஆகியவற்றில் தனக்கெனத் தனி முத்திரை பதித்த தகைமையாளர் தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் அவர்தம் இலட்சிய நோக்கோடு செயன்மையாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுக்கான தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதிச் சான்றும், பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கென தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. எல்லைக் காவலர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 4,000/-லிருந்து ரூபாய் 4,500/- ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 4,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகை ரூபாய் 4,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 12 இலட்சத்து 36 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

8. தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 3,000/- லிருந்து ரூபாய் 3,500/- ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 3,000/– உதவித் தொகையாக வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகை ரூபாய் 3,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 41 இலட்சத்து 40 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

9. எல்லைக் காவலர்கள், குறிப்பாக கன்னியாகுமரி மற்றும் திருத்தணியில் உள்ள எல்லைக் காவலர்களின் மரபுரிமையருக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2,000/–லிருந்து ரூபாய் 2,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் அவர்தம் மரபுரிமையர்களுக்கு தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 2,000/– உதவித் தொகையாக வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகை ரூபாய் 2,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 6 இலட்சத்து 36 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

10. தமிழறிஞர்களின் மரபுரிமையருக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 1,500/-லிருந்து ரூபாய் 2,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் அவர்தம் மரபுரிமையர்களுக்கு தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 1,500/– உதவித் தொகையாக வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகை ரூபாய் 2,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 35 இலட்சத்து 16 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

11. தமிழ்ப் பல்கலைக்கழகச் சிற்பத் துறையின்வழி ரூபாய் 50 இலட்சம் செலவில் சிற்பக்கலைப் பயிற்சிக் கூடம் சுவாமிமலையில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக சிற்பத் துறையின் வாயிலாகச் சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் சுவாமிமலையில் அமைக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 20 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூபாய் 30 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு multi–location organization *ஆக உருவாவதற்கு இது முதல் முயற்சி. முன்னால் எடுத்த முயற்சிகளையும் மீட்டெடுக்கப்போகிறோம்.*

12. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் மின்னணு நூலகமாக (Digital Library) **ரூபாய் 50 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்படும்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் மின்னணு நூலகமாக மாற்றம் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள அரிய நூல்களை மின்எண்மம் (Digitalize) **செய்வதற்காக ரூபாய் 39 இலட்சத்து 34 ஆயிரம் வழங்கப்படும்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள அரிய நூல்கள் கணினி அச்சாக்கம் மற்றும் மெய்ப்புத் திருத்தம் செய்யப்பட்டு ஒருங்குறி எழுத்து வடிவில் இணையத்தில் மின்எண்மம் செய்யப்படும். இதற்கென உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு தொடராச் செலவினமாக ரூபாய் 39 இலட்சத்து 34 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

14. உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அளிக்கப்படும் தமிழ் ஆய்வேடுகளைத் தமிழாய்வு வலைதளத்தில் (Research Portal) **தொகுக்கும் பணிக்குத் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து 30 ஆயிரமும் தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சமும் வழங்கப்படும்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழியலில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அளிக்கப்படும் தமிழ் ஆய்வேடுகளைத் தொகுத்து தமிழாய்வு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்மூலம் செயல்படுத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து 30 ஆயிரமும் தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

15. தமிழ் வளர்ச்சித் துறை சார்ந்த அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த உள்கட்டமைப்புப் பணிகளுக்காக ரூபாய் 1 கோடியே 54 இலட்சம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறை சார்ந்த அலுவலகங்களான தலைமைச் செயலகத்தின் தமிழ் வளர்ச்சி அலுவலகம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்கு உள்கட்டமைப்பு, தளவாடங்கள் மற்றும் பிற கருவிகள் வாங்குவதற்கு தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

16. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகப் பனுவல் அரங்கம் ரூபாய் 40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக நூலகப் பனுவல் அரங்கம் மேம்படுத்தப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

17. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நூல்கள் ரூபாய் 2 கோடி செலவில் மறுபதிப்பு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூல்களான களஞ்சியங்கள், சொல்லகராதிகள், கலை, இலக்கியம் சார்ந்த நூல்கள் மறுபதிப்பு செய்யப்படும். இதற்கென ரூபாய் 2 கோடி வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

18. தமிழ் இலக்கிய வளம் குறித்து கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள தமிழ்க்கூடல் எனும் பெயரில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் வாரந்தோறும் தமிழாய்வுக் கூட்டம் நடத்திட ஆண்டுக்கு ரூபாய் 6 இலட்சம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் ஒன்றுகூடி தமிழ்க்கூடல் எனும் பெயரில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் வாரந்தோறும் தமிழ் இலக்கிய வளம் குறித்து கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

19. அயலகத் தமிழ்ப் படைப்புகள் ரூபாய் 5 இலட்சம் செலவில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஆவணப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அயலகத் தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புத் திறனை வெளிக்கொணரும் வகையில் அவர்களிடம் தொடர்பு கொண்டு அவர்தம் படைப்புகளை ஆய்வு செய்து தகவல்கள் திரட்டப்பட்டு ஆவணப்படுத்தப்படும். இப்பணி மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் மூலமாக மேற்கொள்ளப்படும். இதற்கென மூன்றாண்டிற்கான செலவினத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

20. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ரூபாய் 10 இலட்சம் செலவில் யோகா பயிற்சி மையம் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறையின் வழி 400 மாணவர்கள் பயன்பெறும் வகையில் யோகா மையம் அமைக்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

21. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்மூலம் ரூபாய் 22 இலட்சம் செலவில் மியான்மர், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், மியான்மர், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களுக்குத் தமிழ் மொழியில் பேச, எழுத கற்பித்தல் மற்றும் இளம் மாணவர்களுக்கான தமிழ்ப் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

22. தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளான ஆகத்து 26 ஆம் நாளன்று மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களின் தமிழ்ப் பணியைப் போற்றும் வகையில் அவருடைய பிறந்தநாளான ஆகத்து 26 ஆம் நாளன்று (பிறந்த நாள் 26–8–1883) திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டத்தில் உள்ள அவர் பிறந்த ஊரான துண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

23. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் அவருடைய பிறந்தநாளான சூலை 15 ஆம் நாளன்று மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் அவருடைய பிறந்தநாளான சூலை 15 ஆம் நாளன்று காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரத்தில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

24. பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் குறும்படங்கள் ரூபாய் 25 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்த்தாய் ஊடக அரங்கில் காட்சிப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பழந்தமிழர்களின் சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையில் பல்வேறு பொருண்மைகளில் 5 குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடத்தில் அமைந்துள்ள தமிழ்த்தாய் ஊடக அரங்கில் காட்சிப்படுத்தப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

25. சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான மெரினா வளாகத்தில் தொல்காப்பியர் சிலை நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொல் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தை யாத்த புலவர் பெருந்தகை தொல்காப்பியரை நினைவுகூரும் வகையில் அவருக்கு சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான மெரினா வளாகத்தில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் சிலை நிறுவப்படும்.

26. முனைவர் மு. தமிழ்க் குடிமகன், சாகித்ய அகாடமி விருது பெற்ற திரு. மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முனைவர் மு. தமிழ்க் குடிமகன், திரு. மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

27. குறள் பரிசு திட்டத்தின்கீழ் பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கை 50-லிருந்து 70 ஆக உயர்த்தி புதுப்பொலிவுடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்த ஆண்டுக்குக் கூடுதலாக ரூபாய் 5 இலட்சத்து 10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குறள் பரிசுத் திட்டத்தின்கீழ் பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 50–லிருந்து 70 ஆக உயர்த்தப்படும். இதற்கென ஆண்டுக்குக் கூடுதல் செலவினமாக ரூபாய் 2 இலட்சம் மற்றும் குறள் பரிசு மாணவர்களைத் தெரிவு செய்யும் பணிக்குச் சில்லரைச் செலவினம், பரிசு வழங்கும் நிகழ்ச்சிச் செலவினம் சேர்த்து ஆண்டுக்கு ரூபாய் 3.10 இலட்சம் என மொத்தம் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சத்து 10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

28. தமிழறிஞர்கள்/எல்லைக் காவலர்கள் ஈமச் சடங்குத் தொகை ரூபாய் 1,000/-லிருந்து ரூபாய் 5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்திய விடுதலை போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படுவதைப்போல தமிழறிஞர்கள்/ எல்லைக் காவலர்களுக்கு ஈமச் சடங்குத் தொகை ரூபாய் 1,000/– த்திலிருந்து ரூபாய் 5,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

29. எல்லைக் காவலர், தமிழறிஞர், அகவை முதிர்ந்த தமிழறிஞர், மரபுரிமையர் மருத்துவப்படி ரூபாய் 100/-லிருந்து ரூபாய் 500/- ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர், தமிழறிஞர், அகவை முதிர்ந்த தமிழறிஞர் மற்றும் அவர்தம் மரபுரிமையர்களுக்குத் திங்கள்தோறும் உதவித் தொகையுடன் வழங்கப்பட்டு வரும் மருத்துவப்படி ரூபாய் 100/— இவ்வாண்டு முதல் ரூபாய் 500/— ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 93 இலட்சத்து 60 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

30. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு வசதியாகத் தமிழ்த்தாய் நூல் விற்பனை ஊர்தி வாங்குவதற்கு ரூபாய் 9 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு வசதியாகத் தமிழ்த்தாய் நூல் விற்பனை ஊர்தி வாங்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 9 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

31. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்திலுள்ள கட்டடங்கள் மற்றும் மின் பராமரிப்புப் பணிக்காக ரூபாய் 8 இலட்சம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் உள்ள புதிய அலுவலகக் கட்டடம், விடுதிகள், பழைய கட்டடம், நூல் இருப்புக்கூடம், நூலகம் மற்றும் இணைப்புக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கான கட்டடம் மற்றும் மின் பராமரிப்புக்கு ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

[திரு. க. பாண்டியராஜன்] [2018 ஜூன் 13

32. சென்னை மாவட்ட ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பயிற்சிக்கு வழங்கப்படும் செலவினத் தொகை ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மாவட்ட அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் குறித்து ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் 5 பயிற்சி வகுப்புகளுக்கான செலவினத் தொகை ரூபாய் 1 இலட்சத்திலிருந்து 1 இலட்சத்து 50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 50 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

33. தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடுகளை இணையத்தில் சேர்க்க ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறையின் வெளியீடுகளான ஆட்சிச் சொல்லகராதி, அயற்சொல்லகராதி, இணைச்சொல் எதிர்ச்சொல் அகராதி ஆகியன தேடுதல் வசதியுடன் இணையத்தில் சேர்க்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 4–30

34. ஆசியா உள்ளிட்ட பிற பகுதிகளிலிருந்து அறிஞர் பெருமக்களால் வெளியிடப்பெறும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவதற்கென ரூபாய் 2 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா மற்றும் பிற பகுதிகளிலிருந்து அறிஞர் பெருமக்களால் வெளியிடப்பெறும் நூல்களுள் சிறந்தவற்றிற்கு வெளிநாட்டுப் படைப்பிலக்கியங்கள் தலைப்பில் உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாகப் பரிசுத் தொகை வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 2 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

35. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள அரியவகை ஓலைச் சுவடிகளை மின்எண்மம் (digitalize) **செய்திட ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடி பாதுகாப்பு மையத்திலுள்ள அரியவகை சுவடிக் கட்டுகளும், தாள் சுவடிகளும், அரிய நூல்களும் மற்றும் களப்பணி வாயிலாகத் தொடர்ந்து தேடித் திரட்டப்படும் சுவடிகளும் மின்எண்மம் செய்யப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

36. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குக் கருவி நூல்கள் வாங்குவதற்கு ரூபாய் 2 இலட்சம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்டப் பணிகளின் பயன்பாட்டிற்குக் கருவி நூல்கள் வாங்கப்படும். இத்திட்டத்திற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

37. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட தமிழ்க் கலைக்கழகம் ரூபாய் 1 இலட்சத்து 56 ஆயிரம் செலவில் புதுப்பிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்ககத்தில் செயல்பட்டுவரும் தமிழ்க் கலைக்கழகத்தைப் புதுப்பித்தும், ஆயிரம் தமிழ்க் கலைச் சொற்களை வடிவமைத்தும் வெளியிடுவதற்குத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 1 இலட்சத்து 56 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

38. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள அரிய நூல்கள் ரூபாய் 10 இலட்சம் செலவில் மின்னாக்கம் (Digitalization) **செய்யப்படும்**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள அரிய நூல்கள் மின்னாக்கம் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

39. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்ககத்தின்மூலம் மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி உருவாக்கப்பட்டு இணையத்தில் வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள், உரைநடைகள் வெளியீடுகளிலுள்ள சொற்களைப் பிறர் உதவியின்றி பள்ளி, கல்லூரி மாணவர்கள் தனித்துப் படித்துப் புரிந்துகொள்ளத்தக்க வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்ககம்மூலம் மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத் துறையின்மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

40. அன்றாட பயன்பாட்டில் உள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அன்றாட வழக்கில் பயன்பாட்டிலுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வாயிலாகத் தொகுக்கப்பட்டு நூலாக எழுதுபொருள் அச்சுத் துறையின்மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

41. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 50-லிருந்து 100 ஆக உயர்த்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்பொழுது,

ஆண்டுதோறும் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 50 பேர் என்பது 100 பேராக உயர்த்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 15 இலட்சத்து 60 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

42. அயலகத் தமிழ் இதழ்களும், மின்னிதழ்களும் ரூபாய் 5 இலட்சம் செலவில் ஆவணப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அயலகத் தமிழர்களால் வெளியிடப்பட்ட, வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் இதழ்களும், மின்னிதழ்களும் கண்டறியப்பட்டு மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் மூலமாக ஆவணப்படுத்தப்படும். இதற்கென மூன்றாண்டிற்கான செலவினத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

43. செந்தமிழ்ச்சொற்பிறப்பியல்அகரமுதலிதிட்டஇயக்ககத்தின்மூலம் நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி உருவாக்கப்பட்டு அச்சிட்டு வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் மக்களின் இல்லங்கள், அலுவலகம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித் தாள், சிறுகதை, புதினம், இலக்கியம் மற்றும் புதுப்பாடல்களில் பயன்படுத்தப்பெறும் நடைமுறைச் சொற்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்ககம் வாயிலாகத் தொகுக்கப்பட்டு 400 பக்கங்களைக் கொண்ட தொகுதியாக நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத் துறையின்மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

44. இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கிய வினாடி வினா நடத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆண்டுதோறும் நடத்தப்பெறும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும்

மாணவர்களிடையே தமிழ் இலக்கிய வினாடி வினா நடத்தி பரிசுகள் வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 30 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ் வளர்ச்சித் துறையில் வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல்களுடனும் நான் இந்த மாமன்றத்தில் வைத்துள்ள கருத்துகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மனநிறைவு அளித்திருக்கும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.

***திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியத்தில் நான் பேசியபொழுது, அறநிலையத் துறையில் உயர்நிலைக் குழு அமைக்கப்படவில்லை என்ற கருத்தை நான் அப்பொழுது சொன்னேன். அதைப்போல திருக்கோயில்களில் அன்றாட பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு அறங்காவலர் குழு ஏன் நியமிக்கப்படவில்லை என்ற அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் உணவு இடைவேளைக்குச் சென்ற நேரத்தில் பதிலளித்திருக்கிறார்கள். இனிமேலாவது அந்தக் குழுக்களை அமைப்பதில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேங்கிக் கிடக்கக்கூடிய அந்த திருப்பணிகள், நான் ஏற்கெனவே சொன்னதுதான். அதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். குறிப்பாக தாயமங்கலம், எங்களது சிவகங்கை மாவட்டத்தில் பிரசித்திபெற்ற திருக்கோயில். நெடுஞ்சாலைத் துறையில் பாலங்கள் போடுவது, சாலைகள் அமைப்பது என்றால் இடம் கையகப்படுத்துவது என்றால் சிரமங்கள் இருக்கும். பொதுப்பணித் துறையில் அந்தமாதிரி பிரச்சினைகள் வரலாம். ஆனால். இதைப் பொறுத்தவரையில்

இடப் பிரச்சினையோ, நிதிப் பிரச்சினையோ எதுவும் இல்லாத கட்டத்தில் பணிகளை விரைவுபடுத்துவதில் ஏற்படுகின்ற சுணக்கத்தை உணர்ந்து துறைரீதியாக அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்து விரைந்து முடிக்கவேண்டும். அது ரோப் காராக இருந்தாலும், மற்ற எல்லாப் பணிகளையும் செய்யவேண்டும். தமிழ் வளர்ச்சித் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது ஆன்மிகத் தமிழ் வளர்க்கப்படவில்லை என்ற கருத்தை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆன்மிகத் தமிழ் வளர்க்கப்படவில்லை என்று சொல்வது சரியானதாக இருக்காது. காரணம், தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்கின்ற அந்த உயரிய திட்டத்தைக் கொண்டு வந்தது கழக ஆட்சி காலத்தில். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து பெரிய திருக்கோயில்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பெரியகருப்பன், நீங்கள் (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். நீங்கள் பேசிக்கொண்டேபோனால் என்ன அர்த்தம். மானியத்தில் பேசியதற்கு ஒரு கேள்வி, இரண்டு கேள்வி கேட்டீர்களென்றால் பரவாயில்லை. (குறுக்கீடு) ஏதாவது ஒரு முறையைக் கடைப்பிடியுங்கள். முடியுங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: இதற்குள் நான் முடித்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசி முடித்து, அமைச்சர்கள் பதிலுரை அளித்துவிட்டார்கள். நீங்கள் அதில் ஏதாவது சந்தேகம் கேட்டால் பரவாயில்லை.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: அமைச்சர்கள் பதில் சொன்னார்கள் என்பது சரி. அமைச்சர்கள் சொன்ன பதிலில் நாங்கள் விளக்கம் கேட்க வேண்டுமல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் அமைச்சராக இருந்தவர். ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டால் அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். இப்படி பத்து, பதினைந்து கேள்விகளை அடுக்கினீர்களென்றால், இன்னும் சொல்லப்போனால் நீங்கள் நெடுஞ்சாலைத் துறை குறித்தெல்லாம் கேட்கிறீர்கள். எல்லா அமைச்சர்களும் எப்படி பதில் சொல்லமுடியும்?

திரு. கே.ஆர். பெரியகருப்பன்]: இல்லை, நான் இருக்கின்ற practical difficulty–ஐத்தான் சொன்னேன். நான் நெடுஞ்சாலைத் துறை குறித்து எதுவும் சொல்லவில்லை.

பிற்பகல் 4–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நீங்கள் தேவையில்லாமல் நிறைய துறைகள் சம்பந்தமாக கேள்வி கேட்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் நிறைய கேள்விகள் கேட்பதற்கு நான் அனுமதித்துவிட்டேன். நன்றி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சீக்கிரம் முடிப்பீர்கள் என்றுதான் நானும் பொறுமையாக இருக்கின்றேன். (குறுக்கீடு) நீங்கள் 5, 6 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) நீங்கள் இவ்வாறு கோபப்படுவதில் அர்த்தமே கிடையாது. நீங்கள் எந்த அளவுக்கு ஒரு சூழ்நிலை கருதி பேசுகிறீர்களோ, அதேமாதிரி அவையை முடிக்கவேண்டியது என்னுடைய கடமை. மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொன்னதற்குப் பின்னால் இவ்வளவு நேரமாக யாராவது பேசுவார்களா? (குறுக்கீடு) அதெல்லாம் முடிக்கின்ற நேரத்தில், (குறுக்கீடு) நீங்கள் ஒரு உறுப்பினர்கூட பேரவைத் தலைவருக்கு அனுசரணையாக இருப்பதே கிடையாது. உங்களை நான் எதிரி மாதிரியாகவா நினைக்கிறேன். நீங்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதில் விளக்கம்தான் கேட்க வேண்டுமேயொழிய திரும்ப ஒரு விவாதம் மாதிரி தொடர்ந்துகொண்டே இருந்தால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) அதற்கு வரைமுறை இருக்கிறது அல்லவா? (குறுக்கீடு) திரு. பெரியகருப்பன், அதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறது. நீங்கள் ஒன்றிரண்டு கேள்வியோடு முடிக்க வேண்டும். முடியுங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: எப்போதோ முடித்திருப்பேன். கோபத்தில் பேசினால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒன்றும் கோபமாக பேசவில்லை. சிரித்துக்கொண்டேதான் சொல்கிறேன். கேள்வியை முடியுங்கள். நன்றாக என் முகத்தைப் பாருங்கள். நான் சிரித்துக்கொண்டே சொல்கிறேன். உரையை முடியுங்கள்.

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: திருக்கோயில்களில் தமிழிலே அர்ச்சனை செய்வதற்கு விளம்பரப் பலகைகள்கூட வைக்கப்பட்டிருந்தன. ஓதுவார்கள் மூலமாக தேவாரம், திருவாசகம்

எல்லாம் பாடியது உண்டு. திருச்சிற்றம்பலம் மேடையிலேகூட பெரியவர் திரு. ஆறுமுகசாமி பாடினார். அடுத்து, ஓதுவார் பயிற்சிப் பள்ளி. இப்போதும் இருக்கிறது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 100 வரியிலே அவர் சொல்வார். சொல்லுங்கள். உங்களுக்கு நிறைய விவரம் தெரியும். அமைச்சராக இருந்தவர். நீங்கள் கேட்டுக்கொண்டே இருக்கலாம். அதை அவை கேட்க வேண்டுமே? அவை கேட்க வேண்டும் அல்லவா? நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி நான் அவை நிகழ்ச்சிகளை முடிப்பது? அதெல்லாம் முறையல்ல. திரு. மு.பெ. கிரி, நீங்கள் ஒரே கேள்விதான் கேட்க வேண்டும். அதுதான் முறை. (குறுக்கீடு) இதற்குமேல் இப்படியெல்லாம் பேசினால் எதுவும் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் வராது. உட்காருங்கள். நீங்கள் வேண்டுமென்றால் பேசிக்கொண்டே இருங்கள். எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது. திரு. மு.பெ. கிரி, நீங்கள் பேசுங்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், கீழடியில் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்றது. அதிலே திரு. அமர்நாத் இராமகிருஷ்ணன் என்ற சிறந்த I.A.S. அதிகாரி சிறப்பாகப் பணியாற்றி, 1,000–க்கும் மேற்பட்ட பொருட்களைக் கண்டுபிடித்து, அதிலே கதிரியக்க பரிசோதனையெல்லாம் செய்யப்பட்டு, 2,200 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பொருள்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு சிறப்பான அலுவலரைப் பணியில் நியமித்து அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அகர முதலி திட்டத்தை மறைந்த முதலமைச்சர் அவர்கள் தொடங்கியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1974 ஆம் ஆண்டு, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் மூலமாகத் தொடங்கப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிச்சாண்டி, இவ்வளவு கேட்டதற்குப் பிறகு நீங்களும் கேட்க வேண்டுமா? திருவண்ணாமலை, சேலம், கிருஷ்ணகிரி என்று வரிசையாக ஊர் இருக்கிறது. எல்லோரும் எழுந்து பேசினால் எப்படி?

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தோடு இணைந்து தலைவர் கலைஞர் அவர்கள் தமிழை செம்மொழியாக்கினார்கள். நீங்களும் மத்திய அரசோடு உறவோடு இருக்கிறீர்கள். ஆகவே, தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவது தமிழுக்கு நீங்கள் செய்யக்கூடிய பெரிய சேவையாக இருக்கும் என்பதையும், அதை செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழடியைப் பொறுத்தவரைக்கும், திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் I.A.S. அதிகாரி கிடையாது. அவர் ஒரு Archaeologist. அவர் தலைமையிலே 3 முறை அங்கே அகழாய்வுப் பணிகள் நடைபெற்றன. Archaeological Survey of India–க்கு கீழே மூன்று முறை நிகழ்ந்த அகழாய்வு எல்லாமே pilot study–யாகத்தான் இருந்தது. அதனால் ஆழ்ந்து அங்கு அகழாய்வைத் தமிழகத்தின் தொல்லியல் துறை தானே மேற்கொண்டு இப்போது நடத்த ஆரம்பித்திருக்கிறது. மிகப் பெரிய கண்டுபிடிப்புகள் வந்திருக்கின்றன. 5,000 பொருள்களுக்கு மேல், அரும் பொருட்கள் அங்கே கண்டுபிடித்திருக்கிறோம். இன்னும் நிறைவு பெறுவதற்கு செப்டம்பர் 30 ஆம் தேதி வரை நேரம் இருக்கிறது. 10 ஏக்கரில் இப்போது அகழாய்வுப் பணிகள் செய்து கொண்டிருக்கிறோம். தமிழகத்தின் உன்னதமான தொன்மையை நிலைநிறுத்தும் அளவிற்கு அந்த இடத்தில் கண்டுபிடிப்புகள் இருக்கும் என்று நினைக்கிறோம். ஏற்கெனவே, ஒரு கோடி ரூபாயிலே site museum உருவாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் இன்னும் report சமர்ப்பிக்கவேண்டும். அதற்கு Land Purchase permission தரவேண்டியது Archaeological Survey of India–யினுடைய பிரச்சினை. தமிழக அரசாங்கம் அதிலே வரவில்லை. ஆனால், அந்த FeTNA நடத்துவதற்கு political clearance கிடைக்காததால் அவர் போக முடியவில்லை என்று அறிகிறேன். தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும், கீழடி கண்டுபிடிப்புகள் நன்றாக காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. நன்றாக carbon dating

செய்யப்பட்டு, flourescence dating செய்யப்பட்டு, தமிழரின் தொன்மையை உலகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டும் இடமாக கீழடி இருக்கும்.

பிற்பகல் 4–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் வழக்கம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது. திருக்கோயில்களில் உள்ள சன்னதியில், தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று தெரிவிக்கும் அறிவிப்புப் பலகைகளும் வைக்கப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சர்களுக்கு ஆண்டுதோறும் துறையால் புத்தொளி பயிற்சி வழங்கப்பட்டு, தமிழில் அர்ச்சனை செய்வது ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், பக்தர்கள் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென குறிப்பாக விரும்பினால், அத்தகைய பக்தர்களுக்கு தமிழில் அர்ச்சனை செய்து, பிரசாதம் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ரூ.52,56,90,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.266,16,61,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.191,17,56,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14—6—2018), வியாழக்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4—43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

79. 2016—2017 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்—ஆங்கிலம்)

80. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

81. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

82. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

83. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (திருநெல்வேலி) ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

84. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

85. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

86. 2016–2017 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

2018 ஜூன் 13]

87. 2016–2017 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

88. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

89. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில நகர கூட்டுறவு வங்கிகளின் இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

90. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

91. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

171. மானியக் கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

172. மானியக் கோரிக்கை எண் 47 – இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

173. மானியக் கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ்)

174. "வேளாண்மைத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

175. வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2018–2019. (தமிழ்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(589 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2018-2019

1. அறிமுகம்

மொழி என்பது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு கருவி எனலாம். அவ்வகையில், இவ்வுலகில் தற்போது உள்ள மொழிகள் சற்றொப்ப ஏழாயிரம் என்றளவில் அவற்றுள் பாதி அளவே எழுத்திலும், பேச்சிலும், நூல் வடிவிலும் உயிர்ப்புடன் உலவி வருவதாக மொழி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டிய வண்ணம் இருந்து வருகின்றனர். இவற்றுள்ளும், இனி வரும் காலங்களில் பெருமளவிலான மொழிகள் தத்தம் உயிர்ப்புத் தன்மையை இழக்கக்கூடும் என்றும் அவர்கள் கருதி வருகின்றனர்.

ஆனாலும், இறவா மொழிகள் என்று எண்ணத்தக்க வகையில் இருக்கும் சில மொழிகளுள், இனிமையாய், எளிமையாய், வளமையாய், இளமையாய், ஆழமிக்கதாய், பரந்து, விரிந்துபட்டதாய் இருந்து வருகின்ற நம் தமிழ் மொழிதான் உலக மொழிகள் யாவற்றுள்ளும் தொன்மை வாய்ந்த மொழி என்பதை அறிஞர் பெருமக்கள் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளனர்.

வலுவான இலக்கணக் கட்டமைப்பையும் வெகு செழுமையான இலக்கியப் பரப்பையும் கொண்டு இயங்கி வருவதுதான் நம் தமிழ் மொழியாகும். மற்ற மொழிகள் யாவும், ஓர் இலக்கணக் கட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, அதனடிப்படையில் பேசவும், எழுதவும் வேண்டும் என்ற விதிமுறையைக் கொண்டுள்ளன. ஆனால், தமிழ் மொழிக்கான இலக்கணமானது, மனிதர்கள் வாய்மொழியின் அடிப்படையிலேயே பிறப்பதாகும். ஒலிப்புக்கு இலக்கணம் வகுத்த மொழி தமிழ் மொழி ஒன்றே! எழுத்துக்களில், 'ழ' என்ற தமிழ் எழுத்திற்கு நிகரான இனிமை வாய்ந்த எழுத்து வேறு எந்த மொழியில் இருக்குமா என்பது ஐயமே!

"யாமறிந்த மொழிகளிலே, தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று முழங்கிய மகாகவி பாரதியார்,

[2018 ஜூன் 13

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும்
அளந்திடும் வண்மொழி வாழியவே"

என்று தமிழ்மொழியை வாழ்த்திக் களிக்கின்றார்.

இலக்கணம் தந்த தொல்காப்பியம் காலம் தொடங்கி, முதல், இடை, கடைச் சங்கங்களினூடே தவழ்ந்து நான்காவது சங்கம் என்று ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டு அதன் வாயிலாகவும் இன்றளவும் சீராட்டிப் பாராட்டப் பெற்று வருகின்ற, வளர்ச்சி நிலையைத் தளர்ச்சியின்றிப் பெற்று வரும் தகைமை வாய்ந்த தமிழ்மொழியின் பெருமையைச் சொல்லில் வடிக்க இயலாது. கம்பராமாயணமும், ஐம்பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறுகாப்பியங்களும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை வகை சார்ந்த நூல்களும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் தமிழ்மொழிக்குக் கிட்டியுள்ள மிகச்சிறந்த கருவூலங்களாகும். காலந்தோறும், இவை தமிழர்கள் வாழ்வில் இரண்டறக் கலந்து, இறவாப் புகழ் பெற்று வருவதை இந்நானிலம் நன்கறியும்.

எண்ணற்ற சான்றோர்களும் ஆன்றோர்களும் ஆராய்ச்சியாளர்களும் தமிழ்மொழியின் இனிமையையும் வளமையையும் பல்வேறு நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். கோனாட்சிக் காலத்தில், மன்னர்களில் பெரும்பாலோர் தமிழ்மொழியில் ஆற்றல் பெற்றவர்களாய் விளங்கியதையும் அன்னோர் யாவரும் புலவர்களைத் தத்தம் காலத்தில் போற்றி வந்துள்ளனர் என்பதையும் நாம் ஏடுகளில் காணலாம்.

"கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
கழையிடை ஏறிய சாறும்"

என்று தொடங்கி, பல்வேறு சுவை நிரம்பிய பொருட்களைப் பட்டியலிட்டு, இவையாவும்,

"இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

என்று நெகிழ்ச்சியுடன் பாடி இன்புறுகின்ற பாவேந்தர் பாரதிதாசன், இன்னும் நாம் அன்றாடம் சலிப்பின்றி உண்டு மகிழும், செந்நெல்

மாற்றியசோறு, பசுநெய், முளைவிட்ட தானியங்கள், கட்டித் தயிர் போன்ற பலவற்றையும் அடுக்கிக்காட்டி, அவை யாவும்,

"உன்னை வளர்ப்பன தமிழா—உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே''

என்று நம்மைச் சிலிர்க்க வைக்கிறார்! அதுமட்டுமின்றி,

"தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"

என்ற அவரது அறிவார்ந்த வரிகள் உள்ளும்தோறும், உள்ளும்தோறும் நமக்கு மட்டிலா வியப்பைத் தருகின்றன. அகம், புறம் என்றும் இயல், இசை, நாடகம் என்ற பெரும்பிரிவுகளையும் கொண்டுள்ள தமிழ்மொழியானது, சொல், பொருள், எழுத்து, அணி மற்றும் யாப்பு என்ற ஐந்து வகைகளிலான அழுத்தமான இலக்கணக் கட்டமைப்பைக் கொண்டு தனித்து விளங்குகிறது.

தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற தமிழ்தான் ஒரு வள்ளுவரை, ஒரு கம்பனை, ஓர் இளங்கோவடிகளை, ஒரு சேக்கிழாரை, இன்னும் எண்ணற்ற இவர்போன்ற புலவர் பெருமக்களை வழங்கி உலக மொழிகளுள் செம்மொழியாய்க் கோலோச்சி வருகிறது.

ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பின் பார்வையில் தமிழ்

எந்த ஒரு மொழியும் குறைந்தது ஒரு இலட்சம் மக்களாவது பேசுகின்ற நிலையில் இருந்தால்தான் அந்த மொழி உயிருடன் இருப்பதாகக் கருதப்படும் என்று மொழி ஆய்வாளர்கள் / மொழி வல்லுநர்கள் கூறுகிறார்கள். தற்பொழுது ஏறத்தாழ 6,000 மொழிகள் உலகளவில் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் 10,000/-க்கும் குறைவான மக்கள் பேசுகின்ற மொழிகள் பலவும் 1,000/-த்துக்கும் குறைவான மக்கள் பேசுகின்ற மொழிகள் சிலவும் உள்ளதாக அவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். 20 மொழிகள் மட்டுமே கோடிக்கணக்கான மக்களால் பேசப்பட்டு வருகின்றன. 2000 ஆண்டுகளைக் கடந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் மொழிகளாகப் பட்டியல் இடப்படுபவை பாஸ்க், எகிப்தியம், சீனம், கிரேக்கம், ஈப்ரு, இலத்தீன், பெர்சியன், சமஸ்கிருதம் மற்றும் தமிழ்மொழி உள்ளிட்ட சிலவே ஆகும்.

ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பேசப்பட்டு வந்த மொழிகளுள் 15 விழுக்காடு அளவிலான மொழிகள் சரிவைச் சந்தித்துள்ளன. கடந்த 300 ஆண்டுகளில் ஐரோப்பிய மொழிகளில் பன்னிரண்டும், ஆசுதிரேலியாவில் பேச்சு வழக்கில் இருக்கும் 20 மொழிகள் நீங்கலாக ஏனையவையும் 18 ஆம் நூற்றாண்டு இறுதியில் வழக்கொழிந்து போயின.

மிக அண்மையில், உலக அளவிலான நிதிச் சந்தைகள் மின்னணு ஊடகம் வாயிலாகப் பரப்பி வரும் தகவல்கள் மற்றும் உலகமயமாக்குதலின் பல கூறுகள் சிறிய மொழிகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்திட்டன. இணையத்தோடு இணையாத மொழி ஒரு மொழியே அன்று என்று உலக நாடுகள் கருதத் தொடங்கிவிட்டன. வணிகத்திலும் அம்மொழி தன் முகத்தை இழந்துவிட்டதாகக் கருதப்படும்.

ஒரு மொழி என்பது மனிதர்களுக்கிடையே கருத்துகளை அறிவிக்கும் கருவி மட்டும் அன்று; அம்மொழி பேசுவோரின் உலகளாவிய பார்வையையும் கற்பனைத் திறனையும் மொழி ஆளுமையையும் புலப்படுத்தும் ஆற்றல் மிக்க உணர்வாகவும் அது விளங்குகிறது.

மொழி உரிமைகள் மனித உரிமைகளை உலகளவில் பறைசாற்றும் உறுதிமொழியாக உள்ளடக்கப்பட்ட 20 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில்தான் மொழிகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் தேவை பெரிதும் உணரப்பட்டது. அது முதல், தற்பொழுது மொழியின் பாரம்பரியம் அல்லது மனித இனத்தின் தொன்மையான மரபு என்று கருதப்படுகிற ஒன்றினைப் பாதுகாப்பதற்குத் தேவையான வழிமுறைகளைக் கருத்திற்கொண்டு அவற்றுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விதிகளும் முயற்சிகளும் ஒரு மொழி அழிவு நிலையை நோக்கிச் செல்வதிலிருந்து தடுத்துவிட முடியாது. மாறாக, அவை நலிவடைவதைத் தாமதப்படுத்துவதற்கு உதவலாம். மேலும், பல மொழிகளின் ஊடே ஒரு மொழி இணைந்து பேசப்படுவதற்கான சூழ்நிலை உருவாகலாம்.

ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு எனும் யுனெஸ்கோவின் மொழி மதிப்பீடு மற்றும் திட்டமிடல் அறிக்கையில் திராவிட இனத்தின் பண்டைய

பேருடைமையாகப் பொலிவு பெற்று வந்துள்ள தமிழ்மொழி, பண்டைய தமிழர் நாகரிகத்தைப் படம்பிடித்துக் காட்டும் பனுவல்களைக் கொண்ட மொழியாகவும் இன்றளவும் விளங்கி வருகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் அதிக எண்ணிக்கையில் பேசப்படும் மதிக்கத் தகுந்த 30 மொழிகளில், தற்பொழுது தமிழ்மொழி 14 ஆம் இடத்தைப் பெற்றுள்ளதாக மொழி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையினை மாற்றி வருங்காலத்தில் தமிழ் மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் நம் அன்னைத் தமிழ் மேம்பாட்டுக்குத் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின்மூலம் ஏற்றமிகு திட்டங்களைத் தீட்டி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாக வரலாறுகள், ஆய்வேடுகள், ஆட்சிச்சொல் அகராதிகள், கலைச்சொல் நூல்கள் போன்ற பல்வேறு வகையிலான படைப்புகளை வெளியிட்டு, தமிழ் வளர்ச்சிப் பணி தொய்வின்றி நடைபெற வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், உலகளாவிய நிலையிலும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் வாழும், தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் தமிழ் உச்சரிப்பினை அறியாதவர்களும், தமிழ்மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை அறியும் வகையிலும், அதனைக் கற்றுணர்ந்து பரப்பிடும் வகையிலும் **'தமிழ் வளர் மையம்'** தோற்றுவிக்கப்படவுள்ளதுடன் உலகளாவிய நிலையில் வாழும் தமிழர்களும் தமிழ்ப் பண்பாட்டில் ஆர்வமுடைய பிறரும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை அறியும் வகையிலும், அதனைக் கற்றுணர்ந்து பயன்பெறும் வகையிலும் தொன்மையும் வளமையும் கொண்ட தமிழ் மொழியின் இயல், இசை, நாடகம் எனப்படும் முத்தமிழ்க் கலை மரபுகளையும் பண்பாட்டு மரபுகளையும் உலகத் தமிழர்களிடம் கொண்டு சேர்க்கும் வகையிலும் **'தமிழ்ப் பண்பாட்டு மையம்'** உருவாக்கப்பட்டுள்ளது.

இவற்றின்மூலம் உலகளவில் உலக மொழிகளுள் முதல் 10 இடத்திற்குள் ஒன்றாக நம் தாய்மொழியின் பயன்பாட்டு வரிசை அமையும் என்பதில் ஐயமில்லை. இந்தக் குறிக்கோளுக்கான வெற்றி **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் கண்ட கனவை நனவாக்கும் வகையில் அமையப்போவது உறுதி.

இயல்—1

தமிழ் வளர்ச்சித் துறை

1.1 ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

1.1.1 ஆய்வு

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 345 இல் வகைசெய்யப்பட்டுள்ளதற்கிணங்கத் தமிழ்நாட்டில் தமிழை ஆட்சிமொழியாக்கும் வகையில் 1956 ஆம் ஆண்டு ‘தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்’ என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்மொழியை உலகெங்கும் கோலோச்சச் செய்து மிளிரச்செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான் அச்சட்டம் இயற்றப்பட்டது. அதற்கிணங்க அரசின் அனைத்துத் துறைகளிலும், வாரியங்களிலும், கழகங்களிலும், தன்னாட்சி நிறுவனங்களிலும் நிலவுகின்ற செயல்பாடுகளில், நம் தாய்மொழியாகிய தமிழை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கோட்பாட்டில், தமிழ் வளர்ச்சித் துறையால், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க ஆய்வுப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப் பெறுகின்றன.

இத்தகைய ஆய்வுப் பணிகள், தலைமைச் செயலகத் துறைகள் அளவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் அவர்களாலும், துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களில் தமிழ் வளர்ச்சி இயக்குநராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அஃதன்றி, இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயற்படுத்தப்படுவதற்கான வழிகளை மாவட்ட நிலை மற்றும் சார்நிலை அரசு அலுவலகங்களில் தமிழ் வளர்ச்சி மண்டலத் துணை இயக்குநர், மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் ஆகியோருக்கு, அவர்தம் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இத்துறை உரிய இலக்கினை வரையறை செய்துள்ளது.

1.1.2 ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கென ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்று, அவற்றில் அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்கள்

மற்றும் பணியாளர்களையும் பங்குபெறச் செய்து ஆட்சிமொழித் திட்டமானது சீராகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அறிஞர் பெருமக்களின் விளக்கங்களையும் ஏற்றுக்கொண்டு அனைவரும் பயனுறுமாறு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

ஆட்சிமொழிக் கருத்தரங்கங்கள் செம்மையாக நடைபெறுவதற்கு, மாவட்டத்திற்கு ரூபாய் 20,000/- வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூபாய் 6,40,000/- ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

1.1.3 ஆட்சிமொழிப் பயிலரங்குகள்

அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிப் பயிலரங்குகள் ஆண்டுதோறும் இரண்டு நாள்கள் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. இதற்காக மாவட்டம் ஒன்றிற்கு ரூபாய் 50,000/- வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூபாய் 16,00,000/- ஒவ்வோர் ஆண்டும் அரசினால் செலவிடப்பட்டு வருகிறது. அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களையும் நோக்கில் ஆட்சிமொழி வரலாறும் சட்டமும், ஆட்சிமொழிச் செயலாக்கம், குறிப்புகள், வரைவுகள் எழுதுதல், பிழைநீக்கி எழுதுதல் மற்றும் குறைகளைவு நடவடிக்கைகள் ஆகிய தலைப்புகளில் இந்நிதியானது செலவிடப்பட்டு வருகின்றது.

மேலும், மாறிவரும் காலத்திற்கேற்ப, குறிப்பாகக் கணினியுகம் மேம்பட்டு வரும் இக்காலத்தேவைகளை ஈடேற்ற அரசுப் பணியாளர்களுக்கு மின்காட்சியுரைமூலம் ஆட்சிமொழிப் பயிலரங்கம், கருத்தரங்கம் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன.

1.1.4. சிறந்த குறிப்புகள் வரைவுகளுக்குப் பரிசுகள்

தமிழில் சிறந்த குறிப்புகள், வரைவுகள் எழுதும் அரசுப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட நிலை, சார்நிலை, தன்னாட்சி நிறுவனங்கள், உள்ளாட்சித் துறையின் சார்நிலை அலுவலகப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று முதற்பரிசாக ரூபாய் 3000/-ம், 2 ஆம் பரிசாக ரூபாய் 2000/-ம், 3 ஆம் பரிசாக ரூபாய் 1000/-ம் எனப் பரிசுகள் வழங்கப்பெற்று வருகின்றன. அவ்வாறே, தெரிவு செய்யப்பெற்ற தலைமைச் செயலகத் துறைப் பணியாளர்கள், துறைத் தலைமை

[2018 ஜூன் 13

அலுவலகப் பணியாளர்கள் மற்றும் அரசுப் பொதுத் துறை நிறுவனத் தலைமை அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்கும் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன.

1.1.5 அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்குகின்ற அலுவலகங்களைப் பாராட்டும் வகையில் கேடயமும், சான்றிதழும் வழங்கப்பெற்று வருகின்றன. அதேபோன்று ஆண்டுதோறும் மாவட்ட நிலை அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் ஓர் அலுவலகத்திற்குக் கேடயமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

1.1.6 அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 16-5-2017ஆம் நாளன்று ‘அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர்’ என்ற தமிழ் மென்பொருள் வெளியிடப்பட்டது. கணினியுகத்திற்கேற்ப தமிழ் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, 2016-2017 மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க, கணினியில் ஆங்கில மொழிக்கெனப் பிழை திருத்தி, சொல் திருத்தி வசதிகள் இருப்பதைப்போல், தமிழில் ஒற்றுப்பிழை, சந்தி, மயங்கொலி உள்ளிட்ட இலக்கணப் பிழைகள் ஏதுமின்றி எழுதத்தக்க வகையிலும், தவறுகளைத் தானே சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ளும் வகையிலும் இம் மென்பொருள் அமைந்துள்ளது. இம் மென்பொருள் ஒன்றின் விலை ரூபாய் 300/- ஆகும். 10,000 மென்பொருள் குறுந்தகடுகள் வாங்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் அரசு அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு விலையில்லாமல் வழங்கப்பட்டன.

மேலும், இம்மென்பொருள் பயன்பாடு குறித்து அனைத்து மாவட்டங்களிலும் செயல்முறை விளக்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

1.2 ஆட்சிச் சொல்லகராதி

அரசு நிருவாகத்தில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள், சொல் வங்கிக் குழுவால் உருவாக்கப்பட்ட புதிய சொற்களுடன் மொத்தம் 17,161 சொற்கள் அடங்கிய ஆட்சிச்சொல் அகராதி 2015 ஆம்

ஆண்டில் அச்சிடப்பெற்று அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்த ஆட்சிச் சொல்லகராதி www.tamilvalarchithurai. org என்ற தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் தேடுதல் வசதியுடன் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வகராதி தமிழ் வளர்ச்சித் துறையால் அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ‘அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர்’ மென்பொருளிலும் தேடுதல் வசதியுடன் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது.

1.3 சிறப்புச் சொல் துணை அகராதி

அரசின் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் கலைச் சொற்கள் தொகுக்கப்பெற்று, துறைவாரியாகத் தமிழாக்கம் செய்யப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 75 சிறப்புச் சொல் துணை அகராதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. தற்பொழுது அனைத்துத் துறைச் சொற்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே தொகுதியாக வெளியிடப்படுவதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.4 விழாக்கள்/விருதுகள்

உலகின் உயர்தனிச் செம்மொழியாகவும் தொன்மை வாய்ந்ததாகவும் தூய்மை துலங்குவதாகவும் சேய்களுக்குத் தாய்போல் விளங்குகின்ற தன்மை கொண்டு திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்போல் அமைந்து விளங்குவதாகவும், ஈடு இணையற்ற இலக்கண, இலக்கிய வளங்களையும் செழுமைகளையும் தன்னகத்தே கொண்டு ஏற்றமிகு மொழியாகவும் மாந்தி மாந்திப் பருகுவதற்குரிய இனிய மொழியாகவும் விளங்குகின்ற தமிழ்மொழியின் சிறப்பையும் தமிழ்ப் பண்பாட்டின் சால்பையும் பல்லோரும் அறிகின்ற வகையில் விழாக்கள் போற்றி வருவதுடன் தமிழின் பெருமையைத் தளராது உயர்த்திப் பிடித்து வரும் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்குவதையும் தனது கடப்பாடாகக் கருதி தமிழ் வளர்ச்சித் துறை இயங்கி வருகிறது.

1.4.1 திருவள்ளுவர் திருநாள்

உலகப் பொதுமறை தந்த உன்னதப் புலவர் திருவள்ளுவரை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் தைத் திங்கள் 2 ஆம் நாளைத் ‘திருவள்ளுவர் நாளாகத்’ தமிழ்நாடு அரசு சிறப்பாகக்

[*2018 ஜூன் 13*

கொண்டாடி வருகிறது. இவ்விழாவையொட்டி, தமிழன்னைக்குப் பெருமை சேர்த்திடும் வகையில் தம் வாழ்நாள் எல்லாம் தமிழ்ப்பணியாற்றி வரும் தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வண்ணம் பின்வரும் விருதுகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

1.4.1.1 திருவள்ளுவர் விருது (1986 முதல்)

அறநூல்கள் யாவற்றுள்ளும் தலை நூலாய்க் கருதத்தக்க விதத்தில் புகழ்மிக்க நூலாக விளங்குகின்ற திருக்குறளில் மொழியப்பட்டுள்ள நெறிகளைப் பரப்பும் நோக்கில் செயல் புரிந்து வரும் ஒருவருக்குத் திருவள்ளுவர் திருநாள் அன்று திருவள்ளுவர் விருது வழங்கப்பெற்று வருகிறது. 2018 ஆம் ஆண்டு வரை 32 அறிஞர்கள் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

1.4.1.2 மகாகவி பாரதியார் விருது (1997 முதல்)

மகாகவி பாரதியாரின் படைப்புகளில் தோய்ந்து, அவற்றின் சாரத்தில் தெளிந்து, ஆய்வு நோக்கில் நுட்பமாகப் பாரதியின் கருத்துகளைக் கவிதைகள், உரைநடைகள் போன்றவை வாயிலாகப் பாரெங்கும் பரப்பி வரும் பான்மையிற் சிறந்த பெருமக்களுக்கு மகாகவி பாரதியார் விருது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டுவரை 20 அறிஞர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.1.3 பாவேந்தர் பாரதிதாசன் விருது (1978 முதல்)

பாவேந்தர் பாரதிதாசன் விருது, கடந்த 2017 ஆம் ஆண்டு வரை 38 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டுதான், பாவேந்தர் நூற்றாண்டு தொடக்க விழா கண்ட ஆண்டாகும். அவ்வாண்டில் 21 பேர் இவ்விருது பெற்ற நிலையில், அதற்கு அடுத்தாண்டாகிய, 1991-ல் பாவேந்தரின் நூற்றாண்டு விழா நிறைவு பெற்றபோது 23 பேருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. பாவேந்தரின் கவி மரபினைப் போற்றும் வகையில் படைப்புகளை வழங்கும் சிறந்த கவிஞர் ஒருவருக்கு இவ்விருது அளிக்கப்படுகிறது.

1.4.1.4 தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது (1979 முதல்)

சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவர் இவ்விருது வழங்கப் பெறுவதற்குத் தகுதி பெற்றவராவார். கடந்த 2017 ஆம் ஆண்டு வரை 39 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.1.5 கி.ஆ.பெ. விசுவநாதம் விருது (2000 முதல்)

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் பெயரால் வழங்கப்படும் இவ்விருது தகைசால் தமிழ் அறிஞர் ஒருவருக்குக் கிடைக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2017 ஆம் ஆண்டு வரை 16 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.1.6 பெருந்தலைவர் காமராசர் விருது (2006 முதல்)

வறுமை எந்த நிலையிலும் ஒருவருக்குக் கல்வி கற்கத் தடையாக இருந்திடக் கூடாது என்ற சீரிய கோட்பாட்டில் தம்மை ஒப்படைத்துக் கொண்டத் தகைமையாளர்தாம் பெருந்தலைவர் காமராசர். அவர்தம் பெயரில் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் காமராசரின் அடிச்சுவட்டில், தமிழக மக்களுக்குத் தொண்டாற்றி வரும் ஒருவர் ஆண்டுதோறும் இவ்விருதினைப் பெறுவதற்கான தகவுடையராய்த் தெரிவு செய்யப்படுகிறார். தெருவெங்கும் பள்ளிகளைத் திறந்து, இலவசக் கல்வித் திட்டம், மதிய உணவுத் திட்டம் முதலிய திட்டங்கள் வாயிலாகத் தமிழ்ச் சமுதாயத்திற்குக் 'கல்வி' எனும் கைவிளக்குத் தந்த கரும வீரர் காமராசர் பெயரிலும் விருது வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

2017 ஆம் ஆண்டு வரை 12 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். (2006 முதல் பொதுத் துறையால் வழங்கப்பெற்றுவந்த இவ்விருது 2014-லிருந்து தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெற்று வருகிறது).

1.4.1.7 பேரறிஞர் அண்ணா விருது (2006 முதல்)

கதை, கட்டுரை, நாடகம் இவற்றின் வாயிலாகத் தமது அளப்பரிய படைப்பாற்றலை வெளிப்படுத்தி சமூகத்தில் பெரியதொரு விழிப்புணர்வை, அதிலும் குறிப்பாக மாணவர்களிடம் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழ்ச் சமுதாயம் பல்வகையிலும் வளர்ச்சிநெறி கண்டு தழைத்தோங்க வேண்டும் என்று அல்லும் பகலும் கனவு கண்டவர் அறிஞர் அண்ணா அவர்கள். அவரது சிந்தனையை உள்வாங்கிக் கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வரும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டு வரை 12 பேர் இவ்விருதினைப் பெற்றுப் பாராட்டுக்குரியவர்களாகியுள்ளனர்.

(2006 முதல் பொதுத் துறையால் வழங்கப்பெற்றுவந்த இவ்விருது 2014-லிருந்து தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெற்று வருகிறது).

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏழு விருதுகளைப் பெறும் விருதாளர்கள் விருதுத் தொகையாக ரூபாய் ஓர் இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம் ஆகியவை வழங்கிப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்பெறுகிறார்கள்.

1.4.2 சித்திரை-தமிழ்ப் புத்தாண்டு விருதுகள்

சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு நாளில் தமிழ் மொழியின் பெருமையைப் போற்றி வரும் சிறந்த தமிழ் அமைப்புகளுக்கும் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் முனைப்போடு சீரிய பணியாற்றி வரும் தமிழ் அறிஞர்களுக்கும் பின்வரும் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

1.4.2.1 தமிழ்த்தாய் விருது (2012 முதல்) தமிழ் அமைப்புகளுக்கு வழங்கப்படும் விருது

தனி மனித முயற்சியினாலும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பதை உலக வரலாறுகள் உணர்த்துகின்ற போதிலும், கூட்டு முயற்சிக்கு இருக்கும் வலிமை தனி மனித முயற்சிக்கு இருக்கும் வலிமையைக் காட்டிலும் உயர்ந்தது என்பதை ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்! அவ்வகையில், தமிழர்கள் ஒன்றுகூடி ஓர் அமைப்பாக அல்லது ஒரு பெரும் குழுவாக இயங்கி, மொழியின் சிறப்பையும், தொன்மையையும் மொழி பேசுவோருக்குரிய பண்பாடு மற்றும் நாகரிகம் இவற்றையும் உலகுக்கு எடுத்து ஓதுகின்ற வகையில் தமிழ்த் தொண்டாற்றும் அமைப்புகளுக்கு வழங்கப்படும் விருதுதான் 'தமிழ்த்தாய் விருதாகும்'. தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் பங்களிப்பு செய்து வரும் தமிழ் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஆய்ந்து, அவற்றை ஊக்கப்படுத்திப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் அமைந்த இவ்விருது, ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையையும், தகுதியுரையையும், பாராட்டுக் கேடயத்தையும் கொண்ட ஒரு விருதாகும். அவ்வகையில், கடந்த 2017 ஆம் ஆண்டு வரையில் 6 அமைப்புகள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

1.4.2.2 கபிலர் விருது (2012 முதல்)

மரபுச் செய்யுள் / கவிதை இயற்றும் ஆற்றல் பெற்ற தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது. அவர்தம் படைப்புகளில் பழந்தமிழரின் தொன்மை, வரலாறு,

நாகரிகம், பண்பாடு முதலியன விளங்கி அவை தமிழுக்கு அணி சேர்க்கும் வகையில் அமைய வேண்டும் என்பது இவ்விருதுக்கான அடிப்படையாகும். கடந்த 2017 ஆம் ஆண்டு வரையில் அறுவர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.2.3 உ.வே.சா. விருது (2012 முதல்)

ஊர்தோறும் ஏடுகள் தேடி, தமிழறிஞர்களின் இல்லக் கதவுகளைத் தட்டிச் சற்றும் சளைக்காது, ஊண் மறந்து, உறக்கந்துறந்து இலக்கிய ஓலைகளைத் திரட்டி அவை அச்சுப் பதிப்பாக வெளிவருவதற்கு அரும்பணியாற்றியவர் டாக்டர் உ.வே.சா. ஆவார். அவர்தம் பெயரால் வழங்கப்படும் இவ்விருது கல்வெட்டுகள், அகழாய்வு, ஓலைச்சுவடிகள் முதலியவற்றைத் தம் கடின முயற்சியால் கண்டறிந்து வெளிக்கொணர்ந்து அவற்றைப் பதிப்பிப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வரும் சிறந்ததோர் அறிஞருக்கு உரியதாகும். கடந்த 2017 ஆம் ஆண்டு வரை அறுவர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.2.4 கம்பர் விருது (2013 முதல்)

காவியத் தாயின் அருந்தவப் புதல்வர் கம்பரின் படைப்புகளை ஆய்வு செய்யும் ஆற்றலும் கம்பரைப் பல கோணங்களிலும் திறனாய்வு செய்யும் வலிமையும் பெற்ற அறிஞருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. அவ்வகையில், கவிபாடும் ஆற்றல், கதைக் கட்டமைப்பு, பாத்திரப் படைப்பு என்ற பல்வகையாலும் கம்பர் புகழ் பரவும் வகையில் பணியாற்றுகின்றவரே இவ்விருதுக்குரியவராவார். கடந்த 2017 ஆம் ஆண்டு வரை 5 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.2.5 சொல்லின் செல்வர் விருது (2013 முதல்)

இவ்விருது சிறந்த இலக்கியப் பேச்சாளருக்கும், தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும் மக்கள் மனம் ஈர்க்கும் வகையில் சொற்பொழிவாற்றும் திறன் பெற்றவருக்கும் உரியதாகும். கடந்த 2017 ஆம் ஆண்டு வரை 5 பேர் இவ்வகை விருதாளர்களாக விளங்கி வருகின்றனர்.

1.4.2.6 உமறுப்புலவர் விருது (2014 முதல்)

சமயத்துள் தமிழும், தமிழுக்குள் சமயமும் ஊடாடி வந்திருக்கின்ற கால கட்டங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில்

காணக்கிடக்கின்றன. சமயம் சார்ந்த இலக்கியப் படைப்புகள், தமிழ் மொழியின்பால் மதங்கடந்த சிந்தனையாளர்களையும், மொழிநடையால், சொற்சுவையால், உவமை நயத்தால், பொருண்மைத் திண்மையால் ஈர்த்து வந்துள்ளன என்பதை மறுக்க இயலாது. அவ்வகையில், இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களில் சிறந்த காப்பியமான சீறாப்புராணத்தை இயற்றிய உமறுப்புலவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டைப் போற்றும் வகையில் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றிவரும் தமிழறிஞருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டு வரை நால்வர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.2.7 ஜி.யு.போப் விருது (2014 முதல்)

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அறிஞர்களுள் ஜி.யு.போப் அவர்களும் ஒருவராவார். அவரது தமிழ்ப் பணியைப் போற்றும் வகையில் அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளருக்கு இவ்விருது வழங்கப்பெறுகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டு வரை நால்வர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.2.8 இளங்கோவடிகள் விருது (2015 முதல்)

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளின் நடையையொட்டிப் புதிய காப்பியங்களைப் படைக்க வல்லவருக்கும், சிலப்பதிகாரத்தின் புகழைப் பல்லோரிடத்திலும் பரவச் செய்கின்ற விதத்தில் தம் படைப்பாற்றலை வெளிப்படுத்தி நிற்கும் அறிஞருக்கும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டு வரையில் மூவர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.2.9 முதலமைச்சர் கணினித் தமிழ் விருது (2013 முதல்)

காலமாற்றத்தைக் கருத்தில் கொண்டு, கணினியுகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம் என்ற எண்ணத்தையும் கருத்திற்கொண்டு உலகெலாம் நம் தாய்மொழியான தமிழ் மொழியைக் கணினி வழியாகப் பரவிடச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ் வளர்ச்சிக்காகச் சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது' வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2016 ஆம் ஆண்டு வரையில் நால்வர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.4.2.10 அம்மா இலக்கிய விருது (2016 முதல்)

இவ்விருதானது மகளிர் பற்றிய இலக்கியங்களை உருவாக்குவதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தமிழ்த் தொண்டாற்றுகின்ற பெண் படைப்பாளர் ஒருவருக்கு 2016 ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இருவர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளில் தமிழ்த்தாய் விருது தவிர்த்து ஏனைய விருதுகளைப் பெறும் விருதாளர்கள் விருதுத் தொகையாக ரூபாய் ஓர் இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் மற்றும் பொன்னாடையும் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

1.4.2.11 சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (2016 முதல்)

பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் தரமான பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் மொழிபெயர்ப்பாளர்களுள் 10 பேரை ஆண்டுதோறும் தெரிவு செய்து 'சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது' வழங்கப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் 20 பேருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. விருது பெற்ற ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக 1 இலட்சம் ரூபாய் நிதியும், தகுதியுரையும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், விருதாளர்கள், விழா மேடையில் பொன்னாடை அணிவிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இதன் வாயிலாகப் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற வரிகளுக்கு உயிரோட்டம் காண இவ்வரசு தலைப்பட்டுள்ளது என்பது வெள்ளிடை மலையாகும்.

1.4.2.12 சிங்காரவேலர் விருது (2018 முதல்)

தமிழில் அறிவியல் கருத்துகளை நூலாக எழுதுபவர்கள், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் சமத்துவக் கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் பாடுபடுபவர்களில் சிறந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் சிங்காரவேலர் விருது என்ற புதிய விருது வழங்கப்படும். இவ்விருது பெறும் விருதாளர்களுக்கு ரூபாய் 1 இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியன வழங்கப்படும் என மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களால் 19-7-2017 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்110-ன்கீழ் அறிவிக்கப்பட்டது. இவ்விருது 2018 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

1.4.2.13 தமிழ்ச்செம்மல் விருது (2015 முதல்)

2015 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இவ்விருதானது தமிழ்நாட்டில் தமிழ்த் தொண்டாற்றி வரும் ஆர்வலர்களுக்குப் பெரிதும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் உள்ள மிகச்சிறந்த தமிழ் அறிஞர்களைத் தெரிவுசெய்து மாவட்டத்திற்கு ஒருவர் என்ற முறையில் விருது பெற்ற விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் இருபத்தைந்தாயிரமும், தகுதியுரையும் வழங்கப்பட்டும் பொன்னாடை அணிவிக்கப்பட்டும் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர். 2017 ஆம் ஆண்டு வரை 96 பேர் விருது பெற்றுள்ளனர்.

1.5 உலகத் தாய்மொழி நாள்

கடந்த 2013-2014 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது, ஆண்டுதோறும் பிப்ரவரித் திங்கள் 21 ஆம் நாள் தமிழகத்தில் தாய்மொழி நாள் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

1.6 தமிழ்க் கவிஞர் நாள்

2015-2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது ஆண்டுதோறும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளான ஏப்ரல் 29 அன்று 'தமிழ்க் கவிஞர் நாள்' என்ற பெயரில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழ்க் கவிஞர் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

1.7 'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, மாநிலப் பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான அரசு அமைந்தவுடன், 1967 ஆம் ஆண்டு அப்போதைய 'சென்னை மாகாணத்திற்குத்' 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட, சட்டமன்றப் பேரவையில்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1969 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆம் நாள் 'தமிழ்நாடு' என்று நமது மாநிலத்திற்குப் பெயர் சூட்டப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நமது மாநிலம் 'தமிழ்நாடு' என்ற பெயரோடு 50-வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ், 'தமிழ்நாடு' பொன் விழா ஆண்டாக **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின்** அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது என அறிவித்தார்கள்.

பொன்விழா ஆண்டில் நம் கண் போன்ற தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், தமிழ் வளர்ச்சித் துறை மூலமாகக், கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்; கலைபண்பாட்டுத் துறை வாயிலாக நாட்டுப்புற நடனம், தமிழிசை வாய்ப்பாட்டு, பரதநாட்டியம்; இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை வாயிலாக ஓட்டப் பந்தயம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் போன்ற போட்டிகள் மாவட்ட/ மாநில அளவில் சிறப்பாக நடத்தப்பெற ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இளந்தமிழ் ஆய்வாளர்கள் 50 பேருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான தமிழ்நாடு 50 ஆம் ஆண்டு பொன்விழாக் கொண்டாட்ட நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பாராட்டும் பரிசும் வழங்கிச் சிறப்பு செய்யப்படவுள்ளது.

இதற்கென 2018-2019 ஆம் ஆண்டில் செலவினத் தொகையாக ரூபாய் 109.05 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1.8 திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தல்

திருவள்ளுவர், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர், ஔவையார், கவிச்சக்கரவர்த்தி கம்பர், இளங்கோவடிகள் மற்றும் தமிழறிஞர் கால்டுவெல் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அவர்தம் அருமை பெருமைகளைப் போற்றி வருகின்றது தமிழ்நாடு அரசு.

[*2018 ஜூன் 13*

1.8.1 திருவள்ளுவர்

உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் தைத் திங்கள் 2 ஆம் நாளன்று மலர்மாலை அணிவித்தும் மலர்தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

1.8.2 தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர்

ஊர்தோறும் ஓடிஓடி, தமிழர்களின் கருவூலமான தமிழிலக்கியச் சுவடிகளைத் தேடித்தேடி ஆய்ந்தறிந்து நூலாக்கிய ஆற்றல்மிகு வித்தகர் பெருந்தமிழறிஞர் டாக்டர் உ.வே.சா. அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 19 ஆம் நாளன்று சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு 1993 ஆம் ஆண்டு முதல் மாலை அணிவித்தும் மலர்தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. இன்று அச்சு வடிவில் நாம் படித்து மகிழும் அரும்பெரும் நூல்களைத் தம் அயராத முயற்சியால் தொகுத்துப் பதிப்பில் கொண்டு சேர்த்த அளவற்ற பெருமை அவரையே சேரும்.

1.8.3 ஔவையார்

அறநெறி நூல்களான ஆத்திசூடி, நன்னெறி, மூதுரை போன்றவற்றைத் தம் பொன்வரிகளால் வேய்ந்து தமிழுலகத்திற்கு அளித்து பெண்ணியத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் விளங்கிய பெரும் பெண் புலவர் ஔவையாரின் நினைவைப் போற்றுகின்ற வகையில், 2004 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அவரது திருவுருவச் சிலைக்கு 'உலக மகளிர் தினமான' மார்ச்சு 8 ஆம் நாளன்று மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

1.8.4 கம்பர்

கவிச் சக்கரவர்த்தி கம்பரின் புகழைப் போற்றும் வகையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும் என 2017-2018 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, கம்பராமாயணத்தை அரங்கேற்றிய பங்குனித் திங்களில் மாலை அணிவித்துச் சிறப்பு செய்ய முடிவு செய்யப்பட்டது.

காரைக்குடி கம்பன் கழகத்தின் சார்பாக 24-3-1940-ல் முதன்முதலாகக் காரைக்குடியில் உள்ள நாட்டரசன்

கோட்டையில் கம்பருக்கு மூன்று நாள்கள் இலக்கியப் பெருவிழா எடுக்கப்பட்டது. அதனை முன்நிகழ்வாகக் கொண்டு ஆண்டுதோறும் மார்ச்சுத் திங்கள் 24 ஆம் நாளன்று கம்பர் திருநாள் என்று வரையறுத்து அந்த நாளில் சென்னை, காமராசர் சாலை, அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட ஆணையிடப்பட்டது. அவ்வகையில் முதன்முறையாக 24-3-2018 ஆம் நாளன்று சிறப்பு செய்யப்பட்டது.

1.8.5 இளங்கோவடிகள்

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகளின் புகழைப் போற்றும் வண்ணம் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும் என 2017-2018 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, சித்திரைத் திங்களில் அதாவது ஏப்ரல் திங்களில் பத்து நாள்கள் இந்திர விழா கொண்டாடப்படுவதற்குச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் சான்றுகள் உள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழறிஞர்களின் கருத்துகளுக்கிணங்க ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாளன்று சென்னை, காமராசர் சாலை, அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள இளங்கோவடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட ஆணையிடப்பட்டது. அவ்வகையில் முதன்முறையாக 24-4-2018 ஆம் நாளன்று சிறப்பு செய்யப்பட்டது.

1.8.6 தமிழறிஞர் கால்டுவெல்

திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படும் இராபர்ட் கால்டுவெல் என்ற தமிழ் அறிஞர் ஒப்பிலக்கண ஆராய்ச்சிப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவராவார். அம்மொழிகளின் தனித்துவத்தை நிலை நிறுத்துவதில், அவர்தம் வாழ்நாள் முழுதும் அரும்பாடுபட்டு வந்துள்ளார். அயல்நாட்டு அறிஞராயிருந்தும் நம் நாட்டுத் தமிழ்மொழியில் நாட்டம் கொண்டு, தமிழின் தகைமையைத் தமிழருக்கு எடுத்துச் சொன்ன மாபெரும் தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் தமிழ்ப் பணி வியக்கத்தக்க ஒன்றாகும். எனவே, அவரைப் பெருமைப்படுத்தும் நோக்கில், அவரது இருநூற்றாண்டின் நிறைவு விழாவைச் சிறப்பிக்கும் வகையில், அவரது பிறந்த நாளான மே 7 ஆம் நாளன்று அவருடைய திருவுருவச் சிலைக்குச் சிறப்பு செய்ய

அரசால் ஆணையிடப்பட்டது. அதன்படி 2014 ஆம் ஆண்டு முதல் சென்னை காமராசர் சாலையில் உள்ள அவர்தம் சிலைக்கு மாலை அணிவித்தும் மலர்தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

1.9 சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்குச் சிறப்பு செய்தல்

சங்க காலத் தமிழர்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் வண்ணம் பாடப்பட்ட சங்க இலக்கியங்களை நமக்குத் தந்த சங்ககாலப் புலவர்களை நினைவுகூரும் விதமாக, தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்ட ஒக்கூர் மாசாத்தியார், நல்லூர் நத்தத்தனார், மாங்குடி மருதனார் மற்றும் கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர் ஆகிய சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்குத் தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாடப்படும் ஏப்ரல் 29 ஆம் நாளன்று மாலை அணிவித்து மலர் தூவிச் சிறப்பு செய்யப்படும் என 2017-2018 மானியக் கோரிக்கை அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, முதன்முதலில் 29-4-2018 ஆம் நாளன்று இந்நினைவுத் தூண்களுக்கு மாலை அணிவித்தும் மலர் தூவியும் சங்கப் புலவர்களின் புகழ் பரப்பும் வகையில் சிறப்புச் சொற்பொழிவும் நடத்தப்பெற்றன.

1.10 சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

தமிழ் மொழியின் எழிலார்ந்த உயிர்ப்புத் தன்மையை உய்த்து உணரும் வகையில் ஆண்டுதோறும் நற்றமிழில் மிகச் சிறந்த நூல்கள் வெளிவருவதற்குத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து தன் பங்கை அளித்து வருவது பல்லோரும் அறிந்த உண்மையாகும். படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுதோறும் 33 வகைப்பாடுகளில் போட்டிக்கு நூல்கள் பெறப்பட்டு, ஒவ்வொரு வகைப்பாட்டிலும் சிறந்த நூல் ஒன்றுக்குப் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூலின் ஆசிரியருக்குப் பரிசுத் தொகையாக ரூபாய் 30,000/- மற்றும் சான்றிதழும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகையாக ரூபாய் 10,000/- மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன. வகைப்பாடுகள் வருமாறு:-

1. சிறுவர் இலக்கியம்
2. மரபுக் கவிதை

3. புதுக் கவிதை
4. புதினம்
5. சிறுகதை
6. நாடகம் (உரைநடை, கவிதை)
7. திறனாய்வு
8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம்
9. பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள்
10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்)
11. அகராதி, கலைக்களஞ்சியம், கலைச்சொல்லாக்கம், ஆட்சித் தமிழ்
12. பயண இலக்கியம்
13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு
14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிகவழிகளும், அகழாய்வு
15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல்
16. பொறியியல், தொழில் நுட்பவியல்
17. மானுடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல்
18. சட்டவியல், அரசியல்
19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல்
20. மருந்தியல், உடலியல், நலவியல்
21. தமிழ் மருத்துவ நூல்கள்
(சித்த மருத்துவம், ஆயுர்வேதம்)
22. சமயம், ஆன்மிகம், அளவையியல்
23. கல்வியியல், உளவியல்

24. வேளாண்மையியல், கால்நடையியல்

25. சுற்றுப்புறவியல்

26. கணினியியல்

27. நாட்டுப்புறவியல்

28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம்

29. இதழியல், தகவல் தொடர்பு

30. பிற சிறப்பு வெளியீடுகள்

31. விளையாட்டு

32. மகளிர் இலக்கியம்

33. தமிழர் வாழ்வியல்

1.11 தமிழ் நூல்கள் வெளியிட நிதியுதவி

சிந்தனைத் திறன்மிக்க எழுத்தாளர்கள் தம் அரிய படைப்புகளைப் பதிப்பிக்க முடியாமல் பொருளாதாரச் சிக்கலால் திணறுகின்ற நிலை எழக்கூடாது என்ற உயர்ந்த கோட்பாட்டின் அடிப்படையில், இவ்வரசானது தமிழில் சிறந்த நூல்கள் வெளியாவதை ஊக்கப்படுத்தும் விதமாக நூலாசிரியர்களுக்கு நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. அரசு அச்சக மதிப்பீட்டின்படி நூலின் அச்சுச் செலவினம் அல்லது ரூபாய் 50,000/- இவற்றில் குறைவான தொகை மட்டுமே நூலாசிரியருக்கு நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்படுகிறது.

1.12 குறள் பரிசு

பள்ளி மற்றும் கல்லூரிப் பருவத்திலேயே, மாணவர் / மாணவியர் திருக்குறளில் மொழியப்பட்டுள்ள அறநெறிக் கருத்துகளின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டு அவர்தம் எதிர்கால வாழ்வை வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று கருதுவதுடன் மொழி ஆர்வத்தையும், மொழித் திறனையும் அவர்களிடம் உண்டாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இவ்வரசானது 1330 குறட்பாக்களையும் மனனம் செய்து ஒப்பிக்கும் திறன் பெற்ற பள்ளி / கல்லூரி மாணவருக்குப் பரிசுத் தொகையாக ரூபாய் 10,000/- வழங்கி ஊக்குவித்து வருகிறது.

ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ் *2015-2016* ஆம் ஆண்டு முதல், பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை *36*-லிருந்து *50* ஆக உயர்த்தப்பட்டு, பரிசு வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை *329* மாணவர்களுக்குக் குறள் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

1.13 மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

மாணவர்களிடையே தமிழிலக்கியப் படைப்பாற்றலை வளர்த்திடும் வண்ணம் *2003-2004* ஆம் ஆண்டு தமிழ்மன்ற இலக்கியப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. கவித் திறனைப் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களிடையே வளர்க்கும் நோக்கில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை *2003-2004* ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் இவ்வரசு நடத்தி வருகிறது. அவ்வகையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. *2017-2018* ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான போட்டிகள் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பெற்றன.

பரிசு விவரம்

வகைப்பாடு	பரிசு விவரங்கள்	தொகை (ரூபாயில்)
மாவட்ட அளவில் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதல் பரிசு	*10000*
	இரண்டாம் பரிசு	*7000*
	மூன்றாம் பரிசு	*5000*
மாநில அளவில் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதல் பரிசு	*15000*
	இரண்டாம் பரிசு	*12000*
	மூன்றாம் பரிசு	*10000*

1.14 இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

முதன்முதலில் இலக்கியப் பயிற்சிப் பட்டறையானது திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவரங்கத்தில்தான் நடத்தப்

பெற்றது. 2012-2013 ஆம் ஆண்டில் நிகழ்த்தப் பெற்ற அவ்விலக்கியப் பயிற்சிப் பட்டறை, தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் நடத்தப்பெறும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்கள் 100 பேரைக் கொண்டு நிகழ்த்தப் பெற்ற ஒன்றாகும்.

100 மாணவர்கள் என்ற எண்ணிக்கை 200 ஆக ஆக்கப்பட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டவாறு தற்போது மேற்கண்ட வகையில் 200 மாணவர்களுக்கு மொத்தம் ரூபாய் 20 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய பயிற்சிப் பட்டறையின் வாயிலாக இளம் எழுத்தாளர்களுக்குக் கவிதை, கட்டுரைப் பயிற்சியும் பேச்சாளர்களுக்குப் பேச்சுப் பயிற்சியும், விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதற்கான பயிற்சியும் அந்தந்தத் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு ஒருவாரக் காலத்திற்கு அளிக்கப்படுகிறது. இதுவரை நடத்தப்பெற்ற 6 இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள் வாயிலாக ஏறத்தாழ 1100 பேர் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

பயிற்சி பெற்ற மாணவர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் வகையில் இவர்கள் அமைப்புகளைத் தோற்றுவித்து தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பயனளிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1.15 நூல்கள் நாட்டுடைமை

"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்லவேண்டும் இவர்போல யாரென்று ஊர் சொல்லவேண்டும்"

என்ற அருமையான பாடல் வரிகளுக்கேற்ப, மறைந்த தமிழறிஞர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் பாரெங்கும் பவனி வரவேண்டும்; எளிய வகையில் அனைவரையும் சென்றடைய வேண்டும் எனும் நோக்கிலும் அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே, அத்தகைய தமிழறிஞர்களின் படைப்புகள் பொதுவுடைமையாதல் வேண்டும் என்ற கோட்பாட்டைச் செயல்படுத்தும் வண்ணம் அந்நூல்கள் யாவற்றையும் நாட்டுடைமையாக்கி, அவர்தம்

மரபுரிமையாளருக்குப் பரிவுத் தொகையை இவ்வரசு வழங்கி வருகிறது.

இதுவரை 146 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையருக்கு ரூபாய் 10.92 கோடி பரிவுத் தொகை அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களின் நூலாசிரியர் பட்டியல் இணைப்பு—II இல் அளிக்கப்பட்டுள்ளது.

1.15.1 நாட்டுடைமை நூல்களை அச்சிட்டு வெளியிடும் திட்டம்

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இதுவரை 103 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், 57 நூல்கள் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.

1.15.2 நாட்டுடைமை நூல்களை இணையதளத்தில் வெளியிடும் திட்டம்

தமிழறிஞர்களின் தரமிக்க படைப்புக்களில் மேலோங்கி நிற்கும் விழுமியங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன.

அவ்வண்ணம் நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களில் இருந்து இதுவரை 2188 நூல்கள் உருப்படம் செய்யப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலும் (www. tamilvalarchithurai.com) தமிழ் இணையக் கல்விக் கழக வலைத்தளத்திலும் (www.tamilvu.org) வெளியிடப்பட்டுள்ளன.

1.16 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

1.16.1 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

புலவர்களுக்கு வறுமை சொந்தம் என்ற காலம் ஒன்று இருந்தது. அதனை முற்றிலும் மாற்றியமைக்கின்ற வகையில், காலமெல்லாம் களைப்பின்றி தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள், தமது அகவை முதிர்ந்த காலத்தில் வாடிடக்கூடாது என்ற சீரிய குறிக்கோளுடன் தொடங்கப்பட்டதுதான் இத்திட்டம். இஃதானது 1978 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திங்கள்தோறும் ரூபாய் 2,500/- ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி ரூபாய் 100/- மற்றும் தமிழ்நாடு முழுவதும் கட்டணமின்றிப் பயணம் மேற்கொள்ளும் பொருட்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கட்டணமில்லாப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுவதாகும். உதவித் தொகை பெறுபவரின் மறைவிற்குப்பின் அவரின் மரபுரிமையர்க்கும் வாழ்நாள் முழுவதும் அதே அளவிலான உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இதுவரை, தமிழறிஞர்கள் 847 பேருக்கு நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1.16.2 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

தமிழ்மொழியையும் பண்பாட்டையும் போற்றிப் பாதுகாத்திடும் வண்ணம் தமிழ்மொழிக்குத் தொண்டு செய்வதையே தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டு அல்லும் பகலும் உழைத்து வரும் அறிஞர் பெருமக்களுக்கு அவர்தம் வாழ்நாள் முழுவதும் நலிவின்றி வாழத் திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவித் தொகை பெறுவோரின் மறைவுக்குப்பின் அவர்தம் மரபுரிமையர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், உதவித் தொகை பெறும் அனைவருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளில் தமிழ்நாடு முழுவதும் பயணித்துத் தமிழ்ப் பணியாற்றவும் கட்டணமில்லாப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கப்படும் விவரம்

அ)	தமிழறிஞர்	-	ரூபாய் 3,000/- + ரூபாய் 100/- மருத்துவப்படி
ஆ)	தமிழறிஞரின் மரபுரிமையர்	-	ரூபாய் 1,500/- + ரூபாய் 100/- மருத்துவப்படி

இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம்:

அ) தமிழறிஞர்	1098 பேர்
ஆ) தமிழறிஞர்களின் மரபுரிமையர்	884 பேர்
மொத்தம்	1982 பேர்

1.16.3 எல்லைக் காவலர்களுக்கு நிதியுதவி

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டபொழுது, தமிழ்நாட்டின் எல்லையைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. அதுமட்டுமன்றி, அவர்கள் மறைவுக்குப்பின்னும் அவர் மரபுரிமையாளர்களுக்கும் நிதியுதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், உதவித் தொகை பெறும் அனைவருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கட்டணமில்லாப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இச்சலுகை காரணமாக எல்லைக் காவலர்களும் அவர்தம் மரபுரிமையரும் தமிழ்த் தொண்டாற்றிட இயலும் என்பது திண்ணம்.

திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கப்படும் விவரம்:

அ) எல்லைக் காவலர்	-	ரூபாய் 4,000/- + ரூபாய் 100/- மருத்துவப்படி
ஆ) மரபுரிமையர்	-	ரூபாய் 2,000/- + ரூபாய் 100/- மருத்துவப்படி

இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம்:

அ) எல்லைக் காவலர்கள்	401 பேர்
ஆ) எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள்	239 பேர்
மொத்தம்	640 பேர்

1.17 தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்படும் நல்கைகள் விவரம்

1.17.1 தமிழ்நாட்டில் வழங்கப்படும் நல்கைகள்

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை, அறிவியல் தமிழ் மன்றம், ஆசியவியல் நிறுவனம் ஆகியவை மேற்கொண்டுவரும் தமிழ்ப் பணிகளில் சுணக்கம் ஏற்படாவண்ணம் காக்கும் பொருட்டு இந்நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு அரசால் நிதியளிக்கப்பட்டு வருகின்றது.

1.17.2 பிற மாநிலம்/அயல் நாடுகளில் தமிழ்க் கல்விக்கு நிதியுதவி

வெளிமாநிலம்/அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்தி, தமிழ்க் கல்வி அளிக்கும் நோக்கில் தமிழக அரசு நல்கைகளை வழங்கி வருகிறது. அவ்வகையில் தில்லியில் உள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட ரூபாய் 50 இலட்சமும், ஒடிசாவிலுள்ள உத்கல் பண்பாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை நிறுவிட ரூபாய் 10 இலட்சமும் அதேபோன்று உத்தரப்பிரதேசம், கருநாடகம், ஆந்திரம், கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவிட நல்கைகளும் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளன.

வைப்புத் தொகையின் வாயிலாகச் செயற்பட்டுவரும் தமிழ் இருக்கைகள் விவரம்:

வ. எண்	நிறுவனம்	வைப்புத் தொகை (ரூபாய்)
1.	சவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி	50 இலட்சம்
2.	உத்கல் பண்பாட்டுப் பல்கலைக்கழகம், ஒடிசா	10 இலட்சம்
3.	இந்து பல்கலைக்கழகம், வாரணாசி	3 இலட்சம்
4.	மகாத்மா காந்தி நிறுவனம், மொரீசியசு	1 கோடி
5.	தொல்காப்பியர் ஆய்விருக்கை, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்	50 இலட்சம்

பிற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் தொடர்பான பல்வேறு திட்டப் பணிகள் தமிழக அரசின் நிதியுதவியால் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

1.17.3 திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

ஆந்திர மாநிலம் குப்பத்தில் செயல்பட்டு வரும் திராவிடப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து கட்டடங்கள் கட்டவும், திட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு அரசு நல்கைகளை வழங்கி வந்துள்ளது. இவ்வகையில் இதுவரை ரூபாய் 1,01,34,552/- வழங்கியுள்ளது.

இதுமட்டுமின்றி திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையை உருவாக்குவதற்காக ஒரு பேராசிரியர், ஒரு இணைப் பேராசிரியர், இரண்டு உதவிப் பேராசிரியர்கள் ஆகிய பணியிடங்களை 2008-ல் ஏற்படுத்தி ஊதியமாக இதுவரை ரூபாய் 15,14,552/- வழங்கியுள்ளது. மேலும், தமிழ்த் துறையில் பயிலும் தகுதியுள்ள, பொருளாதாரத்தில் பின்தங்கிய முதுகலை, ஆய்வு மாணவர்களுக்குத் தமிழ் வளர்ச்சித் துறைமூலம் ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2015-2016 இல் 20 முதுகலை மாணவர்களுக்கும், 2 ஆய்வு மாணவர்களுக்கும் சேர்த்து உதவித் தொகையாக ரூபாய் 5,53,300/- வழங்கப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் முதுகலை மாணவர்கள் 28 பேருக்கு ரூபாய் 7,44,200/-, ஆய்வு மாணவர்கள் 4 பேருக்கு ரூபாய் 1,32,300/- என மொத்தம் ரூபாய் 8,76,500/- வழங்கப்பட்டுள்ளது.

1.17.4 மொரீசியசு நாட்டில் தமிழ் இருக்கை

மேலும், பேரறிஞர் அண்ணாவின் பெயரில் தமிழ் ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் அயல்நாடான மொரீசியசு நாட்டில் உள்ள மகாத்மா காந்தி நிறுவனத்தில் ரூபாய் 1 கோடி வைப்புத் தொகையில் தமிழ் இருக்கை தொடங்கப்பட்டு, தமிழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.17.5 குவகாத்தி பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவி

குவகாத்தி பல்கலைக்கழகத்தில் 2016-2017 ஆம் ஆண்டு முதல் தமிழை விருப்பப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதன்படி 2016-2017 ஆம் ஆண்டில் பயின்ற 6 மாணவர்களுக்கு ரூபாய் 1 இலட்சத்து 39 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆண்டுதோறும் இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2017-2018 ஆம் நிதியாண்டில் இப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குக் கணினி வாங்கிடவும் தமிழ் நூலகம் அமைத்திடவும் உதவித் தொகையாக ரூபாய் 2,88,881 வழங்கப்பட்டுள்ளது.

1.17.6 பிற மாநிலங்களில் தமிழ் அமைப்புகள் / சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

மாநிலங்கள்தோறும் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தங்களது கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் நாகரிகம் இவற்றைச் சிந்தாது, சிதறாது வரும் தலைமுறையின் கையில் தவறாது ஒப்படைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அவர் யாவரும் தமிழ்த் தொண்டாற்ற அந்தந்த மாநிலங்களில் தமிழ் அமைப்புகள் / சங்கங்கள் நிறுவிச் செயற்படுத்தும் முகத்தான் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், பெங்களூரு தமிழ்ச் சங்கம், நவிமும்பை தமிழ்ச் சங்கம், புவனேசுவர் தமிழ்ச் சங்கம், புதுதில்லி தமிழ்ச் சங்கம் ஆகியவை தமிழ்நாடு அரசின் நிதியுதவியைப் பெற்று வந்துள்ளன. அஃதன்றி, தொடர்ந்து பிற மாநிலங்களில் உள்ள தமிழ் அமைப்புகள் / சங்கங்கள் இவை யாவும் தத்தம் கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசிடமிருந்து நிதியுதவி பெறுதல் கூடும்.

1.17.7. ஆர்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை

உலகப் பல்கலைக்கழகங்களில் 380 ஆண்டுகளாகத் தலையாய பல்கலைக்கழகமென விளங்கும் அமெரிக்காவில் உள்ள ஆர்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்தப்படும் என்ற **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 10 கோடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இருக்கையை ஏற்படுத்துவதன்மூலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு

இந்தியவியல் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளுதல், ஆராய்ச்சிக் கல்வியில் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளும் வகையில் மாணவர்களை உருவாக்குதல், அமெரிக்க நூலகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான ஆவணங்களை ஆய்வுக்கு உட்படுத்துதல், பதிப்பிக்கப்படாத ஆவணங்களைப் படியெடுத்துப் பதிப்பிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு பணிகள்மூலம் தமிழ் மொழியின் வளம் உலகறியச் செய்ய வழிவகை ஏற்படும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் அமெரிக்காவின் ஆர்வர்ட் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உட்பட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் அமெரிக்க நாட்டின் "தமிழ் இருக்கை இங்க்" நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நல்கைகளின் விவரம்

1. உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

விவரங்கள்	தொகை (ரூபாய்)
நல்கைத் தொகை	51,31,000
நூல் அரங்கேற்றம்	48,000
உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடப் பராமரிப்பு	2,75,000
உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் (2016,2017)	16,50,000
மொத்தம்	71,04,000

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

விவரங்கள்	தொகை (ரூபாய்)
நல்கைத் தொகை	1,96,12,000
ஓய்வூதிய நல்கை	90,10,000
கணினி இடுபொருள்	5,000
அறிவிப்புகள் மற்றும் திட்டப் பணிகள்	1,04,68,000
மொத்தம்	3,90,95,000

[2018 ஜூன் 13

3. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

விவரங்கள்	தொகை (ரூபாய்)
நல்கைத் தொகை	8,63,47,000
1998-2099 முதல் 2003-2004 வரையில் அலுவல்நிலைப் பணிகள் ஊதியச் செலவினம்	51,31,000
புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு இசை மற்றும் நாட்டியப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் (2017-2018 மானியக் கோரிக்கை அறிவிப்பு)	6,00,000
மொத்தம்	9,20,78,000

4. குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திரம்

விவரம்	தொகை (ரூபாய்)
2015-2016 மற்றும் 2016-2017 ஆம் ஆண்டுகளுக்கான கல்வி உதவித் தொகை (5,53,000+8,77,000)	14,30,000

5. குவகாத்தி பல்கலைக்கழகம், அசாம்

விவரம்	தொகை (ரூபாய்)
கணினி வாங்கிடவும் தமிழ் நூலகம் அமைத்திடவும் உதவித் தொகை (1,89,222+55,659+44,000)	2,88,881

இயல்—2

மொழிபெயர்ப்புத் துறை

அங்கிங்கெனாதபடி எங்கும் மொழியாக்கப் பணியின் தேவை பெரிதும் வளர்ந்து தகவல் தொழில் நுணுக்கத்திற்குப் பெருந்துணையாக நிற்கிறது. மொழிபெயர்ப்பு இன்றி எதுவும் நடவாது என்பது ஆங்கில முது மொழியாகும்.

தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளின் செயலாளர்கள் / இணைச் செயலாளர்கள் / துணைச் செயலாளர்கள் வழியாக வரப்பெறுகிற கோப்புகளை ஆங்கிலம்—

தமிழ், இந்தி—தமிழ், மலையாளம்—தமிழ், தெலுங்கு—தமிழ் போன்ற மொழிபெயர்ப்புப் பணிகளையும் இத்துறை செய்துவருகிறது. மேலும், அலுவல் நெறி மொழிபெயர்ப்புக்கெனவே இத்துறை முழு நேரப் பணியாற்றி வருகிறது.

மொழியாக்கப் பொருண்மை

- மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு
- மாண்பமை அமைச்சரவைக் கூட்டக் குறிப்பு
- அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை
- சுற்றாணைக் குறிப்பு
- விசாரணை ஆணைய அறிக்கை
- தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை
- மாநில மனித உரிமை ஆணைய அறிக்கை
- பொருளாதாரக் குற்றங்கள் குறித்த ஆவணம்
- அரசாணை
- சுற்றறிக்கை
- காவலர் பதக்கங்களுக்கான தகுதியுரை
- தேர்தல் கையேடு
- பொதுக் கணக்குக் குழு மற்றும் பொது நிறுவனங்கள் குழு அறிக்கை

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. (குறள் 645)

மொழியாக்கத்தின் அளவையும் ஆழத்தையும் காட்டுகின்ற வகையில் அமைந்த இக்குறள் பொன்னேபோல் போற்றத்தக்கது.

அதன்படி, இத்துறை மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

[*2018 ஜூன் 13*

இயல்—3

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

3.1 தோற்றம்

தமிழ்மொழியின் வளர்ச்சிப் பணிகளில் அடிப்படையாக அமைவது சொற்பிறப்பியல் அகரமுதலியை உருவாக்கும் பணியாகும். மொழி ஆராய்ச்சியாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், கலைச்சொற்களைப் படைப்போர், மாணவர்கள் மட்டுமின்றி அனைவருக்கும் பயன்படும் வகையில், படவிளக்கங்களுடன் தமிழில் சொற்பிறப்பியல் அகரமுதலிகளைத் தொகுத்து வெளியிடும் நோக்கில், இவ்வியக்ககம் தமிழக அரசால் துறைத் தலைமை அலுவலகமாக 1974-இல் உருவாக்கப்பட்டது.

3.2 நோக்கம்

தொன்மை மிக்கதும், இலக்கணச் செம்மையுடையதும், பல்துறை இலக்கிய வளம் நிறைந்ததும், பரந்துபட்ட மக்கள் வழக்குக் கொண்டதும், பன்னாட்டு மொழியாக விளங்குவதுமான தமிழில் சொல்லின் பொருளைத் தெளிவாக அறிய வழிகாட்டுதல் ஓர் அரிய செயலாகும். தமிழ்ச் சொல்லமைப்பை எளிதாக அறிந்து, சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றலை மக்கள் பெறவேண்டுமெனில், தமிழ்ச் சொற்களின் பொருளை நுட்பமாக அறிந்துகொள்ளுமாறு செய்யப் பெருந்துணைபுரிவன அகரமுதலிகளே! ஒரு மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் சிறப்புச் சேர்க்கும் முதன்மையான பணி அகரமுதலி உருவாக்கம் எனில் அது மிகையன்று.

அவ்வகையில் இவ்வியக்ககம், இத்துறையின் முதல் இயக்குநரான தேவநேயப் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வு வழியில், தமிழ்மொழியில் வழங்கப்படும் அனைத்துச் சொற்களையும் தொகுத்து அகரமுதலி அமைப்பில் வரிசைப்படுத்தி, தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் கூறி, இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு மற்றும் உலக வழக்குகளை மேற்கோள்காட்டி, அச்சொற்களுக்கு வேர்விளக்கம் கூறி, அரிய சொற்களுக்குப் பட விளக்கத்துடன் கூடிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலிகளை உருவாக்கியுள்ளதோடு, இளந்தலைமுறையினருக்கான தூய தமிழ் அகரமுதலியையும், அறிவியல் காலத்திற்கேற்றவகையில் நாள்தோறும் ஊடகங்களில் வெளியாகும் புதிய சொற்களுக்குக் கலைச்சொல் கண்டறிந்து அகரமுதலிகளை உருவாக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

3.3 செயற்பாடுகள்

3.3.1 தமிழ்க் கலைக்கழகம்

மக்களின் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும், செய்தி ஊடகங்களிலும் நிறைந்து காணப்படுகின்ற பிறமொழிச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்க்கலைச் சொற்களை வடிவமைக்கத் தமிழ்நாடு அரசால் 'தமிழ்க் கலைக்கழகம்' அமைக்கப்பட்டுள்ளது. ஊடகங்களில் புதியதாகக் கண்டறியப்பட்ட 5920 பிறமொழிக் கலைச் சொற்கள் இவ்வியக்ககப் பணியாளர்களால் தொகுக்கப்பட்டு, தமிழில் கலைச்சொற்கள் வடிவமைக்கப்படுகின்றன. இவை அரசால் நியமிக்கப்பட்ட அலுவல்சார் மற்றும் அலுவல்சாராக் குழு உறுப்பினர்களால் மாதந்தோறும் நடைபெறும் குழுக் கூட்டத்தில் ஆய்வுக்குட்படுத்தி இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்க் கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்ட 2016 நவம்பர் திங்கள் முதல் இதுவரையில் 17 குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இதுவரையில் 3247 சொற்கள் தமிழ்க் கலைக்கழகத்தால் இறுதிசெய்யப்பட்டு அவற்றில் முதற்கட்டமாக 2000 கலைச்சொற்பட்டியலுக்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இக்கலைச்சொற்கள் 'தமிழ்க் கலைச்சொல் அகரமுதலி' எனும் நூல் வடிவில் எழுதுபொருள் அச்சுத் துறை வாயிலாக அச்சிட்டு அனைத்து அரசு அலுவலகப் பயன்பாட்டிற்கும் ஊடகங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

3.3.2 நற்றமிழ் அறிவோம்

பள்ளியில் பயிலும் மாணவர்கள் நல்ல தமிழ்ச் சொற்களை அறிந்துகொள்வதற்கேற்ற வகையில் இரண்டாம் கட்டமாக 6 முதல் 10 வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு 'நற்றமிழ் அறிவோம்' எனும் 'தூய தமிழ் அகரமுதலி' உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்நூல் வண்ணப்படங்களுடன் மாணவர் மனத்தில் பதியும் வகையில் வடிவமைக்கப்பட்டு, எழுதுபொருள் அச்சுத் துறை வாயிலாக அச்சிட்டு, அவை பள்ளிக் கல்வித் துறை வாயிலாக 2018-2019 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் வழங்கப்படவுள்ளன.

[2018 ஜூன் 13

3.3.3 அமராவதி சிற்பங்களுக்கு நிகண்டு உருவாக்குதல்

அகரமுதலித் திட்ட இயக்ககம் அரசு அருங்காட்சியகத்துடன் இணைந்து சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 299 அமராவதிச் சிற்பங்களின் தொன்மைத் தன்மையை மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அச்சிற்பங்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து நிகண்டு வடிவில் வெளியிடுவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

3.3.4 திருந்திய பதிப்பு

இந்த இயக்ககத்தின் வெளியீடுகளான 13,327 பக்கங்களைக் கொண்ட 31 தொகுதிகளையும் காலமேம்படுத்தம் செய்து திருந்திய பதிப்பாக ஒரே சீரான வடிவில் ஒவ்வொன்றும் 1000 பக்கங்களைக் கொண்ட 12 மடலங்களாக ஆக்சுபோர்டு அகரமுதலி அமைப்பில் விரைவில் வெளியிடப்பெறும்.

3.4 வெளியீடுகள்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் 24 பகுதிகள், இணைப்பு மடலம் 2 பகுதிகள், அயற்சொல் அகரமுதலி 3 பகுதிகள், அகரமுதலி வரலாறு 1 தொகுதி, சொற்பிறப்பியல் நெறிமுறைகள் 1 தொகுதி என மொத்தம் 31 தொகுதிகளும், சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் சுருக்கப்பதிப்பும், தமிழ் வினைச்சொல் அகரமுதலியும், முதற்கட்டமாக 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு வண்ணப்படங்களுடன் கூடிய தூய தமிழ் அகரமுதலியும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வேர்ச்சொல் சுவடியும் வெளியிடப்பட்டுள்ளன.

இயல்—4

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

4.1 தோற்றம்

உயர்தமிழ் ஆய்வினை உலகெங்கும் எடுத்துச் செல்லும் வகையில் தமிழியல் அறிஞர்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தும் விதமாகச் சென்னையில் 1968 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேனாள் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் தன்னாட்சி அமைப்புடன் உயர் தமிழாய்வில் இந்நிறுவனம் பொலிவுடன் திகழ்ந்து வருகிறது.

4.2 நோக்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தரமான நூலகம்; மொழிப்பயிற்சிக்கூடம் ஏற்படுத்துவது; உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது; தேவை கருதி ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது; தமிழாய்வில் தோய்ந்த பிறநாட்டு அறிஞர்களுள் ஆர்வமுடையவர்களுடன் நெருங்கிய தொடர்பினை மேற்கொண்டு இத்துறைகளில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் பாதிக்காத வகையில் இதன் நோக்கங்களை நிறைவேற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியர் ஆகியோருடன் இணைந்து செயல்படுவது ஆகியனவும் இதன் முதன்மை நோக்கங்களாகும்.

4.3 ஆளுகைக் குழு

தலைவர்-மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள்

துணைத் தலைவர்-அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை; சென்னை, மதுரை, அண்ணாமலை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள்.

உறுப்பினர்கள்-நிதித் துறைச் செயலாளர், டாக்டர் குரோ அவர்கள் மைசூர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் மற்றும் உறுப்பினர்—செயலராக இந்நிறுவன இயக்குநர் கொண்ட தன்னாட்சி அமைப்பாக இந்நிறுவனம் செயல்படுகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 50ஆவது ஆளுகைக் குழுக் கூட்டம் 9-10-2017 அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

4.4 புலங்கள்

இந்நிறுவனத்தில் செயல்படும் கல்விப் புலங்களாவன:

1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலம்
2. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்
3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்
4. அயல்நாட்டுத் தமிழர் புலம்

4.5 செயன்மைகள்

இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் போன்ற பிரிவுகளில் உயராய்வுப் பணிகளும் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.6 ஆய்வுப் பணிகள்

- தமிழ்மொழி இலக்கணம், தமிழ் இலக்கிய இலக்கணம், சமுதாய மொழி இலக்கணம், மொழி கற்பித்தல், கணினி மொழியியல் ஆய்வுகளை நிகழ்த்துதல்
- கலைச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு ஆகிய மொழியியல் களங்களை ஆய்வு செய்தல்
- நிறுவனத்திலுள்ள பதிப்பிக்கப்படாத சுவடிகளைப் படியெடுத்து ஆய்வுப் பதிப்புகள் கொண்டு வருதல்
- பிற நிறுவனங்களோடு இணைந்து தமிழியல் ஆய்வை வளப்படுத்துதல்
- தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- பழங்குடிகளின் இனவரைவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் பற்றிய தகவல்கள் ஆளுமைத் தரவுத் தளத்தை உருவாக்குதல்
- உலகெங்கும் வாழும் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

4.7 கற்பித்தல் மற்றும் ஆய்வுத் துணைமைப் பணிகள்

- ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணவர்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்துதல்
- ஓலைச்சுவடிகள் மற்றும் திருமந்திரமும் வாழ்வியலும் ஆகிய சான்றிதழ்ப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல்
- ஆண்டுதோறும் பன்னாட்டுத் தேசிய ஆய்வுக் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்துதல்

4.7.1 பிற மொழியாளர்களுக்கு

மொழிப்பயிற்சி ஆய்வுக்கூடம் வழியாகத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத, பிற மொழியாளர்களுக்குத் தமிழ் மொழியினைக் கற்பிக்கும் பணியினை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில், இக்கல்வியாண்டில் சப்பானியர் இருவரும், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இருவரும், இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்த ஐவரும் தமிழ்மொழி பயின்றனர். இதுவரை 600 பேர் பயின்றுள்ளனர்.

மேலும், சென்னை மாநகராட்சிப் பள்ளித் தமிழ் ஆசிரியர்களுக்கு இணையவழி தமிழ்க் கற்பித்தல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

தெலுங்கானாவிலிருந்து வருகை புரிந்த பண்பாட்டுத்துறை அமைச்சர் குழுமத்திற்கு மொழி கற்பித்தல் பயன்பாட்டு முறை குறித்து விளக்கக்கூட்டமும் நடத்தப்பட்டது.

4.8 திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் புதிய கல்வி மற்றும் நிருவாகக் கட்டடத்தின் முதல் தளத்தில் உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலக மக்கள் அனைவரும் படித்துப் பயன் பெறும் வகையில் அதன் சிறப்புகளை விளக்கும் விதமாகத் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் திருக்குறள் கருத்துகளை விளக்கும் 150 ஓவியங்கள், 1500-க்கும் மேற்பட்ட திருக்குறள் தொடர்பான மூலநூல்கள், உரை, திறனாய்வு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்கள் மற்றும் ஓர் அதிகாரத்திற்கு ஓர் ஓவியம் என 133 ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

[*2018 ஜூன் 13*

இந்த ஆண்டில் திருக்குறள் ஆய்வடங்கல், திருக்குறளும் விவிலியமும் என இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. திருக்குறள் அகராதிப் பணி நடைபெற்று வருகிறது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் திருக்குறள் முற்றோதல் பயிற்சி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் பயிற்சி ஆகியன ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

இக்காட்சிக் கூடத்தை நாள்தோறும் பல்வேறு பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமின்றிப் பொதுமக்களும் வெளிநாட்டினரும் கண்டுகளித்து வருகின்றனர்.

4.9 உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்

உலகமெங்கும் பரவிக்கிடக்கும் தமிழ்ப் பண்பாட்டை ஆய்ந்தறியவும் உலகமெலாம் வாழ்ந்து வரும் தமிழர்களை ஒருங்கிணைக்கவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியால் தோற்றுவிக்கப்பட்டது.

இந்த மையத்தின் வாயிலாக ஆண்டுதோறும் பன்னாட்டுக் கருத்தரங்கம், பயிலரங்கம், அயல்நாட்டுத் தமிழறிஞர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இம் மையம் சார்பில் இதுவரை 8 பன்னாட்டுக் கருத்தரங்குகள், 15 சிறப்புச் சொற்பொழிவுகள் மற்றும் இரு பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இரண்டு பன்னாட்டுக் கருத்தரங்கங்கள், இரண்டு பயிலரங்கங்கள், இரண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியன நடத்தப்பட்டுள்ளன.

4.10 ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் படிகளை நவீனக் கட்டமைப்புடன் பாதுகாத்துப் பேணிட ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிக் கட்டுகளும் நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகளும் திரட்டிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகளுக்கான விவர அட்டவணை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பற்றுள்ள அரிய சுவடிகளை இம்மையத்திற்குக் கொண்டுவரும் பணிகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

நடைபெற்று வருகின்றன. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வழியாக நிறுவனச் சுவடிகளை மின் எண்மம் செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

4.11 பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, பழந்தமிழர்களின் சிறப்புகளையெல்லாம் நாட்டுக்கு எடுத்துக்காட்டும் வகையில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. ஓவியங்கள், புகைப்படங்கள், மரச்சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், சுதை (சுண்ணாம்பு) சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், இசைக் கருவிகள், போர்க்கருவிகள் மற்றும் அணிகலன்கள் ஆகிய பொருட்கள் இக்காட்சிக்கூடத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும், பழந்தமிழரின் வாழ்வியல் முறைகள் குறும்படங்களாக ஆவணப்படுத்தப்பட்டுக் குளிரூட்டப்பட்ட ஊடக அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்காட்சிக்கூடத்தைப் பள்ளி-கல்லூரி மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், வெளிநாட்டினர், அரசு உயர் அலுவலர்கள் முதலானோர் பார்வையிட்டு வருகின்றனர். இதுவரை சுமார் இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, மொரீசியசு, கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருந்தும் தமிழார்வலர்கள், ஆய்வாளர்கள், அரசியல் தலைவர்கள் எனப் பலரும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தாண்டு இக்காட்சிக்கூடத்தின் வழியாக உலகச் சித்தர் மாநாடு, சிறுவர்களுக்கான தமிழர் மரபுக் கலைகள், கோடைகாலப் பயிற்சி முகாம் ஆகியன நடத்தப்பட்டன.

4.12 இருக்கைகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டுள்ள இருக்கைகள் விவரம் பின்வருமாறு:

1. தொல்காப்பியர் ஆய்விருக்கை
2. திருமூலர் ஆய்விருக்கை

3. சன்மார்க்கச் செம்பொருட்டுணிவு ஆய்விருக்கை

4. தமிழ் (இயற்கை) மருத்துவ ஆய்விருக்கை

5. வைணவ ஆய்விருக்கை

6. அகத்தியர் மருத்துவ ஆய்விருக்கை

7. பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கை

இவ்விருக்கைகள் வாயிலாகப் பட்டய வகுப்புகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், பட்டிமன்றம் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன.

4.12.1 தொல்காப்பியர் ஆய்விருக்கை

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி தொல்காப்பியத்தை முழுமையாக ஆய்வு செய்யும் நோக்கில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ரூபாய் 50 இலட்சம் வைப்புநிதியாக வைக்கப்பட்டு தொல்காப்பியர் ஆய்விருக்கை தொடங்கப்பட்டது. தொல்காப்பியர் ஆய்விருக்கையின்மூலம் சிறப்புச் சொற்பொழிவுகளும், ஆய்வு நூல்களும், பயிற்சிப் பட்டறைகளும், பயிலரங்குகளும், பன்னாட்டுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது. கோவை கௌமார மடத்துடன் இணைந்து ஒரு நாள் தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

தமிழகத்தில் தொல்லெழுத்தியல்-வட்டெழுத்து என்னும் பொருண்மையில் ஐந்து நாள்கள் கல்வெட்டுகள் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

4.13 அறக்கட்டளைப் பொழிவுகள்

உயர் தமிழாய்வின் வளர்ச்சியாக நிறுவனத்தில் அறக்கட்டளைகளின் தோற்றம் அமைகிறது. இவ்வறக்கட்டளைகள் தனிமனிதக் கொடை அல்லது பலரது முயற்சி என்ற நிலையில் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வோர் அறக்கட்டளையின் சார்பிலும் தக்காரைத் தெரிவு செய்து சொற்பொழிவு நிகழ்த்தச் செய்து கலந்துரையாடலுக்கும் இடமளித்துப் பொழிவின்போதே நிறுவன

நூலாக வெளியிடுதல் இந்நிறுவனத்தின் தனிச்சிறப்பாகும்.

தமிழார்வலர்களின் நிதியுதவியோடு தமிழ்ச் சான்றோர்களின் பெயரில் இதுவரை 48 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் மட்டும் 7 புதிய அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் மட்டும் 42 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

4.14 நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இதுவரையில், ஏறத்தாழ 950-க்கும் மேற்பட்ட, தரமான ஆய்வு நூல்கள், கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள், நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப்பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரியநூல் மறுபதிப்புகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் என்ற பிரிவுகளில் நூல்களை வெளியிட்டுள்ளது. 2017-2018ஆம் ஆண்டில் 70 அரிய நூல்கள் 70 புதிய மற்றும் மறுபதிப்பு நூல்கள் 23 அறக்கட்டளை நூல்கள் என மொத்தம் 163 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4.15 தமிழியல்-ஆய்விதழ்

உலகத் தமிழறிஞர்களின் உயராய்வுத் தமிழ்ப் பணியை ஒருங்கே அமைக்கும் வகையில் தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டு மொழிகளில் தமிழியல் ஆய்விதழ் ஆண்டுக்கு நான்கு முறை வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்விதழில் உள்ள கட்டுரைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வலைத்தளத்திலிருந்து (www.ulakaththamizh.org) *பதிவிறக்கம் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 99 தமிழியல் இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.*

4.16 முனைவர் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக ஏற்புடன் முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வும் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 110 மாணவர்கள் முனைவர் பட்டமும், 242 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் 37 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் வகுப்பிலும் 90 மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு வருகின்றனர்.

[2018 ஜூன் 13

4.17 பட்டய வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் ஆய்வுகளுடன் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல், திருமந்திரமும் வாழ்வியலும், திருவாசகமும் வாழ்வியலும், செம்பொருட்டுணிவு ஆகிய வகுப்புகளும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு சுவடியியல் மற்றும் பதிப்பியலில் 14 மாணவர்களும், திருமந்திரமும் வாழ்வியலும் வகுப்பில் 123 மாணவர்களும், திருவாசகமும் வாழ்வியலும் வகுப்பில் 68 மாணவர்களும், செம்பொருட்டுணிவில் 88 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

4.18 விரிவுரையாளர் / ஆராய்ச்சிக்கான தகுதித் தேர்வுகள் பயிற்சி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் மட்டுமின்றி, பிற கல்லூரி மாணவர்களும் பயன்பெறும் வகையில் பல்கலைக்கழக நல்கைக் குழுவால் நடத்தப்பெறும் விரிவுரையாளர் / ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான தகுதித் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் கட்டணமின்றி நடத்தப்பெற்று வருகின்றன.

4.19 ஆய்வு நூலகம்

உயர் தமிழ் ஆய்விற்கு அனைத்து வகையிலும் உதவிடும் வண்ணம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு நூலகத்தில் 1.10 இலட்சம் நூல்கள் வைக்கப்பட்டு அனைவரும் பயன்படுத்தும் வகையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

4.20 அரசின் அறிவிப்புகள் அனைத்தும் நிறைவேற்றம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு 2017-2018ஆம் நிதியாண்டிற்கு அறிவிக்கப்பட்ட 10 திட்டங்களுள் மாணவர்கள் பயன்பெறும் திட்டங்களான முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கான திங்கள் ஆய்வு உதவித் தொகை மற்றும் சுவடிப் பட்டய மாணவர்களுக்கான திங்கள் ஆய்வுத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு 2-2-2018 அன்று வழங்கினார்கள்.

4.20.1 ஆய்வு மாணவர்கள் பரிமாற்றம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு மேற்கொள்ளும் தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுள் தெரிவுசெய்யப்பட்டவர்கள், 'மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்தின்கீழ்' மலேசிய நாட்டிற்குச் செல்ல மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 1-3-2018 அன்று வாழ்த்துப் பெற்றுச் சென்று வந்தனர்.

இதனையடுத்து மலேசிய இட்ரிசு பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகைதந்து தமிழ்நாட்டில் கல்வி, கலை, பண்பாடு, கற்றல், கற்பித்தல் ஆகியவை தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொண்டனர். இதன்மூலம் புலம் பெயர்ந்த மாணவர்களுக்கும், தமிழ்நாட்டிலுள்ள தமிழியல் மாணவர்களுக்கும் ஒரு பண்பாட்டுப் பரிமாற்றம் குறித்த புரிதல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

4.20.2 ஆய்வு மாணவியர் விடுதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் மாணவியர் பயன்பெறும் வகையில் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 70.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஆய்வு மாணவியர் விடுதிக் கட்டடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2-2-2018 அன்று திறந்து வைத்தார்கள்.

4.21 புதிய ஆய்வு நூலகக் கட்டடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் மாண்புமிகு தென்சென்னைப் பாராளுமன்ற உறுப்பினர் முதுநிலை மருத்துவர் ஜெயவர்தன் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் நவநீத கிருஷ்ணன் அவர்கள் இராஜ்யசபா உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் புதிய ஆய்வு நூலகத் தரைத்தளம் மற்றும் முதல் தளம் என 12465 சதுர அடிகள் பரப்பளவில் தொழில்நுட்பக் கல்விக் கோட்ட கட்டுமானப் பிரிவால் கட்டப்பட்டு வருகின்றன.

4.22 நல்கை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செலவினங்களுக்குத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நல்கை வழங்கி வருகிறது. 2017-18ஆம் நிதியாண்டில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நல்கை விவரம் பின்வருமாறு:

[2018 ஜூன் 13

வாலாய நல்கை ஓய்வூதியம் (ம)	:	ரூபாய் 196.60 இலட்சம்
ஓய்வுகாலப் பணப் பலன்கள்	:	ரூபாய் 90.10 இலட்சம்

4.23 தமிழ்த்தாய் 70-தமிழாய்வுப் பெருவிழா

ஆண்டுதோறும் பிப்ரவரித் திங்கள் முழுமையும் ஆய்வரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பயிலரங்கம், அரிய நூல் வெளியீடு, சிறப்புச் சொற்பொழிவுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இளம் ஆய்வாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இந்தாண்டு, பிப்ரவரித் திங்கள் முழுவதும் தமிழ்த்தாய்-70 தமிழாய்வுப் பெருவிழா நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது. இதில் 42 அறக்கட்டளைப் பொழிவுகள், 70 நூல்கள் வெளியீடு, 70 அரிய நூல்கள் வெளியீடு, 70 அரியவகை மூலிகைச் செடிகள் நடுதல், 5 நாள்கள் பயிலரங்கம், 4 நாள்கள் தொல்காப்பியப் பயிலரங்கம், ஒரு நாள் ஒயிலாட்டப் பயிலரங்கம், 70 கவிஞர்கள் பங்கேற்ற கவியரங்கம், 70 பள்ளி மாணவர்கள் பங்கேற்ற திருக்குறள் முற்றோதல் ஆகியன நிகழ்த்தப்பெற்றன. இந்நிகழ்வுகளின் செயல்கள் அனைத்தும் இளம் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன.

இவ்வாறாகத் தொன்மைத் தமிழ் மொழியின் உயராய்வுக்கெனத் தோற்றுவிக்கப்பட்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தனது இலட்சிய நோக்கில் விரைந்து பயணித்து வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறக்கட்டளைகள்

1. கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளை (1983)
2. தாமரைத்திரு கழகம் சுப்பையாபிள்ளை அறக்கட்டளை (1983)
3. வள்ளல் சீதக்காதி அறக்கட்டளை (1983)
4. திருமிகு ஏ.வி.எம் ஜபாருதீன் நூர்ஜஹான் அறக்கட்டளை (1983)
5. டாக்டர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அறக்கட்டளை (1983)
6. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி அறக்கட்டளை (1983)

7. மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அறக்கட்டளை *(1983)*
8. டாக்டர் செ. அரங்கநாயகம் அறக்கட்டளை *(1983)*
9. டாக்டர் சிலம்புச்செல்வர் ம.பொ.சி அறக்கட்டளை *(1983)*
10. தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகளார் அறக்கட்டளை *(1983)*
11. டாக்டர் மு. வரதராசனார் அறக்கட்டளை *(1983)*
12. தசாவதானி செய்குத்தம்பி பாவலர் அறக்கட்டளை *(1984)*
13. இதழாளர் ஆதித்தனார் அறக்கட்டளை *(1984)*
14. பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளை *(1984)*
15. கலாநிலையம் டி.என். சேஷாசலம் அறக்கட்டளை *(1987)*
16. தவத்திரு தனிநாயக அடிகளார் அறக்கட்டளை *(1992)*
17. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அறக்கட்டளை *(1994)*
18. தினமலர் இராம சுப்பையர் அறக்கட்டளை *(1995)*
19. பதிப்புச்செம்மல் பேராசிரியர் மெய்யப்பன் அறக்கட்டளை *(1996)*
20. பல்கலைச் செம்மல் டாக்டர் தெ.பொ.மீ அறக்கட்டளை *(1996)*
21. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அறக்கட்டளை *(1998)*
22. டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை *(1999)*
23. தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளை *(2002)*
24. பெரியார் நாகம்மை அறக்கட்டளை *(2003)*
25. பெரியார் மணியம்மை அறக்கட்டளை *(2003)*

[2018 ஜூன் 13

26. திருமிகு இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளை (2003)

27. தமிழாகரர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அறக்கட்டளை (2003)

28. அறிவியல் தமிழ் அறிஞர் பெ.நா.அப்புசாமி அறக்கட்டளை (2003)

29. முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அறக்கட்டளை (2004)

30. பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை (2005)

31. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளை (2005)

32. பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி அறக்கட்டளை (2009)

33. பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் அறக்கட்டளை (2010)

34. திரு. சி.மா. துரையரசு அறக்கட்டளை (2011)

35. தனித்தமிழ்க் காவலர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அறக்கட்டளை (2013)

36. பெருந்தலைவர் காமராசரின் மக்கள் பணியும் ஆளுமையும் அறக்கட்டளை (2013)

37. டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அறக்கட்டளை (2013)

38. தத்துவ வித்தகர் த.கு. முருகேசனார் (முருகு) அறக்கட்டளை (2014)

39. சு. அறிவுக்கரசு இரஞ்சிதம் அறக்கட்டளை (2015)

40. அம்மாவின் ஆட்சியில் அருந்தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை (2016)

41. தினமணி அறக்கட்டளை (2016)

42. திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் அறக்கட்டளை (2017)

43. புதுமைப்பித்தன் அறக்கட்டளை (2017)

44. பேரறிஞர் ஔவை துரைசாமி அறக்கட்டளை (2017)

45. திருக்குறளும் உலக அமைதியும் அறக்கட்டளை (2017)

46. பத்மஸ்ரீ டாக்டர் அவ்வை நடராசன் அறக்கட்டளை (2017)

47. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு அறக்கட்டளை (2018)

48. சீர்காழி நாகலிங்கம் மரகதம் நினைவு அறக்கட்டளை (2018)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பிற நிறுவனங்களுடன் இணைந்து நடத்திய நிகழ்வுகளின் விவரம்

1. 24-2-2013 முதல் 28-2-2013 வரை, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்-தலைப்பு: தமிழ் கணினி மொழியியல் (சிறப்புப் பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

2. 7-10-2013 முதல் 11-10-2013 வரை, இந்தியத் தேசியத் தேர்வுப் பணி, மைசூர்-தலைப்பு: மொழி, இலக்கிய மதிப்பீடு மற்றும் ஆய்வு நெறி முறைகள் (பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

3. 2-1-2014, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை-தலைப்பு: தொல்காப்பிய மொழியியல் (பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

4. 20-1-2014 முதல் 31-1-2014 வரை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை-தலைப்பு: சுவடியியலும் தொல்லெழுத்துக் கலையும் (பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

5. 31-12-2014 முதல் 9-1-2015 வரை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை-தலைப்பு: சங்க இலக்கிய சுவடிகளும் தொடக்ககாலப் பதிப்புகளும் (பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

6. 5-2-2015 முதல் 14-2-2015 வரை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை-தலைப்பு: சங்க இலக்கியத்தில் தகவல் தொடர்புக் கூறுகளும் மொழிச் செயல்பாடுகளும் (பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

[2018 ஜூன் 13

7. 4-10-2015 முதல் 5-10-2015 வரை, இசுலாமியக் கல்லூரி, வாணியம்பாடி-தலைப்பு: பெரும்புலவர் தி-சௌரிப்பெருமாள் அரங்கனார், குறுந்தொகையும் புத்துரையும் நூல் வெளியீடு (தேசியக் கருத்தரங்கம்), இடம்: இசுலாமியக் கல்லூரி, வாணியம்பாடி

8. 6-1-2016, சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி, மேல்விசாரம்-தலைப்பு: இசுலாமியத் தமிழ் இலக்கியங்கள் (தேசியக் கருத்தரங்கம்), இடம்: சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி, மேல்விசாரம்

9. 25-6-2016 முதல் 26-5-2016 வரை, ஆத்மிகயோகா வித்யாபீடம்- தலைப்பு: திருமந்திரமும் யோகவாழ்வியல் கலையும் (பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

10. 11-9-2016, ஏலகிரி பாரதி தமிழ்ச்சங்கம், ஏலகிரி மலை-தலைப்பு: தமிழ் வளர்ச்சிக்கு முனைவர் மு.தமிழ்க்குடிமகனின் பங்களிப்பு தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு விழா ஏலகிரி பாரதி தமிழ்ச்சங்கம் (தேசியக் கருத்தரங்கம்), இடம்: ரெட்ரீட் மையம், ஏலகிரி மலை

11. 27-10-2016, சென்னைப் பல்கலைக்கழகம், அரபுத்துறை-தலைப்பு: அரபுமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் மற்றும் ஔவையின் ஆத்திச்சூடி (திறனாய்வுக் கூட்டம்), இடம்: சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம்

12. 7-1-2017, இந்திய பாரம்பரிய மருத்துவ நிறுவனம், சென்னை-தலைப்பு: திருமந்திரம், வர்மம், அக்குப்பஞ்சர் (பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

13. 11-3-2017, ரெங்கா அக்குபஞ்சர் மற்றும் யோகா சமூகநலக் கல்வி அறக்கட்டளை-தலைப்பு: திருமந்திரமும்-சித்த மருத்துவமும் (தேசியப் பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

14. 23-3-2017, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்-தலைப்பு: மலேசியத் தமிழாசிரியர்களுக்கான இலக்கியப் பயிற்சிப் பட்டறை, இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

15. 16-4-2017, மணிமொழியம் அச்சகம்-தலைப்பு: மணிமொழியம் நூல் வெளியீடு, இடம்: சர்முத்தா வெங்கட சுப்பராவ் கன்சர்ட்ஹால் சென்னை

16. 17-4-2017, வைணவ இருக்கை ஸ்ரீ ஹரிமடம்-தலைப்பு: புரட்சித் துறவி ராமானுஜர் (கருத்தரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

17. 26.04.2017, சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத் துறை உலகத் திருக்குறள் மையம்—தலைப்பு: திருவள்ளுவரின் சிந்தனைகளைக் கோட்பாடுகள் ஆக்கும் (புத்தாய்வு மாநாடு), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

18. 28-4-2017, தென்மொழி இயக்கம்-தலைப்பு: தனித்தமிழின் நோக்கும் போக்கும் (பன்னாட்டுக் கருத்தரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

19. 27-5-2017, ரெங்கா அக்குபஞ்சர் (ம) யோகா சமூக நலக் கல்வி அறக்கட்டளை-தலைப்பு: திருமந்திரமும் சித்த மருத்துவமும் (தேசியப்பயிலரங்கம்), இடம்: திவ்யோதயா சென்டர் கோயம்புத்தூர்

20. 17-6-2017, இந்தியா ஹெல்த்கேர் பவுன்டேசன் இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் டிரெடிசனல் மெடிசன் அண்ட் ரிசார்ச் சென்டர் பரங்கிப்பேட்டை-தலைப்பு: திருமூலர் சித்தர் மூலிகை மருத்துவம் செய்முறை திறன் மேம்பாட்டு பயிற்சி-12, இடம்: நேச்சர் லைஃப் சௌரிபாளையம் ரோடு, கோவை

21. 12-7-2017, கோவை கௌமார மடாலயம்-தலைப்பு: வண்ணச்சரபம் தண்டபானி சுவாமிகள் இயற்றிய ஆறுவகை இலக்கணம், இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

22. 9-8-2017, மலேசியா சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்-மலேசியா-தலைப்பு: தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் கற்றல் கற்பித்தல் (பன்னாட்டு மாநாடு-2017), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

23. 27-11-2017, சென்னைத் தொலைக்காட்சி நிலையம்-தலைப்பு: எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா (பட்டிமன்றம்) இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

24. *15-12-2017, தமிழ் இணையக் கல்விக் கழகம் சென்னை-தலைப்பு: தமிழ் மென்பொருள்களின் பயன்பாடு (ஒரு நாள் பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

25. *29-1-2018 முதல் 2-2-2018 வரை, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்-தலைப்பு: தமிழ்ப்பாடப் பொருண்மை உருவாக்கமும் நுண்தேர்வும் மதிப்பீடும் (ஐந்து நாள் பயிலரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

26. *13-4-2018, சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம் மலேசியா கல்வி அறக்கட்டளை சிங்கப்பூர் கானல்வரி கலை இலக்கிய இயக்கம் விருத்தகம்-தலைப்பு: தமிழர் சிற்பங்கள் (பன்னாட்டுக் கருத்தரங்கம்), இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

27. *24-4-2018 முதல் 25-4-2018 வரை, ஏலகிரி பாரதி தமிழ்சங்கம் / ஊத்தங்கரை அதியமான் கலை (ம) அறிவியல் மகளிர் கல்லூரி-தலைப்பு: திராவிட மொழிகளில் புதினங்கள் (பன்னாட்டு மாநாடு) இரண்டு நாள், இடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

இயல்—5

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

5.1 அறிமுகம்

"பல்கலைக்கழகங்கள் அறிவுலகின் கோயில்கள்.
இங்கு மாணவர்கள் அறிவின் ஆழத்தை அறிந்து
கொள்ள வழிகாட்டப்படுகிறார்கள். இவைகள் தான்
சமூக மாற்றம் மற்றும் வளர்ச்சியின் முக்கியமான
அமைப்புகளாகத் தொடர்ந்து கருதப்பட்டு வருகின்றன."

— மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

காலத்தின் ஓட்டத்திற்கேற்ப, வளர்ந்து வரும் எல்லாத் தளங்களிலும் பரந்து விரிந்து மேற்செல்லும் தகைமை கொண்டது தமிழ்மொழி. பழமை போற்றிப் புதுமை பெருக்கும்

தமிழ்மொழியின் இயல்பு, அதை உலகமொழிகளின் வரிசையில் தொடர்ந்து முதன்மையிடத்தில் நிலைக்கச் செய்துள்ளது. இலக்கிய இலக்கணங்களில் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையுடைய தமிழ்மொழி, பெருகிவரும் அறிவியல் வளர்ச்சிகளுக்கு ஏற்பத் தமிழ்ச் சொற்களை ஈந்திடும் ஆற்றல்சால் மொழியாக உள்ளது. மானுடப் பேராயத்திற்கு வாழ்நெறிகளை எடுத்துரைத்த இம்மொழி புதுயுகத்திற்கான வளர்ச்சிகளை உள்வாங்கி மரபு மாறா நெறிகளையும் கற்பித்துவருகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாய்க் காத்து வரும் தமிழின் கருத்தியல் கருவூலங்களை உலக மக்களிடம் கொண்டுசேர்க்கும் அரும்பணியின் வாயிலாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் செயலாற்றி வருகின்றது. உலகெங்கும் நிறைந்துள்ள தமிழர்களை இணைக்கும் தாய்த்தமிழ்ப் பாலமாக விளங்குவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது.

5.2 தோற்றம்

தாய்த் தமிழின் பெருமைக்காகவும் உலகத் தமிழர்களுக்காகவும் உலக மக்களுக்காகவும் 1981 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களால் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தஞ்சை மண்ணில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

5.3 குறிக்கோள்

- இந்திய வரலாற்றின் பக்கங்களில், தமிழக வரலாற்றின் பழமையினையும் தமிழ்ப் பண்பாட்டின் செழுமையினையும் தமிழரின் கருத்தியல் வளமைகளையும் இலக்கிய இலக்கணங்களில் நிறைந்திருக்கும் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு நுண்மைகளையும் எடுத்துரைக்கும் ஆராய்ச்சிகளைப் புதிய எல்லைகளில் நின்று பதித்து வருகிறது.

- தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பொதிந்து கிடக்கும் அறிவியல் தொழில்நுட்பங்களை மீட்டுருவாக்கம் செய்து, அவற்றை நவீனவுலகின் சமூகத்திற்கு வேண்டிய வடிவத்தில் புதிய தொழில்நுட்பங்களாக மாற்றித் தரும் செயல்பாடுகளில் இப்பல்கலைக்கழகம் தன்னைத் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

- தற்கால உலகில் உருப்பெற்றுள்ள மொழியியல், இலக்கணவியல், மானுடவியல் முதலிய துறைகளின் வளர்ச்சிகளில், தமிழ்மொழிக்குள்ள பண்டைய வளர்ச்சிக் கூறுகளை அடையாளம் கண்டு இணைக்கும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பணிகள் தொடர்ந்து வெற்றிபெற்றுள்ளன.

- பழமையான தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்து வழங்குவதிலும் பிறமொழிகளின் இலக்கியப் பனுவல்களைத் தமிழ் மொழிக்கு மொழிமாற்றம் செய்வதிலும் தமிழ்ப் பல்கலைக்கழகம் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

- மொழி கற்பித்தலில் தற்காலத்திற்கு ஏற்ற புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளைத் தமிழ்மொழியின் அமைப்பு மற்றும் பண்பாட்டிற்கு ஏற்ப வடிவமைத்தளிக்கும் பணியையும் தமிழ்ப் பல்கலைக்கழகம் நுட்பமாக ஆற்றி வருகின்றது.

- இலக்கியம், இலக்கணம், மொழியியல், இசையியல், அறிவியல், மெய்யியல், ஒப்பாய்வியல், தொல்லறிவியல் முதலிய துறைகளில் களஞ்சியங்களை உருவாக்கித் தமிழ்மொழியை உலகளவில் மேலெடுத்துச் செல்வதற்கான நெறிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கி வருகிறது.

- நவீனக் கண்டுபிடிப்புகள், அயல்நாட்டுப் புதுவரவுகள், புதிய பண்பாடுகளுக்கு ஏற்பத் தமிழ்மொழியின் கட்டமைப்பும் தனித்துவமும் சிதையாமல் பொருத்தமான கலைச்சொற்களை உருவாக்கித்தரும் முயற்சிகளுக்கு இப்பல்கலைக்கழகம் அடித்தளமாக விளங்கிவருகிறது.

- பாரம்பரியப் பழமைமிக்க ஓலைச்சுவடிகளையும் அரிய கையெழுத்துச் சுவடிகளையும் மரபுசார் முறைகளில் பாதுகாத்து அவற்றைச் செம்மையான முறைகளில் பதிப்பித்து வெளியிடுவதில் இப்பல்கலைக்கழகம் பாராட்டுதற்குரிய செயல்களைச் செய்துவருகிறது.

- மாறிவரும் அதிநவீனயுகத்தின் தாக்கங்களால், தமிழ்ப் பண்பாடு மற்றும் வரலாற்றுச் சின்னங்களின் பெருமை மங்காமல் மீட்டெடுத்து, அவற்றின் பெருமைகளைப் புறவுலகிற்கு எடுத்துரைப்பதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அயராத பணிகளைச் செய்துவருகிறது.

- தமிழகத்துடன் அயலகத் தமிழர்களின் நெடுங்காலத் தொடர்புகளைத் தொடர்ந்து தக்க வைத்தல் மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டினைத் தக்கவைக்கும் முயற்சிகளுக்குத் தொடர்ச்சியான திட்டங்கள் வகுத்துச் செயல்படுதலையும் தமிழ்ப் பல்கலைக்கழகம் முழுமையான பங்களிப்புடன் ஆற்றி வருகின்றது.

5.4 புலங்கள்-துறைகள்

பன்நோக்கு நிலைகளில் தமிழின் பெருமைகளை மேலெடுத்துச் செல்வதற்கான உயராய்வுகளைச் செய்யும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கட்டமைப்பில் கலைப்புலம், அறிவியல்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம் எனும் ஐந்து புலங்களும் 26 துறைகளும் உள்ளன.

செந்தமிழ்ச் சொற்களை மீட்டெடுப்பதற்கும் புதிய தமிழ்ச்சொற்களை உருவாக்குவதற்குமான அகரமுதலிகள் திட்டம், கலைக்களஞ்சியத் திட்டம், பெருஞ்சொல்லகராதித் திட்டம் எனும் திட்டங்களுடன் நூலகம், அருங்காட்சியகம், அச்சகம், பதிப்புத் துறை எனத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனது பணிகளைச் செவ்வனே செய்வதற்கான முழுநிறைவான கட்டமைப்புடன் திகழ்கிறது.

5.5 கல்விப் பணி

5.5.1 மாணவர் சேர்க்கை முறை

அரசு விதிமுறைகளின் அடிப்படையில் மாணவர்களின் சேர்க்கை நடைபெறுவதற்கு ஏதுவாகத் தனியே சேர்க்கைப்பிரிவு தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டுவருகிறது. இளங்கல்வியியல், முதுகலைக் கல்வியியல், கல்வியல் நிறைஞர், முதுநிலை/முதுஅறிவியல், ஆய்வியல் நிறைஞர், முனைவர்பட்ட ஆய்வுகள் மற்றும் பட்டயம்/ சான்றிதழ் ஆகிய படிப்புகளில் மாணவர்கள் சேர்ந்து பயின்றுவருகின்றனர்.

2017-2018ஆம் கல்வியாண்டில் முதுகலையில் 39 மாணவர்களும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பில் 424 மாணவர்களும் முனைவர் பட்ட ஆய்வில் 164 மாணவர்களும் இளங்கல்வியியல் படிப்பில் 64 மாணவர்களும் கல்வியியல் நிறைஞர் படிப்பில் 1 மாணவரும் சேர்ந்து பயின்றுவருகின்றனர்.

[2018 ஜூன் 13

5.5.2 தொலைநிலைக் கல்வி

2006-2007 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட தொலைநிலைக் கல்வி இயக்ககம், கடந்த பத்தாண்டில் தமிழாய்வு வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனையை நிகழ்த்தியுள்ளது. தமிழ்க்கற்றல் என்னும் கொள்கையை, உள்நாட்டிலும், கடல்கடந்த நாடுகளிலும் ஆற்றலுடன் கொண்டு சேர்த்த பெருமை, தொலைநிலைக்கல்வி இயக்ககத்தையே சாரும். அனைவருக்கும் கல்வியை அளித்தல் என்னும் தமிழக அரசின் இலட்சியத்தை முக்கிய இலக்காகக் கொண்டு தரமான கல்வியைச் சமூகத்தின் அனைத்து நிலைகளுக்கும் எடுத்துச் செல்லும் இடையறாப் பணியில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம் செயல்பட்டு வருகின்றது.

தமிழ், வரலாறு, இலக்கியம், தமிழிசை, பழந்தமிழ் நாட்டியம், புவியியல், பி.பி.ஏ., பி.சி.ஏ., பி.சி.ஏ., (இரண்டாமாண்டு நேரடிச் சேர்க்கை) ஆங்கிலம், நூலக மற்றும் தகவலறிவியல் (பி.எல்.ஐ.எஸ்.,) வணிகவியல் (பி.காம்.,) கணிதம், உளவியல், தாவரவியல், இளங்கல்வியியல் (பி.எட்.,) பாடப் பிரிவுகளில் *16* இளங்கலைப் பட்டப் படிப்புகளும், தமிழ், வரலாறு, இசை, பரதநாட்டியம், புவியியல், எம்.பி.ஏ., (சமூகப் பணி), நூலகம் மற்றும் தகவலறிவியல், (எம்.எல்.ஐ.எஸ்.,) சுற்றுச்சூழல் அறிவியல், வணிகவியல் (எம்.காம்.,) யோகா, கணிதம், உளவியல், தாவரவியல் பாடப் பிரிவுகளில் *14* முதுநிலைப் பட்டப் படிப்புகளும் நடைபெற்று வருகின்றன. கணிப்பொறி பயன்பாட்டியல், இணையச் சேவைகள், வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல் மற்றும் யோகா போன்றவற்றில் *4* முதுநிலைப் பட்டயப் படிப்புகளும், இசை ஆசிரியர் பயிற்சி, யோகா ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டியம், மூலிகை அறிவியல், மருத்துவ மூலிகை அழகுக் கலை, சோதிடவியல், கோயில் அர்ச்சகர் பயிற்சி, தொடுசிகிச்சை அறிவியல், பேச்சுக்கலை, கருவி இசை (வீணை, வயலின், புல்லாங்குழல், நாகசுரம்), கருவிஇசை (மிருதங்கம், தவில்), இசை, மரபுவழி தமிழ் மருத்துவம், கல்வெட்டியல், கோயிற்கட்டடக்கலை, வரைகலை மற்றும் வண்ணக்கலை, கணிதவியலில் மனக்கணக்கும் கற்றலில் மூளை ஒருங்கிணைப்பும், தீ விபத்துத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள், நட்டுவாங்கம், மேடை நிகழ்ச்சித் தொகுப்பு, மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மிகம், யோகா, சுவடியியல் போன்ற பாடப் பிரிவுகளில் *21* பட்டயப் படிப்புகளும் நூலகம்

மற்றும் தகவலறிவியல், தமிழ்ப் புலவர் பயிற்சி, சுவடியியல், இசை, பரதநாட்டியம், அக்குபஞ்சர், வரைகலை மற்றும் வண்ணக்கலை, கணிதவியல் மனக்கணக்கு, மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மிகம் போன்ற பாடப் பிரிவுகளில் 9 சான்றிதழ்ப் படிப்புகள், அடிப்படைக் கல்வியாக அறிமுகநிலை, தொடக்கநிலை மற்றும் அடிப்படைநிலைப் படிப்புகள் என 73 பாடப் பிரிவுகளில் சேர்க்கை நடைபெற்று வருகின்றது.

2017 ஆம் நாள்காட்டி ஆண்டில் மேற்குறிப்பிட்ட படிப்புகளில் ஏறத்தாழ 5096 மாணவ, மாணவியர் சேர்ந்துள்ளனர். 2017-2018 ஆம் கல்வியாண்டில் 10,073 பேர் சேர்ந்துள்ளனர். இளங்கல்வியியல் பாடப்பிரிவில் தொலைநிலைக் கல்வி வழியாகக் கல்வியாண்டில் 500 மாணவர்களும், நாள்காட்டி ஆண்டில் 500 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் வாயிலாகத் தமிழகத்திற்கு வெளியேயும், இந்தியாவிற்கு வெளியிலுமுள்ள தமிழர்கள் உள்ளிட்ட உயர்கல்வி நாடுவோர்க்கு ஆன்லைன்மூலம் ஐசிடி முறையில் கல்வி வழங்குவதற்கு ஸ்கூல் குரு என்ற நிறுவனத்தார் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் 2017 ஆம் ஆண்டு மேற்கொண்ட புரிதல் ஒப்பந்தம் மூலம் இணையதளக் கல்வி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளில் முதுகலை இந்தியத் தத்துவம், பொருளியல், சமூகவியல், இளம் மற்றும் முது அறிவியல், இயற்பியல், வேதியியல், விலங்கியல், நுண்ணுயிரியல், சமூகவியல் மற்றும் பொருளியல் இளநிலைச் சமூகப்பணி, சுற்றுச்சூழல் அறிவியல் ஆகிய பாடப் பிரிவுகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட உள்ளன. ஐசிடி முறையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் ஜி.எஸ்.டி. குறித்த சான்றிதழ்ப் படிப்பும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஏறத்தாழ 60 புதிய கல்வி மையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதே வேளையில் செயல்படாத 17 கல்வி மையங்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

இணைந்த கல்வித் திட்டத்தில் மட்டுமே செயல்பட்டுவந்த இசை, பரத நாட்டியம், வரைகலை மற்றும் வண்ணக்கலை மற்றும் யோகா ஆகிய பாடப்பிரிவுகளில் 2017 ஆம் கல்வியாண்டு முதல் தொலைநிலைக் கல்வி இயக்ககம் நேரடியாக நடத்திவருகின்றது.

தகவல் மற்றும் தொலைத்தொடர்பு (ஐ.சி.டி.) முறையில் பாடம் நடத்துவதைப் பதிவு செய்வதற்கும், ஒலிபரப்புவதற்கும் ஏற்றவகையில் காட்சி ஊடக அரங்கு தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பிரஜாபிதா பிரம்மகுமாரிகள் இராஜயோகா மையம், (மதுரை) என்ற நிறுவனத்துடன் இணைந்து பட்டயம் மற்றும் சான்றிதழ் மதிப்புணர்வுக் கல்வி மற்றும் ஆன்மிகம் என்ற தலைப்பில் புதிய பாடப் பிரிவு தொடங்கப்பட்டு 2017-2018ஆம் கல்வியாண்டு முதல் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாத சுவாமி திருக்கோயிலுடன் இணைந்து சான்றிதழ், பட்டயம், இளங்கலை, முதுகலை ஆகிய நிலைகளில் வைணவம் தொடர்புடைய பாசுரங்களை இணைவுத் திட்டத்தின்கீழ் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5.6 ஆய்வுப்பணிகள்-திட்டங்கள்

பல்கலைக்கழகத்திலுள்ள ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளோடு தங்களின் செயற்பாட்டை ஆய்வுப் பணிகளிலும் விரிவுபடுத்தியுள்ளனர். குறிப்பாக, பல்கலைக்கழக நல்கைக்குழு, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை மற்றும் பிற நிறுவனங்களின் நல்கை உதவியுடன் பெருந்திட்ட / குறுந்திட்ட ஆய்வுப் பணிகளைப் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பல்கலைக்கழக நல்கைக்குழு வழங்கிய நல்கையின்கீழ் மூன்று பெருந்திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மகாராஷ்டிர அரசு நல்கையின்கீழ் மோடி ஆவண மின்னாக்கத் திட்டம் நடைபெற்று வருகிறது.

இந்திய வரலாற்று ஆய்வு மையம் (ஐ.சி.எ.ஆர்.,) செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக நல்கையின்கீழ்க் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுக்க, கல்வி ஆய்வுப் பணிகளுக்குத் தமிழ்நாட்டரசின் நிதிநிலை அறிக்கைவழி ரூபாய் 130.85 இலட்சம் பெறப்பட்டுப் பல்வேறு துறைகள் சார்ந்த ஆய்வுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு

46 ஆய்வுத்திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இதில் 40 ஆய்வறிக்கைகள் துறைசார்ந்த வெளிவல்லுநர்களால் நுண்ணாய்வு செய்யப்பட்டு நூலாக்கம் செய்வதற்குப் பதிப்புத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆய்வறிக்கைகள் நுண்ணாய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

கடல்சார் மற்றும் தொல்லியல் துறைகள் சார்பில் இந்திய அரசு தொல்லியல் துறை நல்கையுடன் நன்னிலம் பகுதியிலுள்ள அம்பல் எனுமிடத்தில் ஆய்வுநோக்கிலான அகழாய்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கல்வியாண்டில் மேலும் பல திட்டங்களை உருவாக்க ஆசிரியர்கள் ஊக்கம் தரப்பட்டுள்ளனர். இதன்படி மத்திய-மாநில அரசுகளின் திட்டங்களைப் பெறுவதற்கான பணிகளில் ஆசிரியர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் ஒன்றான மொரிசியஸில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ்மொழியினை எழுதவும் பேசவும் பயிற்சி அளிக்கும் வகையில் ஆண்டுதோறும் தமிழ்ப் பயிற்சி வகுப்புகள் நடத்திடத் தமிழ்நாடு அரசு ரூபாய் 3.81 இலட்சம் வழங்கியுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில் ஒன்றான மொரிசியசுவாழ் தமிழர்களுக்குத் தமிழ் மொழியினை எழுதவும், பேசவும் பயிற்சி அளிக்கும் திட்டத்தினைச் செயற்படுத்திடும் வகையில் மொரிசியசு தமிழ்ப் பண்பாட்டு மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்றுவருகின்றன

5.7 அறக்கட்டளைப் பொழிவுகள்

வகுப்பறைகளுக்கு அப்பால், மாணவர்களின் கற்றல் அனுபவத்தைச் சிறப்பாகச் செதுக்கும் முகமாகப் பல்வேறு அறக்கட்டளைகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. 78 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டு அவற்றின் முதலீடுகளின் வட்டித் தொகையிலிருந்து ஒவ்வோராண்டும் ஆய்வு மாணவர்களுக்கு உதவித்தொகை, ஊக்கத்தொகை வழங்கப்படுகின்றன. அத்துடன் தமிழறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகளும் கருத்தரங்குகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆய்வு இருக்கைகள் தொடர்பான அறக்கட்டளைகள் மூலம் பெறப்படும் வட்டித் தொகையில் ஆய்வுப்பணி நடைபெற்று வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டு 30 கருத்தரங்குகள் மற்றும் 35 சொற்பொழிவுகளும் 2017-2018 ஆம் ஆண்டு 32 கருத்தரங்குகளும் 33 சொற்பொழிவுகளும் நடத்தப்பட்டுள்ளன.

5.8 பல்கலைக்கழக நல்கை ஆணையம்

மாணவர்களுக்கான கலை விழா, பொங்கல் விழா மற்றும் உலகத் தாய்மொழி விழா போன்றவைகளும் நடத்தப்பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள அரசு கல்லூரிகள், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களை அழைத்து, பல்கலைக்கழகத்தினால் கலைவிழா நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பாகப் பொதுமக்களும் பல்கலைக்கழகமும் இணைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் நூல்கொடை இயக்கம் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமிழக அரசு நல்கை, பல்கலைக்கழக மானியக்குழு நல்கை, செம்மொழி உயராய்வு மைய நல்கை, தமிழ்ப் பல்கலைக்கழக நல்கை மற்றும் மைய அரசின் நிறுவனங்களான இந்தியத் தொல்பொருள் ஆய்வு நிறுவனம், இந்திய மொழிகளுக்கிடையிலான இயந்திர மொழிபெயர்ப்புத் திட்டம், இந்திய மொழிகளின் விரிவுத் தரவுத் திட்டம் போன்ற இன்ன பிற நிறுவனங்களுக்குக் கருத்துருக்கள் அனுப்பி நிதியுதவி பெற்றுப் பல்வேறு ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.9 நூல் வெளியீடு மற்றும் விற்பனை

2017-2018 ஆம் ஆண்டில் 12 புதிய நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள் நாள்தோறும் விற்பனை செய்யப்படுகின்றன.

பல்வேறு ஊர்களில் நடத்தப்பெறும் புத்தகக் கண்காட்சிகளிலும் பல்கலைக்கழக வெளியீடுகள் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2017-2018 ஆம் ஆண்டில் ரூபாய் 8,95,356 விலை மதிப்பிலான நூல்கள் விற்பனை செய்யப்பெற்றுள்ளன.

5.10 நூலகம்

1-1-2017 முதல் 31-12-2017 ஆம் நாள் முடிய நூல்சேர்க்கைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நூல்கள் விவரம் :

அ. கல்வியாளர்களின் திட்டம் மற்றும் களஞ்சிய மைய நூல்கள்

தமிழ் 930

ஆங்கிலம் 312

மொத்தம் 1242

ஆ. அன்பளிப்பு நூல்கள்

தமிழ் 647

ஆங்கிலம் 328

மொத்தம் 975

கூடுதல் 1242 + 975 = 2,217

5.11 தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவனர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை திறப்புவிழா

தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவனர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டுவிழாவினை முன்னிட்டு தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர், பணியாளர்கள் நிதி பங்களிப்புடன் ரூபாய் 8.35 இலட்சம் செலவில் அன்னாரின் மார்பளவு வெண்கலச் சிலை தமிழ்ப் பல்கலைக்கழக அலுவலகக் கட்டட வரவேற்புக் கூடத்தில் அமைக்கப்பெற்றது.

2-1-2018 நாளன்று மேதகு தமிழக ஆளுநர் திரு பன்வாரிலால் புரோகித் அவர்களால் சிலை திறந்து வைக்கப்பெற்று "டாக்டர் எம். ஜிஆர். பன்முகப் பார்வை" எனும் தமிழ்ப் பல்கலைக்கழக நூலினை வெளியிட்டார்கள். நிகழ்வில் மாண்புமிகு வேளாண்மைத்துறை

[*2018 ஜூன் 13*

அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு க. பாண்டியராஜன் அவர்கள் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

5.12 2017-2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்ட நல்கைகள்

வ. எண்	நல்கை விவரம்	தொகை (ரூபாய்)	அரசாணை எண், நாள்
1.	தொகுப்பு நல்கை முதல் தவணை	1,22,10,675	அரசாணை (ப) எண்62 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 25-5-2016
2.	தொகுப்பு நல்கை இரண்டாம் தவணை	1,22,10,675	அரசாணை (ப) எண்91 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 3-8-2016
3.	தொகுப்பு நல்கை மூன்றாம் தவணை	1,22,10,675	அரசாணை (ப) எண்123 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 12-10-2017
4.	2013-2014ஆம் ஆண்டுக்கான கல்விநிலை மற்றும் அலுவல்நிலை பணியாளர்களுக்கான ஊதியச் செலவு	2,88,84,648	அரசாணை (ப) எண்211 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 10-11-2017

வ. எண்	நல்கை விவரம்	தொகை (ரூபாய்)	அரசாணை எண், நாள்
5.	2017-2018 தொகுப்பு நல்கை நான்காம் தவணை	2,08,29,975	அரசாணை (ப) எண்5 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 11-1-2018
6.	தமிழ் பண்பாட்டு மையம்	6,00,000	அரசாணை (ப) எண்205 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 8-11-2017
7.	1998-1999. முதல் 2003-2004 வரையிலான பணியாளர் ஊதியச் செலவு	51,30,287	அரசாணை (ப) எண்16 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ2.2)த் துறை, நாள் 18-1-2018
	கூடுதல்	9,20,76,935	

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 முதல் 2017 வரை பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெறப்பட்ட நல்கை விவரம்

வ. எண்	நல்கை விவரம்	வரப்பெற்ற தொகை (ரூபாய்)	செலவிடப் பெற்ற தொகை (ரூபாய்)
1.	12ஆவது திட்டம் பகிரலை (வை-ஃபை)	9,90,000	10,05,811

[2018 ஜூன் 13

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் பகிரலை நிறுவுவதற்கு பல்கலைக்கழக மானியக்குழு ரூபாய் 11.00 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இதுவரை பல்கலைக்கழக மானியக்குழு இத்திட்டத்திற்காக (2016 முதல் 2017 வரை) ரூபாய் 9,90,000/- வழங்கியுள்ளது. இத்தொகையில் பல்கலைக்கழக வளாகத்தில் பகிரலை நிறுவுவதற்கு ரூபாய் 10,05,811/- செலவிடப்பட்டது.

2017 முதல் 2018 வரை பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெறப்பட்ட நல்கை விவரம்

வ. எண்	நல்கை விவரம்	வரப்பெற்ற தொகை (ரூபாய்)	செலவிடப்பெற்ற தொகை (ரூபாய்)
1.	11ஆவது திட்டம் (கட்டடம்)	59,17,260	59,17,260

11 - ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட "மி" வடிவக் கட்டிடத்திற்கு பல்கலைக்கழக மானியக்குழுவால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபாய் 2,11,50,000/-ல் ஏற்கெனவே மானியக்குழு வழங்கிய தொகை ரூபாய் 1,45,37,000/- ஆகும். மீதத் தொகை ரூபாய் 63,13,000/-ல் 2017-2018 ஆம் ஆண்டு ரூபாய் 59,17,260/- மட்டும் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

1-4-2017—31-3-2018 வரை புதிதாக செய்யப்பட்ட நேரடி நியமனங்கள் விவரம்

கல்விநிலைப் பணியமைப்பு

வ.எண்	பணியிடம்	எண்ணிக்கை
1.	பேராசிரியர்	11
2.	இணைப் பேராசிரியர்	13
3.	உதவிப் பேராசிரியர்	13
மொத்தம்		**37**

அலுவல் நிலைப் பணியமைப்பு

வ. எண்	பணியிடம்	எண்ணிக்கை	
		பொது நிதி	சுய நிதி
1.	நூலகர் (கல்வி நிலை)	01	—
2.	அருங்காட்சியகக் காப்பாளர்	01	—
3.	புலவிருந்தகக் காப்பாளர்	01	—
4.	தொலைபேசி இயக்குபவர்	01	—
5.	பராமரிப்பு உதவியாளர்	01	—
6.	சமையற்காரர்	01	—
7.	இளநிலை உதவியாளர்	08	04
8.	பதிவுறு எழுத்தர்	—	04
9.	அலுவலக உதவியாளர்	—	03
மொத்தம்		14	11

அ) தமிழ் வளர் மையம்

உலகளாவிய நிலையிலும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் வாழும், தமிழ் எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் தமிழ் உச்சரிப்பினை அறியாதவர்களும், தமிழ்மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை அறியும் வகையிலும், அதனைக் கற்றுணர்ந்து பரப்பிடும் வகையிலும் 'தமிழ் வளர் மையம்' என்ற பெயரில், தோற்றுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆ) தமிழ்ப் பண்பாட்டு மையம்

உலக மொழிகளில் தொன்மையும் வளமையும் கொண்ட தமிழ் மொழியின் இயல், இசை, நாடகம் எனப்படும் முத்தமிழ்க் கலை மரபுகளையும் பண்பாட்டு மரபுகளையும் உலகத் தமிழர்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் 'தமிழ்ப் பண்பாட்டு மையம்' உருவாக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய நிலையில் வாழும் தமிழர்களும் தமிழ்ப் பண்பாட்டில் ஆர்வமுடைய பிறரும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினை அறியும் வகையிலும், அதனைக் கற்றுணர்ந்து பயன்பெறும் வகையிலும் 'தமிழ்ப் பண்பாட்டு மையம்' செயற்பட்டு வருகிறது.

இயல்—6

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை

6.1 தோற்றம்

உலகத் தமிழ் அமைப்புகளை ஒன்றிணைத்து ஒரு குடையின்கீழ்க் கொண்டு வரும் சீரிய நோக்கத்தினைக் கொண்டு சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மாநகர் மதுரையில் 1981ஆம் ஆண்டில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படும் என மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டது. கடந்த 2016 மார்ச் 1ஆம் நாளன்று உலகத் தமிழ்ச் சங்க வானளாவிய கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் வளர்த்த மதுரையின் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம் ரூபாய் 25 கோடி மதிப்பில் கட்டப்பட்டு ரூபாய் 12.25 கோடி மதிப்பில் கட்டடத்தினை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வளாகத்தில் இரண்டு கூட்ட அரங்குகள், நிருவாகப்பிரிவு, ஆய்வுப்பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை, நிருவாகக்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்ட அரங்கம், 400 பேர் அமரக்கூடிய வகையில் கலையரங்கம், விருந்தினர் தங்கும் அறைகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. உயர்ந்தோங்கிய சுற்றுச்சுவரில் திருக்குறள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பதிக்கப்பட்டுள்ளன. தமிழறிஞர்களும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் 12,000க்கும் மேற்பட்ட நூல்களுடன் நூலகம் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பொதுநூலகத் துறையின் நூலகம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் விரைவில் அமையப்பெறவுள்ளது.

இத்தகைய எழில்மிகு வளாகத்தைப் பார்வையிடுவதற்காகவும் இங்கு நடைபெறுகின்ற இலக்கியக் கருத்தரங்க நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவும் அயல்நாட்டுத் தமிழறிஞர்கள், பிற மாநிலத்

தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் ஆர்வத்தோடு வருகைபுரிந்து வருகின்றனர்.

மதுரையின் தனித்த அடையாளங்களில் ஒன்றாக மாறியுள்ள உலகத் தமிழ்ச் சங்கம் அன்னைத் தமிழின் பெருமையை உலகிற்கு உணர்த்தும் வகையில் தன்முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

6.2 சங்க அமைப்பு நோக்கம்

- தமிழ் வளர்ச்சியில் பங்களித்து வரும் நிறுவனங்கள், தமிழ் அமைப்புகள், தமிழ்ச் சங்கங்கள், ஆய்வு மையங்கள் ஆகியவற்றின் விவரங்களைத் தொகுத்தல் மற்றும் பதிவு செய்தல்.
- தமிழ் வளர்க்கும் உயரிய நோக்கத்துடன் கூட்டமைப்பினை உருவாக்கிட உலகத் தமிழ் அமைப்புகளை ஒரு குடையின்கீழ்க் கொண்டு வருதல்.
- உலக நாடுகளுக்கெல்லாம் தமிழர்களின் இலக்கியம், பண்பாடு, தமிழ் மொழி பற்றிய செய்திகளைக் கொண்டு செல்லுதல்.
- உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறை, இலக்கியப் பணி ஆகியவற்றைத் தொகுத்து வழங்குதல்.
- அயலகத் தமிழர் களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்.
- பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, பிஜி, மொரிசியசு, பிரெஞ்சு கயானா, அமெரிக்கா, பிரான்சு, ஆசுதிரேலியா, நியூசிலாந்து, குவைத் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்.
- அயலகத் தமிழர்கள் தமிழ் இலக்கியங்களையும் பண்பாட்டு அடையாளங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
- உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம் அமைக்கும் பணிகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

[2018 ஜூன் 13

- ஆண்டுதோறும் தமிழர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இரண்டினைத் தெரிவு செய்து அந்நாடுகளுக்குச் சென்று ஆய்வரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்தல்.

- தமிழகத்தின் தனிச்சிறப்பு மிக்க கலைகளான சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டுப்புறக்கலைகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் அறிந்து தெளிய வாய்ப்புகளை உருவாக்குதல்.

- அயலகத் தமிழர்களின் தமிழ்ப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு, உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் வழங்குதல்.

6.3 பணி அமைப்பு

முன்னோர் தமிழ் வளர்த்த பெருமைமிகு மதுரையில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தில் நிருவாகப் பணிகளும் திட்டப் பணிகளும் விரைவாகவும் சரியாகவும் செயல்படுவதற்கு ஏதுவாக இயக்குநர் தலைமையில் பணியிடங்கள் நிறைவு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6.4 சங்கத் தமிழரின் வாழ்வியலை வகைப்படுத்தும் காட்சிக்கூடம்

தமிழரின் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பினை உலகிற்கு உரக்கச் சொல்வன சங்க இலக்கியங்கள். வீரம், காதல், சுற்றுச்சூழல், வணிகம், போர், நீர் மேலாண்மை, வேளாண்மை என வாழ்வியல் நெறிகளையும் அறச் சிந்தனைகளையும் எடுத்துரைத்துத் தமிழ்ச் சமூகத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. இதனை இன்றைய தலைமுறையினரும் உலகினரும் அறிந்து தெளியும் வண்ணம் 2016 ஆம் ஆண்டு தூங்கா நகரமான மாமதுரையில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டுப் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

மனிதநேயம், இறைச் சிந்தனை, இயற்கையைப் பேணுதல், பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், தன்மான உணர்வு, நீதி வழுவாமை உள்ளிட்ட பண்பாட்டு அடையாளங்களை உணர்ந்து கொள்ளும் வகையில் ஓவியங்கள், சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், பழந்தமிழர் வாழ்வியல் பற்றிய

கல்வெட்டுகள், புகைப்படங்கள் எனக் கலைப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டு சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் அமையப்பெற்றுள்ளது. ஏராளமான அயல்நாட்டவர், பிற மாநிலத்தினர், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் இக்காட்சிக்கூடத்தைப் பார்த்துத் தமிழரின் பெருமை கண்டு மெய்சிலிர்க்கின்றனர்.

6.5 அயலகத் தமிழர்களின் பணிகளை அங்கீகரித்தல்

6.5.1 அயலகத் தமிழர்களின் சொற்பொழிவுகள்

அயலகத் தமிழறிஞர்களின் பங்களிப்பினைத் தாயகத் தமிழர்களும் அறிந்துகொள்ளும் வகையில் பன்னாட்டுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தாய்த் தமிழகத்திற்கு வருகைபுரியும் அயலகத் தமிழறிஞர்கள் பங்குபெறும் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் பிரான்சு மொழியியல் பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவு குறிப்பிடத்தக்கது.

அயலகத் தமிழறிஞர்களின் தமிழ்ஆய்வுகளை வெளிக்கொணரும் வகையிலும் அவற்றைத் தமிழகத் தமிழறிஞர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் அவர்கள் பங்குபெறும் ஆய்வரங்கங்கள் திங்கள்தோறும் நடத்தப்படுகின்றன. ‘ஆசுதிரேலியப் பழங்குடியினர் வாழ்வியலும் புலம்பெயர் தமிழர் வாழ்வியலும்’, ‘மலேசியாவில் தமிழ் இலக்கியம்’, ‘புலம்பெயர் தமிழர்களின் இலக்கியப் பணிகள்’, ‘பிரெஞ்சு அகராதியியலின் வரலாறு, பரிணாமம்’, ‘இணையத் தமிழ்’, ‘மலையகத் தமிழ் இலக்கியம்’, ‘புலம்பெயர் சிறுகதைகளின் நோக்கும் போக்கும்’, ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுக’, ‘இணையத்தில் தமிழ்-வளர்ச்சியும் தேவைகளும்’ ஆகிய தலைப்புகளில் அயலகத் தமிழறிஞர்கள் பங்குபெற்ற 10 ஆய்வரங்கங்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் தமிழகத்திற்கு வந்திருந்த முப்பதிற்கும் மேற்பட்ட மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள், மாணவர்கள் பங்குபெற்ற பயிலரங்கம் உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடத்தப்பட்டது. மாணவர்களுக்குத்

[*2018 ஜூன் 13*

தமிழ் இலக்கியம் குறித்தும் அதன் தொன்மை குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது. பயிலரங்கத்தின் ஒரு பகுதியாக, திண்டிவனம் ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமி நாடகமன்றக் குழுவினரின், ‘கடமைக்கோர் கபிலர்’ நாடகம் நிகழ்த்தப் பெற்றது.

6.5.2 அயலகத் தமிழர்களுக்கு உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்

இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழர்கள் மூன்று பேர்களுக்கு ஆண்டுதோறும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டில் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் வழங்கப்படும் என 2015-2016 ஆம் ஆண்டில் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** *அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-இன் கீழ் அறிவிக்கப்பட்டது.*

அதற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.04.2018 அன்று 2016 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருது திரு. நா. ஆண்டியப்பன் அவர்களுக்கும் இலக்கண விருது திரு. பெஞ்சமின் லெபோ அவர்களுக்கும் மொழியியல் விருது முனைவர் சுபாஷினி அவர்களுக்கும் 2017 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருது திருமதி சந்திரிகா சுப்பிரமணியன் அவர்களுக்கும் இலக்கண விருது முனைவர் திருமதி உல்ரிகோ நிக்கோலஸ் அவர்களுக்கும் மொழியியல் விருது திரு. மகாதேவ ஐயர் ஜெயராம் சர்மா அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

6.6 உலகத் தமிழ்ச் சங்கம் பதித்த தடங்கள்

உலகத் தமிழ்ச் சங்கத்தின் பணிகளைத் தேசமெங்கும் கொண்டு செல்லும் வகையில் தேசிய அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழாசிரியர்கள் செம்மையுறும் வகையில் தமிழ் மொழியைக் கற்றாலும் தமிழ் இலக்கண, இலக்கியத்தின் மேன்மையை உணராமலும் தொடர் பயிற்சி இல்லாமலும் மாணவர்கள் செய்யும் சொற்பிழை, எழுத்துப் பிழை முதலியவற்றைக் களைய அவர்களுக்கு எவ்வாறு மொழிப் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் தமிழ் இலக்கண, இலக்கியத்தில் சிறந்து விளங்கும் பேராசிரியர்களையும் வல்லுநர்களையும் அழைத்து 32 மாவட்டங்களில் தமிழாசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி அந்தந்த மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / உதவி இயக்குநர்களின் ஒருங்கிணைப்புடன் நடத்தி முடிக்கப்பட்டன.

6.7 அயலகத் தமிழ்ப் படைப்புகள் வெளியீடு

அயலகத் தமிழர்களின் படைப்புகளை அனைவரும் அறியும் வகையில் 'அயலகத் தமிழ்ப் படைப்புகள் வெளியீடு' திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, அமெரிக்கா, சிங்கப்பூர், பிரான்சு, இங்கிலாந்து, ஆசுதிரேலியா ஆகிய நாடுகளில் வாழும் படைப்பாளர்களின் 5 நூல்கள் உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டன.

6.8 நூல் அரங்கேற்றம்

பாண்டிய மன்னர்கள் தமிழ் வளர்த்த மதுரையில் எண்ணற்ற தமிழ் நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழர்களின் பெருமையை உலகறியச் செய்த திருக்குறள் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்ட பெருமைக்குரியது மதுரை மாநகரம். அத்தகு சீர்மிகு மதுரையம்பதியில் விளங்கும் உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் படைப்பாளர்களின் தரமான, சிறந்த படைப்புகளை வெளிக்கொணரும் பொருட்டு உலகத் தமிழ்ச் சங்கத்தில் நூல் அரங்கேற்ற நிகழ்வு திங்கள்தோறும் நடைபெற்று வருகிறது. இதுவரை ஆறு நூல் அரங்கேற்றங்கள் நடத்தப்பெற்றுள்ளன.

6.9. மேற்கொண்டு வரும் பணிகள்

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் தொண்டாற்றிவரும் நிறுவனங்களில் முதன்மை நிறுவனமான உலகத் தமிழ்ச் சங்கம் திங்கள்தோறும் அயலகத் தமிழறிஞர்கள் பங்குபெறும் ஆய்வரங்கம், உலகத் தமிழ்ச் சங்க இலக்கிய விழா, தரம்வாய்ந்த தமிழ்க் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதற்கான மின்னிதழ், உலகமெல்லாம் பரவி வாழும் தமிழர்களுக்குத் தமிழ் தொடர்பான தகவல்களைத் திரட்டி வழங்குவதற்காகத் தகவல் மையம் எனச் செயல்பட்டு வருகின்றது.

6.9.1 உறுப்பினர் சேர்க்கை

தமிழறிஞர்களுடனும் தமிழ் ஆர்வலர்களுடனும் ஒரு நல்லுறவை உருவாக்கும் வண்ணம் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இதுநாள் வரை 900க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைப் பெற்றுள்ளது மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம்.

6.9.2. பழந்தமிழர் பண்பாட்டுக் காட்சியகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ், உலகத் தமிழ்ச் சங்கத்தில் பழந்தமிழர் பண்பாட்டுக் காட்சியகம் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என 2017-2018 - இல் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, இளைய தலைமுறையினர் முன்னோரின் பெருமைகளை நுவலுவதற்கும் உலகறியச் செய்யும் நோக்குடனும் தமிழரின் கலையினைப் பரிணமிக்கும் வகையில், சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த மதுரை மண்ணில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழரின் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பினை உலகிற்கு உரக்கச் சொல்லும் விதத்தில் பழந்தமிழரின் வீரம், காதல், சுற்றுச்சூழல், வணிகம், போர், நீர் மேலாண்மை, வேளாண்மை என வாழ்வியல் நெறிகளையும் அறச் சிந்தனைகளையும் எடுத்துரைத்துத் தமிழ்ச் சமூகத்தின் பெருமையைப் பறைசாற்றும் பழந்தமிழர் பண்பாட்டுக் காட்சியகம் ரூபாய் 50 கோடியில் அமைக்கப்படவுள்ளது.

உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் நுழைவாயிலில் அனைவரையும் கவரும் வகையில் தமிழர் பாரம்பரிய சல்லிக்கட்டுக் காளை, உழவன், ஏர் உள்ளிட்ட சிற்பங்கள் கலைப்பொருள்களால் அழகுபடுத்தப்படவுள்ளன.

அருங்காட்சியகத்தில் ஓவியம், கல், மர சிற்பங்கள், புடைப்புச் சிற்பம், சுடுமண் சிற்பம், போர்க் கருவிகள், அறிவியல், விவசாயம், மருத்துவம், மெய்நிகர் காட்சிகள், பழந்தமிழர் வாழ்வியல் பொருட்கள் சேகரிப்பு என 328 கலைப்பொருள்கள் காட்சியகத்தில் இடம்பெறவுள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களின் தன்மைகளை விளக்கும் வகையில் ஐந்திணைப் பூங்கா அமையவுள்ளது. உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் ரூபாய் 16 கோடியில் தமிழ்த்தாய் சிலை நீரூற்று அமைக்கப்படவுள்ளது. இதன் பணிகள் மூன்று கட்டமாக நடைபெறவுள்ளன.

பண்பாட்டுக் காட்சியகத்தில் முதற்கட்டப் பணிகள் 2018-2019ஆம் நிதியாண்டில் ரூபாய் 15 கோடி மதிப்பில் தொடங்கியுள்ளன. 2019-2020ஆம் ஆண்டில் ரூபாய் 20 கோடியிலும் 2020-2021ஆம் ஆண்டில் ரூபாய் 15 கோடியிலும் பணிகள்

மேற்கொள்ளப்படவுள்ளன. மூன்று ஆண்டுகளில் பழந்தமிழர் பண்பாட்டுக் காட்சியகம் முழுமையாக மக்கள் பார்வைக்கு வந்துவிடும்.

"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூல்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்"

50. கடந்த 13-9-2012 அன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அன்றே, பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு மொத்தம் 8200 பக்தர்கள் பயன்பெறுகின்றனர் மற்றும் இதற்கென நாளொன்றுக்கு இவ்விரண்டு திருக்கோயில்களால் சுமார் ரூ.2.05 இலட்சம் செலவிடப்படுகின்றது. பக்தர்கள் காலை எட்டு மணி

முதல் இரவு பத்து மணி வரை எப்பொழுது வேண்டுமானாலும் உணவு அருந்தலாம். இத்திட்டம் பக்தர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

ஆன்மிகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள்

51. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விருப்பப்படி பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நற்பண்புகள், நீதிநெறி கருத்துகளை கதைகள் வாயிலாக குழந்தைகளின் மனதில் ஆழப்பதிந்திட, சனிக்கிழமைதோறும் ஆன்மிக மற்றும் நீதிநெறி வகுப்புகள் முக்கிய திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவ மாணவியருக்கு இனிப்பு, கார வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகள் 2017-2018 ஆம் ஆண்டு 517 திருக்கோயில்களில் நடத்தப்பட்டதில் 28,447 மாணவ மாணவியர் கலந்துகொண்டனர்.

சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

52. ஆண்டுதோறும் முக்கிய திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய தினங்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத்தாழ்வின்றி பங்கு பெறும் வகையில், சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடத்தப்படுகின்றன. சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் 2017-2018 ஆம் ஆண்டு 756 திருக்கோயில்களில் சிறப்புடன் நடத்தப்பட்டன.

யானைகள் சிறப்பு நல வாழ்வு முகாம்

53. "மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய இரக்கத்திற்கும் அன்புக்கும் உரியவைதான்" என்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது உயரிய எண்ணத்தின்படி, யானைகளின் உடல் நலமும், மன நலமும் பேண அவற்றின் உடல் நலனுக்கேற்ற குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் "யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்" நடத்தப்பட்டு வருகிறது. 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் திருக்கோயில்கள் மற்றும் தனியாரால் பேணப்பட்ட யானைகளுக்கு குளிர்ந்த இயற்கை சூழ்நிலையில் முதுமலை, தெப்பக்காடு பகுதியில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டது. 2006 ஆம்

ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை கைவிடப்பட்ட இம்முகாம், 2011-2012 ஆம் நிதியாண்டில் மீண்டும் 14-12-2011 அன்று முதல் 48 நாட்கள் முதுமலை, தெப்பக்காடு பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

54. 2012-2013 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகில் பவானி ஆற்றங்கரையில் இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சேர்ந்த 34 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத் திருக்கோயிலைச் சேர்ந்த ஒரு யானையும் பங்கேற்று பயனடைந்துள்ளன.

55. 2013-2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 31 யானைகளும், வனத் துறையைச் சேர்ந்த 18 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும், நாகூர் தர்காவிற்கு சொந்தமான 1 யானையும் ஆக மொத்தம் 52 யானைகள் பங்கேற்று பயனடைந்துள்ளன.

56. 2014-2015 ஆம் ஆண்டில் நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 28 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன.

57. 2015-2016 ஆம் ஆண்டில் நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான 29 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன.

58. 2016-2017 ஆம் ஆண்டு நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த 31 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன.

59. 2017-2018 ஆம் ஆண்டு நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த 39 யானைகளில் 31 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன. இம்முகாமில் பங்கேற்க இயலாத திருக்கோயில் மற்றும் திருமடங்களைச் சேர்ந்த யானைகளுக்கு

முகாமில் வழங்கப்பட்டது போலவே ஊட்டச்சத்து உணவுகளும், மருந்துகளும் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு, அவற்றின் மன நலமும் உடல் நலமும் பேணப்பட்டன. இம்முகாமில், யானைகளின் நல்வாழ்விற்கான முறையான உடற் பயிற்சிகள், உணவு மற்றும் மருந்துகள் யானைகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், யானைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான பல்வேறு பயிற்சிகள் யானைப் பாகன்கள்/உதவி பாகன்களுக்கு அளிக்கப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் தமது உடல் நலம் பேணவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இம்முகாமிற்கு அரசு மானியமாக ரூ.1,50,79,000/- அரசால் வழங்கப்பட்டது.

ஏழை எளியோர்களுக்கான திருமணத் திட்டம்

60. 1981 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில் உபரி நிதியிலிருந்து திருமணம் செய்து வைக்க இத்திருமணத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் ஆதி திராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பயன்பெற்றனர். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையேற்று 2002 ஆம் ஆண்டு 1008 இணைகளுக்கும், 2003 ஆம் ஆண்டு 1053 இணைகளுக்கும் திருமணங்கள் திருவேற்காட்டில் நடத்தி வைத்தார்கள். மேலும், 489 இணைகளுக்குச் சில திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்பட்டன. 2006-2011 ஆம் ஆண்டுகளில் கைவிடப்பட்ட இந்த உயரிய திட்டத்தை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி சிறப்புடன் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு 2012-2013 ஆம் ஆண்டில் ஓர் இணைக்கு நான்கு கிராம் தங்க திருமாங்கல்யம் மற்றும் ரூபாய் பத்தாயிரம் செலவில் சீர்வரிசைப் பொருட்கள் என்ற விகிதத்தில் 1006 இணைகளுக்குத் திருமணம் 18-6-2012 அன்று திருவேற்காடு திருக்கோயில் அருகில் சிறப்பாக நடத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.1.51 கோடி செலவிடப்பட்டது.

கம்பிவட ஊர்திகள்

61. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்காக முதல் முறையாக நான்கு கோடி ரூபாய் செலவில் கம்பி வட ஊர்தி அமைத்திட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் கம்பிவட ஊர்தி சேவை தொடங்கப்பட்டது. இந்தக் கம்பிவட ஊர்தி பக்தர்களின் வரவேற்பு பெற்றதையடுத்து, வேலூர் மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் மற்றும் கரூர் மாவட்டம் அய்யர்மலை, அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றுக்குப் புதிதாக கம்பிவட ஊர்தி அமைத்திட ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், உலகத் தரம் மற்றும் கூடுதல் பயணியர் இருக்கை வசதியுடன் கூடிய இரண்டாவது கம்பிவட ஊர்தி அமைத்திட ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின்கல மகிழுந்துகள்

62. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2011 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 19 ஆம் நாள் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறு இருக்கைகள் கொண்ட மின்கல மகிழுந்து ஒன்றினை மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள். இத்திட்டம் பக்தர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பின்வரும் பத்து திருக்கோயில்களில் மின்கல மகிழுந்துகள் பயன்பாட்டில் உள்ளன:

வ. எண்	திருக்கோயில் பெயர்	மகிழுந்து எண்ணிக்கை
1.	ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்	*2*
2.	பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்	*3*
3.	திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்	*1*

வ. எண்	திருக்கோயில் பெயர்	மகிழுந்து எண்ணிக்கை
4.	திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்	1
5.	திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்	1
6.	திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில்	1
7.	திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்	1
8.	திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்	1
9.	மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்	2
10.	இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்	3
	கூடுதல்	16

கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம்

63. கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 490 திருக்கோயில்கள், ஒரு மகளிர் கல்லூரி, ஒரு மேல்நிலைப் பள்ளி மற்றும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை நிருவகிக்க போதுமான நிதிவசதி இல்லை என்பதை அறிந்து, செம்மையான நிருவாகத்தை மேற்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்ததை 2013-2014 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாயாக உயர்வு செய்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, உயர்த்தப்பட்ட அரசு மானியத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு கால பூஜைத் திட்டம்

64. நிதி வசதியற்று, ஒரு கால பூஜை கூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை செய்திட உதவும் வகையில் இத்திட்டம் 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சிறப்புமிகு

திட்டத்தில் பொதுமக்களும் பங்கேற்கும் நோக்கில், 1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில் ஒன்றுக்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ.2,500/- வழங்க முன்வந்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/-ம், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/-ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/-ம், ஆக மொத்தம் ரூ.25,000/- அந்தந்த திருக்கோயில் பெயரில் முதலீடு செய்யப்பட்டு, அதில் கிடைக்கும் வட்டி வருவாயைக் கொண்டு இத்திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

65. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபின் ரூ.25,000/- முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகை போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு நிரந்தர முதலீட்டுத் தொகையை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.1 இலட்சமாக உயர்த்தினார்கள். இத்திட்டத்தின்கீழ் 11,931 திருக்கோயில்கள் இதுநாள் வரை பயனடைந்துள்ளன. இதற்கு ஒருமுறை வழங்கும் அரசு மானியமாக ரூ.59.48 கோடி வழங்கப்பட்டது. எஞ்சிய தொகை ரூ.30 கோடி, நிதிவசதிமிக்க திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், 2014-2015 ஆம் ஆண்டில் மேலும் 68 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 11,999 திருக்கோயில்களில் செயல்பாட்டில் உள்ளது.

66. 2015-2016 ஆம் ஆண்டு மேலும் 505 திருக்கோயில்களுக்கு இந்த திட்டத்தின்கீழ் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2016-2017 ஆம் ஆண்டில் மேலும் 241 திருக்கோயில்களுக்கு, ஒரு திருக்கோயிலுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வைப்பு நிதி முதலீடு செய்யப்பட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் ஒரு திருக்கோயிலுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வைப்பு நிதி வீதம் தற்போது ரூ.127.45 கோடி முதலீட்டில் 12,745 திருக்கோயில்களில் ஒருகால பூஜைத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

67. ஒரு கால பூஜை கூட நடைபெறாத எந்தவொரு திருக்கோயிலுக்கேனும் ரூ.10,000/- நன்கொடை எவரேனும் அளித்தால், பல்வேறு நிதிகளிலிருந்து ரூ.90,000/- நிதி அளித்து ஆக மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் அத்திருக்கோயில் பெயரில் வைப்பு நிதி உருவாக்கி ஒரு கால பூஜை நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்குதல்

68. 10,000 சிறு திருக்கோயில்களுக்குச் சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளைத் தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.2.44 கோடி செலவில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு 15-9-2015 அன்று திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில் மேலும் 10,000 சிறு திருக்கோயில்களுக்கு ரூ.2.50 கோடி செலவில் பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8-5-2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

பழைமையான திருக்கோயில்களின் கால பூஜைகளுக்கு புத்துயிரூட்டல்

69. நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பழம்பெரும் திருக்கோயில்களில் கால பூஜைகள் செய்வதில் தொய்வு ஏற்பட்டதைக் களைவதற்கு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான கால பூஜைகளைச் செய்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதன் பயனாக 19 நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து 50 நலிவுற்ற திருக்கோயில்களுக்கு 2001-2006 ஆம் ஆண்டு நிதியுதவி வழங்கப்பட்டது.

2017-2018-ல் 89 திருக்கோயில்களுக்கு பொது நல நிதியிலிருந்து ரூ.1,19,70,000/- நிதியுதவி வழங்கப்பட்டது.

IV—திருப்பணி

திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்)

70. "மழுவுடைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு சென்று
தொழுது போந்து அன்பினோடும் தொன்மறை நெறி வழாமை
முழுதுலகினையும் போற்ற மூன்று எரிபுரப் போர் வாழும்
செழு மலர்ச் சோலை வேலித் திருப் பனந் தாளில் சேர்ந்தார் "

—பெரிய புராணம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரிகளின்படியும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

ஆணைப்படியும், வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த திருக்கோயில்கள் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் போற்றி பாடப்பட்ட திருக்கோயில்கள், பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள், கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலுள்ள சிறிய திருக்கோயில்கள் ஆகியவற்றை திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்து பேணிப் பாதுகாத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதியாதாரங்கள்

71. பின்வரும் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- *திருக்கோயில்மூலம் பணி மேற்கொள்ள நன்கொடை நிதி*
- *திருக்கோயில் நிதி*
- *பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்*
- *அரசு மானியம்*
- *இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி*
- *பொது நல நிதி*
- *ஆலய மேம்பாட்டு நிதி*
- *கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி*
- *திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி*
- பக்தர்கள்மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும் உபயத் திருப்பணிகள்
- *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி*
- *நிதி ஆணைய மானியம்*
- *சுற்றுலாத் துறை நிதி*
- *ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக பெறப்படும் நிதி*

72. நன்கொடையாளர்கள் திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு முன்வரும் நிகழ்வுகளில், அவர்களால் வழங்கப்படும் நிதியாதாரத்தில் குறைவு ஏற்படும் சூழ்நிலை ஏற்படும்போது துறை மூலமாகவும் கூடுதல் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்மூலம் பணி மேற்கொள்ள நன்கொடை நிதி

73. இறை நம்பிக்கை, ஆன்மீகம் மற்றும் சமய ஈடுபாடு கொண்டோர், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மனமுவந்து அளிக்கும் நன்கொடையைக் கொண்டும், திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) நடைபெறுகின்றன. கடந்த ஏழு ஆண்டுகளில் 583 திருக்கோயில்களில் ரூ.36.96 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நன்கொடைமூலம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இதில், 2017-2018 ஆம் நிதியாண்டில் மட்டும் 6 திருக்கோயில்களில் 6 திருப்பணிகளுக்கு ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்ய இசைவளிக்கப்பட்டது.

திருக்கோயில் நிதி

74. நிதி மிகுந்த திருக்கோயில்களின் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) அவற்றின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஏழு ஆண்டுகளில் 1,174 திருக்கோயில்களில் ரூ.400.11 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் திருக்கோயில் நிதிமூலம் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் 2017-2018 ஆம் நிதியாண்டில் மட்டும் 226 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.117.24 கோடி அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்

75. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதி தேவைப்படும் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளை மேற்கொள்ள, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 36-வது பிரிவின்கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் 185 திருக்கோயில்களில் ரூ.33.99 கோடி மதிப்பீட்டில் பிற திருக்கோயில்களிலிருந்து நிதிமாற்றம்மூலம் திருப்பணிகள் செய்ய இசைவளிக்கப்பட்டது. இதில் 2017-2018 ஆம் ஆண்டு மட்டும் 16 திருக்கோயில்களுக்கு ரூ.11.42 கோடி நிதி மாற்றம் மூலமாக திருப்பணிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அரசு மானியம்

76. அரசு மானியமாக ஆண்டுதோறும் திருக்கோயில்களின் திருப்பணிக்கென (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.3 கோடி வழங்கப்பட்டு வந்தது. 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் 96 திருக்கோயில்களில் புனரமைப்பு / புத்தாக்கத்திற்கென ரூ.6 கோடி வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.3 கோடி அரசு மானியம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013-2014 ஆம் நிதியாண்டு முதல் ரூ.6 கோடியாக உயர்த்தப்பட்டது. 2011-2012, 2012-2013, 2013-2014 மற்றும் 2015-2016 ஆகிய ஆண்டுகளில் 196 திருக்கோயில்களின் சீரமைப்புப் பணிக்கு மொத்தம் ரூ.18 கோடி நிதி வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் 32 திருக்கோயில்களுக்கு மொத்தம் ரூ.6 கோடி நிதி வழங்கப்பட்டது.

இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி

77. ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த அரசு மானியத்திற்கு பதிலாக, 2014-2015 ஆம் ஆண்டில் மகாமகம் தொடர்புடைய 36 திருக்கோயில்களுக்கு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதியிலிருந்து ரூ.6 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

பொது நல நிதி

78. "பொது நல நிதி" என்ற நிதியம் தனி நபர்கள் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடை மற்றும் இந்து சமய நிறுவனங்களின் பங்களிப்பு தொகை ஆகியவற்றைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் 1,042 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.78.53 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ள பொது நல நிதியுதவி வழங்கப்பட்டது. இதில், 2017-2018 ஆம் ஆண்டில் 135 திருக்கோயில்களுக்கு ரூ.7.41 கோடி பொது நல நிதியுதவி வழங்கப்பட்டது.

ஆலய மேம்பாட்டு நிதி

79. நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக ரூ.8 கோடி பெற்று மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதன நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு

நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 60 திருக்கோயில்களுக்கு ரூ.7.30 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் 7 திருக்கோயில்களுக்கு ரூ.54.35 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டில் ஒரு கால பூஜை திட்டத்திற்கு ஆலய மேம்பாட்டு நிதி பங்குத் தொகையாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.4,800/- வீதம் 241 திருக்கோயில்களுக்கு ரூ.11.56 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி

80. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கிட "கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டம்" என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2 கோடி நிதிமாற்றம் செய்து மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் வழங்கப்பட்டதை 2012-2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/- என உயர்த்தப்பட்டும், 2016-2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் என உயர்த்தப்பட்டு, அதன்படி 2011 முதல் 2018 வரை 4,753 திருக்கோயில்களுக்கு ரூ.31.17 கோடி வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 981 கிராமப்புறத் திருக்கோயில்களில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.9.81 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

81. "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியம் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஐந்தாம் நாள் உருவாக்கப்பட்டது. இந்நிதி அமைப்புக்கு தமது சொந்த பணத்திலிருந்து ரூ.1,00,008/-ஐ நன்கொடையாக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்தார்கள். இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள்

பெறப்பட்டன. இந்நிதியமைப்பு “திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி” என்று தற்போது அழைக்கப்படுகிறது. 2011-2012 முதல் 2015-2016 வரை 17 திருக்கோயில்களுக்கு ரூ.1.59 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில் ஒரு கால பூஜை வைப்பு நிதித் திட்டத்திற்கு இந்நிதியிலிருந்து பங்கு தொகையாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.5,200/- வீதம் 241 திருக்கோயில்களுக்கு ரூ.12.53 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

பக்தர்கள்மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும் உபயத் திருப்பணிகள்

82. பக்தர்கள் தாமே முன்வந்து தமது சொந்த செலவிலும், துறை மேற்பார்வையிலும் திருக்கோயில்களுக்குத் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்வது வழக்கத்திலுள்ளது. இவர்களது உபயத் திருப்பணி, துறையின் கண்காணிப்புடன் ஊக்குவிக்கப்படுகிறது. 2011-2018 ஆம் ஆண்டுகளில் 561 திருக்கோயில்களில் ரூ.114.54 கோடி மதிப்பீட்டில் உபயத் திருப்பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 2017-2018 ஆம் ஆண்டில் மட்டும் 201 திருக்கோயில்களில் 334 உபயத் திருப்பணிகளுக்கு ரூ.23.68 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி

83. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற இத்தொகை போதுமானதாக இல்லை என்பதையறிந்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இத்தொகை ஒரு திருக்கோயிலுக்கு ரூ.50,000/- என உயர்வு செய்யப்பட்டும், 2016-2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் என உயர்த்தப்பட்டும், அதன்படி 2011 முதல் 2018 வரை 5,159 திருக்கோயில்களுக்கு ரூ.33.39 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,019 திருக்கோயில்களுக்கு ரூ.10.19 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

[2018 ஜூன் 13

நிதி ஆணைய மானியம்

84. தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழைமை மாறாமல் புதுப்பிக்க மத்திய நிதி ஆணையம் நிதியுதவி வழங்குகின்றது. ஆண்டொன்றுக்கு ரூ.22.50 கோடி வீதம் 2011-2012 முதல் நான்கு ஆண்டுகளுக்குத் தொன்மை வாய்ந்த 250 திருக்கோயில்களின் திருப்பணிக்கென மொத்தம் ரூ.90 கோடி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது.

சுற்றுலாத் துறை நிதி

85. தமிழகத் திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்புத் தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறைகள், குளியலறைகள், குடிநீர் வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் புல்வெளி அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத் துறையும், அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன. இதனடிப்படையில் கடந்த ஏழு ஆண்டுகளில் 19 திருக்கோயில்களுக்கு ரூ.10.22 கோடி சுற்றுலாத் துறை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் "புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீக பெருக்குதல் திட்டத்தின்" (PRASAD) கீழ் ரூ.8.87 கோடி செலவில் திருக்கோயில்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக பெறப்படும் நிதி

86. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவிமூலம் திருக்கோயில்களுக்கு யாத்ரீ நிவாஸ், சுற்றுலா தகவல் மையம், சுற்றுலா வரவேற்பு மையம் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள் போன்றவைகளுக்கு சுற்றுலா துறைமூலம் மேற்படி திருப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு சுற்றுலாத் துறை மூலமாக திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

2017-2018 ஆம் ஆண்டில் 11 திருக்கோயில்களுக்கு ரூ.50.20 கோடி ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி சுற்றுலாத் துறைமூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பழைமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழைமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி:

பழைமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல்

87. திருக்கோயில்களின் பழைமையினை பாதுகாப்பது குறித்து பாதுகாத்தல் முறை கையேடு (Conservation Manual) *ஒன்றினை* UNESCO *நிறுவனத்துடன் கலந்து தயார் செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம், தன்னிச்சை நீதிப்பேராணை மனு எண் 574/2015-ல் இத்துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இதன்படியான கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டு மாண்பமை உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளது. பாதுகாத்தல் பணி செய்வதற்கு உகந்த வழிமுறைகள் வகுக்கும் வரையில் தேவையானதும், முக்கியமானதுமான பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக ஆலோசனைகள் வழங்கிட, 7 நபர்கள் கொண்ட ஒரு வல்லுநர் குழுவினை 7-11-2016 தேதிய உத்தரவின்படி உயர் நீதிமன்றம் அமைத்துள்ளது.*

88. அதன் பின்பு மத்திய மற்றும் மாநில தொல்லியல் துறைகளிலிருந்து 22 வல்லுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருப்பணி கருத்துருக்கள் பெறப்பட்டு வருகின்றன. குழு வல்லுநர்களின் அறிவுரைப்படி, தொன்மைமிக்க திருக்கோயில்களை பாதுகாத்தல், மரபு மாறாது புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொல்லியல் வல்லுநர்களிடமிருந்து கருத்துரைகள் பெறப்பட்ட பின்னர், 1-11-2016 தேதியில் அரசால் அமைக்கப்பட்டுள்ள மண்டல பரிசீலனை குழு மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி குழுக்களின் ஆலோசனைகளின்படியே திருக்கோயில்களின் உட்புறப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்

89. சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 50 திருக்கோயில்களின் பழைமையான சுவரோவியங்களை பழைமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

[2018 ஜூன் 13

இக்குழுவின் அறிவுரையின்படி கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் ரூ.81 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன. இதேபோல், இக்குழுவின் அறிவுரையைப் பெற்று திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் புனரமைக்கும் பணி ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவு பெற்றுள்ளது. இவை தவிர ரூ.64.10 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம், அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலில் சுவரோவியங்கள் பழைமை மாறாது புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் வெளிப்பிரகார சுவரில் 433 சதுர மீட்டரில் வரையப்பட்டுள்ள மூலிகை ஓவியம் பராமரிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது.

90. முதன்முதலாக சிமெண்ட் பூச்சின்கீழ் நாயக்கர் காலத்து சுவரோவியம் சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் புனரமைப்புப் பணியின்போது மே 2015-ல் கண்டறியப்பட்டுள்ளது.

திருக்குளங்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல்

91. இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில் 1,586 திருக்கோயில்களுக்கு 2,359 திருக்குளங்கள் உள்ளன. இவற்றில் 1,068 திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. 2011 முதல் 2018 வரை 835 திருக்குளங்கள் ரூ.4.14 கோடி செலவில் புனரமைப்பு செய்யப்பட்டன. எஞ்சிய திருக்குளங்களை சீரமைப்பு செய்ய தனியாக செயலாக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு பகுதி பகுதியாக பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன. 2017-2018 ஆம் ஆண்டில் மட்டும் 117 திருக்குளங்கள் ரூ.53 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டன. மழை நீர் சேகரிப்பு செயலாக்கத் திட்டத்தின்கீழ், 2014 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் 5,400 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் 1,004 திருக்குளங்களில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

92. திருக்குளங்களைப் பேணிப் பாதுகாத்திட பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- திருக்குளங்களின் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

- திருக்குளங்களைச் சுற்றி சுவர் அமைத்தல்.
- தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்.
- திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கும் உபரி நீர் வெளியேறுவதற்கும் வழி ஏற்படுத்துதல்.

பட்டயப் பொறியாளர்கள்

93. திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரித்து அளிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு கடந்த ஏழு ஆண்டுகளில் 13 பட்டயப் பொறியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் பொறியாளர்கள் மூலமாக திருக்கோயில்களைச் சீரமைப்பதற்குரிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஸ்தபதிகள்

94. சிற்ப சாஸ்திர மற்றும் ஆகம சாஸ்திர விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர் மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்தோர், சிற்ப சாஸ்திரக் கலையில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றுள்ளோர் ஆகியோர் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் ஸ்தபதிகளாகவும், சிற்பிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். 2011 முதல் 2016 வரை 539 ஸ்தபதி/சிற்பிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குடமுழுக்கு (கும்பாபிஷேகம்/சம்ப்ரோக்ஷணம்)

95. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் ஆகம விதிப்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையில் திருக்கோயில்கள் கீழ்க்காணுமாறு

[2018 ஜூன் 13

வகைப்படுத்தப்பட்டு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்படுகின்றன:

- ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடப் பெற்ற பழைமை வாய்ந்த திருக்கோயில்கள்.
- வரலாற்றுப் புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- கிராமப்புறங்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள்.5

96. 2011 முதல் 2018 வரை (31-3-2018 வரை) 10,566 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் 2017-2018 ஆம் நிதியாண்டில் 765 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன. இது திருப்பணி வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.

மரத் திருத்தேர்

97. இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள திருக்கோயில்களில் 809 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 989 மர திருத்தேர்கள் உள்ளன. 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதிமூலம் திருத்தேர்கள் திருப்பணிக்காக (பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்) ரூ.10.50 கோடி நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியிலிருந்து 2011-2018 ஆம் ஆண்டுகளில் 192 திருத்தேர்களின் திருப்பணிக்கு ரூ.23.58 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் 23 திருத்தேர்களுக்கு ரூ.12.33 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பொது நல நிதியிலிருந்து திருத்தேர் திருப்பணிக்கு ரூ.7.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.1.18 கோடியும், 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.83.85 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

தங்க ரதம் மற்றும் வெள்ளி ரதம் உள்ள திருக்கோயில்கள்

98. திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்க ரதத்திலோ, வெள்ளி ரதத்திலோ எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது.

99. தற்போது கீழ்க்காணும் 63 திருக்கோயில்களில் தங்க ரதமும், 49 திருக்கோயில்களில் வெள்ளி ரதமும் பயன்பாட்டில் உள்ளன:—

தங்க ரதம் உள்ள திருக்கோயில்கள்

வ. எண்	திருக்கோயில் பெயர்
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி
2.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை
3.	அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
6.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை
7.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில்
8.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர்
9.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்
10.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

வ. எண்	திருக்கோயில் பெயர்
11.	அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில்
12.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
13.	அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி (சப்பரம்)
14.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
15.	அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை
17.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு
19.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
20.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை
22.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி
23.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
24.	அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை
25.	அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு

வ. எண்	திருக்கோயில் பெயர்
26.	அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை
27.	அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி
28.	அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை
29.	அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம்
30.	அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
31.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர்
32.	அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர்
33.	அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர்
34.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல்
35.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல்
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம்
37.	அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி
38.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
39.	அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை
40.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்

வ. எண்	திருக்கோயில் பெயர்
41.	அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி
42.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
43.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம்
44.	அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை
45.	அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர்
46.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை
47.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்
48.	அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம்
49.	அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு
50.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம்
51.	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர்
52.	அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழில், திருநெல்வேலி
53.	அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்
54.	அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை

வ. எண்	திருக்கோயில் பெயர்
55.	அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம்
56.	அருள்மிகு பாலதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சுக்கிரவாரபேட்டை, கோயம்புத்தூர்
57.	அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், சிவகாசி நகர், விருதுநகர்
58.	அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோயில், தேரழுந்தூர், நாகப்பட்டினம்
59.	அருள்மிகு பூங்கா முருகன் திருக்கோயில், தல்லாகுளம், மதுரை
60.	அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், விருதுநகர்
61.	அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி (கேடகம் / சப்பரம்)
62.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருவப்பூர், புதுக்கோட்டை
63.	அருள்மிகு சௌந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம்.

வெள்ளி ரதம் உள்ள திருக்கோயில்கள்

வ. எண்	திருக்கோயில் பெயர்
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
3.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

வ. எண்	திருக்கோயில் பெயர்
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
5.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
7.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை
8.	அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம்
9.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்
10.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில்
11.	அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி
12.	அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை
13.	அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி
14.	அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை
15.	அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
16.	அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர்
17.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்

வ. எண்	திருக்கோயில் பெயர்
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்
19.	அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை
20.	அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி
21.	அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி
22.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்செவல்பட்டி
23.	அருள்மிகு கண்ணுடையநாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை
24.	அருள்மிகு கொப்புடையநாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி
25.	அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவகோட்டை
26.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம்
27.	அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு
28.	அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி
29.	அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயில், பவானி
30.	அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆய்க்குடி, திருநெல்வேலி
31.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம், திருச்சிராப்பள்ளி.
32.	அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி

வ. எண்	திருக்கோயில் பெயர்
33.	அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம்
34.	அருள்மிகு சௌந்திரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்
35.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம்
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம்
37.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர்
38.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை
39.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்கசாலை, சென்னை
40.	அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்
41.	அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், விராலிமலை, புதுக்கோட்டை
42.	அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், திருவண்ணாமலை
43.	அருள்மிகு சேவுகப் பெருமாள் திருக்கோயில், சிங்கம்புணரி, சிவகங்கை
44.	அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில், பாலாற்றங்கரை, வேலூர்
45.	அருள்மிகு நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம்

வ. எண்	திருக்கோயில் பெயர்
46.	அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில், சென்னை
47.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சைதாப்பேட்டை, சென்னை
48.	அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம் , புதுக்கோட்டை
49.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கோயில்கந்தன்குடி, திருவாரூர்.

V–பக்தர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

அடிப்படை வசதிகள்

குடிநீர் வசதி

100. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2011–2016 ஆம் ஆண்டுகளில் 145 திருக்கோயில்களில் தூய்மையான குடிநீர் வழங்க ரூ.3.70 கோடி செலவிடப்பட்டுள்ளது.

101. மேலும், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 4.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தெக்களூர் கிராமத்திலிருந்து ரூ.1.78 கோடி செலவில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்கு 9.5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானி சாகர் அருகிலுள்ள கொத்தமங்கலம் கிராமத்திலிருந்து ரூ.2.09 கோடி செலவில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

102. திண்டுக்கல் மாவட்டம், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்துவதற்காக பாலாற்றில் தடுப்பணை கட்டியும், உள் எடுப்பு கிணறு அமைத்தும் 2.31 MLD (Mollion litres perday) தண்ணீரை எடுத்து இத்திருக்கோயிலுக்கு பயன்படுத்தும் திட்டத்தினை ரூ.22.72 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வைப்பு பணியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

103. அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்துவதற்காக கள்ளந்திரி கிராமத்தில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் வைப்பு பணியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

நவீன கழிப்பிட வசதிகள்

104. திருக்கோயில்களுக்கு வருகை தரும் ஆடவர்க்கும் மகளிர்க்கும் தனித்தனியாக நவீன கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2011–2018–ல் 140 திருக்கோயில்களில் ரூ.20.50 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 2017–2018 ஆம் ஆண்டில் 1) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், 2) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், 3) தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களில் ரூ.2.64 கோடி செலவில் (4 பணிகள்) ஆடவர் மற்றும் மகளிர்க்கு தனித்தனி கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

தங்கும் வசதிகள்

105. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக முக்கிய திருக்கோயில்களில் குடில்கள், தங்கும் அறைகள், துயில் கூடங்கள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2017–2018 ஆம் ஆண்டு வரை 22 திருக்கோயில்களில் ரூ.62.29 கோடி மதிப்பீட்டில் தங்கும் கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டில் 1) ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் 2) சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்து

மாரியம்மன் திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களில் ரூ.0.95 கோடி மதிப்பீட்டில் துயில் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

106. இது தவிர, ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிதி பங்களிப்புடன் ரூ.47.09 கோடி மதிப்பீட்டில் ஒரே நேரத்தில் சுமார் 1000 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக குடில்கள், அறைகள், துயில் கூடங்கள், உணவகம் போன்ற வசதிகளுடன் கூடிய "யாத்ரி நிவாஸ்" ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 30–6–2014 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. திருவண்ணாமலை திருக்கோயிலில் ரூ.28 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணித் துறைமூலம் "யாத்ரி நிவாஸ்" கட்டப்பட்டு வருகிறது. இராமேஸ்வரம் திருக்கோயிலில் 500 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக ரூ.29 கோடி மதிப்பீட்டில் "யாத்ரி நிவாஸ்" பொதுப் பணித் துறைமூலம் கட்டப்பட்டு வருகிறது. ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலில் திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளின் வசதிக்கென 2 ஓய்வுக் கூடங்கள், 2 குடில்கள், அலுவலகம், தகவல் மையம், உணவருந்தும் கூடம் ஆகியன ரூ.6.71 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கட்டப்படவுள்ளது.

அன்னதானக் கூடம்

107. அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்களில் சேவார்த்திகளின் பயன்பாட்டிற்கென புதிய அன்னதானக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011–2018 ஆண்டுகளில் 86 திருக்கோயில்களில் 86 அன்னதானக் கூடங்கள் ரூ.25.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. 2017–2018 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் 8 திருக்கோயில்களில் அன்னதானக் கூடங்கள் ரூ.4.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

1) *அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயில், திருப்பைஞ்ஞீலி, திருச்சிராப்பள்ளி*

2) *அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயில், அவிநாசி, திருப்பூர்*

3) *அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சென்னிமலை, ஈரோடு*

4) அருள்மிகு மத்யபுரீஸ்வரர் திருக்கோயில், பரக்கலக்கோட்டை, தஞ்சாவூர்

5) அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில், மேலவீரராகவபுரம், திருநெல்வேலி

6) அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடையூர், நாகப்பட்டினம்

7) அருள்மிகு முல்லைவனநாத சுவாமி திருக்கோயில், திருக்கருக்காவூர், தஞ்சாவூர்

8) அருள்மிகு பரமநாத அய்யனார் திருக்கோயில், சூரக்கோட்டை, தஞ்சாவூர்

திருக்கோயில் வழிகாட்டி / தகவல் பலகைகள்

108. திருக்கோயில்களை எளிதில் சென்றடைவதற்கு ஏதுவாக முக்கிய சாலைகளில் திருக்கோயில் பெயருடன்கூடிய வழிகாட்டி பலகைகளும், அந்தந்த பகுதியில் அமைந்துள்ள அனைத்து திருக்கோயில்கள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள ஏதுவாக தொடர்வண்டி மற்றும் பேருந்து நிலையங்களில் தகவல் பலகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பக்தர்களுக்கு உயர்தர திருநீறு மற்றும் குங்குமம் வழங்குதல்

109. பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அபிஷேக விபூதி தயாரிக்கப்பட்டு வருகிறது. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ரூ.1 கோடி மதிப்பீட்டில் நவீன இயந்திரங்கள்மூலம் தரமான குங்குமம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது. 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமக பெருவிழாவில் இத்திருக்கோயில்களில் தயாரிக்கப்பட்ட குங்குமம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம்

110. தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மானசரோவர் மற்றும் முக்திநாத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள

வேண்டும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதன் அவசியத்தை கருத்தில் கொண்ட **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் சீனாவில் உள்ள மானசரோவர் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு ஒருமுறை ரூ.40,000/– வீதம் நிதியுதவியும், அதுபோன்று நேபாளத்திலுள்ள முக்திநாத் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு ஒரு முறை ரூ.10,000/– வீதம் நிதியுதவியும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் வசிக்கும் தலா 250 இந்து யாத்ரீகர்களுக்கு வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி 2012–2013 ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த 146 யாத்ரீகர்களுக்கு ரூ.58.40 இலட்சம் நிதியுதவியும், முக்திநாத் பயணம் முடித்து வந்த 10 யாத்ரீகர்களுக்கு ரூ.1 இலட்சம் நிதியுதவியும் வழங்கப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டிற்கு யாத்திரையை முடித்து வந்த பக்தர்களுக்கு ரூ.84.70 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில் பயணம் முடித்து வந்த யாத்ரீகர்களுக்கு ரூ.112.30 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த 51 யாத்ரீகர்களுக்கு ரூ.20.40 இலட்சம், முக்திநாத் பயணம் முடித்து வந்த 72 யாத்ரீகர்களுக்கு ரூ.7.20 இலட்சம் ஆக மொத்தம் ரூ.27.60 இலட்சம் வழங்கப்பட்டது. 2016–2017ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த 249 யாத்ரீகர்களுக்கு ரூ.99.60 இலட்சம், முக்திநாத் பயணம் முடித்து வந்த 136 யாத்ரீகர்களுக்கு ரூ.13.60 இலட்சம் ஆக மொத்தம் ரூ.113.20 இலட்சம் வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2017-2018 முதல் மேற்படி யாத்திரைகள் மேற்கொள்ளும் பயனாளிகளின் எண்ணிக்கை தலா 250 லிருந்து 500 ஆகவும், மொத்த நிதியுதவி ரூ.1.25 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

புடவை மற்றும் வேட்டிகள் வழங்குதல்

111. முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு, சுதந்திர தினத்தன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும் முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் பருத்திநூல் புடவை மற்றும் வேட்டிகள் வழங்கப்படுகின்றன. 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை 96,387 நபர்கள் பயனடைந்துள்ளனர். 2017-2018 ஆம் ஆண்டில் 40,085 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

[2018 ஜூன் 13

VI–திருக்கோயில்கள் தூய்மையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

உழவாரப் பணி

112. பாரம்பரியமிக்க வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கோயில்கள், வானளாவிய கோபுரங்களையும் அழகிய விமானங்களையும், மண்டபங்களையும் பெரிய மதிற்சுவர்களையும் உள்ளடக்கி உள்ளன. இவற்றை பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். இக்கட்டுமானங்களில் முளைத்துள்ள செடி, கொடி மற்றும் மரங்கள் கட்டுமானங்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கின்றன.

113. சமயக் குரவர்களில் ஒருவரான அப்பரடிகள் தொடங்கி செய்த உழவாரப் பணிக்கு புத்துயிர் அளித்திடும் வகையில் 2011–2012 ஆம் ஆண்டில் உழவாரப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு கடந்த ஏழு ஆண்டுகளில் 3382 திருக்கோயில்களில் உழவாரப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இப்பணிகள் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிமுகமைமூலம் தூய்மை பராமரிப்பு

114. திருக்கோயில்களைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் கருதி வெளிமுகமைமூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக 110 பெரிய திருக்கோயில்கள் சிறந்த முறையில் தூய்மையாக பராமரிக்கப்படுகின்றன. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இதர திருக்கோயில்களிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருக்கோயில் வளாகத்தில் நெகிழி (Plastic) பயன்பாட்டினை தடை செய்தல்

115. திருக்கோயில்களில் ஆரோக்கியமும் தூய்மையும் மிக்க சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் நெகிழி பயன்பாடு தடை செய்யப்பட்டு திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள அங்காடிகளில் அபிஷேக அர்ச்சனைப் பொருள்கள் மற்றும் பிரசாதப் பொருள்கள் ஆகியவை துணிப்பைகள், காகிதப்பைகள், மூங்கில் தட்டுகள், பாக்குமட்டைத் தட்டுகளில் வழங்கப்படுகின்றன.

மாற்று மின்திட்டம்

116. திருக்கோயில்களில் மின் செலவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், சூரிய சக்திமூலம் மாற்று மின்திட்டம் **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** *அவர்களால் 2012-2013 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் 10 கிலோ வாட் திறன் கொண்ட மாற்று மின் திட்டத்தால் மின்கட்டணப் பட்டியலில் ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– வரை சேமிப்பு ஏற்படுகிறது.*

VII–பாதுகாப்பு நடவடிக்கைகள்

திருக்கோயில்கள் பாதுகாப்பு

117. திருக்கோயில் வளாகங்களில் மின்னணு பாதுகாப்பு உபகரணங்களான கள்வர் எச்சரிக்கை மணி, மெட்டல் டிடெக்டர், நவீன ஒளிப்பதிவு (டிஜிட்டல் வீடியோ ரெக்கார்டர்), CCTV *கேமராக்கள் மற்றும் உறுதியான இரும்பு கதவுகள் போன்றவை பொறுத்தப்பட்டுள்ளன. வெளிமுகமைமூலம் பெரும்பாலான திருக்கோயில்களில் பகல் மற்றும் இரவுக் காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.*

சிலைகள் / உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு

118. திருக்கோயில்களுக்குச் சொந்தமான சிலைகள்/உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்தவைகளை பாதுகாத்திட உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள், பாதுகாப்பு அறைகள், களவு எச்சரிக்கை மணி பொருத்துதல், தொட்டிப் பூட்டு அமைப்பு ஏற்படுத்துதல், இரும்பு வாயிற்கதவுகள் பொருத்துதல், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் ஆகியன பொருத்துதல், பகல் மற்றும் இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகியன செய்யப்பட்டுள்ளன. மேலும், சிலைகள்/உலோகத் திருமேனிகள் பதிவு செய்வதற்கு ஏதுவாக ஆவணப்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்துறை 31,250 திருக்கோயில்களிலுள்ள 3,36,509 சிலைகள்/உலோகத் திருமேனிகளை படப்பதிவு செய்துள்ளது.

பாதுகாப்பு அறைகள்

119. 11,512 திருக்கோயில்கள் உலோகச் சிலை பாதுகாப்பு அறைகள் உள்ளன. பாதுகாப்பு அறைகள் தேவைப்படும் திருக்கோயில்கள் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு அறைகளில் CCTV, கள்வர் எச்சரிக்கை மணி, இரும்பு கிரில் கதவுகள், தொட்டி பூட்டு முறை மற்றும் பாதுகாப்பு காவலர்கள் ஆகிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம்

120. களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டத்தின்கீழ் ரூ.5 கோடி மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாயிலிருந்து களவு எச்சரிக்கை மணி பொருத்துவதற்கு நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் 75 விழுக்காடு இந்து சமய அறநிலையத் துறையின் மூலமும், எஞ்சிய 25 விழுக்காடு நன்கொடையாளர் பங்களிப்பு அல்லது திருக்கோயில் நிதி மூலமும் நிதியுதவி செய்திட இத்திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான திருக்கோயில்கள் கிராமப்புறங்களில் உள்ள நிதிவசதியற்ற திருக்கோயில்கள் என்பதையும், இத்திருக்கோயில்களில் விலை மதிப்புமிக்க உலோக விக்கிரகங்கள், நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் உள்ளதாலும் அவற்றைப் பாதுகாப்பது தலையாய கடமை என்பதையும் உணர்ந்து நிதிவசதியற்ற திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி பொருத்திட ஆகும் செலவினத் தொகை முழுவதையும் மேற்கண்ட மைய நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. 2011–2016 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 562 திருக்கோயில்களுக்கு ரூ. 71 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2016–2017 ஆம் ஆண்டில் 254 திருக்கோயில்களுக்கு ரூ.26,95,994/- நிதியுதவி வழங்கப்பட்டது. 2017–2018 ஆம் ஆண்டில் 32 திருக்கோயில்களுக்கு ரூ.3,63,200/– நிதியுதவி வழங்கப்பட்டது.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள்

121. திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் பொருட்டு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து

பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும் மீண்டும் இம்மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் முறையாக பூஜைகள் செய்யப்படுகின்றன.

122. பாதுகாப்பு அறைகள் கட்டுவதற்கு போதிய வருவாய் இல்லாத திருக்கோயில்களுக்கு சொந்தமான சிலைகள் மற்றும் விக்ரகங்களை பாதுகாப்பாக வைத்திட 34 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் கட்டப்பட்டுள்ளது. அவற்றில் 19 மையங்கள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றில் 8083 சிலைகள் / உலோகத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு மையங்களில் CCTV, கள்வர் எச்சரிக்கை மணி மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் விவரம்

1.	திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் வளாகம்)
2.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி
3.	அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
4.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
5.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர்
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
7.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்
8.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர்
9.	அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம்

10.	அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர்
11.	அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை
12.	அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை
13.	அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை
14.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்)
15.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
17.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான் கோட்டை, தருமபுரி
18.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம்
19.	அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர்

123. மேலும், கீழ்க்கண்ட 15 மையங்களில், உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும் பொருட்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகள் முடிந்துள்ளன. உலோகத் திருமேனி மையங்கள் திறம்பட செயல்பட பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்துவது குறித்த பணி நடவடிக்கையில் உள்ளது.

திருக்கோயில் பெயர் மற்றும் இடம்

1.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்
2.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர்

3.	அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர்.
4.	அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோவில், கன்னியாகுமரி
5.	இணை ஆணையர் அலுவலக வளாகம், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
6.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர்
7.	அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை, ஈரோடு
8.	அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி
9.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர்
10.	அருள்மிகு ஆலந்துறையார் (ம) கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர்
11.	அருள்மிகு காயாரோகணசுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம்.
12.	அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்.
13.	திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை.
14.	அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர், மயிலாடுதுறை
15.	அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில், திருவலஞ்சுழி, கும்பகோணம்

திருக்கோயில் பாதுகாப்புப் படை

124. திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், பொன், வெள்ளி ஆபரணங்கள், விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் உண்டியல்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக “திருக்கோயில்

பாதுகாப்புப்படை" என்ற ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள், 3000 முன்னாள் படைவீரர்கள் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்தது.

125. 2005–2006 ஆம் ஆண்டுகளில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 2751 முன்னாள் படை வீரர்களும் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்தனர். கடந்த 2006–2011 ஆம் ஆண்டுகளில் திருக்கோயில் பாதுகாப்பில் போதிய ஆர்வம் செலுத்தாததால் இந்த எண்ணிக்கை குறைந்து வந்ததை தடுக்கும் வகையில் திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் படை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாத தொகுப்பூதியம் 9–1–2012 முதல் ரூ.1,500/–லிருந்து ரூ.5000/- ஆக அரசு உயர்த்தியுள்ளது. தற்போது இப்பாதுகாப்புப் படையில் 266 காவலர்களும், 848 முன்னாள் இராணுவத்தினரும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

திருக்கோயில்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

126. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 12-2-2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் திருக்கோயில்களில் தீ விபத்து தடுப்பு மற்றும் இதர பேரிடர்கள் தவிர்க்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது. அவ்வறிவுரைகளின்படி முதற்கட்டமாக 47 முதுநிலைத் திருக்கோயில்களில் தீ தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன்படி கீழ்காணும் நடவடிக்கைகள் அத்திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட்டன:

- தீ தடுப்பு தணிக்கை மற்றும் தீ தடுப்பு ஒத்திகை ஆகியவை நடத்தப்பட்டது.
- தேவையான எண்ணிக்கைகளில் தீயணைப்பு கருவிகள், மணல்/தண்ணீர் வாளிகள், மின்தடை கருவிகள் போன்ற தீ தடுப்பு சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- தல விருட்சங்கள் மற்றும் திருக்கோயில் திருத்தேர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- திருக்கோயில் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- திருக்கோயில் வளாகத்திற்குள்ளேயும், திருக்கோயில் மதிற்சுவர் ஒட்டியுள்ள இடங்களிலும் உள்ள கடைகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து மின் தகுதிக்கான சான்று பெறப்பட்டு வருகிறது.
- அகல் விளக்குகள் ஏற்றுவதை தவிர்த்து அணையா விளக்கு நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

127. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, சேவார்த்திகளின் பாதுகாப்பிற்குத் தேவையான முன்னேற்பாடுகள் மேற்கொள்வதற்கும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களை காலமுறைப்படி ஆய்வு செய்வதற்கும், அனைத்து கட்டடங்களின் பராமரிப்புக்கான அட்டவணையை முறையாகப் பேணி பின்பற்றவும் தெரிவித்து இத்துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களின் உறுதித் தன்மை மற்றும் திருக்கோயில்களில் உள்ள மின் உபயோக உபகரணங்களின் தரம் ஆகியவற்றை சரிபார்த்து அதற்கான சான்றுகளை பெற்று வைத்திட இத்துறையின் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

VIII–கல்வி மற்றும் அறப்பணிகள்

கல்வி நிறுவனங்கள்

128. இறைப்பணியோடு ஆன்மிக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு சமயம் மற்றும் பொதுக்கல்வி பயிற்றுவிக்க பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் பேணி வருகின்றன:—

வ. எண்.	கல்வி நிறுவனங்கள்	எண்ணிக்கை
1.	கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்	5
2.	பல்தொழில்நுட்பக் கல்லூரி	1

வ. எண்.	கல்வி நிறுவனங்கள்	எண்ணிக்கை
3.	மேல்நிலைப் பள்ளிகள்	15
4.	உயர்நிலைப் பள்ளிகள்	8
5.	நடுநிலைப் பள்ளிகள்	2
6.	தொடக்கப் பள்ளிகள்	9
7.	மெட்ரிகுலேஷன் பள்ளி	1
8.	சி.பி.எஸ்.இ. பள்ளி	1
9.	நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள்	2
10.	வேத ஆகமப் பாடசாலைகள்	5
11.	ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்	2
12.	தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்	2
13.	காது கேளாதோர்–பேச இயலாதோர் பள்ளி	1
	கூடுதல்	54

கல்வி நிறுவனங்கள் விவரப் பட்டியல்

கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்

1.	அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்
2.	அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்
3.	ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி
4.	ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி
5.	பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம்

பல்தொழில்நுட்பக் கல்லூரி	
1.	அருள்மிகு பழநியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்
மேல்நிலைப் பள்ளிகள்	
1.	அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர்
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர்
3.	அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேல்நிலைப் பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர்
4.	அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப் பள்ளி, பேரூர், கோயம்புத்தூர்
5.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை
6.	அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை
7.	அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி
8.	தேவஸ்தான மேல்நிலைப் பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி
9.	ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.
10.	டி.வேணுகோபால் செட்டி மேல்நிலைப் பள்ளி, சென்னை
11.	இந்து மேல்நிலைப்பள்ளி, சென்னை
12.	அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம்

13.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்
14.	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேல்நிலைப் பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம்
15.	அருள்மிகு பராசக்தி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி
உயர்நிலைப் பள்ளிகள்	
1.	அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர்
2.	அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர்
3.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்
4.	அருள்மிகு சுந்தரராஜ உயர்நிலைப் பள்ளி, அழகர்கோயில், மதுரை
5.	தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி
6.	ஸ்ரீ திருஞான சம்பந்தர் உயர்நிலைப் பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம்
7.	அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப் பள்ளி, சென்னை
8.	தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, குழித்துறை, கன்னியாகுமரி
நடுநிலைப் பள்ளிகள்	
1.	திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம்
2.	திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம்

தொடக்கப் பள்ளிகள்	
1.	சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப் பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி
2.	சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில், திருநெல்வேலி
3.	ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்
4.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உதவி பெறும் தொடக்கப் பள்ளி, பழநி, திண்டுக்கல்
5.	திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப் பள்ளி, திருவிடைமருதூர், தஞ்சாவூர்
6.	திருஞான சம்பந்தர் தொடக்கப் பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம்
7.	அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப் பள்ளி, அழகர்கோவில், மதுரை
8.	அஞ்சுகம் தொடக்கப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை
9.	பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப் பள்ளி, ஓட்டேரி, சென்னை
மெட்ரிகுலேஷன் பள்ளி	
1.	பழநி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழநி, திண்டுக்கல்
சி.பி.எஸ்.இ. பள்ளி	
1.	பராசக்தி வித்யாலயா, குற்றாலம், திருநெல்வேலி
நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப்பயிற்சிப் பள்ளிகள்	
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்
2.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர்

[2018 ஜூன் 13

வேத ஆகமப் பாடசாலைகள்	
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி
3.	அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை
4.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.
5.	அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி
ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்	
1.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
2.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்	
1.	தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம்
2.	மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர்
காது கேளாதோர்–பேச இயலாதோர் பள்ளி	
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்

வேத ஆகம பாடசாலைகள்

129. திருக்கோயில்களின் பூஜை முறைகள், மந்திரங்கள் ஓதுதல், ஆகமங்கள் மற்றும் வேதங்கள் ஆகியவைகளை பயில விரும்புவோருக்கு "மயிலையே கயிலை" என போற்றப்படும் சென்னை, மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர்

திருக்கோயிலில் 2015-2016 ஆம் ஆண்டில் வேத ஆகம பாடசாலை துவங்கப்பட்டது. வைணவ ஆகமங்களுக்கு, "பூலோக வைகுண்டம்" என போற்றப்படும் திருச்சி, ஸ்ரீரங்கத்தில் உள்ள அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ஒன்றும், சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் மற்றொன்றும் மொத்தம் இரண்டு பாடசாலைகள் 2015-2016 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டன. மேற்கண்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது.

ஓதுவார் பயிற்சி பள்ளிகள்

130. 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவு கூட்டத் தொடரின்போது மாண்புமிகு இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட "மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ஓதுவார் பயிற்சி பள்ளிகள் துவங்கப்படும்" என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து 15-7-2013 அன்று மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலிலும், 18-8-2014 அன்று திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலிலும் ஓதுவார் பயிற்சி பள்ளிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

131. இப்பயிற்சி பள்ளியில் சேரும் மாணவர்கள் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 13 வயது நிரம்பி இருத்தல் வேண்டும். அதிகபட்சம் 20 வயதிற்கு மேற்படாமல் இருக்கவேண்டும் என்ற தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளனர். பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/-வீதம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

132. திருக்கோயில்களின்மூலம் நடத்தப்படும் ஓதுவார் பயிற்சி பள்ளியில் சேர்ந்து முறையாக தேர்ச்சி பெற்று சான்றிதழ் பெறும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் ஓதுவார் பணியிடங்களுக்குரிய காலியிடங்களில் அந்தந்த திருக்கோயில்களுக்குரிய காலமுறை ஊதிய விகிதம் அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

[2018 ஜூன் 13

கல்வி நிறுவனங்களுக்கு தரச்சான்று

133. பல்கலைக்கழக மானியக் குழுவின் தன்னாட்சி அமைப்பான தேசிய தர மதிப்பீட்டுக் குழு (NAAC) இந்து சமய அறநிலையத் துறையால் மேலாண்மை செய்யப்படும் 1) பழநி, அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி, 2) பழநி, அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, 3) குற்றாலம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளுக்கு ஒட்டு மொத்த சாதனைகள் மற்றும் சிறந்த செயல்பாடுகளுக்காக 'A' தரச்சான்று வழங்கியுள்ளது.

சமூக நல நிறுவனங்கள்

134. திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு அறநிலையங்களாகவும் செயல்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவமனைகள், மனநலக் காப்பகங்கள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியன திருக்கோயில்களால் நிர்வகிக்கப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு:—

வ. எண்.	சமூக நல நிறுவனங்கள்	எண்ணிக்கை
1.	கருணை இல்லங்கள்	33
2.	மனநலக் காப்பகம்	1
3.	முதியோர் இல்லங்கள்	2
4.	சித்த வைத்தியசாலைகள்	6
5.	ஆங்கில முறை மருத்துவமனைகள்	2
	கூடுதல்	44

கருணை இல்லங்கள்

135. இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஆதரவற்ற சிறுவர் மற்றும் சிறுமியருக்கு உணவு, இருப்பிடம், கல்வி ஆகிய உதவிகள் அளிக்கும் நோக்கத்துடன் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 30 திருக்கோயில்களில் 33 கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சிறுவர்

காப்பகங்கள் 22 மற்றும் சிறுமியர் காப்பகங்கள் 11 உள்ளன. கருணை இல்லங்களில் பயின்று +2 பள்ளிக் கல்வி முடித்து மேற்படிப்பு தொடரும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் முழுமையான கல்விக் கட்டண விலக்கும், இதர கல்வி நிறுவனங்களில் 50 சதவிகிதம் கல்விக் கட்டணம் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கவும் அரசால் 2012-2013-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி கடந்த 2012 முதல் 2018 ஆம் ஆண்டு வரை 159 மாணவ மாணவிகளுக்கு ரூ.8,30,382/- வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டிற்கு 36 மாணவர்களுக்கு ரூ.1,40,385/- நிதியுதவி வழங்கப்பட்டது.

136. 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரை கருணை இல்லங்களில் சிறுவர், சிறுமியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக ரூ.2.44 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.1.68 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில் 19 பணிகள் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. 2017-2018 ஆம் ஆண்டில் 6 பணிகள் ரூ.12.98 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

137. கருணை இல்லங்களின் செலவினத்தை ஈடுசெய்ய ஒவ்வொரு வருடமும் அரசு மானியம் வழங்கப்படுகிறது. கடந்த 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூ.1.99 கோடி நிதி அரசு மானியமாக பெறப்பட்டது.

கருணை இல்லங்கள் உள்ள திருக்கோயில்களின் விவரம்

1.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, திருவள்ளூர்
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர்
3.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்
4.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி
5.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை

6.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி
7.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம்
8.	அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை
9.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர்
10.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, ஈரோடு
11.	அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை
12.	அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர்
13.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை
14.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, தஞ்சாவூர்
15.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்
16.	அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில், தேக்கம்பட்டி, கோயம்புத்தூர்
17.	அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில், அய்யம்பாளையம், திருப்பூர்
18.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை
19.	அருள்மிகு வேங்கடாசலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், தஞ்சாவூர்
20.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர்
21.	அருள்மிகு மகுடேஸ்வரசுவாமி வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில், கொடுமுடி, ஈரோடு

22.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி, கோயம்புத்தூர்
23.	அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர்
24.	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர்
25.	அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை
26.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர்
27.	அருள்மிகு அடைக்கலம்காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளிம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை
28.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி
29.	அருள்மிகு முத்துக்குமார சுவாமி தேவஸ்தானம், சென்னை.
30.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், தாயமங்கலம், சிவகங்கை

மனநலக்காப்பகம்	
1.	அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், குணசீலம், திருச்சிராப்பள்ளி
முதியோர் இல்லங்கள்	
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை
சித்த மருத்துவமனைகள்	
1.	அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை.

[2018 ஜூன் 13

2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர்
3.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, திருவள்ளூர்
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை
5.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி
6.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம்
ஆங்கிலமுறை மருத்துவமனைகள்	
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்
2.	அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி, சிவகங்கை

பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்

138. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு ரூ.5 கோடியும், கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு ரூ.5 கோடியும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் மூலம் பெறப்பட்டு இரு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தேவையான கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்திட நிதியுதவி வழங்கப்படுகிறது.

139. 2011 முதல் 2016 வரை பள்ளி கல்வி நிறுவனங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு 223 பணிகளுக்கு ரூ.40.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில் 22 பணிகள் ரூ.3.64 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. 2017-2018 ஆம் ஆண்டில் 48 பணிகள் ரூ.8.27 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

கோசாலைகள்

140. திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழநி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் உள்ளன.

திருக்கோயில்களுக்கு உபயமாக பெறப்படும் உபரி கால்நடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகிறது. திருக்கோயில்களில் இருக்கும் கோசாலைகளை நல்ல முறையில் பேணுவதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

IX–திருக்கோயில்களும் தமிழும்

"போற்றி" நூல்கள்

141. ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் முனிவர்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் இறைவனை செந்தமிழால் போற்றி பாடி வணங்கியுள்ளனர். அவர்களால் பாடப்பட்ட தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகியவை தமிழ் மொழி மேன்மை அடைய முக்கிய பங்கு வகித்துள்ளன. சேவார்த்திகள் விருப்பப்படி தமிழில் பூஜை செய்வதை ஊக்குவிக்கவும், முறைப்படுத்தவும், தமிழில் "போற்றி" நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் புத்தாண்டு தின விழா

142. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தத்தால் நெடுங்காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை மரபு வழி வந்த முறைகளை மதித்து சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ் புத்தாண்டு கொண்டாடும் வழக்கம் 13.04.2012 அன்று திரும்பக் கொண்டுவரப்பட்டது. இதை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் கொண்டாடினர்.

143. தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் நாள் அன்று அனைத்து முக்கிய திருக்கோயில்களிலும் சிறப்பு பூஜை வழிபாடுகளும், சிறப்பு அன்னதானமும், சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும்

[*2018 ஜூன் 13*

நடத்தப்பட்டு வருகிறது. தமிழ் புத்தாண்டையொட்டி திருக்கோயில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது. அன்றைய தினம் திருக்கோயில்கள் வாழை, மாவிலைத் தோரணங்களுடன் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. பெருவாரியான பக்தர்கள் இப்புத்தாண்டு தினத்தில் திருக்கோயில்களுக்கு வருகை புரிந்து கொண்டாடி வருகின்றனர்.

பாவை விழா

144. ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி பாவை விழா மாவட்ட அளவில் மிக சிறப்பாக கொண்டாடப்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டு மாவட்ட அளவில் 32 மாவட்டங்களில் 7740 மாணவ மாணவியர் பங்கேற்புடன், 1552 மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாவை விழா வெகு சிறப்புடன் நடத்தப்பட்டது.

இசைவாணர்கள் நியமனம்

145. திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கள இசை இசைக்கப்படுவது வழக்கம். இவ்வழக்கம் திருக்கோயில்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருக்கோயில்களிலும், நாயன்மார்களால் பாடல்பெற்ற புகழ் வாய்ந்த தொன்மையான திருக்கோயில்களிலும், நாதஸ்வரம், தவில், தாள இசைவாணர்களை நியமனம் செய்து அவர்களுக்கு முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/- வீதம் மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ.1 கோடி முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகைமூலம் அவர்களுக்கு இவ்வூதியம் வழங்கப்படுகிறது.

X—அருளாளர்கள் விழா

சேக்கிழார் விழா

146. இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னை, குன்றத்தூரில் சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்கு இதற்கான

மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்ட் திங்கள்தோறும் 12 நாட்களுக்கு பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

திருஞானசம்பந்தர் இசை விழா

147. சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு பொதுநல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

ஔவையார் விழா

148. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

தாயுமானவர் விழா

149. தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில் இந்து சமய அறநிலையத் துறை சார்பாக தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

திருவள்ளுவர் திருநாள்

150. ஒவ்வொரு ஆண்டும் தைத் திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும் கருத்தரங்கங்களும், பட்டிமன்றங்களும் நடத்தப்படுகின்றன.

[2018 ஜூன் 13

அருணகிரிநாதர் விழா

151. அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ஆவணி மாதம், "கேட்டை" நட்சத்திரத்தன்று "முக்திப்பேறு விழா" ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கோச்செங்கட்சோழ நாயனார் விழா

152. அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், சதய நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் "கோச்செங்கட்சோழநாயனார் விழா" திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

ஆழ்வார்கள் விழா

153. பன்னிரு ஆழ்வார்களுக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் "ஆழ்வார்கள் விழா" சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

XI–வெளியீடுகள்

தல வரலாறு மற்றும் தலபுராணம்

154. திருக்கோயில்களின் தொன்மை, வரலாற்று முக்கியத்துவம், புராணங்கள், கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் தல வரலாறு நூல்களும், மேலும் சிறு திருக்கோயில்களுக்கும் அவற்றின் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்ள ஏதுவாக தகவல் அட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

பயணியர் மாவட்ட கையேடுகள்

155. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக, முக்கியமான நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து அனைத்து மாவட்டங்களுக்கும் தனித்தனியே பயணியர் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தகைய கையேடுகள் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில் கொண்டு இவை இந்து சமய அறநிலையத் துறை வலைதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

“திருக்கோயில்” திங்களிதழ்

156. இந்து சமய அறநிலையத் துறையால் 1958 ஆம் ஆண்டு முதல் “திருக்கோயில்” என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்படுகிறது. இந்த மாத இதழில் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள், துணுக்கு செய்திகள், ஆன்மிக சித்திர கதைகள் மற்றும் ஆன்மிக வினா விடைகள் என எழில்மிகு வண்ணங்களுடன் வெளியிடப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு முதல் இவ்விதழில் பக்கங்கள் கூடுதலாக்கப்பட்டு இணையதள இயங்கலையிலும் (Online) பார்த்து படித்து பயனடையும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்விதழைப் பெற்றுக் கொள்ள இயங்கலையிலேயே (Online) சந்தா செலுத்தி பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சமய நூல்கள் விற்பனை

157. தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம், 06.01.2017 முதல் 19.01.2017 வரை சென்னையில் புத்தகக் கண்காட்சி நடத்தியது. இதில் இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் முதன் முறையாக துறை வெளியீடுகளான மாவட்டக் கையேடுகள், இந்து மத இணைப்பு விளக்கம், சைவமும் வைணவமும், சைவ சமயக் களஞ்சியங்கள், திருக்கோயில் நாள்காட்டிகள், திருக்கோயில் தல வரலாறுகள் மற்றும் ‘திருக்கோயில்’ மாத இதழ்கள் ஆகியன விற்பனைக்கு வைக்கப்பட்டன. இத்திட்டம் ஆன்மிக அன்பர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து இணையதள இயங்கலை (Online) மூலமாக உரிய தொகையினைச் செலுத்தி ஆன்மிக அன்பர்கள் துறை மூலமாக வெளியிடப்படும் சமயநூல்களை எளிதாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆகம நூல்கள் மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல்

158. வடமொழி ஆகம சாத்திர நூல்களும், சிற்ப சாத்திர நூல்களும் தமிழர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. அந்தவகையில் “உத்ரகாமிக ஆகமம்”

மற்றும் "குமார தந்திரம்" ஆகிய நூல்கள் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. மேலும், "இந்து மத இணைப்பு விளக்கம்", "சைவமும் வைணவமும்" மற்றும் "ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்ப நூல்" ஆகிய தமிழ் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதுபோன்ற நூல்கள் தேவைக்கேற்ப மறுபதிப்பு செய்து வெளியிடப்படவுள்ளன.

XII–பயிற்சித் திட்டங்கள்

புத்தொளிப் பயிற்சி

159. திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் தங்கள் பணிகளைத் திறம்பட செய்திட ஏதுவாக 1991 ஆம் ஆண்டு "புத்தொளிப் பயிற்சித் திட்டம்" தொடங்கப்பட்டது. 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை இப்பயிற்சி அளிக்கப்படவில்லை. இப்பயிற்சியின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் பயன்பெறும் வகையில் ஆறு வார கால புத்தொளிப் பயிற்சி மீண்டும் தொடங்கப் பெற்று கடந்த 2011-2016 ஆம் ஆண்டுகளில் 8436 ஊழியர்கள் பயனடைந்தனர். 2016-2017 ஆம் ஆண்டில் 1524 அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் 2090 பணியாளர்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பொறியாளர்களுக்கு "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்னும் குறுகிய கால பயிற்சி

160. நாட்டில் முதல் முறையாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்ற தலைப்பில் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் திருக்கோயில்களைச் சேர்ந்த பொறியாளர்களுக்கு ஆறு வார குறுகியகாலப் பயிற்சியாக, முதற்கட்ட பயிற்சி 22 பொறியாளர்களுக்கு 3-12-2014 முதல் 13-1-2015 வரையும், இரண்டாம் கட்டமாக 22 பொறியாளர்களுக்கு 19-3-2015 முதல் 29-4-2015 வரையும் நடத்தப்பட்டது. மூன்றாம் கட்டமாக 8-9-2016 முதல் 19-10-2016 வரை பொறியாளர்கள், ஸ்தபதிகள் மற்றும் திருக்கோயிலில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்களையும் சேர்த்து மொத்தம் 40 நபர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு “பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு” என்னும் குறுகிய கால பயிற்சி

161. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் “பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு” என்ற இரு வார குறுகிய கால பயிற்சியினை திருக்கோயிலில் பணிபுரியும் செயல் அலுவலர்களுக்கு இரு கட்டங்களாக ஒரு அணிக்கு 25 செயல் அலுவலர்கள் வீதம் 6 அணிகளாக மொத்தம் 150 செயல் அலுவலர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

மனிதநேய பயிற்சி

162. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு கடந்த ஏழு ஆண்டுகளில் 22,558 ஊழியர்களுக்கு மனித நேயப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் 3275 திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும்.

சுயம்பாகிகள் (மடப்பள்ளி சமையற்காரர்கள்), அன்னதான சமையற்காரர்கள் மற்றும் பிரசாதக் கடை ஒப்பந்ததாரர்களுக்கான பயிற்சி

163. திருக்கோயில்களில் வழங்கப்படும் பிரசாதங்கள், அன்னதான உணவுகள் ஆகியவை தரமானதாகவும், சுகாதாரமாகவும் சேவார்த்திகளுக்கு வழங்கும் எண்ணத்தோடு மத்திய அரசு நிறுவனமான இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் (FSSAI) மூலம் சென்னை நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள திருக்கோயில்கள் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் மற்றும்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2018 ஜூன் 13

வைகுண்டப் பெருமாள் திருக்கோயில் மற்றும் வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பணியாற்றி வரும் சுயம்பாகிகள், அன்னதான சமையற்காரர்கள் மற்றும் பிரசாதக் கடை ஒப்பந்ததாரர்களுக்கு சென்னை, வடபழநி அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் 2 நாட்கள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இதில் 80 திருக்கோயில்களில் பணியாற்றி வரும் 142 நபர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

164. இதேபோன்று 1-9-2017 மற்றும் 2-9-2017 ஆகிய இரு நாட்களில் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் 10 பெரிய திருக்கோயில்கள் மற்றும் திருச்சியை சுற்றியுள்ள பல்வேறு திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், பரிச்சாரகர்கள், பிரசாத கடை ஒப்பந்ததாரர்கள், ஸ்டோர் எழுத்தர்கள் உட்பட 150 நபர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

165. மேலும், கடந்த 11-1-2018 அன்று புதுடெல்லியில் "இறைவழிபாட்டு தலங்களில் உணவு பாதுகாப்பு முறைகள்" (Blissful Hygienic Offering to God-BHOG) *என்ற தலைப்பில் நடைபெற்ற பயிலரங்கில் தலைமையிட கூடுதல் ஆணையர் (பொது) அவர்களுடன் திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் இணை ஆணையர் / செயல் அலுவலர்களும், சங்கரன்கோயில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் துணை ஆணையர் / செயல் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.*

திறன் மேம்பாட்டு பயிற்சி

166. தமிழக திருக்கோயில்கள் மனித வாழ்வின் எல்லா செயல்பாடுகளுக்குமான மையமாக தொன்று தொட்டு இருந்து வந்துள்ளன. திருக்கோயில்களுக்கும் பக்தர்களுக்கும் சேவையை வழங்குவோர் பலவகையினர் உள்ளனர். அவர்கள் உலோக சிற்பிகள், கைவினைஞர்கள், கட்டட வல்லுநர்கள், நெசவாளர்கள், பொற்கொல்லர்கள், அர்ச்சகர்கள், கிராமக்கோயில் பூசாரிகள், இசைவாணர்கள், நடனக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள்,

பூஜைப்பொருள் விற்பனையாளர்கள், பூமாலை கட்டி, நந்தவனம் காப்போர், பரிச்சாரகர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், சமய சொற்பொழிவாளர்கள் ஆவர். காலப்போக்கில் போதிய அளவு ஆதரவு இல்லாமல் போனதால் இவர்களில் பலரும் நலிவடைந்து அவர்களிடமிருந்த மதிப்புமிக்க திறன்களும் மறைந்து போகும் நிலையில் உள்ளன. இவர்களின் வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தி இவர்களுடைய திறன் வடிவமைப்பு, தொழில்நுட்பம் ஆகியவற்றை மேம்படுத்த ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி 2016-2017 ஆம் ஆண்டில் 2094 கிராமக்கோயில் பூசாரிகளுக்கு 11 இணை ஆணையர் மண்டலங்களில் ஒரு வார கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சியில் கலந்து கொண்ட ஒவ்வொரு பூசாரிக்கும் ஊக்கத் தொகையாக தலா ரூ.1000/- வழங்கப்பட்டது.

167. தவில், நாதஸ்வர கலைஞர்களுக்கு ஒரு மாத கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் பொருட்டு, பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பயிற்சி வகுப்புகள் 5 கட்டங்களாக நடைபெற்றது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலா ரூ.5000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

தமிழக திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி 13-2-2017 முதல் 10-3-2017 முடிய நான்கு வார கால பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் 1524 அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் கலந்து கொண்டுள்ளனர். இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலா ரூ.2000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. திருக்கோயில்களில் மாலைகட்டி, நந்தவனக் காப்பாளர் ஆகிய பணிகளில் பணியாற்றும் நபர்களுக்கு 20-3-2017 முதல் 24-3-2017 வரை மற்றும் 2-5-2017 முதல் 16-5-2017 வரை திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

திருக்கோயில்களில் பிரசாதம் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடும் பரிச்சாரகர், சுயம்பாக பணியாளர்கள் 221 நபர்களுக்கு ஒரு வார கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.1000 வழங்கப்பட்டது.

[2018 ஜூன் 13

கைவினைஞர்கள் உலோக சிற்பிகள் மற்றும் பூஜை பொருட்கள் தயாரிப்பாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் 3 மாத காலம் உரிய பயிற்சியாளர்கள்மூலம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தலா ரூ.5000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

XIII-திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்

நலத் திட்ட விவரங்கள்

168. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்கள் பல்வேறு வகையினத்தில் பணிபுரிகின்றனர். இவர்களது நலன் காத்திட ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:—

வ. எண்.	நலத் திட்ட விவரங்கள்
1.	குடும்ப நல நிதித் திட்டம்
2.	சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்
3.	மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்
4.	திருக்கோயில் பணியாளர் நல நிதித் திட்டம்
5.	கருணை அடிப்படையில் பணி நியமனம்
6.	தற்காலிக பணியாளர்கள் பணிவரன்முறை
7.	அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம்
8.	திருக்கோயிலில் பணிபுரியும் இதரப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
9.	திருக்கோயில் பணியாளரின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்

குடும்ப நல நிதித் திட்டம்

169. பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக “குடும்ப நல நிதித் திட்டம்” ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து

இதற்கென ரூ.15 கோடி மைய நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.1 இலட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2011-2012 முதல் 2016-2017 ஆம் ஆண்டுகளில் 375 வாரிசுதாரர்களுக்கு ரூ.3.70 கோடி வழங்கப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில் 49 வாரிசுதாரர்களுக்கு ரூ.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் 44 வாரிசுதாரர்களுக்கு ரூ.43.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

170. ரூ.1 இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் வரப்பெறும் திருக்கோயில் பணியாளர்களின் நலனுக்காக "சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தைக் கொண்டு மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு திருக்கோயில் பணியாளரும் ஓய்வு பெறும்போது அவரது பணி நாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன், இத்திட்டத்தின்மூலம் கிடைக்கும் வட்டி தொகையிலிருந்து பணிக்கொடை ரூ.5,000/-மும் சேர்த்து வழங்கப்படுகிறது. 2011-2012 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை 695 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ரூ.32.03 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 2016-2017 ஆம் ஆண்டில் மட்டும் 102 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ரூ.5.10 இலட்சம் வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டுக்கு 26 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ரூ.1.30 இலட்சம் வழங்கப்பட்டது.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

171. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் திருக்கோயில் பணியாளர்களில் ரூ.72,000/-க்கும் அதிகமாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-2012-ன்கீழ் பயன்பெற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்த திட்டத்தின்மூலம் 3847 திருக்கோயில் பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

[2018 ஜூன் 13

2013 ஆம் ஆண்டில் ரூ.72,000/- மற்றும் அதற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்மூலம் 10391 திருக்கோயில் பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

திருக்கோயில் பணியாளர் நல நிதித் திட்டம்

172. ஆண்டு வருவாய் ரூ.1 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ.750/-க்கும் குறைவாக மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடி மூலதன நிதியுடன் "திருக்கோயில் பணியாளர் நல நிதித் திட்டம்" செயல்படுகிறது. இந்த மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மேற்கண்ட திருக்கோயில் பணியாளர்களின் சம்பள நிலுவைத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2011-2012 முதல் 2016-2017 வரை 7747 திருக்கோயில்களில் பணிபுரியும் 9781 பணியாளர்களுக்கு ரூ.5.43 கோடி சம்பள நிலுவை வழங்கப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டு 1926 திருக்கோயில்களில் பணிபுரியும் 2499 பணியாளர்களுக்கு ரூ.1.67 கோடி சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டு 1647 திருக்கோயில்களில் பணிபுரியும் 2014 பணியாளர்களுக்கு ரூ.1.52 கோடி சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் பணி நியமனம்

173. திருக்கோயில்களில் பணியாற்றும்போது, இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு "கருணை அடிப்படையில் பணி நியமனம்" செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் 133 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டன. 2017-2018 ஆம் ஆண்டில் 9 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டன.

தற்காலிகப் பணியாளர்கள் பணிவரன்முறை

174. திருக்கோயில்களில் தற்காலிகமாக தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் 31-7-2014 தேதியில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பணியாற்றி வந்த 2217 பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம்

175. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு நிதியிலிருந்து இந்து சமய அறநிலையத் துறைமூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/- ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

176. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.750/- மாத ஓய்வூதியத்தை ரூ.1000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 364 ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

திருக்கோயிலில் பணிபுரியும் இதரப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

177. திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(i) பணியாளர் சேமநல நிதித் திட்டம்

178. நிதி வசதிமிக்க திருக்கோயிலில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். திருக்கோயில் பணியாளர்களில் ஓய்வு பெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு, பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின்மூலம் 01.03.2006 முதல் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2018 ஜூன் 13

(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்

179. நிதி வசதி குறைவாக உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் (1-3-2006) ஓய்வு பெற பத்து ஆண்டிற்குக்கீழ் பணிக்காலம் உள்ளவர்களுக்கும், பணியாளர் சேம நல நிதித் திட்டத்தில் சேரும் அளவு நிதி வசதியில்லாத திருக்கோயில்களில் உள்ளவர்களுக்கும் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

180. இந்த துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் அளிப்பதற்கு ஏதுவாக, நிதி வசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.50 கோடி உபரி நிதியினைப் பெற்று மூலதன நிதி உருவாக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஓய்வு பெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ.1000/- வழங்கப்பட்டது. பின்னர் ஓய்வூதியம் ரூ.1000/-லிருந்து ரூ.2000/- ஆக 1-10-2016 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென மேலும் ரூ.15 கோடி உபரி நிதி முதுநிலை திருக்கோயில்களிலிருந்து பெறப்பட்டு மூலதன நிதி உயர்த்தப்பட்டுள்ளது.

181. 2017-2018 ஆம் நிதியாண்டில் 51 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு இத்திட்டத்தின்படி ஓய்வூதியம் பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் இதுவரை மொத்தம் 4581 பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

182. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 1996 ஆம் ஆண்டிற்கு முன்னர் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் இத்துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 67 ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

திருக்கோயில் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்

183. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பு பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை நிதியுதவியாக வழங்க இத்திட்டம் வழிவகை செய்கிறது.

XIV–கிராமக்கோயில் பூசாரிகள் நலத் திட்டங்கள்

கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

184. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராம திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்குக் "கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்" உருவாக்கப்பட்டு அதன் மூலமாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

கிராமக் கோயில் பூசாரிகளுக்கு தனி வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் இயங்கலை (Online) *மூலம் உறுப்பினர் பதிவுகள் மேற்கொண்டு அடையாள அட்டைகள் பெற இயலும்.*

கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

185. இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத்தை 22.11.2013 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.750/-லிருந்து ரூ.1000/- ஆக உயர்வு செய்து வழங்க மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன் மூலமாக இதுவரை 3205 கிராமக் கோயில் பூசாரிகள் பயன்பெற்றுள்ளனர்.

XV–ஸ்ரீராமானுஜர் ஆயிரமாவது அவதாரத் திருவிழா

186. ஸ்ரீராமானுஜர் ஆயிரமாவது அவதாரத் திருவிழா 21.04.2017 முதல் 01.05.2017 முடிய ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் மற்றும் பாஷ்யகாரசுவாமி திருக்கோயிலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாட்டில், இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள 84 திவ்ய தேச திருக்கோயில்களிலும் இதர வைணவ திருக்கோயில்களிலும் இவ்விழா நடத்தப்பட்டது.

187. இத்திருவிழாவில் கலை நிகழ்ச்சிகள், ஆன்மீக சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள், கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் ஆகியவை நடத்தப்பட்டன. ஸ்ரீராமானுஜரின் வரலாற்று ஆவணப்படம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியையும் இந்து சமய அறநிலையத் துறை வெளியிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9-5-2017 அன்று ஸ்ரீராமானுஜரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய "வைணவ மாநிதி" என்ற தலைப்பிலான படங்களுடன்கூடிய மும்மொழி நூலினை வெளியிட்டார். ஸ்ரீராமானுஜரின் ஆயிரமாவது அவதார திருவிழாவினை முன்னிட்டு இந்திய அஞ்சல் துறை சார்பாக ஸ்ரீராமானுஜர் சிறப்பு அஞ்சல்தலை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் புதுடில்லியில் 1-5-2017 அன்று வெளியிடப்பட்டது.

XVI–துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகள் கணினிமயமாக்குதல்

188. திருக்கோயில் சேவார்த்திகள் வசதிக்காக சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் திருக்கோயில் நிருவாகம் மேம்படுத்தவும், ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வலை முகப்பு (Integrated Temple Management System) தயாரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்ட விலை மதிப்பற்ற உலோக விக்கிரகங்கள், கற்சிலைகள் மற்றும் நிலம், கட்டடம் போன்ற அசையா சொத்துக்கள் பற்றிய அனைத்து விவரங்களும் கணினிமயமாக்கப்பட்டு திருக்கோயில்களுக்கான தகவல் தொகுப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. திருக்கோயில் சொத்துக்களின் அமைவிடங்கள் புவியியல் தகவல் முறைமை (Geographic Information System) மூலம் எளிதாக அறியும் வகையில் வரைபடங்களில் குறிப்பிடுதல், புவியிடங்காட்டி (Global Postioning System) மூலம் திருக்கோயில் சொத்துக்கள் முறையாக அளவை செய்து ஆவணப்படுத்துதல், திருக்கோயில்களில் இணையதள சேவைமூலம் அறை ஒதுக்கீடு, தங்கத்தேர், அன்னதான நன்கொடை போன்ற சேவைகள் ஆகியன வலைதளம் மூலமாகவும், கைபேசி குறுஞ்செயலி மூலமாகவும் பெறுவதற்கு வசதியாக மென்பொருள் தயாரிக்கப்பட்டு வருகிறது. மின் ஆளுமை குறித்து அனைத்து துறை மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மின் ஆளுமை பணி ஒரு பகுதியாக இத்துறை அலுவலகங்கள் மற்றும் திருக்கோயில்களுக்கு தேவையான சாதனங்கள் மற்றும் இணையதள வசதிகள் வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த திருக்கோயில் மேலாண்மை அமைப்பினை (ITMS-Integrated Temple Management System) தேசிய தகவல் மையம் (NIC) மூலம் உருவாக்கப்பட்டு வருகிறது.

XVII–விருதுகள்

189. 1959 ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் நோக்கங்களை முறையாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு துறை செயல்பட்டு வருகிறது. இதில் முதன்மையாக திருக்கோயில்களின் பாதுகாப்பு, பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய திருப்பணி மற்றும் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பாதுகாப்பு, சேவார்த்திகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது. இதற்கும் மேலாக, ஒவ்வொரு திருக்கோயில் தொடர்புடைய சமயம் மற்றும் கலாச்சார வழக்கங்களை பாதுகாத்தும் வருகிறது. இதனை அங்கீகரித்து கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறந்த நிருவாகத்தை உறுதிப்படுத்தும் தரமான சேவை மேம்பாட்டுக்கான “சிறந்த நடைமுறைகள் விருது” மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 15-8-2015 அன்று திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டது.

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலை தூய்மையான புனித தலமாக தேர்வு செய்து 2-10-2017 அன்று ‘தூய்மை இந்தியா’ (Swachh Bhatrat) விருது இந்திய அரசால் வழங்கப்பட்டது.

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு, பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்கான 2017 UNESCO Asia-Pacific Heritage Award of Merit for Conservation விருது 24-1-2018 அன்று வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறைமூலம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் அனைத்து இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்படும் அறநிலையத் துறை அரங்கிற்கு ஆண்டுதோறும் முதல் இடமும் சிறப்பு அந்தஸ்திற்கான விருதும் பெறப்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டிற்கான சிறப்பு அந்தஸ்த்திற்கான விருதையும் இத்துறை வென்றுள்ளது.

[2018 ஜூன் 13

நிறைவுரை

"அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்

விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றார்போல்..."

—திருவெம்பாவை

என்னும் திருவெம்பாவை வரிகளுக்கேற்ப இறைவனின் பேரொளி பிழம்பிற்கு முன்னால் எல்லோரும் சமம். மக்களுக்காக நாம்; மக்களால் நாம் எனும் தாரகமந்திரத்திற்கேற்ப சேவார்த்திகளின் நலனுக்காக இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இத்துறை திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காகவும், திருக்கோயில்களின் சொத்துக்கள் மற்றும் உயர்ந்த பாரம்பரியங்களை பாதுகாக்கவும் தொடர்ந்து பணியாற்றும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

(*590 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2018-2019

முகவுரை

விளையாட்டு வாழ்வின் பல முக்கிய அம்சங்களை மேம்படுத்த உதவுகிறது. இது அனைவரின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு முக்கியமானதாகும். இது உடலியக்கம் மற்றும் நோய் எதிர்ப்பு அமைப்பை வலுவூட்டி, மனவலிமையை மேம்படுத்தி, வலுவான குணநலனைக் கட்டமைக்கிறது.

விளையாட்டு ஒரு மனிதனை ஒழுக்கத்துடனும், ஆரோக்கியமாகவும், ஆக்கத்திறனுடனும் உருவாக்கி வாழ்வில் எந்த கடினமான சூழ்நிலையையும் எளிதில் எதிர்கொள்ளும் ஆற்றலையும் வழங்குகிறது. விளையாட்டு, குழுவாகப் பணியாற்றும் திறனை வளர்த்து அவர்களுக்கு தலைமைப் பண்புகளை வழங்குகிறது.

உடற்தகுதி

உடற்தகுதியானது உடல் மற்றும் மனத்தின் தகுதியை உள்ளடக்குகிறது. பணி மற்றும் ஓய்வு நேர செயல்பாடுகளைத் திறம்படவும் ஆக்கப்பூர்வமாகவும் செய்வதற்கு ஆரோக்கியமான உடலைப் பெற்றிருப்பதே உடற்தகுதியாகும். மனத்தகுதியினை அடைய ஆரோக்கியமான உடல் உதவுகிறது. ஒட்டுமொத்தமாக உடற்தகுதி மகிழ்ச்சியான வெற்றிகரமான வாழ்க்கையை வாழ நமக்கு உதவுகிறது. இது தனி மனிதனின் ஆயுட்காலத்தை நீட்டிப்பதுடன் சமமான மனநிலையை பெறவும் உதவுகிறது. உடல் மற்றும் மனத்தகுதியுடைய மக்கள் நோயுறும் வாய்ப்புகள் குறைவு.

உடற்கல்வியியல்

ஒரு குழந்தையின் ஒட்டுமொத்த கல்வியில் உடற்கல்வியியல் ஒரு முக்கியக் கூறாகும். உடற்கல்வியியல் மக்களின் வாழ்க்கையில் விளையாட்டு மற்றும் உடற்தகுதியின் பலன்களை கொண்டு வருகிறது. உடற்கல்வியியல்மூலம் ஒரு குழந்தை சுய ஒழுக்கம்,

திறன், தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதை போன்ற பண்புகளை உள்ளீர்த்துக் கொள்கிறது.

எனவே, சிறந்த உடற்கல்வியியல் அமைப்பானது நமது குழந்தைகளுக்கும், சமுதாயத்திற்கும் பிரகாசமான எதிர்காலத்தை பறைசாற்றுகிறது.

இளைஞர் நலன்

இளைஞர்கள் நாளைய தலைவர்களாக மட்டுமல்லாமல் இன்றைய முன்னேற்றத்தின் முக்கியப் பங்காளர்கள் ஆவர். சமூகத்தில் மாற்றம் மற்றும் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதில் இளைஞர்கள் முக்கிய பங்காற்றி வருகின்றனர். தேச மேம்பாட்டில் அவர்கள் முக்கிய பகுதியாவர்.

எனவே, இளைஞர்களது மேம்பாட்டினை முறையாக வழிப்படுத்துதல் அவசியமானதாகும். இளைஞர்கள் ஆரோக்கியமாகவும், ஒழுக்கமாகவும், திறன்பெற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான உயர்ந்த தொலைநோக்கை தேசம் கொண்டிருக்கும்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையானது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது:

1. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
2. தேசிய மாணவர் படை
3. நாட்டு நலப்பணித் திட்டம்
4. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக பணியாற்றுவதுடன், விளையாட்டு தொடர்பான அரசின் வெவ்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்துகிறது.

தேசிய மாணவர் படையானது திறன், தன்னம்பிக்கை, உடற்தகுதி, ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வை இளைஞர்களுக்கு பயிற்றுவித்து கட்டமைக்கிறது.


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நாட்டு நலப்பணித் திட்டம் இளைஞர்களை சமூக சேவையின் பாதையில் இட்டுச் செல்வதுடன் சமூகத்தின் தேவையுள்ள பிரிவினரை நோக்கிய பொறுப்புணர்வை அவர்களுக்குள் விதைக்கிறது.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், விளையாட்டு மற்றும் உடற்கல்வியியலின் தரத்தினையும், கல்வியினையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது.

நேரு யுவ கேந்தரா சங்கதன் மத்திய அரசின்கீழ் உள்ள ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனமானது சமூக மேம்பாட்டில் இளைஞர்களில் தன்னார்வம் உடையவர்களைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

தமிழக அரசு விளையாட்டிற்கும் இளைஞர் நலனுக்கும் சிறந்த முக்கியத்துவத்தை வழங்கி வருகிறது. விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டிற்கு பல புதுமைத் திட்டங்களை அரசு துவக்கியுள்ளது. இத்துறையின் நிதி ஒதுக்கீடானது சீராக அதிகரித்து 2018-2019-ல் உயர்ந்த அளவாக ரூ.191.17 கோடியை எட்டியுள்ளது.



[2018 ஜூன் 13

இந்த நிதி ஒதுக்கீட்டில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ரூ.124.52 கோடியும், தேசிய மாணவர் படைக்கு ரூ.49.83 கோடியும், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கு ரூ.14.71 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

படலம்–1

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இளைய சமுதாயத்தினரின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் விளையாட்டு என்பது ஒரு முக்கிய அம்சமாகும். விளையாட்டு நடவடிக்கைகள் உடல், மன மற்றும் உணர்வுகளின் வளர்ச்சியை மேம்படுத்தி இளைஞர்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு துணை நின்று ஆக்கபூர்வமாக ஈடுபடுவதை உறுதி செய்கிறது. விளையாட்டுகளில் பங்கேற்பது இளைஞர்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு உதவக்கூடிய போட்டித் திறன், நேர மேலாண்மை, அமைப்புத் திறன்கள் மற்றும் குழுவாக செயல்படுதல் போன்ற நற்பண்புகளை வளர்க்கிறது. விளையாட்டில் முதன்மை நிலை மற்றும் சாதனை இளைஞர்களிடையே தன்னம்பிக்கையையும், பெருமிதத்தையும் ஏற்படுத்தும்.

விளையாட்டு செயல்பாடுகளில் இளைஞர்களது ஆற்றல், விருப்பத்தைக் கண்டறிந்து ஒருமுகப்படுத்த தமிழக அரசால் அரசாணை எண் 641, கல்வித் (ஒய்-1) துறை, நாள் 18-7-1992மூலம் அப்போதைய விளையாட்டு மற்றும் இளைஞர் சேவைத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு மேம்பாட்டு கழகம் ஆகியவற்றை இணைத்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆணையத்தின் தலைவராவார். மக்கள் உயர்மட்ட அளவிலான போட்டிகளில் செயலாற்றவும் அவர்கள் தங்கள் விளையாட்டு ஆர்வத்தினையும், திறனையும் முழுமையாக வெளிப்படுத்த ஏதுவாக தமிழ்நாடு ஒரு முன்னோடி விளையாட்டு மையமாக உருவாவதே அதன் நோக்கத்தின் உறுதியான நம்பிக்கையாகும்.

தமிழ்நாட்டில், விளையாட்டிற்கான உயர் அமைப்பு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகும். இவ்வாணையம், தமிழ்நாடு அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலக் கொள்கை முடிவுகளை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில்

வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் ஆரோக்கியமான போட்டி சூழலை ஏற்படுத்துதல் ஆகியவைகள்மூலம் உறுதியான விளையாட்டு கலாச்சாரத்தை ஏற்படுத்தி அதன்மூலம் இளைய சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முனைப்புடன் செயல்படுகிறது. பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும், பொது தனியார் பங்களிப்பை ஊக்கப்படுத்தியும் இவ்வாணையம் விளையாட்டில் ஈடுபடும் இளைஞர்களிடையே உடற்தகுதி, திறன் கண்டறிதல், ஆரோக்கியமான போட்டிச் சூழல் மற்றும் சகோதரத்துவம் ஆகியவைகளை மேம்படுத்துகிறது.

1.1 நோக்கங்கள்

தமிழ்நாட்டில் விளையாட்டின் பங்கேற்பையும், முதன்மை நிலையையும் மேம்படுத்தி உயர்த்துவதற்கு ஆற்றல் மிக்க, திறமை வாய்ந்த, தலைசிறந்த அமைப்புகளை உருவாக்குவது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நோக்கமாகும்.

இதன் முக்கிய குறிக்கோள்களாவன—

1. தமிழகத்தில் விளையாட்டை ஊக்குவித்து மேம்படுத்துதல், விளையாட்டை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல் மற்றும் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளின் தரத்தை உயர்த்துதல்.

2. மாநிலத்தில் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், அவைகளின் தரத்தை மேம்படுத்தவும் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களை செயல்படுத்துதல்.

3. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்களை தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகரமாக பங்கேற்கச் செய்தல்.

4. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மென்மேலும் உயர்ந்த அளவில் சாதனைகள் அடைய, பல்வேறு ஊக்க உதவித் தொகை மற்றும் விருதுகளை அளித்து ஊக்குவித்தல்.

5. மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை திட்டமிட்டு மேம்படுத்துதல்.

[*2018 ஜூன் 13*

6. *விளையாட்டு மேம்பாடு தொடர்பான ஆராய்ச்சிகளைத் துவக்கி, மேற்கொண்டு, ஆதரவு தந்து, ஊக்குவித்து உற்சாகமளித்தல் மற்றும் விளையாட்டு தொடர்பான மருத்துவம், உயிர் வேதியியல், உளவியல் மற்றும் அதைச் சார்ந்த இதர அறிவியல் துறைகளை மேம்படுத்துதல்.*

7. *மாற்றுத் திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அங்கீகரித்து, விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளில் பங்கேற்க வசதி செய்தல்.*

8. *மாநிலத்தில் வீர சாகச விளையாட்டுகளை ஊக்குவிக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.*

9. *விளையாட்டு நிறுவனங்கள் நிறுவி, நடத்தி, மேற்பார்வை மற்றும் நிருவாகம் செய்தல்.*


10. *பல்வேறு விளையாட்டுகள் மற்றும் போட்டி விளையாட்டுகளுக்கு மேம்பட்ட பயிற்சியளித்தல்.*

11. *பொதுமக்களிடையே உடற்பயிற்சியின் அவசியத்தை உணரச் செய்வதன்மூலம் விளையாட்டு மற்றும் ஆரோக்கியத்தின்மீது கவனம் கொள்ளச் செய்து, அவர்களை விளையாட்டில் தொடர்ந்து ஈடுபடச் செய்வதன்மூலம் தமிழ்நாட்டை ஆரோக்கியமான மற்றும் வலிமையான மாநிலமாக உருவாக்குதல்.*

உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு கட்டமைப்புகள், பயிற்சி வசதிகள், தீவிர போட்டிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய ஊக்க தொகை மற்றும் நிதி உதவி ஆகியவைகளின்மூலம் தமிழ்நாடு, விளையாட்டினை ஊக்குவிப்பதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக விளங்குவதில் பெருமை கொள்கிறது.

1.2 செயல்திட்டம் மற்றும் உத்தி

அரசின் கொள்கை, தமிழ்நாட்டினை தனது முயற்சியால் முழு அளவில் விளையாட்டினை மேம்படுத்துவதை இலட்சியமாகக் கொண்டுள்ளது. விளையாட்டில் உயர்நிலையை அடைய ஏதுவாக தெளிவாக வரையறுக்கப்பட்ட பிரமிடு முறையிலான ஐந்து வெவ்வேறு நிலைகள் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகின்றன.



நிலை-1 : மக்கள் திரள் பங்கேற்பு மற்றும் பரந்த அடித்தளம்

இளம் வயதில் விளையாட்டில் மிகச் சிறந்து விளங்கும் திறனாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு பயிற்சி மற்றும் இதர உதவிகளை அளிப்பதற்காக "உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டம்" என்ற ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் விளையாட்டில், திரள் பங்கேற்பையும் முதன்மை நிலையை அடையவும், சமூக ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதியை மேம்படுத்தவும் விழைகிறது.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக 6, 7 மற்றும் 8-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களுடைய வேகம், வலிமை, உறுதிப்பாடு, சுறுசுறுப்பு மற்றும் அதிக ஆற்றல் போன்ற இயக்கப் பண்புகளைக் கண்டறியவும், குறிப்பிட்ட விளையாட்டில் அவர்களது தகுதியினைக் கண்டறியவும் எதிர்காலத்தில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாக அவர்களது வளரும் திறன்களைக் கணிக்கவும் உடற்கூறு தேர்வுகள் நடத்தப்படுவது அவசியமாகும்.

விளையாட்டு செயல்பாடுகளில் இளைஞர்களின் பங்கேற்பினை மேம்படுத்தவும் அடிப்படை நிலையிலிருந்து பொதுமக்களை ஊக்கப்படுத்தவும் தீவிர மற்றும் நீடித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வட்டார அளவில் திரள் பங்கேற்புக்காக

விளையாட்டுப் போட்டிகள் நடத்த மாவட்ட அளவில் சிறு விளையாட்டரங்கம் மற்றும் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் கொண்ட பைக்கா மையங்கள், கிராம / வட்டார அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராம மக்களில் திரளானவர்களை விளையாட்டில் ஈடுபடச் செய்வதை ஊக்குவிக்கும் வண்ணம் 12,524 கிராம பஞ்சாயத்துகளில் ஆண்கள், பெண்கள் இருபாலரும் கலந்து கொள்ளும் கிராம விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

நிலை-2 : மாவட்ட அளவு

விளையாட்டை மேம்படுத்துவதற்கு, மாவட்டங்களில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது அவசியமாகும்.

மாவட்ட அளவில் விளையாட்டில் இளைஞர்கள் முதன்மை நிலையை அடைவதை உறுதி செய்வதற்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறை ஆகியவைகளால் பல்வேறு வயது பிரிவினரிடையே பல்வேறு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட மிகச் சிறந்த விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் கொள்கையினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. திருப்பூர் மற்றும் வேலூர் நீங்கலாக ஏனைய மாவட்டத் தலைநகரங்களில் 400 மீ. தடகள ஓடுபாதை மற்றும் கால்பந்து மைதானம் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 27 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.பல்நோக்கு உள்விளையாட்டரங்கங்கள், ஆடுகளம் மற்றும் அதன் தொடர்புடைய வசதிகள் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலை-3: மாநில அளவு

விளையாட்டு வீரர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் உயர் நிலையை அடையச் செய்ய, மாநில அளவில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் உள்ள வெவ்வேறு மாவட்டங்களில் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளுக்கு உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் உள்ளன. இது தவிர,

மாநிலத்திலுள்ள விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

நிலை-4 மற்றும் நிலை-5: தேசிய மற்றும் பன்னாட்டு அளவு

ஆரம்ப நிலையில் எடுக்கும் சீரிய முயற்சிகள், விளையாட்டு வீரர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் உயர்நிலையை அடையச் செய்யும். தீவிர பயிற்சி, விளையாட்டு கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு சங்கங்களுக்கான நிதியுதவி அளித்தல் மூலம் தமிழக விளையாட்டு வீரர்கள் பலர் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் மிகச் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

1.3 ஊக்க தொகை மற்றும் உதவித் தொகைகள்

பல்வேறு நிலைகளில், பல்வேறு பிரிவுகளில், தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழக அரசானது உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழக விளையாட்டு வீரர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வெல்லும் தமிழக வீரர் மாநில அரசிடமிருந்து ரூ.2.00 கோடி உயரிய ஊக்கத் தொகையாக பெறுவர். மிகச் சிறந்த விளையாட்டு வீரர்கள் அவர்களின் திறனை மேலும் மேம்படுத்தி பல்வேறு பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்ல ஏதுவாக ஒரு ஆண்டுக்கு / ஒரு விளையாட்டு வீரருக்கு ரூ.25.00 இலட்சம் அளவிற்குத் தேவை அடிப்படையிலான சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 முதல் 15 வரை ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் நடைபெற்ற 21-வது காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற கீழ்க்கண்ட தமிழக வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டன.

பெயர்	விளையாட்டுப் பிரிவு	பதக்கம்	அரசால் வழங்கப் பட்ட உயரிய ஊக்கத் தொகை
திரு. எஸ். சதீஷ் குமார்	பளுதூக்குதல்	தங்கம்	ரூ.50 லட்சம்
திரு. ஏ. சரத் கமல்	மேசைப்பந்து	தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம்	ரூ.1 கோடி
திரு. ஜி. சத்யன்	மேசைப்பந்து	தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம்	ரூ.1 கோடி
திரு. அ. அமல்ராஜ்	மேசைப்பந்து	தங்கம்	ரூ.50 லட்சம்
திரு. சவுரவ் கோஷல்	ஸ்குவாஷ்	வெள்ளி	ரூ.30 லட்சம்
திருமதி. தீபிகா கார்த்திக்	ஸ்குவாஷ்	2 வெள்ளி	ரூ.60 லட்சம்
செல்வி. ஜோஸ்னா சின்னப்பா	ஸ்குவாஷ்	வெள்ளி	ரூ.30 லட்சம்

அவர்களது பயிற்சியாளர்களுக்கும் உயரிய ஊக்கத் தொகையாக ரூ.63.00 இலட்சம் வழங்கப்பட்டது.

21-வது காமன்வெல்த் போட்டிகள் 2018-ல் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் அவர்களது பயிற்றுநர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக மொத்தம் ரூ.4.83 கோடி வழங்கப்பட்டது.

படலம்-2

திறன் கண்டறிதல்

தமிழ்நாட்டில் வெற்றியாளர்களை உருவாக்குவதில் முக்கிய செயல்முறையான திறன் கண்டறிதல் அடிமட்ட அளவிலிருந்து சிறந்த திறனாளர்களைக் கண்டறிகிறது. விளையாட்டை மேம்படுத்தவும் உயரிய அளவில் பதக்கங்களை வெல்லவும் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1. *உலக திறனாளர்கள் கண்டறியும் திட்டம்*
2. *விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு*
3. *சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு*
4. *முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் சேர்வதற்கான தேர்வு*

2.1 உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டம் (WBTSS)

2.1.1 உடற்திறன் தேர்வுப் போட்டிகள்

தமிழக அரசு உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டம் என்ற புதுமைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்து பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் விளையாட்டு செயல்பாடுகளில் மறைந்துள்ள திறன்களைக் கண்டறியவும், அவர்களது திறமையை வெளிக்கொணரவும், இயக்கத்திறனைக் கண்டறியவும் உடற்கூறு திறன் தேர்வுகள் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

இத்திட்டம், கீழ்க்கண்ட கூறுகளின் தொடர்ச்சியான செயல்முறைகளை உள்ளடக்கியது:

i) *திறன் கண்டறிதல்*

ii) *கண்டறியப்பட்ட திறனாளர்களை அவர்களது இயக்கத் திறன்களின் அடிப்படையில் சிறப்பு அகாடமிகளில் சேர்த்து வளர்த்தெடுத்தல்*

iii) *போட்டிகளில் பங்கேற்றல்*

திறமையாளர்களை கண்டறிதல்

முதல் கட்டமாக, பள்ளி அளவில் நடத்தப்படும் உடற்கூறு திறன் தேர்வுகள் திறன் வாய்ந்த குழந்தைகளைக் கண்டறிய உதவுகின்றன. திறனாளர்களைக் கண்டறியும் பணியானது, தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் பள்ளிக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயக்கத்திறனைக் கண்டறிவதற்கான கீழ்க்காணும் உடற்கூறுத் திறன் தேர்வுகள் உதவுகின்றன.

1. 50 மீ. ஓட்டம்
2. சிறுமியர்களுக்கான 600 மீ. ஓட்டம்
3. சிறுவர்களுக்கான 800 மீ. ஓட்டம்
4. 4 கிலோ குண்டு எறிதல்
5. நீளம் தாண்டுதல்
6. 6x10 மீ. ஓடி திரும்புதல்

பள்ளிகளில் நடத்தப்படும் உடற்கூறுத் திறன் தேர்வுகளில் 10-க்கு 10, 9 அல்லது 8 மதிப்பெண்கள் பெறும் சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களுக்கு கல்வி மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்துவது இத்திட்டத்தின் அடுத்த கட்டமாகும். மண்டல அளவிலான போட்டிகள் 9 இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும் ஏப்ரல், மே மாதங்களில் முதல் பத்து வெற்றியாளர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு அகாடமிகளில் சேர்வதற்கான தேர்வில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அவர்கள் முதன்மை நிலையை அடைவதற்கு சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு. சிறப்பு மற்றும் முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது.

பள்ளிப் பொறுப்பாளர்கள் தேர்வுகளை நடத்தி, அதன் முடிவுகளை சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்களுக்கு அனுப்புவர்.

2.1.2 இளம் திறனாளர்களுக்கான உதவித் தொகைத் திட்டம்

சிறப்பு உதவித்தொகையாக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வழங்கப்படுகிறது. இவ்வாறு, ஒவ்வொரு வருடமும் 3240 இளம் திறனாளர்களுக்கு வருடம் ஒன்றிற்கு தலா ரூ.6,000/- ஒப்பளிக்கப்படுகிறது. 2017—18 ஆம் ஆண்டிற்கு ரூ.194.40 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2.2 கல்வி மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் திறனாளர்களைக் கண்டறிதல்

மாநிலம் முழுவதும் 67 கல்வி மாவட்டங்களில், தடகள போட்டிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்துகின்றது. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், ஏறத்தாழ 500 சிறுவர் மற்றும் சிறுமியர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். இப்போட்டியில், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் முதல் இரண்டு இடங்களைப் பெறுபவர்கள் அருகே உள்ள கல்வி மாவட்டங்களை உள்ளடக்கிய, மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு மண்டல அளவிலான போட்டியிலும் கண்டறியப்படும் சிறந்த திறனாளர்களுக்கு 5 நாட்கள் இருப்பிடமில்லா பயிற்சி முகாம், அதனைத் தொடர்ந்து 15 நாட்களுக்கான இருப்பிட தீவிர பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் தேர்வு செய்யப்படும் சிறந்த திறனாளர்கள் தொடர் பயிற்சிக்காக சிறப்பு அகாடமிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுகிறார்கள்.

2.3 விளையாட்டு விடுதிக்கான தேர்வு (இரண்டு நிலை)

விளையாட்டுத் திறனை ஒட்டுமொத்தமாக மேம்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த பயிற்சி முறையை வடிவமைப்பதன் அவசியத்தை விளையாட்டு விடுதிகள் வலியுறுத்துகின்றன. இப்பயிற்சித் திட்டம் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

7, 8, 9 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் மாவட்ட மற்றும் மாநில அளவிலான தேர்வுகளின் மூலம் விளையாட்டு விடுதிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இந்த விளையாட்டு விடுதிகளில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவ மாணவியருக்கு சத்தான உணவு, விளையாட்டுச்

[2018 ஜூன் 13

சீருடை, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம் நவீன விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் போட்டிகளில் பங்கேற்றிட உதவி அளிக்கப்படுகிறது. 27 விளையாட்டு விடுதிகளில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை 1975 ஆகும்.

2.4 ஆண்கள் / பெண்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதிக்கான தேர்வு

மூன்று சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகளில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் பெறத்தக்க திறமை வாய்ந்த கல்லூரி மாணவர்கள் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் ஆண்டுதோறும் சேர்க்கப்படுகின்றனர். ஆண்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் முறையே 80 மற்றும் 30 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பெண்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி, சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் 60 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது.

2.5 முதன்மை நிலை விளையாட்டு மையத்திற்கான தேர்வு

முதன்மை நிலை விளையாட்டு விடுதியில் 10 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் மாநில அளவில் நடைபெறும் தேர்வில் வல்லுநர்கள் குழுவினால் தேர்வு செய்யப்பட்டு சேர்க்கப்படுகின்றனர். இந்த முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு அறிவியல்பூர்வமான பயிற்சி, சத்தான உணவு, விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோட்டில் முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் உள்ளன.

படலம்–3

திறன் மேம்பாடு

திறனை மதிப்பிடுதல் திறன் மேம்பாட்டிற்கு முதல்படியாக அமைகிறது. முறையான திறன் மேம்பாடு தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதக்கங்களை வென்றிட வழிவகுக்கும்.

மாநிலத்திலுள்ள திறனாளர்களை மேம்படுத்த அரசு பல்வேறு முயற்சிகளை செயல்படுத்தி வருகிறது. அவையாவன, முதன்மை நிலை விளையாட்டு மையம், சிறப்பு அகாடமிகள், விளையாட்டு விடுதிகள், கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், சிறப்பு மேம்பாட்டு மையங்கள், பயிற்சி மையங்கள் மற்றும் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

3.1 முதன்மை நிலை விளையாட்டு மையம்

10 முதல் 14 வயதுடைய 25 சிறுவர்கள் மற்றும் 25 சிறுமியர்களைக் கொண்டு சென்னையில் முதன்மை நிலை விளையாட்டு மையம் நிறுவப்பட்டது. முதன்மை நிலை விளையாட்டு மையம் விளையாட்டு வீரர்களின் செயல் திறனை மேம்படுத்த முறையான அறிவியல்பூர்வமான பயிற்சி, ஊட்டச் சத்தான உணவு மற்றும் தேவையான வசதிகளை வழங்குகிறது. மாணவர்கள் சிறந்த பள்ளிகளில் கல்வியைத் தொடரவும் முதன்மை நிலை விளையாட்டு மையம் உதவுகிறது. மாநிலத்தில் 5 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைந்துள்ள இடம்	விளையாட்டுப் பிரிவு	எண்ணிக்கை (நபர்கள்)
1.	ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (சிறுவர்கள்)	தடகளம்	25
		இறகுப்பந்து	
2.	நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை (சிறுமியர்)	தடகளம்	25
		இறகுப்பந்து	
3.	திருச்சிராப்பள்ளி (சிறுவர்கள்)	இறகுப்பந்து	25
		டேக்வாண்டோ	

[2018 ஜூன் 13

4.	திருநெல்வேலி (சிறுவர்கள்)	குத்துச்சண்டை	25
		நீச்சல்	
		டென்னிஸ்	
		ஜிம்னாஸ்டிக்ஸ்	
5.	ஈரோடு (சிறுமியர்)	நீச்சல்	25
		ஜிம்னாஸ்டிக்ஸ்	
		டென்னிஸ்	

3.2 சிறப்பு விளையாட்டு அகாடமிகள்

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் சிறப்பு விளையாட்டு அகாடமிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த அகாடமிகளில், உலக திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்படும் உடற்திறன் தகுதி தேர்வுகளில் 10—க்கு 10, 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் மட்டும் வல்லுநர்கள் குழுவால் நடத்தப்படும் தேர்வுப் போட்டிகள் மூலம் அவர்களது திறன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்கள் மற்றும் பன்னாட்டு வீரர்கள்மூலம் சம்பந்தப்பட்ட விளையாட்டு பிரிவுகளில் அறிவியல்பூர்வமான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த அகாடமிகளில் பயிற்சி முகாம் நடத்துவதற்கு அரசு ரூ.80.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

பின்வரும் சிறப்பு அகாடமிகள் செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	அகாடமி பெயர்	இடம்
1.	மித தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி. (சிறுவர் மற்றும் சிறுமியர்)— தடகளம்	மதுரை

வ. எண்	அகாடமி பெயர்	இடம்
2.	சிறுவர் மற்றும் சிறுமியருக்கான எறிதல் அகாடமி– தடகளம்	இராமநாதபுரம்
3.	மித தூர அகாடமி– தடகளம்	திருவண்ணாமலை
4.	நீள்தூர அகாடமி– தடகளம்	திருவண்ணாமலை
5.	டைவிங் அகாடமி (சிறுவர் மற்றும் சிறுமியர்)– நீச்சல்	தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் குள வளாகம், சென்னை.
6.	சிறுவர் மற்றும் சிறுமியருக்கான வளைகோல்பந்து அகாடமி	மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை
7.	சிறுவர்களுக்கான கால்பந்து அகாடமி	நாகப்பட்டினம்
8.	சிறுமியர்களுக்கான கால்பந்து அகாடமி	திண்டுக்கல்
9.	மேசைப்பந்து அகாடமி	சென்னை, முகப்பேர்
10.	மேசைப்பந்து அகாடமி	ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை.

இந்த அகாடமிகள் பல்வேறு இடங்களில் பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சித் திட்டங்களை நடத்துகின்றன. இந்த அகாடமிகள் பள்ளிக் காலாண்டு, அரையாண்டு மற்றும் முழு ஆண்டு விடுமுறை நாட்களில் பயிற்சி முகாம்களைமுறையாக நடத்தி வருகின்றன. இந்த சிறப்பு அகாடமிகள் ஏற்படுத்திய பிறகு, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் அதிக திறன்மிக்க விளையாட்டு வீரர்கள், மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

சிறப்புப் பயிற்சி தவிர, விளையாட்டு வீரர்கள் பயிற்சி செய்யும் இடத்தில் முறையான உடற்பயிற்சி மேற்கொள்ள ஆலோசனை, மன நலத்திற்கான அறிவுரைகள், பயிற்சி பட்டறைகள் நடத்துதல், சத்தான உணவு குறித்த அறிவுரை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. மேலும், விளையாட்டு உபகரணங்கள் (ஒரு ஜோடி காலணிகள், டி—சர்ட், டிராக் சூட், உபகரணங்களுக்கான பை, அன்றாட நிகழ்வுகளை குறிப்பெடுப்பதற்கான கையேடு முதலியன) வழங்கப்படுவதுடன் அனுபவம் வாய்ந்த சிறந்த பயிற்றுநர்களால் முடிவுகளை அளிக்கக்கூடிய அறிவியல் ரீதியான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

3.2.1 இறகுப்பந்து அகாடமி

இருப்பிடம் அல்லாத இறகுப்பந்து அகாடமி திருச்சி, கடலூர், தருமபுரி, மதுரை மற்றும் சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு ஆண்டு தோறும் ரூ.70.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. வல்லுநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, 16 வயதிற்குட்பட்ட, பயிற்சி பெறும் 15 திறன் வாய்ந்த பயிற்சி பெறுபவர்களுக்கு 25 நாட்களுக்கு அறிவியல் ரீதியான பயிற்சியுடன் சிற்றுண்டியும் பயணப்படியும் வழங்கப்படுகின்றன. இறகுப்பந்து விளையாட்டில் சிறந்து விளங்க பயிற்சி பெறுபவர்களின் செயல்திறன் வல்லுநர் குழுவால் கண்காணிக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

3.2.2 விளையாட்டு விடுதிகள்

2011–2012 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில், 13 விளையாட்டு விடுதிகள், 860 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வந்தன. அவ்விளையாட்டு விடுதிகள் மதுரை, திருநெல்வேலி, சென்னை (4), கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, ஈரோடு (2) மற்றும் கடலூர் (என்.எல்.சி) ஆகிய இடங்களில் அமைந்திருந்தன.

2011–2012 ஆம் ஆண்டில், அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு விடுதிகள் படிப்படியாக துவக்க அரசு தீர்மானித்தது. அதற்கேற்ப, முதற்கட்டமாக, 5 விளையாட்டு விடுதிகள் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2012–2013 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக, 6 விளையாட்டு விடுதிகள், விடுதி ஒன்றுக்கு தலா 60 மாணவர்கள் வீதம் நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் தேனி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. அது போன்று, 2015–2016 ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டமாக, விடுதி ஒன்றுக்கு 60 மாணவர்கள் வீதம் இராமநாதபுரம், நீலகிரி, விழுப்புரம், புதுக்கோட்டை மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் 5 விளையாட்டு விடுதிகள் நிறுவப்பட்டன.

தற்போது, மாநிலத்தில் செயல்பட்டு வரும் 27 விளையாட்டு விடுதிகளில் 16 விளையாட்டு விடுதிகள் சிறுவர்களுக்கும், 9 விளையாட்டு விடுதிகள் சிறுமியர்களுக்கும் மற்றும் 2 விளையாட்டு விடுதிகள் சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கானதாகும். நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.250/– வீதம் உணவுப்படி அரசு ஒப்பளித்துள்ளது. மேலும், ஊட்டச் சத்து நிபுணர்களின் அறிவுரைகளின்படி, விடுதியில் உள்ள மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மாணவருக்கும் விளையாட்டுச் சீருடைகளுக்காக ரூ.1,800/–, விளையாட்டு உபகரணங்களுக்காக ரூ.400/– மற்றும் சேவைக் கட்டணமாக ரூ.300/– வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் விளையாட்டு விடுதிகள் உள்ளன.

வ. எண்	விளையாட்டு விடுதியின் பெயர்	பயிற்றுவிக்கும் விளையாட்டு பிரிவு
1.	என்.எல்.சி விளையாட்டு விடுதி, நெய்வேலி (சிறுவர்கள்)	தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து
2.	விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டு அரங்கம், திருச்சிராப்பள்ளி (சிறுவர்கள்)	தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், கையுந்துபந்து மற்றும் குத்துச்சண்டை
3.	விளையாட்டு விடுதி, ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், மதுரை (சிறுவர்கள்)	தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கையுந்துபந்து, வளைகோல்பந்து மற்றும் மேசைப்பந்து

வ. எண்	விளையாட்டு விடுதியின் பெயர்	பயிற்றுவிக்கும் விளையாட்டு பிரிவு
4.	விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டு அரங்கம், திருநெல்வேலி (சிறுவர்கள்)	தடகளம், வளைகோல்பந்து, கால்பந்து, நீச்சல், கையுந்துபந்து, கூடைப்பந்து மற்றும் டென்னிஸ்
5.	விளையாட்டு விடுதி, வ.உ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு (சிறுமியர்)	தடகளம், கால்பந்து, கையுந்துபந்து மற்றும் நீச்சல்
6.	விளையாட்டு விடுதி (சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள்), செல்வம் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல்	தடகளம் (சிறுமியர்), வாள்சண்டை (சிறுவர் மற்றும் சிறுமியர்) மற்றும் வில்வித்தை (சிறுவர்)
7.	விளையாட்டு விடுதி, அரசு மேல்நிலைப்பள்ளி, புதூர், சென்னை	மட்டைப் பந்து
8.	விளையாட்டு விடுதி, திருவண்ணாமலை (சிறுமியர்)	தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து மற்றும் வளைகோல்பந்து
9.	விளையாட்டு விடுதி, கிருஷ்ணகிரி (சிறுவர்)	தடகளம், கைப்பந்து, டேக்வாண்டோ மற்றும் கால்பந்து
10.	விளையாட்டு விடுதி, நேரு உள்விளையாட்டரங்கம், சென்னை (சிறுமியர்)	கையுந்துபந்து, டென்னிஸ், வாள்சண்டை, குத்துச்சண்டை மற்றும் ஜூடோ
11.	விளையாட்டு விடுதி, கோயம்புத்தூர் (சிறுவர்)	தடகளம், கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் கையுந்துபந்து
12.	விளையாட்டு விடுதி, கடலூர் (சிறுவர்)	இறகுப்பந்து, தடகளம் மற்றும் டேக்வாண்டோ

வ. எண்	விளையாட்டு விடுதியின் பெயர்	பயிற்றுவிக்கும் விளையாட்டு பிரிவு
13.	விளையாட்டு விடுதி, தஞ்சாவூர் (சிறுவர்)	கூடைப்பந்து, பளுதூக்குதல் மற்றும் கையுந்துபந்து
14.	விளையாட்டு விடுதி, திண்டுக்கல் (சிறுமியர்)	தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து
15.	விளையாட்டு விடுதி, நாகர்கோவில் (சிறுமியர்)	தடகளம், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்
16.	விளையாட்டு விடுதி, சிவகங்கை (சிறுவர்)	தடகளம் மற்றும் கால்பந்து
17.	விளையாட்டு விடுதி, தூத்துக்குடி (சிறுவர்)	தடகளம், கூடைப்பந்து, கால்பந்து மற்றும் ஸ்குவாஷ்
18.	விளையாட்டு விடுதி, நாமக்கல் (சிறுமியர்)	கால்பந்து மற்றும் கபாடி
19.	விளையாட்டு விடுதி, பெரம்பலூர் (சிறுமியர்)	தடகளம், கைப்பந்து மற்றும் டேக்வோண்டா
20.	விளையாட்டு விடுதி, அரியலூர் (சிறுவர்)	வளைகோல்பந்து, கைப்பந்து மற்றும் பளுதூக்குதல்
21.	விளையாட்டு விடுதி, தேனி (சிறுவர்)	கூடைப்பந்து மற்றும் கபாடி
	விளையாட்டு விடுதி, தேனி (சிறுமியர்)	கையுந்துபந்து
22.	விளையாட்டு விடுதி, (சிறுவர்), இராமநாதபுரம்	வளைகோல்பந்து மற்றும் மட்டைப்பந்து
23.	விளையாட்டு விடுதி, உதகமண்டலம் (சிறுவர்)	கால்பந்து, தடகளம்
24.	விளையாட்டு விடுதி, விழுப்புரம் (சிறுவர்)	கபாடி, கைப்பந்து மற்றும் நீச்சல்
25.	விளையாட்டு விடுதி, புதுக்கோட்டை (சிறுமியர்)	தடகளம், பளுதூக்குதல் மற்றும் வளைகோல்பந்து

வ. எண்	விளையாட்டு விடுதியின் பெயர்	பயிற்றுவிக்கும் விளையாட்டு பிரிவு
26.	விளையாட்டு விடுதி, தருமபுரி (சிறுமியர்)	இறகுபந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து
27.	விளையாட்டு விடுதி, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (சிறுவர்)	வாள்சண்டை, குத்துச்சண்டை மற்றும் ஜூடோ

இந்த விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1975 ஆகும்.

3.2.3 ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள்

சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்கானது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் முறையே சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கிலும், நேரு உள்விளையாட்டரங்கிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகள் நவீன உத்திகளின் அடிப்படையிலான பயிற்சியும், சத்தான உணவும் வழங்குகின்றன. விடுதிகள் குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு

வ. எண்	விடுதி	விளையாட்டு பிரிவு	எண்ணிக்கை	மொத்தம்
1.	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (ஆண்கள்)	தடகளம்	15	80
		கூடைப்பந்து	24	
		குத்துச் சண்டை	10	
		கையுந்துபந்து	18	
		ஜூடோ	6	
		வாள் சண்டை	2	
		பளு தூக்குதல்	2	
		இறகுப்பந்து	2	
		துப்பாக்கிச் சுடுதல்	1	

வ. எண்	விடுதி	விளையாட்டு பிரிவு	எண்ணிக்கை	மொத்தம்
2.	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் (ஆண்கள்)	வளை கோல்பந்து	30	30
3.	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி, நேரு உள் விளையாட்ட ரங்கம், சென்னை (பெண்கள்)	தடகளம்	15	60
		கால்பந்து	18	
		கையுந்து பந்து	18	
		குத்துச் சண்டை	3	
		ஜுடோ	3	
		பளு தூக்குதல்	3	
			மொத்தம்	**170**

3.3 இணை விளையாட்டு மேம்பாட்டு மையம்

சிறந்த விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் உள்ள கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில, தென்மண்டல / அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகள், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் சிறப்பாகச் செயல்படும் மாணவர்களுக்கு ரூ.6,000/- வழங்கப்படுகிறது.

3.4 சிறப்பு மேம்பாட்டு மையம்

உடற்கூறுத் தகுதிகள், காயத் தடுப்பு முறை மற்றும் மேலாண்மை, ஊட்டசத்து உணவு வழிமுறைகள், நுணுக்கங்கள், தந்திரோபாயங்கள் மற்றும் விளையாட்டு உளவியல் ஆகியவற்றை முன்னிறுத்தி வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் பளுதூக்கும்

[2018 ஜூன் 13

சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையம் 1997-ல் நிறுவப்பட்டது. இம்மையத்தில், 30 ஆண்கள் மற்றும் 12 பெண்கள் பயிற்சி பெற இயலும். இம்மையத்தை சிறப்பாக நடத்துவதற்கு ரூ.7.89 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இம்மையத்தால் பல சர்வதேச பளுதூக்கும் வீரர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். 2014 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டி மற்றும் 2018 ஆம் ஆண்டு கோல்ட் கோஸ்ட், ஆஸ்திரேலியா நாட்டில் நடைபெற்ற 21-வது காமன்வெல்த் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றவரும், 2016 ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் நமது தேசத்தின் சார்பாக கலந்து கொண்டவருமான திரு.எஸ். சதீஷ்குமார் அவர்கள் இம்மையத்தில் பயிற்சி பெற்றவர் ஆவார். பளுதூக்குதலுக்கான முதன்மை நிலை விளையாட்டு மைய புதிய கட்டிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 13.03.2018 அன்று திறக்கப்பட்டது.

வளைகோல்பந்து மற்றும் கூடைப்பந்து விளையாட்டிற்காக முறையே தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினத்தில் சிறப்பு மேம்பாட்டு மையங்கள் தலா 30 மாணவர்களைக் கொண்டு நிறுவப்பட்டன. ஒவ்வொரு மையத்திற்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3.5 பயிற்சி மையங்கள்

3.5.1 நீச்சல்குளங்கள்-நீச்சல் கற்றுக்கொள் திட்டம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அனைத்து நீச்சல் குளங்களிலும் 'நீச்சல் கற்றுக்கொள்' திட்டம் ஆண்டு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் கோடைகாலமான ஏப்ரல் முதல் ஜுன் மாதம் வரை பிரத்யேகமாக மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இத்திட்டம் குழு வாரியாக நடத்தப்படுகிறது. மாநிலம் முழுவதிலுமுள்ள 29 நீச்சல் குளங்களில் நாளொன்றுக்கு 1 மணி நேரம் வீதம் நடத்தப்படும் பயிற்சி திட்டத்தின் மூலம் ஒருவர் 12 நாட்களில் நீந்தக் கற்றுக் கொள்வதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. வெற்றிகரமாக நடத்தப்படும் இத்திட்டம், இளைஞர்களிடையே பிரபலமாகவுள்ளது.

2017 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் ஜுன் வரை "நீச்சல் கற்றுக்கொள்" திட்டத்தின்கீழ் 8792 பங்கேற்பாளர்கள் பயனடைந்துள்ளனர்.

3.5.2 கிராம விளையாட்டு வளர்ப்பிடம்

ஊரகப்பகுதிகளில் விளையாட்டினை மேம்படுத்த கிராமங்களில் கிராம விளையாட்டு வளர்ப்பிடங்கள் அந்தப் பகுதியில் (சென்னை நீங்கலாக) பிரபலமாக இருக்கும் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வளர்ப்பிடங்கள் தொலைதூர கிராமங்களில்கூட விளையாட்டை எடுத்துச் சென்று மேம்படுத்தும் முக்கிய நோக்கத்தைக் கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அங்கு கண்டறியப்பட்ட விளையாட்டில் முறையான பயிற்சிக்கு உதவிட கிராம விளையாட்டு வளர்ப்பிடங்களுக்கு விளையாட்டுத் திடல் வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை, பல்வேறு மாவட்டங்களில் 31 கிராமங்களில் கிராம விளையாட்டு வளர்ப்பிடங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

மாவட்டங்களிலுள்ள கிராம விளையாட்டு வளர்ப்பிடங்கள் :

வ. எண்	மாவட்டம்	கிராமத்தின் பெயர்	விளையாட்டு பிரிவு	வளர்ப்பிடங்களின் விவரம்
1.	திருச்சி	எட்டரை	கபாடி	அரசு மேல்நிலைப் பள்ளி, எட்டரை
2.	அரியலூர்	பொன்பரப்பி	வளை கோல்பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, பொன்பரப்பி
3.	நாகப் பட்டினம்	ஆயக் கரன்புலம்	கையுந்து பந்து	ஆர்.என். அரசு மேல்நிலைப் பள்ளி, ஆயக்கரன் புலம்
4.	தஞ்சாவூர்	கரம்பயம்	கால்பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, கரம்பயம்
5.	பெரம்பலூர்	எஸ். ஆடுதுறை	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, எஸ்.ஆடுதுறை

[2018 ஜூன் 13

வ. எண்	மாவட்டம்	கிராமத்தின் பெயர்	விளையாட்டு பிரிவு	வளர்ப்பிடங்களின் விவரம்
6.	நாமக்கல்	முத்துக் காபட்டி	தடகளம்	அரசு மேல்நிலைப் பள்ளி, முத்துக்காபட்டி
7.	திருவாரூர்	திருநைப்பேர்	கால்பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, திருநைப்பேர்
8.	ஈரோடு	நொச்சிக் குட்டை	வளை கோல்பந்து	ஊ.ஒ.நடு.நி.ப. நொச்சிக் குட்டை
9.	நீலகிரி	அச்சங்கால்	கால்பந்து	அச்சங்கால், உதகமண்டலம்
10.	திருப்பூர்	பழங்கறை	கையுந்து பந்து	திருவள்ளுவர் அரசு மேல்நிலைப் பள்ளி, பெரியாயி பாளையம்.
11.	தருமபுரி	பாப்பாரப் பட்டி	கையுந்து பந்து	எஸ்.எஸ். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பாப்பாரப்பட்டி
12.	கிருஷ்ணகிரி	ஊத்தங்கரை	கோ-கோ	அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஊத்தங்கரை
13.	கோயம் புத்தூர்	சின்னத் தடாகம்	கையுந்து பந்து	அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சின்னத்தடாகம்

வ. எண்	மாவட்டம்	கிராமத்தின் பெயர்	விளையாட்டு பிரிவு	வளர்ப்பிடங்களின் விவரம்
14.	சேலம்	கொண்டப்ப நாயக்கன்பட்டி	வில்வித்தை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொண்டப்ப நாயக்கன்பட்டி
15.	கரூர்	லாலாபேட்டை, கல்லப்பள்ளி ஊராட்சி.	ஜிம்னாஸ்டிக்ஸ்	அரசு மேல்நிலைப் பள்ளி, லாலாபேட்டை.
16.	திண்டுக்கல்	தர்மத்துப்பட்டி	கபாடி	அரசு மேல்நிலைப் பள்ளி, தர்மத்துப்பட்டி.
17.	புதுக் கோட்டை	ஆதனி	கபாடி	அரசு மேல்நிலைப் பள்ளி, ஆதனி
18.	தேனி	வடுகப்பட்டி	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, வடுகப்பட்டி
19.	மதுரை	புதுசுக்காம் பட்டி	தடகளம்	அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புதுசுக்காம்பட்டி.
20.	திருவண் ணாமலை	சொரகுளத்தூர்	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, சொரகுளத்தூர்.
21.	கடலூர்	மீனாட்சிப் பட்டி	கூடைப்பந்து	நெசவாளர் குடியிருப்பு விளையாட்டு மைதானம், மீனாட்சிப்பட்டி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2018 ஜூன் 13

வ. எண்	மாவட்டம்	கிராமத்தின் பெயர்	விளையாட்டு பிரிவு	வளர்ப்பிடங்களின் விவரம்
22.	விழுப்புரம்	கொழியனூர்	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப்பள்ளி, கொழியனூர்.
23.	வேலூர்	வெங்கடேச புரம்	டேக்வோண்-டோ	அரசு ஆதி திராவிடர் நலப்பள்ளி, வெங்கடேசபுரம்.
24.	காஞ்சிபுரம்	நந்திவரம்	கபாடி	அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, நந்திவரம்
25.	விருதுநகர்	வீரப்பட்டி	தடகளம்	அரசு மேல்நிலைப்பள்ளி, வீரப்பட்டி
26.	திருநெல் வேலி	பாவூர் சத்திரம்	கால்பந்து	டி.பி.எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பாவூர் சத்திரம்.
27.	சிவகங்கை	கோட்டையூர்	கால்பந்து	தஞ்சாவூர் அருணாச்சலம் செட்டியார் மேல்நிலைப்பள்ளி, கோட்டையூர்.
28.	கன்னியா குமரி	இரவி புத்தன்துறை	கால்பந்து	கிராம கால்பந்து மைதானம், இரவி புத்தன்துறை.
29.	இராமநாத புரம்	மண்டபம் முகாம்	வளைகோல்-பந்து	அரசு மேல்நிலைப் பள்ளி, மண்டபம் முகாம்
30.	தூத்துக்குடி	குளத்தூர்	கபாடி	அரசு மேல்நிலைப்பள்ளி, குளத்தூர்
31.	திருவள்ளூர்	கடம்பத்தூர்	கையுந்து பந்து	அரசு மேல்நிலைப்பள்ளி, கடம்பத்தூர்.

3.6 வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்

வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் விளையாடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. இத்திட்டம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 20 வயதிற்குக் குறைவான தேசிய அளவில் தங்கப் பதக்கம் வெல்லும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சென்னையில் உள்ள நவீன விளையாட்டு அரங்கங்கள் மற்றும் மாவட்டங்களில் எங்கு பயிற்சி பெற விரும்புகிறார்களோ அங்கெல்லாம் உள்ள விளையாட்டு வசதிகளை வெற்றியாளர்கள் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் அளவில் ஊட்டச் சத்து உணவு, விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்த வெற்றியாளர்கள் வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும், பயிற்சி பெறுவதற்கும் விமானக் கட்டணம் பெற தகுதி உடையவர்கள் ஆவர். இதற்கான செலவினம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சுழல் நிதியின்மூலம் பெறப்படும் வட்டியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. தற்போது, வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் 110 வெற்றியாளர்கள் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

2017-2018 ஆம் ஆண்டில் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு ரூ.28,18,654/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

படலம் 4

பயிற்சித் திட்டங்கள்

வெற்றியாளர்களை உருவாக்குவதில் பயிற்சியாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தகுதியான பயிற்சியாளர்கள் பல்வேறு நிலைகளில் போதுமான எண்ணிக்கையில் இருப்பது விளையாட்டு

மேம்பாட்டிற்கு முக்கியமானதாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் 31-3-2018 தேதியின்படி பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் நிரந்தரப் பயிற்றுநர்கள் 83 மற்றும் ஒப்பந்த பயிற்றுநர்கள் 28 பேர் உள்ளனர்.

4.1 பயிற்றுநர்கள் திறன் கட்டமைப்பு

ஒரு பயிற்றுநரின் திறன் சிறந்த முடிவுகளை வெளிக் கொணர்வதற்கு முக்கியமானதாகும். எனவே, பயிற்றுநர்களின் செயல்பாடுகளை வழிநடத்த, பயிற்சியளிக்க மற்றும் கண்காணிக்க போதிய கவனம் செலுத்தப்படுகிறது. பயிற்றுநர்கள் பங்கு குறித்த விரிவான சுற்றறிக்கை அடிப்படையில் குறிப்பிட்ட இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அவர்களது செயல்திறனை மதிப்பிடுதல் ஆகியவை கண்காணிக்கப்படுகிறது.

பயிற்றுநர்களின் திறன் முன்னேற்றம் மற்றும் அவர்களது அறிவினை மேம்படுத்தும் பொருட்டு பயிற்றுநர்களுக்கு முறையான சான்றிதழ் பயிற்சித் திட்டங்கள் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் விளையாட்டு சங்கங்கள் மற்றும் பன்னாட்டு விளையாட்டு குழுமத்துடன் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது.

4.2 கோடை காலப் பயிற்சி முகாம்கள்

ஒவ்வொரு வருடமும் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் 25 சிறிய விளையாட்டு அரங்கங்களில் கோடை விடுமுறை நாட்களில் 16 வயதிற்குட்பட்ட மாணவ / மாணவியர்களுக்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் பிற விளையாட்டுகளில் தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வல்லுநர்களால் கோடைகால பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 2017-2018 ஆம் ஆண்டில் 6436 விளையாட்டு வீரர்கள் கோடைகால பயிற்சி முகாம் மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக, அரசு ஒவ்வொரு வருடமும் ரூ.2.05 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

4.3 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் திறன் வாய்ந்த சிறுவர், சிறுமியர்களுக்காக 67 கல்வி மாவட்டங்களில் இருப்பிடமில்லா பயிற்சி முகாம் 5 நாட்களுக்கு நடத்தப்பட்டு

வருகிறது. இதில் கலந்துகொள்ளும் சிறுவர், சிறுமியருக்கு தகுதி வாய்ந்த பயிற்றுநர் மற்றும் விளையாட்டு வல்லுநர்கள்மூலம் விளையாட்டு அடிப்படை நுணுக்கங்கள் கற்றுத்தரப்படுகிறது. 2017 ஆம் வருடம் நடத்தப்பட்ட கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் 9327 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு வருடமும், இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ரூ.5.44 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

4.4 மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்

ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறையில் திறன்வாய்ந்த சிறுவர் / சிறுமியர்கள் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 15 நாட்கள் மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாமில் பயிற்சி வழங்கப்படுகிறது.

தகுதிவாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வல்லுநர்களைக் கொண்டு அடிப்படை விளையாட்டுத் திறன்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்த சிறுவர்/ சிறுமியர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு அகாடமிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வுகளில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்படுவர். இத்திட்டத்தின்கீழ் 2017 ஆம் ஆண்டில் 3919 விளையாட்டு வீரர்கள் பயனடைந்துள்ளனர். உணவுப்படி, விளையாட்டுச் சீருடை மற்றும் தங்குமிட வசதிகளுக்காக அரசு ரூ.71.04 இலட்சத்தை ஒதுக்கீடு செய்கிறது.

4.5 திறன் கண்டறியும் முகாம்

வார இறுதி பயிற்சி முகாம் மற்றும் தினசரி பயிற்சி திட்டத்தினை ஒருங்கிணைத்து கடந்த 2016ல் திறன் கண்டறியும் முகாம் திட்டம் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. 14 வயதிற்குட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுவர்கள் மற்றும் 10 சிறுமியர்களுக்கு அந்தந்த பகுதிகளில் பிரபலமாக இருக்கும் விளையாட்டுகளில் முறையான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இத்திட்டம் அனைத்து 32 மாவட்டங்களிலும் 6 மாத காலத்திற்கு நடத்தப்பட்டு வருகிறது.

2017 ஆம் ஆண்டில் 620 விளையாட்டு வீரர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர். போக்குவரத்துப்படி, ஊட்டச்சத்து உணவுப்படி, விளையாட்டு சீருடை, விளையாட்டு உபகரணங்கள் செலவினத்திற்காக ரூ.81.20 இலட்சம் இத்திட்டத்தை செயல்படுத்த அரசால் ஒப்பளிக்கப்படுகிறது.

4.6 உடற்கல்வி ஆசிரியர்கள் / இயக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம்

மழலையர் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரை குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே உடற்பயிற்சியை ஊக்குவிக்கும் பொறுப்பு உடற்கல்வி ஆசிரியர்களுக்கு உள்ளது. விளையாட்டு குறித்த சிறந்த அறிவினை அடையவும், விளையாட்டு செயல்பாடுகளின் சிறந்த தொடர்பு மற்றும் விளக்கத்தின் தேவையை பூர்த்தி செய்யவும், சமீபத்திய விதிமுறைகளை குறித்து அறிந்திருக்கவும், 40 வயதிற்குட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் இயக்குநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. 2017—18 ஆம் ஆண்டில் ரூ.14.50 இலட்சம் இத்திட்டத்திற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு புத்தாக்கப் பயிற்சி நிறைவேற்றப்பட்டது.

படலம் 5

விளையாட்டுப் போட்டிகள்

போட்டிகள் இலக்கை அடைவதற்கான ஊக்கம், உறுதிப்பாட்டை வெளிப்படுத்துதல், கற்பனைத் திறன் மற்றும் சவால்களை சமாளிப்பதற்கான விடாமுயற்சி ஆகியவற்றை அளித்து கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை வெற்றிக்கான அதிக வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும் என்பதைப் புரிந்துகொள்ளச் செய்கிறது. போட்டிகள் விளையாட்டில் பங்கேற்பதன் பொதுவான வெளிப்பாடாகவும் விளையாட்டு வீரர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இன்றியமையாததாகவும் உள்ளது.

5.1 மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள்

2013-2014 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளை நடத்தி வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டுள்ளது.

பாலினம்	ஆண் மற்றும் பெண்		
வயது வரம்பு	டிசம்பர் 31-அன்று 21 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.		
விளையாட்டுப் பிரிவுகள்	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, நீச்சல், மேசைப்பந்து, டென்னிஸ் மற்றும் கையுந்துபந்து.		
மாவட்ட அளவிலான பரிசுத் தொகை (ஒரு வீரருக்கு)	முதல் பரிசு ரூ.1,000/-	இரண்டாம் பரிசு ரூ.750/-	மூன்றாம் பரிசு ரூ.500/-
மாநில அளவிலான பரிசுத் தொகை (ஒரு வீரருக்கு)	முதல் பரிசு ரூ.1,00,000/-	இரண்டாம் பரிசு ரூ.75,000/-	மூன்றாம் பரிசு ரூ.50,000/-

தனிநபர் போட்டிகளில் முதல் இடம் பெறுபவர்களும், குழுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் மாநில அளவிலான போட்டிகளில் அவரவர் மாவட்டம் சார்பில் கலந்து கொள்வர். மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன்பாக இவர்களுக்கு சீருடை வழங்கி பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், பரிசுத் தொகை வழங்கவும் ஆண்டுதோறும் ரூ.819.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

பரிசுத் தொகை விவரங்கள்

போட்டி நிலைகள்	பரிசுத் தொகை	மொத்தம் ரூ.			
மாவட்ட அளவிலான போட்டிகள் (ஒரு மாவட்டத் திற்கு)	முதல் பரிசு தலா	ரூ.1,000/-	X	204 வீரர் களுக்கு	2,04,000/-
	இரண்டாம் பரிசு தலா	ரூ.750/-	X	204 வீரர் களுக்கு	1,53,000/-
	மூன்றாம் பரிசு தலா	ரூ.500/-	X	204 வீரர் களுக்கு	1,02,000/-

மொத்த பயனாளர்களின் எண்ணிக்கை-20,196

மொத்த பரிசுத் தொகை ரூ.6,05,88,000/-

விளையாட்டு மட்டும் குழுப் போட்டிகளின் முடிவுகள்-ஆண்கள் மற்றும் பெண்கள்-2017-2018

வ. எண்	விளையாட்டுப் பிரிவு	முதல் இடம்	இரண்டாம் இடம்	மூன்றாம் இடம்
		ஆண்கள்		
1.	தடகளம் (ஒட்டு மொத்த சேம்பியன்ஷிப்)	கோயம்புத்தூர்	திருநெல்வேலி	சென்னை
2.	நீச்சல் (ஒட்டு மொத்த சேம்பியன்ஷிப்)	காஞ்சிபுரம்	திருவள்ளூர்	சென்னை
3.	கால்பந்து	கன்னியாகுமரி	திண்டுக்கல்	சென்னை
4.	கூடைப்பந்து	சென்னை	காஞ்சிபுரம்	தூத்துக்குடி
5.	கூளைகோல் பந்து	அரியலூர்	மதுரை	திருச்சி

வ. எண்	விளையாட்டுப் பிரிவு	முதல் இடம்	இரண்டாம் இடம்	மூன்றாம் இடம்
6.	கையுந்துபந்து	சென்னை	கோயம்புத்தூர்	திருவாரூர்
7.	கபாடி	சேலம்	கரூர்	கடலூர்
8.	மேசைப்பந்து	சென்னை	காஞ்சிபுரம்	மதுரை
9.	டென்னிஸ்	சென்னை	கோயம்புத்தூர்	திருவள்ளூர்
10.	இறகுப்பந்து	கோயம்புத்தூர்	காஞ்சிபுரம்	சென்னை
		பெண்கள்		
1.	தடகளம்	சென்னை	ஈரோடு	திருச்சி
2.	நீச்சல்	சென்னை	காஞ்சிபுரம்	திருவள்ளூர்
3.	கால்பந்து	கடலூர்	சென்னை	திருவாரூர்
4.	கூடைப்பந்து	நாகப்பட்டினம்	தஞ்சாவூர்	திருவண்ணாமலை
5.	வளைகோல் பந்து	ஈரோடு	சேலம்	திருவண்ணாமலை
6.	கையுந்துபந்து	ஈரோடு	சென்னை	சேலம்
7.	கபாடி	திண்டுக்கல்	ஈரோடு	நாமக்கல்
8.	மேசைப்பந்து	சென்னை	ஈரோடு	காஞ்சிபுரம்
9.	டென்னிஸ்	திருவள்ளூர்	சென்னை	கோயம்புத்தூர்
10.	இறகுப்பந்து	மதுரை	கோயம்புத்தூர்	காஞ்சிபுரம்

5.2 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

தனித்துவம் வாய்ந்த விளையாட்டுப் போட்டி கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்கும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை உருவாக்குவதற்கும், அனைத்து மாவட்டங்களிலும் மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் மூன்று மாதங்கள் 18 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்க்கும், ஒரு மாதம் அனைத்து பிரிவினருக்கும் வயது வரம்பின்றி நடத்தப்படுகின்றன. விளையாட்டு வீரர்களுக்கு தங்களது விளையாட்டுச் செயல்திறனை தரம் மற்றும் எண்ணிக்கையில் ஒப்பீடு செய்வதற்கு இப்போட்டிகளின் முடிவுகள் வரையறையாக விளங்குகிறது.

நிதி ஒதுக்கீடு	ரூ.25.00 லட்சம்
விளையாட்டுப் பிரிவுகள்	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, வாள்சண்டை, கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, வளைகோல்பந்து, கபாடி, கோ-கோ, நீச்சல், டேக்வோண்டோ மற்றும் கையுந்துபந்து.
வகை (வயது பிரிவு)	பல்வேறு நிலைகளில்
மாதம்	ஜூலை, ஆகஸ்ட், அக்டோபர் மற்றும் மார்ச்–2017–2018.

5.3 அண்ணா மிதிவண்டி போட்டி

மிதி வண்டி பந்தயம் ஒரு கடினமான, தாங்கும் திறன் தேவைப்படும் விளையாட்டுகளில் ஒன்றாகும். பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அண்ணா மிதிவண்டி போட்டி நடத்தப்பட்டு வருகிறது. முதல் 10 இடங்களை பெறும் வெற்றியாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் பரிசுகளையும், சான்றிதழையும் பெறுவர். ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

நிதி ஒதுக்கீடு	ரூ.1.00 லட்சம்
பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள்	முதல் 10 இடம் பெறுபவர்கள்.
இடம்	அனைத்து மாவட்டத் தலைநகரங்கள்

5.4 மாநில விளையாட்டுக் கழகங்கள் மூலம் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்துதல்

மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்துவதற்கும், தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாடு அணிகள் பங்கேற்கச் செய்வதற்கும் அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.3 கோடி ஒதுக்கீடு செய்கிறது. 2017-2018 ஆம் ஆண்டு முதல் மாநில விளையாட்டுக்கழகங்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகையினை ரூ.3.00 இலட்சத்திலிருந்து

ரூ.10.00 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டு கீழ்க்குறிப்பிட்ட நான்கு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டன.

போட்டிகளின் விவரம்	இடம்
46–வது சீனியர் தேசிய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான கேரம் சேம்பியன்ஷிப்	சென்னை
17 வயதிற்குட்பட்டவர்களுக்கான தேசிய அளவிலான சதுரங்க சேம்பியன்ஷிப்	கோயம்புத்தூர்
68–வது சீனியர் தேசிய அளவிலான கூடைப்பந்து சேம்பியன்ஷிப்–ஆடவர் மற்றும் மகளிர்	சென்னை
55–வது தேசிய அளவிலான ஸ்கேட்டிங் சேம்பியன்ஷிப்	சென்னை

5.5 தமிழகத்தில் பன்னாட்டு அளவிலான போட்டிகள் நடத்துதல்

தமிழ்நாட்டில் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதை ஊக்குவிக்கும் வகையில் மாநில விளையாட்டு கழகங்கள் / தேசிய விளையாட்டு சம்மேளனங்களுக்கு போதுமான நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2017–2018 ஆம் ஆண்டு தமிழகத்தில் இரண்டு பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

5.5.1 சென்னை ஓப்பன் ஏ.டி.பி. சேலஞ்சர் டென்னிஸ் போட்டி

அசோசியேஷன் ஆப் டென்னிஸ் புரபோசனல்ஸ் (ஏ.டி.பி.) சேலஞ்சர் டென்னிஸ் போட்டிகள் 50,000 அமெரிக்க டாலர் பரிசுத் தொகை கொண்ட “சென்னை ஓப்பன் ஏ.டி.பி. சேலஞ் சர் டென்னிஸ் போட்டி”என்ற பெயரில் தமிழ்நாடு டென்னிஸ் கழகத்தால் நடத்தப்பட்டது. இது ஏ.டி.பி. உலகத்தர வரிசை போட்டியான சர்வதேச ஏ.டி.பி. சுற்றின் ஓர் அங்கமாகும். இந்த போட்டிகள் முதல் முறையாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் டென்னிஸ் விளையாட்டு அரங்கில் 2018 பிப்ரவரி மாதம் 10 முதல் 18 வரை நடத்தப்பட்டது. இந்தப் போட்டியினை சென்னையில் நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு தனது பங்களிப்பாக ரூ.40.00 இலட்சம் வழங்கியது.

இந்தப் போட்டிகள் உலக அளவில் தர வரிசையில் 70 முதல் 200 வரை உள்ள வீரர்களையும் இந்தியாவில் உள்ள தலை சிறந்த முன்னிலை வீரர்களையும் கவர்ந்துள்ளது. இந்த போட்டிகள் வளரும் இளம் திறனாளர்களுக்கு முன்னனி வீரர்களின் விளையாட்டுத் திறனை நேரடியாக காண்பதற்கும் நுட்பமாக விளையாடும் திறனை அறிந்து கொள்ளுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

ஒற்றையர்	முதலிடம்	திரு.ஜோடன் தாம்ப்சன், ஆஸ்திரேலியா.
	இரண்டாம் இடம்	திரு.யூகி பாம்ரி— இந்தியா.
இரட்டையர்	முதலிடம்	திரு.என்.ஸ்ரீராம் பாலாஜி மற்றும் திரு.விஷ்ணுவர்தன் இந்தியா.
	இரண்டாம் இடம்	திரு.செம் ஐக்கெல், துருக்கி மற்றும் திரு.டேனிலோ பேட்ரோவிக், செர்பியா.

5.5.2 பன்னாட்டு அளவிலான கிராண்ட் மாஸ்டர் சதுரங்க விளையாட்டுப் போட்டி

இந்தியாவிலேயே சதுரங்க வீரர்களை வெற்றியாளர்களாக உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. 10—வது பன்னாட்டு அளவிலான கிராண்ட் மாஸ்டர் சதுரங்கப் போட்டிகள் சென்னையில் நடத்தப்பட்ட விவரம் பின்வருமாறு:

போட்டிகள் நடத்தப்பட்ட தேதி	கலந்து கொண்ட நாடுகளின் எண்ணிக்கை	கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை
18-1-2018 முதல் 25-1-2018 வரை	23	267

5.6 அகில இந்திய அரசு குடிமைப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

அரசுப் பணியாளர்கள் இடையே விளையாட்டு மற்றும் உடற்தகுதியை ஊக்குவிப்பதற்கும், அவர்களுடைய உடற்தகுதியை

உறுதிசெய்யவும் மற்றும் திறமைகளை மேம்படுத்திடவும், அவர்கள் ஆரோக்கியமான சிறந்த வாழ்க்கை முறையை மேற்கொள்ளவும், அனைத்திந்திய குடிமைப் பணிகள் விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்றன. புதுடெல்லியிலுள்ள மத்திய குடிமைப் பணிகள், கலாச்சாரம் மற்றும் விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்கீழ், மாநிலங்களின் விருப்பத்தைப் பெற்று பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் அந்தந்த மாநிலங்களில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

2017-2018 ஆம் ஆண்டு அகில இந்திய அரசு குடிமைப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் விவரம்.

விளையாட்டு பிரிவு	எண்ணிக்கை	
	ஆண்	பெண்
தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கேரம், மட்டைப்பந்து, கபாடி, மேசைப்பந்து மற்றும் கையுந்துபந்து.	*132*	*33*

5.7 மாநில அளவிலான குடிமைப்பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

அரசு ஊழியர்களின் உடல் தகுதி மற்றும் மனதிடத்தை வலிமைப்படுத்த மாநில அரசுப் பணியாளர்களுக்கு மாநில அளவிலான குடிமைப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் *2013-2014* ஆம் ஆண்டு முதல் நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. இப்போட்டிகளை நடத்துவதற்காக ரூ.*40.37* இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டு பிரிவு	பாலின அடிப்படையில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை
தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, கபாடி, டென்னிஸ், மேசைப்பந்து மற்றும் கையுந்து பந்து	ஆடவர்
தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கபாடி, டென்னிஸ், மேசைப்பந்து மற்றும் கையுந்துபந்து	மகளிர்

[2018 ஜூன் 13

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அனைத்து 32 மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் விளையாட்டு வீரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் போட்டிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் தலைசிறந்த வீரர்கள் தேசிய அளவில் நடத்தப்படும் அனைத்திந்திய குடிமைப் பணியாளர்களுக்கான போட்டிகளில் தமிழ்நாடு சார்பாக கலந்து கொள்வர்.

5.8 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள்

2008-2009 ஆம் ஆண்டு முதல், அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், கிராம ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சி பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கிடையே கேரம் விளையாட்டை ஊக்குவிக்கவும், அவர்கள் பரிசினை வெல்லவும், கேரம் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. பரிசுத் தொகையாக ரூ.6,45,000/- ஒப்பளிக்கப்படுகிறது. இந்தப் போட்டிகள் மிக இளையோர் (5 ஆம் வகுப்பு வரை) மற்றும் இளையோர் (6 முதல் 12 ஆம் வகுப்பு வரை) என இரு பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. இதில் முதலிடம் பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் தங்களது மாவட்டம் சார்பாக கலந்துகொள்வர்.

5.9 மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள்

பாரா விளையாட்டு என்று அழைக்கப்படும் விளையாட்டு மாற்றுத் திறனாளர்களால் விளையாடப்படுகிறது. மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கவும் மற்றும் போட்டி மனப்பான்மையை மேம்படுத்தவும் மாவட்ட மற்றும் மாநில அளவில் மாற்றுத் திறனாளிகளுக்காக கீழ்க்கண்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மாற்றுத் திறனாளிகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்)	50 மீட்டர் ஓட்டம் 100 மீட்டர் ஓட்டம் நீளம் தாண்டுதல் சிறிய கூடைப்பந்து எறிதல் 100 மீட்டர் சக்கர நாற்காலி ஓட்டம்
பார்வை குன்றியோர் (ஆண்கள் மற்றும் பெண்கள்)	50 மீட்டர் ஓட்டம் 100 மீட்டர் ஓட்டம் நின்ற நிலையில் தாண்டுதல் குண்டு எறிதல் டென்னிஸ் பந்து எறிதல்

மனவளர்ச்சி குன்றியோர்-(ஆண்கள் மற்றும் பெண்கள்)	50 மீட்டர் ஓட்டம் 100 மீட்டர் ஓட்டம் கிரிக்கெட் பந்து எறிதல் நின்ற நிலையில் தாண்டுதல் குண்டு எறிதல்
காது கேளாதோர்-(ஆண்கள் மற்றும் பெண்கள்)	100 மீட்டர் ஓட்டம் 200 மீட்டர் ஓட்டம் நீளம் தாண்டுதல் குண்டு எறிதல் ஈட்டி எறிதல்

மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் பெறுபவர்களுக்கு முறையே ரூ.5,000/-, ரூ.3,000/- மற்றும் ரூ.2,000/- பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. மேற்கண்ட போட்டிகளை நடத்துவதற்கு 2017-2018 ஆம் ஆண்டு அரசால் ரூ.15.01 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

5.10 மாற்றுத் திறனாளிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள்

மாற்றுத் திறனாளிகளிடையே குழு உணர்வையும் மற்றும் நம்பிக்கையையும் வளர்ப்பதற்கு அவர்கள் குழுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.மாநில அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகள் (கை, கால் ஊனமுற்றோர்- இருபாலர்	இறகுப்பந்து (ஒற்றையர் மற்றும் இரட்டையர்)-ஒரு அணிக்கு 5 விளையாட்டு வீரர்கள். மேசைப்பந்து-ஒரு அணிக்கு 2 விளையாட்டு வீரர்கள்.
பார்வைகுன்றியோர் (முழுவதும் பார்வையற்றோர் மற்றும் ஓரளவு பார்வையுடையோர்) இருபாலர்	அடாப்டட் (Adopted) கையுந்துபந்து-ஒரு அணிக்கு 7 விளையாட்டு வீரர்கள்.
மனவளர்ச்சி திறனாளிகள் (மனவளர்ச்சி குன்றியோர்) இருபாலர்	எறிபந்து-ஒரு அணிக்கு 7 விளையாட்டு வீரர்கள்.
செவி திறன் குறைபாடு உடையோர் (காது கேளாதோர்) இருபாலர்	கபாடி-ஒரு அணிக்கு 7 விளையாட்டு வீரர்கள்.

[2018 ஜூன் 13

மேற்படி விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு அரசு 2017-2018 ஆம் ஆண்டு ரூ.30.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது.

5.11 கழைக் கூத்து

சமநிலை, விரைந்து நகருதல், இயக்க ஒருங்கிணைப்பு, ஆகிய அசாதாரண திறன் தேவைப்படும் விளையாட்டு கழைக்கூத்தாகும். பரம்பரை பரம்பரையாக கழைக்கூத்தாடி வரும் இனத்தினரிடையே இந்த விளையாட்டினை ஊக்குவிப்பதற்கு தமிழ்நாடு அரசு உதவி செய்து வருகிறது. அவர்களுடைய குழந்தைகளுக்கு முறையான பயிற்சி, சத்தான உணவு, விளையாடுவதற்கான வாய்ப்பு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் அவர்களை பதக்கங்கள் வெல்லும் வீரர்களாக உருவாக்க முடியும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. இந்த ஊக்கம், தமிழ்நாட்டில் ஆக்ரோபட்டிக்ஸ் விளையாட்டினை மேம்படுத்தும். ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையம் என்ற இடத்தில் 20 சிறுவர், சிறுமியருடன் கழைக்கூத்தாடிகளுக்கான மையம் ஒன்று நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அறிவியல் பூர்வமான பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழக அரசு 2017-2018 ஆம் ஆண்டு ரூ.8.60 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த மையத்தில் 2017-2018 ஆம் ஆண்டில் பயிற்சி பெறுபவர்களின் சாதனைகள் பின்வருமாறு

வ. எண்	போட்டிகளின் விவரம்	வென்ற பதக்கங்கள்		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	சென்னை பன்னாட்டு அளவிலான இளைஞர் விழா ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிகள் நடைபெற்ற நாள் 12-8-2017 மற்றும் 13-8-2017.	3	4	3

2.	மாநில அளவிலான குடியரசு தின / பாரதியார் தின விளையாட்டு ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிகள் *20-10-2017* முதல் *22-10-2017* வரை சேலத்தில் நடைபெற்றது.	*11*	*7*	*5*
3.	எஸ்.ஜி.எப்.ஐ. தேசிய அளவிலான போட்டிகள் கல்கத்தாவில் *15-11-2017* முதல் *18-11-2017* வரை நடைபெற்றது.	பங்கேற்பு		
4.	*6-1-2018* அன்று சென்னையில் நடைபெற்ற மாநில அளவிலான ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக் போட்டிகள்.	*1*	*3*	*7*

5.12 கடற்கரை விளையாட்டுப் போட்டிகள்

பொழுதுபோக்கு விளையாட்டுகளான தொடர் ஓட்டம், புல்வெளி விளையாட்டு, பறக்கும் தட்டு ஆகியவைகளை விளையாடுவதற்கு மணற்பாங்கான கடற்கரை ஒரு சிறந்த இடமாகும். பொழுது போக்கிற்காக விளையாடினாலும் சாதாரண தரைப்பரப்பில் இந்த விளையாட்டு விளையாடப்படுவதில்லை

என்பதால் இந்த விளையாட்டுக்களை விளையாட தனித்திறன் தேவைப்படும்.

தமிழ்நாடு அரசு கடற்கரை விளையாட்டுகளான கடற்கரை கால்பந்து, கடற்கரை கபாடி மற்றும் கடற்கரை கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளை இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, சென்னை, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 10 மாவட்டங்களின் கடற்கரை பகுதிகளில் நடத்திட ஒப்புதல் அளித்துள்ளது. 2013-2014 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான போட்டிகள் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் 2018 ஆம் ஆண்டு மார்ச் 23 மற்றும் 24 தேதிகளில் நடத்துவதற்கு ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

5.13 மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்

கல்லூரி அளவில் விளையாட்டு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி, மாணவர்களிடையே பிரபலப்படுத்த மாநில அளவில் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, மேசைப்பந்து, டென்னிஸ், பளுதூக்குதல், கைப்பந்து, நீச்சல் மற்றும் கையுந்து பந்து ஆகிய விளையாட்டுகளுக்கு தமிழகத்திலுள்ள தொழில்முறை கல்லூரிகள் உட்பட அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளை 2017-2018 ஆம் ஆண்டு நடத்திட அரசு ரூ.1.00 கோடியினை ஒதுக்கீடு செய்தது.

மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் முதல் 3 இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே ரூ.10,000/-, ரூ.7,500/- மற்றும் ரூ.5,000/- பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

2017-2018 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம்:—

வ. எண்	விளையாட்டு பிரிவு	வெற்றி பெற்றவர்களின் விவரம்		
		முதலாம் இடம்	இரண்டாம் இடம்	மூன்றாம் இடம்
1.	தடகளம் ஆண்கள்	சென்னை பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	பாரதியார் பல்கலைக்கழகம்
	தடகளம் பெண்கள்	சென்னை பல்கலைக்கழகம்	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	பாரதியார் பல்கலைக்கழகம்
2.	கூடைப்பந்து ஆண்கள்	சென்னை பல்கலைக்கழகம்	சத்தியபாமா பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்
	கூடைப்பந்து பெண்கள்	இந்துஸ்தான் பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்
3.	கால்பந்து ஆண்கள்	சென்னை பல்கலைக்கழகம்	அண்ணாமலை பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்
	கால்பந்து பெண்கள்	அண்ணாமலை பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்	தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்
4.	கபாடி ஆண்கள்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக் கழகம்	அண்ணா பல்கலைக் கழகம்
	கபாடி பெண்கள்	அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்	தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்	அண்ணா பல்கலைக்கழகம்
5.	வளைகோல் பந்து ஆண்கள்	சென்னை பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	அண்ணாமலை பல்கலைக்கழகம்
	வளைகோல் பந்து பெண்கள்	அண்ணா பல்கலைக்கழகம்	அண்ணாமலை பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்

6.	இறகுப்பந்து ஆண்கள்	அண்ணா பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	பாரதியார் பல்கலைக்கழகம்
	இறகுப்பந்து பெண்கள்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	அண்ணா பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்
7.	டென்னிஸ் ஆண்கள்	சென்னை பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	அண்ணா பல்கலைக்கழகம்
	டென்னிஸ் பெண்கள்	அண்ணா பல்கலைக்கழகம்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்
8.	கையுந்துபந்து ஆண்கள்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	சத்தியபாமா பல்கலைக்கழகம்	பாரதிதாசன் பல்கலைக்கழகம்
	கையுந்துபந்து பெண்கள்	பாரதியார் பல்கலைக்கழகம்	இந்துஸ்தான் பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்
9.	நீச்சல் ஆண்கள்	அண்ணா பல்கலைக்கழகம்	மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்	கலசலிங்கம் பல்கலைக்கழகம்
	நீச்சல் பெண்கள்	கலசலிங்கம் பல்கலைக்கழகம்	ஸ்ரீ ராமசந்திரா பல்கலைக்கழகம்	மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10.	கைப்பந்து ஆண்கள்	அண்ணா பல்கலைக்கழகம்	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	கற்பகம் பல்கலைக்கழகம்
	கைப்பந்து பெண்கள்	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்
11.	மேசைப்பந்து ஆண்கள்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	அண்ணா பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்
	மேசைப்பந்து பெண்கள்	எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்	அண்ணா பல்கலைக்கழகம்

12.	பளுதூக்குதல் ஆண்கள்	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	பாரதியார் பல்கலைக்கழகம்	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
	பளுதூக்குதல் பெண்கள்	மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்	சென்னை பல்கலைக்கழகம்	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

5.14 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்மூலம் நடத்தப்படும் வளைகோல்பந்து விளையாட்டுப் போட்டிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் வளைகோல்பந்து சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு நடத்தப்படுகின்றன:—

1. மாவட்ட அளவில்
2. மண்டல அளவில்
3. மாநில அளவில்

இப்போட்டிகளை நடத்திட அரசு ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்குறிப்பிட்ட 6 மண்டலங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

மண்டலம்	மாவட்டத்தின் பெயர்
சென்னை	சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் கடலூர்.
வேலூர்	வேலூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி
கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், உதகமண்டலம், ஈரோடு, சேலம், திருப்பூர் மற்றும் நாமக்கல்
திருச்சி	திருச்சி, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை

மதுரை	மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி மற்றும் கரூர்.
திருநெல்வேலி	திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை மற்றும் விருதுநகர்.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 21.04.2018 முதல் 26-4-2018 வரை மதுரையில் நடத்தப்பட்டன.

மாநில அளவிலான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வளைகோல்பந்து விளையாட்டுப் போட்டியின் வெற்றி விவரம்

முதலாம் இடம்	தூத்துக்குடி
இரண்டாம் இடம்	மதுரை
மூன்றாம் இடம்	திருநெல்வேலி

5.15 கேலோ இந்தியா பள்ளி விளையாட்டுகள்

மத்திய அரசு முதலாவது கேலோ இந்தியா பள்ளி விளையாட்டுப் போட்டிகளை புதுடெல்லியில் 31-1-2018 முதல் 8-2-2018 வரை நடத்தியது.

இதில் தமிழ்நாடு அணி கீழ்க்கண்ட விளையாட்டுகளில் கலந்துகொண்டது.

சிறுவர்	தடகளம், இறகுப்பந்து, குத்துச்சண்டை, ஜூடோ, கோ-கோ, துப்பாக்கி சுடுதல், நீச்சல், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்.
சிறுமியர்	வில்வித்தை, தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, ஜூடோ, கபாடி, கோ-கோ, துப்பாக்கி சுடுதல், நீச்சல், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்.
தமிழ்நாடு சார்பாக கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை	186 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், 19 மேலாளர்கள் மற்றும் 22 பயிற்றுநர்கள்.

இப்போட்டியில் தமிழ்நாடு பெற்ற பதக்க விவரம்:—

தங்கம்	வெள்ளி	வெண்கலம்	மொத்தம்
6	11	11	28

5.16 வெளிநாட்டில் மேம்பட்ட பயிற்சி மற்றும் போட்டிகளில் கலந்து கொள்ளுதல்

பன்னாட்டு அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வெல்லக்கூடிய ஆற்றலுடைய, தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச அனுபவங்களை அளிக்க முதன்மை நிலை வெளிநாட்டு நிறுவனங்களில் நவீன பயிற்சி அளிக்கப்படுகிறது. விளையாட்டு வீரர்களின் விமான கட்டணத்திற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நிதியுதவி அளிக்கிறது. 2017-2018 ஆம் ஆண்டு மொத்தம் ரூ.6,97,934/- விடுவிக்கப்பட்டது.

5.17 கிராம விளையாட்டுப் போட்டிகள்

12,524 கிராம ஊராட்சிகளில் கிராம விளையாட்டுப் போட்டிகளை நடத்திட தமிழக அரசு ரூ.25.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. முதன் முறையாக, கிராம விளையாட்டுகளில் ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் தடகளம், கையுந்துபந்து மற்றும் கபாடி ஆகிய விளையாட்டுகளிலும், ஆண்களுக்கு மட்டும் கால்பந்து விளையாட்டிலும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. கிராம மக்களிடையே விளையாட்டை ஊக்குவிப்பதற்காக வெற்றியாளர்களுக்கு பதக்கங்கள் / பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

படலம் 6

உதவித் தொகை, விருதுகள் மற்றும் ஊக்கத் தொகை

விளையாட்டு வீரர் தனது வாழ்க்கையில் கல்விக்கு சமமான முக்கியத்துவத்தை அளிக்கிறார். விளையாட்டு வீரரின் கல்விக்காகவும் இதர தேவைகளுக்காகவும் உதவித் தொகை வடிவில் நிதியுதவி வழங்கப்படுகின்றது. பல்வேறு பிரிவுகள் மற்றும் பல்வேறு நிலைகளில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு அரசு உதவித் தொகைகளை வழங்குகிறது.

[2018 ஜூன் 13

6.1 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை (ஒலிம்பிக், ஆசிய போட்டிகள், காமன்வெல்த் போட்டிகளில் பதக்கம் வெல்வதை நோக்கமாக கொண்டு)

விளையாட்டு வீரர்களின் செயல்திறனை அதிகரிக்கவும் கல்வி செயல்பாடுகளுக்காகவும் தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. 2011-2012 ஆம் ஆண்டு தமிழக அரசால் "தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை திட்டம்" துவக்கப்பட்டது. தலைசிறந்த ஆண் மற்றும் பெண் விளையாட்டு வீரர்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட குழுவால் தேர்வு செய்யப்படுவார்கள். தேவை அடிப்படையிலான உதவிகள் வழங்குவதன் மூலம் விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் மற்றும் இதர சர்வதேச போட்டிகளில் நமது நாட்டிற்கு பெருமை சேர்க்க இத்திட்டம் உதவுகிறது.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மதிப்பிடுதல் மற்றும் காலமுறையில் கண்காணித்தல் முக்கியமானதாகும். எனவே, கண்காணிப்பு மற்றும் உதவும் குழு, சம்பந்தப்பட்ட விளையாட்டு பிரிவுகளின் வல்லுநர்கள் மற்றும் விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு காலமுறையில் இக்குழுவால் கூட்டம் நடத்தப்படும். தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வல்லுநர்கள், விளையாட்டுச் சங்க பிரதிநிதிகள், ஊட்டசத்து உணவு வல்லுநர்கள் மற்றும் விளையாட்டு மருத்துவ வல்லுநர்கள் ஆகியோர் தங்களுக்கிடையே கலந்துரையாடி செயல்திறனை மேம்படுத்த ஆலோசனை வழங்குவர்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத் திறன் திருப்திகரமாக இல்லை எனத் தெரியவந்தால், சம்பந்தப்பட்ட வீரர் இத்திட்டத்திலிருந்து நீக்கப்படுவார். தற்போது 11 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

2017-2018 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் ரூ.382.97 இலட்சம் நிதி உதவியாக விடுவிக்கப்பட்டுள்ளது.

6.2. இளம் திறனாளர்களுக்கான சிறப்பு உதவித் தொகை

பள்ளி மாணவ மாணவியரிடையே பொதிந்து கிடக்கும் விளையாட்டுத் திறமைகளை கண்டறிவதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உடற்திறன் தகுதித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. கல்வி மாவட்ட மற்றும் மண்டல அளவில் நடத்தப்படும் இந்த தேர்வுகளின் மூலம் 3,240 இளம் திறனாளர்கள் கண்டறியப்பட்டு, சிறப்பு அகாடமியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்த திறனாளர்களை ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்கும் வகையில் நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.500/— சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 3,240 இளம் திறனாளர்களுக்கு நபர் ஒருவருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.6,000/— வழங்கப்படுகிறது. 2017—18 ஆம் ஆண்டு 3,240 இளம் திறனாளர்களுக்கு ரூ.194.40 இலட்சம் விடுவிக்கப்பட்டது.

6.3 உயரிய ஊக்கத் தொகை

ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த், தெற்காசிய கூட்டமைப்பு மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் சாதனையாளர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கி தமிழக அரசு ஊக்குவிக்கிறது.

உயரிய ஊக்கத் தொகையின் அளவு பின்வருமாறு:

வ. எண்	சர்வதேச போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	ஒலிம்பிக் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)– தனிநபர் / குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	200.00	100.00	50.00

2.	ஆசிய போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)—தனி நபர் / குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	50.00	30.00	20.00
3.	காமன்வெல்த் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)—தனி நபர் / குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	50.00	30.00	20.00
4.	தெற்காசிய கூட்டமைப்பு போட்டிகள்— (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) தனிநபர் போட்டிகள். குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	5.00	3.00	2.00
5.	தேசிய போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை)— தனிநபர் போட்டிகள்/ குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	5.00	3.00	2.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

6.	தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டிகள் தனிநபர் போட்டிகள்/ குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	2.00	1.50	1.00
7.	ஆசிய பள்ளி விளையாட்டுப் போட்டிகள் தனி நபர் போட்டிகள்/ குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	4.00	2.50	1.50
8.	உலக பள்ளி விளையாட்டுப் போட்டிகள் தனி நபர் போட்டிகள் குழுப் போட்டிகள் (ஒவ்வொரு வீரருக்கும்)	5.00	3.00	2.00

மேற்கண்ட போட்டிகள் தவிர, ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகள், பாராலிம்பிக் போட்டிகள் உள்ளிட்ட இதர விளையாட்டுகளில் பதக்கங்கள் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்களுக்கும் தமிழக அரசு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கி வருகிறது.

2017–2018 ஆம் ஆண்டு, 143 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் அவர்களது பயிற்றுநர்கள் 100 பேருக்கு மொத்தம் ரூ.13.45 கோடி உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் தமிழக விளையாட்டு வீரர்களும், அவர்களது

பயிற்றுநர்களும் உயர்த்தப்பட்ட உயரிய ஊக்கத் தொகையினை தமிழக அரசிடமிருந்து பெற்று வருகிறார்கள்.

6.4 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு உதவித் தொகை திட்டம்

தேசிய அளவில் பதக்கங்கள் வெல்லும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரை அவர்கள் சிறந்து செயல்பட ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவித் தொகை வழங்கி வருகிறது. பள்ளி மாணவர்களுக்கு ரூ.10,000/–ம், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.13,000/–ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.59.03 இலட்சம் உதவித் தொகையாக வழங்குவதற்கு 536 மாணவ, மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். 2017–2018 ஆம் ஆண்டில் மொத்தம் 761 பேர் உதவித் தொகைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

6.5 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

நலிந்தநிலையிலுள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களின் விளையாட்டிற்கான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அவர்கள் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு ஆதரவு அளிக்க அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களின் மாத வருமானம் ரூ.6,000/–க்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000/– அரசால் வழங்கப்படுகிறது.

நாளது தேதி வரை, 101 நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்கள் மாத ஓய்வூதியமும், 11 பேர் குடும்ப ஓய்வூதியமும் பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்கான மாதந்திர செலவினம் ரூ.3.36 இலட்சமாகும்.

6.6 விளையாட்டு வீரர்கள் நல நிதி

விளையாட்டு போட்டிகளின்போது காயம் அடைந்து மரணம் ஏற்பட்ட தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், விளையாட்டுப் போட்டிகளின் போது காயம் அடைந்த விளையாட்டு வீரர்களுக்கு மறுவாழ்வு /

குணமடைய ஏதுவாக உதவிகள் அளிக்கப்படுகின்றன.

6.7 தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தொழிற் கல்லூரிகளில் இடஒதுக்கீடு

விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் பொறியியல் கல்லூரிகளில் 500 இடங்களை விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் அரசு ஒதுக்கியுள்ளது.

சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் பொறியியல் கல்லூரிகளில் அளிக்கப்படும் இடஒதுக்கீடு விவரங்கள்

வ. எண்	நிறுவனங்கள் விவரம்	இடங்களின் எண்ணிக்கை
1.	அண்ணா பல்கலைக்கழகத் துறைகள், சென்னை-25	12
2.	அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள்	13
3.	அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்	14
4.	சுயநிதி பொறியியல் கல்லூரிகள்	461 (ஒரு கல்லூரிக்கு 1 இடம் வீதம்)
	மொத்த இடங்கள்	500

6.8 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது அரசால் நிறுவப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் நான்கு தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் (2 ஆடவர், 2 மகளிர்), இரண்டு பயிற்றுநர்கள் மற்றும் இரண்டு உடற்கல்வி ஆசிரியர்கள் / இயக்குநர்களுக்கு (1 ஆடவர், 1 மகளிர்) விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பாராட்டுப் பத்திரம், நினைவுப் பரிசு மற்றும் ரூ.1.00 இலட்சம் பரிசுத் தொகை ஆகியவைகள் உள்ளடக்கியதாகும்.

[2018 ஜூன் 13

6.9 பயிற்றுநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகள் ஆகியோரின் அறிவாற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்துதல்

விளையாட்டுத் துறை, சிறந்த விதத்தில் பயிற்றுநர்களின் அறிவையும், திறனையும் மேம்படுத்த முனைப்புடன் உள்ளதோடு, திறன்மிக்க பயிற்சியாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வெளிநாடுகளில் குறுகிய கால வகுப்பு / பயிற்சி மேற்கொள்ள வாய்ப்பு வழங்குகிறது. இதற்காக, ரூ.30.00 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

6.10 மாநில அளவிலான குடியரசு தின / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரொக்கப் பரிசு

மாநில அளவிலான குடியரசு தின / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம், இரண்டாமிடம் மற்றும் மூன்றாமிடங்களை வெல்பவர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் அவர்களுக்கு முறையே ரூ.1,200/-, ரூ.800/- மற்றும் ரூ.400/- என ரொக்கப் பரிசு அரசால் வழங்கப்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டில் 4,014 மாணவர்களுக்கு ரூ.30.86 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

6.11 தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு விருது வழங்குதல்

2006-2007 ஆம் ஆண்டு முதல் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

2017-2018 ஆம் ஆண்டு தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 542 மாணவ / மாணவியருக்கு மொத்தம் ரூ.21.84 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது (முதலிடம் ரூ.6,000/-, இரண்டாமிடம் ரூ.4,000/- மற்றும் மூன்றாமிடம் ரூ.2,000/-).

படலம் 7

விளையாட்டு உட்கட்டமைப்பு

விளையாட்டு வீரர்களின் திறமையை மேம்படுத்திக் கொள்ளவும், வடிவமைக்கவும் விளையாட்டு உட்கட்டமைப்புகள்

மிகவும் இன்றியமையாததாகும். வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சாதனைகள் புரிவதற்காக தமது பயிற்சிக்கு சர்வதேச தரத்திலான விளையாட்டு உட்கட்டமைப்புகளை அணுக வேண்டியது அவசியமாகும். கடந்த 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக, சிறந்த விளையாட்டு உட்கட்டமைப்புகளான பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகியவைகள் அமைக்கப்பட்டன. மேலும், தனி முத்திரை பதித்துள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1993 ஆம் ஆண்டில் 260 நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட்ட சாதனை குறிப்பிடத்தக்கது. 2013 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில், இயற்கை புல் கால்பந்து மைதானத்துடன் சர்வதேச தரத்திலான பயிற்சி ஓடுதளப் பாதை அமைக்கப்பட்டது. இவ்விளையாட்டு வசதிகள் தற்சமயம் விளையாட்டு வீரர்களால் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு பல்வேறு நிலைகளில் சாதனை புரிந்து வெற்றி வாகை சூடி நமது மாநிலத்திற்கு பெருமை சேர்க்க உதவியாக உள்ளது.மேலும், ஊரக மற்றும் புறநகர்களில் உள்ள விளையாட்டு வீரர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சர்வதேச அளவிலான விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மாவட்டங்களிலும் தமிழக அரசு உருவாக்கி வருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் இணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ளன.

7.1 மாநிலத்தில் உள்ள முக்கிய விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள்

7.1.1 ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை

முத்திரைச் சின்னமாக திகழும் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கமானது 1993-ம் ஆண்டு ரூ.44.00 கோடி செலவில் 260 நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட்ட சாதனை கொண்டது. இவ்விளையாட்டரங்கம் 40,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதி கொண்டது. இவ்விளையாட்டரங்கம் இயற்கை புல்தரை கால்பந்து மைதானத்தை மையத்தில் கொண்ட 8 பாதைகள் கொண்ட 400 மீட்டர் செயற்கை இழை தடகள ஓடுதளப் பாதையை

கொண்டுள்ளது. இது தவிர, 60 மீ. குளிரூட்டு வசதி கொண்ட உள்ளரங்க தடகள பயிற்சி ஓடுதளம், ஜூடோ, பளுதூக்குதல், மேசைப்பந்து, குத்துச்சண்டை, சதுரங்கம் மற்றும் கேரம் ஆகியவற்றிற்கான விளையாட்டு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு கடற்கரை கையுந்துபந்து ஆடுகளங்கள், மூன்று களிமண் கையுந்துபந்து ஆடுகளங்கள் (ஒளி வெள்ள வசதியுடன்), ஒரு எறிபந்து ஆடுகளம் மற்றும் ஒரு கபாடி ஆடுகளம் ஆகிய விளையாட்டு வசதிகளும் இவ்விளையாட்டு வளாகத்தில் உள்ளன. மேலும், குளிர் சாதன வசதி கொண்ட உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கூட்ட அரங்கம் இவ்விளையாட்டரங்கில் உள்ளன.

2012-2013 ஆம் ஆண்டில் ரூ.1780.63 இலட்சம் செலவில் சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் சீரமைக்கப்பட்டு, அங்குள்ள செயற்கையிழை தடகள ஓடு பாதை, இயற்கைபுல் கால்பந்து மைதானம் புதுப்பிக்கப்பட்டதுடன், மின்னொளி விளக்குகள் மாற்றி அமைத்தல், கூட்ட அரங்கம் மற்றும் அலுவலக வசதிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த பெருமைமிக்க விளையாட்டரங்கத்தில் 2017-2018 ஆம் ஆண்டில் 57வது தேசிய ஓப்பன் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறுவர்களுக்கான விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை மையம், கல்லூரி மாணவர்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மற்றும் இந்திய விளையாட்டு குழுமத்தின் சிறுவர்களுக்கான விளையாட்டு விடுதி ஆகியவை இவ்விளையாட்டரங்கில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த துப்பாக்கி சுடுதல் விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில், 18 மின் இலக்கு பாதைகள் மற்றும் 8 மின்னணு இலக்கு பாதைகள் கொண்ட 10 மீ. துப்பாக்கி சுடுதளம் ஒன்று ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

7.1.2 நேரு உள்விளையாட்டரங்கம், சென்னை

1995 ஆம் ஆண்டு ரூ.20.00 கோடி செலவில் பல்நோக்கு நேரு உள்விளையாட்டரங்கம் கட்டப்பட்டது. இவ்விளையாட்டரங்கம் 8,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதி கொண்டது.

இவ்விளையாட்டரங்கம் முழுமையான குளிரூட்டு வசதி கொண்டது. விளையாடும் பகுதியானது மரத்தளம் மற்றும் ஒளி வெள்ள வசதியுடன் அமையப் பெற்றது. இவ்விளையாட்டரங்கத்தில் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுபந்து, குத்துச்சண்டை, வாள்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், சதுரங்கம், கேரம், கைப்பந்து மற்றும் இதர விளையாட்டுகளை விளையாடலாம். மேலும், இவ்விளையாட்டரங்க வளாகத்தில் மின்னொளி வசதி கொண்ட சறுக்கு வளையம், மின்னொளி வசதி கொண்ட இரண்டு கான்கிரீட் கூடைப்பந்து ஆடுகளம், களிமண் கைப்பந்து ஆடுகளம், மின்னொளி வசதி கொண்ட வாள்சண்டை அரங்கம் மற்றும் திறந்த வெளி குத்துச்சண்டை வளையம் ஆகிய விளையாட்டு வசதிகள் உள்ளன. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி செலவில் குளிரூட்டு வசதிகள் புதுப்பிக்கப்பட்டன. இவ்விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ.283.35 இலட்சம் செலவில் கல்லூரி மாணவியர்க்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், உள் விளையாட்டரங்க வளாகத்தில் பன்னாட்டு, அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் திறந்தவெளி சறுக்கு வளையம் அமைக்கப்பட்டுள்ளது.

2018 ஜனவரி மாதத்தில் தமிழ்நாடு ரோலர் ஸ்கேட்டிங் சங்கத்தினரால் 55வது தேசிய அளவிலான ஸ்பீடு ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்பட்டன.

நடப்பு ஆண்டில், நேரு உள்விளையாட்டரங்கத்தில் கீழ்க்குறிப்பிட்ட முக்கிய பன்னாட்டு / தேசிய அளவிலான போட்டிகள் நடைபெற்றுள்ளன.

46-வது சீனியர் தேசிய மற்றும் மாநிலங்களுக்கிடையிலான கேரம் சாம்பியன்ஷிப் போட்டிகள், சீனியர் தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டிகள், அகில இந்திய குடிமைப்பணிகள் கேரம் போட்டிகள், புரோ கபாடி லீக் போட்டிகள் மற்றும் பிரிமியர் பாட்மின்ட்டன் லீக் போட்டிகள் ஆகும்.

7.1.3 மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை

இந்த விளையாட்டரங்கம் 1995 ஆம் ஆண்டு ரூ.8.00 கோடி செலவில் கட்டப்பட்டதாகும். 8670 பார்வையாளர்கள் அமரும் வசதி

கொண்டது. சர்வதேச தரத்திலான மின்னொளி வசதியுடன் கூடிய செயற்கை இழை ஹாக்கி ஆடுகளம் இவ்விளையாட்டரங்கத்தில் உள்ளது. இத்துடன் நான்கு டென்னிஸ் ஆடுகளங்கள் (களிமண்), மின்னொளி வசதி கொண்ட மூன்று கையுந்துபந்து ஆடுகளங்கள், நான்கு இறகுப்பந்து (மண்) ஆடுகளங்கள் மற்றும் ஒரு உடற்பயிற்சிக் கூடம் ஆகிய வசதிகள் உள்ளன. செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் 2017 ஆம் ஆண்டில், ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டது.

7.1.4 நீச்சல் குள வளாகம், வேளச்சேரி சாலை, சென்னை

1995 ஆம் ஆண்டில் வேளச்சேரி சாலையில் நீச்சல்குள வளாகமானது ரூ.11.32 கோடி செலவில் கட்டப்பட்டது. 4,000 பார்வையாளர்கள் கண்டுகளிக்கும் வகையில் உள்ள இவ்வளாகம் சர்வதேச தரத்திலான 8 பாதையுடன் கூடிய 50மீ x 25மீ அளவில் பந்தய நீச்சல் குளம், 18மீ x 25மீ அளவில் குதித்தல் குளம் மற்றும் 25மீ x 25மீ அளவில் பயிற்சி நீச்சல் குளம் ஆகிய வசதிகளைக் கொண்டது. இவ்வசதிகளுடன், ஒரு உடற்பயிற்சிக் கூடம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டிற்கான உள்ளரங்கம் ஆகிய வசதிகளும் உள்ளன. மேலும், இவ்வளாகத்தில் ஒரு பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் ரூ.1.50 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது.

7.1.5 டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை

7,000 பார்வையாளர்கள் அமரும் வசதி கொண்ட நுங்கம்பாக்கத்தில் உள்ள டென்னிஸ் விளையாட்டரங்கம், 1995ஆம் ஆண்டு ரூ.7.50 கோடி செலவில் கட்டப்பட்டது. இவ்வளாகம் முதன்மை விளையாட்டரங்கில் ஒரு மைய ஆடுகளம் மற்றும் வெளிப்புறத்தில் மின்னொளி வசதியுடன் கூடிய 6 பயிற்சி ஆடுகளங்களையும் கொண்டது. அனைத்து ஆடுகளங்களும் சர்வதேச தரத்திலான செயற்கைஇழை மேற்பரப்பு கொண்டவையாகும். உடற்பயிற்சிக் கூடம் ஒன்றும் இவ்விளையாட்டரங்கில் உள்ளது. இந்த பெருமைமிக்க விளையாட்டரங்கில், சென்னை ஓப்பன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் மிக சிறப்பாக நடைப்பெற்றன. 2017-2018 ஆம் ஆண்டில் சென்னை ஓப்பன் ஏ.டி.பி. சேலஞ்சர் டென்னிஸ் விளையாட்டு போட்டிகள் 10.02.2018 முதல் 18.02.2018 வரை நடத்தப்பட்டன.

7.1.6 ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம்

சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள பயிற்சி ஓடுதள பாதை பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகமானது இயற்கை கால்பந்து மைதானம் மற்றும் செயற்கை இழை தடகள ஓடுபாதை ஆகியவற்றை கொண்டுள்ளது.

7.1.7 செனாய் நகர் நீச்சல் குளம், சென்னை

இவ்வளாகத்தில் ஒரு நீச்சல் குளம் மற்றும் குழந்தைகளுக்கான ஒரு நீச்சல் குளம் ஆகியவை உள்ளன. இது தவிர, மரத்தாலான ஆடுகளம் கொண்ட இறகுபந்து உள் விளையாட்டரங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.50.00 இலட்சம் செலவில் குறுந்தூர நீச்சல்குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

7.1.8 மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டம் நீங்கலாக, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்ட விளையாட்டு வளாகங்களில் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து போன்றவற்றிற்கான ஆடுகள வசதிகள் உள்ளன. இதர விளையாட்டுகளுக்கான வசதிகள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள்விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் ஆகிய விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் உள்ளது.

காஞ்சிபுரத்தில் தற்போதுள்ள விளையாட்டரங்க அமைப்பினை தகர்த்து விட்டு பார்வையாளர் மாடம், நிருவாக அறை, பயிற்றுநர்கள் அறை, விளையாட்டு வீரர்கள் உடைமாற்றும் அறை, கழிப்பறைகள், இருப்பு அறைகள் மற்றும் இதர வசதிகள் கொண்ட புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் ஒன்று அமைக்கும் பொருட்டு ரூ.1466.00 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

7.1.9 பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள்

சென்னை அல்லாமல் அரியலூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, சேலம், தூத்துக்குடி, தஞ்சாவூர், திருச்சி (மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ஒன்று மற்றும் ஸ்ரீரங்கத்தில் ஒன்று), திருநெல்வேலி,

திருப்பூர், திருவள்ளூர்(முகப்பேர்), திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 18 மாவட்டங்களில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தலா ரூ.150.00 இலட்சம் செலவினத்தில் நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்விளையாட்டரங்கங்கள் இறகுப்பந்து, கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, டேக்வாண்டோ, கைப்பந்து, கபாடி, வாள்ச்சண்டை விளையாட்டுகளில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக அமையும். சென்னை, நேரு பூங்கா விளையாட்டு வளாகம், ஷெனாய் நகர் மற்றும் வேளச்சேரி நீச்சல்குள வளாகம் ஆகியவற்றிலும் உள் விளையாட்டு அரங்கங்கள் உள்ளன.

7.1.10 செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் வளைகோல் பந்து மைதானம்

செயற்கை இழை தடகள ஓடுதளம் தற்போது சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்திலும் மற்றும் பயிற்சி ஓடுதள பாதை பகுதியிலும் உள்ளன. இவை கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ளன. மைய அரசின் நகர்ப்புற விளையாட்டு கட்டமைப்புகள் திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மற்றும் திருவண்ணாமலையில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செயற்கைஇழை வளைகோல்பந்து மைதானங்கள் சென்னை எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம் மற்றும் சென்னை ஒய்.எம்.சி.ஏ வளாகம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ளன.

7.1.11 நீச்சல் குளங்கள்

தமிழ்நாட்டில் தற்போது 27 மாவட்டங்களில் 29 நீச்சல் குளங்கள் உள்ளன. அவையாவன, அரியலூர், கடலூர், சென்னை (வேளச்சேரி நீச்சல்குள வளாகம், அண்ணா நீச்சல் குளம் மற்றும் ஷெனாய் நகர் நீச்சல் குளம்), தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம்,

தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருநெல்வேலி, திருவள்ளூர், தூத்துக்குடி, திருவாரூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சிவகங்கை, விழுப்புரம் மற்றும் விருதுநகர். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான நீச்சல்குளம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

7.2 உள்கட்டமைப்புகளை பராமரித்தல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விளையாட்டு வசதிகளை பராமரிக்கவும், சீரமைக்கவும் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 66.00 இலட்சம் தொடர் செலவினமாக வழங்குகிறது.

படலம்-8

உடற்தகுதி மற்றும் விளையாட்டு மருத்துவத்திற்கான திட்டங்கள்

உடற்தகுதி என்பது ஆரோக்கியம் மற்றும் நலமாக இருத்தலை குறிப்பாக விளையாட்டின் தன்மைகள், தொழில்கள் மற்றும் தினசரி செயல்பாடுகளை செய்வதற்கான திறனைக் குறிப்பதாகும். முறையான சத்தான உணவுப் பழக்கம் மற்றும் மிதமான / தீவிர உடற்பயிற்சி மேற்கொள்ளுதல் மூலமாக உடற்தகுதியினைப் பெறலாம்.

இந்த இலக்கை அடையும் நோக்கத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உடற்தகுதி மையங்களை தமிழ்நாடு முழுவதும் நிறுவியுள்ளது.

8.1 மாநில விளையாட்டு வசதி மையம்

தமிழ்நாட்டில் உள்ள மக்களிடையே ஆரோக்கிய விழிப்புணர்வை உருவாக்கவும், தொழில்முறை விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்தவும், 2014-2015 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ரூ.50.00 இலட்சம் செலவில் அரசால் மாநில விளையாட்டு வசதி மையம் நிறுவப்பட்டது.

இம்மையம், இரத்த அழுத்தம் கண்டறியும் கருவி, மூட்டுகளின் மாதிரி, இதய துடிப்பை சீராக்கும் கருவி, டெராபாண்ட், நீர் சிகிச்சை தொட்டி, உடல் எடையை சரிபார்க்கும் கருவி, கொழுப்பு

பகுப்பாய்வு கருவிகள், வாபில் போர்டு ஆகிய மருத்துவ மற்றும் இயன்முறை உபகரணங்களை கொண்டுள்ளதால் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. இம்மையம் விளையாட்டு மருத்துவம், காணொளி பகுப்பாய்வு, உயிர் இயந்திரவியல் மற்றும் இயன்முறை மருத்துவம் போன்றவற்றில் தொழில் முறை ஆதரவை வழங்குகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதிகள், மன்றங்கள், பல்வேறு விளையாட்டுச் சங்கங்கள் ஆகியவை உட்பட தமிழ்நாடு முழுவதிலுமிருந்து ஒவ்வொரு மாதமும் சுமார் 500 விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் 2014 ஆம் ஆண்டு முதல் இந்த மையத்தின்மூலம் பயனடைந்து வருகின்றனர்.

8.2 மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம்

சர்வதேச அளவிலான போட்டிகளில் போட்டியிடுவதற்கு தேவைப்படும் உயர்தரத்துடன், தொடர்ச்சியான மற்றும் தீவிர அறிவியல் பயிற்சி தேவைப்படும் விளையாட்டு வீரர்களுக்கு பயனளிக்கும் வகையில் 2015-2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமைத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு மதுரையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையத்தை நிறுவிவருகிறது. இந்நோக்கத்திற்காக அரசு ரூ.500/- இலட்சம் ஒப்பளித்துள்ளது.

விளையாட்டு மருத்துவமானது உடல் செயல்பாடு மற்றும் விளையாட்டுகளில் மனித நடத்தையைப் புரிந்து கொள்ளுதல், முன்னறிதல், ஆதிக்கம் செலுத்துதல் ஆகியவற்றில் மதிப்புமிக்க சேவைகளை வழங்கும் பிரிவாக விளங்குகிறது. ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையத்தின் முக்கிய நோக்கம் விளையாட்டு தொடர்பான காயங்களை தவிர்த்தல், காயத்திலிருந்து புனர்வாழ்வு அளித்தல் மற்றும் விளையாட்டு வீரரின் அசல் உடல் தகுதியினை மீட்டு எடுத்தல்மூலம் விளையாட்டு நடவடிக்கைகளை விரைவில் மீண்டும் தொடரவும், ஊக்க மருந்து பயன்பாடு அற்ற விளையாட்டினை விளையாடவும் ஊக்குவிப்பதாகும்.

8.3 தலைமைச் செயலக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு உடற்பயிற்சிக் கூட வசதிகள்

தலைமைச் செயலக ஆண் / பெண் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு தனித்தனியாக உடற்பயிற்சி மையம் அமைத்திட ரூ.50.00 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டது.

பணியாளர்களின் அறிவுத்திறன், சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கையை அதிகரித்தல், உடல்நலன் பேணுதல், மன அழுத்தத்தை திறம்பட கையாளுதல், மனச்சோர்வினை குறைத்தல் மற்றும் பதட்டத்தை குறைத்தல் போன்றவற்றிற்கு உடற்தகுதி உதவுகிறது. உடற்செயல்பாடானது, ஆற்றல் அளவு, மனவலிமை மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை மேம்படுத்துகிறது.

மேற்காணும் உண்மைகளை கருத்தில் கொண்டு சென்னை, தலைமைச் செயலகத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உடற்பயிற்சி மையம் 2014 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. இவ்வசதியைப் பயன்படுத்தி சுமார் 5000 பணியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

8.4 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல்

உடல் எடை மற்றும் இதய சுவாச ஆரோக்கியத்தை பராமரிப்பதற்கு தினசரி செயல்பாடுகளின் அளவை அதிகரித்தல் சிறந்ததாகும். மேற்காணும் உண்மைகளை கருத்தில்கொண்டு சென்னை, கடலூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சி, திருவண்ணாமலை, விருதுநகர் ஆகிய 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைத்திட அரசு ரூ.405.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

படலம்-9

இளைஞர் நலத் திட்டங்கள்

9.1 இளைஞர் நல இயக்குநரக உருவாக்கம்

இளைஞர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் ஆளுமைத் தன்மைக்கு உதவும் திட்டங்களை செயல்படுத்தவும், கண்காணிக்கும் விதமாகவும், இளைஞர் நல இயக்குநரகம் அமைக்கப்பட்டது. இளைஞர்களின் முழுத்திறனையும் கட்டுப்படுத்தி வழி நடத்துவதற்கு, ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் அவர்களது ஆற்றலை ஒருமுகப்படுத்துவது அவசியமாகும்.

சரியான வகையில் முறையான அணுகுமுறை வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுமானால் தமிழ்நாட்டில் உள்ள இளைஞர் சமுதாயத்தின் ஆற்றலை முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு வழி நடத்த முடியும்.

[*2018 ஜூன் 13*

இளைஞர் நல இயக்குநரகம்மூலம் கீழ்க்காணும் இளைஞர்களுக்கான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

அ. இளைஞர்கள், அவர்களது நலன்கள், பயிற்சிகள் மற்றும் வழிநடத்துதல் தொடர்பான அனைத்து பணிகள்.

ஆ. தேசிய மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களில் இளைஞர்களை ஒருங்கிணைத்து, மாநில மற்றும் தேசிய வளர்ச்சிக்கு தன்னார்வத்துடன் பங்கேற்கச் செய்தல்.

இ. இளைஞர்களிடையே ஆளுமைத் திறன் மற்றும் தலைமைப் பண்பை ஊக்குவிக்கும் வண்ணம் வீரதீரச் செயல்கள், பொறுப்புகள், நம்பிக்கை ஆகியவற்றை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடத்துதல்.

ஈ. பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இளைஞர் குண நலன்கள் மற்றும் இளைஞர் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தல்.

உ. வேலைவாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கு குறைவான வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த திறன் மேம்பாட்டு செயல்பாடுகளை ஏற்படுத்துதல்.

ஊ. இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்தி ஊக்குவித்தல்.

எ. பல்வேறு தளங்களில் மாநில இளைஞர் விருதுகள் வழங்குவதன்மூலம் அவர்களின் திறமைகளை அங்கீகரித்தல்.

ஏ. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் தொடர்பான துறைகளில் விழிப்புணர்விற்கான கையேடுகள் வெளியிடுதல்.

ஐ. நேரு இளையோர் மையம், தேசிய மறுகட்டமைப்புப் படைத் திட்டம் மற்றும் இதர திட்டங்கள்மூலம் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்துதல்.

ஒ. திறமை மிக்க இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை தேசிய இளைஞர் விழாவில் பங்கேற்க அனுப்ப ஏதுவாக மாநில இளைஞர் விழா நடத்துதல்.

ஓ. இளைஞர் வருகையினை அதிகரிக்கும் வண்ணம், மாநிலம் முழுவதிலும் உள்ள புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள இளைஞர் விடுதிகளை மேம்படுத்தி ஆதரவளித்தல்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் அலுவல் சாரா இளைஞர் நல இயக்குநராக செயல்படுகிறார் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இளைஞர் நல இயக்குநரகமாகச் செயல்படுகிறது.

9.2 முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது

முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரையுள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது ரூ.50,000/- ரொக்கப் பரிசு, பதக்கம் மற்றும் சான்றிதழை உள்ளடக்கியதாகும்.

சமூக நலத்திற்காக இளைஞர்களால் வழங்கப்பட்ட சேவைகளை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது நிறுவப்பட்டது. 2017 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட இளைஞர்களுக்கு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது வழங்கப்பட்டது.

ஆண்கள்

1. திரு. ஏ.ஜி. பத்மநாபன், கோயம்புத்தூர் மாவட்டம்.
2. திரு. உமயலிங்கம், விருதுநகர் மாவட்டம்.

பெண்

1. திருமதி. யு. ஸ்ரீபதி தங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

9.3 இளைஞர் விடுதிகள்

இளைஞர் விடுதிகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் இணைத் திட்டமாகும். விளையாட்டு விடுதிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகளை மத்திய அரசு மேற்கொள்ளும் நிலையில், மாநில அரசு முழுவதுமாக மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாக வழங்குகிறது. இளைஞர்கள் கல்வி மற்றும் சாகச பயணங்கள் மேற்கொள்ளும் போதும், வரலாற்று மற்றும் கலாச்சார சிறப்புமிக்க இடங்களுக்கு சுற்றுலா செல்லும்போதும் இந்த விடுதிகள் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை அளிக்கின்றன.

[2018 ஜூன் 13

தமிழ்நாட்டில் தற்போது (1) சென்னை, (2) மதுரை, (3) தஞ்சாவூர், (4) உதகமண்டலம் மற்றும் (5) திருச்சி ஆகிய 5 இடங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

9.4 இளைஞர் எழுச்சி நாள்

பாரத ரத்னா டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களது பிறந்த தினத்தினை நினைவு கூறும் வகையில், அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் இளைஞர் எழுச்சி நாளாக மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

படலம்-10

தேசிய மாணவர் படை

10.1 துவக்கம்

தேசிய மாணவர் படை இந்திய அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேசிய மாணவர் படை சட்டம், 1948 (சட்டம் எண் XXXI/1948) மூலம் நிறுவப்பட்டது. இது முறையாக 15 ஜூலை 1948 முதல் செயல்படத் துவங்கியது.

10.2 குறிக்கோள்கள்

(அ) நற்பண்பு, நட்புடமை, ஒழுக்கம், தலைமைப் பண்பு, சமய சார்பின்மை, துணிவு செயலாற்றல் மற்றும் உன்னதமான தன்னலமற்ற சேவை பண்பினை நாட்டின் இளைஞர்களிடையே வளர்த்தல்.

(ஆ) இளைஞர்களை முறைப்படுத்தி, பயிற்சியளித்து ஊக்குவித்து, வாழ்வின் அனைத்து நிலையிலும் தலைமைப் பண்பினை வழங்கவும், நாட்டின் சேவைக்கு எப்பொழுதும் தயார் நிலையில் விளங்கக்கூடிய மனிதவளத்தை உருவாக்குதல்.

(இ) இராணுவத்தில் பணிபுரிவதற்கு இளைஞர்களை ஊக்குவிக்கும் தகுந்த சூழலை ஏற்படுத்துதல்.

10.3 நிருவாகம்

பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தலைமை இயக்குநர் தேசிய மாணவர் படையின் தேசிய அளவிலான தலைவராவார். தமிழ்நாட்டில் துணை தலைமை இயக்குநர், தேசிய

மாணவர் படை இயக்ககம் (தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார்) தேசிய மாணவர் படையின் துறைத் தலைவர் ஆவார்.

10.4 நிதி ஒதுக்கீடு

தமிழக அரசு 2018-2019 ஆம் ஆண்டில், தேசிய மாணவர் படைக்கு ரூ.49.83 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

10.5 சேர்க்கை மற்றும் பரவல்

தேசிய மாணவர் படையில் சேர்வது சுயவிருப்பத்தினைச் சார்ந்தது. தற்போது தமிழ்நாடு இயக்குநரகம் 840 பள்ளிகள் மற்றும் 374 கல்லூரிகளில் 95,076 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

10.6 இணை தேசிய மாணவர் படை அலுவலர்கள் (ANOS)

பள்ளி கல்லூரிகளில் கல்வியாளரான இணை தேசிய மாணவர் படை அலுவலரானவர், தேசிய மாணவர் படை அலகு மற்றும் மாணவர்களிடையே அடிப்படை இணைப்பாக உள்ளார். தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அவர் பயிற்றுவிக்கப்பட்டு தேசிய மாணவர் படை துணைத் தலைமை இயக்குநரால் பணியமர்த்தப்படுகிறார்கள். தமிழ்நாடு தேசிய மாணவர் படையில் 350 முதுநிலை மற்றும் 797 இளநிலை இணை தேசிய மாணவர் படை அலுவலர்கள் உள்ளனர்.

10.7 ஊக்க உதவித் தொகை

தமிழக அரசு, தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு கீழ்க்கண்ட ஊக்க உதவித் தொகையினை வழங்கி வருகின்றது.

அ) 100 முதுநிலை மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் பத்து மாதங்களுக்கு மற்றும் 100 இளநிலை மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் பத்து மாதங்களுக்கு, ஆக மொத்தம் ரூ.3.00 இலட்சம் அளவில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஆ) குடியரசு தின முகாம் மற்றும் அகில இந்திய அளவிலான இதர முகாம்களில் சாதனைபுரியும் தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு ஊக்க தொகையாக வருடத்திற்கு ரூ.5,80,400/- ஒதுக்கப்பட்டுள்ளது.

[2018 ஜூன் 13

இ) தமிழ்நாட்டில் பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனத் தேர்வில் வாய்மொழித் தேர்விற்கான மொத்தமுள்ள 12 மதிப்பெண்களில் 1/2 மதிப்பெண் தேசிய மாணவர் படை செயல்பாடுகளுக்கு ஒதுக்கப்படுகிறது.

10.8 சாதனைகள்

தமிழ்நாடு இயக்குநரகத்தை சேர்ந்த மாணவர்கள் அனைத்து செயல்பாடுகளிலும் சிறந்த செயல் திறனை வெளிப்படுத்தி மாநிலத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றனர். தேசிய மாணவர் படை மாணவர்கள் மிகவும் ஊக்கப்படுத்தப்பட்டு உற்சாகத்துடன் தேசிய அளவில் வெற்றி பெற்று தங்களின் திறமையை நிரூபிக்கிறார்கள். சமீபகாலங்களில் தேசிய மாணவர் படை இயக்குநரகத்தின் முக்கிய சாதனைகள் பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

i) விமானப்படை முகாம்–2017

அக்டோபர் 2017-ல் ஜோத்பூரில் நடைபெற்ற விமானப்படை முகாமில் இந்த இயக்குநரகத்தை சேர்ந்த மாணவிகள் ஒட்டுமொத்த நிகழ்வில் முதல் இடத்தைப் பிடித்தனர். மேலும், பயிற்சி அணிவகுப்பு போட்டியில் முதலிடத்தைப் பெற்றனர்.

மேலும், இம்முகாமில் தனிநபர் பறக்கும் போட்டியில் முதுநிலை மாணவ / மாணவியர் பிரிவில் இரண்டு மாணாக்கர்கள் தங்கப்பதக்கத்தையும் ஒரு மாணாக்கர் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர். வானூர்தி மாதிரி ஸ்டாட்டிக் மற்றும் ரிமோட் கன்ட்ரோல் நிகழ்வில் இரண்டு மாணாக்கர்கள் வெள்ளி பதக்கம் பெற்றுள்ளனர். மேலும், கண்ட்ரோல் லைன் ஸ்பீடு ஏரோ மாடலிங் போட்டியில் இரண்டு வெண்கல பதக்கத்தையும் நமது மாணாக்கர்கள் வென்றுள்ளனர். இது தவிர நமது மாணாக்கர்களில் ஒருவர் துப்பாக்கி சுடுதலில் ஒரு வெண்கல பதக்கத்தை வென்றுள்ளார்.

ii) கடற்படை முகாம் 2017

அக்டோபர் 2017-ல் கர்நாடக மாநிலம் கார்வாரில் நடைபெற்ற கடற்படை முகாமில் தமிழ்நாடு இயக்குநரகத்தை சேர்ந்த மாணவர்கள் ஒட்டு மொத்தமாக தேசிய அளவில் இரண்டாம்

இடத்தை பிடித்தனர். சுத்தம் மற்றும் சுகாதாரப் போட்டியில் முதல் இடத்தையும், கப்பல் வடிவமைத்தல், படகு இழுவை (மாணவர்கள்), பயிற்சி அணிவகுப்பு மற்றும் லைன் ஏரியா போன்றவற்றில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர். படகு ரிக்கிங் போட்டியில் மூன்றாம் இடத்தை நமது மாணாக்கர்கள் வென்றனர்.

iii) தரைப்படை முகாம் (மாணவர்கள்) 2017

செப்டம்பர் 2017-ல் நாடு முழுவதிலும் உள்ள 17 இயக்குநரகங்களுக்கிடையே புதுடெல்லியில் நடைபெற்ற மாணவர்களுக்கான தரைப்படை முகாமில், தமிழ்நாடு இயக்குநரகம் முதல் இடத்தையும் ஒட்டு மொத்தக் கோப்பையையும் வென்றது. கூடாரம் அமைத்தல் மற்றும் லைன் ஏரியா பிரிவில் நமது மாணவர்கள் முதல் இடத்தையும், வரைபடம் படித்தல் மற்றும் தடைதாண்டுதல் போட்டிகளில் மூன்றாம் இடத்தையும் வென்றனர். தனிநபர் நிகழ்வில் மாணவர் பி. சதீஷ் தடைத் தாண்டுதல் பிரிவில் பதக்கம் வென்றார்.

iv) குடியரசு தின முகாம் 2018

2018-ல் புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில், தமிழ்நாடு மாநில தேசிய மாணவர் படையினர் இவ்வியக்குநரகத்தில் ஒட்டுமொத்த படையாக திகழ்ந்து செயல்திறனை வெளிப்படுத்தியது சிறப்பாக இருந்தது. இதில் பங்கேற்ற நாடு முழுவதுமுள்ள 17 இயக்குநரகங்களில் நமது இயக்குநரக அணி இரண்டாம் இடத்தை வென்றது. நமது இயக்குநரகத்தின் சாதனைகள் பின்வருமாறு :-

அ) குழுப் போட்டிகள்

- நமது அணியினர் கொடித் தளம் மற்றும் கலைநிகழ்ச்சி போட்டியில் முதலிடம் பெற்றனர்.
- தேசிய ஒருங்கிணைப்பு விழிப்புணர்வினை முன்நிலைப்படுத்துதலில் இரண்டாவது இடம்.
- மரியாதை அணிவகுப்பில் மூன்றாம் இடம்.

ஆ) தனிநபர் போட்டிகள்

- சென்னை 'B' தொகுதி தலைமையகத்தின் மாணாக்கர் அலோனா சுரேஷ் மற்றும் கோயம்புத்தூர் தொகுதி தலைமையகத்தின் மாணாக்கர் J.Y. மதுநிஷா ஆகியோர்

[2018 ஜூன் 13

முறையே முதுநிலை கடற்படை பிரிவு மற்றும் இளநிலை விமானப்படைப் பிரிவில் சிறந்த மாணாக்கர்களுக்கான தங்கப்பதக்கத்தை வென்றனர்.

- மதுரைத் தொகுதி தலைமையகத்தின் மாணாக்கர் அஸ்வின் பாலாஜி மற்றும் சென்னை ‘B’ தொகுதி தலைமையகத்தின் மாணாக்கர் கவின் வேந்தன் ஆகியோர் முறையே முதுநிலை கடற்படை மற்றும் இளநிலை கடற்படை பிரிவில் சிறந்த மாணாக்கர்களுக்கான வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.
- சென்னை ‘A’ தொகுதி தலைமையகத்தின் மாணவி ஆயுஷிலா விதிகா, கோயம்புத்தூர் தொகுதி தலைமையத்தின் மாணவி ஆர்த்தி மற்றும் திருச்சிராப்பள்ளி தொகுதி தலைமையத்தின் மாணவி ஜோஹன்னா கிளமென்ஷியா ஆகியோர் முறையே முதுநிலை இராணுவப்படை, முதுநிலை விமானப்படை மற்றும் இளநிலை இராணுவப்படை பிரிவில் சிறந்த மாணவிகளுக்கான வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.

இ) குதிரைப்படை அணி

டிரஸ்ஸேஜ் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற மாணவி G. சவுந்தர்யா, டிரஸ்ஸேஜ் நோவிஸ் மற்றும் ஹாக்ஸ் நிகழ்வில் வெள்ளிப்பதக்கம் வென்றார். டிரஸ்ஸேஜ் மற்றும் ஹாக்ஸ் நிகழ்வில் மாணாக்கர் G. பிரசாந்த் வெள்ளிப் பதக்கம் வென்றார். டெண்ட் பெக்கிங் (மாணவர்) மற்றும் ஹாக்ஸ் நிகழ்வில் மாணாக்கர் ஆர். பாஸ்கர் வெள்ளிப் பதக்கம் வென்றார். ஹாக்ஸ் நிகழ்வில் மாணவி ஜான்வி ஆஷிகா வெண்கலப் பதக்கம் வென்றார்.

v) தூய்மை இந்தியா திட்டம்

நமது இயக்குநரகம் 37,067 மாணாக்கர்கள் பங்களிப்போடு மிக சிறப்பாக தூய்மை இந்தியா பிரசாரத்தை (தூய்மை விழிப்புணர்வு) மாநிலம் முழுவதும் மிகுந்த ஆர்வத்தோடு இவ்வாண்டு நடத்தியது.

தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் சேவைகளை அங்கீரிக்கும் விதமாக நமது மாண்புமிகு பிரதமர் அவர்கள் ஒட்டு மொத்தமாக தேசிய மாணவர் படைக்கு “சுவச்சதா புரஸ்கார்” விருதை வழங்கினார்.

vi) சர்வதேச யோகா தினம்

இந்த இயக்குநரகத்தால் ஜுன் 21, 2017ல் நடத்தப்பட்ட சர்வதேச யோகா தின நிகழ்வில் மாநிலம் முழுவதிலும் 622 மையங்களில் 64,172 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

vii) சமூக சேவை செயல்பாடுகள்

சமூக சேவை செயல்பாடுகள்மூலம் தேசிய மாணவர் படை, குடிமைச்சமூகத்திற்கு பங்களிப்பை வழங்குகிறது. பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தியும் மற்றும் எங்கெல்லாம் உதவி தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் உதவிக்கரம் நீட்டுவதன்மூலம் இந்த இயக்குநரகம் சமூகத்திற்கு முக்கிய பங்களிப்பினை அளிக்கிறது.

- தேசிய மாணவர் படை தின விழாவினை சிறப்பிக்கும் நிகழ்வாக 3,815 மாணாக்கர்கள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற இரத்ததான முகாமில் இரத்ததானம் வழங்கினர்.
- 24,106 மரக்கன்றுகள் இந்த இயக்குநகரத்தின் தேசிய மாணவ படை மாணாக்கர்களால் நடப்பட்டன.
- ஆற்றல் சேமிப்பு பிரச்சாரத்தில் 830 மாணாக்கர்கள் பங்கேற்றனர்.
- புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் 1120 மாணாக்கர்கள் பங்கேற்றனர்.
- நீர் சேமிப்பு தின பிரச்சாரத்தில் 5569 மாணாக்கர்கள் பங்கேற்றனர்.
- டிஜிட்டல் பண பரிமாற்றம் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் 8919 மாணாக்கர்கள் பங்கேற்றனர்.
- “இந்திரா தனுஷ்” தடுப்பூசி விழிப்புணர்வு பிரச்சாரத்தில் 1287 மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

viii) இளைஞர் பரிமாற்றத் திட்டம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணாக்கர்கள் ஆண்டுதோறும் அயல் நட்பு நாடுகளுடனான இளைஞர் பரிமாற்ற திட்டத்தில் பங்கேற்க தேர்வு செய்யப்படுகிறார்கள். 2017-2018 ஆம் ஆண்டில்

மொத்தம் 11 மாணாக்கர்கள் நட்பு அயல் நாடுகளான ரஷ்யா, வியட்நாம், மாலத்தீவு, வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகியவற்றிற்கு சென்று மேற்குறிப்பிட்ட நிகழ்வில் பங்கேற்றனர். மூன்று மாணாக்கர்கள் இந்திய கடற்படையில் இரு வேறு வெளிநாட்டுப் பங்காற்றுதல் திட்டத்தின்கீழ் செஷல்ஸ், மாலத் தீவு, மலேசியா, இந்தோனேசியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கு கடற்படைக் கப்பல்களில் இந்திய கடற்படையினருடன் பயணிக்கும் வாய்ப்பினைப் பெற்றனர்.

ix) பெருங்கடலில் சாகச பயணம்

ஆகஸ்ட் 2017-ல் நடத்தப்பட்ட "சமுத்திர பிரம்மன்" எனும் பெருங்கடல் சாகச பயணத்தின்பொழுது புதுச்சேரியிலிருந்து தோப்புத் துறை வரை இருமார்க்கமாக 456 கிலோ மீட்டர் தூரத்தினை கடந்தனர். இந்த ஆண்டு முதல் முறையாக மாணவியரும் இதில் பங்கேற்று நடுக்கடலில் சாகச பயணம் செய்தனர்.

x) முப்படைகளில் சேர்தல்

2017-2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் தாய்நாட்டிற்கு சேவை செய்ய முப்படைகளில் சேர்ந்துள்ளனர்.

xi) முகாம்கள் நடத்துதல் மற்றும் மாணாக்கர்களின் வருகைப் பதிவு

2017-2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற 113 முகாம்களில் 49,563 மாணாக்கர்கள் பயிற்சி பெற்றனர். மேலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள இதர இயக்குநரகங்களால் நடத்தப்பட்ட மைய முகாம்களுக்கு இந்த இயக்குநரகத்தின் 2800 மாணாக்கர்கள் மலையேற்றம், பாறையேறுதல், பாய்மரப் படகோட்டுதல், தேசிய ஒருமைப்பாடு, மலையேறும் சாகச பயிற்சி மற்றும் பணியமைப்பு சார்ந்த இனங்களில் பங்கேற்க பரிந்துரைக்கப்பட்டனர்.

xii) சான்றிதழ் தேர்வுகள்

2017-2018 ஆம் ஆண்டு நடைபெற்ற சான்றிதழ் தேர்வுகளில் நமது மாணாக்கர்களின் செயல்பாடுகள் மிகச் சிறப்பானதாக அமைந்தது. மாணாக்கர்களின் செயல்திறன் விவரம் பின்வருமாறு :

தேர்வு	பங்கேற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை	தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை	தேர்ச்சி விழுக்காடு
“A”	*27099*	*26493*	*97.76*
“B”	*7343*	*7034*	*95.79*
“C”	*5150*	*4881*	*94.78*

xiii) உள்கட்டமைப்பு மேம்பாடு

இடையப்பட்டியில் அமைந்துள்ள தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01.09.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. இத்தகைய முதன்மையான பயிற்சி கட்டமைப்பானது தமிழ்நாட்டில் முன்னோடியாக விளங்குகிறது. இங்குள்ள பயிற்சி மற்றும் நிருவாக வசதிகள் இந்தியாவின் நவீன பயிற்சி கட்டமைப்புகளுக்கு இணையாகவும் சிறந்ததாகவும் விளங்குகிறது. இந்த அகாடமி, துப்பாக்கி சுடும் பாவிப்பு, ஆங்கிலத்தில் பேசுவதற்கு பயிற்சி அளிக்கும் மொழி ஆய்வுக்கூடம், பாறையேற்ற சுவர் மற்றும் ஓட்டுதல் பாவிப்பு போன்றவைகளைக் கொண்டுள்ளது.

சூரிய சக்தி மின்கல அமைப்பு இந்த அகாடமியில் ரூ.15,00,000/- செலவில் அரசாணை (ப) எண்.47, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு (இந-1) துறை, நாள் 24.08.2017ன் படி அமைக்கப்பட்டுள்ளது.

xiv) கோயம்புத்தூரில் வானூர்தி பாவிப்பு

கோயம்புத்தூர் தொகுதி தலைமையகத்தில் மாணாக்கர்களின் பறக்கும் பயிற்சிக்காக மேலும் இரண்டு வானூர்தி பாவிப்புகள் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பாவிப்பு, தேசிய மாணவர் படையின் சென்னை மாணாக்கர்களுக்கு பயிற்சியளிக்க தாம்பரத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வானூர்தி பாவிப்பினுடன் கூடுதலான ஒன்றாகும்.

xv) படகோட்டுதல் பாவிப்பு

2017-2018 ஆம் ஆண்டு மாநில புதுமைத் திட்டத்தின்கீழ் பின்வரும் கடற்படை அலகுகளில் தேசிய மாணவர் படையின்

கடற்படை பிரிவிலுள்ள மாணாக்கர்களின் பயிற்சியினை மேம்படுத்த அரசாணை (நிலை) எண்.20, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு (இந-1) துறை, நாள் 17.05.2017-ல் படகோட்டுதல் பாவிப்பு கொள்முதல் செய்து கீழ்க்கண்ட அலகுகளில் நிறுவிட ரூ.30.00 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

வ.எண்	பெயர் மற்றும் அலகு அமைந்துள்ள இடம்
அ)	1 (தநா) தேசிய மாணவர் படை கடற்படை அலகு, சென்னை
ஆ)	2 (தநா) தேசிய மாணவர் படை கடற்படை அலகு, மதுரை
இ)	3 (தநா) தேசிய மாணவர் படை கடற்படை அலகு, தூத்துக்குடி
ஈ)	5 (தநா) தேசிய மாணவர் படை கடற்படை அலகு, கடலூர்
உ)	4 (தநா) தேசிய மாணவர் படை கடற்படை தொழில்நுட்ப அலகு, சென்னை

இதன் மூலமாக, இந்த இயக்குநரகத்தின் கடற்படை அலகில் அனைத்து மாணாக்கர்களின் பயிற்சியினை மேம்படுத்த மேற்கண்ட 5 தேசிய மாணவர் படை கடற்படை அலகுகளில் படகோட்டுதல் பாவிப்பு நிறுவப்பட்டுள்ளது.

xvi) தேசிய மாணவர் படை தினம்

நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் நான்காவது ஞாயிற்றுக்கிழமை தேசிய மாணவர் படை தினமாக தேசிய மாணவர் படையால் கொண்டாடப்படுகிறது. அரசாணை (நிலை) எண்.56, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு (இந-1) துறை, நாள் 6-12-2017-ல் தேசிய மாணவர் படை தின கொண்டாட்டம், குடியரசு தின அணிவகுப்பு மற்றும் முதலமைச்சரின் அணிவகுப்பில் பங்கேற்ற படையினரை பாராட்டுதல் போன்றவற்றை சென்னை, கலைவாணர் அரங்கில் நடத்துவதற்காக தொடர் செலவினமாக ரூ.3,16,800/- (ரூபாய் மூன்று இலட்சத்து பதினாறாயிரத்து எண்ணூறு மட்டும்)ஐ ஒப்பளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

படலம்–11

நாட்டு நலப் பணித் திட்டம்

11.1 முன்னுரை

நாட்டு நலப் பணித் திட்டம் கல்வி விரிவாக்கத்தில் குறிப்பிடத்தக்க முயற்சியாகும். இது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே தன்னார்வ பணி உணர்வினை வளர்த்து அவர்களை சமூக தேவைக்காக நெருங்கி வருவதற்கு உதவுகிறது. மகாத்மா காந்தி அவர்களின் நூற்றாண்டு வருடமான 1969-ல் நாட்டு நலப் பணித் திட்டம் 40,000 மாணவர்களை கொண்டு துவங்கப்பட்டு நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

நாட்டு நலப் பணித் திட்டம் தொடங்கப்பட்ட நாளன்றே மாநிலத்தின் செயல்பாட்டிற்கு வந்தது. தற்போது, தமிழ்நாட்டில் தன்னார்வ தொண்டர்கள் எண்ணிக்கை 3,90,700 ஆகும். இத்திட்டம் சுற்றுக்சூழல், எழுத்தறிவு, பேரிடர் மேலாண்மை, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது.

2016-2017 ஆம் ஆண்டு முதல் நாட்டு நலப் பணித் திட்டம் மத்திய அரசின் திட்டமாக மாற்றப்பட்டது. நாட்டு நலப் பணித் திட்ட செயல்பாடுகளுக்கான மொத்த செலவினமும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

2010-2011 ஆம் ஆண்டில், சரிவிகித அடிப்படை மானியமாக தொடர்பணி நடவடிக்கைகளுக்கு ரூ.250/- ஆகவும், சிறப்பு முகாம்களுக்கு ரூ.450/- ஆகவும் திருத்தியமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 1-4-2018 அன்று நாட்டு நலப் பணித் திட்ட அலகுகள் 4903 ஆகும். இவற்றில் 1953 அலகுகள் பள்ளிக் கல்வித் துறையிலும், எஞ்சியுள்ள 2950 அலகுகள் உயர் கல்வித் துறையிலும் உள்ளன.

11.2 குறிக்கோள்

நாட்டு நலப் பணித் திட்டத்தின் குறிக்கோள் வாசகம் "Not Me But You" என்பதாகும். இவ்வாசகம் தன்னலமற்ற சேவையின் தேவை, பிற மனிதரின் தேவைகள் அறிதல், சக மனிதர்களுக்கு பரிவினை காண்பித்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. இது தனி மனிதனின் நலன் சமூக நலத்தையே சார்ந்தது என்பதையும் தெரிவிக்கிறது.

11.3. நாட்டு நலப் பணித் திட்ட தினம்

நாட்டு நலப் பணித் திட்டம் 1969ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் நாள் துவங்கப்பட்டது. இந்த ஆண்டு நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்கள் பிறந்த நூற்றாண்டு ஆகும். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 24 ஆம் நாள் இந்தியாவில் நாட்டு நலப் பணித் திட்ட தினமாக கொண்டாடப்படுகிறது. அந்நாளில் தமிழ்நாடு நாட்டு நலப்பணித் திட்டத்தின்மூலம் பேரணிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

11.4 நாட்டு நலப் பணித் திட்ட நிகழ்ச்சிகளின் வகைபாடுகள்

நாட்டு நலப் பணித் திட்ட செயல்பாடுகள் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன (i) தொடர்பணி செயல்பாடுகள் (ii) சிறப்பு முகாம் நிகழ்ச்சிகள்.

(i) தொடர்பணி செயல்பாடுகள்

இத்திட்டத்தின்கீழ் மாணவர்கள் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில், பள்ளி / கல்லூரி வளாகங்களில், நகர்ப்புற குடிசை பகுதிகளில் வார இறுதி நாட்களில் அல்லது பள்ளி / கல்லூரி நேரம் முடிந்த பின்னர் பல்வேறு வகையான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டு நலப் பணித் திட்டத்தில் ஒரு தன்னார்வ தொண்டரின் தொடர்பணி செயல்பாட்டு நேரம் ஒரு ஆண்டிற்கு 120 மணி நேரமாகும். இந்த 120 மணி நேரத்தில் புத்தாக்க பயிற்சிக்கு 20 மணி நேரமும் அவர்களது வளாக பணிக்கு 30 மணி நேரமும், எஞ்சியுள்ள 70 மணி நேரம் தத்தெடுத்த கிராமங்கள் மற்றும் நகர்ப்புற குடிசை பகுதிகளில் சமூகப் பணிகள் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

(ii) சிறப்பு முகாம் நிகழ்ச்சிகள்

இத்திட்டத்தின்கீழ் தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள் அல்லது நகர்ப்புற குடிசை பகுதிகளில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்தி சில குறிப்பிட்ட தேவை அடிப்படையிலான செயல்பாடுகளை மேற்கொள்ள விடுமுறை நாட்களில் 7 நாட்கள் முகாம் நடத்தப்படுகின்றன. இரண்டாம் ஆண்டு நாட்டு நலப் பணித் திட்ட தன்னார்வ தொண்டர்கள், இம்முகாம்களில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவர். தமிழ்நாட்டில் மொத்தம் 1,95,350 நாட்டு நலப் பணித் திட்ட தன்னார்வ தொண்டர்கள் இம்முகாமில் பங்கு கொண்டனர்.

11.5. நாட்டு நலப்பணித் திட்டத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் நாட்டு நலப் பணித் திட்டம் பல்வேறு வகையான செயல்பாடுகளை மேற்கொள்கிறது. நாட்டு நலப்பணித் திட்டம் தலைமைப் பண்பு வளர்த்தல், யோகா மற்றும் தியானம், வாழ்க்கை வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல், மென்திறன் வளர்த்தல், பேரிடர் மேலாண்மை, முதலுதவிப் பயிற்சி, சுற்றுச்சூழல் செறிவூட்டல் திட்டங்கள், சாலைப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு மீண்டும் படிப்பைத் தொடர உதவி செய்தல், குருதிக் கொடை, குருதி வகைப்படுத்தல், குருதிக் கொடையாளர் பட்டியல் தயாரிக்கும் பணி போன்ற பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது. மேலும், தொழுநோய் ஒழித்தல், கண் தானம், பல் பராமரித்தல், மார்பகப் புற்றுநோய் ஒழிப்பு, இதய பராமரிப்பு, தாய்சேய் நலன், எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் பொது மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. குடிமை உணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் மற்றும் சாலை பாதுகாப்பு விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்றவற்றை கற்பிக்கும் சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2017-2018 ஆம் ஆண்டில் மொத்தம் 35,891 நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் போலியோ சொட்டு மருந்தளிக்கும் முகாம்களில் பங்கு பெற்றனர். மேலும், 1,43,235 நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்கள் விளம்பர தட்டிகளுடன், பேரணிகள், ஊர்வலங்களில் சுகாதார விழிப்புணர்வு பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டனர். திருப்பூர், சிக்கன்னா அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் தங்களது கல்லூரி வளாகத்தில் மாதிரிக் காட்டினை உருவாக்கியுள்ளனர். 56,133 மரக்கன்றுகள் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடப்பட்டுள்ளன. இரத்த தான முகாம்கள்மூலம் 5,727 அலகுகள் இரத்தம் தானம் செய்யப்பட்டது மற்றும் 5,578 விழிப்புணர்வு முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் இந்த கல்வியாண்டில் நடத்தப்பட்டன.

11.6 சுழல் நிதி

முதலாமாண்டு மாணவர்களிடமிருந்து சுழல் நிதியாக ரூ.10/- வசூலிக்கப்படுகிறது. இத்தொகையில் ரூ.5/- அந்தந்த கல்வி

நிறுவனத்திற்கும், ரூ.3/- பல்கலைக்கழகத்திற்கும், ரூ.2/- மாநில நாட்டு நலப்பணித்திட்ட குழுமத்திற்கும் வழங்கப்படுகிறது. நாட்டு நலப்பணித் திட்டக் குழுமத்தின் சுழல் நிதி கணக்கில் 31-3-2018 அன்றுள்ளபடி ரூ.53,48,564.75 இருப்பில் உள்ளது. இத்தொகை 10 நாட்கள் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பு முகாம் மற்றும் மாநில நாட்டு நலப்பணித்திட்ட அலகில் நடைபெறும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

11.7 நாட்டு நலப் பணித் திட்டத்தின் சாதனைகள்

குடியரசுதின அணிவகுப்பு

1. குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்குபெற நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்களுக்கான தேர்வு பல்கலைக்கழகம் மற்றும் மாநில அளவில் மேற்கொள்ளப்பட்டது. அதில் 14 மாணவத் தொண்டர்கள் தேர்வு செய்யப்பட்டு 26-1-2018 அன்று புதுடெல்லியில் நடைப்பெற்ற குடியரசு தின அணிவகுப்பில் தமிழ்நாடு சார்பில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

2. 26-01-2018 அன்று சென்னை மெரினாவில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் நாட்டு நலப் பணித் திட்ட 80 தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் 4வது முறையாக கலந்து கொண்டனர். இதற்கான தங்குமிட பயிற்சி முகாம் சென்னை, எழும்பூர், SDAT ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் 16-1-2018 முதல் 26-1-2018 வரை நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்களுக்கு அளிக்கப்பட்டது.

11.8 இந்திராகாந்தி தேசிய நாட்டு நலப்பணித் திட்ட விருது

மத்திய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின்மூலம் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கான 2016-2017 ஆம் ஆண்டின் இந்திராகாந்தி தேசிய நாட்டு நலப் பணித் திட்ட விருதுகள் பின்வரும் நபர்களுக்கு புதுடில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் / அலகு

முனைவர்.எஸ்.சி.பி. சாமுவேல் அன்பு செல்வன்,
மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

தன்னார்வலர்கள்

1) *திரு. ஆர்.அருள்ராஜ்,*
சென்னை பல்கலைக்கழகம்,
சேப்பாக்கம் வளாகம்,
சென்னை-600 005.

2) *திரு. எம். ஜெகன்,*
அண்ணா பல்கலைக்கழகம்,
பாவை பொறியியல் கல்லூரி,
நாமக்கல்-637 018.

11.9 நாட்டு நலப் பணித் திட்ட மாநில விருது

நாட்டு நலப் பணித் திட்ட வளர்ச்சி செயல்பாடுகளில் திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட அலுவலர் மற்றும் தன்னார்வலர்கள் தலைசிறந்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு நாட்டு நலப் பணித் திட்ட விருதை நிறுவியுள்ளது. இவ்விருதுகள் 1991 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன.

இவ்விருது திட்ட அலுவலர்களுக்கு ரூ.3,000/- ரொக்கப் பரிசும் சிறந்த தன்னார்வலர்களுக்கு ரூ.2,000/- ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ், நினைவுப் பரிசு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதற்கான செலவினம் நாட்டு நலப் பணித் திட்ட மாநில அலகின் சுழல் நிதி கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

படலம்-12

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

12.1 முன்னுரை

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமானது தமிழ்நாடு அரசு சட்டத்தின்மூலம் நிறுவப்பட்டது. இச்சட்டம், 15 செப்டம்பர், 2005-ல் நடைமுறைக்கு வந்தது. இப்பல்கலைக்கழகம் இந்தியாவில் தனித்துவமானது மற்றும் முதன்மையானதாகும். இந்த பல்கலைக்கழகம் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தற்போதைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கு 61 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

12.2 தொலைநோக்கு

ஒன்று சேர்ந்த உடல், மனம் மற்றும் ஆன்மாவின்மூலம் மனித வளத்தை முழுமையாக ஒருங்கிணைத்து கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி, அளப்பரிய செயல்முறை மற்றும் புதிய திட்டங்கள் மூலம் உடற்கல்வி மற்றும் விளையாட்டில் செம்மை நிலையினை அடைவதற்கான செயல்களில் ஈடுபடுவதாகும்.

12.3 குறிக்கோள்

1. *நவீன ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்தி, ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் வெளியீடுகள் மூலமாக அறிவுசார் செயல்களுக்குப் பங்களித்து, கண்டுபிடிப்புகளை ஆசிரியர்கள், வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்குக் கொண்டு செல்லுதல்.*

2. *பொதுவான நோக்கம் மற்றும் விருப்பம் உடைய பொருளில் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் உள்ள பயிற்சி உத்திகளை மறுசீரமைத்து, கூர்மைப்படுத்தி ஆராய்ச்சி முடிவுகளைச் செயல்படுத்த உதவுதல்.*

3. *தேசிய மற்றும் சர்வதேச அளவிலான சிறப்பு முகமைகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு மற்றும் இணைப்புகளை ஏற்படுத்தி உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்களுடன் இணையாகச் செல்லுதல்.*

4. தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்காக பல்வேறு விளையாட்டுகளில் மாநில மற்றும் தேசிய அளவில் பயிற்சி முகாம்கள் நடத்த உறுதுணையாக இருந்து உதவி செய்து திறனாளர்களைக் கண்டறிந்து, வளர்த்து ஆயத்தப்படுத்துதல்.

12.4 புலங்களின் அமைப்பு

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் மூன்று புலங்களும், ஐந்து துறைகளும் மற்றும் மூன்று ஆதரவுத் துறைகளும் உள்ளன.

புலங்கள்:

1. உடற்கல்வியியல் புலம்
 அ) உடற்கல்வியியல் துறை

2. யோகா மற்றும் துணை ஆரோக்கிய அறிவியல் புலம்
 அ) யோகா துறை
 ஆ) உடல் செயலியக்கவியல் மற்றும் உயிர் இயந்திரவியல் துறை

3. தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை புலம்
 அ) விளையாட்டு மேலாண்மை மற்றும் விளையாட்டு உளவியல் மற்றும் சமூகவியல் துறை
 ஆ) நவீன விளையாட்டு பயிற்சி மற்றும் தொழில்நுட்பத் துறை

ஆதரவுத் துறைகள்

1. புள்ளியியல் மற்றும் கணினி பயன்பாடு
2. சுகாதாரமையம்
3. நூலகம்

2017-2018 ஆம் கல்வியாண்டு முதல் இப்பல்கலைக்கழகம், உடற்கல்வியியல் கல்லூரிகளைப் போன்றே யோகா கல்லூரிகளையும் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் துவக்க ஒப்புதல் அளித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

12.5 உறுப்புக் கல்லூரிகள்

இருபத்தி மூன்று உறுப்புக் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 4 கல்லூரிகள் பிரத்யேகமாக யோகா படிப்பையும் இதர கல்லூரிகள் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் பல்வேறு இதர படிப்புகளையும் அளிக்கின்றன.

இப்பல்கலைக்கழக துறைகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் விளையாட்டு பயிற்சியில் முதுநிலைப் பயிற்சி பட்டயம் பி.ப்பி.இ.எஸ்., பி.ப்பி.எட்., இளநிலை உடற்கல்வி, முதுநிலை உடற்கல்வி, இளநிலை அறிவியல், முதுநிலை அறிவியல், முதுநிலை மேலாண்மையியல், முதுநிலை தொழில்நுட்பவியல், ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்புகள் வழங்கப்படுகின்றன.

12.6 தொலைதூரக் கல்விக்கூடம்

இப்பல்கலைக்கழகத்தில் தொலைதூரக்கல்வி முறை 2007-2008 ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்டு, தற்போது 97 புதுமையான மற்றும் வேலைவாய்ப்புக்கான பாடங்களை தொலை தூரக்கல்வி மூலம் வழங்குகிறது. தொலைதூரக் கல்வி முறையில் தோராயமாக 4000 மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் சேர்க்கப்பட்டு பல்வேறு பாடப்பிரிவுகளில் பயின்று வருகின்றனர்.

12.7 விருப்பத்தின் அடிப்படையிலான கிரெடிட் முறை மற்றும் சீரான பாடத் திட்டம்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் விருப்பத்தின் அடிப்படையிலான கிரெடிட் முறை திட்டத்தின் மூலமாக மாணவர்களுக்கு விருப்பத்தின் அடிப்படையில் தெரிவு செய்ய வாய்ப்பு வழங்குகிறது. இது பல்கலைக்கழக மானிய குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்கள் விருப்பப் பாடமாக குறிப்பிடப்பட்டவற்றில் இருந்து தாங்கள் விரும்பும் பாடத்தை தெரிவு செய்யலாம்.

12.7.1 கிராமப்புற பயிற்சி முகாம்

பல்வேறு பட்டப்படிப்புகளை முறையாக பயிலும் அனைத்து மாணவர்களுக்குமான கட்டாய கிராமப்புற பயிற்சி முகாமானது கலந்து கொள்பவர்களுக்கு செயல்முறை அனுபவத்தை வழங்குகிறது. இதன்படி மாணவர்கள் 5 நாட்கள் கிராமங்களில் தங்கி எழுத்தறிவுத் திட்டங்கள், சுகாதார விழிப்புணர்வு

பிரச்சாரம் அளித்து பொதுமக்களுக்கு சுற்றுப்புறத்தை சுத்தமாக வைப்பது குறித்து பயிற்றுவிக்க வேண்டும். இது தவிர, உடல் மற்றும் மனநலத்தை பேணிகாப்பதற்கென பொழுதுபோக்கு செயல்பாடுகளும் நடத்தப்படுகிறது. கிராமப்புற பயிற்சி முகாமை வெற்றிகரமாக முடித்த பின்னர் மாணவர்களுக்கு இரண்டு புள்ளிகள் வழங்கப்படுகிறது.

12.8 நாட்டு நலப் பணித் திட்ட அலகுகள்

இப்பல்கலைக்கழகத்தில் 2008 ஆம் ஆண்டு முதல் நாட்டு நலப் பணித் திட்டம் இரண்டு அலகுகளுடன் அலகு ஒன்றிற்கு தலா 100 தன்னார்வ மாணவத் தொண்டர்கள் கொண்டு துவங்கப்பட்டது. 2015 ஆம் கல்வியாண்டில் அலகுகளின் எண்ணிக்கை இரண்டிலிருந்து ஏழாக உயர்த்தப்பட்டு பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் முழு அளவில் செயல்பட்டு வருகின்றது. அனைத்து அலகுகளும் அருகாமையில் உள்ள கிராமங்களைத் தத்தெடுத்து சாலை அமைத்தல், சாலைகள் செப்பனிடுதல், மரக்கன்றுகள் நடுதல் பிரச்சாரம், புகையிலை விழிப்புணர்வு முகாம்கள், இரத்த தான முகாம்கள் போன்ற பல்வேறு தன்னார்வ சேவைகளைச் செய்கின்றன. இவை அனைத்தும் காலமுறையாக நடத்தப்படுகின்றன.

12.9 வேலைவாய்ப்பு சேவைகள்

இப்பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்பு பிரிவானது கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், உடற்பயிற்சி மையங்கள் மற்றும் இப்பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற மாணவர்களின் சேவை தேவைப்படும் அமைப்புகளில் வேலைபெறுவதற்கு மாணவர்களுக்கு உதவுகிறது.

12.10 உள்கட்டமைப்பு வசதிகள்

பல்கலைக்கழகத்தில் நிருவாகக் கட்டடம், கல்வி வளாகம், கணினி மையம், மாணவ மாணவியருக்கான தங்கும் விடுதிகள், பல்நோக்குக்கூடம், அரங்கம் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் உள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகத்தில் கால்பந்து, வளைகோல்பந்து, மட்டைப்பந்து, கைப்பந்து, கையுந்துபந்து, கபாடி, கோ—கோ, கூடைப்பந்து, கோர்ப்பந்து போன்றவைகளை விளையாடுவதற்கான விளையாட்டுத் திடல் வசதிகள் மற்றும் கள போட்டிகளுக்கான வசதிகளுடன் 400 மீட்டர் ஓடுதளமும் உள்ளன.

[2018 ஜூன் 13

12.10.1 தமிழக அரசின் மானியம்

2017-2018 ஆம் ஆண்டில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு அரசு மானியம் அளித்துள்ளது.

1. *விளையாட்டு உயிர் இயந்திரவியல் முதன்மைநிலை மையம் நிறுவுவதற்காக ரூ.1312.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

2. *விளையாட்டு விடுதி கட்டுவதற்காக ரூ.474.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

12.10.2 மத்திய அரசின் மானியம்

மத்திய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் செயற்கை இழை தடகள ஓடுதளம் (8 வரிசை) அமைத்திட ரூ.7.00 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

12.11 பல்கலைக்கழக சுகாதார மையம்

இப்பல்கலைக்கழகத்தின் சுகாதார மையமானது முழுநேர மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவம் சார்ந்த பிற பணியாளர்கள் கொண்ட குழுவால் நடத்தப்பட்டு வளாகத்தில்உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. முதலுதவி மற்றும் அவசரகால மருத்துவ சிகிச்சை போன்றவற்றை முழு நேரமும் இக்குழு செய்து வருகிறது. இச்சுகாதார மையம், தானியங்கி இரத்த எண்ணிக்கை பகுப்பாய்வு, இயன்முறை உபகரணங்கள் மற்றும் இதர சுகாதார பரிசோதனைக் கருவிகள் ஆகிய வசதிகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு மருத்துவ சேவை கழகமானது அடிப்படை நோய்களுக்கான மருந்துகளை இலவசமாக வழங்குகிறது.

12.12 பல்கலைக்கழக நூலகம்

மத்திய நூலகம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இன்றியமையாத இடத்தைப் பெற்று ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகளை உயர்த்துகிறது. இந்நூலகமானது பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அனைத்து வகையான தகவல்களை வழங்கி வருகிறது. இந்நூலகத்தில் அநேக

எண்ணிக்கையிலான புத்தகங்கள், மேற்கோள் புத்தகங்கள், ஆராய்ச்சி கட்டுரைகள், பருவ இதழ்கள், கலைக்களஞ்சியம், பத்திரிக்கைகள் மற்றும் கல்விசார்ந்த குறுந்தகடுகள் போன்றவை உள்ளன. கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயல்முறைகளுக்கு தொகுப்புகள், மின்னணு மற்றும் அச்சிடப்பட்ட வடிவங்களில் உள்ளன. இந்நூலகத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்புள்ள புத்தகங்கள் உள்ளன. தமிழக அரசு மின்னணு நூலகம் அமைத்திட ரூ.2.51 கோடி நிதியை ஒப்பளித்துள்ளது.

12.13 மாணவ மாணவியர்கள் சேர்க்கை விவரம்

இப்பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டமானது 2006-2007ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழகத் துறையில் 5 மாணவர்களையும் மற்றும் உறுப்புக் கல்லூரிகளில் 623 மாணவர்களையும் கொண்டு துவங்கப்பட்டது. இப்பல்கலைக்கழக ஆசிரியர்களின் சீரிய முயற்சியால் 2017-2018 ஆம் கல்வியாண்டில் மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக்கழகத் துறைகளில் 538 ஆகவும் உறுப்பு கல்லூரிகளில் 2678 ஆகவும் உயர்ந்துள்ளது.

12.14 பல்கலைக்கழகத்தின்மூலம் 2016-2017 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டம் / பட்டய விவரம்

இப்பல்கலைக்கழகத்தில் முறையான மற்றும் தொலைதூரக் கல்வியின்கீழ் பட்டம் / பட்டயம் வழங்கப்பட்ட விவரம்

வகை	முறையான கல்வி	தொலைதூரக் கல்வி
இளநிலை படிப்புகள்	784	45
முதுநிலை படிப்புகள்	280	749
ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil)	105	—
முனைவர் பட்டம் (Ph.D)	36	—
முதுநிலை பட்டம் / பட்டய / சான்றிதழ் படிப்புகள்	—	1209
மொத்தம்	1205	2003

12.15 2017-2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் சாதனைகள்

உடற்கல்வியியல் துறைமூலம் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன:

- *2017 செப்டம்பர் 26 ஆம் தேதி 'ரக்பிக்கு செல்ல' என்ற தலைப்பில் தேசிய பட்டறை*
- *2018 பிப்ரவரி 20 ஆம் தேதி கால்பந்து விளையாட்டு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி உத்திகள் என்ற தலைப்பில் சர்வதேச பட்டறை*
- *2018 பிப்ரவரி 23 முதல் 24 ஆம் தேதி வரை கைப்பந்து பற்றிய தேசிய அளவிலான பட்டறை மற்றும் மாநில அளவிலான அலுவல்முறை தேர்வு*
- *2018 பிப்ரவரி 21 ஆம் தேதி மாநில அளவிலான கல்லூரிகளுக்கிடையேயான கையுந்துபந்து போட்டி*
- *2018 மார்ச் 6 ஆம் தேதி துறைகள் மற்றும் வகுப்புகளுக்கிடையேயான தடகள போட்டி*
- *2018 மார்ச் 9 ஆம் தேதி தகவல் தொடர்பு மற்றும் மென்திறன் என்ற தலைப்பில் தேசிய பட்டறை*
- *2018 மார்ச் 13 ஆம் தேதி துறை / வகுப்புகளுக்கு இடையேயான தடகளப் போட்டி*
- *திரு. மனோஜ்குமார் இரண்டாம் ஆண்டு இளங்கலை உடற்கல்வியியல் மாணவர் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற UEFA சர்வதேச கால்பந்தாட்ட நடுவர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமில் பங்கேற்றார்*

எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் 02.08.2017 முதல் 6-8-2017 வரை நடைபெற்ற எம்.சி.சி. முருகப்பா ஹாக்கி தங்கக்கோப்பை போட்டியினை உடற்செயல் இயக்கவியல் மற்றும் உயிர் இயந்திரவியல் துறை மாணவர்கள் பகுப்பாய்வு செய்தனர்.

23-3-2018 அன்று விளையாட்டு மேலாண்மை மற்றும் விளையாட்டு உளவியல் மற்றும் சமூகவியல் துறை 'எட்ஜ்கட்டிங் மற்றும் செயல்திறன் உளவியல்' குறித்த ஒரு நாள் தேசிய கருத்தரங்கை நடத்தியது.

பல்கலைக்கழக பெண்கள் கபாடி அணியானது தென் மண்டல பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் நான்காம் இடம் பெற்று புதுதில்லி இந்திய பல்கலைக்கழகங்களின் சங்கத்தினால் நடத்தப்பட்ட அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான கபாடி போட்டிக்கு தகுதி பெற்றது.

நவீன விளையாட்டுப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத் துறை பேராசிரியர்கள், ஆறு தேசிய மற்றும் இரண்டு சர்வதேச இதழ்களில் கட்டுரைகள் பிரசுரித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தின்மூலம் நடத்தப்படும் உடற்கல்வியியல், விளையாட்டு மற்றும் தொடர்புடைய பிரிவுகள் இதழில் (ஆண்டுக்கு இருமுறை) 14 அறிவியல் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பின் இணைப்பு

தமிழ்நாட்டில் தற்போதுள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
1	அரியலூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம் - 1 (மண்) ➢ வளைகோல்பந்து மைதானம் - 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் - 1 (சிமெண்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் - 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் - 1 ➢ பூப்பந்து ஆடுகளம் - 1 ➢ டென்னிஸ் ஆடுகளம் - 1 (செயற்கை இழை (ம) மின்னொளி வசதியுடன்) ➢ டென்னிஸ் ஆடுகளம் - 1 (மண்) ➢ உடற்பயிற்சி கூடம் - 1 ➢ நீச்சல்குளம் 25மீx13மீ ➢ ஸ்கேட்டிங் வளையம்

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
1	அரியலூர்	➢ நடை பயிற்சி பாதை ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் **சிறு விளையாட்டரங்கம், ஜெயங்கொண்டம் தாலுக்கா:** ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம் - 1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் - 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் - 1 (சிமெண்ட்)
2	**சென்னை**	**ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு:** ➢ 40,000 இருக்கை வசதி ➢ கால்பந்து மைதானம் - 1 (புல்தரை) ➢ 400 மீ 8-வரிசை செயற்கை இழை தடகள ஓடுபாதை (மின்னொளி வசதியுடன்) ➢ 60 மீ. உள்ளரங்க பயிற்சி ஓடுதளம் (குளிர்சாதன வசதியுடன்) ➢ ஜூடோ கூடம் ➢ செஸ் கூடம் ➢ கேரம் கூடம் ➢ பளுதூக்கும் கூடம் ➢ மேசைப்பந்து கூடம் ➢ குத்துச்சண்டை கூடம் ➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் - 2

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
2	**சென்னை**	➢ கையுந்துபந்து ஆடுகளம் - 3 (1 மின்னொளி வசதியுடன்) (மண்) ➢ எறிபந்து ஆடுகளம் - 1 ➢ கபாடி ஆடுகளம் - 1 ➢ புதிய ஊடக கூடம் ➢ கலந்தாய்வு கூடம் ➢ குளிர்சாதன உடற்பயிற்சி மையம் ➢ இந்திய விளையாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான சிறப்புநிலை விளையாட்டு மையம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆடவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு விடுதி ➢ ஊடக கூடம் ➢ மாநில விளையாட்டு உதவும் மையம் ➢ தங்குமிட மையம் ➢ துப்பாக்கி சுடும் பயிற்சி மையம் **பயிற்சி ஓடுதள மைதானம்:** ➢ கால்பந்து மைதானம் - 1 (புல்தரை) ➢ 400 மீ. 8 பாதை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
2	**சென்னை**	**பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் பெரியமேடு.** ➢ மரத்தளத்துடன் குளிர்சாதன வசதி கொண்ட 8000 இருக்கை வசதி கொண்ட உள்ளரங்கம் (கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், செஸ், கேரம், கைப்பந்து மற்றும் விளையாட்டு அல்லாத நிகழ்வுகள்) ➢ ஸ்கேட்டிங் வளையம் (மின்னொளி வசதியுடன்) ➢ சிமெண்ட் தரை கூடைப்பந்து ஆடுகளம் -2 (மின்னொளி வசதியுடன்) ➢ கைப்பந்து ஆடுகளம் - 1 (மண்) ➢ வாள்சண்டை கூடம் (மின்னொளி வசதியுடன்) (சிமெண்ட்) ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்கான சிறப்புநிலை விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாணவியர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு விடுதி

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
2	**சென்னை**	**மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல் பந்து விளையாட்டரங்கம், எழும்பூர்:** ➢ 8670 இருக்கை வசதி (கேலரி) ➢ செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் ➢ உடற்பயிற்சி கூடம் ➢ டென்னிஸ் ஆடுகளம் - 4 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் - 3 (மின்னொளி வசதியுடன்) ➢ கலந்தாய்வு கூடம் ➢ நடை பயிற்சி பாதை ➢ தங்குமிட மையம் **நீச்சல்குள வளாகம், வேளச்சேரி சாலை, கிண்டி.** ➢ 4000 இருக்கை வசதி ➢ 8—வரிசை சர்வதேச பந்தய நீச்சல்குளம் (50மீx25மீ) ➢ குதித்தல் நீச்சல்குளம் (18மீ x 25மீ x 5.5மீ ஆழம்) ➢ பயிற்சி நீச்சல்குளம் (25மீx25மீ) ➢ உடற்பயிற்சி கூடம் (குளிர்சாதன வசதியுடன்) ➢ கலந்தாய்வு கூடம் ➢ ஜிம்னாஸ்டிக் உள்ளரங்கம் ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் (4 ஆடுகளம்) **டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்.** ➢ 7000 இருக்கை வசதி ➢ விளையாட்டு அரங்க மைய பகுதியில் செயற்கை இழை ஆடுகளம்

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
2	**சென்னை**	➢ 6-கூடுதல் செயற்கை இழை ஆடுகளங்கள் ➢ மின்னொளி வசதிகள் ➢ உடற்பயிற்சி கூடம் (குளிர்சாதன வசதியுடன் கொண்ட) ➢ தங்குமிட வசதிகள் ➢ கலந்தாய்வு கூடம் **நேரு பூங்கா விளையாட்டு வளாகம்** ➢ சர்வதேச தர ஸ்குவாஷ் ஆடுகளம் - 8 (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகம்) பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் (SDAT-TNSRA) ➢ 400மீ தடகள ஓடுதளம் (குண்டு மற்றும் வட்டு எறிதல்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (புல்தரை) ➢ சிமெண்ட் கூடைப்பந்து ஆடுகளம் -1 ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் - 2 ➢ உள்ளரங்க இறகுப்பந்து ஆடுகளம் - 3 ➢ கபாடி ஆடுகளம் - 1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் - 1 ➢ தங்குமிட வசதி

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		சென்னை மாவட்டப் பிரிவு, செனாய் நகர், சென்னை—600 030 ➢ நீச்சல் குளம் (36மீ ஒ 18மீ) ➢ குறுந்தூர நீச்சல் குளம் (25 மீ x 16 மீ) ➢ சிறுவர் நீச்சல் குளம் (6மீ x 3 மீ) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தளம் (ம)மின்னொளி வசதியுடன்)) ➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மின்னொளி வசதியுடன்) (மண்) ➢ உடற்பயிற்சி கூடம் -1 **அண்ணா நீச்சல்குளம், மெரினா.** ➢ நீச்சல்குளம் (50 மீ x 2 5மீ) ➢ நீச்சல்குளம் (25 மீ x 15 மீ) **ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி மைதானம்** ➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. புரிந்துணர்வுடன்) ➢ விளையாட்டு வீரர்கள் உடைமாற்றும் அறை ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி புதூர் ➢ தமிழ்நாடு விளையாட்டு துமேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி, அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி, புதூர் (கிரிக்கெட்)

[2018 ஜூன் 13

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
3	கோயம்புத்தூர்	➢ 3000 பேர் அமரக் கூடிய வசதி கொண்ட திறந்தவெளி விளையாட்டரங்கம்
		➢ 400 மீ தடகள ஓடுபாதை (செயற்கை இழை)
		➢ கால்பந்து ஆடுகளம் -1 (இயற்கை புல்வெளி) (உயர் கோபுர மின்னொளி வசதியுடன்)
		➢ உடற்பயிற்சி கூடம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
4	கடலூர்	➢ 400 மீ தடகள ஓடுபாதை (கரித்தூள்)
		➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் -1 (மண்
		➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (மின்னொளி வசதியுடன்) (சிமென்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் -2 (மண்)
		➢ பூப்பந்து ஆடுகளம் -1 (மண்)
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1
		➢ சிமென்ட் நடை பயிற்சி பாதை 1200 மீ
		➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் -1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
4	கடலூர்	➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -2
		➢ கிரிக்கெட் ஆடுகளம் -1 (மண்)
		➢ நீச்சல்குளம் 25 மீ x 13 மீ
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் -3
		➢ ஸ்குவாஷ் ஆடுகளம் -1
		➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்)
		➢ விளையாட்டரங்க வளாகம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி, கடலூர் மாவட்ட விளையாட்டு வளாகம்.
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி, என்.எல்.சி, நெய்வேலி **சிறு விளையாட்டரங்கம், விருத்தாச்சலம் தாலுகா**
		➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்)
		➢ கபாடி ஆடுகளம் -1
		➢ கோ கோ ஆடுகளம் -1
		➢ கைப்பந்து ஆடுகளம் -1
		➢ எறிபந்து ஆடுகளம் -1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
5	தருமபுரி	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் —1 (சிமெண்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்)
		➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் -1
		➢ பூப்பந்து ஆடுகளம் -1 (மண்)
		➢ குத்துச்சண்டை வளையம் -1 (சிமெண்ட்)
		➢ உடற்பயிற்சி கூடம் -1
		➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ.
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம்-1 (மின்னொளியுடன்)
		➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் -4 (மின்னொளியுடன்)
		➢ ரோலர் ஸ்கேட்டிங் வளையம் (சிமெண்ட்)
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி சிறு விளையாட்டரங்கம், **அரூர்:**
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் (சிமெண்ட்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் (மண்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
6	திண்டுக்கல்	**500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதி கொண்டது** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம் -1 (இயற்கை புல்தரை) ➢ கால்பந்து மைதானம் -1 (பயிற்சி) (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (மின்னொளி மற்றும் சிமெண்ட்) ➢ பூப்பந்து ஆடுகளம் -2 ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் -5 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம் -1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் -1 (மண்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ கைப்பந்து -1 (மண்) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்** ➢ இருக்கை வசதி - 500 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 ➢ மேசைப்பந்து ஆடுகளம் -9

[2018 ஜூன் 13

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
6	திண்டுக்கல்	➢ இறகுப்பந்து ஆடுகளம் -9
		➢ கபாடி -3
		➢ கால்பந்து ஆடுகளம் (5) -1
		➢ கைப்பந்து ஆடுகளம் -1
		➢ டேக்வோண்டோ
		➢ ஜிம்னாஸ்டிக்
		➢ அனைத்து உள்விளையாட்டரங்க விளையாட்டுக்கள்.
		➢ தங்கும் வசதி -200
		➢ அலுவலகம், கூட்டரங்கம் மற்றும் இதர தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மலைக்கோட்டை மாரியம்மன்கோவில் மைதானம் வளாகம், திண்டுக்கல்:
		➢ 200 மீ. தடகள ஓடுபாதை -1 (மின்னொளி)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (மின்னொளி)
		➢ வளைகோல்பந்து ஆடுகளம் -1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்) (1 மின்னொளி)
		➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் -3
		➢ டென்னிகாய்ட் ஆடுகளம்-1 **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் என்.ஜி.ஓ. காலனி மைதானம், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்:**

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
6	திண்டுக்கல்	➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் -2
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -1
		➢ டென்னிகாய்ட் ஆடுகளம் -1
		➢ கபாடி ஆடுகளம் -1
		➢ யோகா கூடம் **சிறு விளையாட்டரங்கம், நிலக்கோட்டை தாலுகா:**
		➢ கால்பந்து ஆடுகளம் -1
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் -1
		➢ கபாடி ஆடுகளம் -1 **சிறு விளையாட்டரங்கம், நத்தம்:**
		➢ 200 மீ. தடகள ஓடுபாதை
		➢ கால்பந்து ஆடுகளம் -1
		➢ கூடைப்பந்து ஆடுகளம் -1
7	ஈரோடு	➢ பார்வையாளர் மாடம் இருக்கை வசதி 1000
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து மைதானம் -1 (இயற்கை)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (சிமெண்ட்) (1 மின்னொளியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்) (1 மின்னொளி)
		➢ கபாடி ஆடுகளம் -1
		➢ கோ கோ ஆடுகளம் -1
		➢ பூப்பந்து ஆடுகளம் -1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
7	ஈரோடு	➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் -1 (மரத்தரைதளம்)
		➢ உடற்பயிற்சி கூடம்
		➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ.
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி
		➢ மாணவியர்களுக்கான சிறப்புநிலை விளையாட்டு மையம்
		➢ ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம், கரட்டுப்பாளையம்
8	காஞ்சிபுரம்	➢ 1000 பேர் அமரக் கூடிய பார்வையாளர் மாடம்
		➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ கால்பந்து ஆடுகளம் (மண்)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் (மண்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமென்ட் மின்னொளியுடன்)
		➢ கையுந்துபந்து மண் ஆடுகளம் -3 (1 மின்னொளி)
		➢ குத்துச்சண்டை வளையம் (சிமென்ட்)
		➢ பூப்பந்து ஆடுகளம் -1 (மண்)
		➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் கூடம்
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -2 (மின்னொளியுடன்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
8	காஞ்சிபுரம்	➢ நீச்சல் குளம் 25 மீ. x 13 மீ. ➢ சிறுவர் நீச்சல் குளம் 5 மீ. x 3 மீ. ➢ கைப்பந்து ஆடுகளம் -1 ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் -3 (மண்) ➢ மேசைப்பந்து ஆடுகள ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் ➢ திறந்தவெளி வாள்சண்டை கூடம் ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம்
9	கன்னியாகுமரி	➢ கால்பந்து ஆடுகளம் -1 (இயற்கை புல்தரை) ➢ கூடைப்பந்து ஆடுகளம்-1 (சிமென்ட் மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மின்னொளி வசதியுடன்) ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ குத்துச்சண்டை வளையம் -1 ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் கூடம் -1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ சிறுவர் நீச்சல்குளம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான விளையாட்டு விடுதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
9	கன்னியாகுமரி	➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் - (கோணம், நாகர்கோவில்)
10	கரூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை-1 (மண்) ➢ கால்பந்து மைதானம் (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம்-1 (சிமெண்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம்-1 (மண்) ➢ கபாடி ஆடுகளம்-1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம்-1 (மண்) ➢ வளைகோல் பந்து ஆடுகளம்-1 (மண்) ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம்
11	கிருஷ்ணகிரி	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (இயற்கை புல்தரை) ➢ வளைகோல்பந்து ஆடுகளம்-1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம்-2 (சிமெண்ட்) ➢ கைப்பந்து ஆடுகளம்-2 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம்-2 (மண்) ➢ குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம்-2 ➢ கபாடி ஆடுகளம்-1 (மண்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
11	கிருஷ்ணகிரி	➢ கோ கோ ஆடுகளம் -1 (மண்) ➢ இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் கூடம் -1 ஆடுகளம் ➢ டேக்வாண்டோ பயிற்சி கூடம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ சிமெண்ட் நடைபாதை 1300 மீ. ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. - 1 ➢ சிறுவர் நீச்சல்குளம் -1 ➢ ஜுடோ பயிற்சி கூடம் -1 ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (வகை-1) ➢ ஆபீஸர்ஸ் கிளப் கட்டிடம் ➢ சிறுவர் பூங்கா **சிறு விளையாட்டரங்கம், ஓசூர்:** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 **சிறு விளையாட்டரங்கம், ஊத்தங்கரை தாலுகா :** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
11	கிருஷ்ணகிரி	➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 (மண்)
12	மதுரை	➢ 400 மீ. செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்) ➢ 2250 இருக்கை வசதி (3 கேலரி) ➢ பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் (மரதரைத்தளம்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (இயற்கை புல்தரை) ➢ பயிற்சி கால்பந்து மைதானம் -1 (மண்) ➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் (மின்னொளி) ➢ பயிற்சி செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் -1 ➢ செயற்கை இழை பயிற்சி ஓடுபாதை 100 மீ - 1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் -3 (மண்) (1 மின்னொளி) ➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் -2 (மின்னொளியுடன்) (1 MAT வசதியுடன்) (மண்) ➢ கோ கோ ஆடுகளம் -2 (மண்) ➢ செயற்கை இழை கூடைப்பந்து ஆடுகளம்-2 (1 மின்னொளி வசதியுடன்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
12	மதுரை	➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -2 ➢ டென்னிஸ் ஆடுகளம் -1 (மண்) ➢ கிரிக்கெட் பயிற்சி வலை -2 (மண்) ➢ குத்துச்சண்டை வளையம் -1 (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ டென்னிகாய்ட் ஆடுகளம் -4 (சிமென்ட்) ➢ டென்னிகாய்ட் ஆடுகளம் -3 (மண்) ➢ ஜிம்னாஸ்சியம் கூடம் -1 (வாள்சண்டை, யோகா மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் டேக்வோண்டா) ➢ உடற்பயிற்சி மையம் -1 ➢ இறகுப்பந்து உள்ளரங்க ஆடுகளம் -4 ஆடுகளம் (மின்னொளியுடன்) (மரதரைத்தளம்) ➢ இறகுப்பந்து உள்ளரங்க ஆடுகளம் -2 ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்) ➢ நீச்சல் குளம் 25 மீ. x 13 மீ. மேசைப்பந்து கூடம் -1 (மரத்தரை) எல்லீஸ் நகர், மதுரை: ➢ வளைகோல்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமென்ட்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
13	நாகப்பட்டினம்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (1 மின்னொளி வசதியுடன்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (சிமெண்ட்) (1 அக்ரிலிக் பலகை மற்றும் மின்னொளி வசதியுடன்) ➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ டென்னிஸ் ஆடுகளம் -2 ➢ கைப்பந்து ஆடுகளம் -1 ➢ கோ-கோ ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ பூப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் ➢ ஐவர் கால்பந்து மைதானம் -1 ➢ கிரிக்கெட் பயிற்சி வலை -1 ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் கூடம் -1 ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் -2 ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்) ➢ மேசைப்பந்து -1 ➢ பளுதூக்குதல் கூடம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் (24 நிலையங்கள்) - 1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
13	நாகப்பட்டினம்	➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. **சிறு விளையாட்டரங்கம், காட்டுச்சேரி தரங்கம்பாடி தாலுகா, நாகப்பட்டினம்:** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் (மண்) (இயற்கை புல்தரை) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ பல்நோக்கு ஜிம்னாஸ்டிக் உள்ளரங்கம் -1 ➢ கோ கோ ஆடுகளம் -1 **சிறு விளையாட்டரங்கம், திட்டச்சேரி:** ➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 ➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 **சிறு விளையாட்டரங்கம், ஆயக்காரன்புலம்:** ➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ பூப்பந்து ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ கோ-கோ ஆடுகளம் -1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
14	நாமக்கல்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (இயற்கை புல்தரை ➢ வளைகோல்பந்து ஆடுகளம் -1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ கோ-கோ ஆடுகளம் -1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ நாமக்கல் செல்வம் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இருபாலருக்கான விளையாட்டு விடுதி. **சிறு விளையாட்டரங்கம், திருச்செங்கோடு.** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 ➢ இறகுப்பந்து ஆடுகளம் -1 (திறந்த வெளி ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
15	பெரம்பலூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்) (1 -ஃபென்சிங்) ➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் ➢ கோ-கோ ஆடுகளம் ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் (மின்னொளியுடன்) ➢ நவீனஉடற்பயிற்சி கூடம் (குளிர்சாதன வசதியுடன்) ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் -2 ஆடுகளங்கள் ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரதரைத்தளம்) ➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ நடைபாதை **சிறு விளையாட்டரங்கம், வேப்பந்தட்டை:**

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
15	பெரம்பலூர்	➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து சிறுமைதானம் -1 (மண்) ➢ கையுந்துபந்து மண் தரை ஆடுகளம் -2 ➢ கபாடி ஆடுகளம் -1
16	புதுக்கோட்டை	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (1 மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ கோ-கோ -1 ➢ இறகுப்பந்து ஆடுகளம் -1 ➢ குத்துச்சண்டை வளையம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் -1 ➢ நடைபாதை ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் -2 (மின்னொளி வசதியுடன்) ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ குழந்தைகள் நீச்சல்குளம் (10 மீ. x 5 மீ.) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
17	இராமநாதபுரம்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 (மின்னொளி வசதியுடன்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 ➢ கால்பந்து மைதானம் -1 (மண்) ➢ வளைகோல் பந்து மைதானம் -1 (ஆஸ்ட்ரோ இழை) ➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் -1 (மண்) ➢ கோ-கோ ஆடுகளம் -1 (மண்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -2 (மின்னொளி வசதியுடன்) ➢ கிரிக்கெட் பயிற்சி களம் -2 ➢ இறகுப்பந்து உள்ளரங்கம்-3 ஆடுகளங்கள் (1 மின்னொளியுடன்) (2 மரதரை) ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி **சிறு விளையாட்டரங்கம், பரமக்குடி:** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் -1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
17	இராமநாதபுரம்	➢ கையுந்துபந்து ஆடுகளம் ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ கோ-கோ ஆடுகளம் -1 ➢ இறகுப்பந்து -1 (சிமெண்ட்)
18	சேலம்	➢ 500 பேர் இருக்கை வசதியுடன் திறந்தவெளி விளையாட்டரங்கம் பார்வையாளர் மாடம் ➢ 400 மீ. தடகளம் ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -3 (மண்) (1 மின்னொளியுடன்) ➢ கபாடி ஆடுகளம் -1 (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ குத்துச்சண்டை வளையம் -1 (சிமெண்ட்) ➢ ஜிம்னாஸ்டிக் பயிற்சி மையம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ கிரிக்கெட் பயிற்சி களம் -1 (மண்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. (6 வரிசை) ➢ பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் (சிமெண்ட்) இருக்கை வசதி 800 ➢ டேக்வாண்டோ கூடம் -1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
18	சேலம்	➢ இந்திய விளையாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான பயிற்சி மையம்
19	சிவகங்கை	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (இயற்கை புல்தரை) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) ➢ கோ-கோ ஆடுகளம் (மண்) ➢ கபாடி ஆடுகளம் -2 (மண்) ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் -1 (2 இரப்பர் ஆடுகளம்) ➢ காஞ்சிரங்காலில் இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் -1 ➢ கைப்பந்து -1 (மண்) ➢ உடற்பயிற்சி கூடம் -1 ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
20	தஞ்சாவூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை -1 (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
20	தஞ்சாவூர்	➢ வளைகோல் பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (சிமென்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -4 (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் - (இயற்கை புல்தரை) ➢ வளைகோல்பந்து செயற்கை இழை பயிற்சி ஆடுகளம் -1 ➢ குத்துச்சண்டை ஆடுகளம் -1 (சிமென்ட்) ➢ கபாடி ஆடுகளம் -1 (மண்) ➢ கோ-கோ ஆடுகளம் -1 (மண்) ➢ இறகுப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ நவீன உடற்பயிற்சி கூடம் -1 (ரப்பர் கார்க் விரிப்பு) ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் கூடம்-1 (சிமென்ட்) ➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் -1 (மண்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம்-1 ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம்-1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ நடை பயிற்சி பாதை -1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
20	தஞ்சாவூர்	➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரதரைத்தளம்) ➢ கால்பந்து ஆடுகளம் (கிராம விளையாட்டு மையம், அரசு ஆண்கள் மேல் நிலை பள்ளி, கரம்பயம்) **சிறு விளையாட்டரங்கம், பட்டுக்கோட்டை.** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 ➢ பூப்பந்து ஆடுகளம் -1
21	தேனி	➢ இறகுப்பந்து உள்ளரங்க ஆடுகளம் -2 (மரத்தளம்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) ➢ மேசைப்பந்து உள்ளரங்க ஆடுகளம் -1 ➢ டென்னிஸ் ஆடுகளம் -1 (மண்) ➢ குவாஷ் உள்ளரங்க ஆடுகளம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ புதிய உடற்பயிற்சி கூடம் -1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவ மாணவியர்கான விளையாட்டு விடுதி
21	தேனி	➢ குத்துச்சண்டை வளையம் -1 (சிமெண்ட்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
22	நீலகிரி	**எச்.ஏ.டி.பி. திறந்தவெளி விளையாட்டரங்கம், உதகமண்டலம்** ➢ கால்பந்து மைதானம் -1 (இயற்கை புல்தரை) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமென்ட் தளம் கூரையுடன்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -1 ➢ கிரிக்கெட் பயிற்சி களம் -2 ➢ மாணவர்கள் விளையாட்டு விடுதி ➢ தங்குமிட வசதி **அண்ணா உள்விளையாட்டரங்கம், ஸ்டோன் ஹவுஸ் ஹில் போஸ்ட், ஊட்டி.** ➢ இறகுப்பந்து உள்ளரங்கம்-3 (மரத்தளம்) ஆடுகளங்கள் (மின்னொளி வசதியுடன்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் 1 **சிறு விளையாட்டரங்கம், காந்தி மைதானம், கோத்தகிரி** ➢ கால்பந்து ஆடுகளம் (மண்) ➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமென்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், குன்னூர்**

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
22	நீலகிரி	➢ இறகுப்பந்து ஆடுகளம் -2 (மரத்தளம்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், கூடலூர்** ➢ இறகுப்பந்து ஆடுகளம் -2 (மரத்தளம்) ➢ உடற்பயிற்சி கூடம் -1
23	திருவள்ளூர்	➢ 800 பேர் இருக்கை வசதியுடன் திறந்தவெளி விளையாட்டரங்கம் ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் -1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (சிமெண்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 ➢ உடற்பயிற்சி கூடம் -1 ➢ இறகுப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. **முகப்பேர் விளையாட்டு வளாகம்:** ➢ டென்னிஸ் ஆடுகளம் -4 (2 செயற்கை இழை, 2 மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (சிமெண்ட்) ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் டால்பின் அகாடமிக்கிடையே பொது தனியார் பங்களிப்பின் கீழ்)

[2018 ஜூன் 13

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
23	திருவள்ளூர்	➢ சிறுவர் நீச்சல் குளம் ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்
24	தூத்துக்குடி	➢ *400 மீ. தடகள ஓடுபாதை (மண்)* ➢ கால்பந்து ஆடுகளம் *-1 (இயற்கை புல் தரை)* ➢ வளைகோல் பந்து ஆடுகளம் *-1* ➢ கூடைப்பந்து ஆடுகளம் *-1 (மின்னொளி வசதியுடன்)* ➢ கையுந்துபந்து ஆடுகளம் *-3 (மண்) (1 மின்னொளி வசதியுடன்)* ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் ➢ ஸ்குவாஷ் ஆடுகளம் *-1* ➢ கபாடி ஆடுகளம் *-1 (மின்னொளி வசதியுடன்)* ➢ இறகுப்பந்து ஆடுகளம் ➢ நீச்சல்குளம் *25 மீ. x 13 மீ.* ➢ சிறு நீச்சல்குளம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் கோவில்பட்டி** ➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் *-1*

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
24	தூத்துக்குடி	➢ முதன்மை நிலை விளையாட்டு விடுதி (ஹாக்கி) **சிறு விளையாட்டரங்கம், திருச்செந்தூர்** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் ➢ கையுந்துபந்து ஆடுகளம் ➢ கூடைப்பந்து ஆடுகளம் ➢ பூப்பந்து ஆடுகளம் ➢ கோ—கோ ஆடுகளம்
25	திருச்சிராப்பள்ளி	➢ 400 மீ. 8-வரிசை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (இயற்கை புல்தரை) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் -2 (1 செயற்கை இழை) ➢ வலைப்பந்து ஆடுகளம்-1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -5 (1 மின்னொளி வசதியுடன், 1 மின்னொளி இல்லாமல், 1 கால்வால்யும் கூரை (ம) மின்னொளி வசதியுடன், 1 கடற்கரை கையுந்துபந்து மற்றும் 1 மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (சிமெள்ட்) (1 மின்னொளி வசதியுடன்) ➢ கபாடி ஆடுகளம் -2 (மண்) (விரிப்பு வசதி 1- க்கு உள்ளது)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
25	திருச்சிராப்பள்ளி	➢ கோ-கோ ஆடுகளம் -1 (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் ஆடுகளம் -1 (குளிர்சாதன வசதி) ➢ டென்னிஸ் ஆடுகளம் -2 (மண்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -3 (கேலரி மற்றும் அறைகள்) ➢ நவீன பல்நோக்கு உள்ளரங்க உடற்பயிற்சி கூடம் -1 ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம்-1 (மின்னொளி வசதியுடன்) ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மாவட்ட விளையாட்டு வளாகத்தில்) ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் ➢ நீச்சல்குளம் 25 மீ. x 22 மீ. ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் ➢ தங்குமிட மையம் ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (ஸ்ரீரங்கம்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
26	திருநெல்வேலி	**அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை** ➢ 400 மீ. பன்னாட்டு தரத்திலான செயற்கை ஓடுதளபாதை (மண்) ➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் -2 (செயற்கை இழை) (1 மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம்-1 (சிமென்ட் மின்னொளி வசதியுடன்) ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ கோ-கோ ஆடுகளம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ ஜிம்னாசியம் கூடம் -1 ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -1 (மின்னொளி வசதியுடன்) ➢ சறுக்கு வளையம் -1 (சிமென்ட்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் கூடம் ➢ கால்வால்யும் கூரையுடன் கூடிய கையுந்துபந்து ஆடுகளம் (மின்னொளி) ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. ➢ குழந்தைகள் நீச்சல்குளம் 7½ x மீ. x 5 மீ.

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
26	திருநெல்வேலி	➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், வ.உ.சி.மைதானம் -1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், ஜின்னாதிடல் -1 ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் சிறு விளையாட்டரங்கம், ஆலங்குளம் தாலுகா: ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் ➢ கையுந்துபந்து ஆடுகளம் ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் ➢ கோ - கோ ஆடுகளம் சிறு விளையாட்டரங்கம், கல்லிடைக்குறிச்சி: ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
26	திருநெல்வேலி	➢ பூப்பந்து ஆடுகளம் -1 ➢ கோ - கோ ஆடுகளம் -1 **சிறு விளையாட்டரங்கம், மேலப்பாளையம்:** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கூடைப்பந்து ஆடுகளம் ➢ கையுந்துபந்து ஆடுகளம் ➢ கபாடி ஆடுகளம் ➢ கோ-கோ ஆடுகளம் ➢ தங்கும் வசதி மையம் **சிறு விளையாட்டரங்கம், சங்கரன்கோவில்:** ➢ 200 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் ➢ கையுந்துபந்து ஆடுகளம் ➢ கூடைப்பந்து ஆடுகளம் ➢ கபாடி ஆடுகளம் ➢ கோ - கோ ஆடுகளம்
27	திருப்பூர்	➢ சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ➢ இறகுப்பந்து ஆடுகளம் ➢ கூடைப்பந்து ஆடுகளம் ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் ➢ பூப்பந்து ஆடுகளம் ➢ கோ-கோ ஆடுகளம் ➢ கபாடி ஆடுகளம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
27	திருப்பூர்	➢ கைப்பந்து ஆடுகளம்
28	திருவண்ணாமலை	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்)
		➢ திறந்தவெளி கேலரி 1500 இருக்கை வசதி
		➢ கலந்தாய்வு கூடம்
		➢ கால்பந்து மைதானம் -1 (இயற்கை புல்தரை)
		➢ வளைகோல் பந்து ஆடுகளம் (மண்) (ஃபென்ஸிங்)
		➢ கூடைப்பந்து ஆடுகளம்-1 (சிமென்ட் (கூரை (ம) மின்னொளி வசதியுடன்)
		➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண், மின்னொளி வசதியுடன்)
		➢ குத்துச்சண்டை வளையம் -1 (சிமென்ட்)
		➢ கபாடி ஆடுகளம் -1
		➢ பூப்பந்து ஆடுகளம் -1
		➢ கோ-கோ ஆடுகளம் -1
		➢ கைப்பந்து ஆடுகளம் -1 (மண்) (ஃபென்ஸிங்)
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் -2 (மின்னொளி வசதியுடன்)
		➢ பல்நோக்கு உடற்பயிற்சி உள்ளரங்கம் (குளிரூட்டி வசதியுடன்) மற்றும் மேசைப்பந்து அரங்கம் -1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
28	திருவண்ணா மலை	➢ நீச்சல்குளம் 25 மீ. x 16 மீ. ➢ சிறுவர் நீச்சல்குளம் ➢ 80 மீ. கால்வால்யும் கூரையுடன் கூடிய உள்ளரங்கம் (மணலில் ஓடும் பயிற்சிக்காக) ➢ தங்குமிட மையம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ➢ செயற்கை இழை ஓடுதள பாதை உயர் அழுத்த மின்கோபுரத்துடன் (பணிகள் நடைபெற்று வருகிறது) **சிறு விளையாட்டரங்கம், ஆரணி:** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் -1 ➢ வளைகோல் பந்து ஆடுகளம் -1 ➢ கைப்பந்து ஆடுகளம் -1 ➢ பூப்பந்து ஆடுகளம் -1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமென்ட்) ➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் - 500 பேர் அமரும் இருக்கை வசதி கொண்டது) ➢ நடை பயிற்சி பாதை சிறு விளையாட்டரங்கம், தண்டராம்பட்டு தாலுகா

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
28	திருவண்ணா மலை	➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் -1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 ➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் -1 (500 பேர் அமரும் இருக்கை வசதி கொண்டது) ➢ கோ—கோ ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 **சிறு விளையாட்டரங்கம், செய்யாறு தாலுகா** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் -1 ➢ வளைகோல்பந்து ஆடுகளம் -1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமென்ட்) ➢ பூப்பந்து ஆடுகளம் -1 ➢ கைப்பந்து ஆடுகளம் -1 ➢ நீச்சல் குளம் -1 ➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் -1 (இருக்கை வசதி 500)
29	திருவாரூர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமென்ட்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -1 (மண்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
29	திருவாரூர்	➢ *நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ.* ➢ *கபாடி ஆடுகளம் -1 (விரிப்பு வசதியுடன்) (மண்)* ➢ *கோ-கோ ஆடுகளம் -1 (மண்)* ➢ *கால்பந்து ஆடுகளம் -1 (மண்) (திருநெய்பேர்)* ➢ *பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தளம்)*
30	வேலூர்	**நேதாஜி விளையாட்டரங்கம், வேலூர்** ➢ *400 மீ. தடகள ஓடுபாதை (மண்)* ➢ *கால்பந்து ஆடுகளம் -1 (மண்)* ➢ *வளைகோல்பந்து ஆடுகளம் -1 (மண்)* ➢ *கபாடி ஆடுகளம் -1 (மண்)* ➢ *கையுந்துபந்து ஆடுகளம் -1 (மண்)* **சத்துவாச்சாரி** ➢ *பளுதூக்குதலுக்கான சிறப்பு மேம்பாட்டு மையம்* ➢ *உடற்பயிற்சி மையம்* ➢ *முதன்மை விளையாட்டு பளுதூக்கும் மைய விடுதி (ஆண்கள் / பெண்கள்)* **சிறு விளையாட்டரங்கம், ஜோலார்பேட்டை:** ➢ *400 மீ. தடகள ஓடுபாதை (6 வரிசை) (மண்)* ➢ *கால்பந்து ஆடுகளம் -1 (மண்)*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
30	வேலூர்	➢ வளைகோல் பந்து ஆடுகளம் -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) ➢ கபாடி ஆடுகளம் -1 (மண்) ➢ கோ-கோ ஆடுகளம்— ➢ பல்நோக்கு உடற்பயிற்சி ஆண் மற்றும் பெண் கூடம் -1
31	விழுப்புரம்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -2 (சிமெண்ட்) ➢ கபாடி ஆடுகளம் -2 ➢ கோ-கோ ஆடுகளம் -1 ➢ கைப்பந்து ஆடுகளம் -1 ➢ வளைகோல் பந்து ஆடுகளம் -1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. (மாவட்ட ஆட்சியர் வளாகத்தில்) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் (மரத்தளம்)
32	விருதுநகர்	➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம் -1 (மண்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
32	விருதுநகர்	➢ வளைகோல் பந்து மைதானம் -1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 (மின்னொளி வசதியுடன்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) (மின்னொளி வசதியுடன்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் -1 ➢ குத்துச்சண்டை வளையம் -1 ➢ ஸ்குவாஷ் ஆடுகளம் -1 ➢ கபாடி ஆடுகளம் -1 ➢ கோ-கோ ஆடுகளம் -1 ➢ பூப்பந்து ஆடுகளம் -1 ➢ கைப்பந்து ஆடுகளம் -1 ➢ டென்னிகாய்ட் ஆடுகளம் -3 (மண்) ➢ டென்னிஸ் ஆடுகளம் -1 (மண்) ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் -1 ➢ நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ. **சிறு விளையாட்டரங்கம், சிவகாசி தாலுகா** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் -1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
32	விருதுநகர்	➢ கையுந்துபந்து ஆடுகளம் -2 ➢ கூடைப்பந்து ஆடுகளம் -1 (சிமெண்ட்) **சிறு விளையாட்டரங்கம், நென்மேனிப்பட்டி** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் -1

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.**